# ஸ்ரீ ரமண விஜயம்

ஸ்வாமி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது.

இரண்டாம் பதிப்பு

SRI RAMANA ASRAM

திருவண்ணாமலை, ஸ்ரீரமணாச்ரமம் ஸர்வாதிகாரி
நிரஞ்ஜனானந்த ஸ்வாமிகளால்
பிரசுரிக்கப்பட்டது.

1933

விலை ரூபா 2.

# ஸ்ரீ ரமணாஞ்ஜலி

அண்டபகி ரண்டமு மடங்குமுக மொன்றே !
யானதேனுந் தேன்பிலிற்ற ஞானமுக மொன்றே !
கண்டதுமென் கண்கருத்தை யுண்டமுக மொன்றே !
காணரிய தன்மயசிற் காட்சிமுக மொன்றே !
உண்டேபொரு ளொன்றதனி லூக்குமுக மொன்றே !
உள்ளபொரு ளுள்ளபடி யோங்குமுக மொன்றே !
அண்டையெனை யன்னையன்போ டாண்டமுக மொன்றே !
ஆன்மவித்தை யோருருவ மாகுமுக மொன்றே !
பண்டைவினை பிற்றவிழப் பார்க்குமுக மொன்றே !
பத்தர்மனந் " தத்வமஸி " வித்துமுக மொன்றே !
விண்டமல மென்னநகை வீசுமுக மொன்றே !
வேதமகள் காதல்புரி வித்தைமுக மொன்றே !
நன்றுசிவ சக்திகட மாமுக மொன்றே !
" ஈ "ஞாதியா மோனவெள்ள மானமுக மொன்றே !
நின்றநிலை யெங்கிலு நிறைந்தமுக மொன்றே !
நிர்க்குண நிரஞ்ஜன நிதானமுக மொன்றே !
கற்றதற முற்றழிவு காந்துமுக மொன்றே !
காமரொத் ஜோதியொளி யாமமுக மொன்றே !
அற்புதச் சற்றுமகம் பாடுமுக மொன்றே !
" அன்றது " " விதா "மென்றளம் ஆறுமுக மொன்றே !
உற்றவொ துன்னையழி வின்பமுக மொன்றே !
உத்தமர்சோல் சித்தரக ரத்தன்முக மொன்றே
வெற்றியரு ஞாசலம் விளங்குமாந் ...
வேந்தனுடைய சாந்தமொரு ...

॥ ओं नमो भगवते रमणाय ॥

# ஸ்ரீமான் கி. லக்ஷ்மண சர்மா அவர்கள்

எழுதிய

# நான்முகம்

---

ஏதோ பாக்கிய வசத்தினால் ஸ்ரீ ரமண குருபரனை ஸத்குருவாகவும், இஷ்டதெய்வமாகவும் கொண்ட அன்பர்களின் பொருட்டே, அவனது சரித்திராமிருதத்தை நூல் மூலமாக வெளியிடவேண்டிய அவசியம் ஏற்பட்டு, இது வரை பல சரித்திரங்கள் வெளியாயின. இவற்றில் பல பிழைகள் உள்ளன. ஏனென்றால், இந்த மூர்த்தியானது தன் சரித்திர விருத்தாந்தங்களை உலகோர் சொல்லும் மாதிரியாய்ச் சொல்வது இல்லை. ஆகையால் முதலில் எழுதியவர்கள், தம்தம் புத்திப் போக்கின்படி தாமே ஒருவித அபிப்பிராயம் வைத்துக்கொண்டு, சரித்திரம் எழுதினார்கள். மூன்று வருஷங்களுக்கு முன்பு, ஒரு தெளிந்த விவேகியான சீடர்—ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமியவர்கள்—பகவானுடைய சரித்திரத்தை ஆராய்ந்தும், தேவையான ஸந்தர்ப்பங்களில் பகவானையே நேரிற் கேட்டும், கூடிய மட்டில் பிழையின்றி ஆங்கிலத்தில் ஒரு சரிதம் எழுதித்தந்தார். அது வெளியாயிற்று. அதன் பின் தமிழில் விரிவானதும், சுத்தமானதுமாக, சரித்திரம்


A

ஒன்று வெளிவராதோ, என்று அன்பர்கள் ஆசை கொண்டனர். அவர்களின் தாகத்தைத் தீர்க்கவே, இந்த திவ்ய சரித்திரத்தைத் தமிழில் எழுதவல்ல ஒரு யோகமூர்த்தி இதை நாற்பத்திரண்டு அத்யாயங்கள் அடங்கிய ஐந்து காண்டங்களாக எழுதி முடித்தார். அவர் ஸ்ரீ சுத்தாநந்த பாரதி யென்னும் யதிஸ்ரேஷ்டர்.

இந்த நூலாசிரியரைப் பலர் அறிந்திருக்கலாம். ஆனாலும் அவர் சென்ற பல ஆண்டுகளாக, ஏகாந்தமும் மௌனமும் கொண்டு யோகாப்யாஸத்தில் ஆழ்ந்து விட்டதால் அவரைத் தெரிந்து கொள்ளாதவர் அநேகர் இருக்கலாம். அவர்களின் பொருட்டும், இனி வரப்போகின்ற அடியார்களின் பொருட்டுமாக, அவரைப்பற்றிச் சிறிது எழுதவேண்டி யிருக்கிறது.

ஸ்வாமி ஸ்ரீசுத்தாநந்த பாரதியார் இந்நாட்டின் தெய்விக சக்தியால் பிறந்த மஹான்களில் ஒருவர். நாடானது வெளிப்படையில் மிகவும் தாழ்மை யடைந்து கிடப்பது உண்மை. ஆனால் பாரத சக்தியானவள் எப்போதும் விழித்திருக்கிறாள். உலகின் நலத்திற்காகப் பாடுபட அநேக ஆத்மதீரரை யீன்றாள். அப்படிப் பிறந்தவரில் ஒருவர் இந்நூலாசிரியர். அதிபால்யத்திலேயே உலக இன்பங்களைத் தியாகம் செய்து, யோக ஸாதனங்களில் ஈடுபட்டார்; இது பூர்வஜன்ம வாஸனையின் பயன் போலும். இவர் பிரம்மசரியம், தவயோகம் இவற்றால் மேன்மை பெற்றார். பல உயரிய நூல்களைத் தாய்நாட்டிற்கு அருளினார். தேசத்துயர்களைக் கண்டு மனம் உருகி, அதற்கேற்ற தொண்டுகளில் ஈடுபட்டுப் பலவாறு உழைத்

சுவாமி சுத்தானந்தபாரதி.



அருளாலே யுள்ளத் தறிவா யிலங்கும்
பொருளாகி யின்பம் பொலி.

எல்லா வுலகிற் கிறைவ னொருவன்
எல்லா வுடலும் இறைவ னிலயமே.

தார். எல்லாவற்றிற்கும் ஞானமே அடிப்படையென்று அதற்கான உத்தம குருவை அடையவேண்டும் என்று தவம்செய்து, அதனாலே ஸ்ரீ ரமண பகவானே தமக்குற்ற குரு, தெய்வம் என்று அறிந்து, ஸந்நிதி வந்து, அருள் பெற்று, ஆழ்ந்த அத்யாத்ம யோகத்தில் இன்னும் இருந்து வருகிறார். இவரே அடியேனுக்கு இரங்கி, தாமடைந்த திருவடிகளை நானும் பற்றிக்கொள்ளும்படி ஸமயோசிதமான உபதேசம் செய்ததால், ஸ்ரீ ரமண பகவானையே ஆத்மநாதனாகப் பெற்றுப் பிழைத்தேன். பகவானுடைய திவ்ய சரித்திரத்தை பக்தி, ஞானம், யோகம் என்ற எல்லாச் சுவைகளுடனும், ராமாயணாதி மஹாகாவ்யங்கள் போல வர்ணித்தெழுதும் தகுதி இவருக்கே உள்ளது என்பது உறுதி. இப்போதுள்ளவர், இனி வரப்போகிறவர் ஆகிய எல்லா ரமண பக்தர்களின் பாக்கியமே சுத்தானந்தராக உருவெடுத்து வந்ததென்னலாம்; இவர் இயற்றிய ரமண விஜயம், உலகில் ரமண நாமம், ரமண கீர்த்தி, ரமண மூர்த்தி, இவை நீண்டகாலம் வாழ்ந்துவர எத்தனையோ அன்பருக்கு ஞான விருந்தாகும் என்பதில் ஸந்தேஹமில்லை. முற்காலத்திய பாகவதம் போன்ற புராணங்கள், இதிஹாஸங்கள் எவ்வளவுமட்டில் நடப்பு, எவ்வளவு கவிகளின் கற்பனை என்று பலர் சங்கிக்கிறார்கள். ரமண விஜயம் இசைக்கும் ஸ்ரீ ரமணரோ இதோ இருக்கிறார்; சரித்திரம் உண்மையென்று அறியப் போதுமான சாக்ஷிகளும் உயிருடன் இருக்கிறார்கள். இந்தப் புண்ய சரித்திரத்தின் மேன்மையையும், சக்தியையும் வர்ணிக்க அடியேனால் முடியவில்லை. அவரவர் தாமே இச் சரிதாமிருதத்தை உண்டு உணர்ந்துகொள்ள வேண்டியது

தான். அடிமுதல் கடைவரை பேரின்ப ரஸம் ஒழுகுவதை வாசகர்களே தெரிந்து கொள்ளட்டும்.

ஞானப் பசியெடுத்த புண்யவான்களே! அன்பிற்குரிய திவ்யமூர்த்தியைக் காணுவோமா என்று தவம் செய்யும் பக்திமான்களே! இது தருணம்; ரமண ஸந்நிதானம் வந்து, அருள்நோக்கிற்கு ஆளாகுங்கள்; பிறவிப் பயனைப் பெற்று வாழுங்கள்!

---

ஸ்ரீ ரமண விஜயம்:—இது புதுக்கோட்டை ஜனமித்திரனில் வெளிவந்தது.

# பதிப்புரை

ஆத்மாநுபூதிச் செல்வர்காள்!

ஸித்தர், முத்தர், சுத்த முனிவர், அத்த னடியார், அச்சுத னன்பர், அருட்கவியரசர், தெருட்பெறு மறிஞர், நிறைந்து நிலவுநம் அருந்தமிழுலகில், இன்றொரு ஜோதிக் குன்றுள தறிவீர். இன்று நம்முன் னெழிலார் பிரமமாய், வன்றவக் கதிராய், மின்றிரள் மேனியாய், ஞான வள்ள லாய், மோன முத்திரையுடன், தானே தானே தக்ஷிணா மூர்த்தமாய், ஆன்மப் பசிக்குத் தேன்சுவை விருந்தாய், கான்மலை கருதிக் கடுந்தவம் புரியினுந் தேடருஞ் செல்வ மாய், நாடருஞ் சிறப்பாய், விள்ளற் கரிய தெள்ளறி வொளியே யுள்ளத் துள்ளே யுடனே யுதிக்கும் அற்புதக் கண்ணன், பொற்புறு மாட்சியன், எல்லாருக்குஞ் சொல்லா துணர்த்துவோன், சொல்லாலன்பர் வல்லிடர் களைவோன், காந்த சக்தியன், காட்சிக் கெளியோன், சாந்த நிறைவாய்ச் சச்சிதானந்தமாய், கருணாரசமாய்ப் பரிபூரணமாய், அருணையம் பதியிற் பரம குருவாய் இலகும் வள்ளலை யியம்பார் யாரே! பகவான் ரமண பரமஹம்ஸர்! அத் தகைச் சோதி யண்ணலின் சரிதை புசிக்கப் புசிக்கப் புத்தமுதாகும்; ஒப்பில்லாத் தவ யோகப் பெருமையும், அரிதரி தென்னுந் திருவாசகமும், மனத்தினை யள்ளுங் குணப்பெருந் தகையும், பேரருள் வாயாற் கூறுமொழி களும் அரும்பெரு முதல்வனின் றனிப்பெரு வாழ்வும், முத்தமி ழின்பும் பொலியும் அத்தகை மாண்புள—ரமண

விஜயம்—அன்பன், கவிஞன், அருந்தவ யோகி, சுத்தா னந்த பாரதி யாத்தது; பொன்மலரோடு பொருந்து மணம்போல், பொருளும், பயனும், அருளும், தெளிவும், இனிமையும், கனிமையும், எழிலும் பொருந்திக் கற்கக் கற்கக்கசடற தவவழி நிற்கத் தூண்டும் அற்புத யோக நூல்—இதுவே!

சைதன்னியரின் சரிதை போலவும், இராமகிருஷ்ணர் பெருங்கதை போலவும், தமிழிற் பழுத்த அமரக் கனி யாய், அற்புத ஸித்தி யருந்தவக் கனியாம், ஒப்புயர் வற்ற யோகக் கனியாம், அருணாசலத்தின் கருணைக் கனியாம், *பகவான் ரமண பரமஹம்ஸரின் கடவுண்மாக் கதை யைக் கற்றுய்வுறுக. பற்பல மொழிகளிற் பரவுக விதன் பொருள்! இல்லந் தோறும் நல்லருள் விளக்காய், எழி லுக விந்தச் செழுந்தவச் சுடரே!

ஸ்ரீ ரமணாசிரமம்,
அழகம்மைபுரம்,
திருவண்ணாமலை.

நிரஞ்ஜனானந்த ஸ்வாமி,
காரியதரிசி.

---

* "ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய
வீர்யஸ்ய யஶஸ: ஶ்ரிய: |
ஜ்ஞான வைராக்யயோஶ்சைவ
ஷண்ணாம் பக இதீங்கநா" ||

என்பது "பகவான்" என்னும் பதத்தின் லக்ஷணம்.

# இரண்டாம் பதிப்புரை

இந்த இரண்டாம் பதிப்பில் ஆசிரியர் பல சீர்திருத்தம் செய்திருக்கிறார். அரிய மேற்கோள்களும் புதிய விஷயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. அறிவொளி வணக்கம் என்னும் அரிய பாடல்கள் அன்பர் பகவானைப் பாடி வணங்கும் பொருட்டு சேர்க்கப்பட்டுள்ளன. பகவானுடைய மகத்தான உபதேசமே உபநிஷத்துகள் கண்ட உண்மையென்று சக - வது அத்யாயத்தில் அரிய உபநிஷத் வாக்யங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. பகவானின் மேனாட்டன்பரைப் பற்றிய விஷயங்கள் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன. ஆசிரியர் படமும் இப்பதிப்பில் காண்கிறது. இப் பதிப்பு பலவிதங்களில் நன்கு அமைந்துள்ளது. அன்பர்கள் இதை மனமுவந்து கற்றறிந்து ரமணானந்தம் பெறுக.

நிரஞ்ஜனானந்த ஸ்வாமிகள்.

# குறிப்பு.

ஸ்ரீ ரமண விஜயத்தில் மிளிரும் மேற்கோள்கள் ஸ்ரீ ரமண நூல்கள், உபநிடதம், பகவத்கீதை, சங்கராசாரியாரின் நூல்கள், ரிபுகீதை, பெரியபுராணம், கம்ப ராமாயணம், தேவாரம், திருவாசகம், தாயுமானவர், திருக்குறள், நாலடியார், திருப்புகழ், அருட்பா, திருமந்திரம், கந்தரநுபூதி, ஔவை குறள், ஒழிவிலொடுக்கம், மஹாராஜா துறவு, கைவல்யம், ஞானவாசிட்டம், சைதன்ய பாகவதம், Holy Bible முதலிய அரும்பெரும் நூல்களினின் றெடுத்தாளப்பட்டுள்ளன. இப்படி எடுத்தாளப்பட்ட வாக்குகள் "...." இவ்வடையாளம் இடப்பட்டுள்ளன. அஃதின்றி ஏனையவை இந் நூலாசிரியரின்—பாரதசக்தி, அறநூல், ஜினேந்தம், யோகநூல், ஞானத்திருமலை, புத்தவிஜயம், நபிநாயகம், நானகர், பேரின்ப கீதங்கள், ஏசுநாதர் சரிதை முதலியவற்றினின்று ஸந்தர்ப்பத்திற் கேற்ப எடுத்தாளப்பட்டுள்ளன. இவை "...." இக்குறியின்றி ஸாதாரணமாக அச்சிடப்பட்டுள்ளன.

ஸ்ரீ ரமணவிஜயம்

# பொருளடக்கம்.


| அத்யாயம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | ரமணாஞ்ஜலி | .... .... | III |
| II. | நூன்முகம் | .... .... | V |
| III. | பதிப்புரை—இரண்டாம் பதிப்புரை | .... | IX - XI |
| IV. | குறிப்பு | .... .... | XII |
| V. | பொருளடக்கம் | .... .... | XIII |
| VI. | சித்திர விதானம் | .... .... | XV |
| VII. | அறிவொளி வணக்கம் | .... | XVII - XLII |

## க. பாலகாண்டம்

| | | | |
|---|---|---|---|
| க. | எண்ணுகேன் என்சொல்லி யெண்ணுகேனே! | | 1 |
| உ. | வாழ்வாறு | .... .... | 5 |
| ௩. | ஜோதிமலை யிதுவே | .... .... | 13 |
| ச. | அத்யாத்மச்சோலை | .... .... | 21 |
| ரு. | பாண்டிநாடு | .... .... | 32 |
| சு. | மங்கலமனை | .... .... | 36 |
| எ. | நன்னாள் | .... .... | 39 |
| அ. | குழந்தை | .... .... | 44 |
| கூ. | கல்லாக்கலைஞனுக்குப் பள்ளிக்கல்வி | .... | 47 |
| க0. | அருணாசலமா? | .... .... | 52 |
| கக. | பெரியபுராணம் | .... .... | 55 |

## உ. பக்குவக்காண்டம்

| | | | |
|---|---|---|---|
| கஉ. | பக்குவம் வந்ததெப்படி? | .... | 65 |
| க௩. | இதெல்லா மென்னத்துக்கு? | .... | 82 |
| கச. | அருணாசலயாத்திரை | .... .... | 92 |

## ௩. யோகஸ்வராஜ்யக்காண்டம்

| | | | |
|---|---|---|---|
| கரு. | அருணாசலசிவம் | .... .... | 107 |
| கசு. | அப்பனே யருணாசலா | .... .... | 115 |

| அத்யாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| கஎ. | வீரத்துறவு | 120 |
| கஅ. | "சின்ன சேஷாத்ரி" | 124 |
| ககூ. | தவராஜன் | 127 |
| உ0. | குருமூர்த்தம் | 137 |
| உக. | பழனிஸ்வாமி | 142 |
| உஉ. | உறவினர் வருகை | 149 |
| உஙு. | ஈன்றவள் முறையீடு | 156 |
| உச. | குகன் | 163 |
| உரு. | பொறுமை ! பொறுமை !! பொறுமை !!! | 170 |

ச. யோகஸாம்ராஜ்யக்காண்டம்

| | | |
|---|---|---|
| உசு. | ரமணவித்தை | 197 |
| உஎ. | விசாரஸங்கிரகம் | 211 |
| உஅ. | ஸந்நிதியே சாந்தசுகம் | 223 |
| உகூ. | பகவான் ரமணமஹர்ஷிகள் | 235 |
| ஙு0. | ரமணகீதாஸாரம் | 249 |
| ஙுக. | வியன்காட்சிகள் | 265 |
| ஙுஉ. | ரிபுகீதை | 272 |
| ஙுஙு. | மேற்கே ரமணோதயம் | 280 |
| ஙுச. | சேஷாத்ரிஸ்வாமிகள் | 313 |

ரு. ரமணாசிரமக்காண்டம்

| | | |
|---|---|---|
| ஙுரு. | தாயன்பு | 329 |
| ஙுசு. | கள்வர்க்கும் கருணை | 343 |
| ஙுஎ. | ஸமதர்சனம் | 354 |
| ஙுஅ. | அருணாசல பரமஹம்ஸர் | 370 |
| ஙுகூ. | அன்பர் ஆர்வம் | 381 |
| ச0. | ஹம்ஸஸ்ஸோஹம் | 400 |
| சக. | உபநிஷத் ரஹஸ்யம் | 404 |
| சஉ. | ரமணப்ரகாசம் | 443 |
| | அபிப்ராயங்கள் | 1—14 |
| | பிழைதிருத்தம் | 15—16 |

ஸ்ரீ ரமணவிஜயம்

# சித்திரவிதானம்


| | சித்திரம் | பக்கம் |
|---|---|---|
| க. | பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் .... | iii |
| உ. | ஆசிரியர் படம் .... .... | vi |
| ௩. | திருவாலவாய் மீனாக்ஷிசுந்தரேஸ்வரர்கோயில் | 32 |
| ச. | மதுரைப் பொற்றாமரை மலர்த்தடம் .... | 33 |
| ரு. | திருச்சுழி-பூமிநாதர் ஆலயமும், திருக்குளமும் | 35 |
| சா. | பகவான்-மஹர்ஷிகள் அவதரித்த மங்கலமனை | 36 |
| எ. | மெய்க்கீர்த்தி வாய்ந்த வக்கீல் சுந்தரமய்யர் | 38 |
| அ. | வெள்ளியம்பல நடராஜர், மதுரை .... | 76 |
| கூ. | அன்பன் வரைந்த வரும்பொருட் கடிதம் | 89 |
| க0. | அருணாசலசிவம் .... .... | 107 |
| கக. | திருவண்ணாமலை க்ஷேத்திர படம் .... | 111 |
| கஉ. | வல்லாளராஜன் கோபுரம் (கோபுரத்திளையனார்) .... .... | 112 |
| க௩. | கம்பத்திளையனார் .... .... | 113 |
| கச. | அருணாசலேஸ்வரர் ஆலயம் .... | 116 |
| கரு. | சிவகங்கைத் தீர்த்தம் .... .... | 133 |
| கசா. | குருமூர்த்தம் .... .... | 137 |

சித்திரம் பக்கம்


௧௭. பவளக்குன்று .... .... 155
௧௮. விருபாக்ஷகுகையில் தவராஜன், 1900 (௨௧ - வயது) .... .... 163
௧௯. பேரன்பர்குழாம் (பச்சையம்மன் கோயில்) 170
௨0. மாமரத்துக்குகையில் யோகீஶ்வரன் .... 186
௨௧. ஸ்ரீ ரமணப்ரஹ்மம் .... .... 197
௨௨. விருபாக்ஷகுகை யாசிரமம் : அன்பர்குழாம் 199
௨௩. மலையினும் மாண்பு .... .... 212
௨௪. ஸ்ரீமத் ஶங்கர பகவத் பாதாசாரியார்.... 222
௨௫. சாந்தச் சுடர் .... .... 224
௨௬. ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் .... .... 235
௨௭. பகவானும் மேனாட்டன்பரும் .... 310
௨௮. அஸோனா ஆஶ்ரமம், பங்கால்டி, சுவிட் ஸர்லெண்ட் .... .... 311
௨௯. ஸ்ரீ ரமணாசிரமக் காட்சி .... .... 327
௩0. அரும்புதல்வனை யீன்ற அன்னை - அழகம்மை 328
௩௧. ஸத்குருநாதன் .... .... 371
௩௨. பேரன்பர்குழாம் (1933) .... .... 400

# அறிவொளி வணக்கம்

## அறிவேபோற்றி ! அருளேபோற்றி ! !

### அம்மையப்பன்

அன்னையி னருண்மிகுமெ னப்பனுய ரறிவினுக்
காயிரம் பகலானவன் !
யானுறென் றுராய்ந் தடங்குவோ ருள்ளத்தி
லதுநா னெனத்திகழுவோன் !
சின்மயத் தணல்வீசிச் சேவிக்கு மன்பர்பிணி
செற்றிடுஞ் செங்கண்வேலன் !
சிந்தனைக் கமுதினுந் தீஞ்சுவை யளிப்பவன்
செகசிவ பரமொன்றெனத்
தன்னிலையி லுள்ளபடி சாந்தக் கதிர்பரவு
ஸந்நிதிப் பெருமையாளன் !
தானன்றி வேறிலா ஸதஸத் விலாஸனுந்
தத்வமஸி மந்த்ரவடிவோன் !
பொன்வளரு மருணகிரி போற்றுலக குருரமணன்
புவியெலாஞ் சென்னிவைத்துப்
பொலிவோங்கு திருவடிப் புகலோங்கு மடியார்கள்
புகழோங்கி வாழ்கமாதோ ! (க)

### குருவே

குருவே யெனைக்கொண்டு கோதறுந் தொண்டசற்
குணமே குணங்கடந்தோர்
கூடிடுஞ் சமரஸ சிவானந்த முத்திவளர்
குன்றமே யென்றுமுள்ள

பொருளே பொருண்மேவு போதமே யப்பெரும்
போதங் கடந்தவிரிவே !
பொங்கிப் பொலிந்துநிறை மங்கலக் காட்சியே
புகலரிய சகசநிலையின்
உருவே யுணர்வாகு முறவே யுளங்காணு
மொளியே பரந்தவெளியே !
உண்மைநீ யுண்மைநீ யெனையாண்ட பகவனே
யுலகாளு மருளாளனே !
அரிதே யருட்பெருஞ் சோதியே யன்பினுக்
கருகா தவக்காந்தமே !
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
யறிவான பரதெய்வமே ! (உ)

## நீயேயெல்லாம்

நீயே யெனக்கன்னை நீயே யெனக்கப்ப
னீயே யெனக்கு சுற்றம் !
நீயே யெனக்குலகு ! நீயேயெனக்குறவு !
நீயே யெனக் கிகபரம்.
நீயே யெனக்குநிதி ! நீயே யெனக்குமதி
நீயே யெனக்கு கதியே !
நீயே யெனக்குகுரு ! நீயே யெனக்குமொழி
நீயே யெனக்கு வழியே !
நீயே யெனக்குணர்வு, நீயே யெனக்குயர்வு,
நீயே யெனக் கனுபவம் !
நீயே யெனக்கருமை, நீயே யெனக்கபயம்,
நீயே யெனக் கிறைவனே !

ஆயிரங் கதிர்வீ சருட்பெருஞ் சோதியே!
யான்ம நிறைவே யாதியே!
யருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரு
மானந்த மோன வடிவே! (௩)

அன்புமதம்

அன்பே யுனக்குவமை; யன்பே யுனக்குருவம்;
அன்பே யுனக் காலயம்!
அன்பே யுனக்குமலர்; அன்பே நிவேத்தியமும்
அன்பு வழிபா டுனக்கே!
அன்பே யுனக்காகு மாசார நியமமுன்
னன்பே யெனக் கறநெறி!
அன்பே யெனக்குமத மன்பே யெனக்குசுக
மன்பே யெனக்கு முத்தி!
அன்பே யெனக்குடல மன்பே யெனக்குயிரு
மன்பே யெனக் குலகெலாம்!
அன்பே யெனக்குவர மன்பே யருந்தவமு
மன்பே யனந்த பதவி;
அன்பழகு பொங்கிநிறை யன்பலை புரண்டோடு
மன்புமய மான பொருளே!
யருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரு
மானந்த மோன வடிவே! (௪)

சதாபூஜை

எப்போது முன்பூஜை யெப்போது முன்னெண்ண
மெப்போது முன்ற னுறவே!
எப்போது முன்சக்தி யெப்போது முன்முக்தி
யெப்போது முன்சித்தியே!

எப்போது முன்சுத்த மெப்போது முன்ஸத்ய
மெப்போது முன்ஸமரஸம்,
எப்போது முன்யோக மெப்போது முன்போக
மெப்போது முன்ருகமே!
எப்போது முன்சச்சி தானந்த மயமாகி
யென்றென்று முன்ற னுடனே
யேகாந்த நித்திய சுகாதீத நிஷ்டைபெறு
மின்பப் பசிக்கமுதமே!
அப்பனே யுனையன்றி யெனையாவ ரறிகுவர்
அனந்த ஞானப் புனிதனே!
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரு
மானந்த மோன வடிவே! (ரு)

## உன்னால் யான்

உண்ணுவது முன்னா லுயிர்ப்பதுவு முன்னா
லுணர்வதுவு முன்றனாலே!
யூருவது முன்னா லுரைப்பதுவு முன்னா
லுவப்பது சிறப்ப துன்னால்;
எண்ணுவது முன்னா லியங்குவது முன்னா
லிருப்பது பருப்ப துன்னால்;
ஏதேது செய்திடினு மெல்லாமு னிச்சையே
யெல்லா முன் னாராதனை;
கண்ணிலா ருங்காண்பர்; கண்டவர்கள் வாயிலர்;
கருத்திறந் தோர்க ளுணருங்
காட்சியே யனுபவச் சாட்சியே யெங்களுங்
கரைகடந் தொளிர் மாட்சியே!

அண்மைக்கு மண்மையே யப்பாற்கு மப்பா
லதற்கு மப்பா லிலங்கி
யருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரு
மானந்த மோன வடிவே! (கா)

## நீயே புகல்

பொற்பதத் துணையலாற் புகலிலேன், புகலிலேன்,
பொய்யுடலை நம்ப மாட்டேன்! [ன்
பொன்னையான் வேண்டிலன்! புகழையான் வேண்டில
பூவையர் பிணிச் சுகத்தைச்
சொற்பனத் தேனும்யான் வேண்டிலேன் வேண்டிலேன்
சொகுசுநடை யுடைவேண்டிலேன்!
சோதித் தெனைக்கோடி சூட்சியாற் காணுவாய்
சோதியே யெங்கு நிறைவே!
இப்போ திருப்பதுவு மினியா னிருப்பதுமுன்
னின்பத் திருப்ப தல்லால்
ஏழையே னெங்கினு மிருப்பொன்று மில்லேன்
விருப்பொன்று மெதினு மில்லேன்!
அற்ப வுலகத்தினை மதித்திலே னையனே
யாவுநீ யென மதித்தேன்!
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரு
மானந்த மோன வடிவே! (எ)

## உன்னடிப் பித்தன்

எத்திசையு முன்னன் பிருக்க விலையோ? சற்று
மென்மிசையு மஃதில்லையோ?
எல்லா முன் னிச்சையின் படியே யியங்கியிங்
கிவ்வுலகு சுழல விலையோ?

முத்துமுத் தாய்த்திகழு முத்தமி ழலங்கலை
முதிர்ந்தவுள் ளன்பர் சூட்டி
முத்துநகை யோடுனது முத்தியமு துண்டென்று
மோனத் திருக்க விலையோ?
பத்தன்யா னிரவுபகல் பாடியாடிக் கூவி
பலபல தவம் பயின்றே
பார்த்துள மடங்கியுன் பரிவலாற் கதியிலேன்
பரிகாரம் வேறொன்றிலேன்!
அத்தனே யுன்னடிப் பித்தனேன் வைத்தன
னனைத்துமுன் சித்த மென்றே!
யருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரு
மானந்த மோன வடிவே! (அ)

## திருவருள் மருந்து

தாயாகிலும் வறுமை சாற்றியிலை யென்னுவள்,
சகோதரர் துணைமறுப்பார்!
தந்தையுங் கடுகடுத் திடுவனுன் கருணையில்
தட்டுமுட் டுகளு முண்டோ?
நோயுற்றெ னுடலம் நடுங்கிமெலி வெய்தினும்,
நூறுகூற் றெதிர் வருகினும்,
நோவைப் பொறுத்துனது திருவடியி னேற்றலே
நோய்தெறு மருந்தாகினேன்.
"தாயேயெ னப்பனே தயவுசெய் யுன்மனந்
தான்வெல்க" வென்பதல்லால்
தனியனேன் யானெனு மகந்தைகொண் டென்றுந்
தனித்தவழி சென்றதுண்டோ?

ஆயாம லோயாம லடியனே னலறுனன்
ஆதர வளிக்க வருவாய் !
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரு
மானந்த மோன வடிவே ! (௯)

## ஞான வழிபாடு

ஆயிர விதழ்மலரி ஞசன மளித்தனன்
அறிவொளி நிறைவித்தனன் ;
அவ்வறிவி லூறியெழி லன்புப் பெருக்கிலே
யாட்டினேன் றிருமஞ்சனம் !
தூயமன மலரொன்று சூட்டினே னுன்னடி ;
தொடுத்துத் தொடுத் தார்வமாஞ்
சோலைவளர் கற்பகச் சுகமல ரலங்கலாற்
சோதியிசை மாலை வேய்ந்தேன் ;
வாய்மன மடங்கிய வமைதியை யுடுத்தினேன்
வாழ்வினை நிவேதித்தனன் ;
வாழ்கநின் னிச்சையென் றுன்வழித் தொண்டனேன்
வாழ்த்துந் துதித்து நின்றேன் !
ஆயா வுனக்கான ஞானவழி பாட்டையே
யனவரத மாற்று கின்றேன் !
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரு
மானந்த மோன வடிவே ! (௧0)

## அகாரமே

எம்மொழியி லெவ்வகைய ரெம்முறை வழுத்திடினு
மெல்லா முவக்கு மிறையே !
இன்பத் தமிழ்மலரொ டக்காலு முன்னையே
யிணையறு தோதுகின்றேன் !

உன்மொழியு மென்மொழியும் வேறுபட் டுள்ளதோ?
வுள்ளதொரு மொழியல்லவோ ?
ஓங்கார வுட்பொருட் குயிரே யகாரமே !
யுலகெலா நிலவுமொன்றே !
சன்மயத் தீபமே சின்மயக் கதிர்பரவு
சாட்சியே சக்திவிரிவே !
தரா தலத்திலெத் தகையர்திரு வுள்ளமுந்
தானென விளங்கு நிறைவே !
அன்னையப்பா வுனக் காவியுட லன்றே
யடைக்கலம் வைத்துகந்தேன் !
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரு
மானந்த மோன வடிவே ! (கக)

## சாந்த வழி

கர்ச்சித் தெழுந்துவிழு திரைகளுக் காதியாங்
கடலலாற் கதியு முண்டோ ?
கரைபுரண் டோடுமிக் காஞற்றி னுக்கருட்
கடலலா லமைதி யுண்டோ ?
தர்க்கித் தெழுந்துதான் ருனெனு மொழிக்குலந்
தன்னறிவிலேற் றணியுமோ ?
சகத்தினை யலைக்குஞ் சழக்குஞ் சமர்களுட்
சாந்தமல் லாற்றீருமோ ?
துக்கசுக தொந்தமற முக்குண வகந்தை
துளிர்க்குமன மாயை தோன்ருச்
சுத்தசிவ ஜோதிவளர் துரியஸம நிலையே
சுதந்திரப் பதவியென்பார் ;

அக்கதிக் காளாகி யானுமிங் குய்வனோ
யாண்டா யுனக்கடிமை யான்;
அருள்பெருகு மறிவுவள மருவுருதி மலைவளரு
மானந்த மோன வடிவே ! (கஉ)

## தவ நிலயம்

மலையுண்டு மாதவத் திற்கரிய குகையுண்டு
மனமொன்றி நின்று விடினோ,
மகிழ்வுண்டு தனிவுண்டு மறலிபா சமுமஞ்சு
மௌனமந் திரமுமுண்டு;
கலையுண்டு நிலவுண்டு கவியுண்டு செவியுண்டு
கண்ணுண்டு காட்சியுண்டு;
காட்டிடக் குருவுண்டு கதியுண்டு யோகவெங்
கனலுண்டு வினையுண்டிட;
நிலையுண்டு சிற்சக்தி நிதியுண்டு பதியுண்டு
நிறைவுண்டு குறைவுண்டிட;
நீக்கமற நீடுநல் லமுதுண் டிருக்கலாம்
நீவருதி யென வழைத்தாய்!
தொலையுண்ட நட்பொடென் றுயருண்ட வள்ளலுன்
றுணைகொண்டென் மனையெய் தினேன்;
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதிமலையே ! (கங)

## உலகியல்பு

இன்றுநே சித்தவர்க ளாளையே வெருகுபோ
லிகல்வேட்டை யாடு முலகம்;
எமன்வரி னுமிணையமே ரும் என்றென்று மன்புளோம்
என்றுருகு காதலாளர்

சென்றுண் டுறங்கிமன மொன்றென்று கொஞ்சி "என்
செல்வச் சிறப்பின் வளமே!
"தேனினும் பாகினுந் தித்திக்கு மின்பமே
திருவே" யெனக்கலந்து
நின்றவரு மொருபிணக் கொருநொடியி னேரவே
நேர்பகைவ ராய்ப் பொருதுவார்!
நிறைகெட்டு மதிகெட்டு நெறிகெட் டலைவரிது
நீசவுல கத்தி னியல்பே!
தொன்றுதொட் டிவ்வியலை நன்றுதேர்ந் துனையலாற்
றுணைவேறு மனமறிகிலேன்
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதிமலையே! (கச)

வஞ்சவுலகு

கால்வீழ்ந்து கைகட்டி வாய்பொத்தி முகமனுற்
காரிய முடித் தேகுவார்!
கைதந்த நன்றியைக் காலினு லெத்துவர்
கடன்வாங்கி யில்லை யென்பார்!
காலத்தி லேபழகி கட்டிக் களித்தவர்
கடும்பகை வழக்கி னுழல்வார்!
காசுபண முடல்வலிமை கனமன முறிஞ்சிவெங்
கட்டையினி லேற்றுமட்டுஞ்
சேல்விழியர் மோகவலை சிக்கியலை மாந்தரைச்
சேர்வதாற் சுக மெய்துமோ!
சேவித்த சீடனும் போதித்த சிலனைச்
சீயெனுங் காலவேடத்

தோலாட்ட மென்னிடம் வாலாட்டி டாமலுன்
றுறவினாற் றாய னானேன் !
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதிமலையே ! (௧௫)

## புல்லியல் வாழ்வு

நாயேன் நவின்றிடவு நாலுபேர் சீயென்னு
நச்சுவினை கொச்சைப் பயல் ;
நலந்தீ தறிந்திடா நரகவாழ் வைப்பற்றி
நாறிக் கிடந்த புலையன் !
தீயேன் பகற்றிருடன் சிற்றினச் சேர்க்கையே
செய்திடுங் கைதவ சடன்
திட்டும் பொறாமைசின வஞ்சமுங் கோளுந்
திருட்டும் உருட்டி வார்த்த
பேயே னெனக்குமொரு பேரன்பு பாலித்த
பெருமைபெறு பெரியபொருளே !
பிள்ளையென் றெத்தனை பொறுத்தனை பெரும்பிழை
பேசரிய கருணைவள்ளால்
தூயமதி தந்தே தடுத்தாண்ட தங்கமே
துறைசேர்த்த வருள்வங்கமே !
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதிமலையே ! (௧௬)

## சித்த சலனம்

அரைநொடி யிதற்கிட மளித்திடிற் போச்சுதென்
னாவியை யலைக்குதையே !
ஆகாத பேயலைகள் ஆயிர மெழுப்பியுள்
ளமைதியிற் புயல் வீசுதே !

உரிமையினை யுரிமைகொண் டெனவாட்டி யுலகெலாம்
ஓட்டிக் குதிக்குதையே!
உணவினுங் கனவினிலும் ஊர்வம்பு தன்னிலும்
உலகாயதச் சேற்றிலும்,
கரையற்ற கர்மபந் தங்களிலு மாசையாங்
கானல்வெஞ் சுரமதனிலும்
காமாந்த காரமாங் காட்டினிலு மென்றனைக்
கண்கட்டி விளையாட்டுதே!
துருதுருக்குந் துட்ட மனதினை யடக்கவொரு
சூட்சுமஞ் சொல்லப்பனே!
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே! (கஎ)

## மனக்குரங்கு

உறங்கிடினு மென்னுளிவ் வோயாத மர்க்கடம்
ஓடி யாடித் திரிகுதே!
ஓகோ விதன்கூத்தை யோதவும் படுமோ?
வுரைநிறை யதற்கு முண்டோ?
திறங்கெடுத் தென்னைத் திடீர்பகி ரென்னத்
திடுக்கிடுங் காட்சி களுடன்
செகமெலாஞ் சித்திரக் கூடமா யூடாடி
சிந்தனை நடம்புரிகுதே!
இறந்தகா லத்தினி லியற்றிய வினைகளை
யெதிர்கொண்டு விளையாட்டுதே!
இங்கங்கு மெங்குமொரு கங்குகரை காணுமை
லிருவிகற் பத்தி லுழலுஞ்

சுறட்டனை யுனக்கொரு குறட்டெனப் பூட்டுவாய்
துரையே யனந்த நிறைவே!
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதி மலையே! (௧அ)

## மனத்திற்கு மௌனப்பூட்டு

இனிமே லிதற்கிட மொருக்காலு மீந்திடே
னிஃதுறுதி யுறுதி சொன்னேன்!
எத்தனை முறைசபத மிட்டுரைத்தேன்! முடிவி
லிமைதியா திருக்கின்றனன்!
தனிமையிற் கட்டிச் சதாமோன மென்னுந்
தடித்தவாய்ப் பூட்டு மிட்டேன்!
தாரணை சமாதியிற் றன்மயச் சுகமுண்டு
தன்னிலை யிருத்தியென்றேன்.
கனவினை விடுத்துமெய் கண்டதனி லூன்றெனக்
காட்டியொரு பொருளை யீந்தேன்;
கலங்காம லினியிறு கதிக்கான முத்திபெறக்
காப்புநீ ஞான வள்ளால்!
துணிவுநீ தோணிநீ! துணையுநீ கடலுநீ
துறையுநீ துரிய வடிவே!
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதிமலையே! (௧௯)

## உலக நிலையாமை

ஊருண்டு நிலமுண்டு பணமுண்டு வளமுண்டு
உரமுண்டு செயலுமுண்டு
உறவுண்டு திருமாதர் மனையுண்டு புத்திரர்கள்
உவகையுஞ் சிவிகை யுண்டு

C

பேருண்டு புகழுண்டு பேரிடத் தன்புண்டு
பேசிட மதிப்புமுண்டு ;
பின்னொருவ ரென்னிகர்வ ரில்லையிப் பெற்றியாம்
பெரியம்யா மென்றபேரில்
யாருண்டு நிலையா யகந்தையினி லுண்டுண்
டுருண்டவர்க் களவு முண்டோ ?
அவனிபர்க ளெத்தனை யழிந்தனர்க ளரசோடு
மந்தகோ வெண்ண வசமோ ?
தாருண்ட நீரெனச் சுகமுண்டு நின்னருள்
சுவைத்தென்னை யுண்டு விடுக !
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரஞ் சோதி மலையே ! (௨0)

மனப்பிழை.

தெரிந்தியான் செய்தபிழை பலகோடி பலகோடி
தெரியாத தெண்ணவசமோ ?
சிந்தையி லகந்தைவெஞ் சிறுபேய் புகுந்தெனைச்
சீரழித்தது கொஞ்சமோ ?
கரந்தியான் செய்தவினை கைமேற் பலித்திடக்
கண்டித் தெனைத் திருத்திக்
கண்பார்த்து நீயெனைக் கைதூக்கி விட்டனை
கருணையா ளாளாகினேன் !
மருந்திற்கு மெய்யிலா மாமால னென்னையும்
மன்று தடுத் தாண்டனை !
மறலிவாய் வீழ்ந்தவனை மகனென்று மீட்டமர
வாழ்வின்ப மீந்து காத்தாய் !

சுரந்தமுத மிடைவிடா தூட்டுமுன் றொடர்பருத்
துரியமரு ளரிய வுறவே !
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதிமலையே ! (உக)

## வைராக்கியம்

எத்தனை யிடர்வரினு மெக்கொடிய நோய்வரினு
மென்னென்ன வின்னல் வரினும்
ஏழ்மை வரினும்பிற ரிகழ்ச்சி வரினும்முட
லினைத்தென்பு முருகிவிடினும்
வெற்றிவரினுந் தோல்வி வெட்க வரினும்உட்க
வெம்பசி யெனை வாட்டினும்
வேறின்றி யுன்னைக் கலந்தமெய்க் காதலில்
வெறுப்பொன்று முண்டாகுமோ ?
எத்திசையு மெக்கணமு மெவ்விடமு மென்னுளே
யிரறக் கூடி நின்றாய் !
இன்பனே நண்பனே யிறைவனே பரமனே
யெல்லா முனக்காகுக !
தொத்துறு துயர்க்குலத் தூசியெனை யணுகுமோ ?
பரிதியைக் குறை தொடுமோ !
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சுடர்பரவு சோதிமலையே ! (உஉ)

## அறிவுத்தெய்வத்தின் அருட்காப்பு

ஆசைபெறு மாயையினை தளையடக் கிடவெனக்
கங்குரம் போன்ற ஞான
வைராக்கியத்தை யளித்தனை யகந்தையிருண் மாற்றினை
ஆகாதுன் னன்பென் றொல்வேன் !

வேசையென வுள்ளங் கவர்ந்துவெறி யேற்றிட
மினுக்கிக் குலுக்குமாயா
வேடங்க ளத்தனையும் வீழ்ந்தோடி யோடவொரு
விடுதலைத் திற னளித்தாய்!
தேசுதனை விலைகொண்டு சிக்கவைத் துயிருணுஞ்
சிறுநெறி விழாது காத்தாய்!
சிறுவயதி லேயெனைத் திடமாக வுன்வழி
திருப்பித் திருத்தி வந்தாய்;
ஆசானு மன்னையொடெ னப்பனு மருந்துணையும்
யாவுநீ ஞான மூர்த்தீ!
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
யறிவான பரதெய்வமே! (உரு)

சகச நிலை

மறைகளோ பலபல மதங்களோ பலபல
வகைவகை முரண்கள் பலவே!
மனிதமதி யாலே வகுப்புண்ட விதிகள்பல
வாதபே தங்கள் பலவாம்;
குறைமல்கு கோடிநூற் சுமைகொண்டு பரசுகக்
குன்றின்முடி யேறவசமோ?
கோதற்ற வாதற்ற குறியற்ற தூயநெறி
குணமூன்று மற்ற நிலையே
நிறைவான வானந்த நிஷ்கள நிராமய
நிரந்தர சுதந்திரத்தில்
நின்றொன்றி நன்றுலவு ப்ரம்மநிர் வாணமே
நிசசகச நிலை யெனக்கே

அறமஃதென் றிறமஃதென் வரமஃதென் முத்திவீ
டஃதன்றி யெஃதும் வேண்டேன்
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
யறிவான பரதெய்வமே! (உச)

## தானே தனக்கினிது

தாரா தலத்தினிற் சாற்றுமொழி யாவிலுந்
தமிழினிது தமி ழினிதுகாண்!
தாராள வாஞ்சையுள தமர்சுற்ற முறவினிற்
றாயினிது தாயினிது காண்!
பாராதி தனிலுள்ள கண்டங்க ளிற்புனித
பரதகண்டம் பெரிதுகாண்!
பண்புள முயற்சிவினை பலவினுந் தனைவென்ற
பரமதவ மினி தினிதுகாண்!
சீராதி பெருமைக ளியாவினுஞ் சிறியது
சித்தவை ராக்கியங்காண்!
தேடரிய சித்திகளி லோங்கியது தொட்டற்ற
சிவதுரிய சஹஜ நிலைகாண்!
யாரா ரெனக்கினிது செய்திடினு மாராயின்
யானே யெனக் கினிதுகாண்!
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
யறிவான பரதெய்வமே! (உரு)

## வேற்றுமைகள்

எத்தனை மதங்களுள் ளெத்தனை வகுப்புகள்
ளெத்தனை பிரிவினைகள் காண்!
எத்தனை முடைகளி லெத்தனை தடைகளின்
றெத்தனை மனமாறு பாடுகள்!

எத்தனை கொள்கைக ளெத்தனை கோலங்க
ளெத்தனை யுயர்வு தாழ்வே !
எத்தனை முக்குண விகாரங்க ளத்தனையு
மெண்ணவோ ரெண்ணு முண்டோ !
இத்தனையு மல்லா விருக்கையென தென்றமைதி
யின்பநிலை யீந்த வரசே !
இவ்வின்ப நிலையிலே யென்றென்று நிற்பதே
யிறவாமை யெனவுணர்ந்தேன் !
அத்தனே யுனையலா தடைவதற் கொன்றில்லை
ஆராய்ந்த வுண்மை யிதுவே !
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
யறிவான பரதெய்வமே ! (உசா)

மவுன வுறவு

எம்மொழியி லெவ்வகையி லெம்முறை வழுத்திடினு
மெல்லா முகக்கு மருளே !
எக்காலு முன்னிலையி லேந்தவித் தென்னையினி
தேகாந்த மாக்கி விட்டேன் !
தன்மயத் தீபமே சின்மயக் கதிர்வீசு
சக்தியே சுத்த வடிவே !
சதானந்த யோகந் தழைத்திடற் காகிய
தனிப்பெரிய மவுன வுறவே !
சன்மவினை யாவையுங் கதிர்கண்ட பனியெனக்
காய்ந்திடுந் தவ நெருப்பே !
கட்டவிழ்த் தென்மனக் கவலைபினை முற்றுங்
களைந்தசுடர் ஞான வாளே

அன்னையப் பாவுன்னை யல்லாது வேறிலேன்
அன்புநீ யாதரவுநீ !
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
யறிவான பரதெய்வமே ! (உஎ)

## ஐக்யம்

நீவேறு நான்வே றெனப்பல நினைக்கினே
நிம்மதி யடைவ தில்லை ;
நின்னின்று மச்சமொ டகன்றுதனி நிற்கினே
நீர்பெருகி யுருகி யழிவேன் !
தாய்வேறு சேய்வே றெனப்பிரித் தெண்ணிடுந்
தாயன்பு சேய்க் குதவுமோ ?
சாதிமத சந்தைச் சழக்கிற் பிரிந்துலகு
ஸமரஸச் சாந்த முறுமோ ?
பாய்திரையு மாழியு மிரண்டென மருண்டமதி
பதியன்பியல் பறியுமோ ?
பரிதியும் விழியும் பகுத்தகொரு பார்வையோ
பச்சறு பலாச மாமோ ?
ஆய்ந்தவரி னனுபவ மனைத்தினினு மொன்றெனு
மதற்கைய மென்று முண்டோ ?
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
யறிவான பரதெய்வமே ! (உஅ)

## வேண்டாமை

வேறென்ன நெஞ்சே ! விரும்பிய விருப்புகள்
விரும்புவா றீந்து விட்டேன்
வேண்டினே னுன்னையொரு மேலான நன்றியினை
" வேண்டாமை " வேண்டி யருள்வாய் !

சோறென்ன பணமென்ன சொகுசென்ன சோம்பற்
சுகங்களுந் துய்த் தனுத்தாய்!
தொல்லுலகி னல்லலைத் துகளற வறிந்துளஞ்
சோதித் தியல்பு கண்டாய்!
மாறிமாறித் தேயு மாயா விகாரத்தில்
மாறுபட் டலையே னெனும்!
மருவற்ற சுத்தநெறி மாசற் றுணர்த்தியெனை
வாழ்வித்த ஞான நிதியே!
ஆறுத லெனக்குநீ யன்றிவே றில்லையத்
யாத்மப் பசிக் கமுதமே!
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
யறிவான பரதெய்வமே! (உக)

சுகாதீதமே

காமிய வழுக்கின்றி யுன்கருவி யாயெனைக்
கைமலரி லர்ப்பணித்தேன்!
கரணமுட னுயிர்பொருள் கருத்தன்ப னைத்தையுன்
கழலடியி லர்ச்சித்தனன்!
சேமமுற வெனையாண்டு கொள்ளுவாய் சாந்தச்
சிதானந்த சிற்காந்தமே!
சிறியனேன் பிழையெலாஞ் சிட்சித்து ரட்சித்து
சிந்தைவைத் தாளாக்குவாய்!
நீமனது கொண்டபடி நிறைவேற்று வாயுன்ற
னிறைவினை நிரப்பி யென்னுள்;
நின்னலாற் பிறிதொரு நிலைப்பிலேன் செயலிலேன்
நித்திய சுகா தீதமே!

ஆமென்று மன்றென்று மொன்றென்று புவியோ
ரனேகமாய்ப் போற்ற நின்றாய்!
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
யறிவான பரதெய்வமே! (௩௦)

## வேண்டுவன

பெற்றாலுன் னமரநிலை பெறவேண்டு மில்லையேற்
பிறவிதனை மாய்க்க வேண்டும்!
பேசினா லுன்மகிமை பேசவேண்டும் மிலேற்
பேசாத தனிமை வேண்டும்!
உற்றாலுன் வெற்றிபெறு திறல்வேண்டு மில்லே
லொடுங்கியு ளடங்க வேண்டும்!
உன்னினா லுன்பெருமை யுன்னவேண் டும்மிலேல்
உன்னலறு மமைதிவேண்டும்!
பற்றினா லுன்பதம் பற்றவேண்டும் மிலேற்
பற்றற்று நிற்கவேண்டும்!
பார்த்தாற் சுயஞ்சோதி பார்க்கவேண் டும்மிலேற்
பார்வையுள் ளாக்க வேண்டும்!
அற்றாலென் வினையெலா மறவேண்டு மில்லேலு
னருளாடல் புரிய வேண்டும்!
ஆன்மபரி பூரண வகண்டசுக வாரியே
யறிவான பரதெய்வமே! (௩௧)

## கனவொழித்தல்

இன்னுமிப் பொய்யுடற் சுமையைச் சுமந்தியான்
இந்த்ர ஜாலக் கனவிலே
ஏமாற்று மாமாய மித்தைதச் சுழிக்குளே
யிருள்சுற்றி நிற்பதாமோ?

பொன்னினும் பொருளினும் புகழினுஞ் சுவையினும்
போகக்கடற் புயலினும்
போவிடுத் தாவியைப் பாவியாய் முடிவிலே
புதைகுழிக் கிரையாவதோ ?
கண்ணுளே பாவாய் கருத்தொளி ருணர்வாய்க்
கலந்தபே ரின்பத்திலே,
காண்பதல் லானுனைக் காட்சிவகை வேறிலேன்
கண்மூடி யுள்விழித்தேன் !
தண்ணருட் கடலிற் சதாமோன மலைமீது
தன்னுடன் ருறு கினேன் !
ஸர்வஸம ரஸசுத்த சாந்தநிலை யொளிவளரும்
சச்சிதா னந்த மயமே ! (௩௨)

## வீண் கேள்விகள்

ஊரென்ன பேரென்ன ? வுறவென்ன ? மதமென்ன ?
வுள்ள செல்வங்க ளென்னே ?
ஓதிய வகுப்பென்ன ? வுத்யோக வகையென்ன ?
வூதிய மதிப்பு மென்னே ?
சீரென்ன வீட்டின் சிறப்பென்ன ? செய்யென்ன ?
செய்தரு விளைவு மென்னே ?
செவ்விளையமனை வியின் றிருவென்ன ? மனையோங்கு
செல்வரின் றிறமையென்னே ?
பார்தரு மதிப்பென்ன ? பையல்கள் படிப்பென்ன ?
பவுஷென்ன ? சொகுசுமென்னே ?
பகரெனக் கேள்விக ளடுக்கும் பழக்கமிப்
பாரைவிட் டென்று போமோ ?

தாராள மாகவுன் றருமபுத்திரரே
தழைத்தென்று புவிவாழுமோ?
ஸர்வஸம ரஸசுத்த சாந்தநிலை யொளிவளரும்
சச்சிதா னந்த மயமே! (௩௩)

## ஐய வினாக்கள்

யாரிறைவ னெங்குளான்? எங்குமுள தெங்ஙனே?
அருவனுரு வுருவருவனோ?
யாவண்ணன்? யாவினையன்? யாமொழியன்? யாதா
லனைத்தையு மியக்குகின்றான்?
பாரெலா மொருவனைத் தாங்கியும் பாராது
பார்த்துள்ள பண்பெங்ஙனே?
பரமனருள் கூடியே பலவாய திருலீலை
பரவுவத னெண்ண மென்னே?
ஈரற் றவன்மயத் தின்புற்று துன்பற்
றிருந்திடு முபாய மென்னே?
என்றினைய பலகோடி வினவுவா ருலகிலே
யிதயத்து ளிதய மாகார்?
தூரற் றகந்தைவினை யிரற்று தன்னுளே
சுகமுற் றிருக்க வறியார்!
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
துரிய நிறைவான பரமே! (௩௪)

## அகண்டாத்மா

தானாக நின்றெலாச் சகமாகி யுகமாய்ச்
சலிக்கின்ற காலமாகி,
தன்னுளே யாவுமாய் யாவினுந் தானாய்த்
தனித்தொன் றனந்தமாகி

வானாகி வளியாகி யனலாகி நீராகி
மண்ணாகி மண்ணுலகிலே
மாயையாய் மாயியாய் மட்டுக் கடங்கா
வளம்பெருகு விளையாடலாய்,
நீநா னென்னும்பிரிவி லாமற் கலந்தெங்கு
நிறைவாகி நிற்கு மொன்றே!
நீயலாற் கதியிலேன் நின்றிடற் கிடமிலேன்
நினைவிலேன் மனமு மில்லேன்,
தோன்றாது தோன்றியென் றுணைநின்று ளறிவினைத்
தூண்டுஞ் சுடர்க் கொழுந்தே!
சுத்த பரிபூரண சுகானந்த வாரியே
துரிய நிறைவான பரமே! (௩௫)

ப்ரம்மாகார சக்தி

எனையுனக் கின்பமா யிந்தன னிறைவனே
யேற்றுன்னை யென்னுள் வைப்பாய்!
என்மாய விருளெலா மில்லாம லோடியா
னென்றென்று முன்ற னுடனே
இணைவுற் றருட்சுடர் பிடித்தங் குலாவுவேன்
ஏகாந்த மோனத்திலே!
இயற்கைவிளை யாட்டெலா மென்னுள்விளை யாடு
என்வினையு மற்றிருப்பேன்! [வேன்
தனதென தெனார்க்கெலாந் தானான தன்னையே
தந்தரு ளனந்த சுகனே!
தர்க்கவா தங்களைத் தாண்டியொளி ருண்மையே!
தாயிற் றயாமூர்த்தியே!

அனுபவா னந்தருள் ளறிவாம் பரப்பிரம்
மாகார சக்தி மயமே!
அன்பொடுமொ ரணுவுமெனை யகலாத நேயமே
யாருயிர்க் காதல் மயமே! (௩௬)

## ஓம் பரிபூரணானந்தம்

வேறு.

மதித்தாலும் மதிப்பாலே மமதை கொள்ளேன்;
மறக்கருணை செய்தாளு மலர்ப்பா தத்தால்
மிதித்தாலும் மிதமிஞ்சி வார்த்தை பேசேன்;
வெவ்வினையைச் சுட்டெரியும் வெகுளி பொங்கிக்
கொதித்தாலுங் குணமிழந்து விலகமாட்டேன்
கொழுக்கொம்புன் றிருவடியிக் கொடியனேனை
யுதைத்தாலுந் துதிக்கின்றேன் உனைவிட்டுய்யேன்
ஓம்பரம பரிபூர்ண னந்தவாழ்வே! (௩௭)

இளைத்தாலு மிவ்வுடல மெலும்புக் கூடாய்
எடுத்தகடுந் தவவிரத மிழக்க மாட்டேன்,
பிழைத்தாலுன் றிருவடியிற் பிழைத் திருப்பேன்,
பிழையென்றிவ் வுடற்கூட்டைப் பிளந்துன் பூங்கை
கிழித்தாலுங் கெடமாட்டேன் கிளர்ந்துன் ஞான
கேவலசிற் சுகக்கிளியாய் வளர்வ னுன்னுள்
ஒளித்தாலு முன்னொளியா யொளிர்வே னெங்கும்
ஓம்பரம பரிபூர்ண னந்தவாழ்வே! (௩௮)

வேறு.

தந்திர மறியேன் உலகினர் பயிலுஞ்
சமத்துக ளமட்டுத லறியேன்.

சொந்தமொன் றில்லேன் சுவர்க்கமோ டுலகச்
 சுகங்களைத் துரும்பென மதித்தேன்;
பந்துவொன் றில்லே னிளம்பர தேசி
 பகலிர வற்றவுள் வெளியில்
மூந்துநீ யென்னை யுய்த்தவா றுள்ளேன்
 ஒம்பரி பூரண வாழ்வே! (நடசு)

எத்தகை வடிவில் எப்படி வருவாய்!
 எவ்வகை யெனைத்தடுத் தாள்வாய்!
எத்திறம் பணிப்பாய் எப்பய னளிப்பாய்
 எங்கெனை யுய்விப்பா யெல்லாம்
சித்தமென் றுன்னைத் தெய்வமே நம்பிச்
 செம்மனக் கோயில்கொண் டுள்ளேன்!
அத்தனே யம்மை யப்பனென் றுவிக்
 காம்பரி பூரண வாழ்வே! (சо)

—சுத்தானந்த பாரதி.

சுத்தானந்த பாரதியார் எழுதிய

# ஸ்ரீ ரமண விஜயம்

## க. பாலகாண்டம்

### காப்பு

கொங்கலர் மலர்வாய் குறுநகை புரிவாய்!
குயில்களிற் கொற்றயாழ் முரல்வாய்!
செங்கதி ரொளியிற் றிருவிழி பார்ப்பாய்!
செழும்பசுஞ் சோலையின் வனப்பிற்
பொங்குசீர் முகத்தைப் பொலிவிப்பா யெங்கும்
பொற்புறக் கோயில்கொண் டருள்வாய்!
தங்குயிரனைத்துந் தன்னுட லாவாய்
ஸச்சிதா னந்தனே சரணம்!

கண்ணெலா மழகாய்க் கருத்தெலா மொளியாய்க்
கரணங்கள் யாவிலுங் களிப்பாய்ப்
பண்ணெலா மிசையாய்ப் பாரெலாஞ் சீராய்ப்
படைப்பினைப் பவந்தெறு மருந்தாய்
விண்ணெலா நீயாய் விரிவெலா முனதாய்
விளங்குக நலங்கிளர் விளக்கே!
மண்ணெலாம் பொன்செய் மங்கள சக்தி
மல்குக, பல்குக வளமே!

ஓம்

जितं जगत् केन ? मनोहियेन !

ஜிதம்ஜகத் கேந? மனோஹியேந !

உளம் வென்றோன் உலகு வெல்வான் !

# ஸ்ரீ ரமண விஜயம்

## க. பாலகாண்டம்

### க. எண்ணுகேன் என்சொல்லி யெண்ணுகேனே !

“ தானந்த மில்லான் றனையடைந்த நாயேனை
யானந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ !
யானந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ !”

உள்ள பொருள், உள்ளபடி, யுள்ள விடம், உள்ளூறவிற் காட்டி, உரையாமலுணர்வித்தே யுன்னாமலுன்னுவித்த தன்மயச்சின்மயமே ! நின்னை உள்ளுணர்வில், உள்ளபடி யுள்ளத்தில், உரையடங்கி, உள்ளடங்கி சுகிப்பதல்லால் என் சொல்லி எண்ணுகேன் ! எவ்வாறு வரிவடிவிற்

காட்டுகேன்! உனதறிவே கண்ணுகக் காணினல்லால், இப்படியன், இந்நிலையன், இத்திறலோன், இப்பொருளோன் என்று எவ்வாறு எழுதிக் காட்ட முடியும்? நின் பிறப்பு வளப்பங்களை எழுதுவது நினது வாழ்வின் ஒலியமேயாகும். நிகழ்த்துஞ் சரிதை நிழலேயாகும்; அகமற்றுணர்தலே யறிதலாகும். ஆத்மாராமனுன ரமணனை சுத்த ப்ரஹ்ம நிர்வாணனை, மாசற்ற நெஞ்சில் ரமித்தலே இன்பம்; "ரமணன்" அனுபவப்பொருள்; அவன், நினைத்து நினைத்து, நினைப்பொழிந்து சுவைத்தறியற் பாலன். வாசித்துங் காணுமல் வாய்விட்டுங் கேளாமற் பூசித்துந் தோன்றுப் பொருளை, அகந்தைமனநாசத்தால், அருள் நேசத்தால், அருணகரி (அருள் + நகரி) வாசத்தால், தன்மயநிவாஸத்தால், சித்தாகாசத்திலே கலத்தலொண்ணும்.

சுகாரம்பப் பெருவெளியே! எனது ஐயவிருளைப் பட்டென விலக்கிய ஞானவொளியே! கண்டதும் என் மனத்தை யுண்ட காந்தமே! வேண்டியதெல்லாம் விழியாலுறுத்தி, எளியனேனையும் எடுத்தாண்டருளி, மோனமணிப்பெட்டகத்தில் ஞானமணி வைத்து, மனக்குகை யிருத்தி "இது வுன் செல்வம், இதை யனுபவித்து இங்கேயிரு" என்று சுகவீடு தந்த சுயம்பிரகாசனே! "நான்" நாணத் "தான்" என்னுந் தலைவனைக் காணக் காட்டி, அவனுடன் என்னை யிணையறுமின்பத்திற் கூட்டிய தாய்தந்தையே! "நானுர்" என்னுந் திருமந்திரத்தை மோனச்சின்முத்திரையுட னளித்த ஞானகுருவே! எல்லாம் ப்ரஹ்மமயமாய் உள்ளும்புறமுங்காண அமுதச் செல்வமளித்த அறிவுக்கற்பகமே! "இதயத்திரு! உள்ளே நோக்கு! நோக்க நோக்கப் பூக்கும் இன்பம்;

அதையே கவனி" என்னுந் திருவாசகத்தால் எனக்குள்ளிருக்கும் நித்திய பரிபூரணானந்தத்திற்கு வழிகாட்டிய ஒப்பிலாக் கருணையே! நின்னை என்சொல்லி எண்ணுகேன்!

"சிந்திக்குந் தோறுமென்னுட் சிற்சுகமா யூற்றூறிப்
புந்திக்குள் நின்றவருட் போற்பே பராபரமே!"

நீயே பொருளென நிலைக்கக் காட்டி என் சித்தந் தெளிவித்த சின்மயவொளியே! சுழிகையில் (திருச்சுழி) தோன்றிச் சுடர்மலையாகி, மானிடம் பூண்டு மனிதரிற் பழகி, எதுபொரு ளென்போர்க்கு இதுவெனச் சுட்டி, உருவாய்த் தோன்றியும் அருவாயொளிரும் நித்திய மோனியே! சுத்த மெய்ப்பொருளே! * அழகொடும் அழகின்ற அழகே! அமுதே! உரையாதுரைத்தே, உண்ணுதுண்டே, பாராது பார்த்தே, உயிர்க்கா துயிர்த்தே, உன்னு துன்னியே, உறங்கா துறங்கியே, உலவாதுலவும் நிராலம்ப வாலம்பனே! பாரததேவியின் பரமானந்தக் கனியே! தமிழணங்கின்ற வமுதச் செல்வனே! ஆவியின் ரூபம் அணைத்திடும் ஊற்றே! தேடுவோர் † தேட்டறுந் தெய்வப் பொருளே! நாடுவோர் பசிக்கு நற்சுவை விருந்தே! நின்னை எங்ஙனம் எண்ணுகேன்!

பகலுக் கொளிசெய்வார் யார்? கடலுக்கு முழவடிப்பார் யார்? மலையை இலக்குவார் யார்? அல்லிக்கு அழகு சேர்ப்பார் யார்? நின்னன்பு, நின்னின்பு, நின்னமைதி, நின்னறிவு, நின்னழகு, நின்சக்தி அனைத்தும் அதது

* தாயும் அழகம்மை; தந்தையும் சுந்தரன்.

† கவலை - பேரவா.

தானாக விரிந்து பரவுகின்றது ! நின் விரிவிற்கு வேலி கட்டு வார் யார்? "நான் உலகறிய நின்னை விளக்குவேன்" என்னும் அகந்தையன் யார்? எல்லாம் நின்னது! எப் பொருள் எங்கும் ஒரு பொருளோ அதுவே நீ! எல்லா உயிர்களும் உன் உயிர்; எல்லா மனமும் உன் மனம்; எல்லா உடலும் உன்னுடல்! எல்லா உலகிலும் நடக்கும் இயக்கங்களனைத்திற்கும் நீ பற்றற்ற சாக்ஷி! நின் சந்நிதி வளத்தால் இந்நிலமியங்கும்.

நின் ஞானவூற்றிற்கு ஊமைபோலக் கைகாட்டு கிறேன்! உலகே! ஆசைப் புயலில் அகப்பட்டு அலறுகின் றாய்! முக்குணமாயையில் மூழ்கி மூச்சிழக்கின்றாய்! பேத புத்தியாற் பித்தம்பிடித்தலைகின்றாய்! உயிரையும் அறி யாய்! உலகையு மறியாய்! இறையையு மறியாய்! அறிந் தால் ஒரு பொருளையே காண்பாய். அதுவே நீ, உலகு, இறை எல்லாம்! இதோ இந்த ஜோதிக் குன்று கர்ப்பூர மலைபோலெரிகின்றது! இதனொளியில் அனைத்தும் விளங் கும்! உண்மை ஒன்று வெளிப்படும். இம்மலையிலுள்ள ஞானமூலிகையால் உன் மயக்கப்பிணி யொழி! இதுவே அருணகிரி! இதுவே ஆத்மாராமம்! இதுவே ப்ரஹ்ம மயம்! இதுவே "ரமணன்."

அம்மையப்பனே! இவ்வாறு உலகை என் ஆவி கூவு கிறது! உன் பெருமையை மைக்கடல் வற்ற, வான்விரிவு நிரம்ப எழுதினும் முடியுமோ! எழுதாமல் எழுதுகின் றேன்! எழுத்தால் நின்னை மனனஞ்செய்கின்றேன். என தன்பும், எனக் குறுத்திய நினதறிவுங் கூடிப் பெற்ற ஆத் மானந்தப்புதல்வன் யான் யாரிடம் அறிவுச்சுடரேற்றி னேன் என்று வினவுகிறான்! அக் குழந்தைக்குக் கதை

சொல்லுகிறேன்! நின் அரும்பெருந்தகைமையை யிசைக்கிறேன்! யானேயோ எழுதுகின்றேன்! அது எழுதுவிக்கின்றது! செய்வதெல்லாந் தெய்வவேள்வி! வேள்வியுந் தவமும் நுகர்வோனே! இம்மொழிமலர்களால் உன்னை வழிபடுகின்றேன்.

இதயம்பூ மந்திரமு மின்சொல்லா யுன்றன்
றுதியாக வேயருளாய் தொண்டு.

## உ. வாழ்வாறு.

ஆற்றினுங் காற்றி னலைந்தேனுன் சந்நிதியில்
ஏற்றதும் வீடெய்தி னேன்.

1916-ம் ஆண்டு ஞானப்பசி யெடுத்தது. ஜீவன் முக்தர் வரலாறுகளையும், உபதேசங்களையும், புனித நூல்களையுங் கற்று நினைத்துப் பாடி எழுதிப் பரவசமாவதே முயற்சியானது. பல மதப் பெரியோர்களையும் நேர்ந்துழி சென்று வணங்கி ஞானஸாதனம் மேற்கொண்டதுண்டு. பகவத் கீதையே ஞானவழிகாட்டியாகப் பின்பற்றி, அதைப் பின்பற்றி யனுபவங் கண்டோருடன் உறவுகலத்தல் உண்டு. தன்னலமற்ற பணியே அகந்தையொழிந்து வாழ்வைப் புருஷோத்தமனுக்கு வேள்வியர்க்கும் வழி யெனப் பல துறைகளில் பணிமேற்கொண்ட துண்டு. பணிக்கு சக்திவேண்டுமென, ஹட ராஜயோகங்கள் பயின்றதுண்டு; இவை யெல்லாம் உண்டெனினும் உள்ளே

நீக்க முடியாத ஒரு குறையுண்டு. ஹடராஜயோகத்தால் உடலுயிர் மனத்தில் சில திறமைகள் உண்டாயின. ஒலியும் ஒளியும் ஒருப்பாடும் எய்தினவெனினும் அவை பொருட்டாகத் தோன்றவில்லை. சமயம், கவி, இலக்கியம், பத்திரிகை, ஆசிரமக்கல்வி, அரசியல், சமுதாய முன்னேற்றம், கிராமநிர்மாணம் முதலிய பல துறைகளிற் பாய்ந்தும் வாழ்வு அமைதிக்கடல் சேரவில்லை. இசையும் புகழும் எத்துணை இன்புறுத்தினும், இவை யெல்லாம் மின்னெனத் தோன்றின. உள்ளே ஒரு சச்சிதாநந்தக் கடலிருக்கிறது. அதைக் காண வழி தெரியாது மனந் தவிக்கிறது ; அதன் துமிகளே பிற இன்பங்கள் ; அதைக் காணாததே குறை. அக்குறையைப் புறப்பொருள் எதனாலும் நீக்க முடியவில்லை ! உடனே நிறைவான பொருளில் நிலைக்கவேண்டும். இந்த மனச்சுழற்சியை யொழிக்க வேண்டுமெனத் தாகம் பிறந்தது. ப்ரஹ்மபூதப்ரஸந்நாத்மனாக, ப்ரஹ்மநிர்வாண மடைந்தே, ப்ரஹ்மயஜ்ஞமாகப் பணிகளைச் செய்யாமற்செய்யவேண்டு மென்னும் முயற்சியில் தலைப்பட்டது.

சுற்றும்பேய் நெஞ்சைச் சுருக்கிச் சுகவழியே
பற்றற்று நிற்கப் பயில்

என்றதே பிறகு ஸாதனமாயிற்று. எனினும், புறப்பணிகள் வலிந்து ஈர்த்துப் பொதுவாழ்வில் ஆழ்த்தின. எவ்வளவு உள்ளமைதியுடன் செய்தாலும் “ நான் செய்கிறேன் ” என்ற அகந்தை போகவில்லை. அவ்வகந்தையே எல்லாப் பற்றிற்கும், மோகத்திற்கும் முளை. தீவிரமாகப் பின்பு உண்மையைக் காண ஆவல் பிறந்தது. எங்கு சுற்

றியும் மனந்தெளிய மருந்தகப்படவில்லை! ஞானசஞ்சீவி மலையை யறியா மடமையே அதற்குக் காரணம். கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், ஜைனம், ஜாரதுஷ்ட்ரம், ஸீக்கியம் முதலிய பல சமயங்களில் பயின்று பயன்பெறினும் முடிவான உண்மைப்பொருள் எய்தாது வருந்தியது. பிறகு அனைத்தையும் உதறி "ஆண்டவனே! நீ சர்வ சாக்ஷி; அனைத்திற்கும் அம்மையப்பன். இதோ யான் உன் பிள்ளை. இவ்வுலகில் அனாதை யானேன்! என்னை வழி காட்டி நடத்து! எப்படியெப்படி எங்கெங்கு இதயசாரதியா யிருந்து இந்த ஜீவனைச் செலுத்துகிறாயோ, அப்படியப்படிச் செல்கிறேன்!" என்று தன் முயற்சி யனைத்தும் விடுத்து, ஆண்டவனுக்கு அடைக்கலம் புகுந்தபின் அகந்தை ஒருமட்டும் ஒழிந்தது! "நான்" என்று முனைந்த வினை முடிவின்றித் துயரே யளித்தது;

எனதேன தென்ன லிடராகு மென்று
மவனது வென்ன வருள்

எனும் உண்மைக்கே இத்துயர் வழிகாட்டிற்று. கடிவாளம் அவன்கையிற் சிக்கியது; அவன் வழி சற்று பிசகி நடப்பினும் சுண்டி யிழுத்து நேர்வழியில் மேன்மேலும் செலுத்தி வந்தான். உள்ளே அவனருட் சக்தி இருந்து சத்தியமாக நம்மை நடத்துகிறது என்ற உறுதி யேற்பட்டது. எல்லா சமய நூல்களையும் அனுட்டித்து ஆராயும் போதும் அந்த சக்தியே உண்மையானது. எனினும் அதை எப்படி யடைவது, காண்பது, ஒன்றுவது எனப் புலப்படவில்லை! அது உள்ளேயுள்ள துடிதி! அன்று முதல் "சக்தி, சக்தி" என்று ஆடிப் பாடிக் கூத்தாடித்

தாயாகக் கடவுளைத் தேட ஆவேசம் பிறந்தது! அல்லும் பகலும் ஜபமாலை யுருட்டுவதும், சக்திமந்திரமும் பிராணு யாமமும் எல்லையின்றிச் செய்வதுமே தொழிலாயிற்று. அநேகமாக நாள் முழுதும் மோனமாகவே யிருந்துவந் தது. எத்தொழில் செய்யினும் சித்தம் அருளுணர்வை விடாதிருந்தது.

இந்நிலையில் யாராயினும் ஒருவர் எதிர்பாராது வந்து பகவான் ரமணமகர்ஷிகளைப்பற்றிச் சொல்வதுண்டு. முதல் முதலில் பகவானுடைய படத்தைக் கொண்டு ஒரு வர் வந்தார். அப்போதே ஒரு மனவுறவு ஏற்பட்டது. ஒரு காந்தம் இதனை இழுத்தது. திருவண்ணுமலையினின்று யார் வரினும் மஹர்ஷிகளைப்பற்றிக் கேட்டு ஆனந்திப் பது இயல்பாயிற்று. தமிழ்க்குருகுலத் திருந்தபோது, ரமணுசிரமச் சீடரொருவர் அங்கு வந்துசேர நேர்ந்தது. தினம் சுமார் அரைமணி நேரமாவது மகர்ஷிகளைப்பற்றி அவரிடம் வினவி யறிவது ஆறுதலளித்தது. மகர்ஷிகளின் சங்கற்பமற்ற சுத்தநிலை, சர்வஸமரஸம், சந்நிதிப் பெருமை, அகண்டாகாரமோனம், ஆன்மசக்தி, சாந்த மகிமை, அவர் தவமிருந்த குகைகள், அவை கட்டப்பட்ட விவரம் முதலிய அனைத்தும் விவரமாகக் கேட்டு இன்புறுவ துண்டு. இத்துடன் "நானுர்"? என்னும் ரமணவித்தை யும் பயிலத் தொடங்கியது. அப்பன் அருவாக அடியனை யாட்கொண்டான். அதுமுதல் புறவாழ்வின் பரபரப்பை யும் மனத்தின் பம்பரச் சுழல்வையும் விலக்கி அமைதி யாகப் பார்க்கையில் உள்ளே ஒரு பொருள் நடமாடி விளங்குவது நன்கு தெரியவந்தது. அப்பொருளில் நிலைப் பதே அமைதியெனப் பட்டது. அமைதி நிலையாக, அது

வாக நிலைத்துநிற்கும் மஹர்ஷிகளின் சந்நிதானப் பெரு மையே வேண்டுமென்னுந் தாகம் அதிகரித்தது.

— இதற்கு முன்பே திருவண்ணாமலையில் அப்போது நடந்த அரசியல் மகாநாட்டிற்கு ஸ்ரீமான் வ. வே. சு. ஐயர் சென்று வந்தார். உடனே அவரை மகர்ஷிகளின் விவரமே கேட்டது.

" ஆஹா! தமிழ் நாட்டில் ஒரு ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அவதரித்துள்ளார்! அவர் ஜோதிபர்வதமாக விளங்குகிறார். அவரைப் பார்க்கவே முதன்மையாகத் திருவண்ணாமலை சென்றேன்! மலையினும் அவருடைய காம்பீர்யமே அற்புதமா யிருக்கிறது! அவர் சந்நிதானத்தில் நமஸ்கரித்து உட்கார்ந்ததும் என் மனம் புதிய சாந்தி யடைந்தது. நமது தமிழ்நாடு பாக்யம் செய்தது! பாரத தேசம் இம்மஹானைப் பெறப் புண்ணியம் செய்தது; பாரதி! அவரைக் காண வேணும்" என்றுரைக்கவே தெய்வக்காதல் கொழுந்து விட்டெரிந்தது. பிறகு, பகவானே நினைப்பு. அதன் பிறகு ஆண்டவன் விடுத்த தூது போன்று ஸ்ரீகணபதி முனிவர் குருகுல சமரஸமுடிவிற்காக வந்தார்! அவரைக் கண்டதும், ஆழிகண்ட தேவியாகி மனஞ்சிலிர்த்தது. அவருடைய கம்பீரத்தையும், கலைவளத்தையும் வேதப் புலமையையும், மணிக்குரலையும், ஆற்றொழுக்கான பேச்சையும் வியந்தது. அப்போது ப்ரஹ்மசூத்திரத்தில் 'ஜ்ஞாதிகரணம்' பாடம் நடந்து கொண்டிருந்தது. "ஆதலின் (ஆன்மா) அறிஞனே" என்பது அன்று பாடம். எனில் எதை அறிகிறான்? அறிவு எது? எதனால் அறிகிறான்? ஞானம், ஞேயம், ஞாதா மூன்றும் வேறா, ஒன்றா? அவற்றை ஒன்றுவிப்ப தெது? வேறு

படுத்துவதெது? என்னும் த்ரிபுடி ஐயப்பாடுகள் நூல்களில் எவ்வளவு புகுந்து நோக்கினும் மூளைக்கு வேலையானதே யொழிய இதயசாந்தி தரவில்லை. காகிதப்பூவிற் கசியுமோ பசுந்தேன்?

அன்றேறு, கல்விகேள்வியிற் பற்றற்றது. வாழ்வு உள்முகமானது. தெய்வதூதன் போன்ற கணபதிமுனிவரும் இதன் மனத்திற் பதிந்து வணக்கத்திற் குரியாரானார்! இம் மஹானின் குருநாதர் பெருமையைச் சொல்ல வேண்டுமா? இதனிருப்பிடம் அவர் திருவடியில்; அதற்குத் தயார்செய்துகொள்ளவேண்டு மென்ற வுறுதியுடன் முடிந்தமட்டும் வேறு சங்கற்பங்களை யொழித்து, மனதின் வேகத்தை வரவர வொடுக்கலாயிற்று. எக் காரியஞ் செய்யினும் ஈசுவரார்ப்பணமாக, உள்ளே சாக்ஷியாயிலகும் பரமாத்மனுக்கு வேள்வியாக அகந்தையின்றிச் செய்யப்பட்டது. ஒன்றினும் பலனை விரும்புவதில்லை. வரவர எப்பணியிலும் புத்தி செல்வதில்லை. இருப்பினும் இன்னு மவன்றிருவுளம் இதனைப் பலதுறைப் பொதுப் பணிச் சுழலி லீடுபடுத்தியது. ஆனல் அவை அவனிச்சை, தனிமைத் தவநலத்தையே புத்தி நாடிற்று. அதற்காக இந்தியாவிற் சில மலைகளிலும், ஆற்றுப்பாங்கான இடங்களிலும் சுற்றி யிருந்து பார்த்துத் திரிந்து முடிவில் மைசூருக் கடுத்த பௌகோளாவில், விண்ணை யிடித்து நிற்கும் பாகுபாலிநாதரின் மலைக்கோயிலில் சாதுக்களின் அருமை யறிந்த ஜைன் சகோதரருக்கிடையே தங்க நேர்ந்தது. அங்கு அற்புதமான குகைகளிருந்தும் இருக்கை கொள்ளாது இதை ஏதோ ஒரு பசி மஹர்ஷிகளின்பாலே இழுத்தது. ஓரிரவில் தியானம் செய்கையில் தாங்கமுடி.

யாத அன்பு பிறந்துவிட்டது; மகர்ஷிகளை உடனே காணு விடில் உயிர் நிலைக்காதெனும்படி அவ்வளவு கடும்பசி யெடுத்தது.

மறுநாட்காலையே நேராக மைசூரிலிருந்து திரு வண்ணாமலைக்கு வந்ததும், மனதில் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது! ஒரு அரசியல் நண்பர் வீட்டில் சாமான்களை வைத்துவிட்டு, உடனே மலையை நோக்கி மீப்பாய்ந்து, பகவான் தவமிருந்த இடங்கள் குகைகளெல்லாம் கண்ட தும், வெட்கமும் ஆத்மவீரமும் மனத்தைக் கவர்ந்தன; "அந்தோ வாழ்வை வீணாக்கினோம்! நிலை தெரியாது அலைந்தென்னபயன்! தன்னை யறியாது பிறருக்கு அறிவு புகட்டும் மடமையினும் மடமை வேறில்லை! சர்வசக்தி யின் இச்சையால் அனைத்தும் அததன் இயல்பின்படி நடக்க, நாம் குறுக்கிடுவதேன்! உலகில்,

"மாறுபடு தர்க்கந் தொடுக்கவறி வார்சாண்
வயிற்றின் பொருட்டதாக,
மண்டலமும் விண்டலமு மொன்றாகி மனதுழல
மாலாகி நிற்கவறிவார்!
வேறுபடு வேடங்கள் கொள்ளவறி வாரொன்றை
மேணமேணென் றகம்வேறதாம்
வித்தையறி வாரெமைப் போலவே சந்தைபோல்
மெய்ந்நூல் விரிக்கவறிவார்!
சீறுபுலி போற்சீறி மூச்சைப் பிடித்துவிழி
செக்கச் சிவக்கவறிவார்
திறமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கையொடு முளறவறிவார்!

ஆறுசம யங்களிலும் வேறுவே ருகிவிளை
யாடுமுனை யாவரறிவார் !
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே ! ”

என்று அழுதுகொண்டே விரூபாக்ஷகுகைக்கு வருகையில் அங்கிருந்த வொருவரால் பகவான் முன்னாங்கு மோனசமாதியில் ஆழ்ந்திருந்ததை யெண்ணி அருவியினும் விழிநீருகுத்து, ஆங்கு அரைமணிநேரம் வேசற்றிருந்தது.

“ காயிலை யுதிர்ந்தகனி சருகுபுனல் மண்டிய
கடும்பசி தனக்கடைத்தும்,
கார்வரையின் முழையிற் கருங்கல்போ லசையாது
கண்மூடி நெடிதிருந்தும்,
தீயினிடை வைகியுந் தோயமதின் மூழ்கியுந்
தேகங்க ளென்பெலும்பாய்த்
தேரியநின் றுஞ்சென்னி மயிர்கள்கூ டாக்குருவி
தெற்றவெயி லூடிருந்தும்,
வாயுவை யடக்கியும் மனதினை யடக்கியும்
மௌனத்தி லேயிருந்தும்
மதிமண்ட லத்திலே கனல்செல்ல வமுதுண்டு
வனமூ டிருந்துமறிஞர்
ஆயுமறை முடிவான வருள்நாடி ஞரடிமை
அகிலத்தை நாடன்முறையோ ?
அண்டப்கி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே !”

என்று ஆவி குமுறி யருவி பொழிந்தது ! உறுதி யிறுகியது ; புறநோக்கெல்லாந் தகர்ந்தது. வாழ்வு உடனே

முற்றும் உள்முகப்பட்டது. மேலே ஸ்கந்தாச்ரமம் மட்டும் சென்று சுற்றி நோக்கி இறங்கி ரமணாசிரமத்தை நோக்கி விரைந்தது ! ஒரு அன்புக்காந்தம் இதை மின்சாரவண்டி போலிழுத்துச் சென்றது.

உடல், உயிர், மனம், நடை ஒன்றும் உணரவில்லை ! “பகவான் ரமணர்” அதுவே குறிப்பு ! மலையருவி ஆவலாகப் பாய்வதுபோல, “நான் என்னும் நினைப்பினின்று ஜீவாத்மா விரைந்திழிந்து கடலை யருகிய வெள்ளம்போல எல்லாம் குருநாதன் பாதம் என்னும் ஒரு மனப்பாட்டிற் பாய்ந்தது ! இனி யிவ் வாழ்வாற்றிற்கு அலைவில்லை ; இதோ ஞானக்கடல், ஜோதிமலை! சோதி மலையிற் சுடர்ப்பூச்சியானது இம்மனோமய வாழ்வு !

## ௩. ஜோதிமலை யிதுவே !

“நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது.”

மாலை ஆறரைமணி. மலை கம்பீரமாகப் புடை சூழ்ந்து தொடர்கின்றது. ரமணாசிரமம் மலையடிவாரத்தில் இருப்பினும், மலையே ரமணாசிரமத்தின் அடிவாரத்தில் பணிந்துநிற்பதாகக் காணப்பட்டது. ஆசிரமத்தின் புனிதத்தென்றல் “சிவோஹம்” என்று வீசிற்று ! அங்கு அப்போது கூட்டமில்லை. ஆசிரமம் ஏகாந்த நிஷ்டையிலிருந்தது ; அதன் ஒவ்வொரு அங்குலமும் ரமணாலய

மாகவே தோன்றிற்று! அன்பும், அழுகையும், இன்புங் கூடி அடிமையை ஆசிரமத்துள் இழுத்துச் சென்றன. கணபதிமுனிவரை முதலில் வினவியதும், 'இங்கிருக்கிறார்' என்று ஒரு கோயில் காட்டப்பட்டது. வேறொன்றையும் கவனிக்கவில்லை; பகவான் அங்கிருப்பதுங் காணவில்லை; முனிகளைக் கண்டு அவர் பின்னே ஆண்டவன் சந்நிதிக்கு வணக்கமுடன் செல்லவேண்டுமென நினைத்தது. முனிவர் கம்பீரமாக வேதமழை பொழிகிறார். கன்மமூட்டைகளை வெளியே வைத்து உள்ளே விரைந்ததும், வலது புறம் ஒரு பால்வெளியே தென்பட்டது; திறந்த வால்வெளி யென்றெண்ணி அதை நோக்காது முனிகளுக்கு சாஷ்டாங்கநமஸ்காரஞ் செய்து "அடியேன்" எனுமுன்னே 'ஆஹா! அங்கே பகவான்" என்றார் முனிகள்! உடனே தூக்கிவாரிப்போட்டது! ஆகா! நான் நாடித் தேடிய பொருளன்றோ அருவாக அருகிற் பளிச்சிட்டது! மிகவும் தயாரிப்போடு பகவானை முனிவருடன்கூடக் காணச் செல்லவேண்டுமென் றெண்ணியதெல்லாம் ஒரு நொடியில் திடுக்கிட மறைந்தது. உடனே வலப்புறந் திரும்பவும் கண்டதென்னே! மனித வடிவல்ல; ஒரு வெண்ணீற்றுக்குவியலே முதலிற் றென்பட்டது. பிறகு முற்றும் ஜோதிப்பிழம்பு! பிறகே கை காலை மடித்து உட்கார்ந்து இதை யாட்கொண்ட பகவான் இதன் வணக்கங்களையும் எதிர்பாராது.

"பாரதியா! பாரதசக்தி எழுதியிருக்கிறார்" என்று தொடர்ந்தவுடன் இது மூர்ச்சையானது! பேச முடியவில்லை! ஆனந்தம்!! என்னே! மொழியுமுன்னே இதன் வரலாற்றையும் அறிந்து பல்லாண்டுகள் பழகிய நண்ப

ரைப்போல உறவாடுகிறார் ! இதனுயுளில் இத்துணை தூய அன்பை யார்பாலுங் கண்டதில்லை. என்ன தெளிவு, தேசு, அன்பு, கருணை ! ஆ ! மனச்சந்தேகங்களெல்லாம் நீங்கின. இது குழந்தையானது !

* * * * *

“ கடலின் மடைவிண்ட தென்ன—இரு
கண்களு மானந்தக் கண்ணீர் சொரிய
உடலும் புளகித மாக—என
துள்ள முருக வுபாயஞ்செய் தாண்டீ !
ஆதி யனாதியு மாகி—எனக்
கானந்த மாயறி வாய்நின் றிலங்குஞ்
சோதி மவுனியாய்த் தோன்றி—அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி!
சங்கர ! சங்கர ! சம்போ ! ! ”

இவ்வளவுதான் சொல்ல முடியும் ; அதற்குமேல் சுயானுபவமே சொல்லவேண்டும். மனம் உருகியது ! இன்பம் பெருகியது ! பகவான் “ பாரதி இங்கு சாப்பிடுமோ? ” என்றார். “ என் ஐயனே ! வேறெங்கு என் பசிக்கு அன்னமுள்ளது ! காடு மலை யெல்லாம் சுற்றி வற்றி முடிவில் மூலிகையைக் கண்டுபிடித்தது ஆனந்தம் ! பகவான் கரத்தால் ஒருபிடி பிரசாதம் பெற்றால் ப்ரஹ்மஞான விதையும் அதனுடன் நாட்டப்பெற்று இந்நிலம் சிவானந்தப்பயிர் விளைக்கும் ! பகவானே ! இதன் ஆத்மப்பசி அடங்காதது ! அதற்கு அன்னம் தமதிடமே யுள்ளது ” என்று அடிசாய்ந்து சரணமடைந்தது.

கண்பட்ட போதேயுன் கைப்பட்ட தென்றாவி
புண்பட்ட சிந்தையெலாம் போய்.

எழுந்து உட்கார்ந்தார் என் கருணைக்கடல்! மனிதனில்லை கண்டது! ஒரு ஜோதிர்லிங்கத்தையே கண்ணாரக் கண்டது! பகவானுடைய தலை லிங்கம்போன்றது. சுகாஸனத்திலிருந்த கால்கள் ஆவிடை போன்றன. மூன்று மடிப்புகளுடன் உயர்ந்த "பொன்னார் மேனி" லிங்கத்தின் உடல்போன்றது. இக் காட்சி மனமயக்க மல்ல! அப்படியே கண்டது! ஸத்குருவும், ஜோதிமலையும், ஜோதிர் லிங்கமும் ஒன்றெனத் தெளிந்தது. விருப்பு வெறுப் பற்ற விமலனை முன்னின்றான்!

" காக முறவு கலந்துண்ணக்
கண்டீ ரகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏக வுருவாய்க் கிடக்குதையோ
இன்புற் றிடநா மினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாருஞ் செகத்தீரே ! "

என்று ஆவி உள்ளெழுந்து கூவிற்று!

இப்பொருளையன்றோ மனிதான்மா பலவகை யிடர்களுடுந் தேடித் திரிகின்றது! இதை யறியாதன்றோ மானிடம் மாயைச் சக்கரத்திற் சுழன்றலைகின்றது.

" வானைப் போல வளைந்துகொண் டானந்தத்
தேனைத் தந்தேனைச் சேர்ந்து கலந்தமெய்ஞ்
ஞானத் தெய்வத்தை நாடேன் ; நானேனு
மீனப் பாழ்கெட வென்று மிருப்பனே ! "

என்ற உறுதியில் புத்தி லயித்தது ! ஒரு கேள்வியுங் கேட்கத் தோன்றவில்லை. கேள்விகேட்பதே எப்போதும் அடிமைக்குப் பிடிப்பதில்லை. கேள்விக்காகவும் வரவில்லை. கற்றதும் கேட்டதும் காசுக்காகவில்லை. புத்தகக்குப்பைகள் பொசுங்கிப்போயின. பகவானைக் கண்டதும் பெற வேண்டிய தனைத்தும் பெற்றதுபோல 'சாந்தம், ஸம்ருத்தம், அம்ருதம்' பொங்கியது ! உள்ளே வாயடைத்தது ! பகவானைப் பார்த்துக்கொண்டே, அவருடைய தெய்வ ஜோதிக்கதிரிற் குளித்து நீந்தி, அந்த அற்புத சந்நிதிப் பெருமையை அடிமை வியந்தது !

"கானக மிலங்குபுலி பசுவோடு குலாவுநின்
கண்காண மதயானைநீ
கைகாட்ட வுங்கையால் நெகிடிக் கெனப்பெரிய
கட்டைமிக வேந்திவருமே !
போனக மமைந்ததென வக்காம தேனுநின்
பொன்னடியி னின்றுசொலுமே !
புவிராஜர் கவிராஜர் தவராஜ னென்றுனைப்
போற்றிஜய போற்றியென்பார் !
ஞானகரு ணாகர முகங்கண்ட போதிலே
நவநாத சித்தர்களுமுன்
நட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதல்
ஞானிகளு முனைமெச்சுவார் !
வானகமு மண்ணகமும் வந்தெதிர் வணங்குமுன்
மகிமையது சொல்லவெளிதோ
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே !"

என்று தியானித்துப் பின்னே பாரதசக்திப் பேச்செழும் போது அதன் வரலாற்றை யுரைக்கலாயிற்று! இதற்கு முன்னே அதைப் பற்றிப் பேசும்போது மிகையணியும் 'நான்' எனும் உணர்வும் உடனிகழும்! பாட்டுமுழக்கும் அணியிலக்கணமும் எடுத்துக்காட்டுகளும் நகாரமடிக்கும்! இப்போது அந்த "நான்" இருந்தவிடமே தெரியவில்லை. முதல்வேற்றுமை யஃகி மூன்றாம்வேற்றுமை துளிர்த்தது! அறுவடையாகிக்காய்ந்த வயல்போன்று மனம்சுத்தவெளி யாயிற்று. நிலம், விதை, பயிர், கனி எல்லாம் அவனே. சொல்வதும், சொற்பொருளும், சொல்வோனும் அவனே னது! இதுவே பகவானின் பெருமை! பெற்றோரறிவார் அப்பேரானந்தம்! பிறகு பகவானின் அருள்மொழிகள் பல ஆன்மப்பசிக்கு அருவிருந்தளித்தன! இவை சரிதை யிடையே மிளிரும்.

## ஸ்ரீரமணாச்ரமம்

காலை புலர்ந்ததும், ரமணாச்ரமக் காட்சி நாண்மலர் போல தெய்வத்தூய்மையுடனும், சாந்தத்துடனும் அலர்ந்தது! வானக்கதிரை இங்கு விளங்கும் ஞானக்கதிரே பொலிவித்தது. அன்பர்கள் வண்டுபோலச் சுறுசுறுப்பாக அவரவர்க்குரிய அருட்பணியி லீடுபட்டனர். நித்திய தெய்வ மறையான பகவானின் றிருவடியில் சக்தித்தேனை யுண்டு மயங்கி எப்போதும் அன்பர்கள் தூங்காமற்றூங்கிக்கொண்டிருந்தனர். பகவான் புத்தாகாரம்; முருகன் றிரு; ஆஜானுபாஹு; அரவிந்தலோசனன்! அவ்விழிகளே மனமாயைக்கு நெருப்பு! அந்த சாந்த சந்நிதியே மனக்குரங்கின் ஓயாத அலைச்சலுக்கு அமைதி! ஆகாய

வாணி போன்று, "நான் பேசுகிறேன்" என்ற உணர்வு சிறிதுமின்றி, அன்பர்மீது கருணையாகப் பொங்கிவரும் ஞானக்கிண்கிணி மொழிகளே, வீண்வாதங்களுக்கு வாயடைப்பும், மனமறைக்கதவின் திறப்பும்! சற்றேனும் அலைவற்ற, அந்த நித்ய நிர்க்குண நிஷ்ப்ரபஞ்ச சாந்தபத வ்யோம நிலையே இருந்ததனை யிருந்தபடியிருந்து காட்டும் சிதம்பர தரிசனம்! பசியுடன் கேட்டால் பக்குவத்திற் கேற்ற மொழி; யார் எக்கேள்வி கேட்கினும் விருப்பு வெறுப்பின்றி அங்கிகரித்து விடையிறுத்தல்; குழந்தையின் தெளிவுடன் பழகுதல்; சுற்றியுள்ள அன்பருடன் வந்ததை யுவத்தல்; நாய், பசு முதலிய பிராணிகளுக்கும் சம அன்பு, மதிப்பு, உணவிற் பங்கு, ஆத்மரதி, ஆத்ம திருப்தி, ஆத்மாராமம், ஆத்மசந்துஷ்டியை நிரப்பும் அந்த சந்நிதானத்தின் பெருமைகளை என்னென் றுரைப்பது! அப்போது அங்கு நிகழ்ந்த காட்சிகளையும், அன்பர் ஐயந் தீர்ந்து பகவானின் அடிகளில் ஆர்வமுடன் வீழ்ந்ததையும் உரைக்கிற் பெருகும். சுருக்கமாக, மகர்ஷிகளின் சந்நிதானப் பெருமை அன்போடணைந்தவனுக்கு ஒரு புதுப் பிறப்பை யீந்து, புனிதமூட்டித் தெய்வவுணர்வைப் பெருக்கி ஆனந்தக்கடலாட்டுகிறது. அது ஒரு அத்யாத்ம அற்புதம்.

> புன்னகையே போதம்; பொருளேயப் பொன்வடிவு;
> கண்ணொளியே யோகக் கனல் . .

என்று ஒவ்வொரு மனமும் அதன்முன் உணர்ந்துருகும்.

ரமணாசிரமம் ப்ருந்தாவனம்போன்றது. பகவான் பசுவினிடை நிற்கும்போது பொன்மேனிக் கண்ணனைப்

போலப் பொலிகின்றார். கையில் குழலில்லையேனும் அவ ருடைய அருள்மொழி குழலினும் இனியது. கண்ணன் குழலினும் அதுவே விழிப்புள்ள ஆன்மசாந்தி யளிப்பது! கீதை உருவுடன் மிளிர்கின்றது! உபநிடதம் கால் கொண்டு உலவுகின்றது. வேதாந்த சித்தாந்த சமரஸம் கற்பகக்கைகளாகத் துலங்குகின்றது; இதுவே பகவான் ரமணர்! அருணகிரி வளரும் ரமண பரமகுரு!

## ரமணானந்தம்

ரமணா னந்தத்தெள் ளமுதக் கடலினீ
ராடிட வாருமினே!
சமரஸ சுத்த சுதந்தர விரிவினிற்
சகமெலாஞ் சாருமினே! (ரமணா)

நாணா ரவனேனு நாயக மந்திர
நாதத்தைக் கேளுமினே!
ஞானசக் திபொங்கி நலந்தரு மானந்த
நர்த்தனங் காணுமினே! (ரமணா)

பற்பல சமயங்கள் பாய்ந்தொரு பொருளெனப்
பரந்ததைப் பாருமினே!
அற்புத தற்பர சிற்பர வகண்டமாம்
அருளினைத் தேருமினே! (ரமணா)

அருட்பெருஞ் சோதிபா யருணோ தயத்திரு
வழகெங்கும் திகழ்வதைப்பார்!
பொருளிதென் றரும்பெரும் புலவரும் பொன்னடி
பொருந்திடும் மகிழ்வினைப்பார்! (ரமணா)

தானொப் புயர்விலாத் தவசக்தி யூற்றெழுந்
தண்ணடி பூணுமினே!
தானெனுந் தலைவனை நானறத் தன்னுளே
தானாகக் காணுமினே! (ரமணா)

## ௪. அத்யாத்மச்சோலை.

எல்லையிற் கடவு ளின்ப மிதயத்தி லமுது குக்கச்
சொல்லறு மனுப வத்திற் றுளிர்த்தெழுந் தருள் பழுத்து
நல்லறி வாளர் பெற்ற ஞானமந் திரத்தி னுண்மை
தொல்லுல கதிர தெய்வ துந்துமி முழங்கு நாடே.

யாருக்குப் பரமானந்தம் வேண்டுமோ, யார் கலப்பற்ற நித்திய சுத்த சுதந்தர சுகத்திற் காதல் பெருகுவரோ,

"செப்பரிய தன்கருணைச் சிற்சுகனார் பூரணத்தில்
அப்பினிடை யுப்பா யணையுநா ளெந்நாளோ!"

என்று எவர்கள் ஆவி ஆன்மப்பசியெடுத் தலைகின்றதோ, அவர்களுக்கு இத் தெய்வக் கற்பகச்சோலையின் அருட் கதவு திறக்கப்பட்டுளது! "ஆத்மா ஒன்று; அதையே யறி; அதை யறிந்தால் அதுவே நீ! அது நீ யாவதே அமுத வாழ்வு! அதன்மயமாகவே யனைத்தையுங் காண்பாய்! அக்காட்சியே விண்! அதிலூன்றியிரு! எழு! விழி! அறி! சுகி! ஓம் தத் ஸத்! தத்வமஸி!" இதுவே அச் சோலைத் தென்றலில் தவழ்ந்துவருங் குழலிசை! இந்த சச்சிதானந்தக் கற்பகம், தத்வமஸி என்னும் வேரி

லூன்றி, ஸோஹமெனும் மலர்பூத்து, அஹம் ப்ரஹ்மம் என்னுங் கனி குலுங்குவதைப் பார்! உண்மையறிவின்ப வூற்று இங்கு பொங்கிப் பொசிவதைப்பார்! தாகமெடுத் தோருக்குத் தன்மயப்பாலூற்று இங்கே யுண்டு—இதுவே பாரததேசம்—அத்யாத்மச்சோலை—அமரநாடு.

இங்கேயே கடவுண்மாநதி பாய்கின்றது! வேதம், உபநிடதம், கீதை, தேவாரம், திருவாசகம், திருவாய் மொழியாகிய கற்பகங்கள் தேன்பொழிந் தோங்குகின் றன! நித்யசாந்தம், சுத்த ஸமரஸம், பூரண சக்தி, ஜீவன் முக்தி, தெய்வ சுதந்தரம் என்னுங் கனிகள் ரஸம் பொழி கின்றன. நான் அவன்! நான் ப்ரஹ்மம்! நான் நான்! உலகெலாம் என்மயம்! என்று வேதாந்தகேசரி கம்பீர மாக கர்ஜ்ஜிக்கிறது. கண்ணன் குழலூதுகிறான்! வேத முனிவரின் சிதாகாசநாதத்தை சுருதியாகக் கொண்டு வேதவ்யாசர் நாகஸ்வரம் முழக்குகிறார்; சங்கரர் இனிய வீணை மீட்டுகிறார்; தேவாரம் பண்ணொலிக்கிறது. திரு வாய்மொழி ரீங்காரம் புரிகிறது. திருவாசகக்குயில் அகவுகிறது. தாயுமானக்கிளி கொஞ்சுகிறது. அருட் சோதிவண்டு அலம்புகிறது! புத்தர், ஞானசம்பந்தர், நம்மாழ்வார், சைதன்யர், ராமாநுஜர், மத்வர், தயானந் தர், ராமதீர்த்தர், பரமஹம்ஸர் போன்ற தெய்வத்திரு மைந்தர் இப்பூம்பொழிலை அன்பிளநீரூற்றி வளர்க்கின்ற னர். இத் தெய்வத்திருமைந்தரன்றோ இந்த அத்யாத்ம விண்ணகத்தை மண்ணகத்திற் சமைத்தனர்.

## தெய்வத்தமிழ்

தேன்மணஞ் சுமந்த தென்றல் இச்சோலைத் தென் புறத்தில் நம்மையிழுக்கிறது. ஆ! எல்லாந் தமிழ், இனிமை,

இன்பம், கடவுள்மணம், கடவுட்புலவர், கடவுணூல்கள், கடவுள்மைந்தர், எங்குங் கோயில்கள், கலை, கவி, இசை, செயல், நினைவெல்லாஞ் சிவமயம், அணுவணுவினுந் தெய்வ நிறைவு, தெய்வ சமரஸம், கடவுளழகு—இதுவே உண்மைத் தமிழ்நாடு.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்!"

"இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை!"

"அஞ்சுவ தியாதொன்று மில்லை! அஞ்சவருவதுமில்லை!"

"ஈச னெனக்கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தா னீநினைந்து கொள்"

"தன்மயமாய் நின்றநிலை தானேதா னாகிநின்றால்
நின்மயமா யெல்லாம் நிகழும் பராபரமே"

என்ற அமுதவாக்குகள் மனிதரைத் தீரராக்கி யோங்குகின்றன. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ன, தெய்வ சிற்சபையினும், கண்ணனின் ராஸலீலை வட்டத்திலும் அன்பர் யாவரும் அருளி லொன்றி, இறைவனே யுயிராய், இன்பமே வளமாய் இலங்குகின்றனர். பாட்டும் பணியும் பூண்டு, பரனடிக்கே யாளான நாயன்மார்களும், மாதவனை மனக்கோயிலிலிருத்தி அவனன்பில் ஆழ்ந்த ஆழ்வாராதிகளும், தமிழ்நாட்டை வாடாத்தெய்வ மணத்தால் நிரப்பிச் சென்றனர். அவர்களுக்குப் பின்னே தோன்றிய தெய்வஞானிகள் பலர் எனினும், சமீபத்தில் தமிழகத்தின் ஞானவசந்தச்சோலையில் உள்ளுருக அகவிய குயில்கள் பட்டினத்தார், தாயுமானார்; அருள்வள்ளலார் இம்மூவரே.

## தாயுமானுர்

தாயுமானவரைப் போன்ற அருள்பழுத்த பழச்சுவை எம்மொழிக்கும் அரிது; அது செஞ்சொல்லும், அருளணியும் பொலியுந் தமிழ் உபநிடதம்; அது மனத்தைக் காந்தமெனத் தன்மயத்தின்பாலிழுத்து இருத்தவல்லது.

"ஓராம லேயோருகா லுன்னுமை லுள்ளொளியைப்
பாராம லுள்ளபடி பார்த்திருந்தால்—வாராதோ
பத்துத் திசையும் பரந்தெழுந்தா னந்தவெள்ளந்
தத்திக் கரைபுரண்டு தான்."

அனுபவித்தாலன்றோ இச்சுருதியின் அருமை விளங்குகிறது! இது வொன்றே ஈடேறப் போதாதா! தாயுமானுர் வாழ்க!

## அருள்வள்ளலார்

அருள்வள்ளலார் உலகிற்கே யொரு புதிய அருள் வழியைக் காட்டியுள்ளார். வானரசு (Kingdom of Heaven), சத்யஜோதி (Supramental Truth Light), தேக வாழ்வை யமரவாழ்வாக்குதல், மண்ணை விண்ணாக்குதல் என்று தற்போது அத்யாத்மப் பரிணும வாதிகள் (Spiritual evolutionists) செய்துகொண்டிருக்கும் பெருமுயற்சிகளுக்கு அருள்வள்ளலார் வழிகாட்டியாயமைந்தார். அருட்பெருஞ்சோதிக்கொடியைச் சிற்சபையான பொற்சபையி லேற்றி,

"ஆதியு நடுவு மந்தமு மில்லா
வருட்பெருஞ் சோதியே னுளத்தே
நீதியிற் கலந்து நிறைந்தது! நானும்
நித்திய னாயினே னுலகீர்!

சாதியு மதமுஞ் சமயமுந் தவிர்த்தே
சத்திய சுத்தஸன் மார்க்க
வீதியி லுமைத்தா னிறுவுவ லுண்மை
விளம்பினேன் வம்மினோ விரைந்தே ”

என்று பொன்மணியை யொலிக்கிறார்! தேக சுதந்தரம், போக சுதந்தரம் அனைத்தையும் சிற்சபேசனுக்கே ஈந்து, தன்னுயிர் அவனுயிராய், அவன்மொழியே தன்மொழியாய், தன்னின்பம் அவனின்பமாக வள்ளலார் விளங்கினார்.

“ நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்சொல் வார்த்[தையன்றி
நானுரைக்கும் வார்த்தையன்று நாட்டீர்நான்-ஏனுரைப்பே[ன்?
நானார்? எனக்கெனவோர் ஞானவுணர் வேதுசிவம்
ஊனாடி நில்லா வுழி ”

என்று உருகுகின்றார் வள்ளலார். எத்தகைய ஆத்ம ஸமர்ப்பணத்துடன் “ நான் ” என்பதை அவனுட் கரைத்து, சத்திய சுத்த வாழ்வில் சமரஸம் விளங்க வுலகை யழைக்கிறார்! வள்ளலாருக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஒரு புதிய வுணர்வும் ஸமரசப்பசியும் வளர்ந்துவருவது வெள்ளிடைமலை.

## ஸமரஸப்பசி

ஏன், உலகிலேயே இன்ப சமரஸப்பசிதான் மனிதன் மனத்தை யுந்திநிற்கிறது. தொழிலும், வணிகமும், யந்திரசாலைகளின் படபடப்பும், தூலவாழ்வின் குறியற்ற விரிவும், புதுப்புது பௌதிக ஆராய்ச்சிகளும், சந்தை முயற்சிகளும், சமுதாயசங்கங்களும் உலகில் இவ்வின்பத்தையே தேடி வனாந்தரவண்டுபோலத் துரு

துருத்தலேகின்றன. மூளையாராய்ச்சியின் எத்துறையில் எத்துணை சென்றாலும் " இதோடேநில் ! பின் செல் !" என்னும் மதிமயக்கச்சுவர் தடுத்துநிற்கிறது. மனிதன் தோற்று அலுத்து மறுபடியும் " இன்பம் இன்பம் " என்றே கதறுகிறான். புதுமையும், போட்டியும், போரும், பேராசையும், " என்னை நீ கொல்கிறாயா ? உன்னை நான் கொல்லட்டுமோ ? " என்ற கதிக்கே மனிதனை யாளாக்கின. உலகாயதபோகவாழ்வின் பெருக்கும் கண்மூடித் தடவித் தடவி ஏதோ வொரு நித்திய இன்பத்திற்கே ஆசைநடையூர்கிறது. ஜேனோபன் (Xenophanes), ஹேராக்ளிடஸ் (Heraclitus), அரிஸ்தோதலன் (Aristotle), டேஸிக்ரேடஸ் (Descartes), ஸ்பாநோஜா (Spinoza), லாக் (Locke), ஹேகல் (Hegel), டார்வின் (Darwin), ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) லேபனி (Leibnitz), பேர்க்ஸன் (Bergson) வி.ஜேம்ஸ் (W.James) காந்தே (Kant), ஷோபன்ஹார் (Schopenhauer) போன்ற அறிஞர்கள் மேனாட்டின் எண்ணங்களிற் பல மாறுதல்கள் உண்டாக்கியுள்ளனர். ஆனால் பல்வகைப்பட்ட இம்மூளையாராய்ச்சியாளர் குரலுக்கு மேல்,

" உன்னை நீ யறி ! உனது ஆத்மபரிபூரணத்தையே முதலில் முதன்மையாகத் தேடு ; மற்றதெல்லாந் தானாக நடக்கும் "

என்று அன்று ஸோக்ராத்தன் (Socrates) செய்த இடிமுழக்கமே யோங்கிநிற்கிறது. ஆயினும் இன்னும் அம்முழக்கம் உலகாயதத்தின் புலனறிவை யூடுருவிச் செல்லவில்லை; கிழக்கொளியான ஆசியாவே, " கடவுட்பூரண மெய்து ! உன்னுள்ளே வானரசைக் காண் ! மற்ற

தெல்லாம் வந்தேய்தும்" என்று தனது மைந்தன் ஏசுநாதன் மூலம் மங்கலவாசகம் விடுத்தது. அவ்வாசகம் புத்தகத்தில் ஒவ்வொருவர் கைத்தலத்திலும் இருக்கின்றதெனினும் இன்னும் சித்தத்தில் பாய்ந்து பற்றவில்லை! அந்த யாழொலி போர்முரசால் விழுங்கப்பட்டுள்ளது!

சமயநெறிக்குச் சவுக்கடி கொடுத்துச் "சதைவலி பெருக்கி சகத்தை வெல்லு" என்று அகிறிஸ்தவ நீட்சி (Nietzsche) போட்ட Will to Power வெடிகுண்டுகள் இன்னும் புகைகின்றன. சென்ற மகாயுத்தத்திற்குப் பின்னே உலகம் நள்ளிருளைக் கடந்து, மெல்ல மெல்ல ஆராய்ச்சிக்கோலைப் பிடித்து ஏதோவொரு புதிய இன்ப வாழ்வின்பால் அடி வைக்கத் தொடங்கியுள்ளது. விரைவில் ஒரு தெய்வபுருஷன் மனிதரிடையே ஜோதிமலையென வெழுந்து இருள் கடிவானென உலகெல்லாம், சமயங்களெல்லாம் எதிர்பார்க்கின்றன. ஆங்காங்கு "அவதாரம், அவதாரம்" என்ற விளம்பரங்களுடன் சிலர் வணங்கப்படுகின்றனர். "இன்பம், சாந்தம்" என்று உலகம் பசியெடுத்து ஒரு அமுதசுரபியை எதிர்பார்க்கிறது. புலன்வாழ்வும், போகவாழ்வும், புறவாழ்வும், போலியின்பமும் அப்பசியனலில் மண்ணெண்ணெயே வார்க்கின்றன. சந்தையிலும், போர்முகத்திலும், பொறாமைக்காட்டிலும் சாந்தமேது? இன்பமேது? முடிவில் மனிதஜாதி தன்முகத்தைக் கிழக்கு நோக்கியே வணக்கமுடன் திருப்பியுள்ளது. இருளடிமைக்கட்டிற் சிறையுண்ட மனிதான்மா ஒரு ஞானோதயத்தை எதிர்பார்க்கிறது. உண்மையறிவின் திருமுடியிலேயே இன்பச் சமரஸம்வளர்வது.

## தன்னை யறியவேண்டும்

இன்பசமரஸம், எவ்வாறெய்தும்? சங்கம், கூட்டம், பேச்சு, விருந்து, கலப்பு, விளம்பரங்களாலியங்கும் புறச் சாதனங்களால் உண்மைச் சமரஸம் எய்தவில்லை. சமரஸப் பொருளைக் கூடி நிலைத்தலன்றோ சமரஸசித்தி. அப் பொருள் எங்குள்ளது? ஒவ்வொருவர் உள்ளத்தும் ஒன்றா யுள்ளது. ஊர், பேர், வடிவு, பிறப்பு, தொழில், மதம் முதலியன அனந்தம்; ஆனால் அந்த சமரஸத்துரியப் பொருள் அனைத்திலும் ஒன்று, அனைத்துடனும் ஒன்று! அதுவே "தானே யனைத்தும்" என்னும் சமம் ப்ரஹ்மம்; அதையாழ்ந்தறிந்து கலந்து நிற்றலே சாந்தம், சமரஸம், இன்பம் எல்லாம்; அகப்போரொழிந்தாற் புறப்போரொழி யும். இவ்வுலக யந்திரத்தில் ஒவ்வொருவரும் தெய்வசக் கரம். அனைத்தையுங் கலந்தியக்கும் பொருளே உள்ள பொருள். அதை நாம் நமக்குள்ளே யறிந்தடங்கினால், அதது அததனிடத்தில் அறிந்தடங்கி நிற்கும். நம்மிடத் தில் நாம் நிலைத்தால், அவரவரிடத்தில் அவரவர் நிற்பர். திருகாணி சக்கரத்தைத் திருத்துகிறேனென்று துள்ளிக் குதித்தால் யந்திரஞ் சிக்கலாகிவிடும். இடமறிந்து நின் றால், ஆண்டவன் இச்சை அனைத்தின் மூலமும் ஒழுங்காக நடக்கும்.

தன்னை யறியவேணும்! "அறிவுறுந் தன்னை யறி யாது, அயலை யறிவது அறியாமை" அஹம்ப்ரஹ்மம், சர்வம் ப்ரஹ்மம் என்ற இரண்டு [illegible]களால் மனி தன் மூச்சுவிடவேண்டும்.

"தன்னை யுபாதிவிட் டோர்வது தானீசன்
றன்னை யுணர்வதா முந்தீபற
தானா யொளிர்வதா லுந்தீபற!

“உதித்த விடத்தி லொடுங்கி யிருத்தல்
அதுகன்மம் பக்தியு முந்தீபற
அதுயோக ஞானமு முந்தீபற !” (பகவான்)

என்ற மணிவாசகமே இப்போது, புறவாழ்வில் அகந்தை மனமெனும் பேய்க்காற்றில் அலைந்து, மூச்சடைத்துத் தவிக்கும் ராஜஸதாமதமனிதன் ஈடேற வேண்டுவது. யாருடைய சந்நிதானப் பெருமையாலேயே எல்லாம் அதன் சுபாவத்திற்கேற்பச் செயல்புரிகிறதோ, எந்த ஞான நடத்தரசன் அனைவருள்ளத்தும் “நான் நான்! நானே நீ!” என்று ஆனந்தநடனம் புரிகிறானோ, எந்த ஜோதியுதயத்தால் தெய்வ சேதனத்தாமரை தானாகவே மலர்கின்றதோ, எது அனைத்திற்கும் சாக்ஷியரசா யிலங்குகின்றதோ, அப்பொருளையே மனிதன் தூலக்கோட்டையைத் துருவி, உயிர்மனையுட் புக்கு, மனக்கதவைத் திறந்து, சிற்சபையில் சச்சிதானந்தத் தன்மயப்பொருளாகக் கண்டு கலக்கவேண்டும்; சொல்லடங்கிப் புறச்செயலடங்கி, கடலில் முத்துக்குளிப்பவன்போல் உள்ளே மூழ்கி இன்பத்தைக் கலக்கவேண்டும்; இன்பங் கலந்தவர்க்கு உள்ளும் புறமும் எங்கும் இன்பமே!

“हृदय कुहर मध्ये केवलं ब्रह्ममात्रं
ह्यह मह मिति साक्षादात्मरूपेण भाति ।
हृदि विश मनसा स्वं चिन्वता मज्जता वा
पवन चलन रोधा दात्म निष्ठो भवत्वम् ॥”

“ஹ்ருதய குஹர மத்யே கேவலம் ப்ரஹ்ம மாத்ரம்
ஹ்‘யஹ மஹ’ மிதி ஸாக்ஷாத் ஆத்மரூபேண பாதி |
ஹ்ருதி விச மனஸா ஸ்வம் சிந்வதா மஜ்ஜதாவா
பவந சலந ரோதாத் ஆத்ம நிஷ்டோ பவத்வம் ||”

"இதயம் என்னும் குகை மத்தியில், கேவலம் ப்ரஹ்மமே 'நான் நான்' என்று ப்ரத்யக்ஷமாய் ஆத்மரூபமாகப் பிரகாசிக்கின்றதல்லவா! நீ ஆத்மாவைக் குறித்துத் தேடுகிற மனத்தால், அல்லது அதிலேயே முழுகின மனத்தால், அல்லது பிராணவிருத்தியை அடக்குவதால் ஹ்ருதய (ஹ்ருத் + அயம்) த்தினுட் புகுந்து ஆத்மாவில் நிலைபெற்றவனாகவேண்டும்."

இதுவே இன்பவழி; இதுவே சாந்தவழி; இதுவே சத்தியம்; இதுவே ஞானமுடி. உபநிடதங்களின் உட்பொருளிதுவே.

இதுவே அருணசல பரமஹம்ஸரான பகவான் ரமணமகர்ஷிகளின் சச்சிதானந்த ஜோதி சந்நிதிப் பெருமையால் உள்ளே யரும்பும் ஆன்மமலர்மணம்! தமிழ் நாட்டின் அத்யாத்மஜோதிமலையாக தக்ஷிணாமூர்த்தமாக இன்று நம்முன் கருணைவடிவாக, ஷண்முகமே ஒரு முகங்கொண்டு துலங்குவது பகவான் ரமணமகர்ஷிகளேயாவர். மகர்ஷிகளின் சந்நிதியும், திருவாக்கும், அருட்சோதியும் இன்று உலகிற்கு அவசியம் வேண்டுவது. ஆத்மரதியும், ஆத்மாராமமும், ஆத்மசக்தியும், ஆத்மசுதந்தரமும் கதிர்விடும் பகவானின் சந்நிதிப்பேறு உள்ளழைப்புடன் அடைந்தவருக்கு அமுதெனக் கிடைக்கும்! மொழியல்ல, சொற்பொழிவல்ல; அந்த ஞானக் கனல் விழியே அன்பருள்ளத்தில் அருட்சுடரேற்றும்.

"தன்னை யறிதலின்றிப் பின்னை யெதறிகிலென்?
றன்னை யறிந்திடிற்பின் னென்னை யுளதறிய?
பின்ன வுயிர்களில் அபின்ன விளக்கெனுமத்
தன்னைத் தனிலுணர மின்னுந் தனுளான்ம

ப்ரகாசமே—அருள் விலாசமே !
அக விநாசமே—இன்ப விகாசமே !
ஐயே ! யதி சுலபம்—ஆன்ம வித்தை
ஐயே ! யதி சுலபம்" (பகவான்)

*என்று முரலும் சாந்தவீணையொலி உலகை மங்கலமாக்குக ! இவ்வொலி " தாக முள்ளவர் வாருங்கள். இன்ப ஊற்றை உம்மிடமே காட்டுகிறேன்" என்று அழைக்கிறது ! அருணசலத்தினின்று சலசலத்துப் பாயும் இந்த ஜோதியருவியில் உலகம் ஆத்மானந்த நீராடுக ! மனப்பிணியால் வருந்தும் மாந்தருக்கு ஆத்ம சஞ்சீவியான இத் தெய்வமூலிகை எங்கிருந்து இங்கே யூன்றிக் கற்பகவனமாகச் செழித்து அடியாருக்குச் செழுநிழல் தருகிறது என்று ஒவ்வொருவரும் அறிய ஆவலுடனிருக்கின்றனர். ஆதலின் சற்று, பாண்டிநாட்டில் சஞ்சரிப்பாம் !*

சிந்தனை செய்மனமே—ரமணனைச்
சிந்தனை செய்மனமே !
சிந்தை விலகிச் சிவானந்த மாகிடச்
சிந்தனை செய்மனமே !
பூசனை செய்கரமே—ரமணனைப்
பொன்மல ரன்புகொண்டே !
பூச லொழிந்தக நாச முறமனப்
பூசனை செய்மனமே !
அர்ப்பணஞ் செய்மனமே—யனைத்தையு
மர்ப்பணஞ் செய்மனமே !
அற்புதத் தன்மயச் சின்மய வாழ்வினுக்
கர்ப்பணஞ் செய்மனமே ! (சிந்.)

## ௫. பாண்டி நாடு.


---

### திருவாலவாய்


ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே. (ஞானசம்பந்தர்)

சங்கம் விளங்கித் தமிழ் வளர்த்து, முன்னும் இன்னும் புலமையும், ஞானமும், வளமும், கலையும் பொலிந்து விளங்கும் பாண்டிநாட்டின் முகமும் தமிழ் நாட்டின் இதயமும் மதுரையே. இதன்மிசையே மகர்ஷிகளுக்கு ஆன்மவிழிப்பு மலர்ந்தது; இதனின்றே தனது தெய்வத் தந்தையின் அழைப்பிற்கிணங்க பகவான் அருணாசலத்திற்கு எழுந்தது. பகவானுக்கு மதுரை ஞானத்தாய்; அண்ணாமலை தந்தை. ஆதலின் இதன் பெருமையைச் சிறிது நோக்குவாம். மதுரையை நினைத்தாலே ஒரு அழகுணர்வு பிறக்கிறது. அதன் அரசன் சுந்தரனன்றோ! இன்று அதே பெயரோன் (சுந்தரமய்யர்) பெற்ற ஜோதி யழகனுக்கு ஞானப்பாலூற்றை உள்ளெழச் செய்ததன்றோ! சிவசக்தியான மீனாக்ஷியே அதன் அரசியன்றோ!

மதுரை, சிவபெருமானின் அருளிச்சைப்படி குலசேகரபாண்டியனாற் காணப்பெற்றது; அப்போது சிவபெருமான் தனது முடியணிந்த வெண்பிறையினின்று மதுவைத் தெளித்து, அதைப் புனிதமாக்கியதால், அதற்கு "மதுரை" எனப் பெயர் வந்தது. ஆலவாய், நான்மாடக்கூடல், கடம்பவனம், துவாதசாந்தஸ்தலம்,



“நீல மாமிடற் றால வாயிலான்—பால தாயினர் ஞால மாள்வரே”



முற்றின்ப வோதிமம்போல் முத்திவள ருள்ளப்
பொற்றா மரையிற் பொலி.

பூலோக கைலாசம், வெள்ளியம்பலம், சிவராஜதானி யென்று இதற்குப் பல செல்வச் சிறப்புப் பெயர்களுண்டு. சிவபெருமான் கூச திருவிளையாடல்கள் புரிந்து, அன்பரை யாட்கொண்ட தலம் இதுவே. நின்றசீர்நெடுமாறநாயனர், குலச்சிறைநாயனர், மங்கையர்க்கரசியார், மூர்த்தி நாயனர், முதலிய சிறந்த சிவத்தொண்டர் இதன்கண் விளங்கினர். இராவண வதஞ்செய்ய இராமலக்ஷ்மணரும், ப்ரஹ்மஹத்தி நீங்க இந்திரனும், ஞானசித்தி பெறுதற்கு முனிவரரும் வணங்கிய தலம் இதுவே. திருவாசகமெனுந் தேங்கனி வாயர், மணிவாசகர் அமைச்சு செய்த நகரிதுவே. அன்பைப் பிழிந்து இன்பச் சிவரஸமாகப் பொழிந்த திருஞானசம்பந்தரும், அப்பரும் ஆலவாய்ச்சிவனை யருட்கவி பாடி வணங்கினர். தமிழ்வேதந் தழைத்தோங்க, நல்ல சிவனடியார் வாழ, சிவநாமமோங்க சம்பந்தமூர்த்தி நாயனர் ஈண்டு பல அற்புதங்களை யியற்றினர். நீராலும், தீயாலும், பகையாலும், எதனாலும் அழியாத தெய்வத்தமிழ்த்திருமறையின் பெருமை யீண்டே விளங்கியது. ஹாலாஸ்யமாஹாத்மியம், திருவிளையாடற்புராணம், கடம்பவனபுராணம், வேம்பத்தூரார் திருவிளையாடல், சங்க நூல்கள் முதலியன பெரிதும் போற்றும் பொன்னகர் வெள்ளியம்பலமே. சொல்லும் பொருளுமே தோத்திரியும் நெய்யுமாக வேலப்பன்மீது கோலக்கவி பாடிய நக்கீரரும், பிள்ளைத்தமிழ் பாடி அங்கயற்கண்ணியின் பொங்கருள் பெற்ற குமரகுருபரரும், பரணர், கபிலர், சாத்தனர், திருத்தக்கதேவர் முதலிய புலவர்பெருந்தகையாருஞ் செழுந்தமிழணங்கிற்கு அருந்தமிழணி சூட்டிய பழந்தமிழ்ப்பதி மதுரையே!

" குற்றநீ குணங்களநீ கூடலால வாயிலாய் !
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு ஜோதிநீ !
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ ! "

என்று தெய்வத்தமிழ்மறையால் வணங்கப்பெற்றது மதுரை. பிட்டுக்கு மண் சுமந்து, பாண்டியன் கைப்பிரம் படியுண்டு, அவ்வடி ஆருயிர்யாவற்றின்மீதும் பளிச்செனப் பட்டவே, தானே விஸ்வாத்மா, உயிர்களை மேனிபூண் டோன் என்று சிவபெருமான் விளக்கிய பெரும்பதி யிதுவே.

" மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய் ! "

என்று மணிவாசகர் மனதுருகிப் பாடியது திருவாலவாயி லானையே !

## திருச்சுழி

மதுரைக்குத் தென்கிழக்கே 30 மைல் தூரத்திலும், விருதுநகரிலிருந்து 18 மைல் தூரத்திலும் திருச்சுழியல் உள்ளது. இது மணிவாசகராலும், சுந்தரராலும் பாடல் பெற்ற சிவத்தலமாகச் சிறந்து விளங்குகின்றது :—

" அன்புடை நெஞ்சத் திவள்பே துறவம் பலத்தடியா
ரென்பிடை வந்தமிழ் தூறநின் றாடி யிருஞ்சுழியற்
றன்பெடை நையத் தகவழிந் தன்னஞ் சலஞ்சலத்தின்
வன்பெடை மேற்றுயி லும்வய லூரன் வரம்பிலனே ! "

என்று மணிவாசகர் திருச்சிற்றம்பலக்கோவையாரில் அருளியுள்ளார்.

"ஊனுயுயிர் புகலாயக லிடமாய்முகில் பொழியும்
வானுய்வரு மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
றேனுதரித் திசைவண்டின மிழற்றுந்திருச் சுழியல்
நானுவித நினைவார்தமை நலியார்நமன் றமரே!"

என்று நட்டராகத்தில் நயமிகு சுந்தரரும் சிறப்பித்துள்ளனர். அதன்மிசை யின்று அவதரித்த ஞானஜோதியை யறிந்து தமது ஞானஜோதியைத் தூண்டுவார் அமரரே! அவரை நமன்றாதர் நலிவரோ! இதற்குத் தனியாக ஒரு புராணமும் ஏற்பட்டுள்ளது. இத்தலத்திலமர்ந்த கடவுள் திருமேனிநாதர்; அம்மையார் துணைமாலைநாயகி. பூமி தேவியாரும், கௌதமமுனிவரும் பூசித்து வழிபட்ட தலம் இது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் 1879-ல் இவ்வூரின் சீரையே நாம் இப்போது காணவேண்டி யிருக்கிறது. இது அப்போது அதிக நடமாட்ட மில்லாத அமைதியான கிராமம்; சுமார் 500 வீடுகள் கொண்டது; திருமேனிநாதர் கோயிலைச் சுற்றியே பெரும்பாலும் அதன் வாழ்வு அமைந்திருந்தது. மதுரையினின்று இராமேசுவரத்திற்குச் செல்லும் வழிப்போக்கர் இங்குள்ள தருமசத்திரத்தில் தங்கிச் செல்வர். இங்கொரு வைத்திய சாலை, போலீஸ் ஸ்டேஷன், ஸப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டு, தாலூகா கச்சேரியும் உள்ளன. இது ராமநாதபுரம் ஜமீனில் ஒரு தாலூகாவின் தலைமையூர். இனி இவ்வூரைச் சுற்றிப் பார்ப்போம்.

## ௬. மங்கலமனை.

“ வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். ”


மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டினின்று, தமது தொழிலுக்கேற்ற சட்டையும் பாகையு மணிந்து, ஒரு வழக்காளர் (வக்கீல்) வெளிவருகிறார்: கூர்ந்த விழியார்; பொறுமையும், தெளிவும், ஆழ்மையும், உறுதியும் நிலவுந் திருமுகமுடையார்; ஈகையாலே நீண்ட கரமுடையார். இவரையே நாம் பின்பற்ற வேண்டும்; தம் மனதைப் போலவே விசாலமான வீட்டில் நுழைகிறார்.

வீட்டில் புதிய விருந்தாளிகள் வந்திருக்கின்றனர்; கலகல வென்று கக்ஷிக்காரரும் நிரம்பியுள்ளனர்; கலந்து பேசுவதற்குச் சில உத்தியோகஸ்தர்களும் வந்துள்ளனர். அனைவருக்கும் அவர் புன்னகையுடன் பயனுள சொல்லி மகிழ்விக்கிறார். பின்பு மாலைக்கடன்களை மறுவறச் செய்து கோயில் புக்கு, சிவனை வழிபட்டு வந்து, விருந்தினருடன் உண்கிறார். தேடி வந்தவருக்கு இருக்க நல்லிடந் தருகிறார். முகம்பார்த்து அகமகிழ்ந்து அவர் விருந்தோம்பும் பெருந்தகைமையை யாவரும் போற்றுகின்றனர்.


“ செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. ”

இவரே நமது சுந்தரமய்யர்; பராசரகோத்திரர். தமது தாளாண்மையாலும், தாராளத்தாலும், தயாளத்-

திருச்சுழி-பூமிநாதர் ஆலயமும், திருக்குளமும். 



காம காஞ்சனக் கட்டற் றிதயத்திற்
சோம வட்டச் சுதந்தர ராகிடின்
சாமி நாதன் றவத்தெழுஞ் சின்மய
பூமி நாதன்பொற் கோயி லிலங்குமே!



சிற்றில்லிற் றோன்றிச் சகமெலாம் வீடுகொண்டான்
முற்றத் துறந்த முனி.

தாலும் படிப்படியாகப் பெருமைபெற் றோங்கியவர். திருடர்கூட இவரை நன்குமதித்துத் தீங்கிழைப்பதில்லை. இரண்டுரூபாய் சம்பளத்தில் மணியம் குமாஸ்தாவாகத் தொடங்கி, பின்பு பத்திர மெழுதும் வேலையை மேற் கொண்டு, அதனின்று பிரைவேட்வக்கீலாக வுயர்ந்து, தமது மதியாலும், விவகாரத்திறத்தாலுஞ் சிறந்து செல் வரானார். ஆனால் நமது சுந்தரமய்யர் செல்வம் கருமுகிற் செல்வம்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு."

ஊருணி நிறைவதும் ஊரையே யூட்டும்; சுந்தரமய் யர் செல்வ நிறைவும் விருந்தினரையே யூட்டும். வீட்டில் சிவவழிபாடாகி ஜீவவழிபாட்டுடனேயே வயிற்றுவழி பாடு நடக்கும். கதாகாலக்ஷேபங்கள், புராண இதிகாசங் கள் இடையிடையே வீட்டில் நடைபெறும். மற்றப்படி சுந்தரமய்யர் தமது தொழின் முயற்சியிலேயே யீடுபட் டிருப்பார். அவருக்கு ஊரெல்லாம் அன்புறவே.

நல்லாற்றி னின்றேவர்க்கும் நற்றுணை செய்பவனே
யெல்லார்க்கு மேயுறவேன் றெண்.

சுந்தரமய்யர் பெற்ற ஞானவிருந்திற்கு நாமும் விருந் தாளி யாதலின் வீட்டிற்குட் செல்வாம்.

மெல்லிய குரலால் தக்ஷிணாமூர்த்தியஷ்டகம் பாடிக் கொண்டே இற்பணி புரியும் ஒரு கற்பணி விளங்குகிறாள். விருந்துடன் வரும் தனது நாயகனை "அனைத்துந் தயார்" என எதிர்நோக்கி, புன்னகையும் நாணும் இன்முகமும் மிளிரப் பொலிகின்றாள். இவளே அழகம்மை; பகவானை

ஈன்ற பாக்கியம் பெற்றவள்! அறமும், அன்பும், ஐங்கட னும் ஆக்கிடற்குத் தன் கணவனின் உற்றதுணை யாவாள்.

இல்லறமே வீட்டின்பம் இல்லாளு நல்வாழ்வும்
புல்லிய தாயிற் புகழ்.

இவ்விருவரும் பாட்டும்பண்ணும்போ லொன்றி நடாத் தும் இல்வாழ்வின் பெருமை யென்னே! ஆண்மையும் பெண்மையு மழகுடன் கூடி, மாணறங் காத்து மக்களை யீன்று, அண்டிய விருந்திற் கன்புட னூட்டி, காதலுங் கற்புந் தீதறக் காத்து, கடவுட் பணிகள் சுடருறச் செய்து, தாமும் வாழத் தருமமும் வாழ, தாரணி வாழத் தாங்கிய மனையறமன்றோ இவர் காத்தது. சாந்தமும், அன் பும், தன்னலமறுப்பும், மேன்மையும், அழகும், இன் சொல்லும், ஈகையும் அதன்மிசை விளங்குகின்றன.

பெற்றோரின் வாழ்க்கையாற் பெற்றசே யின்குணமாம்
பெற்றோர்க்குத் தூய்மை பெரிது!

என்றபடி பரிசுத்தமே யுருவான பகவான் இவர்களின் தூயவாழ்வின் கனியாகவன்றோ வந்து பிறந்தார். இருவ ரும் வசிட்டரும் அருந்ததியும், சுந்திராமும் சந்திர மணியும் போல வாழ்ந்தனர்.

தந்தையும் சுந்தரமே தாயும் அழகம்மை! மைந்தனும் ஞானவழகு! இம்மனையாட்சியைப் பொலியவைக்க மனை விளக்காக மூன்று மைந்தர் பிறந்தனர். அவர்கள் முறையே நாகசாமி, வேங்கடராமன், நாகசுந்தரம். அலர் மேலுமங்கையென்னும் புதல்வியும் உண்டு. நாம் வேங்கட ராமனையே இப்போது கவனிப்போம்.



"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்."

## ௭. நன்னாள்.

கண்ணே மணியே காதற் கிளியே கனிவாயே
பொன்னே பொலிவே புகழே புனிதத் தவமீன்ற
விண்ணே யமுதின் விளைவே யழகே யிசையாழின்
பண்ணே பரிவே பரிசே பரமே பகவானே !

இச்செல்வனாலன்றோ இன்று திருச்சுழி பெத்தல்ஹாம், மெக்கா, நதியா, காலடி, காமார்புக்கூர் போன்ற புண்ணியஸ்தல மாயிற்று. ஏசுநாதரும், நபிநாயகமும், சைதன்யரும், சங்கரரும், பரமஹம்ஸரும் தோன்றியதனாலன்றோ அச் சிற்றூர்கள் சரிதையிற் பேரூர்களாக வழங்குகின்றன. ஷேக்ஸ்பியர் பிறந்த வீட்டையும், பரமஹம்ஸருதித்த சிற்றில்லையும் இன்று மாந்தர் மதிப்புடன் போற்றுகின்றனர். அதுபோலவே பகவான் மானுடம் பூண்டுற்ற திருச்சுழிமனையும் ரமணாசிரமமாகவே விளங்குக ! காலம் வரும் !

அவதாரபுருஷர்களின் பிறப்பு அதிசயமானது. பல அற்புதக்குறிப்புகள் அன்று உலகிற் காணும். தெய்வ சேதனமே ஒளிவடிவாக உட்புகுவதை அன்னையர் உணர்வார்கள். புத்தனை யீன்ற மாயாதேவி அறுசுடர் மீனொன்று தன்னுட் புகப் பெற்றாள்; மஹாவீரரின் தாயார் திரிசலாதேவி கருத்தரிக்கையில் ஒரு அற்புத நற்கனவு கண்டாள். ஏசுநாதர் பிறந்தவன்று வானில் ஒரு புதிய மீன் தோன்றிற்று. பரமஹம்ஸரைப் பெற்ற

சந்திரமணி, தன் வயிற்றுள் விஷ்ணுவே புகுந்ததா யுணர்ந்தாள். நமது அருணாசல பரமஹம்ஸர் பிறந்த நாளன்று அத்தகைய அதிசயம் ஏதேனும் நிகழ்ந்ததா? ஆம். பிரசவம் பார்க்க வந்த விழி தெரியாக் கிழவிக்குப் பேரொளி திகழ்ந்ததாம். சிறப்பின் பிறகே பிறப்புவளப்பம் அறிவது உலகின் வழக்கன்றோ? ஆனால் நாம் ஆராய்வாம்.

பகவான் பிறந்த தேதி 30-12-1879, திங்கட்கிழமை இரவு ஒருமணி. அதாவது கலியப்தம் 4980, பிரமாதி ௵, மார்கழி மாதம், 16-தேதி, சோமவாரம், புனர்பூச நக்ஷத்திரம், உதயாதி 48-நாழிகைக்கு மேல், துலா லக்கினத்தில் குருதசை 5 ௵ 6 ௴ சேஷமிருக்கையிற் பிறந்தார். ராசிசக்கரம் அடியில் வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| சனி | செ | | சந் கேது |
| குரு | ராசி | | மாந்தி |
| | | | |
| ரா ரா | சு பு | ல | |

இதைக் கண்டவுடனேயே ஒரு மஹான் பிறந்ததை யாருஞ் சொல்வர். இரண்டாவது வீட்டில் சுக்ரனும் புதனும் சேர்ந்து ஐந்தில் குருவு மிருப்பது விசேஷமாகக் குறிக்கத் தக்கது.

## திருவாதிரை

அன்று எத்தகைய நாள்? அன்றே திருவாதிரைத் திருநாள். சிவபெருமான் பவனிவந்து கோயிலுட் புகுஞ்

சமயம், அன்பர் மனக்கோயிலுட் புகுந்து பொலியும் பகவான் அவதரித்தார். அன்றே நடராஜப்பெருமான் சிற்சபேசன், கௌதமர் பதஞ்சலி வியாக்ரபாதர்களுக்குத் தரிசன மீந்தது. அன்று எங்கும் சிவநிறைவு, சிவமங்களம், சிவநினைவு பொலியுநாள். அன்பர், தூய சிவசிந்தையுடனும் தூபதீப கர்ப்பூரநிவேதனங்களுடனும் சிவபெருமானை வழிபட்டு,

“ இரும்பைக் காந்த மிழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்கவோட் டாமற் றிருவடிக்
கரும்பைத் தந்துகண் ணீர்கம்ப லையெலாம்
அரும்பச் செய்யென தன்னையோப் பாமனே.”

“ குன்றி டாத கொழுஞ்சுட ரேமணி
மன்று ளாடிய மாணிக்க மேயுனை
அன்றி யார்துணை யாருற வார்கதி
என்று நீயெனக் கின்னருள் செய்வதே?”

என்று மனிதான்மா முறையிடும் புனித நாள். ஆடுவதுங் கூடுவதும், ஆனந்த சிற்சபையை நாடுவதும், சிவனருளைத் தேடுவதுமாக அன்பர் விளங்கும் இன்பநாள்.

எங்கும் புத்துணர்வு.

பாரதகண்டத்திலேயே அத்யாத்மவெழுச்சி யுற்ற நாள் அதுவே. மேல்நாட்டு உலகாயதம் பரவி, பாரத தர்மம் மறைந்துகொண்டிருந்தது. வங்கத்தில் ராமகிருஷ்ணர் பிறந்து அன்னை சக்தியைக் கதறிக்கதறி யன்பு செய்து, சக்திநிபாதம் பெற்று, பைரவி ப்ராஹ்மணியிடம் அஷ்டாங்கயோகமும் தந்திரசாதனமும் முற்றுப் பெற்று, தோதாபுரியிடம் ஸந்யாஸம் பெற்று, நிர்விகற்ப

சமாதி சித்திபெற்று, பல மதானுபவங்களிலுந் தேர்ந்து தக்ஷிணேச்வர ஆலயத்தின் கோபுரத்திலேறி, "என் குழந்தைகளே வாருங்கள்! உங்கட்காகக் காத்திருக்கிறேன்" என்று அழைத்த தருணம் அதுவே. அப்போதே, பரமஹம்ஸரின் "ஈச்வர கோடி" என்று சொல்லும் முதன்மையான சீடர்கணங்கள் வரத் தொடங்கினர். அக்காலத்திலேயே தயானந்தசரஸ்வதியார் ஆரியவேதக் கொடியை யுயர்த்தி எங்கும் ஆரியமதஸ்தாபனஞ் செய்யத் தொடங்கினார். அப்போதுதான் தயானந்தர் 1875-ஆம் ஆண்டு அடையாற்றில் பிளாவட்ஸ்கி யம்மாளாலும், ஆல்காட்டு துரையாலும் காணப்பெற்ற ப்ரஹ்மஞான சபையுடன் சேர்ந்து வேதப்ரசாரம் செய்த சமயம். 1879 முதல் 1881 மட்டும் தயானந்தர் அப்படிச் செய்தார். இத்துடன் வங்கநாட்டின் பொதுச் சீர்திருத்தத் தந்தையான ராஜாராம்மோஹனராய் கண்ட ப்ரஹ்மசமாஜம் இருகிளையாகப் பிரிந்து தனித்தனியே தீவிரமாக வுழைத்த சமயம். ரவீந்த்ரநாத டாகூரின் தந்தையான தேவேந்த்ர நாதரும், கேசவசந்திர சேனரும் ஆதி ப்ரஹ்ம சமாஜம், சாதாரண ப்ரஹ்ம சமாஜம் என்று கிளை பிரித்தனர்.

நமது தமிழ் நாட்டில் 5-10-1823-ல் பிறந்த இராமலிங்க வள்ளலார் 1868-ல் வடலூர் சத்தியஞான சபையை யேற்படுத்தி எங்கும் அருட்சோதி நிரப்பினார். கலியப்தம் சஅ௪ை௫ தை கக-வெள்ளிக்கிழமை அருட்சோதி வள்ளலார் நித்யானந்த நிஷ்டையிலிருந்து உருமறைந்தார். அதாவது பகவான் பிறப்பதற்கு சுமார் இரண்டாண்டுகளுக்குமுன். எனின், தமிழ் நாடெங்கும் வள்ளலாரின்

பேச்சுந் திறமும் நிரம்பிய நாள். இப்படிப்பட்ட நிகழ்ச்சி களுக்கிடையே ரமணர் பிறந்தார். "நீ உன்னையறி; உலகவினை தன்னாலே நடக்கும்; நடத்துவோன் நடத்து கிறான்; நீ சாக்ஷியாயிரு; நான் என்று எதிலும் கிளம் பாதே; உன்னிடம் இதயத்திலுள்ளது; அது வொன்றே ஆதாரம்; அதிலேயே எண்ணவலைப்படாது அடங்கு; பிறகு கால சந்தர்ப்பத்தினால் நீ என்ன செயலில் ஈடு பட்டபோதும் செய்யாமற்செய்து சுதந்தரமாயிருக்க லாம்" என்றதைச் சொல்லி, புறத்தே திரிந்துழலும் உலகை உள்முகப்படுத்தி, உண்மையின்பத்தி லுய்க்க ஒரு மஹானை உலகம் எதிர்பார்த்திருந்தது. பாரத நாட்டை ஆன்மவிழிப் புறுத்த மஹான்கள் ஆங்காங்கே பணிதொடர்ந்த சமயம் ரமணர் உதித்தார்.

ரமணா ரமணா ரமணா !
ரமணா ரமணா ரமணா ! (ரமணா)

பரனே குகனே வரனே !
பரிபூ ரணனே வருவாய் !
பிரமத் துரியப் பெருவிண் விரிவே !
பிறவா நிலையே பிரியா வுறவே ! (ரமணா)

அருணா சலனே வருவாய் !
அருணோ தயனே வருவாய் !
இருளற் றிடரற் றிதயக் குகையுற்
றியல்புற் றருளிபெற் றினிதுற் றிடவே (ரமணா)

கருணா லயனே வருவாய் !
கதிரார் கடலே வருவாய் !

உருகன் படியார்க் குறுதிப் பொருளே !
தருணந் தருணந் தரணிக் கருள்வாய் ! (ரமணா)

அடியா ரிதயாம் புயனே
அருணா டகனே யபயம்
துடியா நிலையே சுடர்மா மணியே
சுகநா யகனே யபயம் அபயம். (ரமணா)

## ௮. குழந்தை.

“ யாரறி வாரெங்க ளண்ணல் பெருமையை
யாரறி வாரிந்த வகலமு நீளமும்
பேரறி யாத பெருஞ்சுட ரொன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே ”- (திருமந்திரம்.)

குழந்தை வேங்கடராமன் ரமணனாந்தப்பயிரை முளையிற் காட்டினா? இல்லை யென்பர் புறவிழியாற் காண்போர்; நமது செல்வனின் கதிர்முகத்திலும், புன்னகையின்பிலும், கொஞ்சிள மொழியிலும், பிஞ்சிளங்கரத்திலும், கூர்விழிச் சுடரிலும், ரமணன் காணவில்லை யெனினும், இதயகுகையில் அவன் மோனத் தனித்தவத்திலிருந்ததை யார் மறுக்க முடியும். வித்துட் செடிபோற் சேயுட் பெரியோன்; புறக்குறிப்புகளால் அமைதியா யிருக்கும் வானம், நீருண்ட மேகத்தைத் தாங்கித் திடீரெனக் கருணை மழை பொழிவதை நாம் காண்பதில்லையா ! பிள்ளைப் பரு

வத்தில் வாய்திறவாத குமரகுருபரர் பின்பு கவிக் காள மேகமாகப் பொழிந்தார். அவனருளாலே அவனருள் வளரும். தன்னையும் அறியாது அவன் மோனமாகத் தோண்டும் உள்ளூற்று, அவனருளாகப் பொங்கிப் பொசிந்தெழும்போதன்றோ புலனுகும். அரக்கிலும் பட்டிலும் இருக்கும் மின்சாரசக்தி இச்சைவைத்து உரசும்போதன்றோ தெரியவரும். செம்புந் துத்தமும் கந்தகப் புளிப்பில் ஊன்றி யிணைப்புண்டபோதன்றோ மின்சாரச்சுடர் அற்புதங்களைச் செய்யும். அதுபோலவே ரமணசக்தி என்றும் உள்ளது. அது மறப்பில் ஆழ்ந்துள்ளது. நினைப்பு வந்தபோது, 'நான், நான்' என்றெழுந்து நடம்புரியும்.

பையற் பருவத்தில் அதப்பை, உதவாதான் என்று ஒதுக்கி யிகழப்பட்டு, வாலிபப்பருவத்தில் திடீரென மலையிலக்காக ஞானச்சுடர் வீசி யிலங்கிய மஹான்கள் உலகிற் பலர். உதாரணமாக, குருநானகரைச் சொல்லலாம். வேங்கடராமனுயினும் பத்து வகுப்புக்கள் படித்துத் தேர்ந்தான். குருநானகருக்கு எழுத்துத் தொடங்க அவருடைய தந்தை உபாத்தியாயரை யழைத்து வந்தார்; பண்டிதர் எழுத்துத் தொடங்கும்போது நானகர் "இந்த எழுத்து கஞ்சியெழுத்து. பந்த மறுக்கும் எழுத்தே வேண்டும்" என்றார்.

பந்தனையைக் கரியாக்கிப் பகுத்தறிவே காகிதமாய்ச்
சிந்தையருள் * தூரியமாய்த் தேசிகனை யெண்ணிமனத்
தெந்தைபரா பரனேன்றே யெழுத்தெழுதி னின்னுயிர்க்கு
வந்தநமன் பாசமறும் வாய்மையென வாய்மொழிந்தான்.

* பேனு.

இப்படித் தடுத்துரைத்த மைந்தனை யறியாது பைத்தியமென்றே வீட்டோர் எண்ணிப் பந்தனை செய்தனர். தக்க பருவத்தில் குருநானகரின் ஜோதி வெளிப்பட்டு தெய்வசக்தியைப் பரப்பிற்று. கண்கண்ட விடமெல்லாம் கடவுளையே அவர் கண்டார். சுந்தரமய்யர் குடும்பப் பரம்பரையில் தலைமுறைக் கொருவர் துறவியாகி வந்தார். முன்னே யொரு துறவிக்கு உபசாரஞ்செய்ய மறுத்ததின் சாபமாம் இது! இச் சாபம் உலகின் சாப விமோசனமே யானது. சுந்தரமய்யர் தந்தையின் உடன் பிறந்தா ரொருவர் தண்டகமண்டலம் பிடித்து உலகை நீத்தார்; அவருடைய மூத்த சகோதரர் வேங்கடேசய்யரும் திருப்பரங்குன்றத்திற்குப் போவதாகச் சொல்லி அங்கிருந்து காவிகட்டிக் காணுமற்போய்விட்டார். தில்லை நடராஜர் பிரகாரத்தில் கல்லையும் முள்ளையும் விலக்கி அன்பருக்கு வழி நீவிக்கொண்டிருந்ததாகவும், சிலர் காசியில் அவரைக் கண்டதாகவும் சொல்லுகின்றனர்.

சுந்தரமய்யர் தலைமுறைக்கு அச்சாபத்திற்குள்ளாவார் யாரென்று இதற்குள்ளே தெரியவருமா? விறகிற் றீயினன் வெளிப்படும்போதன்றோ உண்மை பளிச்சிடும்.

## ௯. கல்லாக்கலைஞனுக்குப் பள்ளிக்கல்வி.

"மக்கண் மனைவிமுதன் மற்றவர்க ளற்பமதி
மக்கட் கொருகுடும்ப மானவே—மிக்ககல்வி
யுள்ளவர்த முள்ளத்தே யொன்றலபன் னூற்குடும்ப
முள்ளதுயோ கத்தடையா யோர்" (பகவான்)

வேத மறைப்பொருளை, வேதாந்தத் துட்கருவை ஓதியறிந்தாருண்டோ? கற்றாலுங் கேட்டாலும் கடவுள் புலப்படுமோ? உலகிற் பெரும்பாலான தீர்க்கதரிசிகள், கல்லாக்கல்வியை, கண்காணாக் காதறியாப் புத்தகத்தை உள்மலரக் கண்டுணர்ந்து தெளிந்தவர்களேயாவர். பரமஹம்ஸர், ஏசுநாதர், முகம்மதுநபி, குருநானகர், அப்துல்பஹாய் முதலிய மஹான்கள் கற்றறிவினாலா முற்றறிவு பெற்றனர்? இல்லை; நித்திய அறிவூற்று உள்ளத்தில் அமுதூறுகின்றது. கருதிக்கருதிக் கடவுளருள்கொண்டு அதையகழ்ந்தெடுத்தால் ஞானவெள்ளம் சலசலவென்று பாயும். அவ்வெள்ளமே மனத்தாகந் தீர்க்கும். கற்றுக்கற்றுப் பொருள்காணாமல் அலுத்து, நூல்மூட்டைகளைச் சள்ளையெனக் கட்டியெறிந்து, கண்மூடி உள்ளப்புத்தகத்தையே முடிவில் இன்பமெனக் கற்கத்தொடங்கினார். எத்தனை! பிறர் வற்புறுத்தலுக்காக மனமற்ற பள்ளிக்கல்வி பயின்று, உண்மைக்கல்வியை உள்ளத்தில் முயன்றவர் எத்தனை! ஒரு ரவீந்திரரையும், ஷேக்ஸ்பியரையும் உலகிற் கீந்தது பள்ளிக்

கல்வியல்ல. இதனினும் ஒரு ஏகநாதரையும், பரமஹம்ஸரையும், நம்மாழ்வாரையும் உலகொளிர விளக்கியது புத்தகப்படிப்பல்ல. ஞானவூற்று தம்முள்ளிருப்பதைப் பிறவிப்பெரியோர் அறிந்து, புறத்துணையின்றி உள்ளொளித் துணைகொண்டே "கைவிளக்கின் பின்னே போய்க் காண்பார்போல், மெய்ஞ்ஞான மெய்விளக்கின் பின்னேபோய் மெய்கண்டு" கலந்தனர். நமது ரமண பகவான் சரிதை இவ்வகையில் மிகவும் அற்புதமான உதாரணமாகும். அவர் கல்லாமலில்லை; பள்ளியிற் படித்தார்; ஆனால் புத்தகக்கல்விக்கு எட்டாத கடவுட்கல்வியையே உள்ளலரப்பெற்றார். ஒன்றை யறிந்தார்; அறிவே தாமானார். பகவானுடைய வேதலஹரியான பாக்களும், அவற்றின் தெய்வச்சுவையும், நூற்கல்வியிலும் அவருக்கிருக்கும் விரிவும் ஆழமும், ஞாபகசக்தியும், தெளிவும், எதனையும் இச்சாமாத்திரத்தில் அறியக்கூடிய வன்மையும், தமிழ், ஆரியம், கேரளம், தெலுங்கு, ஆங்கிலம் முதலிய மொழிகளிலுள்ள கூரறிவும் நம்மை பிரமிக்கச் செய்கின்றன. இதெல்லாம் எய்தியது ஓராமல் உணராமல், ஒரு பொருளே தானாகத் தேர்ந்துநின்றதனாலன்றோ?

தம்முளுள்ள இத்தகைய ஞானத்தெள்ளூற்று இன்னும் கண்மலராத, வேங்கடராமன் பெற்றோர் அவனை மாமூலாகப் பள்ளிக்கனுப்பினார்கள். பெற்றோர்களுக்கு, மைந்தன் ஆங்கிலங்கற்று உத்தியோகம்பெறவேண்டுமென்றநோக்கமே. முதலில் திருச்சுழி மூலாதாரக்கல்விச் சாலையில் படித்தபின் திண்டுக்கல்லில் ஐந்தாம்வகுப்பு மட்டும் வேங்கடராமன் கற்று, பின்னர் மதுரை ஸ்காட் மிடில் ஸ்கூலில் மத்திமக்கல்வி கற்றான். அண்ணன் நாகசா

மியும் அவ்வாறே கற்றான். நாகசாமிக்கு வயது ௧௪ ; வேங்கடராமனுக்கு ௧௨. நாகசுந்தரம் ௬-வயதுப் பையன்.

இந்நிலையில் (1892-ல்) அந்தோ, தந்தை சுந்தரமய்யர் சிவனடிசேர்ந்தார்! குடும்பத்தை அன்பும் ஆதரவுமாகப் பொறுத்து, ஊருக்கும் உதவிப் புகழ்சிறந்த தந்தையை யிழந்த இளம்புதல்வருக்குற்ற இடர் என்னே! அருமைநாயகனை யிழந்த மனைவியின் பரிதவிப்பென்னே! இத்தகைய சம்பவங்களால்,

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

"வேலையிலா வேதன் விதித்தவிந்த்ர ஜாலவுடல்
மாலைவியா பார மயக்கொழிவ தெந்நாளோ?"

என்று உடல்பொய்யுறவைப் பளிச்சென்றறிந்து அப்பரைப்போல மெய்ப்பொருள்பால் மனந்திரும்பி, அதையே தேடி உலகைத் துறந்த பெரியோரும் உளர். ௧௨-வயதுள்ள வேங்கடராமன் மனத்தில் இந்த சம்பவம் பதிந்து ஒரு மாறுதலை உண்டுபண்ணியிருக்கலாம்! ஊனப்பன் அநித்தியம்; அதற்குமேலுள்ள உயிரப்பன் ஒருவனே நித்தியம். அவனை உள்ளறிவதே யறிவென ஒரு மின்னொளி ஒரு கணமேனும் தோன்றியிருக்கும்! ஆனால் இந்த சம்பவத்திற்கும் ரமணசக்தியெழுச்சிக்கும் எவ்விதமான தொடர்புமில்லை யென்றறிக.

தந்தைக்கு வேண்டிய கிரியைகள் முறைப்படியாக நடந்தபின், தாயாருடன் தங்கள் சிறியதகப்பன்மாரான சுப்பய்யர் நெல்லையப்பய்யர் இருவரின் காப்பிலும் சிறுவர்கள் வளர்ந்துவந்தனர். வேங்கடராமன் மதுரை

அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூலில் உயர்தரக்கல்வி கற்ருன். கஞ்சிக்குப் படிக்கும் ஆங்கிலக்கல்வியின் வறட்சியை அதிகம் எடுத்துக்கூறவேண்டாம். இக் கல்வி ஆத்மவெழுச்சிக்குச் சிறிதும் காரணமாயிருந்திருக்காதென்பது வெளிப்படை. மேலும் வேங்கடராமனை உத்தியோக நோக்கத்துடனேயே படிக்கவைத்தார்கள். பாதிரிமார் பள்ளிக்கூடத்தில் பைபிள் ஒன்றுதான் மத நூலாகப் போதிக்கப்படுகிறது. பைபிளை சிரத்தையுடன் ஆராய்ந்தால் அதில் கிடைக்கும் அரிய ஞானமுத்துக்களில் ஆணிமுத்தாக விளங்குவன இரண்டு மஹாவாக்கியங்கள் :—

க. சிதானந்தவிண்ணிலுள்ள உன் தந்தை (கடவுள்) யைப்போலப் பூரணம் பெறு.

உ. உனக்குள் ஸச்சிதானந்தமயமாயிலங்கும் வானரசை முதலிற்பெறு; பிறவனைத்தும் தாமாக வந்தடையும்.

இம் முத்துக்களைச் சூடினுல் ஞானவழகு பெறலாம். ஆனுல் பள்ளிப்பாடத்தில் முற்றுங் கருத்தூன்ருத வேங்கடராமனுக்கு பைபிளை ஆழ்ந்து ஆராயும் ஆவலும் அப்போது இல்லை. பள்ளிப்படிப்பை அவன் பொருட்டாகக் கருதவில்லை. வேறு சமயக்கல்வியும் இல்லை. தந்தையைப் போலச் சைவவழிபாட்டிற் சிறிது அன்பு இருந்தது. அதுவும் பக்திபரவசத்துடன் அப்போது விளங்கவில்லை; பாடங்களை லக்ஷ்யஞ்செய்வதில்லை; ஆனுல் மிகவும் கூர்மதியும், கேட்டதை உடனே மனனமாக்கி ஒப்பிக்கும் ஒப்பற்ற ஞாபகசக்தியும், தெளிவும் வேங்கடராமனிடம் நிலவியன. மாணவர்கள் உபாத்தியாயருக்கு அஞ்சி மார்பைப் புடைத்துக் கொண்டு, வருந்திக் கூவி, உருத்தெள்ளிப் பாடம் ஒப்பு

விப்பர்; நமது வேங்கடராமனோ பள்ளிக்கூடத்திற்கு வந்தால்தான் உபாத்தியாயர் நினைவு; உபாத்தியாயர் முன்னே தான் பாட நினைவு; மற்ற மாணவர் ஒப்பித்ததைக் கேட்டு நினைவுறுத்தி உடனே, வருந்திக்கற்றவன்போல வாயால் ஒப்பித்துவிட்டு, வகுப்பானதும் மனத்தால் மறந்துவிடுவான்! கற்பதைவிடக் காற்பந்தும், பள்ளியைவிடப் பந்துமேடையுமே நமது வேங்கடராமனுக்கு மகிழ்வீந்தன; தோழருடன் குஸ்திபயில்வதும், கபாத்துப் பழகுவதும், பந்தடிப்பதும், ஓடுவதும், நீந்துவதுமே அவனுக்கு மகிழ்வீந்தன. இவ்வுடற் பயிற்சியால் உடல் உறுதியாகிக் கட்டுந் திண்மையும் வாய்ந்தது. அவனது சகபாடிகளும், அவனுடைய உடலுறுதிக்கும் திறமைக்கும் அஞ்சி மதிப்புவைத்தனர். ஏதாயினும் மிஞ்சிநடந்தால் வேங்கடராமனின் வலியகரம் தம்மைச் சும்மா விடாதென்று அவர்களுக்கு எப்போதும் பயமுண்டு. இதெல்லாம் வீட்டிலுள்ளவர்களை மகிழ்விக்குமா? பயில்வானுகவோ, அவர்கள் தம்பிள்ளையைப் பணங்கொடுத்து ஆங்கிலம் பயிற்றினர்! வேங்கடராமனோ ஆடல் பயில்வான்! மெய்மறந்து அழுந்தத்துயில்வான்! வீட்டோர் 'வாசி, வாசி' யென்று வற்புறுத்தினல் புத்தகத்தை விரித்துவைத்துக்கொண்டு கண்பார்க்க மனம் 'சிவா, சிவா' வென்று வேறுபட்டிருப்பான்! இப்பிள்ளையைப்பற்றி அவர்களுக்கு என்ன பெரிய நம்பிக்கை யிருந்திருக்கும்! பயல் படித்து முன்னேறமாட்டானென்றே வருந்தியிருப்பார். வேங்கடராமன் உள்ளே பார்த்துத் தன்னறிவில் முன்னேறவே பிறந்தானென்று யார் அப்போதறிவர்! 1896-ம் ஆண்டுமட்டும் வெளிப்படையாக அத்யாத்மவெழுச்சி யொன்று மிருந்ததாகத்

தெரியவில்லை. ஆனால் தன்னையும் அறியாது உள்ளே அது தணலிட்டுக்கொண்டேயிருந்திருக்கும். ஏனெனில், உலகப்பனன்றோ அவனைத் தன்மயப்படுத்தப்போவது! ஒன்றிலுங் கவலையற்றுப் படிப்பற்றுக் கேள்வியற்று, ஒன்றையும் உன்னாத ஒரு புனிதக்கருவியையே ஆட்கொள்ள அப்பன் குறிவைத்திருந்தான்போலும்!

"அறிவிப்பான் நீயென்று லைம்புலங்க டந்தந்
நெறிநிற்பார் யாரோ நிகழ்த்தாய் பராபரமே."

## க0. அருணாசலமா?

"பேயர்நினைத் திடவே பிடித்திழுத் தனையுன்
பெருமையா ரறிவா ரருணாசலா!
பேய்த்தனம் விட,விடாப் பேயாய்ப் பிடித்தேனைப்
பேயனாக் கினையேன் னருணாசலா!"

மகான்கள் சிலருக்குத் திடீரென்று ஒரு மொழியில் மனம் பதிந்து அதே மந்திரமாகப் புந்தியை ஈர்த்து சமாதி தருவதுண்டு. சாதாரண வடநாட்டு வர்த்தகன் தானியம் அளந்து கொண்டிருந்தான். ஏக், தோ, தீன், சார், பாஞ்ச், சே என்று தொடர்ந்து அளந்து "தேரா" விற்கு வந்ததும், திடீரென்று ஒரு எழுச்சி அவனுக்கு உண்டாயிற்று. "தேரா" எனில் பதின்மூன்று என்றும், "நான் உனதுடைமை" என்றும் பொருள்! "உனதுடைமை" என்னும் பொருளே அவனுக்கு மனத்தில் பதிந்து

தன்னை மறந்தான். பின்னால் அளக்கவேண்டிய தனைத்தையும் "தேரா! தேரா" என்றே யளந்து எல்லாம் முடிந்ததும், "நான் உன்னுடைமை" என்னும் நினைப்பிலேயே சமாதியெய்தி ஆண்டவனைப் பெற்றான். இவ்வாறு திடீரென ஒரு சொல்லில் மஹான்களுக்கு மனம் பாய்ந்து முக்திநிலைக்குத் தூண்டி இன்பந்தருவதுண்டு. அவ்வொரு மொழிக்கு ஈடு கோடி நூற்களும் ஆகா.

"ஒருரையால் வாய்க்குமுண்மைக் கோரனந்தநூல்கோடிப்
பேருரையாற் பேசிலென்ன பேறும் பராபரமே!"

நமது வேங்கடராமனை இப்படி ஈர்த்த மொழியெது?

1895-ம் ஆண்டு நவம்பர் மாதம், அவனது உறவினரொருவர் திருச்சுழியிலிருந்து வெளியூருக்குச் சென்று மதுரைக்குவந்தார். வேங்கடராமன் சுபாவமாக அவரை "எங்கிருந்து வந்தீர்?" என்றான். அவரும் சாதாரணமாக, "அருணாசலத்தினின்று" என விடையளித்தார். அவ்வளவுதான்! அருணாசலம்! அருணாசலம்!! அருணாசலம் மனத்திற் பாய்ந்து, உளத்தைக் கவர்ந்து, தனதாக்கியது. மனம் பலவாறு உருவகப்படுத்தி அதையே நினைந்தது. முன்காலம் ஒரு எரியைக் கண்ட மோசே (Moses) அதை "நீ யார்" எனக் கேட்க அது "நான் நானே" என்றதும், அதுவே மந்திரமாகி அவர் மனத்தை யீர்த்ததுபோன்று, காதிற்பட்ட "அருணாசலம்" மனத்தைப் பற்றி ஆவியிற் சுழலத்தொடங்கியது. "அருணாசலம் என்பது ஆனந்தவிண்; அதில் மண்ணெல்லாம் பொன் கண்டதெல்லாங் களிப்பு" என்று பலவிதம் எண்ணி மனம் பொங்கிற்று. உடனே வியப்புடன் களிதுளக்

கூற்று, "அருணாசலத்திலிருந்து! அது எங்குள்ளது?" என்று ஆவலாக வினவினான். அவ் வுறவினருக்கு இது அறியாப்பையனின் கேள்வியாகவே பட்டது. பத்தாவது வகுப்புப்பையன், பூகோளத்தைக் கற்றவன், தனது நாட்டில் அருணாசலத்தை யறியாதிருப்பது விந்தையே என்று இரங்கி, "என்ன! திருவண்ணாமலையை நீ யறியாயா? அது தான் அருணாசலம்" என்றார். பரமாத்ம ஜோதிமலையான அந்தா அருணாசலத்தை அவர் என்ன கண்டார்! உடனே வேங்கடராமன் களிதுளக்குற்றான்; மனஞ் சிலிர்த்து மகிழ்ந்தான். அவ்வளவுதான். பிறகு அதைப்பற்றி வெளிப்படையான விசேடமில்லை. ஜோதிமலையின் ஒரு தணலே வேங்கடராமனுக்குள் கனியத்தொடங்கிற்று. பழைய அறியாமையிருளைப் பிளந்து ஆத்மாருணாசலன் ஜோதிமலைபோல மெல்லமெல்ல உதிக்கத் தொடங்கினான். எனினும், சிறிதுகாலம் அது வெளிக்குறியொன்றும் காட்டவில்லை. உண்மையப்பன் அருணாசலனே, "நான் இருக்கிறேன்" என்று ஒரு மின்னல் மின்னினன்போலும்.

ஞானத்தபோதனரை வாவென்று கூவியழைக்கும் மலையன்றோ அண்ணாமலை!

# கக. பெரியபுராணம்.

" உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் ஜோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம் "

ஜோதியப்பன் ஒரு குறிப்பீந்தான். பின்னே சிவ பக்திக்கு ஒரு எழுச்சியுந் தர வுபாயஞ்செய்தான். மொழிக்குமொழி தெய்வமணங் கமழும் பெரியபுராணம் எவர் மனத்தையும் சிவமயமாக்கக்கூடிய சிவசாதன நூலன்றோ?

சிவபெருமானே "உலகம்" என்று அடியெடுத்துக் கொடுக்க, சிவமாதவவேடந்தாங்கிச் சேக்கிழார் நாயனார்,

சண்பையிளங் கதிரவனைத் தக்கதிருச் சொல்வேந்தைப்
பண்புநிறை சுந்தரரைப் பாக்கியமா மணிவாக்கை
நண்புடனே நயந்தேத்தி நயனமல ரருவிதரக்
கண்களிக்க வெழுந்தருளிக் கனிமதுரக் கவிபுகன்றார்

இத் தெய்வமணங்கமழும் தொண்டர் காதையன்றோ புறமதக்கவிகளிற்பொழுதுபோக்குவதினின்றும் அனபாய சோழனைத் திருப்பி, அன்பினோடும் விம்மிவிம்மி அருள் மேலிட்ட சிவத்தொண்டனாக்கியது! சிவபெருமானே,

" சேக்கி ழானமது தொண்டர் சீர்பரவ
நாம கிழ்ந் ' துலக ' மென்றுநம் "

வாக்கி னுலடியெ டுத்து ரைத்திட
வரைந்து நூல்செய்து முடித்தனன்
காக்கும் வேல்வளவ நீயி தைக்கடிது கேள்”

என்று சிலம்பி அனபாயனைத் தூண்டினன்.

நாயன்மார் நீதியையும், நல்ல தமிழ்வேதத்தையும், தூய சிவ பக்தியையும் பொலிவித்த பெரியபுராணத்தை அதே சிவபிரானே, அருணசலனே, தன் மைந்தனுன வேங்கடராமனுக்கும் ஈண்டு அகஸ்மாத்தாய்க் கிடைக்கச் செய்தனன்போலும்.

வேங்கடராமனின் சிறியதந்தை ஒரு பெரிய புராண வசனத்தை அடுத்து வசித்த அன்பர்பால் வாங்கிவந்து வீட்டில் வைத்திருந்தார். வேங்கடராமனின் கண் அதிற் சென்றது. இதுவே அவன் முதன்முதலிற் படிக்கும் சமய நூல். அதைப் படிக்கப்படிக்க வேங்கடராமன் அன்பும், வியப்பும், வணக்கமும், வைராக்கியமும், சிவசிந்தையும் மேலிட்டான்.

தில்லைச்சிவனுர் சந்நிதியில் ஞானசம்பந்தர் பிறந்த நாளான திருவாதிரையில் சேக்கிழார்நாயனுர் தாமே அதை அரங்கேற்றிப் பொருள்விரிக்கையில் அனபாயசோழனும், தில்லைவாழந்தணரும் அன்பரும் எத்துணை உள்ளுருகிக்கேட்டனரோ அத்தனையுள்ளுருகி மெய்மறந்து நாயன்மார்களின் இதயத்துடன் ஒன்றி அன்பன் அதைப்படித்தான். தனது மெய்யடியாருடன் சிவ பெருமான் அவன் மனத்துட் புகுந்தான்.

பெரியபுராணம், தாயுமானுர், திருவாசகம், கந்தரனுபூதி, அருட்சோதிவள்ளலார் இவ்வைந்தையும் அன்புட

னும் சிரத்தையுடனும் படிப்பவர்கள் வாழ்வில், உடனே ஒரு புதிய தூயமாறுதலும், அருளெழுச்சியும் பிறப்பது அனுபவஸித்தம். திருத்தொண்டர்சரிதையைப் படிக்கும் அன்பருக்கு சிவானந்தவூற்று மனத்திற் பொங்கிக் கிளர்ந்து நாவு தன்னை யறியாது நமச்சிவாயவென்னும்; உள்ளம் திருத்தொண்டத்தொகை பாடும்.

“உடம்பெனு மனைய கத்தே யுள்ளமே தகளி யாக
மடம்படு முணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கிற்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே!”

என்று சிவசாதனத்திற்கு எழுச்சி பிறக்கும். தெளிந்தோர்ப்பேணித் தெய்வந்தெளியச் சிந்தைபிறக்கும்; இத்தகைய எழுச்சியை அண்ணுமலையான் தனது செவ்விளஞ் செம்மலுக்கு ஊட்டினன்.

நாயன்மாரைச் சிந்திக்குங்கால், படலம்படலமாக எத்தனை அன்புறுத்திக்காட்சிகள் மனத்தையீர்க்கின்றன! மூன்றேவயதுள்ள முத்தமிழ்விரகன் ஞானசம்பந்தன் அன்பினழுது, திருத்தோணியப்பருடன் எழுந்தருளிய பெரியநாயகியாரால் முலைப்பாலூட்டப்பெற்றுன்! ஆளுடைப் பிள்ளையான ஞானசம்பந்தன், தனது வைதிகத்தந்தைக்கு, தனக்குப் பாலூட்டி உள்ளங் கவர்ந்த கள்வனைப் பிஞ்சிளங்கையினுற் சுட்டிக்காட்டுகின்றனன்! தன்னை வணங்கிய முதியர் நாவுக்கரசைச் சண்பையர்கோன் ‘அப்பரே’ எனவழைக்க, அவரும் “அடியேன்” எனப் பணிகிருர். திருநீற்றுப்பதிகத்தால் கூன்பாண்டியனுக்கு ஞானசம்பந்தர் எரியைத் தணிக்கிருர்! தமிழ்வேதம் நீரை

யுந் தீயையும் வெல்லுகிறது! "ஆழ்க தீயதெலாம்! அரன் நாமமே சூழ்க! வையகமுந் துயர்தீர்கவே! என்று தமிழ் மறை முழங்குகிறது! பாலறாவாயர் பாண்டிநாட்டில் சைவக்கொடியை நாட்டி, வெற்றியுடன் பூந்துருத்தியை நோக்கிப் பரசமயக்கோளரி வருகிறார். "அப்பர் எங்கே?" என்று ஆண்டு வினவுகிறார்! அப்பரோ, எம்பிரான் சம்பந்தரின் பல்லக்கைத் தாங்கிநின்று,

"உருகாநின் றும்மடியே னும்மடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றிங் குற்றேன்"

என்கிறார்! என்ன அடியார் வணக்கம்! நெஞ்சை யள்ளுகிறது!

நாவுக்கரசர், தம்பெற்றோர் இறந்தபின் உடலின் பொய்யுறவை யெண்ணிச் செல்வமனைத்தையும் எளியவர்க்கீந்து உலகைத் துறக்கிறார்! பின்பு கூற்றுதைத்தானைப் பாடிக் குடல்நோய் தீர்கிறார்! சமண மன்னன் அழைப்பிற்கு, "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்று சிவவீரத்துட னுரைக்கிறார். நீற்றறைக்குத் தப்பி, அது "மாசில் வீணையும், மாலைமதியமும், வீசு தென்றலும், வீங்கிளவேனிலும், ஈச னெந்தை யிணையடி நீழலும்" போன்றதென்று பாடுகிறார்! "அஞ்சுவ தியாதொன்றுமில்லை! அஞ்ச வருவது மில்லை" என்று பாடி, தம்மைக் கொல்லவந்த மதயானையும் தம்மை வணங்கப் பெறுகிறார்! கல்லைக்கட்டித் தம்மைச் சமணர் கடலிற் போடவே, அவர்

"கற்றுணை பூட்டியோர் கடலுட் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

என்று பாடி, கல்லுந்தெப்பமாகி மிதந்து திருப்பாதிரிப் புலியூரடைகிறார்! பின்னே அப்பர் கைலாயஞ்செல்ல இமயமலைமே லேறுகிறார். கைகால் தேய்ந்தது! மார்பு தேய்ந்தது! இன்னும் புரண்டுருண்டு செல்கிறார்!

சிவயோகி யொருவர் "கைலையை நீர் காணுது! திரும்பும்" என்கிறார். உடனே அப்பர் உள்ளுறுதி யுடன்,

"ஆளு நாயகன் கயிலையி னிருக்கைகண் டல்லால்
மாளு மிவ்வுடல் கொண்டு மீளேன்"

என மறுக்கிறார். பின்னே ஐயாற்றில் கைலை காண்கிறார்! எங்கும் சிவசக்தி தரிசனங் காண்கிறார்! ஒரு நாள் பொன்னும் பெண்ணுந் தம்மைச்சோதிக்க,

"திருவாரூ ரம்மானுக் காளானேன்
உம்மா லாட்டுண்ணேன்"

என அவற்றிற்குட்படாது வெல்கிறார்! "புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்" என்று அப்பர் சிவானந்த ஞானவடிவாகிறார்! பரமசிவன் விருத்த வேதியனாகத் தோன்றி, புத்தூரிலே விவாகசமயத்தில் சுந்தரமூர்த்தியைத் தனது அடிமையென்று தடுத்தாட்கொள்ளுகிறான்! சுந்தரமூர்த்தி "பித்தா" என்று பாடுவதைக் கிருபாபுரீசுவரர் மகிழ்ந்துகேட்கிறார்! இயற்பகைநாயனர் தமது மனைவியையும் அன்பால் சிவக்கிழவனுக்குத் தருகிறார்! கண்ணப்பன் எச்சிலையும் எம்பிரான் அருந்துகிறார். அன்புச்சுடரான அப்பன், தனது கண்ணைப் பிடுங்கியும் சிவபெருமானுக்கு அருச்சிக்கிறான்! பெருமான் அவனன்பிற்கு உடனே அருள்புரிகிறார்!

பஞ்சமும் பட்டினியுந் தாங்கிய செருத்துணையாரின் ஞானவழிபாட்டுறுதிக்குச் சிவபெருமான் பொற்காசு தருகிறார்! சேரமான்பெருமாள்நாயனார் உவர்பூத்த மேனியுடைய வண்ணானை நீறுபூத்த மேனியன் என வணங்குகிறார்! "ஆகா! அடியேன் உமது அடிமை வண்ணானன்றோ" என்கிறான் அவன்! அதற்கு நாயனார் "நான் உமதடி வணங்கப்பெற்ற அடிச்சேரன்" என்கிறார்! என்னே அன்பு மயம்! திருநீலநக்கர் திருநீலகண்டப்பாணருக்கு உடனிருத்தி விருந்தருத்தி, வேதியின் பாங்கர் இருப்பிடந் தருகிறார். திங்களூர் அப்பூதியடிகள் (அந்தணர்) அப்பரை உடனிருத்தி உபசரித்து வணங்கி விருந்தூட்டுகிறார்! என்ன சமரசம்! சிவனார் இளையான்குடி வேளாளன் வீட்டிற் புசிக்கிறார்!

"என்று மின்பம் பெருகு மியல்பினா
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்"

இப்படிக் கொண்டும் கொடுத்தும் குடி குடி ஈசர்க்கு ஆட்செய்த சிவத்தொண்டர் சரிதையில் ஊறிய வேங்கடராமனின் மனக்கனிவை யாரே யறிய வல்லார்! இக்கனிவு ஒருசிறிது தோன்றினும், மனக்கனி முற்றும் கனிவதுறுதியன்றோ! மனத்தில் ஒரு ஆவேசம் பிறந்தது! புத்தகத்தை முழுதும் படித்து முடிந்ததும் அந்த ஆவேச பரவசம் சற்று நின்று மறைந்ததெனினும், அது தனக்குந் தெரியாது ஒரு உள்ளெழுச்சியைத் தந்தது.

அதுமுதல் மதுரை மீனாக்ஷிசுந்தரேசுவரர் ஆலயத்தில் அறுபத்து மூவரை வணங்கி, நடராஜர் சந்நிதி முன்னின்று உள்ளுருகித் தன்னையுந் தொண்டனாக ஆட்கொள்ளுமாறு அவனுடைய ஆவி வேண்டிற்று. அவனது தமயன், லௌகிக எண்ணங்களிலேயே ஆழ்ந்த நாகசாமி, அவனது சிவபக்தியையும், அவன் கோயிலிற் புகுவதையும் கண்டு அவனை "யோகி, ஞானி" என்று கேலிசெய்தான்; ஆனால் தமயனுடைய அறியாப்பரிகாசம் வேங்கடராமனை யோகஞானப்பிரகாசமாக்கி மெய்யானது! அத்தகைய பரிகாசம் வாழ்க! இதற்குமுன் இப்படி யாரேனுங் கேலி செய்திருந்தால் வேங்கடராமனின் உரத்தகரங்கள்வலுத்த விடையளித்திருக்கும்; இப்போதோ அந்த முரட்டுத்தனம் சென்று சக்தியிருப்பினும் சாந்தம் மேற்கொண்டது! திருத்தொண்டரன்றோ அவனை அன்புத்தங்கமாக்குகின்றனர்! அருணாசலம், நாயன்மார்கள் இரண்டிலும் மனம் வசப்பட்ட நமதுபிரானை, ஆண்டவன் எப்படித்தோன்றாத் துணையாக ஆட்கொண்டான் எனப்பார்ப்போம்.

ஸ்ரீ ரமண விஜயம்

பாலகாண்டம் முற்றிற்று.

சுத்தானந்த பாரதியார் எழுதிய

# ஸ்ரீ ரமண விஜயம்

## உ. பக்குவக்காண்டம்

சத்தாகிச் சித்தாய் ஸதானந்த மாகியே
தானே தனக்குவமையாய்,
சக்திமழை பொழிகின்ற சண்டமா ருதமே
தழைத்தோங்கு மருள்வெள்ளமே!
உத்திமன மெட்டரிய வுத்தம ரஹஸ்யமே
யுள்ளன்பி னுக்கமுதமே!
யுரையாத மந்திர முரைத்தனை யதன்பெருமை
யுரையா லுரைக்கவசமோ?
தித்திக்கு மின்பரஸ மெல்லாந் திரண்டதோர்
தெவிட்டாத பேரின்பமே!
சிந்தையற நின்றபடி சிவஞான முக்திவிளை
சித்துவிளை யாடுமரசே!
தொத்தறு மிருட்பகைமை நீர்த்தூளி படவே
சுடர்காந்து ஞானமழுவே!
சுத்தபரி பூரண ஸுகானந்த வாரியே
துரியநிறை வானபரமே!

# உ. பக்குவக்காண்டம்

## கஉ. பக்குவம் வந்ததெப்படி ?

“ நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம வெனப்பெற்றேன் !
தேனுயின் னமுதமுமாய்த்
தித்திக்குஞ் சிவபெருமான்,
றுனேவந் தெனதுள்ளம்
புகுந்தடியேற் கருள்செய்தான் !
ஊனுரு முயிர்வாழ்க்கை
யொறுத்தன்றே வெறுத்திடவே ”

(திருவாசகம்.)

*மகர்ஷிகள் தேகாத்மபுத்தியை அறவே நீக்கினவர். “ நான், எனது ” என்பதை நாவானுஞ் சொல்வதில்லை.*

“ என்னதுயா னென்னலற்ருே ரெங்கிருந்து பார்க்கினுநின்
சந்நிதியாம் ; நீ பெரிய சாமி பராபரமே ! ”

*என்றபடி எங்கும் தன்மயமான சின்மயனின் சந்நிதி கண்டு, அனைத்தும் அவன்செயலென சாக்ஷிவகித்துப் பாராமற் பார்த்திருப்பவர்.*

“ நித்திரையிற் செத்தபிண நேருமுடற் கிச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே ! ”

என்றபடி நித்தியத்தில் நிலைத்த சுத்தராகி, இந்தப் பொய்யுடலைச் சற்றுங் கருதாதவர். அவருடைய இணை யற்ற யோகானுபவத்துட் பொதிந்துள்ள அற்புதங்கள் பலப்பல. அவற்றை யாவர் அறிவார்! ஒருநாள் "பக வானே, உபதேசஸாரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவேண்டும்" எனக் கேட்டபோது, "எல்லாம், அவனிச்சை எப்படியோ!" என்றுசொல்லிச் சும்மா விருந்துவிட்டார். இப்போது எத்தனை புத்தகங்கள் பக வானின் உபதேச மகரந்தத்தை மாந்தர் புத்தலர் உள் ளத்திற்றாவி அறிவுகனியச் செய்துள்ளன.

தானும் சகஜநிலை நானேன்று பேசிடுமோ
காணாது காணுமருட் காட்சி.

தனது அனுபவங்களில் மிகவும் தூலமானவற்றையே பிறர் அறிவர். கடலின் அலையையே யறிவார்; கடலின் ஆழத்தையும் அதிற் பதிந்துகிடக்கும் முத்துக்களையும் யாரறிவார்? பத்தாவது வகுப்பில் மனம்வேறுபட்டுத் தன் பாடங்களைப் படித்துக்கொண்டும் வீட்டுக்காரியங் களைப் பார்த்துக்கொண்டு மிருந்த 1896-ம் ஆண்டைய வேங்கடராமனுக்கு இத்தகைய சகஜநிட்டை எப்படிக் கூடிற்று? ஒருமுறை பகவானே அன்பர் வேண்டுகோட்கு அருள்புரிந்து, தமது ஆரம்பவனுபவத்தைச் சொல்லியுள் ளார். அதையே ஈண்டு சுருக்கி மொழிவது நலம். இவ் வரலாற்றில் வேங்கடராமனை அன்பன் எனக் குறிப்பிடு வாம். ஏனெனில் பெயர், பிறப்பு, குணங்குறி யெல்லாந் தாண்டிய தனிநிலையிலன்றோ அவன் இப்போது விளங்கு கிறான். ஆதலின் இனிப் பிறவிப்பெயரால் பகவானைக்

குறிக்க நமது மனம் ஒப்பவில்லை. அத்யாத்மவாழ்வின் போக்கை யொட்டியே ஆங்காங்கு சிறப்புப்பெயர்களுடன் பகவானை ஏத்துவாம்:—

முடிவாக மதுரையைத் துறப்பதற்கு (வீடு, உறவு, படிப்பு முதலிய தேகோகம்வாசனைகளைப் புறத்துறந் துறப்பதற்கு) இன்னும் ஆறு வாரங்களே இருந்தன; அப்போதே, எப்போதும் உட்கனிந்த ஞானக்கனல் கதிர்விட்டெழுந்து தன்னை முழுதும் விழுங்கி அதன்மய மாக்கியது. அப் பெரிய மாறுதல் திடீரென ஏற்பட்டது. ஏனெனில் அது அதுவாக வருவது.

"நாய மாத்மா ப்ரவசநேந லப்யோ
நமேதயா நபஹுநா ச்ருதேந
யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்
தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்"

"இவ்வான்மா வேதமோதலாற் கிடைக்கப்பெறாது; மனபுத்தியினாலும் எய்தப்பெறாது; கல்விகேள்விகளாலும் பெறக்கிடைக்காது; அது யாரை விரும்பித்தேர்ந்தெடுக்கிறதோ அவனால் அது அடையப்படுகிறது. அது அவனுடைய ஆத்மாவாய், அவனுள்ளே தனது ஸ்வரூபத்தை விளக்குகிறது." மூன்றுவித காலத்தும், முதனடுமுடிவுமின்றி, தோன்றும் விகற்பமின்றி, சுத்தசின்மாத்ரமாகி, சுத்ததுரியாதீதமாய், பஞ்சகோசாதீதமாய், சாசுவத சிவானந்த சிற்கனமான இந்த ஆத்மஸ்வரூபம் எவ்வித மான புறக்காரணங்களுமின்றி சூரிய னுதிப்பதுபோலத் தானேயுதிப்பது. சூரியனுக்கு உதயமும் அஸ்தமனமும் உண்டு; ஆனால் இந்த ஆன்மசூரியனுக்கு எவ்வித மாற்றமு

மில்லை; அது உள்ளபடி ஒளிவிளங்குகிறது. அலையும்மனம், அகங்காராதிதத்வங்கள், சஞ்சயனக்கும்பலில் எலும்பு பொறுக்குவதுபோல் தத்துவவாதிகள் வெகுகவலையுடன் ஆராயும் புருஷப்பிரகிருதி தத்துவங்கள், இடம், காலம், உலகுயிர்பரமாகும் முப்புரித்தோற்றங்கள் முதலிய அனைத்திற்கும் அதீதமாய், சற்றுஞ்சலனமற்று,அவத்தை யற்று விளங்கும் ஸச்சிதானந்த பரப்ரஹ்மவஸ்து நானு தியாவிடத்திலே தானேதானு யுதிக்கும். உள்ளமே யானால் உள்ளவனுங்கே! இந்தப் புலானுடல் மறப்பும், சிவோக வெழுச்சியும் அன்பனுக்கு உள்ளே கனிந்துவந் தது. அன்பன் அடிக்கடி உடலயர்ந்து உள்ளேயாழ் ந்திருப்பதுண்டு; காண்பவருக்கு அது ஆழ்ந்த உறக்க மெனவே தோன்றும். தற்போதமற்று, மனச்சேட்டை யற்று, இதயத்தில் இதயமாக லயித்துத் தூலவுணர்வு சென்றிருக்கும் அந்நிலையில் உடல் கட்டைபோல அசை யாது வீழ்ந்து கிடக்கும்; சாதாரணமாக மனமடங்காத வர்க்கு உறக்கத்திலும் ஸூக்ஷ்மதேகம் (சித்தம்) விழித் திருந்து கனவுகளையும் காட்சிகளையும் படலம்படலமா யெழுப்பும். மனம் புத்தியாலும், புத்தி யான்மாவாலும் விழுங்கப்பட்டவர் உள்விழித்துப் புறத்தே கட்டைபோல நீட்டிக்கிடக்கும் பேரின்பவுறக்கத்தைச் சுற்றியிருக்கும் மக்கள் அறியார். 1891-ம் ஆண்டு திண்டுக்கல்லிலிருக்கை யில் அன்பன் உடலை யுணர்வறக்கிடத்தி உள்ளே யாழ்ந்து விட்டான். தூங்குவதுபோல் உள் விழித்திருக்கும் இந்நிலையை, உடலுணர்விறந்து ஆன்மவஸ்து கன லும் ஒப்பற்ற உறுதிநிலையைக் கலைத்தெழுப்பப் பையன் கள் முயன்றனர்; அவர்களுக்கு இது கும்பகர்ண

நாடகமாகவே தோன்றியது. கத்திக்கத்திக் கூவியுறு மிக் கதவை யிடித்துப்பார்த்தனர்; ஆள் அசையவில்லை. "ஏதடா! கும்பகர்ணனுக்கு அண்ணனாயிருக்கிறான்" என்று பொறுமையிழந்து, முடிவில் அறைக்குட் புகுந்து உடலைப் பலமாகக் குத்திக்குலுக்கி அடித்தெழுப்பும் போதே புறவுணர்வு வந்தெழுந்தான் அன்பன். இது வுறக்கமேயல்ல; இதனால் உடல் நலமுங் கெடுவதில்லை; பகவான் விவேகாநந்தரைப்போன்று வஸ்தாத்வாலிப னாகவே திண்மையுற்று விளங்கினார். இரவில் அடிக்கடி மேற்சொன்னபடி தூங்காமற்றூங்குந் துரியநிலையில் மெய் மறந்து வீழ்ந்திருப்பதுண்டு; பள்ளித்தோழருக்கு இது மிகவும் சௌகரியமாயிருந்தது. பகலில் ஏதாயினும் சேட்டைசெய்தால் பலமாகக் கிடைக்கும்; வேங்கட ராமனின் கைக்கு எதிர்க்கை கிடையாது. பையன்கள் அதற்கு அஞ்சியே நிற்பர். ஆனால் மனத்திலேயே தங்கள் சேட்டைப்பாம்பை மூடிவைத்திருந்து இரவில் மேற் சொன்ன மெய்ம்மறதிநிலையில் வெளியேற்றுவர்; உடலை முற்றும் மறந்து புலன்களின் சேட்டை யொடுங்கிய அன் பனை, விளையாட்டுப் பிள்ளைகள், விளையாடுமிடத்திற்கு இட்டுச்சென்று, ஆத்திரந்தீர அடித்துப்புடைத்துக்கண்ட படி கேலிநையாண்டிகள் செய்து, மீண்டும் படுக்கைக்குக் கொண்டுவந்து எதாஸ்தானஞ்செய்துவிட்டு ஓசைப்படா மற் சென்றுவிடுவது வழக்கம். இது சிறார்செய்யுங்கூத்தே யொழிய, ஸ்வப்நாடனம், கரடியுறக்கம், கும்பகர்ணச் சோம்பல் போன்ற தீயகோளாறுகள், உடலூரனும், மன வலியும், கூர்மதியும், தெளிந்தவுள்ளமும் பெற்ற அன் பனுக்குச் சிறிதும் இல்லை. அது ஒரு சமாதிநிலை; பையன்

கள் செய்வதையெல்லாம் அந்நிலையில் அமைதியுடன், சாதுவாக, மன்னிப்புடன் அன்பன் பொறுப்பான். ஆனால் விழித்திருக்கையில் இத்தகைய பொறுமை இருப்பதில்லை. அப்போது பையன்கள் நமது வஸ்தாத்வாலிபனிடம் தமது சேட்டையை அவிழ்க்கத்துணிவதில்லை; காலையெழுந்தால் இரவில் பையன்களடித்த கொட்டமுங்கூத்தும் நினைவிருப்பதில்லை; ஏனெனில் கட்டையான உடலையே அவர்கள் அப்படிச்செய்தனர். இந்த ஆனந்தத்துயில் உயர்ந்த அனுபவத்தாலேயே விளங்கும். இதை யோக விழியால் சமாதியிற் காணலாமேயொழிய, வாய்மொழியால் நவீனமான அரைகுறை பௌதிக ஆராய்ச்சியாளரின் சொற்களைக்கொண்டு குறிப்பது பேதைமையாகும்.

கட்டை ஜடமாய்க் கடவுள் விழித்திருக்கு
நிட்டையிது நித்திரைபோற் காணுமே—சட்டையே
தேகோகம் விட்டுச் சிவோகந் தெளிந்தோர்தம் [னத்
யோகநிலைக் குண்டோ வுரை?

நெருப்பு கனிவதற்குக் கட்டையை அசையாமல் தணல்வாய் வைத்திருக்கவேண்டுமன்றே! அடிக்கடி வரும் இந்த மெய்ம்மறதிநிலையில் இப்போது விஜ்ஞானக்கனல் பற்றுகிறது; விறகிற்றீயினன் மாமணிச் சோதியன், விளங்குகிறான். என்னை?

முதலிற் சொன்னபடி மதுரையில் சிற்றப்பன் வீட்டில், தனியறையில், அன்பன் தனித்திருக்கிறான்; உடல் திடமாகவே யிருந்தது; தூயவாழ்விற்கு நோயேது? எதற்கும் அஞ்சுவதுமில்லை, அஞ்சவருவதுமில்லை; எனினும் அன்று திடீரென்று அச்சம் மனத்துட் புகுந்தது!

உடல் சாகப்போவதுபோலத் தோன்றிற்று (ஆம், தேகா பிமானம் சாகவே போகிறது)! அது நூலவுபாதியல்ல; வேண்டுமென்று வருவித்துக்கொண்டது மல்ல; செத்தால் இவ்வுடல் எப்படியிருக்கு மென்று சோதனை பார்க்கவு மெண்ணவில்லை. சாவதெது? நான் யார்? என்ற விசாரமே அதன் பயனானது.

போன்று வொளிமெய்யாம் பொய்யுடலேன்
என்று மிடும்பை யிலை. [றேயறியின்

"சாவாவ தென்ன? சாவதெது! இப்பிணவுடலன்றோ சாகிறது! இச்சடலத்துடன் யான் இறக்கிறேனா? 'நான்' என்பது இவ்வுடலா? அல்லவே; இம்மூச்சா? அல்லவே; நினைவா? அல்லவே. இவற்றை யெல்லாந் தாண்டி "நான், நான்" என்று தானாய்ப் பேசி யொளிருந் தனிப்பொருளொன்று என்னுள் உள்ளதே! அது இவ்வுடலைச் சார்ந்து பிழைக்கவில்லையே! அது ஆன்மா; ஆன்மா உள்ளே அணையா விளக்கு. இவ்வுடல் இருந்தாலும், இறந்தாலும் அது போக்குவரவற்று உள்ளபடி உள்ளவிடத்திலேயே ஒளிவளர்ந்து விளங்குகிறதே! அதுவன்றோ யான்; எனது இருக்கை அதனுளன்றோ! அதைத் தவிர்ந்த இந்த பஞ்ச கோசச்சட்டைகளும், நானற்ற தன்றோ! நான் என்பது உடலைக் கடந்த ஆன்மாவன்றோ! இதயகுகையிலன்றோ, அது சக்திக்கனலாய் எரிகிறது; சாந்தச் சுடராய் நிலவுகிறது: சுத்தசின்மயமாய் பூர்ணசிற்சுகவாரியாய் நிறைந்து, தானே தானாய் விளங்குகிறது! அந்தப் பூர்ண வஸ்துவன்றோ நான்; அதைச் சாவு அணுகுமா? அதை மீறிய பொருளில்லையே! அஃதின்றி எதுவுமில்லையே! நான் யார்?

*நான் அது, அது, அது, ஆன்மா! நான் சாவற்றவன். நான் பூர்ண சிற்சுக நித்திய சத்தியன்! நான் ப்ரஹ்மம்.*

உள்ளபடி யுள்ளபர மான்மா வேநான்!
உரைமனத்துக் கெட்டாத வான்மா வேநான்!
கள்ளமறக் கருத்தொளிரு மான்மா வேநான்!
கட்டில்லா மட்டில்லா வான்மா வேநான்
கொள்ளைகொள வொண்ணாத வான்மா வேநான்!
குணங்குறியொன்றறக்குறிக்கு மான்மா வேநான்!
உள்ளமதே யதுவாகு மான்மா வேநான்!
உண்மையிதே யுண்மைபர மான்மா வேநான்!
ஆன்மாவிற் கயலான தேதுவு மில்லை!
யதுவேயா னென்பதலா லயலோன் றில்லை!
ஆன்மாவிற் குயர்ந்தபொரு ளேதுவு மில்லை
யதுவேயா னெனுநிலையி னுயர்வோன் றில்லை!
ஆன்மாவிற் குயர்ந்தவறி வேதுவு மில்லை!
அதுவேயா னென்பதினு மறிவோன் றில்லை!
ஆன்மாவைத் தாண்டியுள தேதுவு மில்லை
யதுவேயா னுவதினு மமைதி யில்லை!

*இவ்வளவு விசாரணைகூட அங்கில்லை! இது நமது வாசகர்களுக்காக எழுதுகோல் செய்த விசாரணை! அன்பன் மனத்தில் அக்கணமே இவ்வுண்மை முழுதும் அகண்ட ஜோதியாய்க் கனலெழுந்து ஒளிர்ந்து சொல்லாமற் சொல்லி, உள்ளதனை உள்ளபடி தானேயாகக் காட்டி அவனே யானது. "நான் ஸத்து; வேறுள்ள உடலுணர்வெல்லாம் அதையே நடுவாகக்கொண்டு நடமிடுகின்றன. நான் என்னிலுான்றின் எல்லாம் தாமாக நடக்கும்" என்று*

தானேயவ்வுண்மையானதும், அன்றுமுதல் இன்று காறும், என்றும் தானே அது ஸோஹம், ஓம் தத் ஸத், அஹம்ப்ரஹ்மம், இதமாத்மா, ஆத்மைவாஹம் என்பதிலேயே ஆள் முழுதும் விழுங்கப்பட்டு அதுவே தானானது. சாவின் அச்சம் பிறகு ஏது!

ஞான ஞாயி றெழுந்து மிருளுண்டோ?
யானே னணவ மற்றபின் கட்டுண்டோ?
தானே ழுந்தோளிர் தன்மையிற் சாவுண்டோ?
மோன முத்தி முழுமைக் கழிவுண்டோ?

பேதபுத்தியே கூற்று; "தான், தான்" என்று நம்முள்ளே தாண்டவமாடி யெழுந்தத்துவமே கூற்றையுதைக்குங் கால். தானான தன்மயமே முற்றுமாகி, சாவு, நோவு, இடர், பயம், துயர், கட்டு, முட்டு, தட்டு, மட்டு எல்லாவற்றையும் நூறி நூங்கி, சுத்தமுக்த ஸத்யஸமத்வானந்தமாய் என்றும் இளமையாய் விளங்குகிறார் பகவான். பகவான் சுறுசுறுப்பாகவே யிருப்பவர்; எத்தொழிலைச்செய்தாலும் எத்தலத்தில் நின்றாலும், எவருடனே பேசினும், ஏதேதைக் கேட்டாலும், ஏதெதனைப் பார்த்தாலும், எவ்வெண்ணம் வந்தாலும், எந்நினைப்பு சென்றாலும், "ஸோஹம்," "நான் அது," "நானின்றி யாதுண்டு" எனும் நிலைப்பே அவரிடை மாறாதுள்ளது. பாடகன் எவ்வளவு சங்கதிகளும், ஸ்வரங்களும், கமகங்களும், தாளங்களும் போட்டுக் குரலை ரவை புரளும்படி ஆயிரம் விதமாக வளைத்தாலும், அனைத்தையுந் தாங்கி, அனைத்திற்கும் ஆதாரமாகி, அனைத்தாலும் மாறாது ஒரு ஓங்கார சுதி ஓயாமல் ஒலித்துக்கொண்டிருக்கிறதன்றோ? அதுவே உப

ஷிடதங்கள் "ஓமித்யேதத்," "ஓமிதீதம் ஸர்வம்" என்னும் தன்மயப்பொருள் (நான் என்னும் பொருள்). அதுவே தன்னைச் சுற்றியுள்ள பலவகை சம்பவங்களினூடும் கம்பீரமாகத் தானாய் விளங்குகிறது. உற்சவருக்கே ஊர்கோலம்; மூலவருக்கு அலைவுண்டோ?

இவ்வனுபவம் தன்னை என்றும் நீங்காதது; ஏனெனில் அதுவே தான்.

> ஸோகமேனத் தானே சுடர்பெருகு மான்மவொளி
> தேகமகச் சிந்தையிறந் தால்.

இவ்வனுபவம் நமது தேகபோதத்தை யறவே விழுங்கி, தானே யுள்ளமாகி, ஆத்மபோதமாய்த் தனிச்செங்கோல் புரியும்.

இவ்வனுபவத்தின் பயன் அன்பனின் புறவாழ்விலும் அக்கணமே புலனானது. நண்பர், உறவினர், படிப்பு, ஆட்டம் முதலிய புறவிஷயங்களில் இதற்கு முன்னிருந்த சிறிது அபிமானமும் வடுவற வுதிர்ந்துவிட்டது. தன்மயக் கனி பழுத்ததும் பின்னுறவெல்லாம் இதழ்போ லுதிர்ந்தன. படிப்பில் அசிரத்தை தடித்தது; வீட்டிலுள்ளவர்கள் "பிள்ளை படிக்கிறான்" என்று திருப்தியடைவதற்காக ஒரு புத்தகத்தை வைத்துப் போலிப்பார்வை பார்த்துக்கொண்டிருப்பான். ஆனால் தன்னுள்ளே பாராமற் பார்த்துக்கொண்டே யிருப்பான். கவனம் வெகு ஆழத்தில் பதிந்து சலனமற்றிருக்கும். அன்றுமுதல் முரட்டுத்தனம், பிடிவாதம் எல்லாம் பறந்துபோயின. வேங்கடராமன் பரமசாதுவாய்விட்டான். உற்றுருறவினருடன் பழகும்போது, வெகு தாழ்வாய், பக்குவக்கனிபோல

மென்மையாய், ஆனால் மனப்பற்றற்று நடந்துகொண்டான். முன்னே மற்றோரைவிட அதிக வேலை தந்தால் நீதியுரிமையை நிலைநாட்ட முயல்வான். பையன்கள் எதிர்த்தால் உடனே கைமேல் பதில் கொடுப்பான்; யாரேனுங் கேலிசெய்தால் அல்லது அதிகமாக விளையாடினால், பலமாக அப்பளம் வைத்துவிடுவான். இப்போதோ பரமசாது! ஆள் முழுதும் மாறிப் பசுவாகிவிட்டான். வீட்டு வேலைச்சுமை, வசவு, கேலி எல்லாம் இது நமக்கல்ல என்று பொறுத்தான். "நான்" என்று கிளம்பிய முன்பேர்வழி "தான்" என்னும் தன்மயத்தில் மறைந்து பொன்மய மாய்விட்டான். தகராகாயத்தில் 'நான், நான்' என்று நாயகன் ஆடல் புரியத் தொடங்கியதும், பையன்களுடன் செய்த விளையாடல்களெல்லாம் இல்லறம் புகுந்தவனுக்குத் தன் பிள்ளைப்பருவத்திற் செய்த பொம்மை விளையாட்டுப்போல ஸாரமற்று மறைந்தன. தன்னுடன் தனிமையே நாடினான். அடிக்கடி தன்னந்தனியே சுகாஸனத்தில் நிமிர்ந்திருந்து, பார்வையை உள்ளே ஆழ்த்தி "நான் ஆன்மா" என்ற தியானபரனாவான். அத்யாத்ம ஞானம் சீர்குலைந்து, அழியும் சிறுபடிப்பே தலைவிரித்தாடும் அந்நாளில், இதைப் பார்க்கும் மாக்களுக்கு வெகு விந்தையாயிருந்தது! மூத்த சகோதரன் நாகுவோ அன்பனை "ஞானி, யோகீச்வரன்" என்று பரிகாசஞ் செய்துவந்தான்; "பெரியவாள், யோகீச்வரர், பழைய ரிஷிகளைப்போலக் காட்டிற்குப் போகிறதுதானே!" என்று கேலிசெய்வான். மூத்தோன் வாக்கு முத்துப்போலப் பலித்தது! அந்தக் கேலிக்கெல்லாம் அன்பனின் ஆழ்ந்தறிந்த மனம் அசைவதில்லை. அவை உள்ளமைப்பின்

எதிரொலிகளேயாயின. அதுமுதல் உணவைப்பற்றி எவ்விதமான விருப்புவெறுப்பு மில்லை. சப்போ சுவையோ, சூடோ குளிரோ, புதிதோ பழசோ வந்தது உணவு; இல்லையேல் சிந்தையற்ற இன்பமே உணவு. உணவின்பால் முற்றும் உதாஸீனமானான்.

மற்றோரன்பெழுச்சி புலர்ந்தது. முன்னே, மதுரை மீனாக்ஷிசுந்தரேச்வரர் கோயிலுக்கு அபூர்வமாகவே நண்பருடன் செல்வது வழக்கம். சென்றாலும், விக்கிரகங்களைத் தரிசித்து விபூதி குங்குமம் வாங்கி இட்டுக்கொண்டு சீக்கிரம் திரும்பிவிடுவான். புதியவுணர் வெழுந்ததும், ஒவ்வொரு நாளும் அம்மையப்பனாலயத்திற்குத் தவறாமல் தனியாகவே சென்று, சொக்கலிங்கம், மீனாக்ஷி, நடராஜா, அல்லது அறுபத்துமூவர் சந்நிதியில் நின்றுருகுவான்; ஆவேச அலைகள் எழும்! தேகாத்மபுத்திபோய் சுத்தாத்மபுத்தியெழுந்த சுத்த ஜீவன் நித்திய ஸச்சிதானந்தப்பொருளின் உறவையே நாடிக் கோயில் புக்கது! ஆன்மலய மடைந்த அறிவுமயம், அன்புமயத்துடன் ஆலயம் புக்கது. கண் மாரி பொழிந்தது. எங்கும் நிறைந்த ஏகமூர்த்தியின் சந்நிதி உள்ளே பொன்மயமாய் விளங்கியதும், அதே சின்மயத்தை அருட்பொழிவுடன் விழியாற் காணும் மூர்த்தியிலும் அணைந்தான். எல்லாம் அவனன்றோ! நாயன்மார்கள்போலத் தனதன்பு நிலைக்க வேண்டுவான்; ஆனால் தோத்திரங்கள் சொல்வதில்லை; உள்ளிருக்கும் அன்புக்கடல் எதிரிருக்கும் அருட்கடலுடன் கலந்தவாறு வேசற்றிருப்பான். இந்த அருட்கலப்பு கண்ணீரிற் காணும். வேறு இன்பதுன்பக் குறிகள், ஹா ஹா என்றலறி ஆவேசமாகிக் கூத்



அகந்தையை நசுக்கி நெஞ்சத் தலைவினை யடக்கி யான்ம
சுகங்கனி ஞான ஜோதித் துரியவிண் ணிருக்கி ஞங்கே
ஜகம்வினை யாடற் றன்றன் றனென நடனஞ் செய்து
மகிழ்ந்திடும் வெள்ளி மன்ற மன்னனை மருவ லாமே.

நாடல் இல்லை; அவையெல்லாம் இந்த சாந்த அறிவன் பிற்கு வெகுதொலை பின்பட்டன. அமைதியான அன்பானந்தமே முதிர்ந்த ஞானத்திற் கறிகுறி. உண்மையறிவில் உள்ளின்பம் அரச அன்னம்போல அமைதியாகவும் கம்பீரமாகவும் நீந்திக்கொண்டிருக்கும். மற்றைப்படி ஆவேசங்க (Emotions)ளின் வசப்பட்டுப் புறச்சேட்டை காட்டி, ஆடிப்பாடிக் கொட்டி முழக்குவதெல்லாம், வீரிய அலைக(Vital movements) ளேயாகும். பரிசுத்த விஞ்ஞான மொளிரும் உயர்ந்த நிலையில் இவை காணு. அவ்வுயர்ந்த நிலையே தம்முளமைந்த பகவான், இணையற்ற சாந்தானந்தத்தை முதலிடைகடையற உள்ளவாறு உள்ளவிடத்திலேயே உள்ளலரக் கண்டு அதுவானுர். அதுவே பகவானின் ஒப்புயர்வற்ற சுவானுபவப்பெருமை. இந்த அமைதிப் பெருமை புத்தருக்குப் பின் பகவானிடமே மிகுந் தொளிர்கின்றது. பால்மணம் மாருப் பச்சிளமனத்தைப் பரம்பொருளே கைக்கொண் டொளிர்ந்தான்! வாழ்வைப்பற்றி ஏதுமறியான்; அதன் இன்பதுன்பச்சுழலில் எத்துணையும் அடிபடாதவன்; உலகம் துய ரென்னும் எண்ணமும் இலாதான்; பிறப்பறுத்து முத்திபெற்று, வைராகியாகி மோக்ஷத்தைத் தாவிப்பிடிக்க வேண்டுமென்ற கவலையு மிலாதான்; (தன்னிலையினும் மோக்ஷமெது?) கற்றறிவினுலும் தனதின்பம் வந்ததில்லை. பெரியபுராணம், பைபிள், தாயுமானவர், தேவாரப்பாசுரங்கள் இவற்றைத்தவிர வேருரு புனித நூலையும் கற்றறியான், கேட்டறியான்; இத்தகையோன் அனைத்தும் தானும் அறிவினைப் பெற்றுன். தான் பெற்ற பேறே உபநிடதங்களிலும், சுத்தாத்வைத நூல்களிலும் விரிக்கப்

பட்டுள்ளன என்று, திருவண்ணமலைக்கு வந்த பிறகு ரிபு கீதை முதலான நூல்களைக் கேட்டறிந்தான். மதுரையிற் கண்ட சூரியனே திருவண்ணமலையிலும் என்பது போலத் தன்னுட்கண்ட பொருளே அத்யாத்ம நூற்களினுள்ளும் அனைத்துள்ளும் எனத் தேர்ந்தான். தன்னுள் சகஜஞானத்தா லுணர்ந்ததையே நூல்கள் பாகுபடுத்தி ஒலிவடிவா யுரைத்தனவென்றறிந்தான். இந்த சுத்தான்ம நிலை, விஜ்ஞானம் அல்லது சுத்தமனநிலை, நானடங்கிய மோனத்தில் தானக விளங்கும் நிலைக்கு பகவானே ஒரு அகண்டமான மின்சார சக்தியாக இன்று விளங்குகிறார். அவருடைய சந்நிதிமாத்திரத்தில் உண்மையான முமுக்ஷுக்களுக்கு இந்நிலை யின்பம் பிறக்க வல்லது. இது அனுபவஸித்தம்.

இந்த உள்விழிப்பு கடவுட்டன்மையுள்ள பெரியோருக்குப் பூர்வாப்யாசத்தில் விட்டகுறையால், இந்த ஜன்மத்தில் திடீரென உண்டாகும். இதைக் குறித்து, கீதை ஆறுவது அத்யாயம் இறுதியில் கூறப்பட்டுள்ளது. பல பிறப்புகளாகத் தூய்மையுற்ற ஜீவன் இப்பிறப்பில் திடீரென்று ஞானவிழிப் பெய்துதல் இயல்பு. ஒரு முறை இது மகர்ஷிகளை, “இரவில் நீட்டிப்படுப்பதுண்டா? எப்படி அப்போது தியானம் நிகழும்?” என்று கேட்டதற்கு “ஏதோ பூர்வஜன்மத்தில் விட்டகுறை ஒட்டிக் கொண்டது. மெய்மறந்து உள்ளேயே கவனித்துக்கொண்டிருக்கும். சில வேளை ஓரிடத்தில் அமர்ந்திருக்க, விழிப்புற்ற போது எழுந்து நோக்கில் மிடுக்கான வேறிடத்தில் வீழ்ந்துகிடக்கும்” என்றிவ்வகை அருளினர். அவனன்றோ, இச்சையால் அனைத்தையும் பக்குவத்திற்கேற்

பக் குணங்குறி யொன்றறத் தன்னைக் கொடுத்துக்காட்டி இயக்குகின்றான்!

பரம்பொருள், தனது அவதாரக்கருவிகளைச் சிற்சில குறிகளால் அநித்தியவுலகினின்று நித்தியப்பொருளின் பால் திருப்புகிறது. பகவானுக்கு முன்னே தந்தை யிறந்தார். ஊனத்தந்தையின் அநித்தியம் புலப்பட்டது; உயிர்த்தந்தையான அருணாசலேசனையே "என் தகப்பனாரைத்தேடிப்புறப்பட்டேன்" எனப்பின்னே குறித்தார். தந்தை யிறந்ததுடன் தனக்கே சாவின் ஆராய்ச்சி எழுந்தது. சாவது சடலம்; சத்தியம் ஆன்மா; நலியாப் பொருளே நாம் என்ற உண்மை புலப்பட்டு, அதிலேயே மனம் லயித்து, தேகாபிமானமான அகந்தை யிறந்து பட்டது.

இது போலவே, முன்னே புத்தருக்கும் உலகின் அநித்தியம் வலியுறுத்தப்பட்டது. புத்தனைத் தந்தை எத்துணை உலகமயக்குகளிடையே வைத்திருப்பினும், ஒரு நாள் ஊர்வலம் போகும்போது உலகின் அநித்தியம் ஒரு கிழவனாக வேடம்பூண்டு நின்றது:—

கண்ணுற்றான் வயது மூத்துக் காலனை வணங்கி யாடி [தே
மண்ணுற்ற வாழ்க்கை தன்னை வழுத்திடுங் கிழவன் சோர்ந்
"விண்ணுற்ற புகழோய் நீயிவ் வேடமும் நடிப்பா" யென்ன
வெண்ணுற்றான் போலிப் பூவி னிருள்மருங் கறிய லுற்றான்.

மற்றொரு நாளிற் செத்த பிணந்தனை வருந்திக் கண்டான்;
பிற்றொரு நாளி லேழை மக்களின் பிணியைக் கண்டான்;
உற்றொரு நாளி லிந்த வுலகுடை நசையைக் கண்டே
கற்றனன் கண்க ளாலே கருத்தினி லெழுதி னானே!

பிறகு அரசிளங்குமரன் கனவில் ஒரு வயோதிகன் தோன்றி,

“ இளமை யென்ப திரவியின் மஞ்சளே !
வளமை யென்பது வாழ்வுட ஞேயுமே !
கிழமை யென்பது கிட்டு முயிர்க்கெலாம்
நிலைமை யொன்று நிலத்தினி லில்லையால் !

இறைவ ஞயினு மேழைய ஞயினும்
பறைய ஞயினும் பார்ப்பன ஞயினும்
பிறப்ப வர்கள் பிணியுற் றிறுதியி
லிறப்ப வர்க ளிதனை யறிகுவாய் ”

என்று அறிவுறுத்தவே, உடனே புத்தன் வீரத்துறவணிந்து உண்மையின்பத்தைத் தேடப் புறப்பட்டான். உயிர்களின் மாட்டு உண்டான பேரிரக்கத்தின் மூலம், புத்தன் ஞான வெழுச்சி பெற்ருன். புத்தர் அநித்தியத்தை யெண்ணி நித்தியத்தைத் தேடப் புறப்பட்டார். ஆனல் பகவானின் ஞாஞேதயம் அதிசயமானது. அது எடுத்ததும் நித்தியப் பொருளிலேயே அவரை யூன்றி விட்டது. உலகு அநித்தியம் என்ற உணர்வு அப்போது அவருக்கில்லை. நித்தியப் பொருள் (“ நான் ”) என்பது ஆன்மா : அது மனத்தினுள்ளது; அதுவே நான்; அதுவே என் இருக்கையென்று அதன் மயமாய் அதுவே ஜீவனமாயினர்.

தனைமற ந்தனன் றரணியை மறந்தன னன்பு
மனைமற ந்தனன் மறக்கினு மறப்பரும் பொருளே
நினைவு கொண்டுளே நிலைத்தன னினைக்கருஞ் சோதி
மனந்தி றந்தது மலர்ந்ததங் கவனரு ளறிவே.

என்றவாறு முகம்மதுநபிக்கு ஹிராக்குகையில் திடீ ரென்று ஆண்டவனின் அருட்சக்தி பாய்ந்து உள்விழிப் பிந்ததைப் போன்றது இந்த ஞானவெழுச்சி.

"எழும்பு மகந்தை யெழுமிடத்தை நீரில்
விழுந்த பொருள்காண வேண்டி—முழுகுதல்போற்
கூர்ந்தமதி யாற்பேச்சு மூச்சடக்கிக் கொண்டுள்ளே
யாழ்ந்தறிய வேண்டு மறி" —(பகவான்)

என்ற உறுதி மகர்ஷிகளுக்கு அன்றே நிலைத்துவிட் டது. அவருடைய பக்தியும் ஞானமும் உள் மலர்ச்சியே.

"நித்தம் நினைத்திரங்கி நின்மலனை யொன்றுவிக்கில்
முற்று மவனொளியே யாம்.

தன்பா லறியுந் தவமுடையார் நெஞ்சத்து
ளன்பா யிருக்கு மரன்.

உள்ளத்தி னுள்ளே யுறப்பார்த்தங் கொண்சுடரை
மெள்ளத்தா னர்ச்சிக்கு மாறு.

ஞானத்தா லாய வுடம்பின் பயனன்றே
மோனத்தா லாய வுணர்வு.

தன்னை யறிந்து செறிந்தடங்கித் தானற்றுற்
பின்னைப் பிறப்பில்லை வீடு"

என்ற படிகளிற் பக்குவப்பட்டு,

"எங்கும் பரவடிவா யென்வடிவு நின்வடிவாய்க்
கங்குல் பகலின்றிக் கண்டிருக்கும்"

சகஜநிஷ்டையில் அது ஊன்றியது.

ஓம் தத் ஸத்

## கரு. " இதெல்லா மென்னத்துக்கு ?"

" நின்றநிலை யேநிலையா வைத்தா னந்த
நிலைதானே நிருவிகற்ப நிலையு மாகி
என்றுமழி யாதவின்ப வெள்ளந் தேக்கி [தோ"
யிருக்கவெனைத் தொடர்ந்துதொடர்ந் திழுக்கு மந்

உள சிக்குப்பாச மொழிந்தது! நூல், பாடம், வீட்டு வேலை எல்லாம் பண்டு முற்றிய உமி யென விண்டு விழுந்தன. மனம் ஆத்மத்யானத் திலேயே களிப்புற்றது. வேங்கடராமன் உள்முகமாகி ஆத்மாராமனைப் பழக்கத் தொடங்கினான். சம்பளங் கொடுத்துப் படிக்க வைப் போர், பையனை எப்போதும் புத்தகமுங்கையுமாகவே யிருக்க வற்புறுத்துவார்கள்; பையன் பாடமும் வேண் டான்; வீட்டுப்பணியும் வேண்டான். எனில், வீட்டிலுள் ளோர் சும்மாவிருப்பார்களா? அரற்று, மிரட்டு, வசவு, அடி—எல்லாந் தெரிந்ததுதானே!

வேங்கடராமனின் சிற்றப்பாவும், முத்தண்ணாவும் பொய்வாழ்வினின்று கரையேறிய பையனுக்கு அக்கரை பிறப்பிக்க எவ்வளவோ முயன்றனர். " இவ்வளவு நல்ல பிள்ளை, பத்துவரையில் படித்துத்தேறி, மேலே படித்து உத்தியோகம் பார்த்து பத்துகாசு சம்பாதித்துக் குடும் பத்தைத் தாங்கினாலன்றோ நல்லது! இப்படிக் குட்டி வேதாந்தி யாய்விட்டானே! தியானமாம், மோன மாம், பக்தியாம் இந்தச் சிறு வயதில்! ஏது கெட் டது காரியம்" என்று சினந்து முனிந்து கடி

தனர். பள்ளிக்கூட உபாத்தியாயருஞ் சும்மாவிட்டாரா? பையன் பாடத்தைத் தொடுவதில்லை; படிப்பிற்கவலையில்லை; கவனமில்லை; ஆதலின் பாடங்களைத் தினம் உருவெழுத வற்புறுத்தினர். சிவமயம், ஸ்ரீராமஜயம் எனும் திருநாமங்களைச் சிலர் ஏகாக்கிரம் வருவதற்குத் திருப்பித் திருப்பி பலதடவைகள் எழுதுவதுண்டு. தன்னுள்ளத்தில் அருவுருவாயொளிரும் அருணாசலா, அருணாசலா, என்று உருவெழுதச் சொன்னால் வேங்கடராமன் மகிழ்வுடன் எழுதிப் பார்ப்பான். பொருளற்ற பள்ளிச்சக்கைகளை அப்படி யெழுதுவதினும் அருவருப்பு வேறென்னே! வட்டத் துளையில் சதுரமனிதனை (Square man in the round-hole) நுழைப்பதுபோன்ற இக்காலக் கல்வியின் சாபம் இது! உயரச் செல்லும் மனத்தைப் பயனற்ற புத்தக மூட்டைக்குள் புதைக்க முடியுமா? வீட்டுவேலை, புத்தகம், பரீக்ஷைதேறுதல், உத்யோகம், பணம், மோடார் பெரிய மனிதன்—இதுவே உறவினர் பையனுக்குக் காட்டிய ஏணிப்படி.

எழுத்தறிந்த தாம்பிறந்த தெங்கேயென் றெண்ணி
யெழுத்தைத் தொலைக்க வெண்ணுதோர்—எழுத்தறிந்தேன்
சத்தங்கோ ளெந்திரத்தின் சால்புற்றார் சோணகிரி
வித்தகனே வேறார் விளம்பு. —(பகவான்)

இதற்குமேல் விண்ணளாவி யோங்கி, இன்பமும் அறிவும் இறகுகளாகக்கொண்டு பறக்கும் சுதந்தர ஆத்மாவை யாவர் அறிவார்!

‘ தன்னை யழித்தெழுந்த தன்மயா னந்தருக்
கென்னை யுளதோன் றியற்றுதற்குத்—தன்னையலா

தன்னிய மோன்று மறியா ரவர்நிலைமை
யின்னதேன் றன்ன லேவன் ?" —(பகவான்)

தன்னுள் தானே தானாக நிலைத்தவனுக்கு வீட்டிலும் பள்ளியிலும் என்ன செய்தாக வேண்டுவது ! அவனுடைய நிலைமையும் பக்குவமும் புலக்கண்களுக்கு எப்படிப் புலனாகும் !

"தானே தானே தத்துவ மிதனைத்
தானே காட்டுவா யருணாசலா !"

என்றன்றோ வேங்கடராமன் மனம் ஆண்டவன் வசிக்கும் இதயகமலத்தில் வண்டெனச் சுழல்கின்றது !

வீட்டிலிருந்து தனது தவம் நடைபெறாதென் றறிந்தான் ! உடலைக் கருதவில்லை ; உணவைக் கருதவில்லை ; ஒன்றையே நித்தியமெனத் துணிந்தான். சமயமும் நேர்ந்தது. 29-8-1896-ம் ஆண்டு சனிக்கிழமை, ஆங்கில இலக்கணம் சரியானபடி உருத்தள்ளவில்லை ; அதனால் 'பெயின்ஸ் கிராமர்' (Bain's grammar, பெயின் என்பவர் எழுதிய ஆங்கில இலக்கணம்) ரினின்று ஒரு பாடத்தை மூன்று தரம் எழுதத் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டு முறை எழுதியாயிற்று ; மூன்றாமுறை யெழுதும் போது, இந்த வினையின்பால் முனிவும், சினமும் ஏற்பட்டது. "சீ, இதென்ன வேலையற்ற வேலை ! இதுவரை சுகம்" என்று, பெயின் இலக்கணம், காகிதம், எழுதுகோல் எல்லாவற்றையும் கட்டித் தூர வீசியெறிந்து விட்டான். கண் மூடி நேராக அமர்ந்து தியானஞ் செய்யத் தொடங்கினான்.

முத்தண்ணாவின் விழிகள் தம்பியின் செயலைப் பார்த்து வியந்து முனிந்தன. உடனே பையனைத் திருத்தும் எண்ணத்துடன்,

"இப்படி யெல்லா மிருக்கிறவனுக்கு இதெல்லா மென்னத்துக்கு?"

என்று கூவினான். சிலவேளை நாம் ஏதாயினும் எண்ணிக் கொண்டிருக்கும்போது தெருவில் இயல்பாகப் பேசும் ஒருவர் வாய்ச்சொல் அதற்கு நன்மையாக முடிவதுண்டு. முன்னே பலமுறை முத்தண்ணா இப்படிப்பேசும் போது உறைக்கவில்லை; இம்முறை அது வேங்கடராமனுக்கு ஒரு வைராக்யசக்தியை உள்ளே பாய்ச்சியது. "ஆம்! மெய்தான்; முத்தண்ணா சொல்வது உண்மை! இங்கு இனி யெனக்கென்ன வேலை? இனி என்மனத்தை வீட்டில் கட்டிவைக்க யாராலும் முடியாது! என் அருணசலன், என் அப்பன் என்னைக் கொள்ளைகொண்டான்!"

"ஊர்சுற் றுளம்விடா துனைக்கண் டடங்கிட
வுன்னழ கைக்காட் டருணசலா!
ஏனிந்த வுறக்க மெனைப்பிற ரிழுக்க
விதுவுனக் கழகோ வருணசலா!
காந்த மிரும்புபோற் கவர்ந்தெனை விடாமற்
கலந்தெனோ டிருப்பா யருணசலா!
குற்றமுற் றறுத்தெனைக் குணமாய்ப் பணித்தாள்
குருவுரு வாயொளி ரருணசலா!
சாப்பா டுன்னைச் சார்ந்துண வாயான்
சாந்தமாய்ப் போவ னருணசலா!

சூதுசெய் தென்னைச் சோதியா தினியுன்
ஜோதி யுருக்காட் டருணசலா !
ஞானமில் லாதுன் னாசையாற் றளர்வற
ஞானந் தெரித்தரு ளருணசலா !
தைரிய மோடுமுன் மெய்யக நாடயான்
றட்டழிந் தேனரு ளருணசலா !
வீடுவிட் டீர்த்துள வீடுபுக்குப் பையவுன்
வீடுகாட் டினையரு ளருணசலா !
அருண சலசிவ அருண சலசிவ
அருண சலசிவ அருணசலா !'' (பகவான்)

என்று ஆர்வக்கனலை மூட்டினன் அம்மையப்பன் !

அருணசலன் மனத்தை யீர்த்தான் ! மைந்தன் படு துயர் தந்தை பொறுப்பனே ! அருணசலமே மூச்சு ! அஃதின்றேல் உயிர் போச்சு ! நீரில் ஆழ்த்தப்பட்டவன் மூச்சுக்குத் திணறுவதுபோல, அருணசலத்தைக் காண வுடனே கிளம்ப உறுதியுற்றன் !

"நித்திரைசெய் வீட்டில் நெருப்பும் பெரும்படையும்
முற்றிப் புறப்பட்டார் முற்றத்தே—பித்தரைப்போல்
நில்லென்று சொன்னலு நிற்பரோ? அப்படிக்கா
ணில்லத்தை நீத்தோ ரியல்பு''


அருணசலம், அருணசலம், அருணசலம் சேர வேண்டும் ; அங்கேயே அவனடியில் மீளாவாளாகவேண்டும் ! மன வண்டியை முடுக்கியாயிற்று அண்ணமலையின்பால் ! ஆனல் இந்த வுடல்மூட்டை செல்லவேண்டுமே ! வேங்கடராமன் நடந்துசெல்லவே துணிந்திருப்பான் ;

ஆனால், அப்பன் தன்மைந்தனின் தனிரடி அவ்வளவு வருந்தக்காண்பானோ? ஒருசூழ்ச்சி செய்தான்! வேங்கட ராமன் அன்று 12 - மணிக்கு மின்சாரப்பாடங் கற்கச் செல்லவேண்டுமென அண்ணனிடம் சொல்லி அடி யெடுத்து வைத்தான். அண்ணன் அறிவானோ தம்பியின் உறுதியை! "ஆனால், கீழே பெட்டியில் ஐந்து ரூபா யுள்ளது; அதை யெடுத்துக்கொண்டு உன் பள்ளிக் கூடத்திற்கருகே யுள்ள கல்லூரியில் எனது சம் பளத்தைச் செலுத்திச் செல்" என்று கட்டளையிட்டான். அவனே வேங்கடராமனின் உறுதியைத் தூண்டினான்! அது பலிக்குமாறு அவனே செலவும் பணமுந் தருகிறான். அண்ணன் வாழ்க! அண்ணனா தந்தான்? அருணாசலனே, சத்தந் தந்தான்! அண்ணனா சுடச்சுடப் பேசினான்? அருணாசலனே, "உனக்கிங்கென்ன வேலை! வா என் னிடம்" எனப் பிடித்திழுத்தான்! கூர்மதியும், ஞாபக சக்தியும் உள்ள வேங்கடராமனோ பாடம் படிக்காது உரு வெழுதுந் தண்டனை பெற்றான்? இல்லை; அருணாசலனே "உன் வாழ்வை ஒரு கணமும் இந்த அற்பப் படிப்பில் வீணாக்காதே! எனது அகண்டாகாரப்பள்ளிக்கூடத்தில் என் மயத்தையே கண்டறிந்து உலககுருவாக விளங்கு" என்று தூண்டித் தடுத்தாட்கொண்டான்! அன்று வேங் கடராமன் நொந்து சினந்து எழுதிய பெயின் இலக்கணப் பாடத்தையும், இன்று ஞானமுத்தைப் பதித்த ரமண வருட்கவியையும் நேர்நேராக வைத்துப் பார்த்தால் அருணாசலன் எத்தகைய ஞானக்கல்வியைத் தனதருமை மைந்தனுக்குச் சொல்லாமற்சொல்லி ஜோதி நிறைவா யிந்தானெனப் புலனாகும்!

தனது சிற்றியிடம் ரூ. ஐந்து பெற்றான். உடனே உள்ளே சென்றான்; உணவை அவசரமாக அள்ளியடைத்தான்! ஒரு பழைய சென்னை ராஜதானிப் படத்தைத் திருப்பினான். அதில் விழுப்புரம் - காட்பாடிப் பாதை குறிக்கப்படவில்லை. திண்டிவனமே அதற்கருகே யுள்ள வண்டிநிலையமென் றெண்ணினான். மூன்று ரூபாய் அதற்குப் போதுமெனக் கருதினான். இரண்டு ரூபாயைத் திருப்பி வைத்துவிட்டான். அவசரமாக ஒரு கடிதத்தைத் தீட்டி அதனுடன் வைத்தான்; மதுரையை உதறிச் சென்றுவிட்டான்! என்ன நாணயம்! என்ன பொருளாசையின்மை!

"என்போலுந் தீனரை யின்புறக் காத்துநீ
யெந்நாளும் வாழ்ந்தரு ளருணாசலா!
மீகாம னில்லாமல் மாகாற் றலைகல
மாகாமற் காத்தரு ளருணாசலா!
பைங்கொடி யாநான் பற்றின்றி வாடாமற்
பற்றுக்கோ டாய்க்கா வருணாசலா!
அருணா சலசிவ அருணா சலசிவ
அருணா சலசிவ அருணாசலா!"

வேங்கடராமன் மனம் அருணாசலம் சென்றுவிட்டது. சனிக்கிழமை பகல் 12 - மணிக்கு வீட்டைவிட்டு வண்டி நிலயத்திற்கு ஓடினான். வழக்கமாக, 12-மணிக்கு வண்டி புறப்பட்டு வரும்; அன்று இன்னும் அது தாமதமாகவே வந்தது! இதுவும் அருணாசலன் லீலையே! ரூ. 2-13-0-க்கு திண்டிவனத்திற்குச் சீட்டு வாங்கி, மீதி 3 - அணுக்களை முடிந்துகொண்டு வண்டியில் உட்சுமையைப் போட்டு



முத்தெழுத்து முத்து முறுவலொளிர் முத்திளஞ்சோல்
முத்திக்கு முத்து வழி.

தியானத்தமர்ந்தான். உடல் ஆவிரதத்தில் விரைகின்றது; வண்டி "சிவ, சிவ" என்று உயிர்த்துச் செல்கிறது.

• சைதன்யருக்குக் கண்ணன்மீது பிறந்த அன்பே வேங்கடராமனுக்கு அருணாசலத்தின்மீது பிறந்தது! படிப்பு, உத்யோகம், பெண்டு, பிள்ளையென்று பந்த மூட்டையைப் பெருக்காமல் அப்பன் தன் மைந்தனைக் கட்டவிழ்த்துத் தன் சுத்த முக்த நித்ய ஜோதி யின்பத்திற் கழைத்துச் செல்கிறான்!

பிள்ளை ஓடிப்போய்விட்டான்! சிறியதகப்பனார் தேடுகிறார்! தமையன் தேடுகிறான்! முடிவில் ஒரு கடிதமும் அதனுடன் இரண்டு ரூபாயும் அகப்பட்டது! கடிதத்தைக் கண்டு அனைவருந் திகைக்கின்றனர்! அதில் உள்ளதென்ன :—

என் தகப்பனாரைத் தேடிக்கொண்டு

"நான் ∧ அவருடைய உத்தரவின்படி இவ்விடத்தை விட்டுக் கிளம்பிவிட்டேன். இது நல்ல காரியத்தில்தான் பிரவேசித்திருக்கிறது. ஆகையால் இந்தக் காரியத்திற்கு ஒருவரும் விசனப்படவேண்டாம். இதைப் பார்ப்பதற்காக பணமும் சேலவு செய்ய வேண்டாம்.

உன் சம்பளத்தை இன்னும் சேலுத்த இல்லை. ரூ. 2 இதோடுகூட இருக்கிறது. } இப்படிக்கு, ........................

இக்கடிதம் இன்னும் ஸ்ரீ ரமணாசிரமத்தில் கண்ணாடி போட்டு வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அன்பனின் மனநிலையும் அதன் பக்குவமும் விளக்குவதற்கு இக்கடிதமே கண்ணாடி! கையெழுத்தில்லை முடிவில்! பெற்றோர் கொடுத்த பெயரையும் தேகாபிமானத்தோடு துறந்தான்!

பெயர்வடிவற்ற வொரு பொருளே தானுனன்றோ! தாய், தமையன், தம்பி, உறவினர், வீடு, சுற்றம் எதிலேனும் சிறிது பற்றுமிருந்ததா! புத்தனுக்குக் கானகஞ் செல்ல மாளிகைக் கதவுகள் வழிவிட்டதுபோல, அருணசலர் தம் மைந்தன் வழியைப் பலவாற்றானும் விளக்கிவைத்திருந்தார். காந்தம் அங்கே யுள்ளது. அது வலிந்திழுக்கிறது. 'வீட்டோர்தேடுவரே' யென்று மயங்கினனா? 'தெரியாதவூரில், பணமுமின்றி எப்படிப் பிழைப்ப' தென்றேங்கினனா? 'வீட்டோர் தேடுவா' ரென்றிரங்கியே தான் செல்வதைக் குறித்துவைத்துச் சென்றான்! அவர்களைத் தைரியப்படுத்துகிறான்! 'இது நற்காரிய' மென்று மகிழ்விக்கிறான்! தனது நாணயத்தைக் காட்ட இரண்டு ரூபாய் நாணயத்தையும் உடன் வைத்தான்! 'ஸர்வ பிதாவையே நாடிச் செல்கிறே' னென வுறுதி கூறுகிறான்! தன்னைத்தேடவீண் செலவு செய்ய வேண்டுவதில்லை யென்றும் குறிப்பிடுகிறான். இவை யெல்லாம் அவனுடைய நன்னெறி யொழுக்கத்தைக் காட்டுகின்றன. இரண்டாவதாகத் தனது அத்யாத்மப் பசியைத் தெரிவிக்கிறான்! தந்தை யிருப்பது உறுதிப்பட்டது. அவரே தன்னை அழைத்தார். ஆதலின் செல்கிறேன்! தந்தையை யடைவேன்! உலகிற்கும் அவரைக் காட்டுவே னென்னும் ஆன்மவெற்றியுறுதியைக் கொண்டான்! இந்த அத்யாத்மதிரம் மிகவும் அரியது. இன்னென்று முதன்மையாகக் குறிக்கத்தக்கது. முதல் வாக்கியத்தில் "'நான்' இவ்விடத்தை விட்டுக் கிளம்பிவிட்டேன்." இந்த 'நான்' அடுத்த வாக்கியத்திலேயே 'இது' வாகிறது! என்னே பொருள்! "இங்கு வீட்டிலுள்ள மட்டும் 'நான்' என்னும் அகந்தை சூழ்ந்துள்ளது; இங்கிருக்கு

மட்டும் அகந்தை வாழ்வு, 'தேகம் நான்' என்னும் மாய வாழ்வு! என் தந்தை ஆண்டவனை நான் தேடிச் செல்கிறேன்! அவன் என்னை யழைத்ததும் இந்த அபிமானம் போயிற்று. நான் அவனுட் கரைந்தேன். இச்சடலம் ஜடமே. நான் என் தெய்வத் தந்தையின் பங்கு. செல்வது உடல்—'இது;' நான் என்னும் மெய்ப்பொருள் ஆன்மா, ஏற்கெனவே என் தந்தையின் கையில் விளங்குகிறது. இனி இவ்வுடல், உயிர், மனம், எல்லாம் அவன் பொறுப்பு. மனையோரே, இவ்வுடலைத் தேடப் பணம் செலவழிக்க வேண்டாம். ஆண்டவனையே உள்ளே தேடுங்கள். இது நல்ல காரியத்தில்தான் புகுந்துள்ளது. நீங்களும் உடல் வாழ்வு மெய்யென மயங்கி வீணாகாமல் அப்பனைத் தேடுங்கள்!" என்றன்றோ உறுத்திச்சென்றான். ரூபாய் இரண்டைக் குறிப்பிடும்போதும் 'நான்' என்பதில்லை. வெகு அலக்ஷ்யமாக அந்த ஜடமான பணம் இருக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது. நான் இதுவாகி, முடிவில் இதுவும் கையெழுத்தின்றி மறைந்துவிட்டது! எல்லாம் நிர்க்குணம்! என்னே பதினேழுவயது இளைஞனின் (இல்லை, ஞானக்கிழவனின்) பரிபக்குவம்! தூலவாழ்வு, மனவாழ்வு, விஜ்ஞானம், ஸச்சிதானந்தம், துரியாதீதம் என்ற ஐந்து வாழ்வுப் படிகள் ரூபாய் ஐந்தைக் குறிக்கின்றன. அவற்றில் தூலமன வாழ்வை வீட்டோடு ஒழித்துவிட்டு, ஞானானந்தத் துரியாதீதவாழ்வு மூன்றையுமே அன்புடன் கொண்டோடினான்.

இதை யாரறிவார்? அனுபவித்தோரே. ஒரு முறை இந்த ஆன்மவெழுச்சி பிறந்தால், அது அணையாது சுடர்

விட்டோங்குமன்றே! அதிலும் அப்பனன்றே தனது அருட்சோதியின்பால் பிள்ளையை யழைக்கிறான்!

" தானான தன்மயமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனாலுங் கர்ப்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வே றின்றாம்
ஞானகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவு நழுவாமல் நழுவி நிற்கும்
ஆனாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வார்?
அதுவானா லதுவாவ ரதுவே சொல்லும்.

## கச. அருணாசலயாத்திரை.

" In the Lord put I my trust:
how say ye to my soul,
Flee as a bird to your mountain?"
(*Psalm of David*) Psalm 11.

Therefore I say unto you, take no thought for your life, what ye shall eat or what ye shall drink; nor yet for your body, what ye shall put on. Is not the life more than meat and the body than raiment?

Behold the fowls of the air: for they sow not-neither do they reap, nor gather into barns; yet

your heavenly Father feedeth them. Are ye not much better than they?

Which of you by taking thought can add one cubit unto his stature?

And why take ye thought for raiment? Consider the lilies of the field, how they grow; they toil not, neither do they spin:

And yet I say unto you, That even **Solomon in** all his glory was not arrayed like one of these.

Wherefore, if God so clothe the grass of the field, which today is, and tomorrow is cast into the oven, **shall he** not much more **clothe** you, O ye of little faith?

Therefore take no thought saying, what shall we eat? or What shall we drink or, Wherewithal shall we be clothed?

(For after all these things do the Gentiles seek:) for your heavenly Father knoweth that ye have need of all these things.

But **seek ye first the kingdom** of God and His righteousness; and all these things shall be added unto you.

Take therefore no thought for the morrow: for the morrow shall take thought for the things of itself. Sufficient unto the day is the evil thereof.

(*St. Mathew, Chapter VI verses 25 to end.*)

'தேவனிடத்தில் என்னுடைய நம்பிக்கையை நான் வைக்கிறேன். உன்னுடைய மலைக்கு பக்ஷிபோல் பறந்து செல்லுவாயாக என்று என்னாத்மாவுக்கு நீ எவ்விதமாகச் சொல்லுவாய்? (சங்கீதம்: 11.)

ஆகையால் எதை யுண்போம் எதை குடிப்போமென்று உங்கள் ஜீவனுக்காகவும், எதை யுடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

ஆகாயத்து பக்ஷிகளை கவனித்துப் பாருங்கள்; அவை விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை. களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதுமில்லை; அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?

உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளர்கின்றனவென்று கவனித்துப் பாருங்கள்; அவை உழைப்பதுமில்லை, நூற்பதுமில்லை.

என்றாலும் சாலோமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அற்ப விசுவாசிகளே! இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன்

இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?

ஆகையால் எதை உண்போம், எதை குடிப்போம், எதை உடுப்போமென்று கவலைப்படாதிருங்கள்.

(இவைகளை யெல்லாம் ஜென்டைல்ஸ் (அஞ்ஞானிகள்) நாடித் தேடுகிறார்கள்). இவையெல்லாம் உங்களுக்கு வேண்டியவை என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது, தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையதினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும். (மத்தேயு: 6)

ஏசுநாதரின் அமுதமொழி வீரவாசகம் இதுவே! இதைக்கொண்டே நாம் அன்பனைத் தொடர்ந்து பார்ப்போம். இத்திருவாக்கு எம்மட்டும் உண்மை யென்பதை யறிவோம்!

ஆசை, பற்று, அபிமானம், மூட்டை, முடிச்சு எதுவுமின்றி, அன்பன் வண்டியில் ஒரு மூலையில் தியானத்திலாழ்ந்துவிட்டான். நாளைக்கவலை யவனுக்கேது? எக்கவலையும் ஏது? அவன் யார்? அவனை யார் நடத்திச் செல்வது? தோன்றாத் துணையான ஜோதிமலையன்றோ அவனை அன்பிலணைத்துக்கொண்டு செல்கின்றது! "அருணசல சிவ! அருணசல சிவ!" இதுவே நினைப்பு. விண்ணில் சுதந்தரமாகச்செல்லும் வானம்பாடிபோல, ஞானவிண்ணிற்

பறந்து செல்கின்றான் அன்பன்! ஊர்க்குருவிக்கு ஊட்டு வோன் யார்? அல்லிக்கு ஆடையுடுத்துவோன் யார்? அரசனின் பொன்னணியேனும் அவ்வளவு கம்பீரமுற்றிருக்கிறதா? எல்லாம் பரமாத்மாவான பரமபிதாவன்றோ தனதிச்சைப்படி செய்கிறான். "அவன் செயல் நடக்கட்டும்" என்றே அன்பன் தியானத்தமர்ந்தான். எண்ணுவோர் நலத்தை யிறைவனே புரிவான்!

அன்பனுக்கருகிலிருக்கும் பிரயாணிகள் மூட்டையும், பெட்டியும், கச்சந்திகளுஞ் சூழ, என்னென்னவோ பேசுகின்றனர். வண்டி செல்லும் வழியே பசுங்காட்சிகள் எத்தனையோ தென்படுகின்றன. ஒன்றையுங் காணான்! அந்திமாலையில் வீடடைந்த சிட்டுக்குருவிபோல இஞ் ஞானப்புள் அமர்ந்துள்ளது. தான் முன்னே படித்த திண்டுக்கல் கோட்டையைக் கூடக் காணான்! அகத்தை நோக்குவோன் புறத்தை விரும்பான்! வண்டியில் ஒரு தாடி நரைத்து வயது சென்ற இஸ்லாமிய மௌல்வி, மகான்களின் வரலாறு, உபதேசங்களைப்பற்றிப் பிரயாணிகளுக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார். பக்கத்தில் சுருட்டுப்படலமும், சீட்டுக்கச்சேரியும், வம்பும், வீணுமின்றி இத்தகைய நல்லுரைகளும் நற்சேர்க்கையும் இருக்கப் பெற்றதும், அருணாசலன் செயலே! ஆனால், அவ்வுரைகளைக்கூடக் கவனியாது இருவினையொப்பும் மலபரிபாகமும் பெற்ற அன்பன் தன்னையே உள்ளே பார்த்துக்கொண்டு, நிஷ்ப்ரபஞ்சனாயிருக்கிறான்! வண்டிச்சீட்டில் எழுதிய ஊர் வருமட்டும் அப்படியே யிருப்பான்! திண்டிவனமே சென்றிருப்பான்; பிறரைக் கேட்கவும் கூச்சம்; ஆதலின் அப்பனே இங்குந் துணை புரிகிறான்.

கதை சொல்லிக்கொண்டிருக்கும் மௌல்வி திடீரென்று இந்த அதிசய அந்தண வழகனைக் காண்கிறான் :—

மௌல்வி :—சுவாமி ! எங்கு செல்லுவது ?

அன்பன் :—திருவண்ணாமலை.

மௌல்வி :—நானும் அங்கேயே செல்கிறேன்.

அன்பன் :—என்ன ! திருவண்ணாமலைக்கா ?

மௌல்வி :—இல்லை ; அதற்கடுத்த நிலயத்திற்கு.

அன்பன் :—அது எது ?

மௌல்வி :—திருக்கோயிலூர்.

அன்பன் :—என்ன ! வண்டி திருவண்ணாமலைக்கும் போகிறதா ? ஆ !

மௌல்வி :—விநோதமா யிருக்கிறீரே ! திருவண்ணாமலைக்கே வண்டி செல்கிறது. ஆனால் நீர் எதற்குச் சீட்டு வாங்கினீர் !

அன்பன் :—திண்டிவனம்.

மௌல்வி:—ஐயே ! நீர் திண்டிவனஞ் செல்லவேண்டுவதே யில்லையே ! நாம் விழுப்புரத்திலிறங்கித் திருவண்ணாமலைக்கும் திருக்கோயிலூருக்கும் வண்டி மாறவேண்டும்.

......................தோன்றாத் துணையே அந்த இஸ்லாமியப் பெரியோரின் மூலம் இச் செய்தியை, உலகியல் பறியாத பாலனுக்கு அறிவித்தது. அதை யறிந்துகொண்டு மீண்டுந் தனக்குள்ளே ஆழ்ந்தான். பசி தாகமும் மறந்தான். திருச்சி ஜங்ஷனில் பசியெடுக்க அரையணாவுக்கு இரண்டு பேரிப்பழம் வாங்கி ஒன்றைச் சாப்பிட்டவுடன் பசி யடங்கிவிட்டது. இதுவும் அதிசயமே! இரண்டுவேளை சாப்

பாடு, பழையது, இடைவேளை யாதாயினும் - இவ்வளவும் சாப்பிடும் வாலிபனுக்கு ஒரு பழத்தில் பசியடங்கியது வியப்பே! பைபிள் மொழிவது சத்தியம்:—

"I am the bread of life; He that cometh to me shall never *hunger*; He that believeth me shall never *thirst*."

"நானே ஆவிக்குணவு (சேதன வுணவு)! என்னிடம் வருவோன் பசியால் வருந்தான்; என்னை நம்பியோன் தாகத்தால் தவியான்" என்று கூறும் திருவாக்கிற் கிணங்க, அப்பனிடம் விரைந்துகொண்டிருக்கும் அன்பனுக்கு மனப்பசி, நசைப்பசி யொன்றுமில்லை; வயிற்றுப் பசியும் ஒரு பழத்துடன் அடங்கிவிட்டது. வாசி யடங்கினால் வயிறுமடங்கும். உறக்கமும் இல்லை. விழிப்பே யுறக்கம்; உறக்கமே விழிப்பு.

"அஞ்சு மடங்கி அறிவோ டிருந்தபின்
றுஞ்சுவ தில்லை யுடம்பு."

ஆற்றொழுக்காகத் தியானம் சென்றுகொண்டிருக்கிறது. "அத்தைத் தின்று அங்கே யிருக்கும்" நிலைக்கன்றோ அன்பனின் ஜீவநதி அமைதியாக விரைகிறது!

விழுப்புரம் வந்தது. இறங்கினான்; வழி நாடினான். வேறொருவரைக் கேட்கவும் கூச்சம்; ஆண்டவன் விட்டது வழியெனத் துணிந்து நடந்தான். வழிகாட்டித் தூண்களில் "மாம்பழப்பட்டு" என்றெழுதி யிருந்தது; திருவண்ணாமலையைக் காணோம். பசியைத் தணிக்க உண்டிச்சாலைக்குட் புகுந்தான். சாப்பாடு நண்பகலில் தான் கிடைக்குமெனக் கடைக்காரன் சொன்னான். அது

வும் சரிதானென்று தன்னுள்ளே யூறும் அமுதவுணவை யருந்தி சமாதியில் ஊன்றினான். மதியத்தில் சாப்பாடு ஆனது; கடைக்காரன் இந்த அதிசய வாலிபனை, பால் வடியும் அருள்முகமும், கார்குழலும், ஒளிக்கண்ணும், காதில் தங்கக்கடுக்கனு மிலகும் இவ்வழகனைக் கண்டு வியந்தான்.

கடைக்காரன் :—அப்பா! உன்னிடம் எவ்வளவு இருக்கிறது?

அன்பன் :—இரண்டரை யணா.

கடைக்காரன் :—நீயே யதை வைத்துக்கொள்.

இது அப்பனின் மற்றொரு லீலை: அந்த $2\frac{1}{2}$-அணா சாப்பாட்டிற்கும் போதாது; அதையும் கடைக்காரன் வாங்கிக்கொண்டிருந்தால் மாம்பழப்பட்டிற்குத் தநயன் நடக்கவன்றோ நேரிடும்! ஆதலின் தன் கருணையை மீண்டும் ஆண்டவன் காட்டினான்!

அன்பன் 2 - அணாவுக்கு சீட்டு வாங்கி ஆவிரதத்தில் அதே மாலை மாம்பழப்பட்டு வந்தான். அங்கிருந்து திரு வண்ணாமலைக்கு நடந்து செல்லவே துணிந்தான். நெடுந் தூரம் நடந்தறியாத சேயடிகளால் வெய்யிலில் 10-மைல் நடந்து, அறையணிநல்லூரைச் சேர்ந்தான். அங்கு ஒரு மலையும் கோயிலுந் தென்பட்டது. கோயில் வாசலில் காத்திருந்தான்; கதவு திறந்தது; உள்ளே புகுந்தான்; ஒரு விளக்கு மினுக்கிடும் மண்டபத்தில் தியானத்தில் ஆழ்ந்தான்! ஒரு அதிசயம் நடந்தது! பளிச்சேன வொரு ஜோதி எங்கும் நிறைந்த காட்சியைக் கண்டான். மனோ லயமடைந்த விஞ்ஞானிகளுக்கு இந்த ஜோதி கண்முடி

யிருக்கும்போது காண்பதுண்டு. எனினும், இப்படிப் பளிச்சிட்டு மறைந்தது உள்ளே அசலமாயிருக்கும் அருணன், ஆன்மாவான அருணாசலத்தின் ஜோதியே! "மைந்தனே, நான் இருக்கிறேன்; பயப்படாதே! உன்னை நடத்தி என் வீட்டிற்குக் கொண்டுவருகிறேன்" என்பதற் கறிகுறியாகவே அந்த ஜோதி யிலங்கி மறைந்தது போலும்! அன்பன் அதிசயித்தான்; கர்ப்பக்ருகத்தை நோக்கினான்: அங்கு அத்தகைய வொளியில்லை; விக்ரகமும் அப்படியே கல்லாயிருந்தது. மீண்டும் தனக்குள்ளே யாழ்ந்தான்! அசைவற்றிருந்தான். "யாரது மண்டபத்தில்?" என்று கோயில் சுயம்பாகி கூவினான். "வெளியிற் செல், பூட்டவேண்டும்" என்றான். அன்பன் சிறிது அன்னம் கேட்டான். "இங்கே சாப்பாடொன்றுமில்லை" என்று கறாராயுரைத்தான் சுயம்பாகி. "நான் இங்கே தங்கியிருக்கட்டுமோ?" என்றான் அன்பன். "முடியவே முடியாது; இங்கு ஒருவரையும் தங்கவிடுவதில்லை" என்று வெட்டொன்று துண்டிரண்டாய்ப் பேசினான் சுயம்பாகி. இதுவும் அருணையப்பன் சோதனையே! அவனே அன்பனைக் கடுந்தவத்திற்குப் பயிற்றுகிறான்! "அன்பனே, ஒரு கட்டிற்குட்பட்ட இடம் உனக்கெதற்கு? சுதந்தரமான இடத்திலிரு; வந்ததை யுண்ணு; ஒருவரையும் கேட்காதே. ஆண்டவன் நான் இருக்கிறேன்; உன் பசி என் பசி" என்பதுபோ லிருந்தது அந்த சந்தர்ப்பம்.

அன்பன் அவருடன் ஆறு பர்லாங்குகள் (சிறுகல்) நடந்து கீழுருக்கு வந்தான்; அங்கு வீரட்டேச்வரர் ஆலயம் புகுந்தான்; பட்டர் பூஜை செய்யத் தொடங்கினர்; அன்பனும் தியானமலரால் இதயக்கோயிலானை வழிபட

உள்ளே ஆழ்ந்துவிட்டான். பூஜை முடிந்ததும், பட்டர் எழுப்பினர். அன்பன் சிறிது உணவு கேட்டான்; பார்ப்பனன் மறுத்தான். பக்கத்திலிருந்த மேளகாரன் இந்த சுத்தான்மாவை நோக்கினன்; "என் பங்கை இவருக்குக் கோடுத்துவிடுங்க ஐயா" என்று பரிந்து சொன்னன். சாதம் கிடைத்தது. இதுவும் அண்ணாமலையான் லீலையே! "மைந்தனே, நீ துறவி; எனக்காக அனைத்தையும் நீத்தவன்; உனக்கு ஜாதிஸமயவேற்றுமை யில்லை; பிராமணனிட மில்லாத இரக்கத்தையும் அன்பையும் ஒரு மேளகாரனிடம் கண்டாயன்றே! அன்பே நான்! எங்கு இரக்கமுள்ளதோ அங்கு நானுள்ளேன்; உனக்கு யார் உணவு கொடுத்தாலும் பசிக்குச் சாப்பிடு" என்று அண்ணாமலையார் மைந்தனுக்குப் புகட்டினர் போலும்! "என்னை நம்பிய அன்பனைப் பட்டினிபோடமாட்டேன்" என்று முன்னே துணிவுறுத்தினர்போலும்! சாதத்தை யெடுத்துக்கொண்டு அன்பன் அருகிலுள்ள ஒரு சாஸ்திரியார் வீடு சென்று தாகத்திற்குக் கேட்டான். இரவு கூ-மணியிருக்கும்; தண்ணீர் கொணர்வதற்குள் உள்ளுறங்கி அத்தூக்கத்துடனேயே, தன் மறதியாய் நடந்து வீழ்ந்துவிட்டான் ஐயன். விழித்துப் பார்க்கையில் முன்னே அவன் நின்ற விடத்திலே யின்றித் தள்ளியே வீழ்ந்திருக்கிறுன்; சுற்றி ஜனங்கள் கூடிவிட்டனர்; இவ்வழகனின் செயலை அதிசயித்தனர். பின்பு கீழே சிதறிவிட்ட அன்னத்துடன் சிறிது நீரருந்தித் தன்னுள் ஆழ்ந்து விட்டான்!

அடுத்த நாள் (31-8-1896) கோகுலாஷ்டமி, கண்ணன் பிறந்த நாள். திருவண்ணாமலை இன்னும் உ0-மைல் இருக்கிறது; பசி தாகம் மேலிட்டது. வண்டியிற் செல்

வோமெனில் பணமில்லை ; உடனே தன் காதிலிருந்த கடுக்கனை அடகுவைத்துப் பணம்பெற்றுச் செல்ல வுறுதி பூண்டான். உள் விவகாரஞ் செய்பவன் வெளி விவகாரமறியான். ஒருவீட்டிற்குச் சென்றான் ; அதன் தலைவர் முத்துக் கிருஷ்ண பாகவதர். பசி யென்றான் ; அன்பனை பாகவதர் உள்ளே யனுப்பிச் சாப்பிடச் சொன்னார். இல்லக்கிழத்தி, கிருஷ்ணஜயந்தி யன்று கோபாலனைப் போலவே வந்த இந்தத் தேஜஸ்வியை இன்பமாக ஆதரித்து இலைநிறைய உணவிட்டாள். அன்பன் ஒரு பிடி சாப்பிட்டதும் வயிறு நிரம்பிவிட்டது! "மைந்த ! நீ பசி தாகத்தைப் பொறுத்து வெல்லவேண்டும் ; நித்யசேதநன் நீ ! உனக்குப் பசியில்லை ; நானன்றோ உன்னுள் நிறைந்துள்ளேன் ; இச் சிறுபிடி யன்னம் உன் பசியை நீக்கவில்லை ; என்றும் நிறைவான நான் உன்னுள்ளே சந்துஷ்டியாக விருப்பதனால்தான் உன் பசி நீங்கிற்று; என்னருளே யுனக்குணவு" என்று அருணாசலன் நினைப்புறுத்துகிறான்.

பையன் பாகவதரிடம் "புரைதீர்ந்த நன்மை பயக்கும்" ஒரு வாய்மை சொன்னான்.

"என் மூட்டை தவறிவிட்டது ; ஊர் செல்லப் பணமில்லை; இந்தக் கடுக்கனை வைத்துக்கொண்டு ரூ. ௪ தந்தால் ஊர்போய்ச் சேர்வேன்" என்றான். பாகவதர் கடுக்கனைப் பார்த்தார் ; தங்கக் கடுக்கன் ; நல்ல நீரோட்ட முள்ள இரத்தினம் பொருந்தியது ; ரூ. ௨0 மதிக்கலாம் ; ரூ. ௪ தாராளமாகக் கொடுத்துவிடலாமென்று ரூ. ௪ கொடுத்துக் கடுக்கனை அடகுபெற்று, பிறகு மீட்பதற்காகத் தன் விலாசத்தையும் கொடுத்தார். அதிதிதேவனை வழிபடுதலில் மிகவும் சிரத்தையுள்ள வீட்டன்னை மத்யானம்

நல்லவுண வளித்து அனுப்பும்போது, கிருஷ்ண நிவேதன மாகுமுன்பே இந்த ஞானக்கண்ணனுக்கு இனிய பக்ஷணங் களை ஒரு பொட்டணங் கட்டிக்கொடுத்தனுப்பினார். கடுக் கனை மீட்க வருவதாக அன்பன் உரைத்து மீளாவாளாய்ச் சென்றான்; ஆனால், அப்புறம் போனதும் சீட்டைக்கிழித் தெறிந்துவிட்டான். அன்பன் அண்ணாமலையைக் காதலித் துச் சென்றானேயொழிய அடகு வியாபாரத்தைச் சிறி தும் கருதவில்லை! இரவு வண்டி நிலயத்திலுறங்கி, காலை (1-9-1896) ச-அணாவுக்குச் சீட்டுவாங்கி வண்டியேறி, தன் அப்பன் அருணாசலேசனுடைய திருமாளிகைக்குக் கடி திற் சென்றடைந்தான்! அன்பனின் அண்ணாமலை யாத்தி ரைக்குச் சைதன்யர் யாத்திரையையே ஒப்பிடலாம்; அண்ணாமலையாரை அன்பன் தரிசித்ததும் சைதன்யர் ஜகந்நாதனைத் தரிசித்த ஆவேசக்காட்சியே போன்றது. ஆனால், அன்பன் புறச்சேட்டைகளால் ஆடுவதும் பாடுவ தும் ஆவேசங்கொண் டாடுவதுமின்றி, எடுத்ததுமே மிக வுன்னதமான பரபக்தி யெய்தப்பெற்றது, உலகிலேயே இணையற்ற விசித்தியாகும்; "ப்ராஜ்ஞர்கள், வாக்கை மனத் திலும், மனத்தை புத்தியிலும், புத்தியை ஆத்மாவிலும், அதை ப்ரஹ்மத்திலும் ஆழ்த்தவேண்டும்" என்னும் கடோபநிஷத்தின் அருள்வாக்கிற்கு இலக்காக அன்பன் அப்பன் வீட்டை யடைந்தான்.

நின்னை நினைக்க நினைக்கவுள் ளன்பு
நினைப்பை யுருக்குதையே!
உன்னை யுரைக்க வுரைக்கவுள் ளின்ப
* வுததி பெருகுதையே!

* உததி - கடல்.

உன்னை யுணர வுணர வுளச்சுக
மோங்கிப் பரவுதையே !

உன்னறி வென்னு ளொளிர வொளிர
வொளிமய மாகுதையே !

என்னைக் கரைக்கக் கரைக்கவுன் னன்பினி
லெல்லாமொன் ருகுதையே !

தன்னைக் கொடுக்கக் கொடுக்கச் சகஜ
ஸமாதி லயிக்குதையே !

உன்னைக் கலக்கவென் னுள்ளத்தி னுட்பொரு
ளுள்ளதங் குள்ளபடி

என்னைக் கலந்துகொண் டென்மயந் தன்மய
மென்பதைக் காட்டுதையே !

ஸ்ரீ ரமணவிஜயம்


பக்தவக்காண்டம் முற்றிற்று.

சுத்தானந்த பாரதியார் எழுதிய

# ஸ்ரீ ரமண விஜயம்

## ரு. யோகஸ்வராஜ்யக் காண்டம்

மலையினு மாண்பே! வானினும் விரிவே!
வனப்பினிற் சிரித்திடு வளமே!
அலைவறு சாந்த வருட்கடற் பெருக்கே!
யந்தரச் சுடர்களி னொளியே!
நிலைபெறு முதலே! முதற்பெரு நிலையே!
நிரதிச யானந்த வமுதே!
தலையுறு சகஜத் தன்மய வாழ்வே!
ஸச்சிதா னந்தனே சரணம்!



அச்சமது நீயென்றிங் கண்ணா மலையான்
உச்சிமலைத் கோண்டுள்ளோ வாழ்.

# ௩. யோகஸ்வராஜ்யக்காண்டம்.

## ௧௫. அருணாசலசிவம்.

“அத்ரிஜாருதம் ப்ருஹத்” (வேதம்)

“மலையினுண்மை மகத்து”

உலகெலாம் கோயில்; வானெலாம் கூரை; மீனெலாம் பூவணி; சூரியன் கர்ப்பூரதீபாராதனை; தென்றல் விசிறி; மேகப்படலங்கள் விதவித மாலைகள்; மாசற்ற தெள்ளருவி அபிடேக நீர்; ஆத்மஞானம் போல வுயர்ந்தது; தன்மயத்திலூன்றிய யோகியர்போல வுறுதியாக நிச்சல நித்திய நிர்விகல்பமாய் சுத்த சாந்தத்துடன் ஒளிரும் இச்சிவ வடிவே அருணகிரி; அறவோர், துறவோர், அன்பரனைவர்க்கும் சாந்தநிறைவென்னும் மூலிகையை இதுவே தாங்கி நிற்கிறது! இங்கு வந்தவர் உடனே இதையே காண்பர்; கண்டதும், “நானார் தெரியுமா? நீ யார் என விசாரி; நானாரென அறிவாய்! இங்கே வா. யோகநிதி என்னிடமுள்ளது; என் குகைகளில் சத்திப்பொருளுள்ளது; கணக்கிலா நூல்களால் உனக்கு சாந்த மெய்தாது! வெளி விஷயாசக்திகளாலும், பேதவுலகப்பற்றுக்களாலும், கட்டத்திற் சலிக்கும் கருத்தாலும், ஜாதி, ஸமயம், சாஸ்திரம், ஆசாரம் இவற்றாலும் உனக்கு உண்மை புலப்படாது; உபதேசம், ஜபம், ஓமம், பூஜை, சரியை, கிரியை, தலயாத்

திரை எதுவும் வேண்டாம்! என்னைப்பார்! உனது உள்ள மலரைப் பற்றுக்களினின்று விலக்கி என்னடியில் வை. என் இதயமான குகைக்குள் இரு; இதோ உள்ள பொருள் உள்ளபடி யுள்ளேன்! என்னை யறிவதே உயர்ந்த ஸித்தி; நானே சங்கரன், அருணகிரியோகி; என்னோடு ஏகமாயிரு! நான் நீ யெனப்பார்! "சிவோஹம், சுத்தோஹம்" என்று தியானி! ஞானக்கண்ணாற் பார்; உன்னை நானாகவே காண்பாய். அனைத்தையும் எனது தன்மயத்தின் சின்மயமாகவே பார்ப்பாய். மனத்தை மத்தைப்போலச் சலிக்கவிடாதே. அதைத் தன்னிலையில் வைத்து நிச்சலமாயிரு. உலகின் சுகதுக்க நாடகங்களுக்குக் கேவலம் சாக்ஷியாயிரு. நிஷ்ப்ரபஞ்சத்தை நினை; சித்தம் நிலை நிற்பதே முக்தி; அச்சம், இச்சை இரண்டையும் விலக்கு; ஞானத்தில் ஊக்கங்கொள்; இங்கே வா; உனக்கு சாந்தமுள்ளது" என்று அண்ணாமலை பேசாமற்பேசி முன்னிற்கையில் எவன் மனந்தான் இந்த கம்பீரமான காட்சியில் மீளாவாளாய் ஈடுபடாது! இது கல்லல்ல; இது அன்பர் மனதை ஆத்மானந்தத்திற் கிழுக்கும் காந்தசக்தி!

ஏதுபொரு ளேங்குள தேமக்கருகி லாமோ?
ஜோதியென முதலகிற் றோண்டரலை கின்றார்!
ஆதியரு ணாசல மமர்ந்துள மமர்ந்தா
லீதுபொரு ளீதுபொரு ளென்றுவகை யாவார்!

அரியும் அயனும் இதன் அடிமுடி காணாராயினர் என்னும் ஐதிக ஸமயவாதக் கதையை விடுத்துவிடுவோம்! தத்துவத்தையே பற்றிச் செல்வோம். ஒரே பொருள் - தகராகாயப் பொருள் - அனைத்துமாயிருக்கிறது; ஆகா

சம் ப்ரஹ்ம சரீரம்; அது சக்தி; ஐந்தொழில்களையும் அதுவே ஐந்து சின்மயசக்தியாகி நடத்துகிறது. அகந்தையால் தன்மயப் பொருளை யறியாத சிருஷ்டி சக்தியும், ஸ்திதிசக்தியும் தான்றானே பெரிதெனத் தருக்கின: முடிவில் தன்மயமான ஜோதிப்பொருள் விண்ணும் மண்ணுமளாவி நிற்கையில் "நான்" என்னும் அகங்காரத்தால் மனத்திற் கதிபதியான ஸ்திதிசக்தி அதன் ஆழத்தை, அடியைக் காண முடிந்திலது; அந்தக்கரணத்தினடியிற் சென்றுசென்று கண்டுகண்டு, கண்டனவற்றிலெல்லாம் உண்மை புலப்படாது தோற்று, பரம்பொருள் முன் வணங்கியது; அஜபாமந்திரமென்னும் அன்னத்திலேறி, நாமரூபங்களைப் படைக்கும் வாக்கு ஆஜ்ஞாசக்கரத்திற் குயர்ந்துசென்றுங் காணாது, அங்கு மனச்சாக்ஷி "யான் காணவில்லை" யென்றுரைத்தும், கண்டேனெனப் பொய் சொல்லியது; கண்டதும் சொன்னதும் பொய்! கண்டனவெலாம் "அல்ல" என்று கண்டனை செய்து, அகங்காரப்பாழற்று, மிஞ்சிய மனோலயமே மெய்; ஆண்டே அருணாசலம் நிச்சலமாய் நிர்விகாரமா யுள்ளது. இதுவே ஜோதிர்லிங்கத்தின் உண்மை; இதை நினைக்கவே முக்தி பயக்கும்; இத்தூலமே குன்று; மனமே அகன்ற பாத்திரம்; கடவுளுறவே திரி; தைலதாரைபோன்ற தியானமே நெய்; அறிவே சுடர்; மடமையிருள் ஒழிய இத்தீபத்தை உள்ளே தானாக நின்றிலகக் காண்பதே தீபதரிசனம்; கர்ப்பூரஜோதிபோல முற்றும் சுடரெரிந்து அருளான் தகராகாயத்தில் எச்சமின்றிக்கலப்பதே கர்ப்பூரதரிசனம். தெய்வசிற்சக்தியின் இச்சைச்சக்கரத்திலேயே ஜீவகோடிகள் சுழல்கின்றன; இதயவெளிக்குள், அசலமான ஜோதி


வடிவாயிலங்கும் தன்மயக்குன்றை யறிந்து, அதன் ஸந்நிதானப்பெருமையின் அனந்த சின்மயத்தைப்பற்றி இயங்குவதே கிரிப்ரதக்ஷிணம். மலைபோன்று உறுதியாக, உள்ள பொருளே தானாக நிலைத்து, உடலெல்லாம் அதன் ஆலயமாய், நடையெல்லாம் பிரதக்ஷிணமாய், வாழ்வெல்லாம் வழிபாடாய், நினைப்பெல்லாம் தியானமாய், துயிலெல்லாம் ஸமாதியாய், பேச்செல்லாம் மோனமந்திரமாய் நிற்பதே அருணாசலயோகியை அறிவதன் வழி. அருட்பெருஞ்சோதியான அருணாசலம் பந்தமற்று, மோனமாக, உள்ளொளியாய், சலிக்காது நிலைத்திருப்பதையே பொருளாகக் கொண்டது.

இனித் தூலமாகத் தோன்றும் திருவண்ணாமலையை நோக்குவோம். இதற்கு அருணாத்ரி, சோணாசலம், சிவலோகம், சுத்தநகரம் முதலிய காரணப்பெயர்களுள்ளன. கர்மருணங்களைத் தீர்க்கவல்லதால் இதற்கு 'அருணகிரி' எனப் பெயர் வந்தது.

இதன் வலத்தில் தென்பெண்ணையும், இடத்தில் செய்யாறும்; இடையில் கமலநதியும் இடை, பிங்கலை, சுழிமுனை நாடிகள் போலச் செல்கின்றன. இம் மலை எட்டுக்கோணங்களாய் அட்டமூர்த்திவடிவாக சுயம்புவாக விளங்குகின்றது; இத்தலத்தைத் திருமுறைகளும் புராணங்களும் மிகச் சிறப்பித்துக் கூறியுள்ளன. பல பெரியோர்கள் இன்றும் இங்கெழுந்தருளி ஜீவன்முக்தராக விளங்குகின்றனர்.

## தலப்பெருமை.

ஈண்டுள்ள அழகிற் சிறந்த பவளக்குன்றில், கௌதம முனிவர் ஆசிரமமமைத்து சிவபூஜை செய்தார். முன்





அருணகிரி யன்பி னடைந்தக்கால் ஞான
மொருகணத்திற் கூடு மொளிர்ந்து

னொரு காலம் உமாதேவியார் சிவபெருமானின் திருக் கண்களைப் புதைத்தார். உலகெலாம் இருண்டது; அப்போது தமது நெற்றிக்கண்ணைத் திறந்து உலகை ஒளிர்ப்பித்தார் சிவபிரான். சிவபிரான் கண்ணைப் புதைத்து உலகிற்கு இடரீந்த பாவத்திற்காகக் காஞ்சிபுரம் வந்த உமாதேவியார் பின்னர் பவளக்குன்றடைந்து கௌதம முனிவரிடம் அண்ணாமலையின் பெருமை கேட்டுத் தவமியற்றி சிவனின் இடப்பாகத்தைப் பெற்று, அர்த்தநாரீசுரரானார். முடமான பங்குமுனிவர் நகர்ந்து நகர்ந்து சோணதீர்த்தத்தைக் குடிக்கச் சென்று அருணாசலேசனருளால் கால் முளைக்கப்பெற்றார். ஒரு முறை ப்ரதர்த்தனன் என்ற வடநாட்டரசன் இங்கு வந்து சிவதரிசனத்தின்போது ஒரு வேசையிடம் மோகங் கொண்டதால் குரங்குமுகம் பெற்றான். பிறகு அருணாசலன்ர சித்தசுத்தியுடன் வழிபட்டு மனிதமுகம் பெற்றான். ஒரு காலத்தில் வஜ்ராங்கதன் என்னும் செங்கோல் வழுதி குதிரையேறி, ஒரு மானைத் துரத்தி, இம்மலைப் பாங்கர் வந்தான். மிருகங்களிரண்டும் வீழ்ந்திறந்தன. அரசனும் சோர்ந்து வீழ்ந்தனன். மிருகங்களின் ஆவி விண்ணிடையே வித்யாதரராகி நின்று, இம்மலையை வாகனத்தின்மீது வலம்வந்ததால் தாம் இடரடைந்ததையும், அருணாசலத்தின் மகத்துவத்தையுங் கூறவே, மன்னன் தன் மகன் இரத்திணங்கத பாண்டியனுக்குப் பட்டங்கட்டி, அருணாசலத்திற்கே வந்து, ஆலயத்திருப்பணிகளாற்றி, பவளக்குன்றடியே தவச்சாலை யமைத்து, நாடோறும் கிரிப்ரதக்ஷிணம்செய்து அருணாசலன் அருளுக்காளானான்.


இதை, ஏறக்குறைய 600-ஆண்டுகளுக்கு முன் வல்லாளராஜனும், கி-பி 1450-ல் பிரவுடதேவராஜனும், 1529-ல் கிருஷ்ணதேவராயரும் ஆண்டுவந்தனர். வல்லாள ராஜன் பிள்ளைப்பேறின்றிக் கவலையுற்றான்; அவன் சிவனடியாருக்குக் கேட்ட பொருள்களை உடனே கொடுத்துவந்தான். ஒருநாள் தனது பூதகணங்களைக் கணிகையர் வீடுகளிலெல்லாம் நிரம்ப அனுப்பி, சிவபிரான் தவவேடம் பூண்டு வந்து, "ஒரு கணிகைமாதைத் தருவாயாக" என்று சோதித்தார். ஒருவரும் கிட்டவில்லை; முடிவில் தனது தருமபத்தினி சல்லமாதேவியையே தர, பரமசிவன் அவள் பக்கத்தில் ஒரு ஜோதிக் குழந்தையாயினன்.

## அருணகிரிநாதர்.

இத்தலத்தில் செந்தமிழ்ச்சந்தக்குயிலான அருணகிரிநாதர் விளங்கினார். குமரனுக் கன்புசெய்த முத்து என்னும் உருத்திரகணிகையிடம் பிறந்து, இளம்பருவத்திலேயே தாயை இழந்தார். தாய், இவர் தமக்கையான ஆதி என்பவளிடம், "இக்குழந்தைக்கு வேண்டுவனவெல்லாந் தருக" என்று ஒப்புவித்து விண்ணேகினள். அருணகிரிநாதர் இளமையில் விலைமாதர் முயக்கத்திற் கெட்டழிந்து, பெருநோய்கொண்டு, செல்வஞ்சிதறி, பிணியும் வறுமையுமுற்றார். இன்னும் காமப்பிணி விடவில்லை. ஒரு நாள் தமது தமக்கையிடம் பொருள்கேட்டார். அவள் "பொருளில்லை; என்னிடம் வேண்டுமெனில் உனது காமநோயைத் தணித்துக்கொள்" என்றனள். அருணகிரியார் வெட்கினார்; நொந்தார்; பளிச்செனத் தம் பாழும் வினையை நினைந்து வருந்தி, வல்லாளராஜன் கோபுரத்தின்மீதேறி



அருணகிரி நாதரை யாட்கொண்ட செவ்வேள்
முருகா வேளைப்பார் முகம்.



வருவா யருணகிரி வாக்கிற்கு வந்த

முருகா! முதல்வா! சரண்.

குமரனைத் தியானித்துத் தம் பிழைகளைப் பொறுத்து ஆட்கொள்ளும்படி வேண்டிக் கீழே குதித்துவிட்டார். உடனே ஒரு ஜோதியைக் கண்டார். முருகன் முன்னின்று சக்ஷுதீக்ஷை செய்து, ஷடக்ஷரத்தை யுபதேசித்து, ஜபமணிகொடுத்து, தன தன்பிற் சிறந்த அவருடைய தாயான "முத்து" என்பவளை முதல் வைத்து "முத்தைத்தரு பத்தி" என அடியெடுத்துப் பாடித் தொண்டாற்றச் சொல்லி மறைந்தான்.

அன்றுமுதல் நோயகன்று அன்பு மேலிட்டு அருணகிரிநாதர் சிவவேடந்தாங்கி, உலகமாயையின் வீண்மையையும், ஷண்முகனின் பெருமையையும் காட்டி, தேனும் பாகும் தெவிட்டும் இனிய திருப்புகழையும், கந்தரநுபூதியென்னும் மந்திர நூலையும், கந்தரலங்காரம், கந்தரந்தாதி முதலிய பல நூல்களையும் அமுதத்தமிழில் இயற்றியருளினார். தமக்கு உண்மையுணர்வு வரச்செய்த ஆதியை வணங்கினார். பிறகு கணிகையர் எத்துணை முயன்றும் கடவுளுறுதியால் காமப்பேய்களைக் கட்டொழித்தார். அக் காலத்தில் கல்விச்செருக்கால், தமக்குத்தோற்ற வித்வான்களின் காதைக் கொய்துவந்த வில்லிபுத்தூரரை, தாம் பாடிய கந்தரந்தாதியில் "திதத்தத்தத்" என்னும் ருச-ம் பாட்டால் வென்று, அவருடைய மமதைச்செயலை விடும்படி செய்தார். சம்பந்தாண்டான் என்ற சமணக் கவி, அந்நாளில் ஆண்ட பிரவுடதேவனென்னும் அரசனை வசப்படுத்தி இவருடன் புகழுக்குப் போட்டிபோட்டான். முதன் முறை முருகனைக் காட்ட வேண்டிட, அரசனுக்கு அருணகிரிநாதர் "அதலசேடனாராட" என்னும் திருப்புகழால் ஒரு கம்பத்தில் முருகனைத்தரிசிப்பித்தார். இம்

முருகதரிசனங் கண்டவிடத்தில், 'கம்பத்திளையனர்' என்னும் மூர்த்தியுடன் அரசன் இன்றும் விளங்கும் ஒருகோயிலைக் கட்டினன். பின்னே அந்த சம்பந்தாண்டான் அரசனைத்தூண்டி, அருணகிரிநாதரைப் பாரிஜாதமலர் கொண்டுவரச் சொன்னன். அருணகிரிநாதர் தம்முடலைக் கோபுரத்தின்மேலே வைத்துவிட்டு, கிளியுடல் தாங்கிப் பாரிஜாத மலரைக் கொண்டுவந்து அரசனிடந் தந்தார். ஆனல் அதற்குள் அவருடைய உடலைத்தேடிப் பகைவன் எரித்துவிட்டான்; கிளிவடிவாகவே அருணகிரிநாதர் கோபுரத்திலிருந்தார்; சிலர் திரிபுரசுந்தரியின் கையிலமர்ந்ததாகவும் சொல்வர். அருணகிரிநாதர் ஸமாதி மூலஸ்தானத்திற்கு மேற்புறம் அவருடைய உருவுடன் விளங்குகிறது.

குகைநமச்சிவாயர், விரூபாக்ஷமுனிவர், ஈசான ஞானதேசிகர் போன்ற பெரியோர் இதன்கண்ணுள்ள மலைக்குகைகளில் அருந்தவ மியற்றி, முக்தியடைந்துள்ளனர். ஸமீபத்தில் இதன்கண் விளங்கிய சேஷாத்ரி ஸ்வாமிகளை அனைவரும் அறிவர். இவர் வந்து நாலைந்து ஆண்டுகளுக்குப் பின்பு மஹர்ஷிகள் இங்கு வந்து ஸித்தி பெற்று விளங்கினர். அண்ணமலைமீது தனித்தவத்திற்கேற்ற பல குகைகள் ஞானப்பசியாளரை வாவென்று கூவி யழைக்கின்றன. கார்த்திகைதீபமும், கிரிப்ரதக்ஷிணமும் இத் தலத்தில் மிகச் சிறந்து கொண்டாடப்பட்டு, பல திசைகளிலிருந்தும் அன்பரை வருவிக்கின்றன. இத்தகைய சிவஸந்நிதிக்கு அன்பன் வந்தமர்ந்த வகையை இனி நோக்குவாம்.

பொருளுக் கொருபொருள்—வடிவானீர்!
புலனுக் கறிவரு—விரிவானீர்!


இருளுக் கிடர்தரு—சுடரானீர் !
இயல்பிற் றிரிவறு—பரமானீர் !
கருணைப் பொழிலிடை—யடியேனோர்
களிசிற் சுகமெனத்—திரியேனோ !
அருளுக் கமுதநற்—கடலானீர் !
அருணக் கிரிவளர்—குருநாதா !

## கசு. அப்பனே யருணாசலா !

"காந்த மிரும்புபோற் கவர்ந்தெனை விடாமற்
கலந்தெனோ டிருப்பா யருணாசலா !
சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் வடங்கச்
சும்மா பொருந்திடங் கருணாசலா !" (பகவான்)

அருணாசலசிவ ! அருணாசலசிவ ! அன்பன் வந்துவிட்டான் ! மைந்தன் வந்துவிட்டான் ! துன்முகி௵ ஆவணி௴ கிருஷ்ணபக்ஷ நவமி (1-9-1896) செவ்வாய்க்கிழமை (ஞானசம்பந்தர் பாண்டிநாட்டிற்குப் புறப்பட்ட கிழமை) காலை அன்பன், தனது மனத்திலொளிர்ந்து தன்னைக் காந்தமென ஈர்த்த அருணாசலத்தைக் கண்முன் கண்டான் ! நந்தன் சிதம்பரத்தைக் கண்டதுங் கொண்ட பேரானந்தங் கொண்டான். முன்னே சிவபக்தனான வல்லாளராஜனாற் கட்டப்பட்ட நான்கு கோபுரங்களையுடைய இரண்டாவது பிராகாரத்தைத் தாண்டினான் ! தவநிலைகளை ஒன்பது கோபுரங்களாகவும், பஞ்ச

கோசங்களே ஐந்து பிராகாரங்களாகவும், ஸஹஸ்ராரமே ஆயிரக்கால்மண்டபமாகவும், அதனிடையுள்ள அமுதமே சிவகங்கையாகவும், இதயகமலத்தில் பஞ்சகோசாதீத மாய் விளங்கும் பரமாத்மஜோதிவடிவே சிவலிங்கமாக வும், பராசக்தியே உண்ணுமுலையம்மையாகவும், இக் கோயிலுக்குப் பின்னே விண்ணளாவிய மலையே விஸ் வாத்மரூபமாகவும், அதைச் சுற்றி விண்ணளாவியுள்ள வுலகமே அகண்டாத்மஸ்வரூபமாகவுங் கொண்ட அண்ணா மலை யாலயத்தை யணுகினான்! அணுக அணுக, மனம் அணுவாய்த் தேய்ந்தொழிந்தது. தனது அன்புக் கனி யின் வரவை அருணாசலன் எதிர்பார்த்திருப்பதுபோலக் கதவுகளெல்லாம் திறந்திருந்தன. தனது தனியுபதேசத் திற்காக அனைத்தையும் தயார்செய்து, தனிமையையே (அப்பன்) காவல் வைத்திருந்தான். எப்போதும் கூட்ட முள்ள கோயில் அன்று ஏகாந்தமாயிருந்தது. நேராக அன்பன் தனது தந்தையொளிரும் கர்ப்பக்கிருகத்திற்கு சுதந்தரமாகச் சென்றான். அப்போது ஆலயத்திருப் பணிவேலை நடந்துகொண்டிருந்தது. இதுகாறும் உடலி லிருந்த வெப்பந்தணிந்து அமைதி யெய்தினான். ஆனந்தக் களிப்பு பொங்கிற்று! தன்னை முழுதும் அருணாசலேச னிற் கரைத்தான்! அன்பு பொங்கிற்று! அந்நிலையை அனுபவித்தே யறியவேண்டும். அப்போது அவனுடைய வுள்ளக்கிளர்ச்சி யுரைத்த தென்னே! "அப்பனே, உன் னுத்தரவுப்படி வந்தடைந்தேன்" எனத் தந்தையிடம் தன்னை ஒப்புவித்தான்! அப்போது அவனுடைய ஆர்வப் பெருக்கை யாரே யளப்பர்! அந்நிலையில் எவ்வாறு ஒரு மனப்பரிபக்குவம் உருகும்? காண்மின்!



கருணையப்பன் ஞானவொளிக் காட்சிப் பெருமா
னருணா சலனால யம்.

## ஓம் (அ-உ-ம்) அருணசலமாலை.

### (அ)

அப்பனே வந்த டைந்தேன் அருணசலா !
அன்னைபோ லாண்டு கோள்வாய் ,,
அனைத்தையு மறத்து றந்தேன் ,,
அன்புகொண் டோடி வந்தேன் ,,
அலைமனத் துன்னை வைத்தேன் ,,
அசலமாய் நின்று காப்பாய் ,,
அறியாத பால கன்யான் ,,
அறிவாகி யுள்ளி லங்காய் ,,
அருவுரு வான ஜோதி ,,
அகண்டசிற் சக்தி யாவாய் ,,
அறிவேதை யறியு மோதான் ,,
அதன்மய மாஞய் நீயே ,,
அந்தரத் தாழ்ந்து காண்பார் ,,
அனைத்திலு முன்னைக் காண்பார் ,,
அகமக மேன்றே னுள்ளே ,,
அம்பலக் கூத்து செய்வாய் ,,
அருளிஞ லறிய நிற்பாய் ,,
அமுதினில் வெண்ணெய் போன்ருய் ,,
அன்னிய மெண்ண வாழ்வே ,,
அமரவாழ் வாகு மென்ருய் ,, (கo)

### (உ)

உவந்துனை யுள்ளே கண்டோர் அருணசலா !
உலகெலாங் காண நின்ருய் ,,

உன்னையே தாமாய்க் காண்போர் அருணாசலா !
உளத்துளே நீயாய் நின்றாய் ,,

உன்சுட ரின்றிக் கண்கள் ,,
உண்மையைக் காண்ப தெங்கே ,,

உண்மையா யுறவு செய்வார் ,,
உன்மய மிலகி வாழ்வார் ,,

உளங்கவர் காந்த மானாய் ,,
உன்சுடர்ப் பூச்சி யானேன் ,,

உள்ளவா றுன்னை யென்னுள் ,,
உள்ளமாய்க் கண்டு ணர்ந்தேன் ,,

உதித்துழி யொடுங்கி விட்டேன் ,,
உன்னரு ளுண்டு வாழ்வேன் ,,

உலகொளிர் விளக்குக் கெல்லாம் ,,
ஒளியென விளங்கு கின்றாய் ,,

உண்மைநீ யறிவா யின்பாய் ,,
உலகெலாங் கோயில் கொண்டாய் ,,

உயிருல கிறைநீ யொன்றே ,,
உணர்த்திடுங் குருவு நீயே ,, (உ०)

(ம்)

மனக்குகை யிருத்தி யென்னை அருணாசலா !
மௌனோப தேசஞ் செய்தாய் ,,

மட்டிலா வின்ப வெள்ளம் ,,
மனக்கட லாக்கி விட்டாய் ,,

மருளுறு முலகை முற்றும் ,,
மறந்துனை நினைந்து வாழ்வேன் ,,

மயக்கேலா மொழிப்ப தற்கே அருணசலா!
மலைமருந் தாகி நின்றாய் ,,
மகனெனத் தடுத்தாட் கொண்டாய் ,,
மகனினு மன்பு பூண்டேன் ,,
மகிதல வுயிர்க ளெல்லாம் ,,
வளர்வதுன் னன்பி லன்றோ ,,
மயக்குறு மனப்பேய் சாக ,,
மந்திரம் மௌன மன்றோ ,,
மலரடி வீடு சேர்ந்தேன் ,,
மற்றொரு பற்று மில்லேன் ,,
மன்னுயி ருலக மெல்லாம் ,,
மங்கள மாக வாழ்க" ,, (உகு)

அருணசல ஓம் அருணசலா!

*அவ்வளவுதான்! மௌனோபதேசமாயிற்று! திரு நோக்கம், பரிசம், வாக்கு, பாவனை, நூல், யோகம் ஆகிய ஆறு தீக்கையும் ஒருநோக்கிலாயிற்று. உருவாகக் கண்டு அருவாக அறிந்து, அதை மறவாது அதிலேயே நிறைந் தான். அப்பன் பேசாதகாரியம் பேசினான். அன்பன் அடிபணிந்து வெளியே வந்தான்; அருளுக்கே தன்னை யூணாக்கினான்; தன்னறிவு தின்னிக்குத் தானே யுண வானான்; வாழ்வாறு மௌனானந்தக் கடலடைந்தது.*

"வேறுபடுஞ் சமயமெலாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா"

# கஎ. வீரத்துறவு

"புளிசேர் பழமானாற் போற்புறம்போ டுள்ளின்
முளைதானும் வேறாய் முளைபோய்த்—துளைமாண்ட
ஊசிக்குப் பாச மொழிந்ததுபோ லொப்பாருக்
காசைக்கே டானந்த மாம்"

அன்பர் ஹரஹரவென் றார்த்து வணங்குவதும், மலையைச் சுற்றிவரும் பக்தர் பரவசமாக அண்ணாமலையைக் கூவுவதும், தெய்வச் சுவைதரும் தேவாரமும் தென்றமிழ்த் திருப்புகழும், வேதமும் முழங்கும் புனிதநிலயமான கோயிலிலேயே இருந்துவிடத் தீர்மானித்தான் அன்பன். தன்னுள்ளே அகண்டத் தனிவெளியை யமைத்து சுதந்தரமானோன் எங்கிலும், கூட்டத்திலும், போர்முனையிலும் ஏகாந்தங் காண்பான்.

"ஆகாயம் நீங்காம லாடியது போலடங்கும்
ஏகாந்திக் கெங்கிருந்தா லென் ?"

அண்ணாமலையாலயம் தவத்திற்கு அரிய பல நிலயங்களை யுடைத்து. அத்தலமே தவத்தினருக்கெனவே அமைந்ததெனக் காண்கிறது. நந்தவனம், வாழைத்தோட்டம், கோபுரங்கள், விசாலமான மண்டபங்கள் எல்லாம் யோகத்தனிமைக்கு உரியனவாகவே யமைந்துள்ளன. அன்பன் ஆயிரக்கால் மண்டபத்தை யிருப்பிடமாகக் கொண்டான். ஸர்வஸங்கபரித்யாகஞ் செய்தான் ; ஸர்வா

ரம்ப பரித்யாகஞ் செய்தான். எல்லா எண்ணங்களையும் ஒழித்தான் ; தந்தையின் சிந்தையே தானுனான்.

## ஸந்யாஸம்

வந்தநாளே, அன்பன் ஐயங்குளத்திற்குச் சென்று கொண்டிருக்கும்போது கையில் கொண்டுவந்த தின் பண்டத்தை "இக்கட்டைக்கு இனிப்புப் பண்டம் எதற்கு ?" என்று சொல்லித் தண்ணீரில் எறிந்தான். திரும்பிக் கோயிலருகே வரும்போது, ஒருவர் அருகுற்று, "ஸ்வாமி, முடியெடுக்க வேண்டுமோ ?" என்றார். தந்தையின் கட்டளை யது வென்றெண்ணி, "ஆம்" என்றான் ஐயன். உடனே அவர் அன்பனை ஒரு நாவிதனிடம் அழைத்துச் சென்றார். தலை மழுங்கச் சிரைக்கப்பட்டது. அழகுக் கருங்கொடியே சுருண்டு விரிந்த தன் கூந்தலை அரைநொடியில் அழகன் அறுத்தெறிந்தான் ! ஆடையைக் கிழித்து ஒரு கோவணம் மட்டும் அணிந்து, மீதியைஅதில் முடிந்த பணத்துடன் (ரூ. 3-8-0, கடுக்கன் அடகுப்பணம்) வீசியெறிந்தான். ஜாதிச்சின்னமான பூணூலையும் அறுத்து வீசினான். மாயாசக்கிரத்தின் காரியமான தனுகரண புவன போகாதிகளை உதறித் தள்ளினான் ! தேகஸம்பந்தங்களை யெல்லாம் விலக்கியொழித்தான் ! கருவினுள் முட்டைக்கும், கல்லினுட் டேரைக்கும் எவன் விரும்பி யூட்டுகிறானோ அந்த ஸர்வசக்தனுக்கே தனது உணவுக் கவலையை யீந்தான். மண், மனை, தானியம், பாண்டம், துணைவர், நண்பர், உறவினர், வாகனம், பீடம், பாய், ஆடை, பணம், அபிமானம், புத்தகம், எழுத்து, படிப்பு, ஆசை, சிந்தை, ஜாதி, ஆசாரம், ஸமயம், பேச்சு அனைத்தையும்

பீடையென எள்ளித்தள்ளி ஸர்வசுதந்தர மடைந்தான். ஓடும் செம்பொன்னும் ஒன்ருகக் கண்டான்; வீடும் வேண்டா விழுச்செல்வம் பெற்ருன்.

“ பூவணை யாகி வானம் போருந்துமேற் கட்டி யாகித்
தீவம தாகி யிந்து செங்கதிர் வீசுங் காற்று
மேவுசா மரம தாகி விடுதலை மனைவி யாகிக்
கேவல மின்ப மாகிக் கிளர்ச்சியாய் நின்ருன் வேந்தன்.”

இதுவே நமது இளந்தவராஜனின் இருக்கை! தீரத்துற வென்னும் யோகஸிம்மாஸனம் ஏறித் தன்னரசாளத் தொடங்கிவிட்டான்.

“ மண்ணாதி சத்தாதி வாக்கு மனமாதி
கண்ணாதி நாதாந்தங் கண்டகன்ற—வுண்மை
தனையணுவேன் றேயுணர்த்துஞ் சார்பினையுங் கண்ட
வுனையறிவேன் றுள்ளே யுணர் ”

என்றவாறு அறிவாயமர்ந்தான்!

தசேந்திரியம், ஐம்பூதம், பஞ்சதன்மாத்திரைகள், நான்கு அந்தக்கரணங்கள், பஞ்சகோசங்கள், ஜீவன் எல்லாம், தானேதானுன இம் மோனத்தனியரசின் ஞானச் செங்கோலைப் பணிந்தடங்கின. பருவுடலை முற்றும் மறந்தான்; வந்ததை சட்டைப்பைக்குள் போடுவது போல வயிற்றிற்போட்டான். உணவைப்பற்றி எண்ணமே யில்லை. மோனமணிப் பெட்டகத்துள் இந்த ஞானமணி விளங்கினுன். எச்சிலென்று பூவை யிகழ்ந்தான். “ என்னது, யா ” னென்ன லற்ருன். அல்லும் பகலும் அறிவாகி நின்ருன். கங்குல்பக லற்றுக் காட்சியனுபவித்திருந்தான். சித்தந்தெளிந்து சிவமானுன். மனமிறந்தான்; இதமகித

மற்ருன்; பாசஜாலங்களை ஞானவாளால் அறுத்தான். ஆனந்தமாகத் தன்னையன்றி யொன்றும் உன்ஞத மோன முக்திபெற்ருன். படிப்பற்றுக் கேள்வியற்றுப் பற்றற்று நெஞ்சத்துடிப்பற்ற சுகஞ்சேர்ந்தான். மனக் கர்ப்பூரத்தைக் கரைத்து ஆனந்தவிளக் கேற்றிஞன்.

"சித்த மவுனஞ் செயல்வாக் கெலாமவுனஞ்
சுத்த மவுனமேன்பாற் ருேன்றிற் பராபரமே!"

இந்த அகண்டாகார மோனவெளியிலேயே நானற்றுலாவிஞன்! முத்திக்கு வித்தான மோனக்கரும்பு வழி பற்றிஞன்; இருந்தவிடத் திருந்து இருந்த பொருளாஞன். அன்பன் பாலஸந்யாஸியாய் விட்டான்; இனி பாலஸந்யாஸியென்றே அழைப்போம். எல்லாம் பரித்யஜித்து முடியெடுத்ததும் தலைமுழுகவில்லை! ஏன்? "இக்கட்டைக்குக் குளிர்நீராடவேண்டுமோ" என்னும் விரக்தி; இரண்டாவது ஆசாரநியமபரித்யாகம்! எல்லாம் அருஞசலனின் அருட்போதம் உள்ளிருந்து தூண்டி நடத்துகிறது!

இத்துறவை புத்தர் துறவினும் மஹாவீரரின் துறவிற்கே ஒப்பிடவேண்டும்.

"கானக வீட்டிற் காற்றில் மழையிலு மாடை யின்றி
மோனமா யுடலேண் ணுமல் முத்தியே முற்று மாகித்
தானேநேந் தானே யாகி"

நின்ற மஹாவீரரின் துறவே இதற்கு இணை பொருந்தும். ஆஞல் புத்தரும் வீரரும் கானகஞ் சென்று தனிமை தேடினர்; நமது பாலஸ்வாமிகள், தம்முள்ளேயே மோனத்தனிமையை யழைத்து கூட்டமுள்ள கோயிலிற் றவந்தொடங்கிஞர்.

மண்மக ளன்னை காற்றே தந்தைதன் மகிழ்வே நேயன் ;
தண்ணுற வாக வெய்யிற் சகோதர னாக வுள்ளத்
திண்மையே துணையாய் நாளுஞ் செல்வமுந் தவமே யாகிக்
கண்ணுளே விழித்த காட்சிக் காவலன் வாழ்ந்தான்
[மன்னோ !

## ௧௫. "சின்ன சேஷாத்ரி"

மடவுலகின் மாயம் மவுனசமா திக்க
ணுடல்மறந்தார்க் கீயாதே யூறு.

நமது பாலஸ்வாமிகள் ஆயிரக்கால் மண்டபத்திற் றவமிருந்தார் ; சில நாட்கள் அங்கு அமைதி நிலவிற்று ; பின்னே உலகிற் பெரியோர்களுக்கெல்லாம் வந்தெய்தும் பொறுமைச் சோதனை வந்தது. நாலைந்து ஆண்டுகளாக இங்கு நிலவும் சேஷாத்ரிஸ்வாமிகளை அறியாக் குறும்பர், பைத்தியம் சைத்தியமென் றிகழ்ந்து துன்புறுத்தி வந்தனர். "அடே, இன்னொரு கோவணாண்டிப் பித்து சிறிய வயதிலேயே வழுக்கைமொட்டை போட்டு வந்து, ஊமையாய்த் திரிகிறதடா ! இது ஒரு 'சின்ன சேஷாத்ரி !'" என்று நகையாடுவர் சிலர். மஹாவீரருக்கும் இப்படியே மடவுலகம் மரியாதை செய்ததால், அவர் துயரையே ஈண்டு சின்ன 'சேஷாத்ரி'க்கும் குறிப்பாம்.

யாரிவன் பித்த னென்பார் கல்லெடுத் தடிப்பா ரேசிக்
காரிய வூமை யென்பார் காண்மினோ விந்தை யென்பார்.

ஸ்வாமிகள் எப்போதும் ஸமாதியில் மெய்மறந்திருப்பதால் இவற்றையெல்லாம் பொருட்படுத்துவதில்லை. ஒரு நாள் மண்டபமேடையில் தியானத்திருந்தபோது குறும்பர்கள் கற்களேயும்,ஓடுகளேயும் வீசினர். ஸ்வாமிகள் பொறுமையுடன் அங்குள்ள பாதாளலிங்கத்தின் மறைவிற் சென்று தவமிருந்தார்! ஆனல் அங்கு விளக்குப்போடுவதே யில்லை; அதைக் கூட்டுவது மில்லை; அது அஞ்ஞானம் போன்று இருண்டிருந்தது; தரை ஈரந்தோய்ந்திருந்தது; கொசு, எறும்பு, பல்லி, பூரான், எலி, குளவி, தேள் முதலியவற்றிற்கு அதுவே ஸாம்ராஜ்யம். அவையே பாதாளேசனே அன்புடன் சுற்றி ஸாலோக ஸாமீப்யமுக்தி பெற்று நின்றன. ஸ்வாமிகள் ஆனந்தமோனத்தில்உள்ளேயாழ்ந்து சுற்றத்தை மறந்து தன்னில் லயித்திருந்தார். ஆனல், அவருடைய தூலவுடலை குளவி, தேனீ, கொசு, எறும்பு, பூச்சிகள், பூரான் எல்லாம் பங்குபோட்டுக் கொண்டு தாக்கின; அந்தோ!ஊனுறக்கமின்றி' அத்தைத் தின்று அங்கே யிருக்கும்' ஸ்வாமிகளின் இரத்தத்தை இரக்கமின்றி யுறிஞ்சின. அடித்தொடையை அரித்துப் புண்ணுக்கின; சீழும் இரத்தமும் வடிந்தன. இரத்தினம்மாள் என்ற ஒரு இரக்கவதி அங்கு இந்த பாலஸ்வாமிகளேக் கண்டு பரிதவித்து உணவூட்டி, தன் வீட்டில் வந்திருக்கச் சொன்னுள்; பேச்சில்லை. விரிப்பிற்காக ஒரு சுத்த வஸ்திரத்தை வைத்துச் சென்றுள்; அதைத் தீண்டவுமில்லை; பேச்சுமூச்சு ஜாடைசைகை யேதுமில்லை. எல்லாம் உள்ளே லயம்! குறும்புப்பிள்ளேகள் அங்கும்இடரிழைத்தனர். இருளில் வர அஞ்சி வெளியினின்றே, அவரிருந்த குழியில் குறிவைத்து ஓடுகளே யெறிந்தனர்; கல்லெறிந்தனர்.

ஆனால் அச்சமற்று, உடலற்று, உயிராசையற்று, மனமற்று, வாக்கற்று, போக்கற்று, வரவற்று வீற்றிருந்த வீரனை இவை சற்றும் துன்புறுத்தவில்லை. இக் கொடிய தவமும் மஹாவீரர் உச்சினி மயானத்திற் செய்த தவத்திற்கே ஒப்பாவது. பேய்களும், விலங்குகளும், விடநாகங்களும் எத்துணை இடரிழைத்தும் அவர் அசலமாய் வீற்றிருந்தது போலவே,

" போதமெய்ச் சோதி நாதன் பூரணப் பொறுமை பேணி
வாதமு நோவுந் தாவும் வஞ்சமு மகந்தை மிஞ்சுந்
தீதின ரிழைத்த வெல்லாஞ் சேய்களி னுட லென்றே "

உதாசீனமாக இருந்தான்.

## பிராமணஸ்வாமி

இந்த ஸமயத்தில் சேஷாத்ரிஸ்வாமிகள் இவருக்குக் காப்பாக நின்று வந்தார். ஒருநாள் புறமதச் சிறுவர்கள் அந்தப் பாதாளலிங்கத்தின்மீது கல்லம்பு தொடுத்தனர். அதைக்கண்ட வேங்கடாசல முதலியார் அச்சிறுர்களை ஒரு கொம்புகொண்டு அரற்றவே, அவர்கள் ஓட்டமெடுத்தனர்; திடீரென இருள் மண்டபத்தினின்று சேஷாத்ரி ஸ்வாமிகள் வெளிவந்தார்; முதலியார் திடுக்கிட்டார்; " ஸ்வாமி! தங்கள்மேல் கல் பட்டதோ?" என்று பரிந்து வினவினார்; சேஷாத்ரிஸ்வாமிகள் "இல்லை, இல்லை; அங்கே சின்னச்சாமி யொன்றிருக்கு; போய்ப்பார்" என்று கையைக் காட்டிச் சென்றுவிட்டார். முதலியார் உள்ளே சென்று இருட்டில் தடவி விழியுறுத்திக்காணவே, பாதாள லிங்கத்திற்குப் பின்னே குழியில் ஸமாதியிலாழ்ந்த ஸ்வாமிகளின் இளமுகத்தைக் கண்டார்; திடுக்கிட்டார்; வெளியே சென்று பூந்தோட்டத்தில் வேலை செய்து

கொண்டிருந்த பழனிஸ்வாமிகளுக்கு இதைத் தெரிவித்தார்; அவர் சிலரைக் கூட்டிக்கொண்டு பாதாளலிங்கத்தருகே வந்து, குழியில் இருளில் பாலஸந்யாஸிகளைக் கண்டு, பரிதவித்து, அவரை அங்கிருந்து எழுப்பி, கோபுரம் சுப்பிரமண்யர் ஆலயத்திற்குத் தூக்கிச் சென்றார். "பிராமணஸ்வாமி" (இதுவே அவருக்கு அப்போது சூட்டப்பட்ட நாமம்) இன்னும் உடலுணர்வற்று ஸமாதியிலேயே யிருக்கிறார். அடித்தொடையில் எறும்பும், கொசுவும், விஷஜந்துக்களும் கடித்துப் புண்ணீரும் சீழும் வடிந்துகொண்டிருந்தும், ஒன்றையுங் கருதாத ஸமாதியிலாழ்ந்த அற்புதயோகியை வியந்து போற்றி, அஞ்சி வணங்கி, தவத்திற்குப் பங்கம் செய்யாது அமைதியாக அனைவரும் விடுத்தகன்றனர்.

இவ்வரலாறு முதலியாரால் ஒரிரவு சொல்லப்பட்டது.

## கக. தவராஜன்.

"சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு"

எது உள்ளதோ அதுவே தானாகி, "ஸோஹம்" பாவனையிலேயே லயித்து, "நான்" என்பது உதியாது தானதுவாயுள்ள நிலையில், இருந்தபடியிருந்த இத் தவராஜயோகியின் இன்பத்தை எதைக்கொண் டளக்க முடியும்? அளவிறந்த அதுவே அதன் அளவு! அந்த "சுகபரிபூரண

மான நிராலம்ப கோசரத்தை, துரியவாழ்வை, அகமகிழ வருந் தேனை, முக்கனியை, கற்கண்டை, அமுதை நாடி" அனுபவித்தாலன்றோ அவ்வின்பம் புலப்படும்! பேச்சு மூச் சில்லாப் பேரின்ப வெள்ளத்தில் நீச்சுநிலை காணாது இன்பந்திளைக்கும் இந்தத் தவராஜனின் யோகதத்துவத்தைப் பின்னே விளக்குவாம். இத்தகைய இன்ப நாட்களின் முன்னே வரும்போதுதான் எழுதுகோலின் அகந்தை யடங்கிவிடுகிறது? சரித்திரக்காரனின் சமர்த்துப் பலிப்பதில்லை. நீக்கமற நிறைந்த அந்த சொரூபஸாக்ஷாத்கார அநுபூதி யின்பத்தை யெப்படி விளக்குவது? வெளியைப் படியா லளக்க முடியுமோ?

" எல்லையில்பே ரின்பமய மேப்படியேன் றோர்தமக்குச்
சொல்லறியா வூமர்கள்போற் சொல்லுநா ளேங்நாளோ!"

ஆம், ஊமர்கள்போலவே அவ்வின்ப முற்றவரும் சொல்லறியார்.

" நீக்கற்ற வின்ப நிலைபொருந்தி யேசற்று
வாக்கற்றுற் பேசுமோ வாய்!"

தவராஜன் புறவுலகையும் உடலையும் அறவே மறந்து, மனமிறந்து, உள்ளே ஆத்மராஜ்யத்தையே இதயஸிம்மாஸனத்தினின்று ஆண்டுவருகிறான். அதிலேயே வசிக்கிறான்; கட்டை எங்கு கிடக்கினும், தான் ஆத்மாஸனத்திலேயே நிலைத்திருக்கிறான்.

இந்நிலையில் அவனுடைய புறவாழ்வு எப்படி யிருந்தது? உணவு, உறக்கம், இருப்பிடம், பொறுமைச் சோதனைகள் எத்தகையன வென்று புறவுலகு ஆவலாகக் கேட்க விரும்புவதால், அதற்கு முதலில் விடையளிப்பாம்.

பகவான் தமது தவவாழ்வைப்பற்றிப் பல தடவை இதன் மனமுருக வீரவைராக்கியம் பிறங்கப்பேசியதுண்டு. அதன் ஸாரத்தையே ஈண்டு எடுத்துரைப்போம். உண வைப்பற்றி பகவானுக்கு என்றும் ஒரு ஸங்கல்பமும், விருப்பு வெறுப்பும் இருந்ததே யில்லை.

அத்தைத்தின் ருங்கோளிரு மானந்த சுத்தர்க
ளேத்தைத்தின் றெங்கிருந்தா லென் ?

ஆனால், ஆகாரநியமம் நல்லதென்றே சொல்வது வழக்கம் ; இதனிடம் பகவான் மூன்று நான்கு தடவைகள் " ஆகார நியமம் இருந்தால் நல்லது ; வைத்துக்கொள்ளலாமே " என்று சொல்லியிருக்கிறார். விரூபாக்ஷ குகையில் இது தவமிருக்கையில் பெரும்பாலும் நிலக்கடலையும், வில்வத்தழையும், அல்லது கொத்துக்கடலை, தேங்காய் இவற்றையே உண்பதுண்டு. பகவானிடம் இதைப்பற்றிச் சொல்லும்போது, " ஆகா ! அதுபோதும் " என்றார். அதைத் தொடர்ந்து தமது ஆகாரத்தைப்பற்றிப் பேசியருளினார். ரமணாசிரமத்தில் இப்போதிருக்கும் நிலையிலும் பகவான் உணவைப்பற்றிக் கருதுவதில்லை. வந்ததைச் சிறிது உண்டு சுற்றி யிருப்பவர்க்கு மீதியைப் பிரஸாதமாக வழங்குவதே வழக்கம் ; சீடர்கள் வந்து தமது கமண்டலத்தைத் தூக்கிக்கொண்டு சாப்பிட அழைத்து முன்செல்லும்போதே பகவானும் போஜனத்திற்குச் செல்வது வழக்கம். " ஸங்கல்பமே கூடாது " என்று அடிக்கடி சொல்வார். அம்மொழி இதன் மனத்துறவில் ஆநந்தமாகப் பாயும். இதற்கு உபவாஸத்தின்மேல் காதல் மிகுதி. " உபவாஸமிருந்தால் நலம் " என்று ஸந்நிதா

னத்தில் ஒரு நாள் தெரிவித்தபோது, "ஆகா நல்லது தான்! ஆனால், அதுவும் ஒரு ஸங்கல்பத்தின்பாலே படும்" என்னுங் குறிப்பாகத் தமது அனுபவமொன்றை யெடுத்துக் கூறினார். ஒருநாள் உபவாஸங் கைக்கொண்டு பகவான் கிரிப்ரதக்ஷிணம் செய்ய முற்பட்டார். பாதிதூரஞ் செல்லும்போது, சில உத்தமிகள் அருஞ்சுவை விருந்து கொண்டு எதிர்ந்து, பகவானை அருந்தும்படி வேண்டினர். பகவான் உண்ணலானார். மீண்டும் செல்லும்போது, மற்றோரிடமும் இதேமாதிரி நடந்தது. ஆதலின், பகவான் "தான்" என்று ஒன்றிலும் பிரவேசிப்பதில்லை. வந்ததையெல்லாம் வைஶ்வாநரனுக்கே தந்து ஆனந்தத்தையே தாமுண்டிருக்கிறார். இதே நிஸ்ஸங்கல்பமே பகவானுக்கு 1—9—1896 முதல் இருந்துவருகிறது. தம்மிடம் வரும் சைவ வுணவை யெதுவெனினும் உண்பது வழக்கம். அந்த ஆனந்தநிலையில் ஆழ்ந்திருப்போர்க்கு உணவிலும், வயிற்றுக்கணவாயிலும், உறக்கத்திலும் நினைப்பேது?

"கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தமூ லங்க ளேனும்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனி யாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது"

என்று தாயுமானவர் ஆவி கல்லுங் கரையக் கூவி வேண்டிய உத்தம ஸமாதிநிலையை, நிஸ்ஸங்கல்ப நிலையை பகவான் எடுத்த எடுப்பிலேயே அடைந்துவிட்டார்! இப்படியடைந்ததற்கு ஒரு உதாரணம் பகவானே! பகவா

னுடைய யோகவாழ்வின் முதற்பாக (1896—1900)த்தைக் கேட்டால் கல்லும் முருகும்; ஜடமும் வீரவைராக்கியமுறும். அதைப் பற்றி, இதனிடம் ஒரு நாள் பகவான் உரைத்ததன் சுருக்கமே ஈண்டு எழுதப்படுகிறது. நீண்டகாலம் பகவானுக்கு பிராமணஸ்வாமி யென்றே பெயர் வழங்கப்பட்டதெனினும், நாம் அவரைத் தவராஜனென்றே யழைப்போம்.

கோபுரம் சுப்பிரமண்யாலயத்தில் நமது தவராஜனை மௌனஸ்வாமிகள் பாதுகாத்து வந்தார்; முன்னே சொன்ன பழனிஸ்வாமி யென்பவரும் அதில் கவலையெடுத்து வந்தார். தவராஜன் அகண்டாகார மோனத்தின் ஆழத்தில் தன்னை மறந்துள்ளான்; அவனைப் பாதுகாக்கும் மௌனஸ்வாமிகளும் மோனமே. இதுவும் நலமே. தொணதொண வென்று பேசும் ஒருவர் அருகிலிருப்பது யோகத்திற்குப் பெருந்தடை. எனவே, அருணசலனின் இச்சை ஒரு மௌனியைத் துணை சேர்த்தது. உமாதேவிக்குப் பாலபிஷேக மாகும்போது, வெளியே வந்து விழும் அந்த அபிஷேகப்பாலை மௌனஸ்வாமிகள் பிடித்துத் தவராஜனுக்குத் தருவது வழக்கம்; அதில் பால், நீர், மஞ்சள், சர்க்கரை, பழம் எல்லாம் கலந்திருக்கும்; அந்தக் கலம்பகத்தைச் சற்றும் நோட்டம்பாராமல் கையில் கொடுத்தவாறே, கண்மூடியவாறே வாயில் ஊற்றி விடுவான். கோவில் பட்டர் இந்த வீரவைராக்கியத்தை நோக்கி இரங்கி, அம்மனுக்குத் தூய பாலை யபிஷேகஞ் செய்து கலப்பின்றி அப்படியே பிடித்து, பிராமணஸ்வாமியின் உபயோகத்திற்கு உதவும்படி மௌனஸ்வாமிகளிடம் கொடுத்து வந்தார். தவராஜனின் தன்


மறதியின் ஆழ்மை இந்நாட்களில் கடலினும் பெரிது; சில வேளை வாயை நீக்கி உணவை உள்ளே வற்புறுத்த வேண்டி வந்தது. சிலவேளை நீண்டநேரம் அ அல்லது ௧௦-மணி நேரம், ஸமாதியிலேயே ஆழ்ந்துவிடுவதுண்டு; வந்த ஒரு மாதம் வெறுந்தரையிலேயே வெற்றுடம்பு ஒரு கோவணத்துடன் கிடந்தது. இரண்டொரு மாதங்கள் சுப்பிரமண்யாலயத்திலிருந்து கோயிலிலுள்ள தோட்டத்தில் ஸமாதியிருந்தார்.

விரூபாக்ஷகுகையி லிருக்கையில் நெடுநேரம் தியானஞ் செய்து எழுந்தால், இது தடாலென்று கீழே விழுந்து விடுவது வழக்கம். இதைப்பற்றி பகவானிடம் ஒருமுறை தெரிவிக்கவே, பகவான் தமது அனுபவங்களை யருளினார்:—

"பூந்தோட்டத்தி லிருக்கையில், ஒரு செடியினடியில் தியானித்து உட்காரும். தியானத்தினின்று விழித்துப் பார்க்கையில் வெகுதூரத்தில் வேறு செடியின் பக்கமிருக்கும். பூந்தோட்டத்தினின்று வாகனமண்டபத்திற்கு வந்தது; அங்கே விளையாட்டுப் பையன்களின் சேட்டையை விலக்க, மண்டபத்தினுள்ளே இருட்டில் ஒரு வாகனத்திடையே ஸமாதியி லாழ்ந்துவிடும்; கண் விழித்துப் பார்த்தால், இன்னொரு வாகனத்தின் இடுக்கில் முடுக்கான இடத்தில் விழுந்து கிடக்கும். அதனால் காயமொன்றும் ஏற்படுவதில்லை. எழுந்திருக்கும்போது நிதானமாகவே எழுந்திருக்கும்."

## இலுப்பைமரத்தடி

வாகன மண்டபத்தினின்று தவராஜர், கோயில் வில்வமரத்தடியிலும், சிவகங்கைத் தெப்பக்குளத் தருகி



ஞானச் சிவகங்கை நாடியா டும்புனித
மோனர்க்கு முத்திநிலை முன்.

லுள்ள மங்கைப்பிள்ளையார் கோயிலிலும், அதற்கருகுள்ள இலுப்பை மரத்தடியிலும் ஸமாதியிலிருந்தார். அதனருகே எப்போதும் ஜனநடமாட்ட மிருக்கும். பிராமணஸ்வாமியின் புகழ் ஏற்கெனவே ஊரிற் பரவிவிட்டது; அவரைக் காணக் கும்பல் வந்துகொண்டே யிருக்கும். அவ்வாண்டு (1896) கார்த்திகை தீபத்திற்கு வருங்கூட்டம், அருணகிரி தீபதரிசனத்துடன் இந்த ஆடாத யோகமணிவிளக்கையுந் தரிசித்துச் செல்ல இங்கு திரும்பியது. உத்தமர்கள் இந்த உயிருள்ள தக்ஷிணாமூர்த்தத்தைக் கண்டு,

"மவுனமா முறையாற் காட்டும் மாப்பிரம வத்து வாலன்
சிவநிலைத் தவர்சற் சீடர் சேறிகுரு வரன்சிற் கையன்
உவகையோ ருருவன் றன்னு ளுவப்பவன் களிமு கத்தன்
அவனையாந் தென்பால் மூர்த்தி யப்பனை யேத்துவோமே."
(பகவான்)

என்றே யுருகிநிற்பர். சுத்தமோனன்; நிஷ்க்ரியன்; அசலன்; நிர்விகாரி; நின்மலன்; நிஸ்ஸங்கல்பன்; ப்ரஹ்மநிர்வாணன்; ஆனந்தபாலமூர்த்தி; ஆத்மாராமன்; ப்ரஹ்மநிஷ்டன்; குளிர்முகத்தன்; தானன்றி வேறிலான்; தேசகாலவர்த்தமானங்களால் விகாரமற்றவன்; விசித்திரமான ஜாலமோகனவுலகைத் தன்னை யன்றி வேறில்லையெனக் காண்போன்; "தத்வமஸி" யென்ற பொருள் விளக்கத்தை இருந்தபடி மோனமுத்திரையாற் காட்டிநிற்போன்; தேகம், பிராணன், இந்திரியம், புத்தியாதிகள் சலிக்காது அடங்கி யொடுங்கிய சுத்தன்; குளிர்சூடு, இன்பதுன்பம் இவையெல்லாம் அணுகாத நித்ய ஆத்மமயன்;

"இயல்பாகு நோன்பிற்கோன் றின்மை ; யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து"

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை"

என்றபடி ஏதும் உடைமை யற்றவன்.

"நம்ருத்யுர் நசங்கா நமேஜாதி பேத:
பிதாநைவ மேநைவ மாதா நஜன்ம !
நபந்துர் நமித்ரம் குருர்நைவ சிஷ்ய:
சிதானந்த ரூப: சிவோஹம் சிவோஹம் !"

என்ற சுத்த சுதந்தர ஸமத்வ ஸச்சிதானந்த சுயம்ப்ரஹ்மநிலையி லிருக்கும் இந்த மஹாத்மாவைக் கண்டால், யாவரே மனமுருகி இன்பம் பெருகி அந்த சிற்சத்திக் காந்தத்தில் வசப்பட்டு நில்லார் !

## உத்தண்டிநயினார்

இப்படி முதல்முதலில் ஈடுபட்டவர் வந்தவாசிக் கருகிலிருக்கும் திருமணி வாசியான உத்தண்டிநயினார் ஆவர். இவர் மெய்யன்பர்; நூலாராய்ச்சியுள்ளவர்; சாஸ்திரங்களை எத்தனை பிழிந்தும் ஒரு சொட்டாவது ஆத்மானந்தம் விழவில்லை யென்றுணர்ந்து சுயாநுபூதி யாளரைத் தேடித் திரிந்தவர். கற்றாலும், கேட்டாலும், காயமழியாத ஸித்தி பெற்றாலும் இன்பமுண்டோ? கற்றறிவினால் முற்றறிவனைக் காண முடியுமோ? தத்துவங்களுடன் எத்தனை போராடினாலும் ஸமாதானம் வரவில்லை. நயினார் ஒருநாள் இலுப்பை மரத்தடியில் பூர்ண சிற்சுகனான இந்தத் தவராஜனைத் தரிசித்தார்; உடனே

"ஆத்மஸித்தியும் சாந்தமும் இதோ உருக்கொண்டொளிர்கின்றது; இதையே நாம் பற்றவேண்டும்"

"இல்லது முள்ளது மல்ல தவனுரு
எல்லையி லந்நலம் புல்குபற் றற்றே"

என்று அறிந்தார்.

"தத்துவப் பேயோடே தலையடித்துக் கொள்ளாமல்
வைத்த வருள்மோன வள்ளலையே—நித்தமன்பு
பூணக் கருதுநெஞ்சு போற்றக் கரமெழும்புங்
காணத் துடிக்குமிரு கண்."

அதுமுதல், உத்தண்டிநயினார், அடிக்கடி வந்து தவராஜனுடைய உடல் சௌகரியத்தைக் கவனிப்பதோடு, ஞானவாசிஷ்டம், கைவல்ய நவநீதம் இவற்றைப் படித்து, ஸ்வாமிகள் திருவாக்கினின்று உபதேசம் பெறுவதற்குப் பேராவலுடன் காத்திருந்தார். கூட்டம் வந்து தொந்தரவு செய்யாமல் காவல் வகித்தார்; ஆனால் நயினார் எப்போதும் அங்கேயே யிருக்க முடிவதில்லை. நயினார் இல்லாத ஸமயம், கூட்டம் வந்து சூழ்வதுடன் குறும்புப் பையன்களும் சேட்டை செய்தனர். இங்கே மறைவிடமில்லை; தவராஜர் மரத்தடியில் வெட்டவெளியில் ஒரு கோவணத்துடன் வீற்றிருக்கிறார். கிழியல்பின் தினவு தீருமட்டும் பையன்கள் குறும்பாக விளையாடிவந்தனர். பித்தனென் றேசினர்.

ஒரு நாள் ஒரு சுட்டி, தவராஜனின் ஒரே கோவணத்தில் ஆபாசத்தை யள்ளி யெறிந்துவிட்டான். ஐயன் சிறிதும் மனஞ்சலிக்காது அனைத்திற்கும் உதாசீனனானான்.

"தானன்றி யாருண்டு? தன்னையா ரென்சொலினென்?
தான்றன்னை வாழ்த்துகினுந் தாழ்த்துகினுந்-தானென்ன?
தான்பிறரென் றோராமற் றன்னிலையிற் பேராமற்
றானென்று நின்றிடவே தான்!" (பகவான்)

என்பதே நமது தவராஜர் நிலை.

இவை யெல்லாம் திதிக்ஷைக்கு உரன் சேர்த்தன. ஜாரதுஷ்ட்ரர் (Zoraster) கன்னத்தில் அடிபட்டார்; பரமஹம்ஸர் பித்தனென் றேசப்பட்டார்; சிவனை பித்தனென்பதில் மகிழ்ந்தானெனில் வேறென்ன? மண், பெண், பொன் வெறிபிடித்த பித்தவுலகம் அறியாமையில் உறங்கும்போது, விழித்த ஞானிகளைத் தனது உறக்க மயக்கத்தில் பித்தர், பேயர் என்று ஏசி இடர் செய்கிறது! விழித்தவனுக்கு இவையெல்லாம் பொய்க்கனவே யாகும். அழகின் அருமையை அந்தகனறிவனோ?

## அண்ணாமலைத்தம்பிரான்

ஒரு நாள் உத்தண்டி நயினாருடன், அண்ணாமலைத் தம்பிரான் என்பவர் வந்து தவராஜனைக் கண்டார்; தம்பிரான் திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்தவர்; இதன் மடம் குன்றக்குடியி லுள்ளது; மடத்தின் தலைவருடன் மனவேற்றுமையினால் அண்ணாமலைத்தம்பிரான் திருவண்ணாமலைக்கு வந்து குருமூர்த்தத்தி லமர்ந்து, அங்கு ஸமாதியான தமது குருவின் வழிபாடுகளைச் செய்து கொண்டிருந்தார். தமிழ்வேதமான தேவாரத்தைத் தாளத் தோடு இனிமையாகப் பாடி, உஞ்சவிருத்தியாலுயிர்த்து வந்தார். இலுப்பைமரத்தடியில் வீற்றிருந்த நமது தவராஜனை ஒரு நாள் கண்டு, அன்புமேலீட்டால் உத்தண்டி



இரவுபக லின்றி யிருந்தபடி யென்றன்
குருமூர்த்தி யெய்ந்த குகை.

நயினருடன் அருகணைந்து தமதிருக்கையான குருமூர்த்தம் மடம் தியானவசதி யுள்ளதென்று விண்ணப்பித்து அழைக்கவே, தவராஜர் உடன்பட்டுச் சென்று அறிவறியாமையும், இரவுபகலு மற்று, சுட்டற்ற சுடர்நிலையிலமர்ந்தார். ஆ! இந்நிலையை யன்றோ மனிதான்மா,

"சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையா ததுமற்று நின்மலனாய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
வனந்தனி லென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே"

என்றவாறு பட்டினத்தடிகளைப்போல, ஆர்வக் கனலெழுந் தவாவுகின்றது!

## உ௦. குருமூர்த்தம்.

"போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாவொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
யாக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த வானந்தமே!"

அவனொருவன் எங்குமிருக்கிறான்; அவனே தன்மயமாக இதயக்கோயிலுள் ளிருக்கிறான்; அவனே மெய்ப்பொருள்; அம் மெய்ப்பொருளை யோர்ந்து அடங்கி ஒன்றி நிலை நிற்றலே உண்மைநிலை; அதுவே தன்னிலை. அந்நிலையில் தானடங்கி நின்றால், பிறவெல்லாந் தம்மாலே நடைபெறும் என்பதை பகவானுடைய வாழ்வு எவ்வளவு

தெளிவாகக் காட்டுகின்றது! நினைவொன்றும் நினையாமல், மனமிறந்து, அவ்விடத்தி லெழுந்த தன்மயவின்ப சொரூபத்தில் பதிந்துள்ள தவராஜனுக்கு, மேன்மேலும் மெய்த்துணை வந்துகொண்டே யிருந்தது. புறத்தினின்று போந்த சிறு இடர்களெல்லாம் தவவுறுதியைப் பலப்படுத்தின.

தற்போது குருமூர்த்தத்தில் அண்ணுமலைத்தம்பிரான் தவராஜனுக்குப் பணிபுரிகிறார். தம்பிரான் தமது இனிய குரலால், தேவாரங்களை நாள்தோறும் பாடுவதுண்டு. இவ்வினிய பண்விருந்துடன், தமது குருவிற்கு நிவேதனஞ் செய்த பிரஸாதத்தையும் தவராஜனுக்குக் கொடுத்து வந்தார். இப்படி இரண்டொரு மாதங்களே யாயின. பிறகு ஸ்வாமிகளின் தவப்பெருமையைக் காணக் குழுமிய பல அன்பர்கள் வந்து உணவுகொடுக்கத் தொடங்கினர்.

பிராமணஸ்வாமிகளைச் சுற்றி எப்போதும் கூட்டஞ் சூழ்ந்துகொண்டே யிருக்கும். பிராமணஸ்வாமிகளின் வைராக்கியம் அனைவர் வியப்பையும் அவரடியில் வணக்கியது. தம்முடலைப்பற்றிச் சற்றுங் கருதுவதில்லை; உடலோ அழுக்குப் பிடித்து மெழுக்காயிருக்கிறது; தலையோ குருவிக்கூடு மாதிரி பின்னிச் சடையானது. கையில் நகம் வளர்ந்து நீண்டு வளைந்து, வெறுந்தரையில் எறும்புகள் மொய்த்து வருத்தியும் சற்றும் பாராட்டாது, இரவு பகலின்றி இருந்தபடி யிருந்த இக் கொடுந் தவச்சுடரைக் கண்ட யார்தாம், “இவர் சுகனே, துருவனே, மஹாவீரனே” என்று வணங்கமாட்டார்கள்! அங்கு வந்து நிற்பவர்கள் எறும்புகடி தாங்காது சென்றுவிடுவர்; ஸ்வாமிகளோ, தமதுடலை எறும்புகளிடமே கொடுத்துவிட்டது

போலப் பொறுத்து அமர்ந்திருப்பார். சில வாரங்கள் இப்படித் தரையிலேயே உட்கார்ந்திருந்தார். இப்படியிருக்கும் நாட்களில் ஒரு தினம் ஒரு ஆசாரி மாது, பிராமணஸ்வாமியின் உடல்மெழுக்கையும், தலைச்சடையையும் கண்டிரங்கி வழியவழியத் தைலமாட்டினளாம். அந்த நன்றியை பகவான் பின்னே ஒருநாள் விளக்கினர்.

கீழெல்லாம் எறும்பு நிறைந்திருக்கவே ஒரு உயர்ந்த பீடத்தின் மீது ஸ்வாமிகளை வைத்து, எறும்பு ஏறாது பத்திரம் செய்தனர்; எனினும், ஸ்வாமிகள் சுவரிற் சாய்ந்திருந்ததால், அவருடைய இனிமைக்கு எறும்புகள் இன்னும் விருந்தினராக மேலே யேறின. குருமூர்த்தத்தில் ஸ்வாமிகளின் முதுகு பட்ட அடையாளம் இன்னும் சுவரிற் காணப்படுகிறது. அங்கு வருவோர் இந்த வீர வைராக்கியத்தை வணக்கமுடன் போற்றி, "இவர் தவக்கிழவர்; இவர் வயதை யார் அறிவர்? யோகஸித்தியால் என்றும் இளைஞராகத் தோன்றுகிறார்" என்பர்; சிலர், "இவர் நகங்களைப் பாரீர்! இவர் பெரிய ஸித்தர். கேட்டதைத் தருவார்" என்று வரம் வேண்டுவர்; பிணிகளைத் தீர்க்கச் சிலர் முறையிடுவர்; செல்வப் பெருக்கிற்காகச் சிலர் துணை வேண்டுவர்; பிள்ளைப்பேற்றிற்காகச் சிலர் அருள் வேண்டுவர்; முத்திப்பேற்றிற்காகவும் சிலர் போற்றி நிற்பர்.

"எல்லாந் தெரியு மிறைவாவென் னல்லலெல்லாஞ்
சொல்லாமுன் நீதான் றுடைத்திரங்கக் காண்பேனோ!"

என்று அலறுவார் சிலர். ஸ்வாமிகள் இவ்விநோதக் காட்சிக்கெல்லாம் சாக்ஷியாக இயல்பிற்றிரியாதிருப்பார்.

இந்தக் கூட்டம் ஏகாந்த வுறுதிக்குச் சோதனையாயிருந்தது. சந்தைக்கூட்டத்திலும், தன்னை யறிந்தோன், அசைவற்ற தனிமையே காண்பான். இது அவனுக்குப் பொறுமையும் உறுதியும் பயக்கும். கூட்டம் அதிகமாக நெருக்கி வந்ததால் ஸ்வாமிகளைச்சுற்றி, மூங்கிலால் அரண் செய்தனர். தம்பிரான் மிகவும் உற்சாகத்துடன் ஸ்வாமிகளைப் போற்றினார். அவரை சிவமங்களவிக்ரகமென்றே யெண்ணினார். ஒருநாள் அன்பின் மிகுதியால் தூபதீபங்கொண்டு அவருக்கு ஆராதனஞ்செய்யத் தீர்மானித்தார். ஆனால் இதை ஸ்வாமிகள் விரும்பவில்லை; உடனே சுவரில்,

"இதற்குத் தோண்டு இதுவே"

என்று எழுதி, தம்பிரான் ஆகாரம் கொண்டுவரும் போது சுட்டிக்காட்டினார். அதாவது, இந்த சரீரத்திற்கு இவ்வளவு பணிபோதும். மேற்கொண்டு ஒன்றும் வேண்டாம் என்பதைக் குறித்தார். தம்பிரான் தீர்மானம் செயல் பெறவில்லை. இதுதான் முதற்றடவை பிராமண ஸ்வாமியார் எழுதுவது; இது ஊரிற் பரவி, "பிராமண ஸ்வாமியார் நல்ல தமிழ் எழுதுகிறார்; படித்தவர்" என்று அனைவர்க்குந் தெரிந்தது. தாலூக்கா சிரஸ்தார் வேங்கடராமய்யர் ஸ்வாமிகளை அடிக்கடி வந்து தரிசித்துச் செல்வதுண்டு. ஸ்வாமிகளின் ஊர், பெயர் விலாசத்தை எப்படியாவது அறியவேண்டுமென்று இவர் பிடிவாதமாகக் கேட்டார். எவ்வளவு மன்றாடிக் கேட்டும் ஸ்வாமிகள் அசைவதில்லை. பிறகு ஒருநாள், அவ்விவரம் தெரிவித்தாலொழியப் போகமாட்டேனென்று அங்கேயே உட்கார்ந்துவிட்டார். உலகில் இது ஒரு பெரிய மாயை:

யாரைக்கண்டாலும், உடனே "ஊரென்ன, பேரென்ன, உறவென்ன, செயலென்ன, மனையென்ன, செல்வமென்ன?" என்று மாமூலாக வினவுவதே உலகின் தடித்த பழக்கமாய்விட்டது. இப் பெயர் வடிவுகளை விடுத்து அனைவரையும் ஆத்மாவாக ஆத்மவுறவிற் கலந்தறிய உலகம் பழகவேண்டும். இந்தப் புறவினாக்கள் ஒழிந்து, "நீ யார்?" என்பதற்குப் பதிலாக "நானார்?" என்று ஒவ்வொருவரும் கேட்டுக்கொண்டால் நலமாகும். வேங்கடராமய்யர் பிடிவாதம் செய்ததற்கு இணங்கி, ஸ்வாமிகள் "வேங்கடராமன், திருச்சுழி" என்று எழுதினார். கேட்டவர் எழுதியவர் இருவர் பெயரும் ஒன்றாக அமைந்ததும் வியப்பே! ஸ்வாமிகள் பெரியபுராணத்தையெடுத்து, திருச்சுழி சுந்தரமூர்த்திநாயனார் பாடிய ஸ்தலம் என்று காட்டினார்.

சில நாட்களில் தம்பிரான் அதைவிட் டேகிவிட்டார். உத்தண்டிநயினாரும், தமது மடத்திற்குச் சென்றுவிட்டார். ஆகாரத்திற்குக் குறைவில்லை, ஒருவர்க்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு இப்புண்ணியத்தை யூட்டினர். எனினும், பக்கத்தில் எப்போது மிருந்து கவனிக்கப் பொறுப்பாக ஒருவரும் இல்லை. இல்லையா? அருணாசலன், தன் மைந்தனுக்கு உடனே மற்றொரு சிறந்த துணையை யனுப்பினான். அருணாசலத்தை அறிந்த தேதுவோ அதுவே நான்; அது எதுவோ அதுவே அருணாசலம் என்ற மலைபோன்ற சொரூபஸமாதியில் நிலைத்தவர், புறத்துணையைக் கருதார்; எனினும், இவ்வரிய தவச்செல்வத்திற்குப் பக்கத்தில் ஒரு பாதுகாப்பு வேண்டுமென்று பார்ப்போருள்ளம் பரிந்து அண்ணாமலையானை வேண்டுகிறது!

# உக. பழனிஸ்வாமி

' சாதுக்க ளாவார் சகவாச நண்ணிறு
லேதுக்கா மிந்நியம மெல்லாமும்——மேதக்க
தண்டேன்றன் மாருதந் தான்வீச வேவிசிறி
கொண்டேன்ன காரியநீ கூறு '' (பகவான்)

ஐயங்குளம் விநாயகருக்கு அன்புடன் பூஜை செய்வார்; பச்சரிசியும் பாலும் சேர்த்து உப்பில்லாமல் பொங்கி, யானைமுகனுக்கு நிவேதித்து ஒருவேளை யுண்பார். இவரே, ஸமீபத்தில் சிவபதம்பெற்ற நாகலிங்கஸ்வாமி வீட்டில் வசிக்கும் மலையாளம் பழனிஸ்வாமி. ஒரு நாள் இவர் விநாயகரை மிகவும் அன்புடன் வழிபட்டுக்கொண்டிருக்கையில், ஸ்ரீநிவாசய்யர் என்ெறாருவர் அவரைக் கண்டு, "இந்தக் கல்லுச்சாமி கதியைக் கொடுக்குமா? வாணாள் இதனில் வீணாக்காதே! அருந்தவத்தாழ்ந்து ஓர் அற்புதஸ்வாமி குருமூர்த்தத்தில் உருக்கொண்டொளிருது! துருவனைக் காணாய்! தொன்னூல் விரித்த கடுந்தவக் கொழுந்தைக் கண்ணெதிர் காணாய்! அதற்குப் பணிசெய் தாங்கே நிலைத்தால், பிறவிப்பயனெல்லாம் பெறலாம்; உறுதி!" என்றார். இந்த வாய்ச்சொல்லையும், இன்னும் பலர் பிராமணஸ்வாமியைப் புகழ்வதையுங் கேட்டு, ஆகாயம் போன்று பரிசுத்தமான ஸந்நிதானம் வந்து,

"அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டா
லின்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்றுவகைபூத்து, பிராமணஸ்வாமியைக் கண்டு வணங்கியதும், "முத்திப்பேறு பெற்றோம்!" எனக்களிமிகுந்து, தமது பிள்ளையார் பூஜையை சீக்கிரம் விடுத்து, அருணாசலனின் ஞானப்பிள்ளையாரான இத்தவராஜனின் பணியை மிகவும் சிரத்தையுடன் மேற்கொண்டு நலமடைந்தார். நம்மாழ்வாரிடம் மதுரகவியாழ்வார் வைத்த அன்பு மிகுதியையே பழனிஸ்வாமி தவராஜனிடம் வைத்து, அத்தவ வேள்விச் செல்வத்தை, கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தார்.

"அரசேநின் றிருக்கருணை யல்லா தொன்றை
யறியாத சிறியேனு னதனால் முத்திக்
கரைசேரும் படிக்குனருட் புணையைக் கூட்டுங்
கைப்பிடியேகடைப்பிடியாக் கருத்துட்கொண்டேன்"

என்றிறைஞ்சி, தமது உய்விற் கிறைவனெனத் தவராஜனின் அன்பைச் சிக்கெனப் பிடித்தார் பழனிஸ்வாமி. நிவேதிப்பவர் கொண்டு முன் வைத்ததை யெல்லாம் ஒரே கதம்பமாகக் கரைத்து, ஸ்வாமிகளுக்கு ஒரு கிண்ணத்திற் கொடுப்பார். மீதியைப் பிரஸாதமாக வந்தவர்களுக்குத் திருப்பிக் கொடுத்து விடுவார்.

குருமூர்த்தத்தில் ஸ்வாமிகள் ஒன்றரை யாண்டுகள் சொரூபஸமாதியி லாழ்ந்திருந்தார். உணவுகூட வற்புறுத்தி எழுப்பியே தரவேண்டியதாயிற்று. அதுவும் கஞ்சியாகக் கரைத்து ஒரு கிண்ணமே கொடுப்பது. உடல் எலும்பெடுத்துப் போயிற்று. மலச்சிக்கல் உண்டா

யிற்று. அப்போது சிலநாளைக் கொருதரம் கறுப்பாகச் சதுரக்கட்டிகள்போல வெளிக்குப் போகுமாம். ஒரு கட்டிலில் உட்கார்ந்து தியானத்திலேயே யிருப்பார். எழுந்திருக்கக்கூட முடிவதில்லை. எழுந்தால் மயக்கம் வரும்; உடனே மீண்டும் உட்கார்ந்து விடுவார். மிகவும் முயன்று முயன்றே யெழுந்திருப்பார். பழனிஸ்வாமி அருகிருந்து சிலவேளை கீழே விழாது பிடித்துக்கொள்வார்.

இதுஸமயம் ஒருநாள் குருமூர்த்தத்தைச் சுற்றியுள்ள புளியமரங்களில் இரண்டுபேர் காய்களைக் களவுசெய்ய வந்தனர். ஒருவன் ஸதா விழித்திருக்கும் ஸ்வாமிகளை நோக்கி, "இவர் கண்களிற் கள்ளிப்பாலடிக்கலாம்; அப்போது பேசுகிறாரா என்ன பார்ப்போம்" என்றான். ஸ்வாமிகள் காதில் இது விழுந்தும் அசையவில்லை. பின்னொருவன், "சாமி கிடக்கட்டும்; நாம் நமது காரியத்தைப் பார்ப்போம்" என்று துணிந்து புளியம்பழங்களைக் களவாடிச் சென்றுவிட்டான். இதற்கும் ஸ்வாமிகள் ஒன்றுஞ் சொல்லாது சும்மாவிருந்தார்.

"வானந் துளங்கிலென்? மண் கம்பமாகிலென்?" "வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்கு?" விளக்கொளியில் எண்ணெய் வியாபித்தது போல உலகைத் தன்னுளடக்கி ஆத்மஸ்வரூப நிஶ்சல ஸமாதிஸ்தன் எதையுங் கருதான்; எதையுமெண்ணான். அதது அததனியல்பிற்கேற்ப இயற்கையால் இயக்கப்படுகிறது! இயற்கைச் சக்கரத்தினின்றுந் தப்பிய ப்ரஹ்மபூதன் இவற்றைப்பற்றிச் சிந்தியான்.

"சென்றது கருதார் நாளைச்
சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யில்
நிலவாய்விண் விழுது வீழ்ந்தும்
போன்றின சவம்வாழ்ந் தாலும்
புதுமையா யொன்றும் பாரார்
நன்றுதீ தென்னுர் சாக்ஷி
நடுவான ஜீவன் முத்தர்" (கைவல்யம்)

என்பதே அவனுடைய நிலை.

நூலாராய்ச்சி

உண்மைதா னென்றடங்கி யுள்ளறிவே தாஞயிற்
றிண்மையவன் வேதத் திரள்.

குருமூர்த்தத்திற் கும்பல் அதிகரித்தது. பழனி ஸ்வாமி வெளியே செல்லும்போது ஸ்வாமிகளை உள்ளே யிருத்திப் பூட்டிச் செல்லவேண்டிய தாயிற்று. பிறகு இருவரும் வேங்கடராம நாயக்கரின் ஸம்மதத்தின் மேல் அவருடைய மாந்தோப்பில் பரண்களின்மீது இருந்தனர். இங்கு கூட்டத்தை யுள்ளே விடுவதில்லை யாகையால் அமைதியாகத் தியானம் நடைபெற்றது.

இந்த அமைதியான காலத்திலேயே ஸ்வாமிகளுக்குப் படிக்க நேரம் உண்டாயிற்று. காலஞ் சென்ற நாக லிங்க ஸ்வாமிகளின் வேதாந்த புஸ்தகங்களை அவர் வீட்டி னின்று பழனிஸ்வாமி எடுத்து வந்து கொடுப்பது வழக்கம். கைவல்யம், வேதாந்த சூடாமணி, ஞானவாசிஷ்டம் இவற்றையெல்லாம் பழனிஸ்வாமி கொண்டுவருவார். அவருக்கு இதன் விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆவ

லுண்டு. அதற்காகத் தடவித்தடவிப் படிப்பார். இதைக் கண்டு தவராஜர் அந்நூல்களைத் தமது தெள்ளிய மதியி னுல் உள்ளுற வாராய்ந்து விளக்குவார். ஸ்வாமிகளுக் குப் புத்தகப்படிப்பு எவ்விதத்துந் தேவை யில்லை ; ஆயி னும், கேட்போர்க்கு விடையளிக்கப் பல அரிய நூல்களை வெகு எளிதிற் படித்து நினைவில் வைத்துரைப்பார். சுயா நுபவத்தாற் படிக்கும்போது அனைத்தும் தம்முள் முன் னுகவே யிருந்ததாகவே புலனுகும். தமிழ், ஆரியம், மலை யாளம், தெலுங்கு முதலிய மொழிகளில் பகவான் புலமை பெற்றது மிகவும் வியக்கத்தக்கது. அவ்வம் மொழிப் புலவர்கள் ஸந்நிதானத்திற் பழகும் மாத்திரத்திலேயே அதில் தேர்ச்சி பெற்ருர். வேதமே தாமான ஆத்மாநு பவிகளுக்குள்ளே இந்த ஜகத்தே யிருக்கிறது. எனில் அவர்களுக்கு எதுவும் புதிதல்ல ; முன்னிருந்த நூல் களும், இன்றுள்ள நூல்களும், இனி வரும் நூல்களும் அனைத்தும், அவர்களுக்குள்ளேயே பொதிந்து கிடக்கின் றன ; எதைப் படித்தாலும் அவர்களுக்குப் பழம்பாடமே யாகும். பகவான் அறிவுக் கற்பகம். அவர் வாக்கினின்று அரும்பும் அருளழகுபெற்ற அத்யாத்ம நறுமலர்கள் ஒவ் வொன்றையும் ஒரு பெரிய நூலாக விரிக்கலாம்.

இன்னு மினுங்கற்க வேத்தனையோ நூல்களினுள்
ளுண்மையோன் றேயறித லூங்கு.

நூல்கள், நூல்கள், நூல்கள் ! எங்கும் நூல்கள் ! மூளைக்குச் சுமையேற்ற எத்தனையோ நூல்கள் அச்சு வாகனத்தினின்று மலையருவிபோலப் பக்கம் பக்கமாகக் கக்கப்படுகின்றன. மனிதன் எதைப் படிப்பது ?

நாஞ னெனும் பொருளை நாடியுட் கற்றடங்கின்
ஞானமே தாஞ நலன்.

அறிவே தாஞகாத கற்றறிவு, அலியறிவு, வன்னிபோகம் !

மனமெனும் மேலட்டையைத் திறந்து உள்ளேயுள்ள சொரூபநூலைப் படித்தால் படிக்கப்படிக்க ஆனந்தம் பொங்கும் ! அந்நூலுக்கு முடிவில்லை ; அது என்றும் புதுமை ; என்றும் பழமை ! அத்தகைய நூலைக்கற்று முற்றியவர்க்கு மற்றைய அச்சுநூல்கள் வெற்றுநூல்களேயாகும். அருளாலறிந்து, ஆனந்தாதீதமான அத்துவிதசித்தாந்த நிலையும், வேதாந்த முடிவான மோனமும் பெற்ற பரிபூரணர் எல்லா மறைகளுக்கும் உறைவிடமன்ரே ?

எனினும் பகவான், நூலாராய்ச்சியிலும் ஒப்பற்றே விளங்குகிருர். இது பகவானிடம் பேசும்போது, அடிக்கடி கீதை, உபநிடதம், தாயுமானவர் முதலிய நூற்களினின்று மேற்கோள்களைக் கையாள்வது வழக்கம். எந்த வாக்கியத்தை அடியெடுத்தாலும் பகவான் அதைப் பூர்த்தி செய்துவிடுவார். பகவானிடம் கற்றுத் தேர்ந்த புலவர்கள் வருவதுண்டு; கற்றுக்கற்று அலுத்து, உண்மையறிய ஆவலுடனுஞ் சிலர் வருவதுண்டு ; காசி பார்த்தவனைக் காசிபுராணம் படித்தவன் நோட்டம் பார்ப்பது போலக் கல்விச் செருக்குற்றவரும் ஆழம்பார்க்க வந்து கடபடப்பதுண்டு. அனைத்தையும் மாயைச் சருகெனவுதறித் தள்ளி, மௌனமணிப் புத்தகத்தைக் கற்கத் துணிந்த தீரரும் வருவதுண்டு. அனைவரும் அவர் ஸந்நிதானத்தில் எப்படியேனும் உள்ளவுண்மை யொன்றென்றறிந்தடங்குவர். அவ்வுண்மையே தம்முன் ஜோதிவடி

வுடன் விளங்குவதைக் காண்பர். பழனிஸ்வாமி தரும் நூல்களுடன், மலையிலுள்ள பத்மநாபஸ்வாமி அல்லது ஜடைஸ்வாமியாரிடமிருந்த ஸம்ஸ்கிருத புஸ்தகங்களையும் அடிக்கடி ஸ்வாமிகள் பார்ப்பதுண்டு; அவரிடம் மந்த்ர சாஸ்திரம், ஆயுர்வேதம் முதலிய நூல்களுடன் சங்கரராதியோர் அருளிய இன்பமயமான ப்ருஹத்ஸ்தோத்ர ரத்நாகரமும் இருந்தது; இதை ஸ்வாமிகள் மற்ற வடமொழி நூல்களுடன் பார்த்துத்தெளிந்தார். ஒரு கண் காட்சி எப்படி மனத்திற் பதிகின்றதோ, அப்படியே அவருக்கு நூல்களும். அவருடைய ஞாபகசக்தியும், ஏகாக்ரசித்தமும் உலகிலுள்ள அற்புதங்களில் ஒன்று என்பது இதன் அநுபவம். ஒரு ஸமயம் ஒருவர், பத்மநாபஸ்வாமிகளை ஒரு ஸந்தேகங்கேட்டார். அதற்கு இந்த மௌனி (பிராமணஸ்வாமி) ப்ருஹத்ஸ்தோத்ரத்தையெடுத்து ஒரு ஶ்லோகத்தைச் சுட்டினார். அதுவே பொருந்திய விடையாயிருந்தது. இப்படியாக அத்யாத்ம சாஸ்திரங்களனைத்திலும் ஸ்வாமிகள் எளிதில் தேர்ச்சி பெற்றார். இந்த சுத்த சுதந்தர நிரந்தரக் கல்விக்கும், மதுரையில் அவர் கற்ற பந்தனைக் கல்விக்கும் நேயர்களே வேற்றுமை யறிக.

தன்னை யறிந்தடங்கித் தன்மயமாய் நின்றக்காற்
பின்னறிவ தென்னே பிற !

## உஉ. உறவினர் வருகை.

அன்னை யில்லை யப்ப னில்லை யாது றவு மில்லையே
நன்மை யில்லை தீது மில்லை நானிங் காரேன் றோர்தியால்
பன்மை யெவ்வோ ருமை யோப டர்க்கை முன்னி லையோ
தன்மை யற்ற தன்ம யத்த னிச்சு கச்சு தந்தரன் ! [டேந்

(பாரதசக்தி)

### தேடியுங் காணோம்

சற்று மதுரையை நோக்குவோம்! 29-10-1896-ம் தேதி ஓடிப்போன வேங்கடராமனைத் தேடித் தேடி யலுத்தனர். அப்போது தாயார் மானாமதுரையிலிருந்தாள். செய்தி யெட்டியது. வருந்திக் கலங்கினாள்; அனைவரும் சேர்ந்து துயருற்றனர். "ஸாதாரணமாகத்தானே புத்தி சொன்னோம்; இதற்கு இவன் இப்படி மோசஞ் செய்வானென்றறியோமே!" என்று அயர்ந்தனன் அண்ணன். "ஒருவர்க்குஞ் சொல்லாமல் இப்படி மாயமாய்ப் போவானா, போவானா!" என்று அழுங்கினர் உறவினர். "ஐயையோ, ஓடிவிட்டானா?" என்று அன்னை திடுக்கிட்டலறினாள்; "எப்படியேனும் தேடிப் பிடிக்கவேண்டும்" என்றாள். "பயல் எங்கே போவான்! பணமுள்ளமட்டும் சுற்றித் திரிந்து வருவான்" என்று மனப்பால் குடித்தனர் சிலர். அங்குமிங்கும் வண்டுபோலப் பறந்து உசாவினர். "எங்கே போக்கடி! அதற்கு யார் சோறுபோடுவார்கள்; தானே வந்துவிடும் கொஞ்சநாளையில்" என்று தேற்றினர் சிலர். "அவசியம் தேடிக்கொண்டு வரவேண்

டும்'' என்று நெல்லையப்பய்யரைப் தூண்டினுள் அழகம்மை. நெல்லையப்பய்யர் தேடப் புறப்பட்டார். யாரோ வொருவன், “நாடகக்கம்பெனியில் சேர்ந்துவிட்டான்; அது திருவனந்தபுரத்தில் ஆடுகிறது'' என்முன். “பையன் வாட்டமாயிருக்கிருன்; ஒருவேளை நாடகத்திற் சேர்ந்திருப்பா'' னென்று நெல்லையப்பய்யர் ஓடினுர் திருவனந்தபுரத்திற்கு; நாடகக்கம்பெனிகளி லெல்லாம் நன்முக விசாரித்தார். நாடகம் பார்த்ததே நலம்; பையன் புலனுகவில்லை. அவன் இதயமன்றில் என்றும் நடக்கும் நாடகத்திலேயே “நாடு—அகம்'' என்று பாடி நிச்சல நடம் புரிவதை அவர்கள் அறியார்; பிறகு அழகம்மையும் சேர்ந்து திருவனந்தபுரத்தை அலசிப்பார்த்தும் அகப்படவில்லை. வேங்கடராமனைப் போன்ற வொரு பையனையே கண்டு ஏமாந்தார்கள். வேங்கடராமனைக் காண முடியவில்லை. உண்மையிலேயே அவனைப்போன்ற ஒருவனை எங்கே காணமுடியும்! “அவ்வளவுதான் விதி'' என்று நொந்து மதுரை சேர்ந்தனர். “ஏது பையன் மாயமாய்ப் போய்விட்டான்! இனி அந்தச் செல்வத்தை, அழகுத் தங்கத்தைக் கண்ணுற் காணப்போவதில்லை!'' என்றே அனைவரும் ஏங்கித் தூங்கி மயங்கி யயர்ந்தனர்.

## செய்தி

இத்ததியில் 1898ஹு ஆகஸ்டுமீ மதுரை சொக்கப்பநாயக்கன் தெருவில் தமது வீட்டில் சுப்பய்யர் திடீரென்று உயிர்துறந்தார். மானுமதுரையில் வக்கிலான நெல்லையப்பய்யர் அபரக்கிரியைகளுக்காக அங்கு வந்தார். கிரியைகள் நடந்து முடிந்தன. இந்தச் சாவின் துயருடு

ஒரு ஸந்தோஷச்செய்தி பளிச்சிட்டது! "வேங்கடராமன் சாமியா ராய்விட்டான்! திருவண்ணுமலையில் எல்லாரும் அவுன் காலில் விழுகிருர்கள்" என்று ஒரு திருச்சுழி வாலிபன் செய்தி கொண்டுவந்தான். இது 'கண்டேன் சீதையை' என்ற செய்திபோன் றிருந்தது! அனைவரும் வியந்தனர். "நிஜந்தாஞ இது! உனக்கு எப்படித் தெரிந்தது சொல்" என்றனர். "மதுரை திருஞான ஸம்பந்தர் மடத்துக்குப் போயிருந்தேன். அங்கு குன்றக் குடி அண்ணுமலைத்தம்பிரான் (இவரே குருமூர்த்தத்தில் ஸ்வாமிகளுட னிருந்தவர்) வந்திருந்தார்; அவர், 'திருச் சுழியினின்று ஒரு வாலிபஸ்வாமி, திருவண்ணுமலையில் கடுந்தவம் புரிகிருர்; அற்புதமான வைராக்கியம்! சற் றும் உடலுணர்வில்லை; சொரூபஸமாதியிலேயே லயித்துப் போயிருக்கிருர். அந்தத் தவப்பெருமை உரைக்கத் தர மன்று. முத்தியே வடிவெடுத்து விளங்குகிருர்! அருணு சலனையே ஞாஞசாரியஞகப் பெற்று அவன் மயமாக விளங்குகிருர்' என்று புகழ்ந்து பக்தியுடன் போற்றிஞர். உடனே எனக்கு ஆச்சரிய முண்டாயிற்று. தம்பிரானைப் பிறகு முழுவிவரமுங் கேட்டறிந்தேன். வேங்கடராமன் திருவண்ணுமலையிலேயே சாமியாராகி அங்கேயே யிருக்கி ருன்" என்று வார்த்தை யடுக்கிஞன். அழகம்மைக்கு இச்செய்தி மனத்திற் பால் வார்த்தது!

## ஸந்திப்பு

புறப்பட்டார் நெல்லையப்பய்யர் திருவண்ணுமலைக்கு; அ. நாராயணசாமியய்ய ரென்னும் ஒரு நண்பரையும் உட னழைத்துச் சென்ருர். பிராமணஸ்வாமிகள் பெயர் எங்

கும் முழங்குகிறது. நெல்லையப்பய்யர் விசாரித்து, வேங்கட ராமனைத் தேடி மாந்தோப்பிற்கே வந்துவிட்டார்; ஆனால், தோட்டக்காரர் அவரை உள்ளே விட மறுத்துவிட்டார். "ஏனய்யா நிட்டையிலிருக்கிற சாமியாரைத் தொந்தரவு செய்கிறீர்கள்? போங்கள்" என்று சொன்னார். "இல்லை, நாங்கள் அவர் உறவினர்; அவரைத் தரிசித்துச் சென்று விடுகிறோம். வேறொன்றுஞ் செய்யவில்லை" என்றார் நெல்லையப்பய்யர். 'அதெல்லாம் முடியாது' என்று கண்டிப்பாக நின்றார் தோட்டக்காரர். உடனே நெல்லையப்பய்யர் ஒரு சீட்டெழுதினார்.

"மானாமதுரை வக்கீல் நெல்லையப்பய்யர் தரிசனம் செய்ய விரும்புகிறார்" என்றெழுதி, தோட்டக்காரரிடம், "இதை அவரிடம் கொண்டுபோய்க் கொடுங்கள்; உங்கள் ஸ்வாமி ஸம்மதித்தால் எங்களை உள்ளே அழைத்துச் செல்லுங்கள்" என்று கொடுத்தார். தோட்டக்காரர் அதைக் கொண்டுபோய்க் கொடுத்தார்; ஸ்வாமிகள் பார்த்தார். அது பத்திரப்பதிவிலாகாக் காகிதம். பின்னால் தமையன் நாகசாமியின் எழுத்திருந்தது. இதனால் நாகசாமி அதில் ஒரு குமாஸ்தாவாக வேலைபார்ப்பதை யூகித்தார்; மறுபக்கம் சிற்றப்பாவின் கையெழுத்து தரிசிக்க உத்தரவு கேட்கிறது. அழைத்துவரச் சொல்லி ஜாடைகாட்டினார். நெல்லையப்பய்யர் உள்ளே வந்தார்.

வேங்கடராமனைக் கண்டார்: உடலெல்லாம் அழுக்கு; தலையெல்லாம் ஜடையும் பிசுக்கும். விரல்களில் நகம் நீண்டு சுருண்டிருக்கிறது; உடலிலுள்ள 240 எலும்புகளும் தோலையொட்டித் தெரிகின்றன. இருளில் மின் மினிபோல வாழும் உலகில் இவ்வறிவுச்சுடர் தன்னை மறந்

தொளிர்கிறது. அரையில் ஒரு கோவணந் தவிர வேறொன்று மில்லை; பேச்சுமூச் சில்லை.

"ஐயோ! எனது சகோதரர் மைந்தன் இவ்வயதில் இப்படி யாய்விட்டானே! என்ன கோலம்! என்ன காலம்!" என்று ஒருபால் துக்கம் நெஞ்சடைக்கிறது! மறுபுறம் அருகிலிருந்த பழனிஸ்வாமியை நோக்கி (ஸ்வாமியார் மவுனியாதலால் அவருடன் நேராகப் பேச முடியவில்லை). "எங்கள் குடும்பத்தில் ஒருவர் இப்படிப் பெரிய மஹானாகத் தவஞ்செய்வது மிகவும் ஸந்தோஷமே. ஆனால் ஆகார ஸௌக்கியங்கள் சரியா யிருக்கவேண்டும், உறவினர் இந்த ஸ்வாமியைத் தங்கள் பக்கத்தில் வைத்து ஆதரிக்க விரும்புகிறார்கள்; அவர் தவத்தையுந் துறவுக் கோலத்தையும் விடவேண்டாம்; மௌன ஸந்யாஸியா யிருக்கட்டும். ஆனால், நாங்களிருக்கும் * மானாமதுரையில் ஒரு பெரிய மஹானின் ஸமாதி யிருக்கிறது; அங்கு வந்து இந்த ஸ்வாமி யிருக்கட்டும். அவருக்கு வேண்டிய ஸௌகரியங்களை நாங்கள் கவனித்துக்கொள்வோம். நிஸ்சிந்தையாக அவர் தவம் செய்துக் கொண்டு அங்கேயே ஸௌகரியமா யிருக்கட்டும்" என்று வக்கீல் நெல்லையப்பய்யர் விவகரித்து வேண்டினார். ஸ்வாமியார் அசையவில்லை; சொன்ன சொல் மனத்திற் பற்றவில்லை. இருந்தது இருந்தபடியே ஸ்வாமியார் இருந்தார்; நெல்லையப்பய்யர் இந்த வீரவைராக்யத்தைக் கண்டார். வேங்கடராமன் முற்றிலும் மாறிவிட்டான்; இனித் திரும்பான்!

* மானாமதுரை சதாசிவப்ரஹ்மேந்திரரின் ஞானத் திருவடிகள் உலவிய தலம். அங்கு அந்த மஹான் நீண்டகாலம் சமாதியிலிருந்தார்.

உறவு, சுற்றம் எல்லாம் மறந்துவிட்டான்" என்றயர்ந்து திரும்பினார்.

இத்தகைய வைராக்கியம் எளிதல்ல. துறவு பூண்டு தவநிலையி லிருக்கையில் உறவினர் வந்துவிட்டால், மனம் பதைக்கும்; அவர்களைக் காண முகம் நாணும்; எத்தனையோ கலக்கங்கள் மனத்திற் சுழலும். இது மனித மனத்தியல்பு. நமது தவராஜர் சிறிதேனும் கலங்கினாரா? "நான் யார்? உறவினரா? இல்லை! நான் எனக்கே சொந்தம். நான் நிராலம்பன்; பந்தமற்றவன்; பந்துவற்றவன்" என்ற வுறுதியுடன் சற்றும் மயங்காது உறவெனும் பாசத்தை ஸமதைக் கண்ணாலெரித்து, உள்ளொடுங்கி யிருந்தார். இந்த வீரவைராக்கியத்தை யாரே மயக்கிக் கள்ளம் புரிய வொண்ணும்!

உள்ளச் சுகத்தி லொளிவளருந் தன்மயத்தைக்
கள்ளங் கவர்வா னெவன்?

நெல்லையப்பய்யர் உடனே மானாமதுரைக்குச் செய்தி யனுப்பிவிட்டார். நாலைந்துநாள் திருவண்ணாமலையி லிருந்து நண்பருடன் தாமும் தம் ஊரை நோக்கினார். தவராஜனின் வைராக்கியக் கோட்டையைச் சூழ்ந்தமுதல் முற்றுகை முற்றிற்று. இரண்டாவது முற்றுகை மிகவும் பலமானது. அது கல்லையுங் கரைக்கக் கூடியது; தாய்ப் பாச பீரங்கியுடன் வந்தது; அதுவே அழகம்மையாரின் முயற்சி.

ஸ்வாமிகள் முற்றும் தனிமையை வேண்டினார். தம் முடன் பிரியாப் பழனிஸ்வாமிகளுக்கு, "அஸங்கனாயிருக்க வேண்டும்; நாமிருவரும் ஒரேயிடத்தில் சேர்ந்திருக்க



திருமோனீண்டுதேவக் கோற்றவ னன்னேன்
திருமேனி செம்பவளக் குன்று.

வேண்டாம். தாங்கள் வேறு திசை சென்று பிக்ஷை வாங்கிப் பிழையுங்கள்; இது வேறொரு திசையில் ஐயம் புகுந் திருக்கட்டும்" என்று சொல்லி யனுப்பி, மாந் தோப்பினின்று ஐயங்குளத் தருகிலுள்ள அருணகிரிநாத ராலயத்திற்குச் சென்றார்; அது அக்ரகாரத்திற்குப் பக் கத்திலிருந்தது. பழனிஸ்வாமியோ அன்று பிக்ஷைபெற்று அருணகிரிநாதர் ஆலயத்திற்கு வந்துவிட்டார். இச் செல்வத்தை விட்டு எங்ஙனம் பிரிவது? உயிரைப் பிரிந்து உடல் தரிப்ப தெங்ஙனம்? ஒரு மாதம் இக் கோயிலில் இருந்து, பிறகு ஒரு வாரம் கோயில் தோட் டத்திலும், கோபுரங்களிலும் இருந்தார் தவராஜர். இங்கு கூட்டம் அதிகமாக வந்துகொண்டிருந்ததால் ஸ்வாமிகள் பவளக்குன்றிற்குச் சென்றுவிட்டார்.

## பவளக்குன்று

அதன் புனிதப்பெருமையை முன்னேயே கதித் தாம். அதன் அழகிய காட்சி, பிரவாளகிரிநாதராலயம், ஒரு தெள்ளூற்று, தவத்திற்குரிய குகை, முன்னே ஒரு திருமடம் இத்தனையுங்கொண் டிலங்குகிறது. பிரவாளகிரி நாதராலயத்தில் காற்றுப் புகாத சிற்றறைக்குள்ளும், குகையிலும் ஐந்தாறு மாதங்கள் ஸ்வாமிகள் தவம் புரிந் தார். அக்காலத்தில் ஊருக்குட் சென்று வீட்டு வாசல் களில் கைதட்டி நிற்பார்; வாசற்படி கடந்து வந்த பிக்ஷையை எதுவாயினும் ருசி பாராமல், கையிலேந்தி அப்படியே உண்டு, உடனே தவவினையை நாடிச் செல்வார்.

கோயிலுள் நெடுநேரம் ஸமாதியி லிருக்கும்போது, சில நாட்கள் பூஜையானதும் பூசாரியார் கோயிலைப்

பூட்டிச் சென்றுவிடுவ துண்டு; அப்போது இவர் உள்ளே அடைபட்டிருப்பார். இங்கும் பல பக்தர்கள் ஸ்வாமிகளைக் காண வந்துகொண்டிருந்தனர். இங்கேயே நாம் முன் சொன்ன மற்றொரு முற்றுகை சூழ்ந்தது.

ஏது வரினு மெமக்கிலை யென்றிருப்பார்
போதமருட் சோதியோளிர் போன்.

## உகூ. ஈன்றவள் முறையீடு.

தாயா ருறவினரார் தம்பியா ருள்ளத்தே
நாளு ரேனவறியி னன்கு ?

நெல்லையப்பய்யர் வெறுங்கையுடன் வந்தார். "பையனை எப்படியாயினும் அழைத்துவர அவருக்குக் கருத்துந் திறமையு மில்லையாம்! இதோ நானே சென்று என் செல்வனை வீட்டிற்கு அழைத்துவருகிறேன்" என்றெழுந்தாள் அழகம்மை. டிஸம்பர் விடுமுறைநாள் வந்ததும் நாகசாமியுடன் திருவண்ணாமலைக்கு விரைந்தாள். விசாரித்து ஆவலாகப் பவளக்குன்றை நோக்கினார் இருவரும். அதன் உச்சியில் தனது அரும்புதல்வனைத் தாய் கண்டாள்; கண்ணீர் சொரிந்தாள். தாய் மனம் பதைத்தது அவள் எண்ணங்கள் அப்போது என்னே!

"என் கண்மணியே, உன்னை இக்கோலத்துடன் காணவோ பத்துமாதஞ் சுமந்து பெற்றேன்! என் அருமைச் செல்வமே, இப்படி நீ கோவணாண்டியாவதற்கோ

உன்னைப் பத்துமட்டும் படிக்க வைத்தது! என் அரு மைக் குழந்தாய், என் மனம் கரைகின்றது! ஒரு கோவ ணத்துடன் இந்த மலையிலும் காட்டிலும் அலைய உனக் கேனப்பா விதி! அப்பனே, உன்னை ஊட்டி வளர்க்க யானிருக்கும்போது, ஊர்ப்பிச்சை யெடுத்துண்ண சகிப் பேனு! உனக்கு அழகிய சிற்றப்பன் வீடிருக்கும்போது, உனது திருமேனி வெறும் பாறையிலும் மண்ணிலும் கிடக்கக் காண்பேனு! அழகனே, தாய் நானிருக்கையில், நீ இந்தப் பிஞ்சு வயதில் இப்படி வைராக்கியம் வைக்க லாமா! மெய்யனே, இங்கு உனக்கார் துணை! யார் உனக்கு வேளாவேளை உணவு தருவார்கள்! வீட்டில் ஸௌக்கியமா யிருக்காது இக்காட்டில் நீயேன் வருந்து கிறுய்! பாம்பு, புலி, கரடி வந்தால் என்ன செய்வாயப்பா! உன் மெல்லிய பாதங்களில் ஒரு சிறு முள் பட்டால் எனக்குப் பொறுக்குமா! நீ பட்டினி கிடந்தால் என் மனம் சகிக்குமா! பெற்றமனம் பதைக்குதடா; பாலகா! என் அருமையே, நீ இங்கு தரையிற் படுத்து நான் அங்கு பாயிற் படுத்தால் நன்றுயிருக்குமா? உன்னைக் காணுது எவ்வளவு துடிதுடித்துத் தேடினேன்! அப்பா, வேண் டாம் இக்கோலம். வீட்டிற்குவாடா! ஒருமொழிபேசடா! என் கண்ணே, என் கண்ணே வந்துவிடு. உன்னைக் கூட் டிச்செல்வதற் கென்றே இவ்வளவு சிரமப்பட்டு வந்தோம். அப்பா வாடா" என்று எத்துணையோ பரிதவித்தாள்; நாகசாமியும் வேண்டுமட்டும் சொன்னுன். "ஊருஞ் சத மல்ல; உற்றுர் சதமல்ல. இவ்வுறவுகளெல்லாம் அநாத்மா; நமது இருப்பிடம் ஆத்மா. நாம் நம்மிடத்தில் உறுதியா யிருந்தால் நடத்துகிறவன் அனைத்தையும் நடத்தட்டும்"

என்று தவராஜன் உறுதிபூண்டு சும்மாவிருந்தான். பவளக்குன்று எவ்வளவு விடையளித்ததோ அவ்வளவே அவனும். ஆசை நா பேசாத ஊமை மணி ஓசைகொடுக்குமா? நாள்தோறும் அன்னையும் அண்ணனும் பக்ஷணங்கள் வாங்கிவந்து தந்தனர்; வரும்போதெல்லாம் ஊருக்கு வரும்படி முறையிட்டார்கள். ஒன்றுஞ் சாயவில்லை. முடிவில் தாயுாருக்குள்ள ஒரு பலமான பாசத்திறன் வெளிப்பட்டது; அதுவே கண்ணீருங் கம்பலையும் :—

கண்மணிக் கண்ணி

வீடிருக்க நல்ல விருந்திருக்க விம்மலையின்
காடிருக்க வுன்றனைநான் காண்பேனோ கண்மணியே!

கால்கை நகம்வளர்ந்தே காயம் மெழுக்கடைந்தே
தோலு மெலும்புமாய்த் தோன்றுவதேன் கண்மணியே?

மார்மேலுந் தோள்மேல் மடிமேல் வளர்த்துவெறும்
பார்மீது நீபடுக்கப் பார்ப்பேனோ கண்மணியே!

யார்செய்த சூதிங் கனுதியாய் யானிருக்க
வூர்ப்பிச்சை யுண்டிடவு முன்விதியோ கண்மணியே!

அருஞ்சுவையட் டேட்டிமகிழ்ந் தன்பாய் வளர்த்தவுன்னை
யிரந்துண்ணக் கண்டு மிருப்பேனோ கண்மணியே!

தவயோக மௌனம் ஸமாதிகளு மிவ்வயதி
லெவருனக்குச் சொன்னா ரியம்பாயேன் கண்மணியே!

சுகங்குலைந்து வாடிச் சுருங்கு முனைக்கண்டென்
னகங்குழைந்தேன் யானுன்ற னன்னையன்றோ
[கண்மணியே!

பிஞ்சு வயதிற் பெரிய கடுந்தவமேன் ?
கொஞ்சுமொழி யொன்று கொடுத்தருளாய் கண்மணியே !

அங்குவந்துன் னிச்சைக் கமைந்த தவம்புரிவாய் !
இங்குனக்கு நாதியொன்று மில்லையடா கண்மணியே !

மின்றவழு மேனி மெலிந்துலர வேண்டாமுன்
வன்றவத்தை வீட்டில் வளர்க்கவா கண்மணியே !

வாயைத் திறவாயோ வார்த்தையொன்று பேசாயோ !
தாயை மறந்தாயோ சற்றிரங்காய் கண்மணியே !

சிறப்புடனே யுன்வினைக்குச் செய்வனவெல் லாஞ்செய் [வோம் !
புறப்படடா கூடவுடன் புண்ணியமாங் கண்மணியே !

மலைபோலு மென்கவலை மல்கி மனமெல்லாம்
உலைபோல வேகுதடா வுன்னாலோ கண்மணியே !

*இன்னும் நெடுக அடுக்கிப் பரிதவித்தாலும் சமம் ப்ரஹ்மம் கொஞ்சமேனும் தாழவில்லை. அருட்போதம் மருட்போதத்தை ஏறிட்டும் பார்க்கவில்லை.*

தரைகுலைந் திடினும்—அறிவே, தவங்குலைந் திடுமோ ?
வரைபெயர்ந் திடினும்—அறிவே, மனம்பெயர்ந் திடுமோ ?

ஊழியிடி விழினும்—அறிவே, யுறுதிசிந் திடுமோ ?
ஆழியெதிர் வரினும்—அறிவே, யாண்மைதளர்ந் திடுமோ ?

உள்ளபடி யிருந்தால்—அறிவே, யுன்னலறத் தெளிந்தா
லுள்ளவனிச் சையினால்—அறிவே, யுள்ளபடி நடக்கும் !

*பேச்சு மூச்சுக் காணோம் ; பெற்ற மனம் பற்று ! பிள்ளை மனம் ஆனந்தவெள்ளத்தில் மண்புற்றுப்போற்*

கரைந்துவிட்டது ! -மனம் என்ற தொன்று மில்லை. இன்னும் வற்புறுத்தினள்; பிறகு அருகிருந்தவர்களிடம் முறையிட்டாள். யார்தாம் இக் காட்சியைக் கண்டு கரையமாட்டார்! ஒருவர் (பச்சையப்ப பிள்ளை) ஸ்வாமியாரிடம் இறைஞ்சினார். "ஸ்வாமி, தங்கள் தாய் கதறுகின்றாள்! மனமிரங்கி ஒருவார்த்தை சொல்லலாகாதா? (மனம் இருந்தாலன்றோ!) உண்டு இல்லையென்று உடனே உறுதியாகச் சொல்லுங்கள். இதோ காகிதமும் எழுதுகோலும் உள்ளன; மௌனவிரதத்திற்கு பங்கமின்றி, இதில் எழுதிக் காட்டுங்கள்" என்றார். ஸ்வாமிகள் காகிதத்தை வாங்கி அடியில் வருமாறு எழுதிக் காட்டினார் :—

" அவரவர் பிராரப்தப்பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந் தாட்டுவிப்பன் "

என்றும்,

நடவாத தென் முயற்சிக்கினு நடவாது;
நடப்ப தென்றடை செய்யினு நில்லாது.
இதுவே திண்ணம். ஆகலின்,
மௌனமா யிருக்கை நன்று !

இந்த மஹாவாக்கியத்தைக் கண்டாள் அன்னை! என்ன சொல்வாள்? " அவனிச்சை என்னை யிங்கு ஊன்றி வளர்க்கிறது; உன் பாச இச்சை பலிக்காது. அவன் செயல் நடக்கும்; உன்செயல் நடவாது" என்றுறுத்திய இந்த வேதாந்தத்தைக் கண்டு, தன் முயற்சியெல்லாம் வீணென்று மனமுடைந்து தாய் சென்றாள்; நாகசாமிக்கும் கச்சேரி திறப்பதால், " இதற்குத்தானா இத்தனை சிரமப்பட்டு வந்தேன்!" என்று நொந்து அவனும் உடனே வந்தவழி நோக்கலானான்.

ஸ்வாமிகள் இரக்கமற்றவரா? தாயை அவமதித்தாரா? இல்லை, அவர் கருணைக்கடல்; நாய், பசு, குரங்கு, திருடனுக்கும் அவரன்பு நன்கு விளங்கும். தாயினிடம் அவருக்குள்ள உண்மையன்பு, தெய்விகமான அத்யாத்ம அன்பு, மாத்ருபூதேச்வரர் ஆலயத்தைப் பார்த்தால் விளங்கும். "நீ வா! நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்; நீ என் மகன்" என்று பாசம் பூண்ட மட்டும் ஆண்டவன் மனக்கலக்கந் தீர்க்கவில்லை; பின்னால் ஆண்டவன், பாசப் பற்றிற்கு இடமான சுற்றங்களை யெல்லாம் ஒழித்து, சம்ஸாரதுக்க மென்னும் நெருப்பில் வாட்டி, மனத்தை விரக்தி யென்னும் மாற்றேற்றி, முடிவில் "ஸ்வாமியிடம் நான் சென்றடைதலே மேல்" என வந்தவுடன் ஆண்டவனின் அன்பு மலர்ந்தது. ஸ்வாமிகளுக்குத் தாய்மேலிருந்த உண்மையன்பு பட்டினத்தார்க்கும் அரிது. மேலும், தமது உறுதியான தவ நிலையில், ஏகாந்தமே யினிதுவக்கும் நிலையில், தன்னை முற்றும் மறந்த மோனநிலையில், உற்றார், உறவினர், தாய், தமையன் என்ற அபிமானப் பாசங்களை யெல்லாம் மெய்ஞ்ஞானவாளாற் சிதைத்தெறிய வேண்டிய நிலையில் ஸ்வாமிகள் சும்மா இருந்ததே தகுந்த விடை. அப்படி யிருப்பினும் தாயாருக்கு அறிவு வரும்படி "என்னை யாள்பவன் அவன். எல்லாம் அவனிச்சைப்படி நடக்கிறது; நீ சும்மா விரு. அவனிச்சை யிருப்பின், உனக்கும் நல்லறிவுதித்து நலமெய்தும்" என்று பொருள் படக் கூறினார் நமது ஞானப்பாலருவாயர்.

கௌதமபுத்தரும் வீட்டிற்குத் தெரியாமல் தவத்தை நாடிச் சென்றார். பின்னே அவருடைய தகப்பனார், தமது

அரசிளங்குமரன் பிக்ஷுவாகக் கையினிற் கலயமேந்தி, காவியுடுத்தி இரந்ததைக்கண்டு உருகி

“ சிந்துர மேறிய செய்ய கழல்கள்
வெந்துயர்க் கானக மேவிய தென்னே !
சுந்தரப் பூண்க டேலங்கிய மேனி
கந்தை யுடேக்கவிக் கண்களுங் காண்மோ !
அரியணை வீற்றர சாளுத லின்றி
யிரவு புகுந்திட லேனென்ன தின்பே ?
மரபுள முன்னவர் வான்புக ழுக்கே
துரிசிது வன்றே ? துறந்திட னன்றே !”

என்று கலங்கினார். அக்காட்சியும் மிகவும் உருக்க மானதே. மாரனும், பெண்களும் புத்தரைச் சோதித்த காட்சியினும், இந்தப் பெற்றோர் பாசம் சோதித்ததே மிக வும் கொடிய சோதனை. புத்தர் ஸர்வசாந்தத்துடன்,

“ சுற்றி மதிற்படுஞ் சோம்புடைச் செல்வப்
பற்றின் விலங்குகள் பட்டென விட்டே
பெற்றனன் முற்றிய பேரறி வின்பம்
பெற்றினி தோங்குக பெற்றவ நீயும் !”

என்றுரைத்தார். புத்தர் பேசி யுறுத்தினர் ; ஸ்வாமி கள் மௌனமாக எல்லாம் பொறுத்து, அனைத்தை யும் ஆட்டுவிப்பானிடம் அன்னையை ஒப்புவித்துவிட்டார். ஏசுநாதர் அவரது சீடர்களுட னிருக்கையில், அவரது தாயார் மரியாளும், சகோதரரும் அவரைக் காணவேண்டி னர். ஒரு சீடர் ஏசுநாதரைக் குறித்து, “ பாருங்கள், தங் கள் தாயும், சகோதரரும் தங்களைக் காண வெளியே காத் திருக்கின்றனர்” என்றார் ; ஆனால் ஏசுநாதர் என்ன சொன்

னர்? "தாய் யார்? சகோதரர் யார்?" என்று, உடனே தமது சீடரைச் சுட்டி, "இதோ என் தாயையும் சகோதரரையுங் காணுங்கள்! யார் எனது பரமபிதாவின் இச்சையை நிறைவேற்றுகிறரோ அவனே என் சகோதரன், சகோதரி, தாயார்" என்றார்! இப்படிப் பெற்றோரால் தவத்தநயரின் வைராக்யம் சோதிக்கப்பட்டதற்குப் பல மஹான்களின் உதாரணங்கள் காண்கிறோம். நமது ஸ்வாமிகளும் ஏசுநாதர் சொன்னதையே விளக்கினர்:— "அனைத்தையும் ஆள்வோனின் இச்சைக்குப் பாத்திரமாகும்போதே, நீ உண்மையறிந்து பாசமுறிந்து இங்கு வருவாய்; அவனிச்சைக்குப் பாத்திரமாகாமல் "என் குழந்தை; நான் போற்றுவேன்" என்பது அகந்தையின் பாற்று; அதை யுதறி எல்லாம் அவனிச்சையென விடுத்துச் சும்மா இரு" எனும் பொருளிற் சொன்னது மிக அருமையாயிருக்கிறது.

இச்சையாற் பூவை யியக்கு முளத்தலைவன்
வைச்சவிடம் வைச்சபடி வாழ்!

## உச. குகன்

இராகம் மத்யமாவதி — தாளம்—ரூபகம்.

குகையே நீகோணர்வாய் - உன்னுட், கோயி லிருப்பவனை
குகையா மிதயத்துள் "அக"மென் றோங்குமக்
குகனை நீகோணர்வாய்!

மலையே நீயிலக்காய் - சுத்த, மாதவ மாணிக்கத்தை
மலைபோல் யோக ஸமாதி வளர்ந்தெழில்
மன்னனை நீயிலக்காய்!

கதிரே நீவிளக்காய் - மனக், கங்குல் சிதைத்தவனை
கதிரா ஞானக் கருவை யுறுத்திடுங்
கண்ணனை நீவிளக்காய் !

அருவீ யார்த்திறைஞ்சாய் - ஸச்சி, தானந்த நித்தியனை
அருணா சலமெனு மானந்த ஜோதியை
யருவீ யார்த்திறைஞ்சாய் !

பூவே நீமகிழாய் - இந்தப், புண்ணியப் பூங்கழலில்
பூவார் புன்னகைப் பொன்சுட ருண்டேளப்
பூவே நீமகிழாய் !

சோணா மாரிபெய்க - " ஹம்ஸஸ், ஸோஹம் சிவோஹ "
தானே தானாக ஞான ப்ரவாகமாய் [மென்றே
சோணா மாரிபெய்க !

அண்ணாமலை தனது உள்ளத்துள்ள தெய்வரகசியத்தை அன்பர்களுக்குத் தெளிவாக மௌனோபதேசஞ் செய்கின்றது! அதன் இதயம் போல் அமைந்திருக்கும் குகைகளில் மனமூன்றிச் சிறிதுகால மிருப்பினும் அந்த இரகசியம் மனத்தில் தானாக உதிக்கும். தவத்திற்கேற்றது மலைக்குகையே என்பது அனுபவம்; அத்தகைய குகைநிலயங்கள் அண்ணாமலையின் அடிமுதல் முடிவரையில் அங்கங்கு வாய்மலர்ந்து ஞானத்தவத்தினரைக் கூவி யழைக்கின்றன. இக்குகைகளுக் கரசு விரூபாக்ஷ குகை. இது ஓங்காரவடிவா யமைந்தது. இதனுள் ஓமொலி கேட்கும். இதன் பக்கத்தில் ஒரு தெள்ளிய மலையருவி பாய்கிறது. மாரிகாலத்தில் இதன் காட்சி இத

னிடைத் தவம்புரிவோர் மாண்பிற்கும் அழகிற்கும் அமைதிக்கும் சாக்ஷியாய் விளங்குகிறது. இதன்கண் விரூபாக்ஷதேவர் ஸமாதியுள்ளது. இது விரூபாக்ஷ மடத்தினரைச் சேர்ந்தது. கார்த்திகைதீபத்தின்போது அவர்கள் இங்கு உண்டியல் வசூலிப்பது வழக்கம்.

இதன் அழகிய காட்சியைப் பொன்னழகு செய்து நமது தவராஜர் இங்கு வீற்றிருக்கிறார். அவர் தங்குமிடமெல்லாம் தவச்சாலை; இருந்தவிட மெல்லாம் அன்பர் குழாம். இங்குதான் ஸ்வாமிகளின் ஆன்மக்கதிர், சிறந்த முமுக்ஷுக்களான பக்தர்களைக் காந்தமென இழுத்து, திருவடிப்பணிக்கே அவர்கள் அன்பையும் வாழ்வையும் அர்ப்பணிக்க வீசியெழுந்தது. இதுவே அந்த ஆத்ம ஸாம்ராஜ்யத்தின் தொடக்கம். ஸத்குருஸ்வாமி குகை, குகைநமச்சிவாயர்கோவில் மூலைப்பாலூற்றிற் கருகுள்ள மாமரத்துக்குகை முதலியவற்றிலும் மாறிமாறிக் காலத்திற்கேற்றபடி யிருந்தாரெனினும், 1922-ம் ஆண்டு மட்டும் விரூபாக்ஷகுகையே அவருடைய பிரதானநிலயமா யிருந்தது. ஸ்வாமிகள் வந்தபிறகே அக்குகைக்குப் புதுமையும் மகிமையும் ஏற்பட்டது.

நாள்தோறும் கூட்டம் வரவர பலப்பட்டது. பண்டிதரும், பாமரரும், ஞானப்பசியினரும், மோனத்தவத்தினரும், விரதப்பெண்டிரும், அன்புச்சிறாரும், ஆடற் குழந்தைகளும் அனைவரும் இச்சலனமற்ற ஜோதிச்சுடரை நோக்க, மலருங் கனியும் நிவேதனங்களுங் கொண்டு அணி யணியாக வருவர். வறுமையுற்றவன் மாணிக்கங்கண்டென்ன, உண்மையறிவிற்கு உளப்பசியுள்ளவர் ஸ்வாமிகளின் ஸந்நிதிப் பெருமையிலேயே அப்பசி நீங்கி ஆனந்திப்பர்.

சங்கையிற் சாத்திரச் சக்கைசுக மீயுமோ
ஜடவாழ்வி லின்ப முறுமோ ?
சடசடென சபைமெச்சச் சந்தம் பொழிந்துஞ்
சமாதான மாகி விடுமோ ?
அங்கண்மா வுலகைத் திருத்துவோம் யாமெனு
மரும்பணியு மமைதி தருமோ ?
அருநிதிகள் யாவையு மமைந்தோங்கி னும்மன
மடங்கிட வுபாய மாமோ ?
கங்கையுந் தானமுங் கருமமுங் காவியுங்
கவலையை யொழித்து விடுமோ ?
காயக் கிலேசமுங் கற்பமும் மூச்சுங்
கடைத்தேற வழியு மாமோ ?
தங்குதடை யில்லா ஸதானந்த மோனியுன்
ஸந்நிதிப் பெருமை வருமோ ?
ஸர்வஸம ரஸசுத்த சாந்தநிலை யொளிவளரும்
ஸச்சிதா னந்த மயமே !

என்று ஸந்நிதானப் பெருமையாற் புதுமகிழ் வெய்தி நிற்பர். சிலர் சிற்றுண்டிகள் கொடுத்துப் பிரஸாதம் பெற்றுச் செல்வர்; சிலர் அடிநிழலி லமர்ந்து தியானஞ் செய்வர். இந்தப் பரமாநந்தக் காட்சியூடு கார்த்திகை தீபத்தின்போது மற்றொரு விநோதமும் நடப்பதுண்டு.

இது விரூபாக்ஷகுகையில் நிஷ்டையி லிருந்தநாளில், ஒருவன் வந்தான்; "சாமி, சாமி, ஒரு செய்திங்க ! கேக்கணுங்க" என்றான். விழித்து நோக்கியது. "சாமி, இந்தக் கார்த்திகை தீபத்துக்கு இங்கேயே யிருக்கட்டும். சாப்பாட்டுக்கு வழி பண்ணுவோம்; அவசரகாரியத்திற்கும்

உள்ளே சட்டிவைத்துவிடுகிறோம். தயவுசெய்து ஒருகாரியம் பண்ணுங்க" என்றான். இது வியப்புற்றது. "காலை ௬-மணி முதல் மாலை ௬-மணி மட்டும் அசையாது உள்ளே உட்கார வேணுங்க! கூட்டம் வரும்; தங்களைச் சுற்றி வந்து தெண்டனிட்டுச் செல்லுங்க; தங்கள் பேரும் பிரஸித்தமாகுங்க" என்றான். "கூட்டம் கூடாது" என்று எழுதிக் காட்டியது. "இல்லேங்க, இதுதானுங்க எங்களுக்கு வரும்படி. கார்த்திகைக்கு உண்டியல் வசூலிப்போம் :—' உள்ளே ஒரு மஹான் இருக்கிறார்; ஊணுறக்கமில்லை; அப்படியே சமாதியில் கல்லாய் நிலைத்துவிட்டார்; பார்த்தால் பாவம் போகும்; வணங்கினால் வரந் தருவார்; முன்னே நின்றால் நினைத்ததாகும்' என்று சொல்லித் தமுக்கடித்து ஆளுக்குக்காலணா வாங்கிக் கொண்டு உள்ளே விடுவோமுங்க! உங்களுக்கும் நல்லதுங்க" என்று சொல்லவே, முடியாதென மறுக்கப்பட்டதும், "இல்லாட்டி நீங்க இடத்தைக் காலி செய்யணுங்க; வேறு பரதேசியைப் பிடித்து உட்கார வைப்போமுங்க. இல்லாட்டி நாங்களே துன்னூறு பூசிக் காவிகட்டி, உட்காருவோமுங்க" என்றான்; அன்று மாலை இதையறிவித்ததில் பகவான் தமது அனுபவத்தைச் சொன்னார்; அதன் ஸாரமாவது :—

கார்த்திகைநாட்களில் கூட்டமெல்லாம் பிராமணஸ்வாமியைப் பார்க்கவே திரண்டுவரும். † ஸ்வாமிகள் விரூபாக்ஷ குகைக்குள் அமர்ந்திருப்பார். அப்போது குகைக்

† சத்திநிபாதம் பெற்ற உத்தமப் பெரியோர், யோகசக்திகனல் விளங்கும் சுத்தான்ம ப்ரகாசர்கள், கடவுளறிஞர்களுக்கே அருளடிகள், சுவாமிகள் எனும் பெயர் தகும்.

காரர் ஊக்கமாக உண்டியல் (ஆளுக்குக் காலணு) வசூலிக்கத் தொடங்கினர். பலர் பணங்கொடுக்கப் பிரியமின்றி ஸ்வாமியைக் காணுது வருந்தித் திரும்பினர். இது ஸ்வாமிகளுக்குப் பிடிக்கவில்லை; உடனே குகையை விட்டு வெளியில் வந்து உட்கார்ந்தார். அங்கு அனைவரும் காணலாம் எனினும், வரும் வழியில் நின்றுகொண்டு வசூலிக்கத் தொடங்கினர். இது அருவருக்கத் தக்கதன்றோ! ஓடுஞ் செம்பொன்னும் ஒன்ருக நோக்கும் சுத்த முக்தரான ஸ்வாமிகளின் பெயரைச் சொல்லி உண்டியல் வசூலித்தல் பொருந்தாத் தொழி லன்றோ! ஆதலின் ஸ்வாமிகள் விரூபாக்ஷகுகையை விட்டுக் கீழே ஸத்குருஸ்வாமி குகைக்கும், பிறகு குகைநமச்சிவாயர் கோயிலுக்குஞ் சென்று தங்கினர். ராமனிருக்குமிடம் அயோத்தி யன்றோ! கண்ணனிருக்குமிடம் கோகுல மன்றோ! ஆதலின் தவராஜர் எங்கு சென்ருலும் அங்கே கூட்டம் சென்றது. இப்போது விரூபாக்ஷகுகை விரிச்சிட்டது. குகைநமச்சிவாயர் கோயிலுக்குக் கூட்டந் திரும்பியது. இதையுணர்ந்து குகைக்காரர், "ஸ்வாமிகள் குகையிலிருக்குங் காலமட்டும் நாங்கள் வசூலை நிறுத்திவிடுகிறேம்! தயவுசெய்து மீண்டும் குகைக்கு எழுந்தருளவேண்டும்" என்றதும், அவ்வாறே மீண்டும் தவராஜர் விரூபாக்ஷகுகையை யடைந்தார்.

எத்தாலு மட்போருளை யிச்சிக்காச் சுத்தர்களே
நித்தியமாஞ் செல்வ நிதி.

மாரிகாலத்தில் விரூபாக்ஷகுகை மிகவும் இன்பமாயிருக்கும். கோடைகாலத்தில் அருவி வற்றிவிடு மாத

லின் வெப்பாயிருக்கும். முலைப்பாலூற்றிற்கருகே வசித்த வைத்தியம், ரஸவாதம், சாஸ்திரப்பயிற்சிகளில் முயற்சி யுள்ள ஸ்ரீரங்காசார்ரியா ரென்று ஒருவர் அங்கு ஓரிட மமர்ந்தார்; அதனருகே யுள்ள ஒரு சிறு குகையை அவரு டைய சகோதரர் சீர்ப்படுத்தி, ஸ்வாமிகளை அங்கு எழுந் தருளும்படி வேண்டினார். அங்கே ஸ்வாமிகள் கோடைக் கமர்ந்தார்; எப்போதும், ராமனுக்கு லக்ஷ்மணன் போன்று பழனிஸ்வாமியாரும் கூட இருந்து தொண்டு செய்தார். அன்பர்கள் பால், பழம், நிவேதனங்கள் கொண்டுவருவ துண்டு. ஆனால், ஸ்வாமிகள் ஸந்நிதி யில் இப்போது சிலர் ஸ்திரவாஸஞ் செய்யத் தொ டங்கிவிட்டனர்; எது வரினும் அனைவர்க்கும் பகிர்ந் துண்ணும் நெறியை எப்போதும் கடைப்பிடிக்கும் ஸ்வாமி கள் உடனிருப்பவர்க்கும் இப்போது ஊட்டவேண்டி யிருந்தது. ஆதலின் பழனிஸ்வாமியுடன் மற்றோர் சிலரும் சிவநாமங்களைப் பாடிச் சங்கூதி, ஊரில் பிக்ஷையெடுத்து அனைவர்க்கும் ஊட்டிவந்தனர். பிக்ஷையெடுக்கும்போது அருணாசலன் பெயரைக் கூவித் துதித்துச் செல்ல வேண்டியே, சிறந்த வேதாந்த தத்துவங்க ளடங்கி ஆவியை ஆண்டவன்பாற் கூவியெழுப்பிக் கூட்டிச்செல்லக் கூடிய அக்ஷரமணமாலையை ஸ்வாமிகள் அப்போது பாடியருளி னார். இதனின்று பல மேற்கோள்கள் முன்னேயே கை யாண்டிருக்கின்றோம். இப்பாக்கள் சீக்கியரின் "ஜப்ஜி" மாதிரி ஆத்மவீர மெழுப்பும் சிங்கநாதம் போன்றன.

இக் காலங்களிலும் ஸ்வாமிகள் முன்போலவே மௌனமா யிருந்தபடியிருந்தார். ஆனால் கருத்துள்ள வர்கள் தாங்கள் படிக்கும் யோகநூல்களில் ஏதேனும்

ஸந்தேகமிருந்தால், ஸ்வாமிகளிடம் நூல்களைக் கொடுத்து விளக்கும்படி வேண்டுவர்; தமது கூர்மதியால் அதை அதிதீவிரமாகப் பார்த்துக் கருத்தறிந்து, ஸ்வாமிகள் தமது யோகாநுபவத்தினின்று பொருந்திய விடைகளை யெழுதித் தருவார்.


தன்னறிவி னின்றொளிருந் தானேதா ஞானருக்
கெந்நூலுந் தந்நூலென் றெண்.

## ௨௫. பொறுமை! பொறுமை!! பொறுமை!!!

ஆற்றல் பொறையளவே யாகு மதுவுடையோ
னேற்றம் பெறுமெங்கு மெண்.

நோவுறினு நோவீயா நுண்ணறிவன் சீலனு
மாவ னமர னவன்.

மலைக்கு வந்தபின் பகவான் ஸதா ஸஹஜநிஷ்டராகிப் பல அன்பர்களால் நன்கு உபசரிக்கப் பெற்றதால் “இருந்தவிடம் இருந்தபடி இருந்தருளினார்” என்றே, ஸ்ரீ ரமணவிஜயத்தின் மூன்றாம் பாகத்தை முடிக்கவேண்டியிருக்கிறது. ௵ 1900—1912 ஸ்வாமிகள் சரித்திரத்தில் மிகவும் முக்கியமான பாகம்! அப்போதுதான் புகழ்வாய்ந்த சீடர்கள் (கம்பீரம்—சேஷய்யர், சிவப்பிரகாசம்பிள்ளை, கணபதிமுனிவர், ராமஸ்வாமியய்யர், லக்ஷ்மியம்மாள், ஹம்ப்ரி முதலியோர்) பகவான் ஸ்ரீ ரமணமகர்ஷிகளின் அமுதமொழிகளை யருந்தி சாந்தியடைந்து அவருடைய



உள்ளன்புத் தொண்டர்களா மோங்கிப் பெருகியருள்—வள்ளலவன் வண்மையினில் வாழ்வு.

அத்யாத்மக்காந்தத்திற்கு என்றும் ஆளான காலம். ஆதலின் அக்காலத்தை நாலாவது பாகமாக விவரமாக எழுதுவோம்; இதனிடையே, சுமார் 1908-ம் ஆண்டு ஸ்வாமிகளின் பொறுமைக்கு வந்த சோதனைகளை ஈண்டுக் கூறி முடிப்போம். இப்போது மகர்ஷிரமணரென்ற பெயர் பிரஸித்தமாகிவிட்டதால் அப்பெயராலே அவரைக் குறிப்போம்.

கதிர்வளர் முகமும், கருணையகமும், அறிவுப்பெருக்கும், அன்புப்பெருக்கும், சாந்தப்பெருக்கும், ஸந்நிதி வளமும், ஐய மகற்றும் மெய்யருள் ஞானமும், வினவினோர்க் கேற்ற விடைதருந் திறனும், கண்ட வுடனே கருத்தை யிழுத்து மலரடிக் காட்செயும் மாதவ ஜோதியும் பொலியும் மகர்ஷிகளிடம் கற்றோரும் மற்றோரும், பெரிய உத்தியோகஸ்தரும், செல்வரும் வந்து வணங்கி யடியாரா வதைக் கண்டு, சில மஞ்சட்கண்களில் பொறாமையழுக்குப் படிந்தது.

### காஷாயவுலகம்

காஷாயவுலகின் விநோதங்கள் பல; அவ்வுலகம் தற்காலம் பலவிதம். உண்மையாக ஆத்மாநுபூதி பெற்றுத் தன்னடக்கத்துடன், ஸங்கல்பரஹிதராக வாழும் ப்ரஹ்ம நிஷ்டரை வணக்கத்துடன் நமது அன்பின் உச்சியிற் கொண்டாடுவோம்; ஸாதாரணமாக, யோகிகளுக்குத் தொண்டு செய்து அதுவே தவமென வாழும் ஸாதுக்களையும் வணங்குகிறோம்; இன்னும் ஸாதாரணமாகத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ், தாயுமானவர் முதலிய பாடல்களைப்பாடி அன்னக்காவடி யெடுத்துண்டு சிவபக்த

ராக வாழும் நல்லோரையும் போற்றுகிறோம்; திருமடங்களில் துறவறம் பூண்டு, ஞானநூலாராய்ச்சியும் சிறிது பஜனை தியானமுஞ் செய்துகொண்டு ஒழுங்காயிருக்குஞ் சிறியரையும் மதிக்கிறோம்; கோயில்களிலும், மடங்களிலும் திருத்தொண்டு புரியும் அன்பரையும் ஏற்கிறோம். இத்தகைய ஸாதுக்களை நன்கு மதிக்கிறோம்.

ஆனால், முறையின்றி சாமிப்பட்டம் வைத்துக் கொண்டு சாமக்ரோதங்களையும், பணப் பேராசையையும், ஏமாற்றங்களையும், சுயநலத்தையும் மனமொழி மெய்களில் ஊழல்நாறும் ஆணவமலத்தையும், நீற்றிலும் காவியிலும் மறைத்து அல்லவை செய்துழலும் போலிகள் நம் நாட்டிற்கும் தர்மத்திற்கும் நோயென்றே கருதி, அந்நோய்கள் தீர்ந்து, துறவறம் களங்கமற்ற சூரியனைப் போலப் பளிச்சிட்டு இயல்பாகித் தவசக்திக்கதிரைப் பரப்பி நிற்கவேண்டுமென்பதை யார்தாம் விரும்பார்! இவர்களால் "சுவாமிகள்" என்ற பெயருக்கே பெருமை போயிற்று. "சாமிதானே, என்ன செய்யப்போகுது! சாமி கிடக்கட்டும்" என்று உலகமாந்தர் செருக்குடன் பரிகசிக்கும் நிலை வந்துவிட்டது.

> "தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
> வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று."

நெஞ்சில் துறவாத இந்த சாமிக்கூட்டங்களின் விநோதலீலைகள் பல:—பூரணாஹுதியை ஒரு கவளம் விழுங்கி முருகையாவின் ஆவேசத்தை நடித்து, பேதையரைப் பிரமிக்க வைத்துப் பணம் வாங்கும் ஒன்று; ஓரிடத்தில் வேலை நட்டுப் பழனியாண்டவருக்கு உண்டியல் வசூல்

செய்யும் ஒன்று; இன்னொன்று மடத்தாயும் குஞ்சுகளுமாகக் காலியிடங்களில் தங்கி, லிக்தமூலிகை வைத்தியக்கடை விரிக்கும்; மற்றொன்று உடுக்கடித்துக் குறிசொல்லும்; இன்னொன்று ரேகைசாஸ்திரம் சொல்லும்; வேறொன்று "ஹா-ஹூ" என்று ஆடிக்குதித்து, "மாரியாத்தாள் குற்றம்; கருப்பன் குற்றம்; நீ அதைச் செய், இதைச் செய்" என்று ஏழைகளை அச்சுறுத்தும்; மற்றொன்று ஜோதிடம், மாந்திரீகம் இவற்றின் பெயரால் புகழும் பிழைப்புந் தேடும்; "நான் ஸித்தன்! இதோபார் என் சித்தை!" என்று கண்கட்டு வித்தை (Magic) காட்டுமொன்று; இன்னொன்று கஞ்சாவில் மயங்கி, "அந்தோ பரலோகம்; அதற்குக்கீழ் எமலோகம்" என்று மோக்ஷக் கனவுகளை வர்ணித்துப் பாடும்; இன்னொன்று கருமருந்துகள், பில்லி, சூனியம், ஏவல் முதலிய சைத்தான் வித்தைகளால் பயங்காளிகளைக் கொடுமை செய்துழலும்; மற்றொன்று தங்கம் செய்து கொடுக்கிறேனெனத் துத்தமும் ரசமும் சமனெடை கலந்து குகையிலுருக்கியெடுத்து அத்துடன் செம்பு குப்பைமேனி நத்தச்சூரி மணத்தக்காளிச் சாறுகளைச் சேர்த்து சிலமண் செய்து, உலையிலிட்டு ஒரு போலிப் பொன்னைக் காட்டிப் பெருந்தொகை வாங்கிக்கொண்டு ஏமாற்றும். இந்த ரஸவாத லீலைகளும் ஏமாற்றங்களும் பல பல. இவர்கள் 1 : 4 தங்கம் சேர்த்து இந்த போலிப் பொன்னை விற்கின்றனர். இப்போலி வித்தை காட்டி இவர்கள் மானம் அழித்த குடும்பங்கள் பல. மக்கள் யோக்கியமான உழைப்பைப் பொன்னாக்குவதே அறம். செம்பை மஞ்சளாக்கி ஏமாற்றுவோர் மாயையில்

விழவேண்டாம். மற்றொன்று "புதையலெடுக்கிறேன்; உன் வீட்டுக் கொல்லையிலிருக்கிறது" என்று ஒரு கிணற்றுழம் பறிக்கச்சொல்லி, பின்னும் அதைக் காக்கும் பூதத்திற்குப் பூசை போடுவதற்குத் தொகை பெற்று அதோடு ஓடி மறையும்; சிலது சிற்றின்ப மலவாசனைகளில் இராப் பன்றிபோலுலவும்; சிலது கைகால்களிலும், நாவிலும் தந்திரமாக வேல்களை யேற்றிக்கொண்டு பணத்திற்காகத் துணியை விரித்து நிற்கும்; சிலது 'சோறு கண்டவிடம் ஸ்வர்க்கலோக' மெனத் தின்று தூங்கும். சிலது மார்பிலும் விலாவிலும் அடித்துக்கொண்டு பாட்டுப் பாடிப் பணங்கேட்கும்—இப்படி எத்தனையோவிதமான விநோத வுலகம் அது. அவ்வுலகை நாம் இகழவில்லை; அனைத்தையும் ஆத்ம ஸமத்வத்துடன் நாம் மதிக்கிறோம். எனினும், இவ்வளவு பேர்களும் எதாயினும் ஒரு நல்ல குருவையண்டி ஞானவழியில் திரும்பலாகாதா? அல்லது யோக்கியமான ஒரு தொழில் நடத்திக் கிரமமாக இல்லறத்தில் வாழக்கூடாதா? அல்லது எதாயினும் பொதுநல வூழியத்தை மேற்கொள்ளலாகாதா? என்பதே நமது கேள்வி. இத்தனை பாரதப் புதல்வர்களும் தூய ப்ரஹ்மசர்யம் வகித்து உண்மைத் தவநெறியை மேற்கொண்டால் நாடு எவ்வளவு புனிதப்பெருமை பெறும்! ஆனால் நாம் யார் இதைக் கேட்கவும் செய்யவும்? ஆண்டவனையே இவர்கள் நலத்திற்காக வழுத்துகிறோம். ஒரு காவியாடை, ருத்ராக்ஷம், விபூதி, கையில் விபூதிப்பை, ஒரு திருவோடு, குமிழ்பாதுகை இத்துடன் துறவியாய்விடுகின்றனர்! ஆ! எத்தனை காலம் தவஞ்செய்து காடும் மலையுங் கருதி யிருந்திருந்து, மனத்துற வடையவேண்டி யிருக்கிறது! உளந்திருந்

தாத வெளிவேடத்தால் இகமும் பயக்காது ; பரமும் பயக்காது.

" மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின். "

விழித்த மனத்திற்கு வேடம் எதற்கு? திருப்பதி, அண்ணாமலை, குன்றக்குடி முதலிய தலங்களில் திருவிழாக் காலங்களில் இவர்களின் சங்குஞ் சேகண்டியும், கப்பரையிற் காசு குலுக்குஞ் சலசலப்பும் காதைப் பிளக்கும். ஒருவர் அதிக இசை பெற்றால் உடனே மற்றவனை அழுக்காறு பற்றும்.

இத்தகைய போலிகள் பகவானின் பொறுமையைச் சோதிக்கத் தொடங்கினர் ; அவர் புகழைக் கருதுகிறாரா? எவரையும் " இங்கே வாருங்கள் ; ஞானோபதேசஞ் செய்கிறேன் " என்றழைக்கிறாரா? இல்லை, இல்லை. சுடருக்குப் பூச்சிகள் தாமாக வருகின்றன ; பழுத்த மரத்திற்கு வௌவாற் கூட்டங்களும், கற்கண்டுக் கட்டிக்கு எறும்புத் திரள்களும் இயல்பாக வருகின்றன. ஞானத்தாமரை மலர்ந்து தேன்பிலிற்றுகிறது ; அளியினங்கள் துதிபாடி விருந்துண்ண வருகின்றன. இவற்றைத் தடுக்க யாரால் முடியும்? இப்படி யியல்பாகப் பல அன்பர் வருவதனால், ஸ்வாமிகள் வேண்டுதல் வேண்டாமை யிலாதவராக அருள் பாலிப்பதனால், மலையிலிருந்த சில சாமியார்களிடம் கூட்டஞ் செல்லாது வரும்படி குறைந்து, 'வாதி,' 'ஸித்தன்,' 'வைத்தியன்' என்னும் இசையும் மதிப்பற்றது. ஆதலின், " இந்த பிராமணஸ்வாமியன்றோ நமக்குப் பிரதிவாதியாக முளைத்து அனைவரையும் வசப்படுத்தி

யிருக்கிறார். வாதியை ஒருவரும் மதிப்பதில்லை; வரும் படியுமில்லை. இப்படி யிருந்தால் நமது பிழைப்பு நடக்காது" என்று பிராமணஸ்வாமிக்கு பலவிதம் சிறுமை செய்யத் தொடங்கினர். ஸ்வாமிகள் குருமூர்த்தத்தில் மௌனமா யிருக்குமட்டும், இவர்கள் அவருக்கு வணங்கிப் பாதபூஜை செய்து அன்பாயிருந்தனர்; "சாமி பேசுது. பெரிய மனிதர் எல்லோரும் அங்கேயே மயங்குகின்றனர்" என்று கண்டதும், சிறுமையும் அகந்தையும் பொறாமையும் எழுந்தது. இப்படிப்பட்ட ஸாதுக்களில் இரண்டு மூன்று பேரின் செயல்களை மட்டும் குறிப்பாம்— அவர்களுடைய இயற்பெயரைக் குறிக்க எமக்கு மனமில்லை. அவர்கள் செயலையே நாம் விரும்பவில்லை: அவர்களை என்றும் ஆத்மஸமானமாக மதிக்கிறோம்.

ஒரு ஸ்வாமியார் முதலில் ஒழுங்காக விரதங் காத்திருந்தார்; பிராமணஸ்வாமியையும் வணக்கமுடன்போற்றினார். ஸ்வாமிகளும் அவருக்குத் துணைபுரிவதுண்டு. ஆனால் அவர் புகழ் அதிகமாயிற்று; யார் வந்தாலும் நிஷ்காம்யமாக ஞானவருள் புரியும் அவரிடமே செல்கின்றனர். தன்னிடம் கூட்டம் வருவதில்லை; மேலும் யாராயினும் புதிய சாமியார்கள் வந்து தன்னைவிடப் புகழடையத் தொடங்கினால், அந்தச் சாமி அவர்கள் குகைகளில், இரவில் கல்லை யுருட்டி அச்சுறுத்தி அவர்களைப் பயந்தோடச் செய்யும். ஆதலின் அவரைப் பூச்சாண்டிச் சாமி என்று புனைந்தழைப்போம். அந்திவேளையில் அல்லது இரவில் மகர்ஷிகள் தனித்திருக்கையில் இந்தப் பூச்சாண்டிச்சாமி உயரவிருந்து கற்களை உருட்டும்; அல்லது வீசும். மகர்ஷிகளின் பக்கத்திலே அவை விழும்; ஆனால்

நல்ல வேளையாக மேலே விழுவதில்லை. தேகாபிமானம் மருந்திற்கும் இல்லாத மஹர்ஷிகள், இவற்றிற்கெல்லாம் அஞ்சாது அமைதியா யிருப்பார். இப்படி நடக்கையில் ஒருநாள் இந்தத் தந்திரத்தை மெள்ளக் கண்டு, பூச்சாண்டிச்சாமியைக் கல்லுங்கையுமாகப் பிடித்துவிட்டார். கிழட்டுப் பூச்சாண்டிச்சாமியோ "சாமி, வேடிக்கைக்காகச் செய்தேன். விளையாட்டு" என்று சிரித்துத் திரித்துச் சொன்னான்; ஆனால் மஹர்ஷிகள் சாந்தமாக அவரை விடுத்தார். பூச்சாண்டி பணிக்கவில்லை; உடனே மற்றொரு யோக்கியருடன் கூடி, பிராமணஸ்வாமியை எப்படியாவது திருவண்ணாமலையை விட்டுத் துரத்திவிடச் சதியாலோசனை செய்தது பூச்சாண்டிச்சாமி.

அந்த மற்றொருவருக்கு "தடபுடல்சாமி" என்பதே பொருத்தமான பெயர். அவருடைய திரு லீலைகள் அபரிமிதம். அவர் நல்ல படிப்பாளி; உடல் வாட்ட சாட்டமாயிருக்கும். ஆரியம், ஆங்கிலம், பிரெஞ்சு, மராத்தி, ஹிந்துஸ்தானி, தமிழ், மலையாளம் எல்லாம் கற்றவர்; நல்ல வாசாலகர்; ஆளுக்கேற்ற நடிப்புள்ளவர். இத்துணை கற்றும், அடக்கமின்றி அவர் நடந்துகொண்டதே பரிதாபம்.

"கற்றதுங்கேட் டதுந்தானே யேதுக் காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லா லெம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பநிட்டை கூட வன்றோ!"

என்னும் திருவாக்கில் முதலடியின் பிற்பாதி மட்டுமே அவர் வடிவம்; மற்றதெல்லாம் அவருக்குப் பிரதிவாதிகள்.

பிராமணஸ்வாமிகள் குருமூர்த்தத்தில் மௌனத்தில் சும்மா விருந்தபோது அவர் வழிக்குப் போவதில்லை. ஆனால், உலகம் அவரை வணங்கி யணையத் தொடங்கியதும், தன்மதிப்பெல்லாம் போயிற்று ; தன்னிடம் கூட்டம் வருவதில்லை ; தன்னுடைய சரமாரிகளைக் கேட்டு மெச்சுவதில்லை யென்ற அழுக்காறு படமெடுத்துச் சீறத் தொடங்கியது.

ஆசையழுக் காறே யகிலப் பிணிக்குமுதல்
நாசம் வருமே நலம்.

ஆசையும் அழுக்காறும் இல்லாவிட்டால் உலகில் இத்துணை துன்பத்திற் கிடமில்லை ; புலமையும் திறனும் தமக்கே குத்தகை யென்னுந் திண்மையுடன் தமது வேலைகளைத் தொடங்கினார் தடபுடல்சாமியார்.

தடபுடல்சாமியார் தாமே மஹார்ஷிகளுக்கு ஞான குருவென்று காட்டிக்கொண்டார் ; யாராயினும் பண்டம் கொண்டுவந்தால், "இந்தக் குழந்தை எனது சிஷ்யன் ; குழந்தைக்கு பக்ஷணந் தாருங்கள்" என்பார்; "குழந்தாய்! இதோ இது இனிப்பாயிருக்கிறது ; சாப்பிடு" என்று தின்பண்டங்களை வாங்கித்தருவார். வருவோர் அனைவரிடமும் "இந்தப்பிள்ளை என் அருமைச்சீடன் ; அவனை வணங்குங்கள்" என்பார். ஒருஸமயம் வெளிப்படையாக, "குழந்தாய்! வருவோருக்கு நீ என் சிஷ்யனென்று சொல்லிப் பணம் வாங்குகிறேன். பணம் சேர்ந்தால் நல்லது தானே ! அதில் உனக்கொன்றும் நஷ்டமில்லையே? ஆதலால் நீ சும்மா இரு" என்று தமது மனத்தை யவிழ்த்தார். மஹார்ஷிகள் இச்சிறுமைகளை யெல்லாம் எதிர்ப்

பின்றிச் சும்மாவே யிருந்தார். தடபுடல்சாமியாரின் வேடங்களுக்கும் மஹர்ஷிகளின் மோனமுக்திநிலைக்கும் எவ்வளவு தூரம்?

"வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லுங்
காட்டுவது ஞானக் களவுகாண்—தேட்டமற்றோன்
பூரணன்காண் சிற்றறிவன் பொய்ப்பாச மென்றறிந்தார்க்
கோர்வடிவும் வார்த்தையுமுண் டோ"

ஆத்மஸ்வரூபியான மஹர்ஷிகள்,

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந்
தகுதியான் வென்று விடல்"

என்னும் பொய்யாமொழியே உருவெடுத்திலங்குகிறார். ஆனால் தடபுடல்சாமியாரின் வஞ்சனைகளைக் கண்டு மஹர்ஷிகளின் பக்தர்களும் சீடர்களும் மனங் கொதிக்கின்றனர். இன்னுமென்ன?

தடபுடல்சாமியார் ஒருநாள் மகர்ஷிகளின் குகைக்கு வந்து, "அப்பா, குழந்தாய்! இதோ என் பையில் பணம் இருக்கிறது; நீ இதை உனக்கு எடுத்துக்கொள். நான் பணத்தைத் தொடுவதில்லை; எனக்கு ஒரு பக்தன் நூறு ரூபாய் கனகாபிஷேகம் செய்துவிட்டுச் சென்றான்" என்று செவ்வெண்ணெய் புகட்டத் தொடங்கினார். எவ்வளவு விரக்தி! மஹர்ஷிகள் சும்மாவிருந்தார். உடனே தடபுடல்சாமியார், "எல்லாருக்கும் பயன்படக் கொடுத்து விடுகிறேன்" என்று பகல் விளக்குப் போட்டுப் படாடோபமாகச் செலவிட்டார். எதற்கு? பார்த்தவர்கள் வியந்து "என்ன விரக்தி! பணத்தாசை சிறிது மற்றவர்!

மஹான்!'' என்று இன்னுங் காணிக்கை கொடுப்பதற்குத் தூண்டுகோ லாவதற்கே. இன்னுங் கேண்மோ! வருகிறவர்களுக்கு தடபுடல்சாமியார் வரந்தருகிறார்:—
"அடே யுனக்கு வேலை போயிற்றா? இதோ நான் அதை மீட்டுத் தருகிறேன்! இன்னும் மூன்று நிமிஷத்திற்குள் உனக்கு ஸந்தோஷச் செய்தி வருகிறது; உனக்கு என்ன வேண்டும்? அது கைமேற் கனியாகத் தருவோம்'' என்று பாமரர்களை யேமாற்றிப் பணம் பறிப்பார். தடபுடல்சாமியார் ஒருநாள் விரூபாக்ஷகுகைக்கு வந்து, தமது பிரதாபங்களை அவிழ்த்துவிட்டார். கேளுங்கள்! நான் யார் தெரியுமா? முதலில் நான் அவதூத ஸந்யாஸியா யிருந்தேன். பெரிய தனவந்தர் வீட்டிற்குள்ளெல்லாம் செல்லப்பிள்ளை போலப் பாராட்டப்பட்டேன்! சந்தான கிருஷ்ணன்போல விளையாடி வருவேன்! நடுக்கூடத்தில் வெளிக்குப் போவேன்! இஷ்டப்படி செய்வேன்! செல்வச் சீமாட்டிகள் என்னைத் தங்கள் செல்வனெனப் பிரியத்துடன் நடத்துவார்கள்! வேண்டிய பணி செய்வார்கள்'' என்று பிரஸங்கஞ் செய்தார். இந்த விநோத புருஷர் செல்வர் வீடுகளில் ஆபாசலீலைகள் செய்து எப்படி அடிபட்டாரோ! அவர் சொல்வாரா! அவதூதச் சிங்கமன்றோ இந்த அவதூறுகளைக் கர்ஜ்ஜிக்கிறது; ஆனால் அவதூதர், தமது விநோத பால லீலையை விரூபாக்ஷகுகையில் அன்றிரவே காட்டிவிட்டார். குகையின் வெளித் திண்ணையில் வெளிக்குப் போய் வைத்துவிட்டு மேல் நடந்துவிட்டார். காலை யெழுந்ததும் மஹர்ஷிகள் இந் நாற்றத்தைக் கண்டு, 'இது தடபுடல்சாமியார் வேலை' யென்று சும்மாவிருந்தார்.

"பொறுத்த லிறப்பினை யென்றும் ; அதனை
மறத்த லதனினு நன்று"

என்ற வாய்மையே உருவான மகர்ஷிகள் நடந்ததைக் கருதாது மறந்தார். பாவம், கூட இருந்த பழனிஸ்வாமி யாருக்கு அரைமணிநேரம் தோட்டிவேலை பார்க்க வேண்டி யிருந்தது ! தண்ணீர் கொண்டுவந்து அந்த மலத்தைக் கழுவியதுடன், தடபுடலின் ஆணவமலத்தையும் கழுவச் சினங்கொண்டார். தடபுடல்சாமியார் தமது பட்டு, ஜரிகை வேஷ்டிகளை குகையில் வைத்திருந்தார் ; அவற்றையெல்லாம் எடுத்து வெளியே போட்டுவிட்டு, குகையைப் பூட்டிக்கொண்டு பழனிஸ்வாமியார் மகர்ஷிகளுடன் ஒரு ஊற்றுக்கு நீராடச் சென்றுவிட்டார்.

திரும்பி வந்தார் தடபுடல்சாமியார் ! கண்டார் தமது ஆடைகளை. "நமது ஆடைகளையும், துணிந்து வெளியில் எடுத்தெறிந்தவன் யாரடா ! இது பழனிஸ்வாமியின் வேலையோ ? ஆம் ! வரட்டும். அந்த மலையாளியை ஒரு கை பார்க்கிறேன் ! எப்படியேனும் அவனிடமிருந்து இந்த பிராமணஸ்வாமியைப் பிரித்து என் வசப்படுத்துகிறேன் பார். இன்றேல் இவரையும் இதைவிட்டு முடுக்குகிறேன்" என்று ஆத்திரத்தைத் தீட்டிக்கொண்டிருந்தார். ஸாது, மலையாளிஸ்வாமிகள் சுத்தமாகக் குளித்துத் திரும்பி வந்தார் ; தடபுடல்சாமியார் கையை ஓங்கி, "எனது ஆடைகளை வெளியில் எடுத்தெறிய அவ்வளவு ஊக்கம் உனக்குண்டா ?" என்று சீறி உதை கொடுத்தார் ; உடனே பிராமணஸ்வாமிகளின் பக்கம் திரும்பினார் ; "இதோ, இந்தப் பழனிச்சாமியை உடனே இதை

விட்டு அனுப்பிவிடவேண்டும். என் துணிமணிகளை வெளியே விட்டெறிய அவனுக்கு அவ்வளவு தைரியம் பிறந்துவிட்டதா! ஆ! இனி ஒரு நிமிஷம் இவன் இங்கேயிருக்கக்கூடாது. ஹூம்" என்று தடையுத்தரவுபோட்டு மடமையான நெற்றிக்கண்ணைத் திறந்தார்! பழனிஸ்வாமியும், பிராமண ஸ்வாமிகளும் ஒன்றும் பேசவில்லை; பொறுத்திருந்தனர்.

"நாணுமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணுமை பேதை தொழில்"

"ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்"

என்ற பொய்யாமொழியை இங்குக் காண்க. பிராமண ஸ்வாமிகள் தம் வேண்டுகோட்கும் சும்மா விருப்பதா என்று அகங்கார எரிச்சலெடுத்தது; உடனே "தூ! நீ இவ்வளவுதானு" என்று பகவான்மீது துப்பிவிட்டார் அவதூதர்! அந்தோ ஏசுநாதர்மீது அன்று பழிகாரப் பாதகர் துப்பிய கொடுங்காட்சி இங்கன்றோ அன்று உருவெடுத்து நின்றது! ஏசுநாதர் அன்று "இவர்கள் செய்வதை யிவரே யறியார்" என்று எப்படிப் பொறுத்தாரோ அப்படியே, தேகாபிமானஞ் சிறிதுமற்ற மகர்ஷிகளும் பொறுத்திருந்தார். இந்த அருள்வடிவிற்கு அதனாலேதும் குறையுண்டோ!

"அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி"

தீயதைச் செய்யத் தீயோர் அஞ்சுவதில்லை; ஆனால் பெரியோர்கள் அஞ்சுவர்.

" தீவினையா ரஞ்சார் ; விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு. "

இந்தச் செய்தி நாற்புறமும் தீப்போலப் பரவிற்று ! திருவண்ணாமலையின் காற்றே கனலெழக் கொதித்தது. மகர்ஷிகளின் பொறுமையை வணங்கிற்று.

" ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் ; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ் "

அன்றோ ? மகர்ஷிகள் இதை அந்நொடியே மறந்தார்.

" வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும். "

'இடுக்கண், வருங்கால் நகும்' அறிவுடையோர் இச் சிறுமையைக் கொசுக்கடி யளவுகூடப் பாராட்டார் ! ஆனால், சுற்றுமிருந்தவர்கள் தங்கள் பகவானை அவமதிக்கத் துணிந்த தடபுடல்சாமியைச் சும்மா விடுவார்களா ! கீழ்க்குண்கையில் முத்தையசாமி யென்றொருவர் கிளம்பினார் ! " எங்கள் ஸ்வாமியின் முகத்தில் எச்சில் துப்ப உனக்கு அவ்வளவு துணிவா ! அதற்குப் பதில் இதோ கொடுக்கிறேன் " என்று கையை யெடுத்தார். ஆனால் சுற்று மிருந்தவரின் பரிவால் தடபுடல்சாமியார் அன்று தப்பினார். சென்றவிடமெல்லாம் வெறுப்பு ! இனி இங்கிருந்தால் பிராமணஸ்வாமிகளின் அடியார்கள் தம்மைச் சும்மா விடமாட்டார்கள் என்று தெரிந்து கொண்டார். " சீ ! இந்த திராக்ஷை புளிக்கிறது " என்ற கதையாய், தடபுடல்சாமியார், " சீ ! இந்த மலை நமக்குத் தகுந்ததல்ல " என்று அதை நீத்து ரயிலேறி விட்டார். வண்டியிலும் தமது லீலையைத் தொடங்கினார்.

தடபுடல்சாமியார் இரண்டாவது வகுப்பில் இடம்பமாகப் பிரயாணஞ் செய்தார். அவ்வண்டியில் இளவயதுள்ள ஸ்ரீமானும், ஸ்ரீமாட்டியும் முன்னே யுட்கார்ந்திருந்தனர். தடபுடல்சாமியார் அக்கனவான்மீது அதிகாரஞ் செலுத்தத் தொடங்கினர்; ஆனால், இந்த முரட்டாத்மாவின் தடபுடல்களை அக்கனவான் சிறிதும் பொருட்படுத்தவில்லை. உடனே தடபுடலுக்குச் சின மெழுந்துவிட்டது. "அடே! இந்தச் சிறுக்கியின் மோகத்தால் நான் சொல்வது உன் காதிற் புகவில்லையோ" என்று சீறினர். அவ்வாலிபர் ஸாதுவான பிராமணஸ்வாமியல்ல! வாலிபரத்தம் கொதித்தது; உடனே காலி லிருந்ததைக் கழற்றி சாமியாருக்கு சரியான பதில் கொடுத்துவிட்டார்.

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்"

"தீயவை செய்தார் கெடுதல் நிழறன்னை
வீயா தடியுறைந் தற்று"

என்னும் உண்மையைத் தருமதேவதையே யிங்கு விளக்கிற்று.

இரண்டாண்டுகள் கழிந்து, தடபுடல்சாமி மறுபடியும் திருவண்ணாமலைக்கு வந்துவிட்டது! அப்போது பிராமணஸ்வாமிகள் மாமரத்துக்குகையி லிருந்தார். தடபுடல் தாம் வந்ததாகச் சொல்லியனுப்பினர்; மகர்ஷிகள் சுபாவமாக வந்தார். அங்கு ஒருவருமில்லை.

தடபுடல் :—எனக்கு ரயிலில் என்ன நடந்தது தெரியுமா?

மகர்ஷிகள் :—ஆம்.

தடபுடல் :—ஆம் ; அந்த அநுபவமும் வேண்டியது தான் ; நான் உன் முகத்தில் துப்பினது பிசகுதான். கோபத்தில் அப்படிச் செய்துவிட்டேன் ; இப்போது பதிலுக்குப் பதில் என் முகத்தில் துப்பிவிடு " என்றார்.

" வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும் !"

அவன் மனமே அவனை வெட்கச் செய்தது. பிராமண ஸ்வாமிகள் சாந்தமாயிருந்தார் ; தடபுடலின் அவமதிப்பையும் வெகுமதிப்பையும் ஒரே தராசில் நிறுத்திச் சமநிலை வகித்தார்.

" அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டும்
மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணராக்
கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார். "

" சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி "


யன்றோ !

ஆனால் தடபுடல்சாமியார் திருந்தினரோ? கேளுங்கள்! நாய்வாலை நீட்ட முடியுமோ! குலைக்கு வருவார் ; அறிவாளிகளான சீடர்களையும் அதிகாரஞ்செய்வார். மகர்ஷிகள் எப்போதும் தாழ்மையுடன் நடந்துகொள்வார். அப்போது வாசுதேவ சாஸ்திரியார், சேஷய்யர் போன்ற நல்லோர்கள், அறிவாளிகள், பெரிய உத்யோகஸ்தர்கள் மகர்ஷிகளை அடைந்திருந்தனர் ; இவர்கள் தடபுடல் சாமிக்கு வணங்குவதில்லை.

ஒருநாள் தடபுடல் சாமியார், மாமரத்துக்குகையில் தோன்றினார். திமிங்கிலத்திற்கு நீச்சுக்கற்பிக்கிறார். "குழந்தாய், நான் உனக்கு நிர்விகல்பஸமாதி பழகித்தருகிறேன்" என்று மகர்ஷிகள் கையைப்பிடித்து உட்கார்த்தி "என் முகத்தையேபார்" என்றார். பக்கத்தில் வாசுதேவ சாஸ்திரி முதலியோர் இருந்தனர்; அவர்கள் இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. உடனே "உங்களுக்கென்ன வேலை பெரியோர்களிருக்குமிடத்தில்? நீங்களெல்லாம் வெளியேறுங்கள்!" என்றார். பிராமணஸ்வாமியை நோக்கி, "குழந்தாய், அசையாதிரு; என் கண்ணையே பார்; நீயாக மூச்சடக்காதே!" என்று நிர்விகல்பஸமாதி பயிற்றத் தொடங்கினார்! அடிக்கடி "அந்தோ பார், மூச்சை அடக்குகிறாய்! அப்படிச் செய்யாதே!" என்றார். நிர்விகல்பஸமாதி செய்கிறவர் இவர்தான்! மகர்ஷிகளோ அவர் சொன்னபடியெல்லாம் ஸாதுவாக ஆடினார். மற்றவர்கள் சும்மா இருந்தனர்; தடபுடல்சாமியார் அரைமணிநேரம் உட்கார்ந்திருந்து பிறகு உறங்கிவிட்டார். (கும்பகர்ணஸமாதி செய்யத் தொடங்கிவிட்டார்.)

> "அக்கினி தேவர்க் கசீர்த்தியென்று சுக்கரைத்து
> வைக்கோலான் மூடி மலையடுப்பிற்—றுக்கியாய்
> நீரைக் கழுவி நிழலைப் புதைத்தளப்பா
> ராரைப்போல் வாரென்ன லாம்?"

இப்படி நாளுக்கு நாள் இவருடைய தொல்லை அதிகரித்தது; மகர்ஷிகள் விரூபாக்ஷ குகைக்குச் சென்று பக்தர்களுடன் வஸித்தார். இன்னும் தொல்லை விட்டபாடில்லை; கொடுமையும், அகந்தையும், செருக்கும், துரதிகாரமும்



SRI RAMANA MAHARSHI

ஒளியே யொருமயமே யோங்கார வுட்பொருளின்
றெளிவே பரவெளியிச் சித்துருவ னம்மானே !

தெளிவாம் பரவெளியைச் சேரிற் சிவானந்தம்
பொழியும் பொருள்செழித்துப் பூரணமா மம்மானே !!

வலுத்தன. பக்தர்களையும் துன்புறுத்தத் தொடங்கினர். இன்னும் பொருமை கொண்ட ஸாதுக்களும், "பிராமணஸ்வாமிக்கு மலையில் வஸிக்க என்ன உரிமை? இவர் ஞானியா, காஷாயியா?" என்று தாக்கத் தொடங்கினர். என்னசெய்வார் மகர்ஷிகள் :—

"சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்."

இந்நிலையில் சீடர்களை ஊருக்குள் அனுப்பிவிட்டுத் தாம் மட்டும் பக்கத்திலிருக்கும் காடுகளிற் றவங்கிடக்க எண்ணினர்! தடபுடல்சாமியார் தம்மைவிட ஒருவருமில்லை யென்று கடபடக்கிறார்! எப்படியாவது இந்த பிராமணஸ்வாமியை ஊரைவிட்டே கிளப்பவேண்டுமெனப் பிரசாரஞ் செய்கிறார். மகர்ஷிகளோ, "அவரியல்புப்படி அவர் நடக்கிறார். நாம் தணிந்து போவதே நலம்" என்கிறார்.

"பணியுமா மென்றும் பெருமை; சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து"

"சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்"

என்னும் பொய்யாவாக்கு இவ்விடத்தில் எத்துணை மெய்யா யிலங்குகின்றது!

இந்நிலையில் யோகானந்தஸ்வாமி யென்றொருண்மைத் துறவி, மிகவும் வயதானவர் அங்குத்தோன்றினர். அவர் பூச்சாண்டிச்சாமியாரின் குரு; பிராமணஸ்வாமிகளிடம் மிக்க மதிப்புள்ளவர். அவரிடம் பூச்சாண்டிச்சாமி, தடபுடல்சாமி இருவர்க்கும் வணக்கமுண்டு; அவர் வந்த

பின் சில நாட்கள் தொல்லையில்லாதிருந்தது. காட்டிற்குப் போகும் எண்ணமும் நின்றுவிட்டது.

மீண்டும் தடபுடல் கிளம்பிவிட்டது. மகர்ஷிகளிடம் வரும் கனவான்களை அதிகாரஞ் செய்யத் தலைப்பட்டது. அதற்கேற்றபடி அவர்களும் பொறுமையுடன், வேடிக்கையாக நடக்கத் தொடங்கினர். ஒரு பெரிய கனவானைக் குறித்து; "அப்பா, ஒரு சிறு பல்லுக்குச்சி ஒடித்துவா நமக்கு" என்றார். உடனே அவர் (அரங்கசாமி அய்யங்கார்) ஒரு பெரிய மரக்கிளையை ஒடித்துவந்து, "தாங்கள் மிகப்பெரியவாள்; அதனால் பெரிய பல்லுக்குச்சி ஒடித்து வந்தேன்" என்று நீட்டினார். இந்த லக்ஷணத்தில் தடபுடல்சாமி சுருட்டுக் குடிப்ப துண்டு. ஒரு நாள் சுருட்டை வாயிற் கவ்விக்கொண்டே, "அப்பா, சுவுட்டுப்பட்டவிட நெவுப்புக்கொண்டா" என்று ஒரு அன்பரை யேவினார். அன்பர் ஒரு பெரிய கொள்ளிக்கட்டையை முகத்திற்கு நேராகப் பிடித்து, "எதை யேற்றட்டும்?" என்று கேட்டார்.

'ஏது! இனிக்காரியம் பலியாது' என்று தடபுடல் சாமியார் தெரிந்துகொண்டார். "சீ! இந்த மலை நாமிருப்பதற்கு லாயக்கில்லை" என்று கீழேயிறங்கத் தீர்மானித்தார். போகிற போக்கில் மற்றொரு விநோதம் புரிந்தார்! பிராமணஸ்வாமியிடம் சென்று, இதய குகையை ஆணவக் கையால் அடைத்து, "நம்மை நீ அறியாய் போலும்! இதோ உனக்கு சாபங்கொடுக்கிறோம் பார்! உன்னிடமிருந்து யோகசக்தியை யெல்லாம் வாங்கி உன்னை வெறுமையாக்குகிறோம் பார்! அந்த சக்தி போய்விட்

டால் பிறகு உன் ஆட்டம் நடவாது; உன்னை ஒருவரும் மதியார்கள்" என்று தன்மைப் பன்மையில் வன்மை கூறினார். இந்த அளவுகடந்த சொல்லையும் மகர்ஷிகள் பொறுத்தார். அந்தோ, பழக்கங் கொடிது!

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும்"

என்பதை தடபுடல்சாமி கற்றும், துறவறம் பூண்டும் அதற்குரிய நிராசை, தவம், பொறுமை, இரக்கம், உண்மை, அறிவு, இன்பம், அடக்கம் ஏதும் அறியாது அடாதுசெய்தது பரிதாபமே!

"ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்."

சூரியனை இருளிற் சுருட்ட முயலும் இத்தகைய பேதையர்க்கு இரங்குகிறோம். இந்தச் சாபத்திற்குப் பிறகு தடபுடல்சாமியார் ஒரு காப்பிக்கடைக்குச் சென்று தர்பார் நடத்தினார். "பாருங்கள், நான் அந்த பிராமணஸ்வாமியைச் சபித்துவிட்டேன்! இனி அவரிடம் சக்தி யிராது! என் சாபம் கைமேற் பலிக்கும்" என்று குமுறினார். "செல்லா விடத்துச் சினந்தீது" என்பதை யறியார். கடைக்காரன் ரமணபக்தன்; ஆதலின், தடபுடல்சாமியாரின் அகங்காரத்திற்கேற்ற மரியாதை செய்து கடையை விட்டு ஓட்டினான். மீண்டும் சாமியார் திருவண்ணாமலையை விட்டுச் சென்றார். இன்னும் விட்டாரா! மறுமுறையும் படையெடுத்து வந்து பிராமணஸ்வாமியை அவமரியாதையாக நடத்தத் தொடங்கினார்; அன்பர் ஒருவரை இழிவு செய்தார்—எல்லாம் மகர்ஷிகள் ஸகித்துப் பொறுமை

யின் வெற்றிமுடி சூடினார். இந்த லீலையுடன் தடபுடல் சாமியார் ஊரைவிட் டோடி மறைந்தார்.

" தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு."

தடபுடல்சாமியார் அதிருஷ்டசாலியே! பகவானைத் தமது பகைமையினால் பக்திசெய்ததால் பகவானுடைய சரிதையில் இடம் பெற்றார். பகவானுடைய சரித்திரத்தில் ஹாஸ்யரஸம் வேண்டுமென்றே அவர் தோன்றி இத்துணை நீதிகளை யறியவைத்தார்போலும்!

" அவரவரைப் போலிருப்பர்; தாமவரா கார்போல்
இவரவர்க்கோப் பில்லை யெனினும்—உவமைசோலின்
வேசி பணம்வெய்யோன் வீணை வெளிவிசிறி
யாசியர்போ லென்கினுமா வர் "

என்றவாறு மகர்ஷிகள் எதிலும் தாக்கற்று, பிறர்கை பாராது, எதிர்பார்ப்பின்றி சமநிலையிலிருந்தார்.

இப்போது மற்றொரு தினுசுச் சாமியார் வந்தார்; இவர் மந்திரச்சாமி. சங்கீதத்தில் வல்லவர்; உபநிஷத்திற் சிறிது படித்தவர். "இதெல்லாம் பிராமணசாமிக்கு என்ன தெரியும்? ஏதோ குருட்டதிட்டம் ஜனங்கள் வந்து குவிகின்றனர்! அப்படி வந்தும் அவர்களிடம் பணம் வசூலாக்கி ஒரு காரியம் செய்யத் திறமையில்லை" என்பது அவருடைய செருக்குரை. காளஹஸ்திக்குச் சென்று வந்தவர் ஒருநாள் பிராமணஸ்வாமியிடம், "நான் தங்கள் க்ஷேமலாபத்தை யறியவே இத்துணை தூரத்தினின்று வந்திருக்கிறேன்; மந்திரசாஸ்திரத்தில் தேர்ச்சி

பெற்றுள்ளேன்; தங்களுக்கு தத்தாத்ரேயமந்திரம் உப தேசிக்கிறேன்" என்றார்.

பிராமணஸ்வாமியார் அசையவில்லை; வசப்படவில்லை.

மந்திரச்சாமி:—ஸாக்ஷாத் ஈச்வரனே என் கனவில் வந்து தங்களுக்கு இந்த மந்திரோபதேசஞ் செய்ய உத் தரவிட்டார். எனில், தாங்கள் அதை அங்கீகரிக்க வேண் டும். ("எப்படியாவது எனது சிஷ்யனாகவேண்டும்" என் பது கருத்து)

பிராமணஸ்வாமி:—அப்படியா, நல்லது; இதற்கும் அதே ஈச்வரன் வந்து மந்திரோபதேசம் பெற்றுக்கொள் ளச் சொல்லட்டுமே! அதில் நோக்கம் பிறக்கும்படி செய் யட்டும்; பிறகு அதைப்பற்றிச் சிந்திக்கும்.

மந்திரச்சாமி:—இல்லை, அது மிகவும் சுருக்கம்: எளிது. அக்ஷரங்கள் சொற்பம். தாங்கள் ஆரம்பிக்க லாம். கட்டாயம் என்னிடம் அந்த வுபதேசத்தைத் தாங் கள் பெறவேண்டும்.

பிராமணஸ்வாமி:—ஜபம் செய்யப் பிரியமில்லை; உருப் போடாவிட்டால் மந்திரத்தாற் பயனில்லை; ஆகை யால் இப்போது மந்திரம் பெற விருப்பமில்லை.

மந்திரத்தில் மாங்காய் விழவில்லை! மந்திரச்சாமி ஏமாந்து அகன்றது; எனினும், "பிராமணசாமியிடம் என்ன இருக்கிறது? மந்திரசக்தியால் நான் ஏழு லோகங் களிலும் ஸஞ்சரிக்கிறேன். அவரைப் பார்ப்பது வீண்" என்று வருவோர் மனத்தைக் கலைக்கப் புகுந்தார். இவை பிராமணஸ்வாமிகளின் செவிக்கேறியது; அதை அவர் சற்றும் மனத்திற் கொள்ளவுமில்லை, மந்திரத்தால் வானைப் பிடிக்கக் கருதவுமில்லை.

அஞ்சா னவாவா னவனதுவே யானுனுக்
கெஞ்சியதோர் ஸித்த னேவன் ?

ஒரு நாள் மந்திரச்சாமி கோயில் வாழைத்தோட்டத்தில் தியானஞ்செய்யும்போது, பளிச்சென்று பிராமணஸ்வாமியின் உருவம் எதிர்ப்பட்டு, "மோசம் போகாதே" என்று சொல்லி மறைந்ததைக் கண்டார். உடனே ஒரு பதற்றமெடுத்தது; தம் குற்றத்தை நினைந்து, பிராமணஸ்வாமியாரிடம் ஓடி மன்னிப்புக் கேட்டார். மகர்ஷிகளோ, "இங்கே ஒன்றும் சித்தாடுவதில்லை; தங்களிடம் எத்தகைய மனத்தாங்கலும் இங்கில்லை" என்று சொல்லி ஸமாதானப்படுத்தினர். மந்திரச்சாமி மகர்ஷியின் பேருக்கு வரும் கடிதங்களைத் தபாலாபீஸினின்று தாமே பெற்று, அவற்றிற்குத் தம் மனப்படி பதில் எழுதிவிடுவார். ஏனெனில், அவரும் பி-ரா-ம-ண-சா-மி-யா ர் (பிராமணன் + சாமியார்) அன்றோ! இவற்றாலும் மகர்ஷிகள் மனஞ் சலிக்காது இருந்தபடி யிருந்தார்.

மனது லயப்பட்டு மாசற் றிருக்கின்
எனதியா னேன்போ னேவன் ?

மற்றொரு விநோதம்! சில குடிகாரப் பண்டாரங்கள் மகர்ஷிகளைத் திருவண்ணாமலையினின்றே தூக்கிச் சென்றுவிடச் சூழ்ச்சி செய்தனர். இக்களிப் புலவர்கள் உடம்பு முழுதும் விபூதிப்பட்டை யடித்துக்கொண்டு விரூபாக்ஷ குகை முன் இரவில் திடீரெனத் தோன்றினர்; பிராமணஸ்வாமியிடம் ஆவேசமாகச் சொல்லுற்றனர்:—

அதிமகிமை ஸித்தரடா வகத்தியனார் விடுத்த
பொதிகைமலை ஸித்தரடா பூலோகம் வந்தோம்!

வாராயுன் னுப்பகற்றி வல்லமைக ளீவோம்!
சீரங்கஞ் சென்றுங்கே ஸித்தரோடும் போவோம்!
குறுமுனிவர் முறைப்படியே கொடுத்திடுவார் தீக்ஷை!
உறுதியுடன் கண்டிடுவோ வுண்மையான காட்சி!

என்று ஓலமிட்டாடினர்.

என் செய்வார்! வந்த பேர்வழிகள் எதையும் அஞ்சாமற் செய்பவர். அவர்களுக்குக் காரணகாரியங்களைச் சொல்லி புத்திபுகட்ட முடியுமா?

"களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று."

இந்த ஸமயத்தில் அவர்களுக்கு சரியான பதில் சொல்லப் பெருமாள்சாமி என்ற திடசாலி முன்வந்தார். "ஸித்தர்களே, நல்லது! நீங்கள் வருவதாக முன்னமே பொதிகையினின்று செய்தி யறிந்ததுடன் உங்களை யெல்லாம் அண்டாக்களி லடைத்து அடுப்பில் வேகவைக்கவும் உத்தரவு வந்திருக்கிறது. என்ன சொல்கிறீர்கள்?" என்றார். மஸ்தான் என்ற ஒரு அன்பரை விளித்து, "இவர்களை வேகவைக்க ஒரு பெரிய கோட்டையடுப்பு வெட்டுங்கள் உடனே" என்று சொன்னார். 'திருச்சினுப்பள்ளியெத்தனுக்கு சரியான தஞ்சாவூரெத்தன், விடாமுண்டனுக்குக் கொடாமுண்டனாக வாய்த்தா'னென்று குடிகார ஸித்தர்கள் அஞ்சி அந்தர்த்தானமாகிவிட்டனர்!

இச்சோதனைக ளெல்லாம் மகர்ஷிகளின் உறுதி, பொறுமை, ஸஹநசக்தி, தெய்வமகிமை அனைத்தையும் விளக்கின! ஸொக்ராத்த (Socrates) னுக்கு அன்று நஞ்சீந்தவரை இன்று காணோம்; ஸொக்ராத்தன் என்றுமுள்

ளான். அப்பரைக் கல்லைக்கட்டிக் கடலிற் போட்டோனைக் காணோம்; அப்பர் என்றுமிருக்கிறார். மகர்ஷிகளுக்குத் தீங்கிழைத்தவரைக் காணோம்; பகவான் மகர்ஷிகள் என்றுமிருக்கிறார்.

ஒன்றே பொருளதனி லொன்றியின் புற்றிருப்பா
ரென்று மிருப்பவரேன் றெண்!

ஸ்ரீ ரமணவிஜயம்

யோகஸ்வாராஜயக் காண்டம் முற்றிற்று.

சுத்தானந்த பாரதியார் எழுதிய

# ஸ்ரீ ரமண விஜயம்

## ச. யோகஸாம்ராஜ்யக் காண்டம்

உண்டதுள் ளுள்ளது நீயென் றொளிவிடும்
யோக மணிவிளக்கே!
நின்ற நிலையி னிலைத்துல கெல்லா
நிறைந்த நிராமயமே!
என்றென்று முன்றிரு வோங்குக பொங்குக
வெங்குஞ் சிவோகமென்றே
ஒன்றுண் டிரண்டன்று மூன்றன்றவ் வுண்மையா
மோம்தத்ஸ தோம்தத்ஸதோம்!

தெள்ளத் தெளியத் தெரிகுது ஜோதிச்
சிதம்பரச் சிற்சபையே!
துள்ளிக் குதித்துத் திருநடஞ் செய்குது
சுத்த பரமாத்மா!
வெள்ளக் கருணைப் பெருக்கது சக்தி
விளைவது விண்ணதுவே!
உள்ளத்தி லுள்ளவா றேங்கு முவப்பது
வோம்தத்ஸ தோம்தத்ஸதோம்!

# ச. யோகஸாம்ராஜ்யக்காண்டம்

## உகு. ரமணவித்தை

"பாராதி யண்டங்க ளத்தனையும் வைக்கின்ற
பரவெளியி னுண்மைகாட்டிப்
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னிற்றேய்ந்த
பாவியேன் பரிசுகாட்டித்
தாராள மாய்நிற்க நிச்சிந்தை காட்டிச்
சதாகால நிஷ்டையெனவே
சகசநிலை காட்டினை சுகாதீத நிலயந்
தனைக்காட்ட நாள்செல்லுமோ ?
காரார வெண்ணரு மனந்தகோ டிகணின்று
காலூன்றி மழைபொழிதல்போற்
• கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங்
கம்மியா னந்தவெள்ளஞ்
சோராது பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே !
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே !"—

(தாயுமானவர் உபநிடதம்)

இப்போது மகர்ஷிகளின் அத்யாத்மவித்
கதிர்விட் டொளிர்கின்றது. ஞானத்தாமரை
சுயஞ்ஜோதியில் மலர்ந்து, சுகமயத்தே
பிலிற்றி நிற்கிறது. நாலா பக்கங்களினி
றும் வண்டுகள் ரீங்காரஞ்செய்து வந்து ப
யாறத் தேனுண்டு மஹர்ஷிகளின் மலரடிநிழற்சோலையி
ஆனந்தமாக வஸிக்கின்றன.

இனி முதன்மையாக ஸ்ரீ ரமணோபதேசங்களையு
அவற்றைப் பெற்றுய்ந்த சீடர்களையும், பகவானின் ம
வாழ்வையும், ஸ்ரீ ரமணாசிரம வாழ்வையும் பற்றிக் கூ
முடிப்பாம்.

மகர்ஷிகள் அற்புதமான ஆத்மவித்தர் என்ப
இதற்குள் அனைவர்க்கும் விளங்கிவிட்டது. ஆனா
“அவர் என்ன யோகம் செய்தார்? உலகில் யோகத்தி
காக எவ்வளவோ பாடுபடுகின்றனர். யோகத்தில் எத்
தனையோ வகைகள்; அவற்றில் அவர் எதை அப்யஸி
தார்” என்று பலர் வினவலாம். மேலும், “சும்ம
தானே மௌனமாயிருந்தார்” என்றும் சில குயுக்திகளு
க்குத் தோன்றலாம். மஹான் ஸ்ரீராமகிருஷ்ணர் “அன்னை
அன்னை!” யென்று அன்பால் அலறி,

“ஒன்றுநீ யுண்மை யென்று
லோளிந்தின்னு மாடல் வேண்டாம்!
இன்றுனைக் காட்டேல் வாளா
லிவ்வுயிர்ச் சுமையை யீர்ப்பேன்”
என்றுட லுள்ள மாகி
யிறைவியைக் கதறிக் கண்டார்!”



பூமலரத் தேனீக்கள் போங்கிவரு ஞானஸித்தன்
வாய்மலருக் கன்பர்குழாம் வாய்ந்து.

பிறகு ப்ராஹ்மணி மாதிடம் அஷ்டாங்க யோகமும், தாந்திரிக ஸாதனமும் பயின்றார். அதன்பின், தோதாபுரியிடம் தீக்ஷைபெற்று நிர்விகல்பஸமாதி பயின்றார். அதன் பிறகு, பல மதாநுபவங்களை ஸாதனத்தா லடைந்தார்:— ராதை போலக் கண்ணனை யன்புசெய்தார்; ராமலாலாவுடன் பிள்ளைபோல விளையாடினார்; ஏசுநாதரை நேரே கண்டார்; இஸ்லாமிய மதாநுபவத்தைக் காட்டிநின்றார்; வேதாந்தமதம், தாந்திரிகமதம் இரண்டிலும் தேர்ந்தார். பக்திபரவசத்துடன் ஆடினார்; பாடினார்.

கிருஷ்ணசைதன்யரோ, கிருஷ்ணாவேசத்துடன் தம்மைமறந்து கிருஷ்ணபரமாகி, "ஹரிபோல், ஹரிபோல்" என்று பாடி ஆடி, அனைவரையும் அன்பாற் றழுவி கிருஷ்ணவிரக ராக்கினார்; ராதைபோல மாதவனிடம் மையல் மிகுந்தார்; வாஸுதேவ ஸார்வபௌமன், ராஜா பிரதாபருத்ரன், ப்ரகாசானந்தர் முதலியோரையும் அவருடைய பக்திபரவசம் தன்வசமாக்கின. எங்குங் கண்ணனைத் தழுவினார். அவர் தென்னிந்தியாவில் யாத்திரை செய்கையில், ஒரு பிராமணப் பையனைத் தன் மதத்திற் சேர்த்தார்; அவனுடைய தந்தை சைதன்யரை அடிக்க வந்தார்; சைதன்யர், "அன்பரே, இதோ உங்கள் கையில் யானிருக்கிறேன்; எவ்வளவு வேண்டுமென்றாலும் அடியுங்கள். ஆனால், பகவந்நாமத்தைமட்டும் பாடுங்கள்; 'ஹரி, ஹரி' யென்று கூவுங்கள்; என்னை அடிப்பதற்காக இந்தக் கூலியைத் தாருங்கள்" என்றதும், தந்தை மனமுருகி, அவரை அடிபணிந்து அன்பரானார். இப்படிக் கண்ணன் காதலிற் கரைந்தார் சைதன்யர்.

மாணிக்கவாசகரோ, திருப்பெருந்துறையில் சிவபெருமானுக்கே யாளாகி, அவனைக் காணவிடத்து,

" வஞ்சவினைக் கோள்கலனு முடலைத் தீவாய்
மடுக்கிலேன் வரையுருண்டு மாய்வே னல்லேன்
நஞ்சோழுகு வாளாலுங் குறைப்பே னல்லேன்
நாதனே யதுவுநின துடைமை யென்றே
யஞ்சினேன் றனேயு மறியா தாவி
யையனே நினைப்பிரிந்து மாற்ற கில்லேன் "

'என்செய்கோ! என்றுயோ! என்றுயோ!" என்று இனைய சொல்லிப் புரண்டழுதார்!

இப்படிப்பட்ட பக்திபரவச நிலைமைகளில் மஹர்ஷிகளின் நிலைமை யென்ன? ஸாதன மென்ன? ஹடயோகம், ராஜயோகம், பக்தி, ஞான, கர்ம யோகங்களில் எதைச் சேர்ந்தது அவருடைய ஸாதனம்? அவர் அருணுசலனைக் கண்டு அப்படியே மோனமாஞரே! ஆடவில்லை, பாடவில்லை, கண்ணீர் வடிக்கவில்லை, மூச்சுப் பிடிக்கவில்லை, ஆஸனம் பழகவில்லை, கல்பங்கள் சாப்பிடவில்லை, நாடிசுத்திக்கு வேண்டிய அப்யாஸங்களையும் செய்யவில்லை, ஒருவரிடம் உபதேசமும் பெறவில்லை, ஜபமாலை யுருட்டவில்லை, தீக்ஷையும் வாங்கவில்லை, காவியு முடுக்கவில்லையே! அவர் என்ன ஸாதனஞ் செய்து இந் நிலை யடைந்தார்? என்பது சிலருடைய வினு. அதற்கு, மஹர்ஷிகள் இதற்கு அவ்வப்போ தருளிய திருவாக்கினின்றே விடை கூறுவாம்.

" சாதகத்தி லேதுவிதம் சாத்தியத்தி லத்துவித
மோதுகின்ற வாதமது முண்மையல—ஆதரவாய்த்
தான்றேடுங் காலுந் தனையடைந்த காலத்துந்
தான்றசம னன்றியார் தான்."

## ஞானோதயம்

ஜகத்குரு சங்கராசாரியார் திருவாய்மலர்ந்தருளிய விவேகசூடாமணியையும், கீதையையும், உபநிஷத்தையும் மனத்தில் வைத்துக்கொண்டு பகவானை நோக்கினால், அவற்றின் பொருளைக் கண்ணாடிபோல பகவானின் வாழ்வு விளக்கும். பகவானுக்கு ஞானோதயமானது எத் தகைய புறத்துணையாலும் இல்லை. தந்தை யிறந்ததும் வகுப்பிலும், வீட்டிலும் ஏற்பட்ட தொந்தரவும், அவருடைய ஞானோதயத்திற்கு எள்ளளவும் காரணமில்லை. பல பிறப்புக்களில் பக்குவமாகித் திடீரென ஆத்மஞானம் பிறந்து பிறங்கியது. மோக்ஷஸாதனங்களான, நித்யாநித்யவிவேகம், இஹாமுத்திரார்த்த பல போகவிராகம், சமம் தமம் உபரதி திதிக்ஷை சிரத்தை ஸமாதானம் ஆகிய சமாதிஷட்கஸம்பத்தி, முமுக்ஷுத்வம், சிரவணம், மனனம், நிதித்தியாஸம் எல்லாம் எதைக் குறித்துப் படிப்படியாக முயல்கின்றனவோ, அந்த நிஸ்சலமான ஆத்மஸ்திதியை பகவான் எடுத்ததும் அடைந்து, அதிலேயே எவ்வித அசைவுமின்றி நிலைத்துவிட்டார். ஞானோதயம் தானாகவே எழுந்ததன்றி வேறு புறக்காரணங்களாலன்று. அதன்பிறகு வேறு ஸாதனமொன்றுஞ் செய்ய வேண்டிய அவசியமில்லை. அவர் வகித்த மோனமும் விரதமன்று.

தானாகக் கூடுந் தலைவன்முன் பேச்சடங்கு
மானந்த மோன மது.

தவத்தின் பஞ்சப்ராணனை ப்ரஹ்மசர்யம், மௌனம், நிராஹாரம், அஹிம்ஸை, சாந்தி யெல்லாம் அவர்

எய்திப் பிறந்தவர். எவ்வித விரதமும் அவருக்குத் தேவையில்லை. விரத வைராக்கியத்துடன் அவர் மோனம் வகிக்கவில்லை; இதயத்தில் "அஹம், அஹம்" என்று நித்யா பரோக்ஷமாய்ப் பிரகாசிக்கும் பரமாத்மாநுபவத்திலேயே ஆழ்ந்து, தன்னையே பரப்ரஹ்மஸ்வரூபமாகத் தெளிந்தறிந்து, தேகாத்மபுத்தியை அறவே நீத்து, பஞ்சகோச விலக்ஷணமாய், சுயஞ்சோதியாய், ஏகமாய், ஞாதிருஞான ஞேயமென்னும் திரிபுடி சூன்யனாய், காரணகாரிய, ஸதஸத்து, க்ஷராக்ஷர விலக்ஷணமாய், பரமாக்ஷரமாய், கிருதக்ருத்யனாய், கேவலம் ப்ரஹ்மமாத்ரமாய், பரம சாந்தியுடன் ஸதா ஸஹஜநிஷ்டையில் ஜன்ம, ஜரா, மரண, பவபந்தமற்ற நித்திய ஜீவன்முக்தனாய் அவர் நிலைத்துவிட்டார். தனது ஸ்தலத்திற்குப் பிரயாணமான ஒரு அரசன் துயில் விழித்ததும் திடீரென ஒரு தெய்வசக்தியால் தான் சேரவேண்டிய ஸ்தலத்தில் தன்னைக்கண்டு வேறு போக்குவரவின்றி அங்கேயே நிலைத்துவிட்டதைப் போன்றது பகவான் ஆத்மஸ்தலத்தில் ஆத்மாவாகவே நிலைத்தது. பகவான் அருணசலேஶ்வரர் கர்ப்பக்கிருகத்திற்கு நேராகச் சென்று (அப்போது கோயில் திருப்பணி நடந்துகொண்டிருந்ததால் எல்லாம் திறந்திருந்தது; நாலுகால பூஜைதான் நடந்தேறியது) தரிசித்து, உடனே தமது ஆத்மஸ்திதியிலேயே விசாரத்தால் ஊன்றி நிலைத்துவிட்டார். இதைக் கண்டவர்கள் ஸ்வாமிகளை மோன விரதம் பூண்டிருப்பதாகக் கருதினர். பிறர் தொந்தரவின்றி அமைதியாகத் தமது நிஷ்டை நடைபெறவே ஸ்வாமிகளும் சும்மா வாய்பேசாமலிருந்துவிட்டார். தவத்தின்பால் வந்த பொறுமைச்சோதனைகளும் தாமாகவே ஸங்

தர்ப்பத்தில் நிகழ்ந்தனவே யொழிய எவ்விதமான திதிக்ஷா ஸாதனமும் முயன்று செய்யப்படவில்லை. ஏற்கெனவே எல்லா ஸாதனப் பயன்களும் ஸ்வாமிகளுக்குள்ளே அமைந்து கிடந்ததை வெளியேற்றவே அச் சோதனைகள் வந்தன.

இத்தகைய ஆன்மவெழுச்சி பிறவிஞானிகளுக்குத் திடீரென்று உதயமாகும். அநேகமாக கூ0-முதல் ச0-வயதிற் கிடையிலேயே உலகில் தோன்றிய மஹான்களுக்கு இந்த ஞானவெழுச்சி பிறந்துள்ளது. ஆனால் ஆத்மரஸத்திலேயே ஊறிய நமது பாரததேசத்தில்தான் ஞானஸம்பந்தரும், துருவனும், சங்கரரும், நம்மாழ்வாரும் இளமையிலேயே ஆத்மஸம்பத்தைப் பெற்றனர். மஹர்ஷிகளும் கசு-வது வயதிலேயே அதைப் பெற்று அதன்மயமாய் அப்படியே நிலைத்தார். அப்போஸ்தலன் பௌல் (Apostle Paul) (கூரு-வயதில்), முகம்மது நபி (ச0-வயதில்) முதலியோர் போன்றே மஹர்ஷிகள் திடீரென ஞானோதயம் பெற்றார். இப்படிப் பெற்றதை வாய்விட்டுச் சொல்லமுடியாது. ஆத்மவெழுச்சி பெற்ற 'வால்ட் விட்மான்' (Walt Whitman) என்ற மேதாவியை ஒருவர் "தங்கள் அநுபவத்தை ஏன் தெளிந்த மொழிகளில் வெளியிட்டு உலகிற்கு நன்மைசெய்ய லாகாது?" என்று கேட்டார். அதற்கு அந்த ஞானநுபூதிச்செல்வர்,

"When I undertake to tell the best I find I cannot
My tongue is ineffectual on its pivots ;
My breath will not be obedient to its organs ;
I become a dumb man."

"நான் கண்ட பெருஞ்சிறப்பை உரைக்கப் புகுந்தால் நாவு எழவில்லை; எனது மூச்சு குரலுக்கு இணங்குவதில்லை; நான் ஊமையாகிறேன்" என்றார். "எனக்கு ஒரு ஆத்மத்ருப்தி யேற்பட்டது. தடையற்ற ஆனந்த வெள்ளம் என்னுள் ஊற்றெடுத்தது. ஆனந்தம், ஆனந்தம், எல்லாம் ஆனந்தம் என்பதைத் தவிர வேறொன்றும் சொல்ல முடியவில்லை" என்றார். இந்த ஆத்மஜோதியைக் கண்டவுடன், தாந்தே (Dante) என்னும் கவியரசர் "நான் ஒரு கடவுளாக மாறினேன்" என்கிறார். மற்றொருவர், "துயரொழிந்தது; ஆழ்ந்த, ஆழ்ந்த, ஆழ்ந்த அந்தராராமத்தில் திளைக்கிறேன்" என்கிறார். ரிச்சார்டு மாரிஸ் பக் (Richard Maurice Bucke) என்பவர் தாம் கண்ட அனுபவத்தை இவ்வாறு கூறுகிறார்:—

"அப்போது எனக்கு ௩௬-வது வயது நடக்கிறது; ஒரு வசந்த மாலையில், வர்ட்ஸ்வொர்த்து (Wordsworth) கீட்ஸ் (Keats), ப்ரௌனிங் (Browning), விட்மான் (Whitman) முதலிய புலவரின் நூல்களை இரண்டு நண்பர்களுடன் படித்துவிட்டு, நள்ளிரவில் அமைதியாகவும், சாந்தமாகவும், ஸந்தோஷமாகவும், நிஶ்சலமாகவும் இருந்தேன். திடீரென்று எவ்வித முன்குறியு மின்றி என்னை ஒரு அகண்ட ஜோதி சூழ்ந்து ஜ்வலித்தது. சில நேரம் நெருப்பு எரிகிறதென்றே எண்ணினேன்; அடுத்தபடியாக, அது என்னுள்ளே யிருக்கும் 'ஆத்மஜோதி' யென்று அறிந்தேன். எனது மூளையில் திடீரென ஒரு 'ப்ரஹ்ம ஜோதி' மின்னிட்டுப் பாய்ந்தது. அது முதல் அங்கு என்றும் பிரகாசமாயுள்ளது; என் இதயத்தில் ஒரு பேரின்ப மெழுந்தது. அதுமுதல் என்னுள்ளே யேஸ்வர்க்க

வின்பம் அகண்டானந்தமாக நிலவுகிறது. இந்த ஆத்ம சேதநம் எழுந்ததற்கு அடையாளம் (க) அந்தர் ஜோதி, (உ) தூய வொழுக்கச் சிறப்பு, (ங) ப்ரஜ்ஞானம், (ச) அமரத்வ உணர்வு, (ரு) இறவஞ்சாமை, (சு) பாவவுணர்வின்மை, (எ) திடீரென உள்விழிப்பு, (அ) ஒரு வசீகரத் தன்மை, காந்தசக்தி" என்று விளக்குகிறார்.

"இதை மொழியால் விளக்க முடியாது. 'ப்ரஹ்ம ஜோதி', 'துரியச்சுடர்' எனவே சுருங்கக்கூறலாம்" என்று மற்றொரு புலவர் கூறுகிறார். இவற்றையெல்லாம் சிறு உதாரணங்களாகக் கூறினோம். மஹர்ஷிகளின் நிலைக்கு எதுவும் ஒப்பில்லை. நமது தாயுமானப் பெருந்தகையும்,

"பெற்றதை யேதென்று சொல்வேன்—சற்றும்,
பேசாத காரியம் பேசினன் தோழி"

என்கிறார்.

"உரையற்ற வொன்றை யுரைசெயு மூமர்காள்!
கரையற்ற தொன்றைக் கரைகாண லாமோ?
திரையற்ற நீர்போலச் சிந்தை தெளிந்தால்
புரையற் றிருந்தான் புரிசடை யானே"

என்றார் திருமூலர். "இந்த ஆத்மா, வேதப்ரவசனத்தால் அடையப்பெறுவதில்லை; அது யாரை விரும்புகிறதோ அவர்களுக்கு அடையக்கிடைக்கிறது; அவனுடைய ஆத்மாவே அதன் சொரூபத்தை விளக்குகிறது; அதை யடைந்ததும் ரிஷிகள் ஞானதிருப்தராகி, வீதராகராய், பிரசாந்தராய், ஆத்மாநுபூதி பெற்று, தன்னுள்ளே தானாக நிலைத்து, ஸர்வாத்மஸ்வரூபிகளாகின்றனர். வாக்

கும், மனமும் அந்த ஆனந்த ப்ரஹ்மத்தை எட்டாது. அதை யடைந்த பின் அடையத்தக்கது வேறில்லை" என்று உபநிடதம் முறையிடுகிறது. இதுவே மகர்ஷிகள் அடைந்தடங்கிய நிலை.

எது யோகசிகரமோ அதிலேயே மகர்ஷிகள் எடுத்ததும் ஊன்றிவிட்டார்; அங்கே எல்லாவித யோகங்களும் அடங்கிவிட்டன. எந்த சக்தியை யடைந்தால் அதுவே ஸர்வார்த்தஸித்தியோ, அதை பிராணயாமங்களின்றி, ஹடயோகங்களா லாகும் நாடிசுத்தியின்றி ஆத்மவிசாரத்தால் பளிச்சென்று எடுத்ததும் அடைந்தார்; அதுவே ப்ரஹ்மஸம்ஸ்பர்சம், பிரஜ்ஞானம் என்பது. எதை மற்ற யோகங்களெல்லாம் தேடித்தேடி முயல்கின்றனவோ, அது அவருக்கு ஆரம்பத்திலேயே கிடைத்துவிட்டது. எதற்கு மிஞ்சிய ஸாதகம் கிடையாதோ, அந்த சொரூப ஸித்தியிலேயே அவர் ஆழ்ந்துவிட்டார். முதலில் மன மிறக்கவேண்டும்; எண்ணங்கள் ஒழியவேண்டும்; நானற்ற விடம் அது; இதயமத்தியிலுள்ள அந்த இடத்திலேயே நமது இருக்கை.

"நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவுங் வல்லையேல்
மாசித்தி யோகம் வந்து தலைப்பெய்யும்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே."

அதில் மனோலயப்பட்டு ஊன்றிவிட்டால் வேறு ஸாதனம் வேண்டுவதில்லை; அது ஒன்றே ஸாதனம்; ஸாதனம் பலவித மல்ல; துவித அத்துவித வாதத்தும் அது அடங்கிய தல்ல; அதைத் தேடுங்காலத்தும், அடை-

யும் காலத்தும் அதுவே ஸமஞக, காண்போன், கருவி, காட்சி அனைத்தையும் தன்னு ளடக்கி நிற்கின்றது. அது என்றும் நம்மைப் பிரியாது நாமாக வுள்ள பொருள்.

" கூடுத லுடன்பிரித லற்றுநிர்த் தொந்தமாய்க்
குவிதலுடன் விரித லற்றுக்
குணமற்று வரவினெடு போக்கற்று நிலையான
குறியற்று மலமு மற்று
நாடுதலு மற்றுமேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலு மற்று விந்து
நாதமற் றைவகைப் பூதபே தமுமற்று
ஞாதுருவின் ஞான மற்று
வாடுதலு மற்றுமே லொன்றற் றிரண்டற்று
வாக்கற்று மனமு மற்று
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
வாய்மடுத் துண்ட வசமாய்த்
தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே."

இந்த உயர்ந்த ஆன்மநிலைக்கு இருப்பிடம் இதயம். அந்த நிலையே உள்ளபொருள்; உள்ளமே அது. அப்பொருளினின்றே உலகம் எழுவது; அதிலேயே உலகம் லயமாவது; அதன்பொருட்டே, அதனுலேயே இவ்வையம் எழுந்து, அதுவே யாகி, மீண்டும் அதிலேயே லயமாகி விடும். நான் என்னும் அகந்தை யெழுந்தால், ஜகமாயை நானுவாகி, ஊனென்றும், உடலென்றும், கரணமென்

றும், உள்ளென்றும், புறமென்றும், பூதமென்றும், மண்ணென்றும், மலையென்றும், வனமென்றும், நினைப்பு மறப்பென்றும், இன்பதுன்பமென்றும், வினைகளென்றும், பலவான ஸமயமென்றும், தெய்வமென்றும், கலை, நெறி, தர்க்கம் என்றும் அலையலையாக எழுந்து அடிக்கும்! ஜீவ ஜகத் ஈச்வரன் மூன்றும் வெவ்வேறாகத் தோன்றும். ஆதலின், இந்த 'நான்' என்பதை ஆராய்தலே யோகாரம்பமாம்.

நானார்? புலன், பூதம், கரணம், குணம், மனம் இவையெல்லாம் அல்ல வெனக் கண்டனைசெய்து மிஞ்சி நிற்பது அறிவு; அவ்வறிவே நான்; அது ஸச்சிதானந்தமயம். மனமென்பது தனியா யில்லை; நினைப்பே மனத்தின் உரு; மனமே உலகைத் தோற்றுவிக்கிறது; அது நசித்து ஆத்மஸ்வரூபம் தோன்றும்போது உலகு தோன்ருது. மனமே நான் என்று கிளம்புவது; தன்மைக்குப் பிறகே முன்னிலையும் படர்க்கையும் எழுகின்றன; எண்ணங்கள் கிளம்பக் கிளம்ப, "இது யாருக்குத் தோன்றியது" என விசாரித்தால், எனக்கு எனத் தோன்றும்; அதை "நானார்?" என்னும் தடியா லடித்தால் அடங்கியொழியும். மனம், மூளை, இந்திரியங்களின் வாயிலாக வெளியேறும்போது, நாமரூபங்கள் தோன்றுகின்றன. இதயகுகையில் அடங்கும்போது, அவை மறைகின்றன.

நானாரேன் றேமனத்தை நாசித் தடங்குமிடந்
தானான ஞானத் தனி.

விசாரமே மனமடக்கும்வழி; பிராணுயாமத்தாலும் அடக்கலாமெனினும், பிராணன் மீண்டுங்கிளம்பினல் மனமும்

கிளம்பும். பிராணன் மனத்தின் ஸ்தூலரூபம். அதுவே மனத்தை இறந்தபின், பூவினின்று காற்று மணத்தைக் கவர்ந்துசெல்வது போலக் கவர்ந்துசெல்கிறது. அது மன மடக்க ஸாதனமாகுமே யன்றி மனோநாசஞ் செய்யாது. அதுபோன்றே, மூர்த்தித்தியானம், மந்திரஜபம், ஆகார நியமம் முதலியவையும், மனமடக்கும் ஸாதனமாகும்.

ஆத்மஸ்வரூபத்தை இதயத்தில் தியானிக்கத் தியானிக்க, இன்பநிலை யதுவாகும். அதைத் தவிர வேறொன்றையும் எண்ணுதிருத்தலே நிராசை; அதனை விடாதிருத்தலே ஞானம். முத்துக் குளிப்பவனைப் போல ஆழ்ந்து தன்னுளே மூழ்கி, வைராக்யத்துடன் ஆத்மமுத்தைப் பெறவேண்டும். ஆத்மநிஷ்டாபரனு யிருப்பதே தன்னை யீசனுக் களித்தல்;

ஆழ்ந்தடங்கித் தன்னு ளதுவா யிருப்பதுவே
சூழ்ந்தோளிர்ந்து நிற்குஞ் சுகம்.

ஆத்மசுகம் ஒன்றே யுள்ளது. உலகென்பது நினைவே. அதில் சுகம் இல்லை. ஆத்மநிழலை நீங்காதிருப்பதே சுகம். ஒரு பரமேச்வர சக்தி உலகை நடத்துகிறது. அது அனைத்தையும் தாங்கும்; அதற்கு நாமும் அடங்கியிருக்காமல், 'அப்படிச் செய்யவேண்டும், இப்படிச் செய்யவேண்டும்' எனச் சிந்திப்பதெல்லாம் அகந்தை. வண்டியிற் செல்பவன் மூட்டையைத் தலையிற் சுமப்பது மடமை. ஸங்கல்ப ரஹிதரான ஈசனின் ஸந்நிதானமாத்திரத்திலேயே உலகம் தானுக நடக்கிறது. ஸந்நிதிக்கே ஐந்து தொழிலாம்.

பகலுதிக்கப் பாரியங்கும் பற்றற்ற சாக்ஷிப்
பகவன்முன் னுகுமெலாம் பார்.

"தான்" என்பது பஞ்சகோசங்களுக்கும் விலக்ஷண மானது; அதைப் புறத்துள்ள நூலறிவாற் காண முடியாது; தத்துவக் குப்பைகளை ஆராய்வதுங் கால வீணே.

தன்னை மறைத்தடருந் தத்துவக் குப்பைகளைப்
பின்னொதுக்கிப் பேச்சடக்கி நில்.

மனத்தை வெளி விஷயங்களில் விடாது, இதயத்தில் லயப்பட்டிருப்பதே சுகம். நான் என்னும் அகந்தை யற்றால், தானெனும் சக்தி தானாகத் தலைகாட்டும். அதையே பற்றி அடங்கி நிலைத்தலே ஆத்மானந்தம்.

இதுவே ரமணவித்தை. இதுவே உயர்ந்த ஸாதன மென்பது இதன் அநுபவஸித்தம்.

உள்ளலர்ந்த மெய்யொளியி லுள்ளவா றான்றிவிடி
னுள்ளநிலை யஃதே யுவப்பு.

ரமணயோகம் எது உயர்நிலையோ அதுவே அடியும் முடியுமாக நிலவுவது. அதற்கு 'நானார்?' எனும் விசாரணையால் மனோநாச மடைதலே ஸாதனம். எனினும், ஈஸ்வரார்ப்பணமான நிஷ்காம்யகர்மம், பூஜை, ஜபம், தியானம், உலகையே யீசன் வடிவாகப் போற்றல், பிராணாயாமம், முதலியவற்றையும் மனமடக்க ஸாதனமாக அது உபதேசிக்கிறது. அகந்தை சிறிதும் கிளம்பாது, நான் என்ற முனைப்பின்றி, அனைத்தையும் நடத்தும் தன்மய சக்தியில் முற்றும் அடங்கி யிருத்தலையே அது வற்புறுத்துகிறது; "நாம் நம்மிடம் நிலைத்தால், எல்லாம் தாமாக நடக்கும்" என்று இதற்கு அடிக்கடி பகவான் நினைப்பூட்டுவார். ஆதலின், இதயத்தில் நிலைத்து ஆத்மஸ்வரூபத்தில் ஆழ்ந்த ரமணயோகம், ஆவேசம், ஆட்டம், பாட்டம், அழு

கைகளின்றி, அமைதியூற்றில் அழகுத் தாமரைமீது அரச வன்னம்போல், இதயாஸனத்தில் ஹம்ஸவடிவாய் நின்று 'ஸோஹம்' என்று கூவுகிறது. இந்த யோகம் அதி சுலபம். கடவு ளில்லையென்போரும் சூனியவாதிகளுங்கூட இதிற் பயன் பெறலாம். அனைவரும் ஆத்மஸ்வரூபரே; அதுவே மெய். நானு நினைவுகளைவிட்டு, "நானார்? என் இடம் எது?" என்று உள்ளேயே விசாரித்துச் சென்றால், நினைப்பொழிந்து, "நான், நான்" என்று இதயகுகைக்குள் தானாக எழுந்து ஆத்மஞானம் நடமிடும். இதுவே இன்பத்தானம், மோனம், மனவிண் எல்லாம். தன்னைத் தன்னி லுணர இன்பம் விகஸிக்கும்; இதைத் தவிர வேறொரு பொருளையும் எண்ணாது, அதிலேயே லயமடைவதே பரமசுகம்.

நானெழுந்தால் மூன்றுண்டு நானடங்கி லொன்றதுவே
தானாகத் தன்னிலையே நில்.

## உஎ. விசாரஸங்கிரகம்

"அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதே சமுணர்த் தியவா!
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே!
தூசா மணியுந் துகிலும் புனைவா
ணேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா கியபின்
பேசா வனுபூ திபிறந் ததுவே"

(கந்தரனுபூதி)

ஆன்மவிரிவையே ஓடமாகக் கொண்டு அன்பரைக் கரைசேர்ப்பவனே! வெற்றி வாய்ந்த ஞான வேளே! இமையோர் விரும்பும் மூலப்பொருளே! அமரரேறே! அரசே! பெறற்கரிய (நான் அது எனும்) மெய்ப்பொருளை, உதித்தவிடத்தில் ஒடுங்கி யிருந்தபடிக் குணரும் ஸாதனத்தைக் காட்டி யுணர்த்திய ஞான முருகனே!—என்று எத்தனை ஞானப் புதல்வர்கள் இந்த ஞானத்தந்தையை வழுத்துகின்றனர். இவர்கள் எண்ணம் எண்ணற்றது. (க) மலையின்மீது 1900-முதல் 1922-ம் ௵ மட்டும் வஸித்தபோது அடைந்தவர் (உ) ஸ்ரீ ரமணாச்ரமம் அழகம்மைபுரத்தி லேற்பட்ட பின் அடைந்தவர் என்று சிஷ்யர்களை இருபகுதியாகப் பிரிப்போம். இந்த நான்காம் பாகத்தில் முற்பகுதியான சீடரைப்பற்றியே பேசுவோம். அவரவர்களுக்குச் செய்யப்பட்ட உபதேச ஸாரத்தையும் இடையிடையே குறிப்பாம். இந்த உபதேசங்களை மலைமீதுபதேசமென் றறிவாம். பாகவத பக்த பகவான் (நூல், அன்பர், இறைவன்) ஒன்றே. ஐயன் அவதரிக்கும்போதே அவன் காரியத்தை உலகில் நிறைவேற்ற அன்பரும் அவதரிக்கின்றனர்.

## சேஷய்யர்

கம்பீரம் - சேஷய்யர் என்பார் ௵ 1900-ல் திருவண்ணாமலை முனிஸிபல் ஓவர்ஸியரா யிருந்தார். அது முதலே அவர் ரமணபக்த ரானார். இவர் சிறந்த ராமபக்தர். ராமநாம தாரக ஜபமும், பஜனையுஞ் செய்துவந்தார். யோகத்தில் இவருக்கு விருப்பிருந்ததால் ஸ்வாமி

விவேகானந்தரின் ராஜ ஞான யோகப் பிரஸங்கங்களுடன் ராமகீதையும் படித்துவந்தார். (மஹர்ஷிகள் ஸமாதியிலிருந்த நாட்களிலேதான் வேதாந்தகேசரியான விவேகானந்தர், சிகாகோவில் இந்துமதத்தை சபைவியக்கப் பேசி திக்விஜயஞ்செய்தது) ஆனால் புத்தகத்திலுள்ளது சரியாக விளங்கவில்லை யாதலின், அவற்றை ஸ்வாமிகளிடம் கொடுத்துத் தெளிவுபடுத்த வேண்டினார். பின்னும் பல ஸந்தேகங்களும் கேட்டார். சேஷய்யருக்கு அஷ்டாங்க யோகத்தில் விருப்பு அதிகம். ஸ்வாமிகள் அனைத்தையும் படித்து, அவருடைய ஸந்தேகங்களைத் தீர்க்கக் காகிதத் துண்டுகளில் தக்கவிடை எழுதித் தந்துவந்தார். இத்துண்டுகளை சேஷய்யர் தெளிவாகக் குறித்துவைத்தார். இவை 1900, 1901, 1902 - ம் ஆண்டுகளில் குறிக்கப்பட்டன. சேஷய்யர் காலஞ்சென்ற பிறகு ஸமீபத்தில் அவருடைய தமையனாரிடமிருந்து இக்குறிப்புக்களை வாங்கி, இப்போது "விசார ஸங்கிரக வினாவிடை" என்ற நூலாக வெளியிட்டுள்ளனர். அந்நூலின் ஸாரம் அடியில் வருமாறு:—

ஸ்வாமிகள் பெரும்பாலும் அத்வைத விசாரமார்க்கமே போதிப்பது வழக்கமாயினும், இதனிடை அஷ்டாங்க யோகத்தைப் பற்றியும் அபூர்வமான திறமையுடன் புதிய பொருள்பட விவரிக்கிறார். அவரவர் இயல்பிற் கேற்ப அவரவரை சுயேச்சையாக விடுத்து, பின்னர் "நானார்?" என்னும் விசாரமார்க்கத்திற்கே திருப்புவது ஸ்வாமிகளின் உபதேசமுறை. துவிதம், அத்துவிதம், விசிட்டாத்துவிதம், ஸித்தாந்தம், சாக்தம் முதலிய எம்மதமும் ஆத்மாநுபூதி நிலையில் ஒன்றாகவே காணப்படும்.

## விசாரஸங்கிரக ஸங்கிரகம்

தனது இயல்பான சொரூபத்தை யறிந்து உள்ளவாறு இருத்தலே விதேகநிலை; "நான் செய்தேன், வந்தேன்" என்னும் வினைகளுக்கு முன்னே நிற்கும் "நான்" என்ற ஒருபோதத்தின் உண்மைவடிவை "நானார்?" என்னும் விசாரத்தால் அறிந்து தானா யிருப்பதே சொரூபவுணர்வு; இந்த உடல் 'நான்' என்னும் போதமே தற்போதம், அவித்தை, மாயை, மலம், ஜீவனெனப்படுகிறது. அந்தத் தற்போத நாசமே முக்தி. உடலைப் பிணமென்றிருத்தி "நானார்?" என விசாரித்தால், இதயத்தில் 'நான், நான்' என்னும் ஒரு எழுச்சி காணும்; அதுவே அகண்டமான அறிவுப்பொருள். அதையே கவனித்துச் சும்மா விருந்தால், அகங்காரத் தற்போதம் அழிந்துமுடிவில் தானும் சாந்தமாகும்; இதுவே முக்தி. இதயத்தில் தோன்றும் நினைவுகளெல்லாம், தேஹோஹம், 'நான் தேகம்' என்ற அகந்தையையே வேராகக்கொண்டு ஸம்ஸாரமென்னும் மாயவிருக்ஷத்தை வளர்க்கின்றன. ஆத்மஸ்வரூபத்திலேயே உறுதியாகி, சுற்றும் நடப்பதை 'நடப்பது நடக்கட்டும்' என்று விலக்ஷணமாயிருக்கப் பயில்வதே (தன்னை விடாமலிருப்பதே) மனவகந்தையைக் கெடுக்கும் வழி. இதயத்துள்ள அஹம் ஸ்வரூபமான ஆத்மாகாரமாகவே கடவுள் இருக்கிறார். நானெனும் நினைப்புவடிவான மனதை அவரிட மிருத்திவிட்டு, அவரை மறவாது, சும்மாவிருத்தலே சிறந்த ஸாதனம். இதுவே ஞானம், பக்தி, யோகம் எல்லாம்.

நான் என்பதில் பஞ்சகோசரூபமான ஸ்தூல ஸூக்ஷ்ம காரணசரீரங்கள் அடங்கிவிட்டன. விசாரத்தால்

இந்த மூன்று தேகத்திலுள்ள தற்போதத்தைப் போக்கலாம். மனமே உயிர் உலகு இறைவடிவா யிருக்கிறது; ஞானத்தின் சேர்க்கையால், சேதநம்போலத் தோன்றுகிறது. மூளையின் சேர்க்கையால், விஷயங்களை யறிந்தனுபவிக்கிறது. கண்டத்தில் மனமென்றும், இதயத்தில் புத்தியென்றும், நாபியில் சித்தமென்றும், ஸர்வாங்கத்திலும் அகந்தையென்றும் கூறுவது விருத்திபேதமே, மனமான அந்தக்கரணத்திற்கு இதயமே நிலயம். இந்திரியங்கள் புறக்கரணம்; மனம் அகக்கரணம். வெளியில் தோன்றும் அனைத்தும் உள்ளேயே யிருக்கின்றன. ஞானத்தால் மனம் ஆத்மாகார மாகும்போது எல்லாம் ப்ரஹ்மமயமாகவே தோன்றும். இதயமே ப்ரஹ்மம். இதயகமலத்தில் விளங்கும் ஆத்மஜோதியே சாக்ஷி, துரியம் எனப்படும். ஞானமாத்ரமாயிருக்கும் ஸத்வசுத்த மனம் தமோகுணவசத்ததாய் உலகரூபமாகப் பரிணமிக்கிறது, இரஜோகுண வசத்ததாய், தேகாதிகள் நானென்று விருப்புவெறுப்பால் புண்யபாபங்களை ஸம்பாதித்து, அவ்வாஸனையால் ஜனன மரணங்களுக்குக் காரணமாகிறது. ஆசான்மூலம் கேட்டுச் சிந்தித்து, "அஹம்ப்ரஹ்ம" மென்னும் ஆத்மாகார மனோவிருத்தியின் இயல்பு நிலைபெற நிதித்யாஸம் செய்யவே, அதன் தாமஸ ராஜஸ வியாபாரங்களொழியும். நுண்ணிய தெளிந்த மனத்தில், தான் அதுவாயிருப்பது நன்கு விளங்கும்.

## தனையாய்த் திருப்பதே தத்துவம்

"நான் ஆன்மா" என்னும் திடபாவத்துடன், ஸ்வாத்மபாவனையை மறவாமலிருந்தால் வியவகாரங்களில்

உதாஸீனபாவத்துடன் இருக்கலாம். மனம் புறப்பட இடந்தரக் கூடாது. அந்த இதசத்ருவிற்குச் சிறிது இடந் தந்தாலும் மடத்தைப் பிடுங்கும். தன்னிலேயிலுள்ள மனது நான் என்றும், எனக்கு வியவகாரமிருக்கிறதென் றும் ஸங்கல்பிக்காது. ஸங்கல்பத்யாகமே ஸந்யாஸம். ஈஸ்வரனாகிய தன்னை மறவாதிருந்தால் எல்லாம் ஸித்தியாகும்.

"மறவாமற் காணும் வகையுணர் வாருக்
கிறவா திருத்தலு மாம்."

"மறவா நினையா மவுனத் திருக்கிற்
பிறவா ரிறவார் பினை."

இதுவே, 'நீ, நான்' என்றிரண்டில்லாமல் நிறைந்த பூரண மாய், எங்கும் தானாகத் தெரிந்த ஞானம். இத்தகைய ஞானி எல்லா வியவகாரங்களையுஞ் செய்யினும், தற்போத மின்மையால் ஒன்றுஞ் செய்யாதவனே; அஞ்ஞானி ஸதா நிஷ்டனாயிருப்பினும் எல்லாஞ் செய்தவனே யாவான்.

பார்ப்பவன், ஜடம் (அறிபடுபொருள்) இரண்டிற் கும் அதீதமாய், ஸர்வசாக்ஷியாயுள்ள இதயநிவாஸமான ப்ரஹ்மமே நாம். ஜீவன் எவ்வளவு வியவகாரங்களி லுழன்று சுகதுக்கங்களை யனுபவித்தாலும், ஞானாகாச மான ஆத்மஜோதிக்குச் சலன மில்லை.

## மனமடக்க வழி

மனவொடுக்கத்தால்தான் உபசாந்தி வாய்த்து ஞானாகாச மெய்தலாம். பிராணவொடுக்கமும் மன வொடுக்கத்திற்கு ஸாதனமே. இது கேவல கும்பகத்தா லும், பிராணாயாமத்தாலும் எய்தும். இரேசக கும்பக மின்றி, இதயத்தில் பிராணனை ஸ்திரப்படுத்துவதே கேவல

கும்பகம். இழுத்தல், நிறுத்தல் விடுத்தலைக் கணக்காகச் செய்வது பிராணயாமம். பிராணன் உதிக்குமிடமே மனமும் உதிப்பதால் பிராணனடங்க மனமுமடங்கும். ஆனால் மனம் நாசமாகாது; அதற்கு அஷ்டாங்க யோகங்களின் பின்பகுதியான தாரணை த்யான ஸமாதிகளை விடாமற் பழகினால், முடிவில் மனமழிந்து சொரூபஸாக்ஷாத்காரம் ஸித்திக்கும். ஆத்ம ஸாக்ஷாத்கார ஸித்திக்கு (க) அஷ்டாங்கயோகம், (உ) அஷ்டாங்க ஞானயோகம் என இரு ஸாதனங்கள் சுருதிகளில் விரிக்கப்பட்டுள்ளன.

## க. அஷ்டாங்கயோகம்

(க) இயமம்,—அஹிம்ஸை, ஸத்யம், அஸ்தேயம் (திருடாமை), ப்ரஹ்மசர்யம், அபரிக்ரஹம் ஆதிய ஒழுக்க முடைமையாம்.

(உ) நியமம்:—சௌசம், ஸந்தோஷம், தவம், ஸ்வாத்யாயம், ஈச்வரப்ரணிதானம் ஆதிய வொழுக்கமுடைமையாம்.

(ங) ஆஸனம்:—அச-வகைகள். ஸிம்ஹம், பத்ரம், பத்மம், ஸித்தம் இவை சிறந்தவை ; இவற்றுள்ளும் ஸித்தாஸனமே (இடது குதிகாலை இலிங்கத்தின்மேல் வைத்து, அதன்மேல் வலது குதிகாலை வைத்து, புருவமத்தியிற் பார்வை வைத்து நிமிர்ந்திருத்தல்) சிறந்தது.

(ச) பிராணயாமம்:—பூரகம் (இழுத்தல்), கும்பகம் (இதயத்தில் இருத்தல்), இரேசகம் (விடுத்தல்) இவற்றை உ: ச: க-என்ற மாத்திரை யளவுப்படி (மாத்திரை யளவு காயத்ரி) அப்யஸித்தால் நலமாகும்.

“மெள்ள விரேசித்து மெய்விம்மிப் பூரித்துக்
கொள்ளுமின் கும்பங் குறித்து.”

“முன்ன மிரேசி முயல்பின்னர்ப் பூரகம்
பின்னது கும்பம் பிடி.”

[இரேசகம்-கசு, பூரகம்-௩உ, கும்பகம் கூச-உயர்ந்த மாத்திரையாகும்.]

(௫) பிரத்யாஹாரம்:--புறத்துள்ள பெயர் வடிவுகளிற் போகாது, மனத்தைக் குவித்து ஏகாக்ரப்படுத்தலாம். (க) ஓங்காரத்தியானம், (உ) கேசரிமுத்திரை (புருவமத்தியில் நாட்டமூன்றல்), (௩) மூக்கு நுனியிற் பார்வையைநாட்டல், (ச) நாதாநுஸந்தானம் முதலியன ஸாதனம். [ஓம்-அ, உ, ம் $3\frac{1}{2}$-மாத்திரைகள் கொண்டது. ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்கள் 3-மாத்திரை; துரீயம் அரை.]

(௬) தாரணை :— இதயம், அல்லது உச்சியிலுள்ள ப்ரஹ்மரந்திரம் (ஸஹஸ்ராரம்) இவ் விரண்டிடத்துமுள்ள அஷ்டதளபத்மங்களில் (இவையே கைலாஸம், வைகுண்டம், பரமபதம், எனப்படுவன) ப்ரஹ்மஸ்வரூபமே தீபஜ்வாலை போன்று பிரகாசித்துக்கொண்டிருப்பதாக பாவனை செய்து அதில் மனத்தை நிறுத்தவேண்டும்.

(௭) தியானம்:—அந்தத் தேஜோமயத்தையே ஸோஹம்பாவனையால் தியானிப்பது; ‘ நானார் ? ’ எனும் விசாரத்தால், “ அஹம், அஹம் ” என்று விளங்கும் இதய தேவனை ஆத்மாவை விடாதிருப்பது.

(௮) ஸமாதி:—அந்த ‘ அஹம் ’ என்னும் ஸ்புரிப்பும் அடங்கிய ஸூக்ஷ்மஸ்திதியே ஸமாதி.

இதயமத்தியில் அங்குஷ்டமாத்ரமாகப் புருஷன் மின்னலைப் போன்று சுடரிட் டொளிர்கிறான். அவனை அனன்யமாக, ஸோஹம் பாவனையுடன் நிஶ்சலமாய் தியானிப்பதே சிறந்தது.

"சிந்தனை புறஞ்சேலாச் சிவோஹம் பாவனை
ஸந்தத முனுற்றிடில் ஸமாதி வந்துறும்."

"ஒன்பது வாயிலு மோக்க வடைத்தக்கா
லன்பதி லோன்று மரன்."

"உள்ளத்தி னுள்ளே யுறப்பார்த்தங் கோண்சுடரை
மேள்ளத்தா னர்ச்சிக்கு மாறு."

ஆத்மத்யானமே சிறந்தது. அதுவே அனைவர் இதயத்தும், 'அஹமஹ' மென்று பேசுவது. இது ஆத்மாகாரமான விஜ்ஞானம்.

"திகழிதய குகையுறையுந் தேவதையை விட்டயலே
தேய்வந் தேடல்,
மிகவரிய கவுத்துவத்தை யெறிந்துசிறு மணிதேடும்
வேட்கை போலாம்."

இதயமே தியானஸ்தானம்; மற்றைய ஆறு ஆதாரங்களும் கற்பனையே. அஹம் ப்ரஹ்மம் என்ற தியானமே அந்தர் பூஜை; அதுவே வேள்வி, தவம், ஜபம், யோகம், தானம், வழிபாடு எல்லாம். இதுவே நிர்க்குணபூஜை.

உ. ஞானஷ்டாங்கங்கள்

(க) இயமம் :—புலனடக்கலாம்.

(உ) நியமம் :—பரமாத்மாவினிடம் இடையறு அன்பு.

"அன்பா லமுது மலறியும் ஆள்வானை
யேன்புருகி யுள்ளே நினை."

(௩) ஆஸனம் :—இடைவிடாத ப்ரஹ்மசிந்தன முண்டாகும் இடம்.

(௪) பிராணுயாமம் :—அஸத்தான பெயர் வடிவை நீக்குதல் இரேசகம்; ஸச்சிதானந்தத்தை கிரகித்தல் பூரகம்; அதை உள்ளிருத்தல் கும்பகம்.

(௫) பிரத்யாஹாரம் :—ஷை நிலையினின்று மனம் விலகாதிருத்தல்.

(௬) தாரணை :—மனத்தை வெளி நாடாது இதயத் திருத்தல்.

(௭) தியானம் :—"பஞ்சகோசமும் நானல்ல; அஹமென்றெழும் சின்மாத்ர வடிவே நான்" என்று இடையறு திருத்தல்.

(௮) ஸமாதி :—அந்த அஹம் ஸ்புரிப்பு மடங்கி, ஸூக்ஷ்மமான ஸாக்ஷாத்காரநிலை யெய்தல்.

இந்த ஞானஷ்டாங்கத்தை எப்போதும் ஸாதனை செய்யலாம். கேவல கும்பகம் ஸித்தித்தால் பிராணுயாமம் வேண்டுவதில்லை. ஞானம், யோகம் இரண்டும் அவரவர் நிலைக்கேற்ப அப்யஸிக்கப்படும். முரட்டுமாட்டைப் புல்லைக் காட்டித் தடவிக்கொடுத்து வசப்படுத்துவது போன்றது ஞானம்; அதை அடித்துக் கட்டுவது போன்றது யோகம். எப்படியும் மனத்தை நிறுத்திஞல் வேறு கவலை யில்லை,

## ப்ரஹ்மவித்தை

ப்ரஹ்மத்தை யறியும் மார்க்கமே தகரோபாஸனை, தகரவித்தை, ப்ரஹ்மவித்தை, ஆத்மவித்தை என்று.

கூறப்படுகிறது. ஜீவனே சிவன்; சிவனே ஜீவன். நெல்லின் உமிவிண்டால் அரிசி; பாசம் நீங்கினால், பசு சிவனாகி தேவனாகப் பிரகாசிக்கிறான். மனோநாச முற்றால்தான் ஜீவன் ஆத்மாவாகும். தனது இயல்பு நிலையை மறைக்கும் ஆவரணசக்தியே மறதி. இந்த அவித்தை "நான் பூரணன்" என்னும் அறிவால் நீங்கும்.

"பூரண னாகு மென்மேற் புவனங்கள் தோற்ற மென்று
தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே?"

(கைவல்யம்)

ஸூக்ஷ்மமனதுடன் சொரூபானுபவ முள்ளவனே ஜீவன் முக்தன்; அவனது நிலையே துரிய, நிர்க்குண ப்ரஹ்மநிலை. இவ்விரண்டுமின்றி ஆழ்ந்த கடலில் மூழ்கியவன்போல், ஒன்றுந் தோற்றாமல், அம்மயமாயிருப்பவனே விதேஹமுக்தன், நிர்க்குணாதீதன், துரியாதீதன். பந்தமுக்திகள் கேவலம் புடைபெயர்ச்சிகளே. யாருக்கு பந்தமுக்திகள்? எனக்கு; நானார்? ஆத்மா. இருந்தபடி இருக்கும் ஆத்மாவுக்கு பந்தமுக்தி யேது?—என்று விசாரித்தால், அவை புடைபெயர்ச்சிகளாகவே தோன்றும். ஸத்சேதனாநு சுபாவநிலை; உண்மையே உள்ளநிலை; உண்மைதான், ஆன்மா;

"நிற்கும் பொருளும் நடப்பனவுந் தானாகி
யுற்றெங்கும் நிற்குஞ் சிவம்."

இவ் விசாரஸங்கிரகவினாவிடை மிகவும் அரிய, பெரிய விஷயங்க ளடங்கியுள்ளது. மஹர்ஷிகளின் வடித்த தமிழ் நடையும், தேனருவி போன்ற இனிமையும், பளிங்கு ஊற்

றுப்போன்ற தெளிவும், நிலம், மலே, நிறைகோல், மலர் நிகர் மாட்சியும், கொள்வோன் கொள்வகை யறிந்து கொடுப்பதும், இச்சிறிய பெரியநூலிற் காணப்படுகின்றன. மஹர்ஷிகள் தொட்டதனைத்தும் தெய்விகவழகாற் பொலியும். இக்காலத்தில் மஹர்ஷிகள் மற்றொரு நூலும் யாத்தார்.

## விவேகசூடாமணி

வேதாந்தஞானச்சுடர்மணியா யிலகும் விவேகசூடாமணியை ஸ்வாமிகள் அப்போது அரைகுறையாக எளிய நடையில் மொழிபெயர்த்திருந்தார். ஒரு முறை உத்தண்டிநயினூர் தமது உடைமைகளையெல்லாம் தருமஞ் செய்துவிட்டு ஸ்வாமிகளுக்குக் குருதக்ஷிணையாக ௧00 - ரூபாய் முன் வைத்தார்; குருவோ, பணத்தை என்றுந் தீண்டுவதில்லையாதலின் கண்டிப்பாக மறுக்கவே, நயினூர், கம்பீரம்—சேஷய்யரிடம் ஸ்வாமி காரியங்களுக்குச் செலவுசெய்யும்படி கொடுத்துவிட்டுச் சென்றூர். நீண்ட காலம் அது உறங்கிக்கொண்டிருந்தது. உத்தண்டி நயினூர் 1916 - ம் ஆண்டு காலமானூர். தம் ஜன்மம் ஸாபல்யமாய்விட்டதென்ற மகிழ்வுடனேயே அவர் வாழ்ந்தார். தமது தொகையும் பகவத்கைங்கரியத்திற்குப் பயன்பட்டதெனக் களிப்புற்றூர். ஒரு நாள் (1908) சேஷய்யரின் மருமகன், ஸ்வாமிகள் தொடங்கிய விவேகசூடாமணியை முற்றும் முடித்தருள வேண்டினூர். ஸ்வாமிகளும் அங்ஙனமே முடிக்க, நயினூர் கொடுத்த தொகையைக் கொண்டு அது அச்சிடப்பட்டது. இதுதான் முதல் முதலாக பகவான் பெயரால் வெளியிடப்பட்ட நூல். இதனுடன்

த்ருக்த்ருச்யவிவேக வசனமும், ஆசாரியர் அருளிய தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம், ஹஸ்தாமலகம், குருஸ்துதி முதலியவை இனிய ஆசிரியவிருத்தங்களில் ஸ்வாமிகளால் பாடப்பெற்றனவும் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல் எத்தனை முறை படித்தாலும், படிக்கப் படிக்கப் பண்புடையாளர் தொடர்பு போன்று, புதுப்புது இன்பம் தருகின்றது. விவேகசூடாமணியினின்று ஶங்கரரின் ஒரு அமுதவாக்கை மட்டும் அன்பர் பருகுக:—

படந்து ஶாஸ்த்ராணி யஜந்து தேவான்
குர்வந்து கர்மாணி பஜந்து தேவதா:|
ஆத்மைக்ய போதேந விநா விமுக்திர்
நஸித்யதி ப்ரஹ்ம ஶதாந்தரேபி. ||

“ சாஸ்திரங்கள் படித்தாலும், தேவபூஜை பண்ணினாலும், கர்மங்கள் அனுஷ்டித்தாலும், தேவதைகளை யுபாஸித்தாலும், இன்னுமென்ன செய்தாலும், ப்ரஹ்மாத்மைக்ய ஞானத்தாலன்றி, எத்தனை கோடி கற்பங்க ளாயினும் முக்தி ஸித்தியாது ” (மஹர்ஷிகள் மொழிபெயர்ப்பு.)

## உஅ. ஸந்நிதியே சாந்தசுகம்.

இதய குகை நடுவில் மனது லய மடைந்தே
யிருந்த படி யிருந்து—மகிழேனோ !
உதித்த விட மோடுங்கி யுலகு மிறை யுயிரு
மொருபோ ருளேன் றுணர்ந்தேன்—னறிவாகி,


அதுவிண் ணென நிலைத்துப் பெருகு நிரா சைபொழி
யமிர்த சஞ்சீ விரஸம்—அருந்தேனே !
பதியன் பது நீயென மவுன நிறை வெளியிற்
பரம சுக மளித்த—குருநாதா !

மஹர்ஷிகளின் ஸந்நிதி மாத்திரத்தில் சாந்தசுகம் பெற்ற மெய்யடியார்களில் ஒரு அரிய ஆன்மாவைப்பற்றி இப்போது பேசப்போகிறோம்.

## சிவப்பிரகாசம்பிள்ளை

இவர் தத்துவ பி. ஏ. (Philosophy B. A.) தேறித் தென்னாற்காடு கலெக்டரேட் (Collectorate) டில் 1900-ம் ஆண்டு வருமான இலாகாவில் உத்யோகம் பெற்றார். 1902-ம் ஆண்டு தமது உத்யோகவலுவலாகத் திருவண்ணாமலைக்கு வந்து பிராமணஸ்வாமிகளின் தன்னலமற்ற ஞானானந்த வாழ்வைக் கேட்டு அவரைப் பார்க்கலானார். அதன்பின் நடந்தவற்றை அவர் யாத்த அநுக்ரக வகவலின் மொழிகளாலேயே கூறுவாம் :—

"ஆங்கிலக் கலாசாலையிற் படித்தபொழுது, என் மடமையுளத்தில், "நானார்?" என ஒரு வினா உதித்தது. நூல்களில் தேடிப் பார்த்தும், அதற்கு விடையறிந்த நின்னை (மஹர்ஷிகளை) நாடிக்கேட்டும், அசுத்தமிகுதியால் ஆழ்ந்தறியாமல், பசுபதி யருளைப் பற்ற வெண்ணாமல், கண்ட வழிகளிற் களித்துத் திரிந்தேன். பண்டை வினையாற் பலதுய ரெய்தி, அறிவு கலங்கி, நின்னருளை வேண்டியடைந்தேன். 'என்னை யுய்வித்தருள்க' வென்றேன். 'நானார் ?' என்னுங் கேள்வியைத் தொடர்ந்து கஉ-வினாக்




. கண்டாலே சாந்தங் கரைபுரண்டோ் பாயுமுளே
விண்டா லதுமயமாம் விண்.

கள் கேட்டேன். கனிந்த மொழிகளால், அத்தனைக்கும் விடையளித்தனை.”

இவ்வினாவிடை அடியிற் குறிக்கப்பட்டுள்ளது; இக் கேள்விகளுக்கு விடை ஒரு கற்பலகையில் எழுதப்பட்டது. அவற்றை சிவப்பிரகாசம்பிள்ளை குறித்தபடி குறிக்கிறோம் :—

க. வினா :—ஸ்வாமீ, நான் யார்? நான் ஈடேறுவதெப்படி?

விடை :—“நானார்” என்று விடாமல் உள்ளே விசாரித்தால் நிஜஸ்வரூபத்தை யறிந்து முக்தி பெறலாம்.

உ. வினா :—நானார்?

விடை :—உண்மையான “நான்” என்பது உடலல்ல; ஞான கர்மேந்திரியங்களல்ல; பிராணனல்ல; மனமல்ல; இவற்றையெல்லா மறியாத சுழுத்தியுமல்ல.

ங. வினா :—இவையெல்லாம் நானன்றேல், பிறகு நானார்?

விடை :—இவற்றையெல்லாம் ‘நேதி’ செய்து மிஞ்சியதே நான்; அதுவே அறிவு.

ச. வினா :—அவ்வறிவி னியல்பென்ன?

விடை :—“நான்” என்னும் எண்ணம் நசித்தவிடமே, ஸத் சித் ஆனந்தம் (உண்மை, அறிவு, இன்பம்). அதுவே மௌனம், ஆத்மா; உள்ளது அதுவே. ஜீவஜகத் ஈச்வரன் என்னும் மூன்றையும் தனித்தனியாக பாவித்தால், சிப்பியில் வெள்ளிபோல மாயையாகும். ஜீவஜகத் ஈச்வரன் இம்மூன்றும் ஒன்றே; ஒரே சிவஸ்வரூபம் அல்லது ஆத்மஸ்வரூபமே யாகும்.

15

ரு. வி௵ :—சிவஸ்வரூபத்தை யடைவதெப்படி ?

விடை :—திருசியப்பொருள்கள் மறைந்தால் திருக்கு வஸ்துவின் உண்மையியல்பு தோன்றும்.

௬. வி௵ :—நாம் திருசியங்களைப் பார்த்துக் கொண்டே சிவஸ்வரூப மடையமுடியாதா ?

விடை :—முடியாது. ஏனெனில் காண்போனும் காட்சியும் (திருக்கு, திருசியம்), கயிறும் அதனிடைக் கற்பிக்கப்பட்ட பாம்பும் போன்றன. ரஜ்ஜுவில் ஆரோபிக்கப்பட்ட ஸர்ப்பத்தின் மயக்கத்தைச் சிதைத்தாலன்றி, உள்ளது கயிறுதான் என்பது தெரியாது.

எ. வி௵ :—திருசியம் எப்போது மறையும் ?

விடை :—எல்லா எண்ணங்களுக்கும் விருத்திகளுக்கும் மூலமான மனம் நசித்தால் புறப்பொருள்கள் மறையும்.

அ. வி௵ :—மனத்தி னியல்பென்ன ?

விடை :—மனம் கேவலம் எண்ணங்களே. அது ஒரு வகை சக்தி ; அதுவே ஜகத்தாகத் தோன்றுகிறது. மனம் சிவஸ்வரூபத்தில் லயித்தால், பின்னே ஆத்மஸித்தி பெறலாம். மனம் கிளம்பினால், உலகம்தோன்றும் ; அதனால் ஆத்மாவை யடைய முடியாது. காதி கதை இம்மன மாயையை விளக்குகிறது.

௯. வி௵ :—மனம் அறுவதெப்படி ?

விடை :—"நான் யார் ?" என்ற விசாரணையைத் தொடங்குதலே மனம் நசிக்க வழி. இந்த விசாரணையும் ஒரு மனோ விருத்தியேயாயினும், இது மனத்தை நசிப்

பித்துப் பிணஞ்சுடு தடிபோலத் தானும் முடிவில் நாச மாகிறது. அப்போதே ஆத்மஞானம் எய்துகிறது; நான் என்ற அகம் அழிகிறது; பிராணனும், விருத்திகளும் அடங்குகின்றன; அகமுதிக்குமிடமே பிராணனும் உதிக் கிறது. எது செய்தாலும் "நான் செய்கிறேன்" என்ற அகந்தையின்றிச் செய்யவேண்டும். அந்நிலை யடைந்தால் சொந்த மனைவியும் தாய்போலத் தோன்றுவாள்; அகந் தையை ஆத்மாவிற்கு அர்ப்பணம் பண்ணிவிடுவதே உண் மையான பக்தி.

கo. வி௵:—மனம் நாசமாக வேறு வழிகளில்லையா?

விடை:—விசாரத்தைவிடச் சிறந்த வழியில்லை. மற் றை வழிகளால் மனம் சற்று அடங்குவது போலிருந்து மறுபடியும் கிளம்பிவிடும்.

கக. வி௵:—ஆனால் நம்மிடம் எத்தனையோ பூர்வ வாஸனைக ளிருக்கின்றனவே; அவை எப்போது ஒழியும்?

விடை:—அந்தர்முகப்படப்பட இந்த வாஸனைகள் தேய்ந்து முடிவில் தாமே அகலும்.

கஉ. வி௵:—எத்தனையோ தலைமுறைகளாக நமது மனங்களிற் குடிகொண்ட இந்த வாஸனைகளை உண்மையா கவே வேர்பெயர்க்க முடியுமா?

விடை:—அப்படிப்பட்ட ஸந்தேஹத்திற்கே இடங் கொடுக்கக் கூடாது; உறுதியாகத் தன்னுள்ளே ஆழ்ந்து மூழ்கவேண்டும். மேலே சொன்ன ஆத்மவிசாரத்தை அடிக்கடி செய்தால் மனம் ஆத்மாவில் லயித்து அதுவே யாகும். ஸந்தேஹம் வந்தால் யாருக்கு இந்த ஸந்தேஹம் வந்ததென் றறிய முயலவேண்டும்.

கங. வி௵ :—இந்த விசாரத்தை எவ்வளவு காலம் செய்வது?

விடை :—மனம் எண்ணங்களை உண்டுபண்ணச் சிறிதும் கிளம்பாதவரையில் விசாரம் செய்யவேண்டும். கோட்டைக்குள் பகைவரிருக்குமட்டும் அவர்கள் வெளிக் கிளம்பி வருவார்கள்; வர வர, ஒவ்வொரு சத்துருவையும் வெட்டிக்கொண்டே யிருந்தால் முடிவில் கோட்டை கைவசப்படும். அம்மாதிரியே, எண்ணம் தலைதூக்கும்போதெல்லாம், விசாரத்தால் நசுக்கிவிடவேண்டும். இப்படி எண்ணங்களை யெல்லாம் எழுந்தவிடத்திலேயே நசிப்பிப்பதற்கே **வைராக்கியம்** எனப் பெயர். ஆத்மாவையடையுமட்டும் விசாரணை வேண்டியதே. ஆத்மாவிலேயே இடைவிடாது எண்ணத்தை வைத்துக்கொள்ளவேண்டியது அவசியம்.

கச. வி௵ :—இவ்வுலகும் அதன் காரியங்களும் கடவுளிச்சையின் பயனன்றோ? எனில், கடவுள் இப்படி எனிச்சிக்கவேண்டும்?

விடை :—கடவுளுக்கு ஆகவேண்டிய காரியமொன்றுமில்லை. எவ்வினையிலும் அவன் கட்டுப்பட்டவனில்லை; உலகவிருத்திகள் அவனை பாதிப்பதில்லை. சூரியனை உதாரணமாக எடுத்துக்கொள்வோம் :—சூரியன் எவ்வித இச்சையும், காரியமும், முயற்சியு மின்றி யுதிக்கிறது. சூரியோதய மானவுடனேயே உலகில் கணக்கற்ற பிரவிருத்திகள் தாமே நடக்கின்றன. அதன் கிரணங்களின் முன் வைக்கப்பட்ட பூதக்கண்ணாடி சூட்டின் மிகுதியால் அனலை யுண்டுபண்ணுகிறது. தாமரை

மலர்கிறது ; நீர் ஆவியாகிறது. உலகிலுள்ள ஒவ்வொரு உயிரும் தனக்குரிய பிரவிருத்திகளைத் தொடங்கிச் செய்து முடிவில் முடிக்கிறது. இவை யெல்லாம் சூரியனை எவ் விதத்தும் அணுகுவதில்லை. சூரியன் தனது நிலையில் நிஸ் ஸங்கல்பனாகி ஒரு நியமப்படி உதித்து, சாக்ஷியாகவே யிருக்கிறான். அப்படியே கடவுளும். ஆகாயத்தை எடுத் துக்கொள்வோம்:—மண், நீர், தீ, காற்று எல்லாம் அதி லிருக்கிறது ; அதனாலேயே அவை இயங்கி மாறுகின்றன. இருப்பினும், அதை ஒன்றும் பாதகப்படுத்துவதில்லை. அப்படியே கடவுளையும் எதுவும் பாதகப்படுத்த முடி யாது. ஜீவராசிகள் கட்டுப்பட்ட ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம் ஹாரம், திரோபவம், அநுக்ரஹம், முக்தி எதிலும் அவ னுக்கு ஸம்பந்தமில்லை. கர்மாநுஸாரமாக அததன் பலனை அனுபவித்து அதது இயங்குகிறது. எதுவும், எவ் வினையும் கடவுளைக் கட்டுப்படுத்துவதில்லை.

"ஊனுடலி லிருந்தும் அதனின்று வேறாய், நாச மில் லாததாய், ஞானமயமாய், மகா சுகமான பரவஸ்து ஒன்று நம்முள் ளிருப்பதை யறியவேண்டும். அதற்கு தேகாபிமானத்தை விட்டு, இவ்வுடல் நானல்ல ; பின்னே "நான் யார் ?" என்று விசாரிக்கவேண்டும். அதன் வழியில் எவ்வளவு வாதனை வரினும், அஞ்சாத சூர னொருவன் கோட்டையிலுள்ள பகைவர் வெளியில் வர வர, அவர்களை யெல்லாம் மடித்துக் கடைசியிற் கோட் டையைப் பிடிப்பதுபோல, சிறிது நினைப்பையும், 'இது யாருக்கு ? நான் யார் ?' என்று விசாரித்து நசுக்கவேண் டும். அகமெனும் நினைவொழிந்தால், தானெனும் ஒப் பற்ற பொருள் விளங்கும். முத்துக்குளிப்பவனைப்போல,

மூழ்கி மூழ்கி மூழ்கித் தன்னுள் ஆழ்ந்திடில் தன்னை யறியலாம்.''

"அந்த அறிவே அரியவீடென்றும் சிந்தையிற் பதித்தருள் செய்தனை. நினது சக்தியால் எனது அந்தக்கரணத்தை ஒடுக்கி, இக்காயத்தில் அறிவாகிக் கலந்த உன்னைக் காணவும் வழி யறிவித்தனை. [இதன்பின் அவருடைய மனைவி காலஞ்சென்றாள்.] நின்னுபதேசப்படி அனுட்டிக்க முயலுங்காலையில் தாங்கொணாத கொடிய பெண்காமம் என் மனதை யலக்கணித்தது; உடனே விவாகஞ்செய்துகொள்ள வுன்னிப் பொருட்குறைவாலே கலங்கினேன். உலகெல்லாம் புலன்களும், புலன் நினைவுகளும், இன்பதுன்பங்களுமாகவே தோன்றினவெனினும், அதன் அல்லலை யொழிக்கும் ஆற்றல் எனக்கில்லை. ஜகமும் ஜடமும் என் ஸ்ருஷ்டிகளல்ல; ஆனால் அவற்றிற்கு ஒரு நியாமகன் இருந்தே தீரவேண்டுமே. ஒரு சக்திப்பரமன் இருந்தே உயிர்களை உடலுடன் படைத்தும் மறைத்தும் ஆட்டுகிறான்; அந்த இறைவனிடம் எனது குறைகளைக் கூறுவேன் என்று தீர்மானித்து, 'கடவுளே, கருத்தனே, அரனே, அருளே, அண்ணலே. உன்னை யல்லால் சரண் வேறில்லை. தமியேன் பிழைகளைப் பொறுத்து அடியிற் கண்ட கேள்விகளுக்கு, இரவு முடிவதற்குள் எழுதியேனும், இல்லாவிட்டால் காட்சியாகி யுரைத்தேனும் விடை தந்தருள்க. அருளியவாறே உறுதியா யொழுகுவன்; அப்படி நீ பதில் சொல்லாவிடில், கருணாகரனாய் அருணகிரியில் வீற்றிருக்கும் பிரமணஸ்வாமிகளின் அருட்டுணையையே நாடிப் பின்பற்றுவேன்' என்று வணங்கி எனது ஐயங்களை ஒரு காகிதத்தில் எழுதி, இர

வில் விக்நேஶ்வரர் பாதத்தில் பக்தியுடன் வைத்தேன்.”
அக்கேள்விகள் அடியில் வருமாறு:—

(க) இந்த ஜகத்தில் ஒரு துன்பமுந் தொடராதிருக்க நான் என்ன செய்யவேண்டும்?

(உ) கருத்திற் குறித்த ஒரு கன்னியை நான் மணஞ் செய்துகொள்ளலாமா?

(ந) ஆகாதென்னில், ஏன் ஆகாது?

(ச) ஆகுமென்னில், அதற்கு வேண்டும் பொருள் எப்படித் தேடுவது?

“இரவுமுழுதும் பிள்ளையார் முன்னே வணக்கமுடன் காத்திருந்தும், என் கேள்விகளுக்கு விடை காணேன். ஏமாந்து வருந்தி உடனே நின்னிடம் (மஹர்ஷிகளிடம் விரூபாக்ஷ குகைக்கு)வந்தேன். எனது கேள்விகளை வெளியிடாமற் சிலநாள் நின்னடியிற் காத்திருந்தேன். மனத்தை வென்று தன்னை யாய்ந்து தானிருப்பதுவே நல்வழி யென்று நடந்துகாட்டி நிலைநாட்டும் நின்னிடம் வந்தும், பொருளும், பெண்ணுங் கிடைக்கும் வழியைக் கேட்பது வழுவென் றெண்ணி, மொழியாது, மோனமாய்த் திரும்ப வெண்ணினேன். (4-5-1913-ல்) பலர் நடுவே நீ வீற்றிருந்தனை; என்னை அருகி லிருக்கச்செய்தனை. நான் நின்னைக் காணவும், என்னே புதுமை! நின்னைச் சுற்றி ஒருஜோதிப் பிரபை வீசிற்று.”

## ஜோதிவடிவு

“கனகமயமாக ஒரு குழந்தை ஜோதிர் மயமான உனது உச்சியினின்று பளிச்சென வெளிவந்து, உள்ளே மறைந்தது; இப்படி இரண்டுமூன்று தடவை எளியேனுக்

குக் காட்சி தந்தருளினை. இதைக்கண்டு வியந்து, கடவுள் இருக்கிருர் எனக் கருத்தில் உறுதியாகி, அழுது, விம்மி, கூட இருக்கும் அடியாருக்கு உரைத்தேன்; அவர்கள் நகைத்து, நான் உண்ட கஞ்சா மயக்கம் என்று விகடஞ் செய்தனர். மறுநாட் காலை (5-5-1913) முன்னே இருந்து நோக்கினேன். ஆ, யான் கண்டதை என்னென்றுரைப் பேன்! பல பூரண சந்திரர்கள் ஒன்றியதுபோன்ற ஜோதி நின்னைச் சுற்றி யெங்குஞ் சூழ்ந்திடக் கண்டேன். நினது திருமேனி யெல்லாம் பொற்கதிர் நிறைந்த தினகரன்போ லொளிர்ந்தது. கண்கள் அருள் பொழிந்தன; நினது பெரும் பெருமையும், குறைவறு நிறைகுணமும் விளங் கின. பின்னர் ஒருநாள் தூய வெண்ணீற் ருெளியாக நின் மேனி முழுவதும் கதிர்விடக்கண்டேன். வினையேனின் கல் மனம் நீரா யுருகிக் கரைந்தது. நான் கண்ணுரக்கண்டதை அண்டையி லிருந்தோர் காணவில்லை. நான் வாய் திறந்து ஒன்றும் கேட்கவுமில்லை; நீ சொல்லவுமில்லை. இதன்பின் அடுத்த இரண்டாந்தினத்தில், நின் ஸந்நிதியில் 'ஓம்ஸுப்ர ஹ்மண்ய'மென்று உச்சரித்திருக்கையில் உனது திருமேனி பளிங்குபோல ஒளிவீசக் கண்டேன்; நின் ஸந்நிதியை விட் டகன்ருல் இக்காட்சி மறையுமென் றஞ்சி ஆனந்தக் கண் ணீர் வடித்து நின்றேன்! நினது அருள் கூடியதென்று உறுதியானேன். ப்ரஹ்மசர்யத்துடன் தவத்தை மேற் கொள்ளவே உறுதியானேன். பின்னே கனவிலும் நன விலும் பலதரம் ஜோதிமயமாகத் தோன்றினை. உனது பேரருளைச் சொல்லி முடியுமோ! நல்லோர் நடுங்கும் காமம், வெகுளி, கள், புலால், பொய் முதலிய ஸகல பாவ மும் சார்ந்த பாவியேன், ஸகலவிதத்தும் வெறுக்கத்தக்க

நாயேனையும், பிழையிலுழலாது அடக்கியாண்ட வுன்பதம் பற்றி யுய்ய வருளாய். ரமணமஹர்ஷி யென்னும் பெயர் போற்றி! இரமிக்கச் செய்யும் உன் எழிலுரு போற்றி! இரமியமான நின்மொழி போற்றி! அஞ்சலென்னும் நின் அருள்விழி போற்றி! வினையைச் சுட்டிடும் வேல்விழி போற்றி! சித்தஞ் சலித்து நின் சேவடி யடைந்தோர், பக்தி யில்லாப் பாவிக ளாயினும், தாய்போ லிரங்கித் தளிரின் சொல்லால், மனத்தைத் தேற்றும் மன்னவா போற்றி! அன்பே யுருவா யமர்ந்தாய் போற்றி!''

இதுதான் சிவப்பிரகாசம் பிள்ளை பகவானிடம்பெற்ற அநுக்ரஹத்தின் சுயசரிதம். இதனால் மஹர்ஷிகளின் அருட்பெருமையும், நம்பி யடைந்தவர்க்கு ஆன்மஸாக்ஷாத்காரம் நிச்சயமாய் எய்துமென்றுந் தெளியத் தெரிகிறது. இந்த ரமணாநுபூதிச் செல்வர் பிறகு தவமேற் கொண்டு தமது ஊரிலேயே ஆத்மத்யானத் தமர்ந்தார். இவருக்கு இன்னும் பல வுண்மைகளை மஹர்ஷிகள் பல தடவைகளில் அருளியுள்ளார். அவைகளைத் தமது ரமண பாதமாலையிற் பாடுகிறார். அவற்றினின்று புதுமையான சில மொழிகளை மட்டும் ஈண்டுக் குறிக்கிறோம்:—அறிந்தும் அறிந்தோனாகக் காட்டாத அறிஞன், நஞ்சும் அமுதமாகக் கொள்ளும் நாதன், ஆபத்தொன்றும் அணுகவொட்டா அப்பன், இன்னா செயினும் இனிய செய்யும் இறைவன், கல்நெஞ்சத்தையும் கனியச் செய்யும் கர்த்தன், வான்போல் கைம்மாறு வேண்டாத வள்ளல் கூறிய உபதேசம் யாது?

"'நான் யார்' எனப் பார்; அன்னியத்தை விடு; தானானால் துயர்போகும்; ஈசன்மேலே எல்லாப் பாரமும்

போட்டுக் கவலையற்றிரு ; அவன் எப்பாரத்தையுந் தாங்க வல்லவன். ஒன்றும் நினையாதிரு ; உள்ளத்தை உன்னுள்ளிருத்து ; ஆத்மஸ்வரூபம் அடையுமட்டும் ஆத்மவிசாரத்தை விடாதே. 'நானு'ரென்னும் விசாரத்தாலே ஊனோடுற்ற உறவொழியும் ; அலையும் மனத்தை இறைவனுக்களி; அதுவே பெரிய பக்தி ; உன்னுள் உள்ள ஈசனை விடாதே ; எழும்பும் நினைவுகளை யெல்லாம் நசுக்கு ; பெண்ணாண் பேதம் போக்கு ; அந்த பேதம் போக்கவே மன்றல் வழியாக ஏற்பட்டது. பிறருக்கு ஈவது தனக்கே யீவதாகும் ; தாழ்ந்து நடக்க நடக்க நல்லது ; கீழோர்பாலும் வெறுப்பைக் கெடு ; சொன்ன சொல் தவறாதே ; அன்னியர் காரியத்தில் பிரவேசிக்காதே. ஈசன் ஆளொன் றெவையுமியற்று ; ஆன்மாவில் மனத்தைப் பதி ; அதுவே குருவின் சொற்படி நிற்றலாகும் ; எமக்கு எதுவுங் கொடுக்க வேண்டாம் ; பேதம் நீங்கிற் போதும்.''

இவ் வுண்மைகளைப் பன்முறை திருப்பித் திருப்பி யோதினும் மிகையாகாது. மந்திரத்தை ஜபிக்க ஜபிக்கச் சிறப்பன்றோ !

ஜோதி மயமாய்ச் சுடர்காந்திச் சொருபநிலை
போதிக்கும் சற்குருவே போற்றி !

# உகூ. பகவான் ரமணமஹர்ஷிகள்.

“ பஶ்யாமி தேவதத்தேந ஞாநேநத்வாம் முஹுர்
[முஹு:|
ப்ரஹ்மண்யாநாம் வரம் ப்ரஹ்மந் ஸுப்ரஹ்மண்யம்
[நராக்ருதிம்||

“ ப்ரஹ்மநிஷ்டை யுள்ளவர்களில் சிரேஷ்டனை, மானிடாகாரங் கொண்ட ஸுப்ரஹ்மண்யனென்று உன்னை (மஹர்ஷிகளே) அடிக்கடி திவ்ய ஞானத்தினுற் பார்க்கிறேன்.”

—கணபதிமுனி

கணபதி முனிவர் 1878-ம் ஆண்டு (பகுதான்ய வருஷம், கார்த்திகை மாதம், மகா நக்ஷத்திரத்தில்) விசாகபட்டணம், கலவராய் கிராமத்தில் நரஸிம்மசாஸ்திரியாரின் திருமகனாக வுதித்தார். இவர் காசி கணபதியின் அநுக்ரஹத்தால் உதித்ததால் கணபதியெனப் பெயரிடப் பெற்றார். ஐந்தாண்டுகள் வரையில் குமரகுருபர ஸ்வாமிகளைப் போல இவர் ஊமையாயும், பல நோய்களால் பீடிக்கப் பட்டவராயு மிருந்தார்; ஆறுவது வயதில் சூடு போடப் பட்டதால், இவற்றினின்று நீங்கி வாய்மலர்ந்து சண்டமாருதமாகப் பேசத் தொடங்கினர்.

கணபதிமுனிவர் பிறவிக் கவி; பிறவிப் புலவர். அபார ஞாபகசக்தி வாய்ந்த அஷ்டாவதானி; பத்து வயதிற்குள் வடகலைக் கடலைக் கடைந்து பல காவியங்களையும் இலக்கணங்களையும் நன்கு கற்றுக் கவிபுனையவும், பஞ்சாங்

கங்களைக் கணிக்கவும், வல்லுநரானார்; பன்னிரண்டாம் ஆண்டில், "பிருங்கஸந்தேசம்" என்ற க்ரந்தத்தை மந்தாக்ராந்த சந்தத்தில் இரண்டு காண்டமாகப் பாடி முடித்தார். கச-ம் வயதில் பஞ்சகாவ்யங்கள், யாப்பிலக்கணம், வியாகரணம், ராமாயணம் பாரதம் முதலிய இதிஹாஸங்கள், பலபுராணங்களையும் செவ்வனே தேர்ந்து தங்குதடையின்றி சடசடவென்று எந்த விஷயத்தைப் பற்றியும் வடமொழியிற் பேசவும், அழகாக எழுதவும் வல்லுநரானார். இப்புலமையுடன் இவர் நிற்கவில்லை. இவருடைய மனம் இளமையிலேயே ஜபதபத்தின்பால் ஈர்க்கப்பட்டது. விஶ்வாமித்திரர் ஐந்து உலகைத் தவத்தாலாக்கினார்; துருவர் தவத்தால் தமது தேசத்தைத் தமக்கே மீட்டு ஆண்டார், நாம் ஏன் அதே தவசக்தியால் அவர்களைப் போன்ற ஸித்திகளைப் பெறலாகாது என்னும் எழுச்சி இளமையிலேயே இவருக்குப் பிறந்தது. கஅ-வயதில் விசாலாக்ஷி என்ற உத்தமியைத் திருமணம் புரிந்தார். இம்மாதும் கணவனுக்கேற்ற உயர்ந்த தவ வாழ்வையே விரும்பி, கணபதிமுனிவரின் தபஸ்ஸினியாய், வள்ளுவருக்கு வாசுகி வாய்த்ததுபோல நிலவினாள். இப்புனிதவதியைக் குறித்து, தாம் எழுதிய ரமணகீதை பதின்மூன்றாம் அத்யாயத்தில் கணபதிமுனிவர், "ஆத்ரேயவம்சத்தின் நிலவு; ககாராதி பஞ்சதசீ மஹாவித்தையைக் கைக்கொண்டவள்; தாரிணீசக்தி மஹாவித்தையில் மிகவும் பிரஸித்திபெற்ற எனது தபஸ்ஸினி விசாலாக்ஷி" என்று சிறப்பித்துள்ளார். கணபதிமுனிவர் தவசக்தி பெற்று, உலகில் தமது உயர்நோக்கத்தை நிறைவேற்றப் பேராவலுற்று, கங்கை, யமுனை, கோதாவரி, தாமிரபரணி

முதலிய நதிக்கரைகளில் சிவபஞ்சாக்ஷரி மந்திர ஜபம் செய்தார். ஜபத்தினலேயே காரியஸித்தி பெறலாம் என்பது இவருடைய உறுதி. மந்திரசாஸ்திரத்திலும், கணிதத்திலும், இன்னும் பல சாஸ்திரங்களிலும் இவருக்கு அதி அற்புதமான வல்லமை யேற்பட்டது. மஹா தேவனே தம்முன் வந்து தம் காரியஸித்திக்கு வேண்டிய சக்திகளைத் தருவானென்பது இவருடைய தவ வுறுதி. எங்கு இவர் தவமிருந்தாலும் அவ்விடத்தில் வழங்கும் மொழியை வெகு எளிதிற் பயின்று அதிலேயே சரமாரியாக விஷயங்களைக் கொட்டுவார். இப்படியாக இவர் ஆந்திரத்திலும், ஆரியத்திலும் நிகரற்ற புலமை வாய்ந்ததுடன் ஹிந்தி, கன்னடம், தமிழ் முதலிய மொழிகளிலும் சோனமாரியாகச் சொற்பொழிவாற்ற வல்லவர்.

## "காவியகண்டம்"

1900-ல் நதியாவில் ஆசுகவி அம்பிகாதத்தர் தலைமையிற் கூடிய பண்டிதஸபையில் இவர் தனது ஆசுகவித் திறமையைக் காட்டினர்.

ஆரியா விருத்தத்தில் அம்பிகாதத்தர் முனிவரை நோக்கி,

"ஸத்வர கவிதா ஸவிதா கௌடோஹம் கஶ்சிதம் [பிகாதத்த:"

"நான் ஆசுகவிக்கதிர், கௌடதேசத்தன், அம்பிகாதாஸன்" என்றார்

முனிவர்,

"கணபதி ரிதிகவி குலபதி ரதிதக்ஷோ தாக்ஷிணாத் [யோஹம்"

"யான் கவிகுலபதி கணபதி; பெருந்தகைப் புலவன்; திராவிட நாட்டான்" என்று சொல்லி, "பவான் தத்த: அஹம்ஸௌரஸ:" என்று சிலேடை பேசினார். "தத்தன்" என்பது தத்துப்புத்திரன். "அம்பிகாதாஸனை நீ பார்வதியின் ஸ்வீகாரப்பிள்ளை. நானே கணபதி சொந்தப்பிள்ளை" என்றார்.

பிறகு அம்பிகாதத்தர் ஒரு விநோதமான ஈற்றடியைக் கொடுத்தார்:

"ஸ்தனவஸ்த்ரம் பரித்யஜ்ய வதூஶ்வஶுர மிச்சதி"

"மார்புச்சேலை நீக்கி மருமகள் மாமனாரை இச்சிக்கிறாள்." இந்தக் குயுக்தி நமது கவிக்காளமேகத்திடம் பலிக்குமா? உடனே,

"ஹிடிம்பா பீமதயிதா நிதாகே கர்ம பீடிதா
ஸ்தன வஸ்த்ரம்............"

"பீமஸேனன் வாயுபுத்ரன்; அவன் மனைவி ஹிடும்பி; கோடையின் வெப்பத்தாற் பீடிக்கப்பட்டுத் தன் மாரைத் திறந்து மாமனாரான காற்றை விரும்பினாள்" என்று ஒட்டக்கூத்தனுக்கு இரட்டைத் தாழ்ப்பாளாக பதிலைச் சுண்டினார்; பின்னும் பல ஈற்றடிகளை ஸபை மெச்சும்படி பூர்த்திசெய்யவே அனைவரும் மகிழ்ந்து "காவியகண்டம்" என்ற பட்டஞ் சூட்டினர். முனிவர் ஸாதாரணமாகப் பேசும்போதே காவியகண்டரென்று யாரும் அறியலாம்.

பெல்காம் காங்கிரஸில் தீண்டாமையைப்பற்றி ஆரியத்தில் இவர் அடித்த கிண்கிணிமணியோசை மஹாத்மா, மாளவியா முதலியோருக்கே வியப்பை யுண்டுபண்ணியது. ஆனால் இந்த வித்வத்தைக்கூட அவர் கருதாது, தமது

தாய்நாடும், மதமும் சிறந்திலங்க வேண்டி சிவசக்தியைப் பெறக் கோடிக்கணக்கான சிவபஞ்சாக்ஷரியை உருவேற்று வதிலேயே கவனம் வகித்தார். வட இந்தியாவிற் பல இடங்களில் தவஞ்செய்து, ஆங்காங்கு புலவரால் 'புலவர் சிங்க'மெனப் புகழ்படைத்து 1903-ம் ஆண்டு கணபதி முனிவர் ஜோதிர்லிங்கம் இலங்கும் திருவண்ணாமலையை அடைந்து ஓராண்டு தவமிருந்தார். மலைமீது தவராஜனாக விளங்கும் பிராமணஸ்வாமியைப்பற்றிக் கேள்வியுற்று, அவரை இருமுறை தரிசித்தார்; 1903-ம் ஆண்டு பிரா மணஸ்வாமிகளைக் கண்டவுடன் தமது பண்டிதத் திறமை யைக் காட்டி,

"ஶுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸந்ந வதநம் த்யாயேத் ஸர்வவிக்நோபஶாந்தயே"

என்ற பிள்ளையார் வணக்கத்தை மஹர்ஷிகளுக்குப் பொருத்தி வியாக்கியானஞ் செய்தார் :—

ஸ்வாமிகளும் ஶுக்லாம்பரரே, வெள்ளியஉடையைக் கோவணமாக அணிந்தவரே; ப்ரஹ்மாத்மைக்கியத்தால் எங்கிலுமிருப்பவரே; சசிவர்ணரே; மனம், புத்தி, சித்தம், அகங்காரம் நான்கையும் வசப்படுத்தி யடக்கியவரே; பிரஸந்நவதனரே; முமுக்ஷுக்களுக்கு யோகத்தின் பால் வரும் ஸந்தேஹவிக்நங்களை நாசஞ் செய்பவரே; அனைவர்க்கும் உபசாந்தி யளிப்பவரே. ஆதலின், அவ ருக்கே இம்மந்திரம் பொருந்துமென வியாக்கியானஞ் செய்தார். 1904-ம் ஆண்டு கிருத்திகையின்போது அருணாசலேச்வரர்மீது ஆயிரம் கவிகள் பொழிந்து அனை வரையும் வியக்கச் செய்தார்.

பிறகு 1904-ல் வேலூர் கலாசாலையில் தெலுங்கு பண்டிதராக வேலை யொப்புக்கொண்டு சென்றுவிட்டார். அங்கு சிஷ்யகோடிகளைச் சேர்த்து, மந்திரஜபத்தின்மூலம் சக்திபெற்று, தேசத்திற்குப் பெருத்த நலஞ்செய்ய எண்ணங்கொண்டு ஏற்பாடு செய்தார். முனிவருக்கு இந்து தேசசரித்திரத்தில் நல்ல ஆராய்ச்சியுண்டு. பல மதங்களின் உட்கிடக்கை யெல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளத்தெளிய உணர்ந்து, தமது சொற்பொழிவுகளில் விஷயங்களைக் குளிர்காற்றுப்பட்ட சூல்மேகம்போலப் பொழிந்து தீர்ப்பார். இப்புலமை யனைத்தையும் தமது தேசமும், மதமும் உய்யவே பெரும் பயன்படுத்த அவர் தவசக்தியை வளர்க்கிறார்.

1907-ம் ஆண்டு முனிவர் தமது வேலையை ராஜி நாமாச்செய்து, மீண்டும் திருவண்ணாமலைக்கே வந்து சேர்ந்தார். தாம் இத்துணைநாள் கடுந்தவம் புரிந்தும், இன்னும் தமது காரியம் கைகூடவில்லையே என்ற உணர்வுடன், ஸ்வாமிகளின் திருமுன்னர் வந்தார். ஸ்வாமிகள் ஏகாந்தமாக அமர்ந்திருந்தார். அந்த அருட்சோதி ஸந்நிதி முனிவர் மனத்தை யள்ளியது :—

## ஸ்ரீ ரமண தர்சனம்

அருட்பா லருவி யணிபெற வொழுகுந், திருமுக வழகன் ; தினகர ஜோதி ; ஜகமிறை யுயிருந் தன்மயத் தடக்கி, ஸஹஜ நிஷ்டைத் தவிசுறை மன்னன்; அழியுடல் மறந்தே யானந்த மயமாய், அழியாப் பொருளில் அழியா தமர்ந்தோன் ; கருணைக் காந்தங் கதிரொளிர் விழியோன் ; அருணாசல சிவன் அதுவே யானென் ; கண்டார் ஐயக்

களைகளைந் தெறிந்தே, விண்டிடா ஞான விளைபயிர் வளர்ப்போன்; அரும்பசி யாளர்க் கமுதுட னளிப்போன்; ஒருமொழி தேர்ந்தே மறையெலாம் விரிப்போன்; வேண்டுமென் றுவிரும்பா தவனும்; வேண்டா மென்றே வெறுக்காதவனும்; இதயக் கமலமே யின்ப வுடலாய், அதுமய மாகவே யாங்கொளிர்பவனும்; உடற்பற் றுயிர்ப்பற் றுளப்பற் றுலகில், இடப்பற் றற்றே யிருந்துழி யிருப்போன்; ஸதஸத் விலாஸன்; ஸகுண நிர்க்குணன்; பொதுநின்றிதுவெனப் போத முணர்த்துவோன்; தற்போத மறுந்தற்பரச் சிற்பரன்; முப்புடி காணு மெய்ப்பொருள் விளக்குவோன்; கடலினும் விரிந்தோன்; காற்றினுந் துறந்தோன்; அடலரும் புலன்களை யடக்கிய வீரன்; மந்திரம் மூச்சு மட்டிலாக் கருமம், தந்திரம் புரிந்துந் தன்னுடல் வருத்தியும், ஆடிப் பாடி யழுதன் பிசைத்தும், நாடியுங் காணு நவிலரும் பொருளை, அருணு சலனுள் ளலர்த்திடப் பெற்றுப், பொருளே தானுய்ப் பொலிந்திடும் பகவான்! கருதிய ஞானக் கற்பக மாகிக், கருதா தெவர்க்குங் கதிபெற வளிப்போன்; 'பாஹி' யென்று பதமடைந்தோரின், தாகந் தீர்க்குந் தடம்பாற் கடலோன்; இவனே இவனே யென்றுமுன் னின்றே, பவவினை தீர்க்கும் பதமலர் பற்றி, வாய்மனம் பதைப்ப வள்ளலை நோக்கி:—

"விரிமறை யெல்லாம் மறுவறப் பயின்றேன்!
அரியவே தாந்தந் தெரிவுறத் தெளிந்தேன்!
கற்பன யாவுங் கற்றுத் தீர்த்தேன்!
பற்பல விடங்களிற் பரமனை நினைந்தே
செபவினை நோற்றுத் திளைத்தனன்; எனினும்,
தவவினை யெதுவெனத் தமியே னறிந்திலன்!

தேசுற வடைந்தேன் றேசிக வுன்பதம்!
ஆசறு தவத்தியல் யாதென வருள்க."

என்று ஸ்வாமிகள் முன்னே ஸர்வாங்க நமஸ்காரஞ் செய்து நிற்றலும், ஸ்வாமிகள், தமைவந் தடைந்த தனி மறை நிகரும் முனிவரி னையம் துணிபட நோக்கி, கால் மணி நேரம் கமலக் கண்களை, கதியென் றோன்பாற் கருணையோ டுறுத்தி, வாய்மலர் திறந்தே வாய்மை யுரைப்பார்:—

" 'நான், நான்' என்பது எங்கேயிருந்து புறப்படுகின்றதோ அதைக் கவனித்தால், மனம் அங்கே லீனமாகும்—அதுவே தபஸ்."

" ஒரு மந்திரத்தை ஜபம் பண்ணினால், அந்த மந்திர த்வனி (சப்தம்) எங்கிருந்து புறப்படுகிறது என்று கவனித்தால், மனம் அங்கே லீனமாகிறது—அதுதான் தபஸ்"

இவ்வுபதேசம் செவ்விய முனிவரின் ஐயந் தீர்த்தே அகமகிழ் வீந்தது! பலித்தது தவமெனக் களித்ததுநெஞ்சம். இவ் வரிய பெரிய உபதேசம், முற்றும் ஸ்வாநுபூதியினின்றே யரும்பியது. ஞானக்கண்ணாற் கண்டு நவிலப்பட்டது; தமது நலிவினைத்தீர்த்த ஞானஸஞ்சீவி யென்று முனிவர் அதைக் கைக்கொண்டு ஸ்வாமிகள் முன்னிலையில் நெடுநேரம் வீற்றிருந்தார். பக்கமிருக்கும் பழனிஸ்வாமியை ஸ்வாமிகளின் பெயரினை வினவி, " வேங்கடராமய்யர் " என்று தெரிந்தார். உடனே தமது கவிவாணியினைக் களிப்புறத் தூண்டி, ஐந்து பாக்கள் அணியுறப் பொழிந்தார்; அதன்கண் தம் மனத்து ஐயந் தீர்த்த அருட்பெருமுதலை, " ரமணன் " என்று திருப்பெயர் சூட்டிச் சிறப்

பாய்த் துதித்தார்; கோடிக்கணக்கான ஜபஞ் செய்த முனிவரின் வாக்கினால், இடப்பெற்ற இந்த "ரமணன்" எனும் பெயரே ஸ்வாமிகளுக்குப் பின்னே உலகறிய வழங்கிக் கொண்டாடப்பட்டது. "தனது சிரவில் ரமணவிருத்தி யாகிய தேவசேனை (ரமணி) இருந்தும் மன்மதவாஸனை யற்றவன்" என்று முனிவர் மஹர்ஷிகளை வர்ணிக்கிறார். ரமணரை முருகனாகவே முனிவர் கண்டார். "ரமணன்" என்ற அநுபவப்பொருளுக்கு, ஆத்மாவை ரமிக்கச்செய்யும் செம்பொருளுக்கு, முனிவர் பல விதமான விரிவுரை யளித்தார். இது புதுப்பெயரல்ல; ஸ்வாமிகளைப் பிள்ளைப்பருவத்தில் அவரது உறவினரான லக்ஷ்மணய்யர் என்ற தெலுங்குவித்வான் "ரமணி" என்ற செல்வப்பெயருடனே யழைத்துவந்தார்.

மறுநாளே முனிவர் தமது மாணவர்களுக்கும் உறவினருக்கும், "மலை மீதிருக்கும் பிராமணஸ்வாமியிடம் உபதேசம் பெற்றேன். மறுவிலாக் காட்சிப் பெரியனை யினிமேல் "மஹர்ஷி" யென்று வணங்கிப் பணிக! உள்ளுறக் கண்டே யுரைத்தன னனைத்தும்; மறைகளுக் கரிய வுரைகளைச் சொன்னான்! ஊர்த்துவ ரேதஸும், உக்கிர தபஸும், சமதம சாந்த திதிக்ஷை யுபரதி, அனைத்தும் நிறைந்த அமைதிப் பெருங்கடல்; தீவினை நீக்குவோன்; செம்பொரு ளீவோன்; ஸத்தியஸந்தன்; தவராஜசிங்கன்!—இத்தகைச் செல்வன் உத்தம மஹர்ஷி" என்றெழுதி அன்றுமுதல் தம் சீடர்கள் பிராமணஸ்வாமியை "பகவான் மஹர்ஷி" யென்று வணங்கச் செய்தார். அன்றுமுதலே "பகவான் ரமணமஹர்ஷிகள்" எனும் பெயர் முனிவர் வாக்கினால் உலகறிய விளங்கிற்று.

மஹர்ஷிகள் தமக்குச் செய்த உபதேசம் சக்தியின் அநுக்ரஹத்தால் கிடைத்த செல்வமெனக் கொண்டு அதையே செம்பொருளாக வைத்து, கணபதிமுனிவர் மூன்று வாரங்களில் ஆயிரம் அமுதக்கவிக ளடங்கிய "உமாஸஹஸ்ரம்" என்னுஞ் சிறந்த நூலை, அருள்மழை போல, அன்பர் எழுத வெழுத ஊற்றினர்; ஒருநாள் ஒரே தடவையில் இரவு அ-முதல் கஉ-மணிக்குள் தமது ஆவே சத்தை யுருக்கி ௩௦௦-பொற்கவிகளாக வார்த்தார். அப் போது அந்த மாமரக்குகையில் மஹர்ஷிகளின் தெய்வ ஸந்நிதியும் அவரை ஊக்கியது. இந்த உமாஸஹஸ்ரத் தைப்பற்றிப் பல ஸம்பவங்களும் உண்டு. இரகசியப் போலீசாரின் கவனத்தையும் அது ஒருக்கால் இழுத்துத் தப்பியது.

1908-ம் வருஷ ஆரம்பத்திலிருந்து மூன்று மாதம் கணபதிமுனிவர் மஹர்ஷிகள் ஸந்நிதியில் பச்சையம்மன் கோயிலில் தமது சீடர்களுடன் வஸித்தார். அப்போது தான் உமாஸஹஸ்ரத்தை மீண்டும் திருந்த எழுதினர். அத்துடன் தியானகாரியங்களையும் மஹர்ஷிகளின் உப தேசப்படி தொடங்கினர். இன்னும் தமது உயர்ந்த எண்ணங்கள் நிறைவேறும் சக்தியையே அவர் நாடினர். பாரதஸமுதாயம் வாழவேண்டும்; வேதவாழ்வை மீட்க வேண்டும்; நாட்டில் தொத்துநோய்போலப் படர்ந்த, காலத்திற் கொவ்வாத பழக்க வழக்கங்களைக் களைந் தெறிந்து, தேசத்தை வேதவழியில் புதுப்பிக்கவேண் டும் என்ற பெருநோக்குடனேயே தமது தவத்தைத் தொடர்ந்தார். அதற்கேற்ற சக்தியைத் தேடுவதற்குத் தமது சீடர்களை ஒரு ஸங்கமாகச் சேர்த்தார். மந்திர

ஜபத்தாலேயே தாம் வேண்டிய சக்தியைப் பெறலாமென்பது அவர் உறுதி. காந்திஜீக்குச் சர்க்காவின்மேல் எவ்வளவு நம்பிக்கையோ அதைவிட மந்திரஜபத்தில் முனிவருக்கு உறுதி மிகுதி. சீடர்கள் அவரை "நாயனு" என்ற செல்வப்பெயருடன் அழைப்பது வழக்கம். நாயனு ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசத்தொடங்கிவிட்டால் வேறொருவரும் அதற்குமேற் பேச முடியாது. உதாரணமாக, ஒரு ஸமயம்இது நாயனுவுடன் திருவண்ணுமலையினின்று சென்னைக்குப் பிரயாணஞ்செய்ய நேர்ந்தது. பகல் கஉ-மணி வண்டியில் அமர்ந்து சுமார் ஒரு மணிநேரம் இது சில காவியங்கள் படித்த நேரம் போக மீதி இரவு சுமார் கூ-மணிக்குச் சென்னையை யடைந்தமட்டும், நாயனுவின் சொற்பொழிவே வண்டியிலிருந்தவர்களுக்கு விருந்தூட்டியது. "சக்தி பெரிதா, சிவன் பெரிதா?" என்று ஒருவர் கேட்ட கேள்விக்கு சரமாரியாக அபூர்வமான விஷயங்களைப் பொழிந்தார். கேள்வி கேட்டவர் பின்னே வாயெடுக்க முடியவில்லை. "தாங்கள் சொல்வதே சரி" எனக் கும்பிட்டுச் சென்றார்.

பச்சையம்மன் கோயிலில் தவமிருக்கையில் கணபதி முனிவர் மஹர்ஷிகளிடம் பல அற்புதக் காட்சிகளைக் கண்டார். ஒருநாள் அதிகாலையில் மஹர்ஷிகளின் நெற்றியை ஒரு விண்மீன் வந்து ஆறுதடவை தொட்டுச் சென்றதாகக் கண்டார். அதே வருஷம் முனிவர் திருவொற்றியூருக்குத் தவஞ்செய்யச் சென்றுவிட்டார். மஹர்ஷிகளிடம் விடைபெற்றுக் கொள்ளும்போது, "நான்" உதிக்கிற இடத்தை மட்டும் கண்டுபிடித்தால் எனது காரியங்கள் நிறைவேறுமா? அல்லது மந்த்ரத்யானமும் அவஶ்யமா?

என்று கேட்டார். மஹர்ஷிகள் "முன்னமே போதும்" என்றார். தமது காரியத்தைப்பற்றி முனிவர் வினவும் போது, "ஈச்வரன்மேல் எல்லா பாரத்தையும் போட்டு விடுவதே நலம்; அவன் எல்லா பாரத்தையும் தாங்கு வான்: நாம் பிறகு பாரமின்றி சௌஸ்தமா யிருக்கலாம். அவன் அவன் காரியத்தைச் செய்வான்" என்றார்.

எல்லாம் வகித்தாற் றிறைமீது பாரம்போட்
டல்லலற் றுங்கே யமர் !

என்னும் உண்மை மஹர்ஷிகளின் வாழ்விலும் சொல்லி லும் நிறைபொலிவெய்தி எத்தகைய நாஸ்திகனுக்கும் ஆஸ்திக விழியைத் திறக்கிறதன்றோ !

கணபதிமுனிவர் திருவொற்றியூரில் ஒரு கணபதி கோயிலருகே தவஞ்செய்யத் தொடங்கினார். அப்போது தான் முனிவர் சேர்ந்தாற்போல கஅ-நாட்கள் மௌனம் வகித்தார்; கஅ-வது நாள், முனிவர் கண்விழித்துக் கொண்டே படுத்திருக்கையில் ஒரு அதிசயங் கண்டார். மஹர்ஷிகளின் உருவம் பக்கத்தில் வந்து உட்கார்ந்திருந் தது ! முனிவர் வியப்படைந்து எழுந்து உட்காரப்போனார்; ஆனால் மஹர்ஷிகள் தமது திருக்கரத்தால் அவருடைய தலையைப் பிடித்து அமிழ்த்தினார். முனிவர் தம்முள் ஒரு சக்தி புகுவதுபோல உணர்ந்தார்; இது 'ஹஸ்த தீக்ஷை' யென்றெண்ணினார். குருவின் அருள் கிடைத்ததெனை மகிழ்ந்தார். இதைப்பற்றிப் பின்னால் (17-10-1929-ல்) மஹர்ஷிகளே குறிப்பிட்டார். மஹர்ஷிகள் திருவொற்றி யூரைக் கண்டதே யில்லை. ஆயினும் அதை இருந்தபடி ஒழுங்காக வர்ணித்தார். மஹர்ஷிகள் சொன்னதாவது:—

"ஒரு நாள் படுத்துக்கொண்டிருந்தது; ஸமாதியி லில்லை; திடீரென சரீரம் மேலே கொண்டு செல்லப்பட் டது; உடனே சுற்றிலுமுள்ள பொருள்கள் மறைந்து, ஒரு வெள்ளொளியே சூழ்ந்தது. பிறகு சரீரம் ஓரிடத்தில் இறங்கியதும் பொருள்கள் புலப்பட்டன; திருவொற்றியூரி லிருப்பதாக எண்ணமுதித்தது; ஒரு பெரிய ரஸ்தாவைப் பின்பற்றிச் செல்கையில் ஒரு பக்கத்தில் கொஞ்சதூரந் தள்ளி ஒரு கணபதிகோயில் தென்பட்டதும், உள்ளே சென்றது. அங்கு பேசியதுண்டு; ஆனால் என்ன பேசியது, செய்தது என்பது நினைப்பிலில்லை. திடீரென்று விழித்த போது விருபாக்ஷ குகையிற் படுத்திருந்தது. கூடவே யிருக்கும் பழனிஸ்வாமியிடம் நடந்ததைச் சொன்னது. இப்படித்தான் ஸித்தர்களும் உலவுவார்களென்று தெரிந் தது."

முனிவர் அடிக்கடிவந்து மஹர்ஷிகளைக்கண்டுசென்று கொண்டிருந்தார். 1922-முதல் 1929-ம் வருஷம் மட்டும் (எ-ஆண்டுகள்) முனிவர் தமது குடும்பத்துடன் திரு வண்ணமலையிலேயே வஸித்தார். இப்போது ஸிர்ஸி என்னுமிடத்தில் ஆனந்தாஶ்ரமம் அமைத்துக்கொண்டு சீடருடன் தவமியற்றுகிறார். பகவானுக்கு முனிவரிடம் அத்யந்தப் பிரியம். முனிவரின் ஆரியப்புலமை, மஹர்ஷி களுக்கும் துளிர்க்கத் தொடங்கியது. சீடர் புடைசூழ வரும்போதெல்லாம் மஹர்ஷிகளிடம் அரிய கேள்விகள் கேட்டுப் பெரிய விஷயங்களைக் கிரகித்துக் கவியாகத் தொடுத்து உலகிற்கீந்தார். 1913-ம் ஆண்டு இப்படிக் கேள்வி தொடங்கியது, 1915, 1917-ம் ஆண்டுகளில் நிகழ்ந்த வினவிடைகள் ரமணகீதை யென்று மகுடமிட்ட

நூலாகப் பதிக்கப்பட்டுள்ளது. அதில் "ஹ்ருதயகுஹார மத்யே" (II : 2) என்று தொடங்கும் ஶ்லோகம் (இது சங்கரர் வாக்குப்போலுள்ளது.) மஹர்ஷிகளே சுயமாக அருளியது. முனிவரின் சேர்க்கையாலும், எதையும் எளிதில் கிரகிக்கும் தமது ஏகாக்ரத்தாலும் மஹர்ஷிகள் ஆரியத்திலும் அழகிய வாக்கைப் பெற்றுர். 1917-ம் ஆண்டு அருளப்பெற்ற "அருணுசல பஞ்சரத்நம்," ஆர்யாகீதி விருத்தத்திற்கே ஒரு மாணிக்கமாகவும், உபநிடதமென்னும் தெய்வப் பொன்மலரிற் சிறந்து விளங்கக்கூடிய அரதனமாகவும் பொலிகின்றது! இதை மஹர்ஷிகளே வெண்பாக்களாகத் தமிழ்ப்படுத்தினுர். இது "அருணுசல ஸ்துதி பஞ்சகம்" என்னும் அரிய நூலில் வெளியிடப்பட்டுள்ளது. ஆரியத்தில் மஹர்ஷிகளின் வாக்கு பழைய முனிவரின் அருள்வாக்குகளையே விளக்கிப் பொலிகிறது. அவ்வருள்வாக்கினின்று ஒரு நாண்மலரை அன்பர் முகர்ந்து மகிழ்க.

"அஹமிதி குத ஆயாதீ
த்யந்விஷ்யாந்த: ப்ரவிஷ்டயாத்யமலதியா
அவகம்ய ஸ்வம் ரூபம்
ஶாம்யத் யருணுசல த்வயி நதீ வாப்தௌ."

(மொழிபெயர்ப்பு.)

"அகமுகமா ரந்த வமலமதி தன்னு
லகமிதுதா னெங்கெழுமென் றுய்ந்தே-யகவுருவை
நன்கறிந்து முந்நீர் நதிபோலு மோயுமே
யுன்கணரு ணுசலனே யோர்."

1927-ம் ஆண்டு பகவான் மஹர்ஷிகள் தமது உபதேசஸாரத்தைத் தாமே ஆரியத்தில் மொழிபெயர்த்தார்

பின்னர் மஹர்ஷிகளது உள்ளதுநாற்பதை, "ஸத்தர்சனம்" என்னும் பெயருடன் ஆரியத்தில் முனிவர் மொழி பெயர்த்தார். அதில் முனிவர் வாக்கு சுகர் வாக்குடன் கொஞ்சுகிறது. முனிவரின் மாணவமணியான மஹா வித்வான் ஸ்ரீ கபாலிசாஸ்திரிகள் அதற்கு மிகவும் அபூர்வமான பாஷ்யம் எழுதியுள்ளார். ஒவ்வொருவராலும் இந்நூல் பன்முறை படிக்கத்தக்கது. முனியின் ஒவ்வொரு மயிர்க்கூறும் ஆரியக்கவி நிறைந்து சிலிர்த்து விளங்கும். பகவானுக்கும் அவர் சேர்க்கையால் ஆரியப்புலமை யுண்டாகி, அழகிய கவிமலர் பூக்கின்றது. எல்லாம் ஆத்ம பகவானின் கருணை. அவ்வப்போது வேண்டியதெல்லாம் ஆங்காங்கு வந்து அமைகின்றன. இனி பகவான் அருளிய ரமணகீதையின் ஸாரத்தை அன்பர்களுக்குத் தருவாம்.

தன்னை யறிந்தடங்குந் தன்மையருக் கெப்பொருளுந்
தன்னாலே கொண்டு தரும்.

## ௩௦. ரமணகீதாஸாரம்

"ப்ரஹ்மகர்மம், ப்ரஹ்மார்ப்பணம், ப்ரஹ்மபூதம், ப்ரஹ்மஸ்திதி, ப்ரஹ்மஸம்ஸ்பர்ஶம், ப்ரஹ்மயோகயுக்தாத்மா, ப்ரஹ்மநிர்வாணம், நைஷ்கர்மஸித்தி, ஆத்மத்ருப்தி, ஆத்மரதி, ப்ரஹ்மயுக்தாத்மா"—இவற்றின் மயமே பகவத்கீதை.

"ஸர்வம் கர்மாகிலம் பார்த்த ஜ்ஞானே பரிஸமாப்யதே."

"ஜ்ஞானீத்வாத்மைவ மேமதம்."

அகில கர்மங்களும் ஞானத்தில் முடியும்; ஞானமே என் மதம்; எத்தனையோ ஜன்மங்களுக்குப்பின் ஞானியாகிறான் என்று கீதை ஆத்மஞானத்தையே உயர்த்திச் சொல்லுகிறது. தத்புத்தி, ததாத்மா, தந்நிஷ்டை, தத்பராயணமாயிருக்கும் கல்மஷமற்ற ஞானியையே சிறப்பித்துக் கூறுகிறது*. ரமணகீதையோவெனில், அநுபவ ஞானப்பாலை வற்றக்காய்ச்சிச் சர்க்கரையைக் கலந்த அநுபவ ஆத்மஞானத் திரட்டாகவே விளங்குகிறது. அதை ஞானகீதையென்பதே பொருந்தும். மஹர்ஷிகள் பலர் கேள்விகளுக்கு அருளிய விடைகளே ரமண கீதையாகத் தொடுக்கப்பட்டது. இந்நூலின்கண் மிளிரும் மஹர்ஷிகளின் அரிய கருத்துக்களை மட்டும் ஈண்டுக் குறித்து முடிப்பாம்.

### க. ஞானம்

ஆத்மநிஷ்டையொன்றே யகற்றிடும் பந்தமெல்லாம்; ஸத்யாஸத்யவிவேகம் வைராக்யஸாதனம். கேவலம் ஆத்மாவிலேயே ஞானி ஸதா கம்பீரமாக நிலைபெறுகிறான். அவனியை ஞானி அஸத்தியமென்றான்; தன்னினும் புவியை அன்னியமென்றான். ஆத்மாவையறிய ஆவலுள்ளவனுக்குக் கேவலம் சாஸ்திரசர்ச்சையால் மட்டும் ஸித்தியுண்டாகாது. உபாஸனையின்றி ஸித்தி யெய்தாதென்பது நிர்ணயம். அப்யாஸகாலத்தில், ஸஹஜநிலையை உபாஸனை என்பர்; அது திடப்படுவதே ஞானமெனப்படு

* கீதையின் விரிவான யோகரகசியங்களை "கீதைகாட்டும் பாதையிற்" காண்க.

வது. வாஸனையற்ற மௌனத்தில், ஸஹஜஸ்திதியில் நிலைத்தபோது, ஒருவன் தன்னை ஞானியென நிச்சயித்துக்கொள்ளக்கூடும். ஸர்வபூத ஸமத்வமே ஞானியின் அறிகுறி. ஸமாதியோகத்தை அப்யஸிக்கிறவன் தனது இச்சையை நிச்சயம் அடைவான். ஒரு கோரிக்கைக்காக யோகந் தொடங்கி, இடையில் ஸ்திதப்ரஜ்ஞனாய்விடின் அக்கோரிக்கை அவனுக்குப் பலிக்கும்; ஆனால் அவன் அதில் மகிழமாட்டான்.

## ௨. இதயகுகை

"இதய குகையின் மத்தியில், கேவலம் ப்ரஹ்மமே 'அஹம், அஹம்' என்று ப்ரத்யக்ஷமாய், ஆத்மரூபமாக விளங்குகிறது. இதயமே சார்வாய்; தன்னை எண்ணி யாழ்தல், அல்லது வாயுவை யடக்கி யாழ்தலால் நீ ஆத்மநிஷ்டனாவாய்." (இதுவே ரமணகீதையின் மகுடம்.)

## ௩. ஆத்மத்தியானம்

பயன்கள், செயல்கள் அனைத்திற்கும் இடமான தனது ஆத்மரூபத்தையே இவ்வுலகில் புத்திமான் அறியவேண்டியது. எல்லா விஷய வ்யாபாரங்களினின்றும், ஸர்வ ப்ரயத்நங்களினின்றும் மனத்தைத் திருப்பி, ஆத்மவிசாரணையிலேயே ஊன்றவேண்டும். இதனால் தன்னைத் தானே காணலாம். யோகாப்யாஸிகளான நல்லோருக்கு நியமங்கள் துணைநிற்கின்றன; தன்னில் நிலைத்தவித்தருக்கு நியமங்கள் (காய் முதிரப் பூவிதழ்கள் உதிர்வது போலத்) தாமே உதிர்கின்றன. சஞ்சலமற்ற மனத்தால் நிரந்தரம் ஜபிக்கும் மந்திரங்களினாலாவது, ஓங்கார ஜபத்தினாலாவது ஶ்ரத்தாவான்களுக்கு ஸித்தி

யுண்டாகும். மந்திரங்களால், அல்லது சுத்தமான பிரணவ ஜபத்தால் விஷயங்களினின்று விலகின விருத்தி, தனது ஆத்மஸ்வரூபத்துடன் சேர்கிறது.

## ச. விருத்திகள்

"நான் ப்ரஹ்மமாகிறேன்," "ப்ரஹ்மம் நான்," "நானே யெல்லாம்," "ப்ரபஞ்சம் ப்ரஹ்மம்" என்ற விருத்திகளெல்லாம் பாவனைகளேயாகு மென்பதில் ஐய மில்லை. பரிசுத்த ஆத்மாவில் நிலைபெறுவதே அறிவாளிகள் ஞானமென்பர். தனது ஆத்மாவான ப்ரஹ்மத்தை யறிய முயலும் விருத்தி ஆத்மாவை விட்டுத் தனிப்பிரியாது ஒன்றி யியங்கும்.

## ரு. இதயம்

எல்லா விருத்திகளும் எவ்விடத்தினின் றுதிக்கின் றனவோ அவ்விடமே இதயம். விருத்திகள் அனைத்திற் கும் மூலமான நான் என்ற விருத்தி வெளிப்படுமிடமே இதயம். கேவலம் பாவனையே உருவ கல்பனை. அநாகத ஸ்தானமே யதுவெனின், மூலத்தினின்று ஏன் யோகாரம் பம்? (ஹ்ருத் + அயம்) ஆத்மஸ்வரூபமே இதயம்; நாம் ஸாதாரணமாகக் குறிக்கும் இரத்தாசயம் இதயமல்ல; மார்பின் வலப்புறம் இதயமுள்ளது.

"இருமுலை நடுமோர் படிவயி றிதன்மே
லிருமுப் பொருளுள நிறம்பல விவற்றுள்
ஒருபொரு ளாம்ப லரும்பென வுள்ளே
யிருவிரல் வலத்தே யிருப்பது மிதயம்."

இதயஸ்தானத்திலிருந்து ஸுஷும்நாநாடியின் வழி யாய் ஜோதி, ஸஹஸ்ரார(மூளை)த்திற்குப் போகிறது.

அந்த ஜோதி ஸஹஸ்ராரத்திலிருந்து, தசேந்திரியங்களின் வழியாய் வெளியிற் செல்லும்போதே உலகானுபவம் உண்டாகிறது. அவ் வனுபவங்களை ஆத்மப்ரகாசத்தினின்று வேறாக நினைத்தாலே ஸம்ஸாரபந்தம் ஏற்படுகிறது. ஆத்மஸ்திதனுடைய ஸஹஸ்ராரம் சுத்தஜோதி வடிவாகும். அதில் விழுந்த ஸங்கல்பங்கள் ஜீவித்திரா. முன்னுள்ள விஷயங்களைத் தெரிந்துகொண்டிருப்பினும், பேதத்தைக் கிரகிக்காமலிருந்தால், யோகத்திற்கு இடையூறில்லை. விஷயங்களை அறியும்போதுகூட, ஸ்திரமான ஏகாக்ர புத்தியோடிருப்பதே ஸஹஜஸ்திதி எனப்படுகிறது. விஷயங்களையே அறியாமலிருந்தால் அது நிர்விகல்பஸமாதியாகும். இதயம் ஸர்வாண்டரூப ஸங்கிரகம். மனத்தினின்று உலகம் வேறல்ல; மனம் இதயத்தின் வேறல்ல. இதயத்தில் எல்லா வுலகக் கதையும் முடிகிறது. ப்ரஹ்மாண்டத்தில் சூரியமண்டல மிருப்பதுபோலப் பிண்டத்தில் இதயமிருக்கிறது. அண்டத்தில் சந்திரனுள்ளதொப்பப் பிண்டத்தில் ஸஹஸ்ராரத்தில் மனமிருக்கிறது. சூரியன் சந்திரனுக்கு ஒளியீவதுபோல, இதயம் மனத்திற்கு ஒளி தருகிறது. சூரியன் இல்லாதபோது இரவில் சந்திரன் ஒளிர்வதுபோல, இதயத்தின் பரோக்ஷத்தில் மனிதன் மனத்தை மாத்திரம் காண்கிறான். தேஜோரூபமான ஸத்யாத்ம ஸ்வரூபத்தைக் காணாது, தோற்றங்களை வேறாக மனத்தினாற் கண்டு, பாமரன் மயங்குகிறான். இதயதேஜஸில் அடங்கிய மனவொளியை, பகலில் சூரியனிற் கலந்து மங்கும் மதிநிலாவென ஞானி காண்கிறான். இதயந்தன்னின் இறை வேறில்லை. த்ருக்த்ருஶ்ய பேதபுத்தி மனத்திலிருக்கிறது;

இதயான்மாவில் நிலைத்தவனுக்கு காண்பதும் காட்சியும் ஒன்றுபட் டிலங்குகிறது. மனம் இரண்டுவிதமாய் இதயத்தைக் கலக்கும். ஒன்று மயக்கம், துயில், அதிமகிழ்வு, சோகம், ஆவேசம், பயம் முதலிய குணங்களினால் அடிக்கப்படுவது; அந்த ஸமயத்தில் ஜீவர்களுக்கு இதய சம்பந்தந் தெரியாது. இரண்டாவது, ஆத்மஞான விருத்தியான தியான ஸமாதியால்; ஸமாதியிலேயே இதயம் விளங்கும். நாமபேதம் நிமித்தபேதத்தினால் உண்டாகிறது.

## கூ. மனமடக்கல்

நித்யவிருத்திகளும், விஷயாசக்தசித்தருமான மனிதரின் மனம் துர்வாஸனையால் பலப்பட்டு, உள்முகப்படுத்த முடியாதாகிறது. சலிக்கும் பிராணனைத் தடுத்து, சபலமனத்தை உட்படுத்தவேண்டும்; அப்போது கயிற்றாற் கட்டப்பட்ட பசுப்போல மனம் புறஞ்செல்லாது. அதனால் விருத்திகளை யடக்கி, அவ்விருத்திகள் உதிக்கும் இதயத்தில் நிலைபெறலாம். பிராணவாயுவின் ஓட்டத்தைக் கவனித்துக்கோண்டே யிருந்தால் கும்பகம் ஸித்திக்கும்; இவ்விதம் முடியாதவர்களுக்கு ஹடயோகத்தால் கும்பகம் உண்டாகும். காற்றை ஒருதரம் பூரித்து, ஒருதரம் ரேசித்து, நாலுதரம் கும்பித்துப் பழகினால் நாடிசுத்தி பிறக்கும். நாடி சுத்தமானால் பிராணனை யடக்கலாம்; பிராணனை யடக்குவதே சுத்த கும்பகம்.

"த்யாகம் தேஹாத்ம பாவஸ்ய ரேசகம் ஞாநிந: பரே
பூரகம் மார்க்கணம் ஸ்வஸ்ய கும்பகம் ஸஹஜ
ஸ்திதிம்"

தேஹாத்மபாவனையை விடுவதே ரேசகம்; தன்னைத் தான் தேடுவதே பூரகம்; தனது ஸஹஜஸ்திதியில் நிலைப்

பதே கும்பகமென்றும் ஞானிகள் சொல்வர். "தேஹம் நாஹம், கோஹம், ஸோஹம்" என்ற விசாரணையே ஞான ப்ராணயாமம்.

பிரணவஜபம், நாமஜபம், மந்திரஜபம் இவற்றால் மனத்துடன் மந்திரப்பிராணன்கள் ஐக்கியமாகி மனம் நிலைக்கும். திடமான தியானம் ஸஹஜஸ்திதியை யுண்டாக்கும். பிராணனுடன் மந்திராக்ஷரங்கள் கூடுவதே தியானம். ஆத்மஸம்பூர்ணர்களான மஹாத்மாக்களின் ஸஹவாஸத்தால் மனம் ஆத்மாவில் ஐக்கியமாகும்.

## எ. ஆத்மவிசாரணை

"நான் என்பதே விருத்திகளின் ஸமஷ்டி; அதன் மூலஸ்தானத்தை விசாரித்துத் தேடிக் கண்டால், அஹங்காரமும் அடங்கும்; ஆத்மாபோலப் பிரகாசிக்கும் அகந்தை எப்போது ஆத்மாவில் லயமாகுமோ அப்போது ஸத்ஸ்வரூபமான ஆத்மாவொன்றே எங்கும் நிறைந்து விளங்கும். எவ்விதமான கிலேசங்களும் தன்னை யொட்டாதிருப்பதே ஆத்மவிசாரத்தா லுண்டாகும் பலன்; இந்தச் சிறந்த பயனே பலன்களின் எல்லை! ஆத்மவிசாரமே முக்திவழிகளிற் சிறந்தது. உடல் நிலையாமையின் அறிவு, விஷயங்களில் வைராக்கியம் இவ்விரண்டு குறிகளால் தன்னை ஆத்மவிசாரத்திற்கு அருகனெனத் தெரியலாம். ஸ்நானம், ஸந்தி, ஹோமம், அத்தியயனம், பூஜை ஸங்கீர்த்தநம், தீர்த்தயாத்திரை, யஜ்ஞம், தாநம், விரதம் முதலிய கர்மங்கள் ஆத்மவிசாரத்தை ஆரம்பித்தவர்களுக்குச் சித்தசுத்தியை யுண்டுபண்ணும். மனமொழி மெய்களாற் செய்யும் நல்வினைகள், மனமொழி மெய்களின்

தீவினைகளைப் போக்கும். பரிசுத்தர்களாற் செய்யப்படும் இத்தர்மங்கள் உலகத்திற்குப் பயனுகின்றன. அறிஞர்கள் பிறர் நலத்திற்காகக் கர்மஞ் செய்கின்றனர்; விதிசாஸ்திர பயத்தாலல்ல. ஆத்மவிசாரமே பெரும்புண்ணியம், புண்ணியத்திற் புண்ணியம். ஒரு வஸ்துவின்மீது தியானித்து ஏகாக்ரப்பட்ட சித்தம் ஆத்மஸ்வரூபத்தில் நிலைபெறும். மந்திரம், தேவதைகளின்மூலம் தியானிக்கப்படும் வஸ்துக்கள் முடிவில் ஆத்மஜோதியிலேயே ஐக்கியமாகும். தியானித்து சாந்தமடைவதும், அறிந்து அமைதியடைவதுமான ஆத்மத்யானிக்கும், ஆத்மவிசாரிக்கும் முடிவு ஒன்றேயாகும்.

## ௮. நான்கு ஆசிரமங்கள்

ப்ரஹ்மசாரி, கிருஹஸ்தன், வானப்ரஸ்தன், யதி, ஸ்திரீ, ப்ராஹ்மணனல்லாதவன் முதலியவருள் பக்குவமடைந்த எவனும் ஆத்மவிசாரஞ் செய்யலாம்; பக்குவசித்தமுடையவர்கள் ஆசிரமக்கிரமத்தை அநுசரிப்பது அவசியமில்லை. ஆசிரமக்கிரமம் உலகிற் செய்யத்தக்க காரியங்களுக்கு ஆதாரமாகும். ப்ரஹ்மசர்ய, கிருஹஸ்த, வானப்ரஸ்தாசிரம தர்மங்கள் ஆத்மஞானத்திற்கு அநுகூலமேயொழியப் பிரதிகூலமல்ல. பரிசுத்த ஞானமே ஸந்யாஸம்; காவியும் முண்டனமும் ஸந்யாஸமாகாது. ப்ரஹ்மசர்ய ஆசிரமத்தில் வித்தை, விரதம், ஞானம் இவற்ருல் பெருகிய சக்தியுள்ளோன் மற்ற ஆசிரமங்களில் பிரகாசிப்பான். பரிசுத்த ப்ரஹ்மசர்யத்திஞல், கிருஹஸ்தாசிரமத்தில் நிர்மலனுவான். கிருஹஸ்தாசிரமம் உலகோபகாரத்திற்கு ஆதாரமாகின்றது. தாமரை

யிலைமேல் நீர்போல, சுகதுக்கங்களில் ஒட்டாத கிருஹஸ்த னுக்கு ஸந்தேஹமின்றி ஆத்மப்ரகாசம் நிலவுகிறது. மூன்றாவது ஆசிரமம் தவத்திற் கேற்றது. மனைவியுடன் கூடியாவது அல்லது தனியாகவாவது அதைக் கைக் கொள்ளலாம். தவத்தாற் பாவத்தை யெரித்தவனும், பழுத்த சித்தமுடையவனுமாயுள்ள யோகிக்கு ஸந்யாஸம் தானே காலத்தில் உண்டாகிறது.

## ௯. கிரந்தி

சரீரம் ஆத்மா இவ்விரண்டிற்கும் ஸம்பந்தம் கிரந்தி (முடிச்சு) எனப்படுகிறது. ஆத்மஸம்பந்தத்தாலேயே சரீரஸம்பந்தமான ஞானம் பிறக்கிறது. சரீரம் ஜடம்; ஆத்மா சைதன்யம்—இவ்விரண்டின் ஸம்பந்தம் ஞானத் தாலே ஊகிக்கப்படுகிறது. உடல் ஆத்மாவின் சாயலினால் நிறைக்கப்பட்டு சேஷ்டிக்கிறது. நித்திரையில், ஆத்மா சரீ ரத்தைக் கிரகிக்காததால் ஆத்மாவிற்கு ஸ்தானம் ஊகிக் கப்படுகிறது. மின்சாரம் தந்திகளில் ஓடுவதுபோல, சரீர நாடிகளில் சைதன்யத்தின் ஓட்டம் உள்ளது. சூரியன் உலகை ஒளிர்ப்பதுபோலவே, சைதன்யவொளி ஓரிடத்தி னின்று உடலெல்லாம் விளக்குகிறது. அந்த ஆத்மஜோதி இதயத்திலுள்ளது. நாடிகளின் சக்தி விலாஸத்தால் சை தன்யக் கதிர்களின் கதியும் ஏற்படுகிறது. நாடிகளை ஆசிர யித்துள்ள சைதன்யப்பிரகாசத்திற்கு உடல் நலம் அவசிய மானது. சைதன்யம் ஸுஷும்னையி லிருக்கிறது; அதை ஆத்மநாடி, அமுதநாடி என்றுஞ் சொல்வர். தேஹாத்ம புத்தியை விட்டு, நிஶ்சலனாக ஆத்மஸ்திதியை விசாரித் தால் நாடிகளின் மதனம் உண்டாகிறது. இதனால் ஆத்மா

வேறு நாடிகளினின்று அமிருதநாடியை அடைந்து ஒளிர்கிறது. அப்போது ஆத்மாவைத் தவிர வேறெதுவும் புலனாகாது. பாமரன் உடலை யறிவதுபோல ஞானி தெளிவாகத் தனது ஆன்மாவை யறிகிறான். உள்ளும்புறமும் எங்கும் ஆத்மாவே காணும்போது முடிச்சுக்கள் அவிழும். தேகி தேகாபிமானத்தால் தேகத்தைப் பார்க்கிறான். அமிருதநாடியையே ஜோதி ஆசிரயித்திலங்கும் போது, ஆத்மஸ்திதி அடையப்பெறும். ஆத்மவிசாரத் தீயாற் சுடப்பட்ட உடல், தீயுண்ட இரும்புபோல ஆத்ம ஜோதி மயமாகும். அப்போது பூர்வவாஸனைகள் நலிகின்றன; ஆன்மா சரீரியல்லாமையின் வினையதிகாரம் (கர்த்தத்வம்) இல்லாததாம். அதற்கு அன்னியம் ஒன்றுமில்லாததால் ஸந்தேஹங்கள் உண்டாகா. காரியமில்லாததாற் காரியப்பலனு மில்லை. ஒருமுறை விடுதலை பெற்றோன் மீண்டும் பத்தனாகான். இதுவே உயர்ந்த நிலை, சக்தி, சாந்தியுமாகும்.

## ௧௦. ஸங்கம்

அந்தந்த ஆசாரத்தை அநுசரிப்போர்க்கு ஸங்கம் உடலைப்போன்றது; அதன் அங்கத்தினர், அதன் அவயவங்களாவர். மனோவாக்குக்காயங்களால் தானும் ஸங்கத்திற் குதவிப் பிறரையும் உதவிசெய்யத் தூண்டவேண்டும். உடலுக்கு உறுப்புக்கள் பயனாவதுபோல, அங்கத்தார் ஸங்கத்திற்குப் பயனானால் வெற்றி யெய்தும். தன் குலத்தை ஸங்கத்திற்கு அநுகூலமாயிருக்கச் செய்ய வேண்டும். தன் மனத்தூய்மைக்காக சாந்தியும் ஸங்க வளர்ச்சிக்காக சக்தியும் வேண்டும். சக்தியால் ஸங்கத்

தைப் பெரிதாக்கிப் பிறகு சாந்தியை நாட்டவேண்டும். ஸங்கத்தாரனைவரிடமும் ஸமபாவனை யுண்டாகி சகோதரரைப்போ லிருப்பதே ஸங்கத்தா லெய்தும் பயன். தமக்குள் தாம் சகோதரரைப்போல நடந்துகொள்வதால் மனிதர்க்கெல்லாம் சாந்தமுண்டாகும். அப்போது இவ்வுலகெல்லாம் ஒரே வீட்டைப்போ லொளிரும் (ரமணஸங்கம் இவ்வழியிற் பல்கிப் பழுத்து உலகை ரமணச்சோலையாக்குக !)

## கக. ஸித்திகளும் ஞானமும்

ஸஹஜஸ்திதி பெற்றவன் பிரதிதினமும் இயற்கையாக அஸாத்யமான தவத்தைச் செய்கிறான். ஆத்மாவில் ஸஹஜமான நிலையே துர்லபமான தபஸ். இந்த இடைவிடாத தவத்தால் ஒவ்வொரு கணமும் பரிபாகத்தை யடைகிறான். நித்யாத்மதிருஷ்டி யுள்ளவனுக்குப் பக்குவகாலத்தில் ஸித்தியுண்டாகும். பிராரப்தமிருந்தால், ஞானிகூட அவைகளுடன் கூடி நடிப்பான். முனிக்கு உலகம் ஆத்மரூபத்தினும் வேறல்ல ; அப்படியே தவஸித்திகளும். பிராரப்தமற்ற முனி பரிபூர்ணசக்திமானாயினும், அலையற்ற கடல்போலச் சிறிதும் அசையான். ஆத்மஸம்ஸ்திதியே எல்லா சக்திகளின் ஸமஷ்டியும் ஆகும். அப்படியுள்ளவன் வேறான மார்க்கத்தைத் தேடான். ப்ரயத்நமின்றி உண்டாகும் தவம் ஸஹஜநிலை யெனப்படும் ; அதில் சக்திகள் பிறக்கும். ஸஹஜஸ்திதியுள்ளவன் தன்னைப் பலர் சூழ்ந்திருப்பினும் அரியதவத்தைச் செய்துகொண்டிருக்கிறான். அவனுக்குத் தனிமையா யிருக்கவேண்டு மென்கிற அவசியமில்லை. ஸர்வசக்தியுடன், எங்கும் நிறைந்த ஆத்மாவில் ஞானி நிலைபெற்றுள்ளான்.

## கஉ. சக்திவிலாசம்

ஆத்மஸ்வரூபத்தினின்று வேருக அஹம்வ்ருத்தியை அனுபவிக்காதவனுக்கு, விஷயங்களும் அதனின்று பின்னமாக விளங்கா. விஷயியான அஹம்வ்ருத்தி ஸ்வரூபத்தினின்று பின்னமாகக் காணப்படுவோனுக்கே வியாபார விஷயங்கள் ஸ்வரூபத்தினின்று வேருகத் தோன்றுகின்றன. பேதமாகத் தோன்றினும், ஞானி தத்வஸம்பந்தமான அபேதத்தையே கொள்கிருன். பேதாபாஸமான மாயையின் வசப்பட்டுப் பாமரன் பேதத்தை யடைகிருன். இப்பேதங்கள் முப்புரிகொண்டிருக்கும் அந்த இடத்தையே வேதாந்திகள் சர்வசக்தியின் இடமாகச் சொல்கிருர்கள.

சக்தி சலனத்திஞலேயே உலகங்கள் உண்டாகின்றன. அசைவிற்கு ஆதாரமான வஸ்து எப்போதும் அசலமாயிருக்கிறது. அசலவஸ்துவின் சக்தி அசைவதாலேயே உலகம் உண்டாகிறது ; அந்த அசைவையே மாயையென்கின்றனர். அஹங்காரிக்கே இச்சலனம் உண்மைபோலத் தோன்றும். ஆத்மாவிற்கு உண்மையாகச் சலனம் இல்லை. சிவசக்தி பேதம் பார்வையால் உண்டாயிற்று ; பார்வையை உள்ளே திருப்பினுல் இரண்டும் ஒன்றேயாகும். தனது பராசக்தியால் அசைகின்றவனுயினும் உண்மையில், பிரகிருதியை மீறிய ஆத்மா அசையாமலிருக்கிருன்.

சலனமே வியாபாரம் ; வியாபாரமே சக்தி ; பரமபுருஷன், தோன்றும் உலகையெல்லாம் சக்தியினுல் உண்டாக்கினுன். பிரவிருத்தி, நிவிருத்தி என்று வியாபாரம் இருவகைத்து ; எங்கு எல்லாம் ஆத்மாவே யாமோ எனும் சுருதி

நிவிருத்திபரமாம். ஆத்மாவிற் பிறந்த விசேஷங்களெல்லா வற்றிற்கும் ஆத்மாவிலேயே லயம் சொல்லப்பட்டுள்ளது.

சக்தியின்றி ஸ்வரூபம் பிரகாசிக்காது. வியாபாரம், ஆசிரயம் என்று சக்தி இரண்டு பெயருள்ளது. பிரபஞ்ச ஸ்ருஷ்டி முதலிய காரியம் வியாபாரம்; ஸ்வரூபமே ஆசிர யம். ஆத்மஸ்வரூபம் பிறவஸ்துக்களின் அபேக்ஷையோடு கூடினதல்ல. விருத்தியாலேயே ஸத்துக்கு நாநாத்வம் ஸித்திக்கிறது; ஸத்து சக்தியை மீறினால் விருத்திக்குப் பிறப்பேயில்லை. காலத்தால் உலகத்திற்குப் பிரளயம் வந்தால், வியாபாரம் ஆத்மாவில் பேதமின்றி லயி த்துவிடும். சக்தியின்றி வியாபாரமில்லை; ஸ்ருஷ்டி யில்லை; திரிபுடிஞானமும் இல்லை. பராத்பரமான சக்தி, ஆசிரயமாயிருந்து ஸ்வரூபமென்றும், ஸ்ருஷ்டிகர்மத்தால் வியாபாரமென்றும் இருபெயர்களால் விவரிக்கப்படுகிறது. சக்தியின் லக்ஷணம் சலனமாயின் அச்சலனத்திற்கு ஆசிரயமாக ஒரு விலக்ஷணவஸ்து இருக்கிறதென்றே சொல்லவேண்டும். அந்த உத்தமமான ஒரு வஸ்துவைச் சிலர் சக்தியென்றும், சிலர் ஆத்மரூபமென்றும், ப்ரஹ்ம மென்றும், புருஷனென்றும் சொல்கிறார்கள். ஸத் யத்தை, லக்ஷணத்தால் உரைக்கிறார்கள்; வஸ்துரூபத் தால் அனுபவிக்கிறார்கள். ஆத்மாவின் வியாபாரத்தைத் தடஸ்தபாவனையாலும், ஆத்மாவின் வஸ்துரூபத்தைப் பிரத்யக்ஷமாகவும் காணவேண்டும். ஸ்வரூபத்திற்கும் லக்ஷணத்திற்கும் தாதாத்மியஸம்பந்தமுள்ளது. வியா பாரம் வஸ்துவிற்கு வேறன்று என்று தத்துவத்தால் அறிந்தால் பேதஞானமெல்லாம் கற்பனையெனத் தோன் றும். சக்திவிலாஸமென்னும் இந்த ஸ்ருஷ்டி ஈஸ்வர காரி

யம். இந்தக் கற்பனையைத் தாண்டினால் ஆத்மஸ்வரூபமே எஞ்சும்.

### கரு. ஹம்ஸினி

பரிபாகமடைந்து ஆத்மஸ்வரூபத்தில் நிலைபெற்ற ஸ்திரீகள் ஹம்ஸினிகளாயிருப்பது தப்பன்று. முக்தியும் ஞானமும் ஆண்பெண்களுக்கு ஸமமே; ஜீவன்முக்தி பெற்ற பெண்ணுடலும் தேவாலயமே யாதலின், அதை தஹனஞ் செய்யலாகாது. முக்தபுருஷனுடைய உடலை யெரித்தால் எப்படி தோஷமோ அப்படியே முக்தஸ்திரீயின் உடலை யெரித்தாலும் தோஷமுண்டு.

### கச. ஜீவன்முக்தி

சாஸ்திர, உலக வாஸனைகளால் அசைக்க முடியாது திடமான ஆத்மஸ்வரூபத்தில் நிலைப்பதே ஜீவன்முக்தி. ஞானம் ஸமானம்; ஆதலின் முக்தி ஒருவிதமே; சரீரியாயினும் பந்தத்திலிருந்து விலகினவனை ஜீவன்முக்தனென்று சொல்வர். ஆத்மரூபத்தில் நிலை ஸமமே. பேதபுத்தி யுள்ளவனுக்கே முக்தியில் வித்தியாசம் தோன்றும்; சரீரமிருக்கும்போதே, ஆத்மஸ்திதனாக முக்தியடைபவனுக்கு மாத்திரம் இவ்வுலகத்தில் பிராணன்கள் ஆத்மாவில் லயமாகின்றன; காலக்ரமத்தில், தவப்பரிபாகத்தால் ஜீவன்முக்தனுக்கு ஸ்பர்சமில்லாமையும் ஸித்திக்கும். ஆத்மாநுபவ ரூப தவப்பரிபாகத்தால் ரூபமில்லாமையும் ஸித்திக்கிறது. அந்த ஸித்தன் கேவல ஞானரூபனாயிருப்பான். சரீரமுள்ளவனானாலும், இல்லாதவனானாலும் ஆத்மாவில் நிலைபெற்றவன் முக்தனாயிருக்கிறான். ஸு-ஷும்நா நாடியிலிருந்து அர்ச்சிராதி மார்க்கமாய், ஊர்த்வ

கதி யடைந்த புருஷன், அவ்விடத்திலுண்டான ஞானத்தால் உடனே முக்தி யடைந்தவனாகிறான். மிகவும் பரிபாக சித்தமுள்ள உபாஸகனை யோகிக்கு ஈஸ்வராநுக்ரஹத்தால் ஸுஷும்நாநாடி மூலமாய் உத்தமகதி யுண்டாகிறது. இவனுக்கு எல்லா வுலகங்களிலும் இச்சைப்படி உலவி, உடலெடுத்து, உலகை அநுக்ரஹிக்கவும் வல்லமை யுண்டாகும். முக்தர் வஸிக்கு மிடத்தை வித்வான்கள் கைலாஸம், வைகுண்டம், சூரியமண்டலம் என்கின்றனர். அவையெல்லாம் சக்தியினால் ஆத்மரூபத்திலேயே கற்பிக்கப்படுகின்றன.

## ௧௫. சிரவணமனனநிதித்யாஸம்

பொருள் விளங்கும்படி வேதாந்தவாக்கியங்களை ஆசாரியன்மூலங் கேட்டல் சிரவணம். ஆத்மஜ்ஞானியான ஆசாரியனிடம் சொந்த பாஷையில் ஆத்மரூபத்தைத் தெரியக் கேட்பதும் சிரவணமாகும். நான் என்ற விருத்திக்கு மூலமானவன் நீ, சரீரம் முதலியவற்றைப் பார்க்கிலும் விலக்ஷணமானவன் (வேறானவன்) என்று சித்தத்திலிருந்து உண்டான இந்த சிரவணமே சிரவணமாகும். உண்மையான ஆத்மரூபத்தை விசாரிப்பதே சரியான மனனம். ப்ரஹ்மமே ஆத்மஸ்வரூபமென்னும் விஜ்ஞானத்தையே, நிதித்யாஸ மென்கின்றனர். முற்றிலும் சாஸ்திரத்தினாலே யுண்டான ஜீவேஸ்வர ஐக்கிய ஞானம் அநுபவத்திற்கு வராது. அநுபவத்தாலேயே ஸந்தேஹமும் விபரீதமும் நீக்கப்படுகின்றன; ஸ்ரத்தாவானுக்கு சாஸ்திரத்தைப்பற்றி ஸந்தேஹமும் விபரீதமும் உண்டாகாது. அஸ்ரத்தையாலேயே இவை யுண்டாகின்றன. ஆத்மாநு

பவத்திலேயே இவற்றிற்கு வேரோட்டழிவு. ஆத்மரூபத்தில் நிற்கிறதே நிதித்யாஸம். ஆத்மரூபத்தில் நிற்காமல், வெளியில் ஸஞ்சரிக்கிறவனுக்கு நூறு சாஸ்திரங்களைப் பார்த்தாலும் ப்ரத்யக்ஷ ஞானமுண்டாகாது. ஆத்மரூபத்தில் நிலைத்தால் அதுவே முக்தி; அதுவே ஸாக்ஷாத்காரம்.

### கசு. பக்தி

அனைவர்க்கும் அதிப்ரியமான ஆத்மாவில் இடைவிடாத தைலதாரைபோன்ற அன்பே பக்தியெனப்படுகிறது. ஆத்மாவினும் ஈசன் வேறில்லை; பேதபுத்தியால் வேறாக நினைத்தாலும், ஈச்வரன் ஆத்மஸ்வரூபியே. இடைவிடாக் கடவுளன்பு எப்படியும் ஆத்மரூபத்தையே உண்மையாக அடைகிறது. தேவதைகளுக்கு நாமரூபங்களைக் கற்பிக்கிறதினால் அவற்றால், உலகஸம்பந்தமான நாமரூபங்களை ஜயிக்கலாம். பரிபூரண ஞானத்திற்கு நிறைவான பக்தி ஸாதனமாகும். கோரிக்கைக்காக பக்தி செய்கிறவன் அதை யடைந்தும், திருப்தியற்று, மறுபடியும் நித்ய சுகத்திற்காக ஆண்டவனை சேவிக்கிறான். பூரணமான பக்தி ஞானத்தைப் போலவே ஸம்ஸாரத்தைத் தாண்டுவிக்கும்.

### கஎ. ஞானம்

ஞானமானது அப்யாஸத்தின் பரிபாகத்தால் பூரணமாகி ஏக காலத்தில் பிரகாசிக்கின்றது; படிப்படியாக சிறிது சிறிதாக இல்லை. நழுவாத அநுபவமே ஞானம். புத்தி உட்புகுந்து மீண்டும் வெளியில் வருகிறதானால் அதை அப்யாஸமாகவே சொல்வர். ஞானிகளுடைய ஞானம் ஒன்றே; அதற்கு ஏற்றத் தாழ்வு கிடையாது.

புத்தி பேதத்தினால் தாரதம்மியங்கள் கற்பிக்கப்படுகின்றன. அஞ்ஞானத்தை யடக்கி ஒரு காலத்தில் மலர்ந்த ஞானம் மீண்டும் விலகாது.

### ௧௨ ஸித்தர்

ஸித்தர் மகிமை ஊகத்திற் கெட்டாது: அவர்கள் சிவஸமானர்; சிவரூபிகளாய் வரங்களைத் தரவும் திறமுடையவர்கள்.

இப்படி ரமணகீதை அத்யாத்மத்தேனில் ஊறிய திராக்ஷாபாகமாக இனிக்கிறது.

“ தன்னி லிருப்பதுவே தடையற்ற முத்தியெனிற்
பின்னுமேன் வேறான பேச்சு ?

## ௩௧. வியன்காட்சிகள்.

“ என்னி லாருமே னக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே.

மஹர்ஷிகள் ஸந்நிதிப் பெருமையால் சாந்தமடைந்தவர் பலர். ஞானச்சுடர்க் காட்சிகள் கண்டோரும் பலர். இவர்களிற் சிலரைக் குறிப்போம்.

### ராமசாமியய்யர்

1908-ம் ஆண்டு, D. P. W. சூபர்வைஸர், ராமசாமியய்யர், பகவான் முன்னிலையில் பக்தியுடன் ஒரு நாள் தனி

யாக நின்றார். அவருள் ஒரு சிலிர்ப்புப் பிறந்தது. "ஏகநாதர் போன்ற பெரியோர்கள் உலகில் பாவிகளைக் காக்க வந்தனர். அடியேனுக்கு உய்வில்லையோ?" என்றார். பகவான் இரக்கமேற்கொண்டு, "There is hope; yes, there is hope." "உய்வுண்டு; ஆம், உய்வுண்டு" என்று ஆங்கிலத்தில் பதில் சொன்னார். ஐயர், கீழிறங்கி வந்ததும்,

எதுகுலகாம்போதி.

பல்லவி

திக்குவேறில்லை—நீயேகதி
ஐயா—மெய்யா—துய்யா—உன்னைவிட (திக்கு)

அநுபல்லவி

மோய்க்கு மடியவர் வண்டின மாகியே
கண்டு சுவைத்திடுஞ் செண்டு மலர்ப்பூவே. (திக்கு)

என்ற ஒரு கீர்த்தனம் பாடினார். ஒருநாள் ஸந்நிதியில் இரவில் படுத்திருக்கையில், ஒரு ஒளியோட்டம் பகவானிடமிருந்து தம்முட் போந்ததாகக் கண்டார். மற்றொரு நாள் தம்முள் ஏதோ பிரவேசிக்கக் கண்டார். மற்றொரு நாள் மனம் உள்ளே சென்றதாகக் கண்டு ஒரு புதிய இன்பம் அவருள்ளே யுதித்தது. அவருக்கு எப்போதும் அஜீரணநோவு; உறக்கம் வருவதில்லை; கஞ்சியே குடித்துவந்தார். பகவானிடம் ஒரு நாள் தமது நோயைச் சொன்னதும் உடலில் ஒரு சுகம் ஏற்பட்டது. அன்று பகவான் அவருக்கு நிரம்ப விருந்தளித்தும், வயிற்றில் ஒரு நோவில்லை; அயர்ந்து தூங்கினார். அப்படி ஒரு நாளும் சாந்தமாக உறங்கினதே யில்லையாம். எத்தனை

மருந்து தின்றும் போகாத நோய் அன்று தீர்ந்தது. இந்த நன்றியை அவர் அடியில் வரும் பாட்டாற் காட்டுகிறார்:—

பல்லவி

பேருதவியை என்னென்று சொல்ல லாகும்
ஐய நினதருள் (பேரு)

அநுபல்லவி

ஆரு மளிகிளி யணிமயில் குரங்கிற்கும்
அழையாம லேயிரங்கும் விழைமன நிறைவேநின் (பேரு)

பகவான் தன்னை (ஆத்மாவை) மறவாதிருக்கவே, அவருக்கு உபதேசித்து ரிபுகீதையைப் படிக்கத் தருவாராம். (இதன் சுருக்கம் அடுத்துவரும்.)

தன்னை யறிந்தடங்கின் — மனமே
பின்னைப் பெறுவ தென்னே ?

தன்னை மறந்துவிடின் — மனமே
மண்ணுயிர் வேறுபடும்.

எண்ண மொழியடியோ — மனமே
திண்ண முனக்குசுகம்.

உன்னையுட் கண்டிருப்பாய் — மனமே
உண்மை நிலையதுவே.

லக்ஷ்மியம்மாள்

ஸ்ரீரமணாசிரமத்தை யறிந்தோர் லக்ஷ்மியம்மாளைத் தெரியாமலிருக்க முடியாது; இப்புனிதவதி இளமையிலேயே கைம்மையுற்று, பின்னே தன் ஒரே புதல்வனையும், ஒரே புதல்வியையும் இழந்து, மனப்பிணியுழன்று மாளாத் துயரடைந்து, வடக்கே கோகர்ணஞ்சென்று ஸாதுக்களுக்

குப் பணிவிடைசெய்தும், பின்னுந் துயராறுது, திருவண்ணாமலைக்கு பகவானுடைய ஸந்நிதிப்பெருமையைக்கேள்வியுற்று வந்தாள். பகவானுடைய ஸந்நிதி மாத்திரத்தால் மனத்தில் மலைபோலப் படிந்த பெருந்துயர் நீங்கி அமைதி பிறந்தது. அன்றுமுதல் இன்றுகாறும் மிகவும் அன்புறுதி கொண்டு, பகவானுக்கு இந்நல்லாள் உணவுத் தொண்டு செய்து வருகிறாள். செல்லம்மாள் என்னும் தன் மருமகளைத் தன் மகள்போல இவ்வம்மாள் வளர்த்து மணம்புரிவித்து ஒரு அபிமானப்பேரனையும் அடைந்தாள். ஒரு நாள் செல்லம்மாள் திடீரென இறந்ததாகத் தந்தி வந்ததும் பகவானிடம் சென்று காட்டவே பகவான் விம்மி விம்மி யழுதாராம்.

தன்னன்பர் தந்துயரைத் தன்றுயரேன் றேதீர்ப்பான்
இன்னன்ப ரீச னியல்பு !

பகவானுடைய இளகிய மனம் அன்பர் துயரைப் பொறுத்திலது! இவ்வுலகில் தனக்கு அன்னியமானவற்றிற் கொள்ளும் அபிமானம் பாச வபிமானம். அப்பாசமெல்லாம் நீங்கவே இந்த ஸம்பவங்கள் அவனிச்சையால் நடப்பனபோலும்! பகவான் ஸந்நிதிப்பெருமையால் லக்ஷ்மியம்மாள் இந்த மனத்துயரையும் மறந்தாள். இந்த அம்மாள் நல்ல தியானவதி; பரோபகாரி; யதிகளுக்கு அன்னமளிப்பதிற் பேரன்பு கொண்டவள். பகவானைப் பற்றிப் பல காட்சிகளும் இவ்வன்னை கண்டிருக்கிறாள்.

## சாந்தம்மாள்

சாந்தம்மாள் என்ற மற்றோரணங்கு மஹர்ஷிகளின் உருவை ஜோதிமயமாகக் கண்டாள். இவ்வம்மையும்

ஆச்ரமத்திற் சமையற்றொண்டு புரிந்து மஹர்ஷிகளுக்கு அன்பு செய்து வருகிறாள்.

இப்படி பகவானின் திருவடித்தேனுண்டு ஸந்நிதி வளத்தில் இன்புறும் அன்பர் என்றும் அவ்வின்பத்தையே அவாவுவர்.

எதுகுலகாம்போதி—சாப்பு தாளம்.

பல்லவி.

அல்லும் பகலுமுன்—செல்வத் திருவடியில்
அமுதுண் டிருக்க வருளாய் (அல்)

அநுபல்லவி.

சொல்லுக் கடங்காத ஜோதிப்ரம் மானந்த
சொருபஸா க்ஷாத்காரம்—உருவான குருநாதா (அல்)

* சரணம்.

காணக் காணக் காணக்—கவலை மலை கரைந்து
கதிர்முன் பனியாகுதே !
தீனர்மயக் கந்தீர்க்கும்—ஞானசஞ் சீவியே
ஜீவன்முக் திக்கலைவோர்—மேவிடுந் தஞ்சமே(அல்)

இதுவே அவ்வன்பர் ஆவியின் நித்தியகீதம்.

## இராகவாசாரியார்

இராகவாசாரியார் என்றொரு ப்ரஹ்மஜ்ஞான ஸபையாளர் (Theosophist) ஸ்வாமிகளை மூன்று கேள்வி கேட்க மனத்துள் விரும்பி வந்தார் :—

(1) சில நேரங்கள் தனியாகத் தங்களுடன் ஸந்திக்க முடியுமா ?

---

* இவ்வத்தியாயத்திற் காணும் இரண்டு பல்லவி அநுபல்லவிகளையும் இந்தச் சரணத்தாற் பூர்த்தி செய்யலாம்.

(2) ப்ரஹ்மஜ்ஞான ஸபையைப்பற்றித் தங்கள் அபிப்பிராய மென்ன ?

(3) தங்கள் உண்மை வடிவைக் காண அருள் புரிவீர்களா ?

இக் கேள்விகள் மனத்தில்தா னுள்ளன. ஆனால் அவர் வந்தவுடன், ஸ்வாமிகள்முன் னிருந்த ௩0-பக்தர் களும் திடீரென்று எழுந்து வெளிச்சென்று விட்டனர். தனிமை யேற்பட்டது. முதற் கேள்விக்குப் பதில்! கையில் அவர் ஒரு கீதை வைத்திருந்தார். "கையிலே கீதையோ! தியஸாபிகல் மெம்பரோ !" என்று பளிச் சென்று கேட்டு, "ஆம்" என்பதன் முன் "அது நல்ல காரியமே செய்கிறது" என்றார். இரண்டாவது கேள் விக்குப் பதில்! பிறகு அவர் "ஸ்வாமீ! அர்ஜுனன் கண்ணனின் உண்மையுருவைத் தரிசித்ததுபோல யான் தங்களுடைய சுயவடிவைக் காண வல்லேனோ?" என்று இறைஞ்சினார். முன்னால் ஒரு தக்ஷிணாமூர்த்தி படமும் இருந்தது. அவர் பகவானின் கண்ணையே உற்று நோக்கவே, உருவெல்லாம் மறைந்து, ஒரு வெளி தோன் றிற்று. பின்னே ஒளி தோன்றி, முடிவில் ஜோதிவடி வாக தக்ஷிணாமூர்த்தம் தோன்றியது. உடனே அவர் வியந்து பயந்து தணிந்து பணிந்தார். இவ்வாறே ஸ்ரீரமண தாஸர் (கா. சு. சேஷகிரி ஐயர், B.A.) மகரிஷிகளிடம் பல அதிசயங்களைக் கண்டு தனது அரிய நூல்களில் விளக்கி யுள்ளார்.

## காட்சிகள் பாவனைகளே

ஆனால் இக்காட்சிகளை யெல்லாம் பகவான் பொருட் டாக நினைக்கச் சொல்வதில்லை. ஆத்ம தரிசனம், ஆத்

மைக்கியம், ஆத்மபூஜை, ஆத்மாராமம் இவற்றையே அவர் தன்னுள் ஆழ்ந்து விசாரித்தறியச் சொல்வது. மற்றவை யெல்லாம் பாவனைகள். தனக்குப் புறம்பாகக் காண்பதை யெல்லாம் நேதிசெய்து, பேதபுத்தி யொழித்து, அனன்யபாவனை செய்வதே இன்பம்.

காட்சியுங் காண்போனுங் கண்ணுந்தா னென்றிருக்குஞ்
சாட்சிநீ சத்தியநீ தான்!

நான் யாரென்றும், இவ்வுருக்களைக் காண்பவன் யாரென்றும் விசாரித்து, "ஞானமாம் தானே மெய்; நானுவாம் ஞானம் பொய்; நாமன்றி நாளேது, நாடேது? நாம் இன்றும், அன்றும், என்றும் ஒன்று; உள்ளத்தே உள்ளபடி யுள்ளதே யுள்ளல் வேண்டும் என்றங்கு, தன்னைத்தா னறிந்தடங்கும் இன்பத்திற்கே பகவத்ஸந்நிதி அன்பரனைவரையும் தூண்டும். ஆதலின் இக்காட்சிகள் உண்மையானவை யெனினும், "கண்டவன் யார்? காட்சி யெது?" என்று உசாவின் ஒரு பொருளே காண்போனும் கண்ணும் காட்சியுமா யிலங்கும்.

"பெருகுமாக் கருணைப் பெருங்கட லின்பப்
பெருக்கமே! யென்பெரும் பேறே!
உருகுவோ ருள்ளத் துவட்டூறு தினிக்கு
முண்மைவா னமுதமே! யென்பாற்
கருகுநெஞ் சதனைத் தளிர்த்திடப் புரிந்த
கருணையங் கடவுளே! விரைந்து
வருகவென் றுரைத்தேன் வந்தருட் சோதி
வழங்கினை வாழிநின் மாண்பே!"

## ௯௨. ரிபுகீதை.

"சத்தியமாம் பரப்பிரம சொரூப மேநான்
சலனமிலாப் பரப்பிரம சொரூப மேநான்
நித்தியமாம் பரப்பிரம சொரூப மேநான்
நிரஞ்சனமாம் பரப்பிரம சொரூப மேநான்
சுத்தமதாம் பரப்பிரம சொரூப மேநான்
சுககனமாம் பரப்பிரம சொரூப மேநான்
அத்துவித பரப்பிரம சொரூப நானென்
றழுத்தமுட னனவரதஞ் சிந்தை செய்வாய்."

இதுவே ரிபுகீதையின் பல்லவி. பகவானுற் போற்றப்பட்டு, உணர்ந்து படிக்கும் அன்பர் உள்ளத்தை ப்ரஹ்மஸமாதியில் நிறுத்தத்தக்க ரிபுகீதை, "அஹம் ப்ரஹ்மம், ஸர்வம் ப்ரஹ்மம்" என்னும் இரண்டு ஜோதி ஞானக் கரங்களால் அம்மானையாடுகிறது. குயிலும், வண்டும், கடலும் ஒரேவிதமாகத் தத்தமக் கியல்பான ஓசையைச் செய்து கொண்டிருப்பினும் அவை கவிகள் மனத்தை யள்ளுவது போலவே, ரிபுகீதை திருப்பித்திருப்பி "அஹம் ப்ரஹ்மம், ப்ரஹ்மமஹம், நானே சின்மயம், அகண்டைகரஸம், ஏகபரிபூரணன், நானன்றி வேறில்லை" என்று ரீங்காரஞ் செய்வது ஞானிகள் மனத்தை ப்ரஹ்மத்தில் லயிக்கச் செய்கிறது. ரிபுகீதையின் வாக்கியங்களுக்கு மந்திரசக்தி யுள்ளது. ஒருவர் அதை இனிய குரலுடன் ஓதச் சுற்றுமுள்ளவர்கள் அதையே கேட்டுக் கண்ணை மூடிக்கொண்டிருந்தால் மனோலயம் தன்னாலே யுண்டாகும்.

“ பேதமுறுஞ் சகசீவ பரங்க ளெல்லாம்
பிரமமென்று மப்பிரம நானே யென்றும்
ஓதியவிச் சிந்தையினைப் பிரமாப் யாசி
யொழியாம லெப்போதும் பழக வேண்டும்
சாதகமாஞ் சிந்தனையின் பலத்தி னாலே
சலமனதின் விகற்பமெலாந் தவிர்ந்த பின்னர்
ஈதையுமே பழகாமற் பரமே யாகி
யெந்நினைவு நினையாம லிருக்க வேண்டும் ”

*என்ற நித்ய சுகானந்த வழியை ரிபுகீதை எவ்விதமான இடைமுடக்குகளுமின்றி, நேராக, ஒவ்வொரு வரியிலும் தங்கமணி யடித்தாற்போல அறிவித்து ஸாதகனை ததே வாஹம்பாவனையில் இருத்துகிறது. நேராக ப்ரஹ்மஜ் ஞானத்திற்கு ஐயந்திரிபறும் வழிகாட்டுவதில் ரிபுகீதைக்கு ஸமானம் அதுவே.*

*வேறு விதமான பேதஞானத்திற்கு அது அவ்வப் போது சாட்டை கொடுப்பது நமது மனத்திலுள்ள ஸந் தேஹப்பேய்களை யோட்டி யடிக்கும் :—*

“ பலவிதமாஞ் சந்தேக மேனும்பி சாசு
பயமுறவே தோன்றினுநீ பயப்ப டாமல்
அலைவில்பர பாவனையா மந்தி ரத்தா
லையமெனும் பிசாசதனை யதஞ்சேய் வாயால்
நிலைமருவாத் துவிதமெனும் பிசாசு மீண்டு
நிகழினுமே நீயணுவும் வெருளா வண்ணம்
விலையிலா வத்துவிதத் தியான மாகும்
விபூதியினல் வென்றதனை விபுவாய் நிற்பாய் !

வெருளுடனே தருவினிடைக் கண்ட கள்ளன்
வெறிதான தருவேயா நீதி போலும்
மருளுடனே சுத்திகையிற் கண்ட வெள்ளி
மற்றந்தச் சுத்திகையா நீதி போலும்
இருளுடனே யிரச்சுவினிற் கண்ட சர்ப்ப
மெப்போது மிரச்சுவதா நீதி போலும்
பிரமமதிற் காண்கின்ற ஜகஜீ வாதி
பேதமெலா மெப்போதும் பிரம மேயாம்.

சருவபரி பூரணமா மான்மா வன்றி
ஜகஜீவன் முதலியவை யணுவு மில்லை
பரவுஜக ஜீவபர மனைத்து மென்றும்
பராற்பரமாம் பரமான்ம சொரூப மேயாம்
குருசீடர் சகலமுமே யான்ம ரூபம்
கூறுபொருள் சகலமுமே யான்ம ரூபம்
தெரிவித்தை சகலமுமே யான்ம ரூபம்
தீர்த்தங்கள் சகலமுமே யான்ம ரூபம்.

தன்னிடையே தானாக விலங்கா நின்ற
தற்பரமாம் பரப்பிரமந் தானே யென்று
பின்னமிலா வறிவுற்றுப் பிரமா காரம்
பெற்றவனே பிணிப்பற்ற ஜீவன் முத்தன்
அன்னியமே யில்லாத வான்மா வின்க
ணமர்ந்தாங்கே ரமிப்போனா யகண்ட மான
தன்னிடையே தானாகத் தனித்து நின்று
தன்னின்பம் புசிப்பவனே ஜீவன் முத்தன் ''

என்று உள்ள வுண்மையை யுள்ளவாறு நேராகத் திருப்பித் திருப்பி யுரைத்து, திருமந்திரம்போன்று உரைக்க வுரைக்க ப்ரஹ்மஜ்ஞானக்கனலை வளர்க்கத்தக்க ரிபுகீதை அநுபவானந்தர்களுக்குத் தெவிட்டாத் தேனும் பாலும் முக்கனியும் போன்று இனிக்கிறது.

ரிபுகீதை மஹேதிஹாஸமான சிவரஹஸ்யத்தில் ஆருவது அம்சமாக அமைந்துள்ளது. சுத்த சொரூபானந்த ஸாரதையான இதன் அறிவு விளக்கம் சுத்த சிவனால் ரிபு முனிவருக்கு உபதேசிக்கப்பட்டு, ரிபு முனிவரால் நிதாக முனிவனுக்கு உபதேசிக்கப்பட்டது. இது வடமொழியிலிருந்து ௧௬௨௪ திருவிருத்தங்கள் கொண்ட ௪௪-அத்யாயங்களாகச் செய்யப்பட்டு உலகநாத ஸ்வாமிகளால் தமிழில் எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தமாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இதன் உபதேசங்களை அதன் வாக்கியங்களைக் கொண்டே சுருக்கிக் கூறி முடிப்பாம்:—

“ஏகபரிபூரணமாம் அறிவே ஆன்மா; அதுவே ப்ரஹ்ம சொரூபம்; அதுவே அழிவற்ற ஸத்து; உள்ள பொருளதுவே; அதுவே ஆதியந்தமற்ற அனந்த வஸ்து. ஆன்மாவுக் கயலான தெதுவுமில்லை; அதைத் தவிரச் சிந்திக்கத்தக்க தொன்றுமில்லை; நீ, நான், பிறர், உலகு, ஈசன், மனைமக்கள் முதலிய அகிலவிதத் தோற்றமும் ப்ரஹ்மமே; அகண்டைகரஸமான ஆன்மாவிற்கு அன்னியமணுவுமில்லை; ஆதலின் “ஸத்தியஞானானந்த ப்ரஹ்மமே நான்; ஸன்மயமாய், சின்மயமாய், நின்மலமாய், எனமயமாய் நின்று, ஜாதி, குலம், பிறப்பு, வகுப்புப் பேதமற்று, நித்ய, சுத்த, புத்த, முக்த, ஸத்ய சாந்த சுதந்தரமாய் விளங்கும் ஸர்வபரிபூரண கேவல கம்பீர பரப்ரஹ்மமே

நான்" என்று உறுதி கொள். உடல், பொறி, புலன், உயிர், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் இவற்றைத் தாண்டி, பஞ்சகோசவிலக்ஷணமாய், ஜனனமரண வுபாதிகளெதுவுமின்றி, ஜடாஜட ஜகத்துமின்றி, ஜீவஜகபர வுபாதியெல்லாம் களங்கமற்ற விசாரத்தால் நேதி செய்து, "ப்ரஹ்மாஸ்மி" என்று எப்பொருளை யுணர்வாயோ அதுவே நீ! ஜக மாயை யுனக்கில்லை; ஸங்கல்ப விகல்பமில்லாத நிரஞ்சனானந்தனே நீ; நீயே வேதாந்தப் பொருள்; கூறுபடாத குணாதீத சொரூபன்; குணங் குறியின்றி, மாறுபடாத, மனவாக்குக் கெட்டாத, ஈறுபடாத ஏகான்ம சொரூபன். இங்கு, அங்கு, இது, அது, நான், இவன் என்றெண்ணுவதெல்லாம், பூதபௌதிகங்கள், முக்காலம், பொருள், இடம், முப்புடி, தோற்றங்களெல்லாம், சுரர் நரர், அயன் அரி, குரு சீடர் என்பதெல்லாம் ஒரு சின்மாத்ரமே. பரசிவனுக்கு, நான் பூரண சுகவாரி என்னும் பாவனையே அபிஷேகம்; நான் கட்டற்ற சுதந்தரன் என்பதே ஆடை; நான் ஆன்மா என்றெண்ணுவதே பணிகள்; முக்குண விருத்திகளை விடுதலே அக்ஷதை; நான், குரு, ஈசன் என்னும் பேதமொழித்தலே வில்வம்; துர்க்குண வாஸனை தவிர்த்தலே தூபம்; நானே நிர்க்குண பரசிவன் என்னும் தியானமே தீபம்; ப்ரஹ்மாத்மஜ்ஞானமே நீராஞ்சனம்; தெரிவதெல்லாம் ப்ரஹ்மமென்னுங் காட்சியே சுத்த மலர்மாலை; நான் பூரணானந்தான்மா என்றெண்ணுதலே புஷ்பாஞ்சலி; என்னிடம் நாமரூப மணுவுமில்லை என்னும் சிந்தையே நாமஸங்கீர்த்தனம். வேதாந்த நூற்களால் ஸந்ததமுஞ் சோதிக்கப்படும் ஞானவடிவு நானே. அகில மஹாமௌனத்தின் பல

மாக நிற்கும் ஆனந்தகனமான சொரூபம் நானே. நான் அகண்டேக சொரூபன் என்று அனவரதம் தியானி.”

“நினைவின்றி நிற்பதுவே நிஷ்டையாகும்; அதுவே ஞானம், மோக்ஷம், சிவம், கைவல்யம் எல்லாம். ஸங்கல்பமே தீது; அதுவே மலம், காலரூப ஜீவஜக ஸகல பேதங்களும் ஆகும். மனமே ஸங்கல்ப விகல்பம். அஹங்காரம் பொய்; நான் ப்ரஹ்மம் என்பது மெய்; “அஹம் ப்ரஹ்மாஸ்மி” என்னும் மந்திரத்தை ஜபித்து, ஞானம் பயின்று, பேதமெலாம் நாசஞ்செய்து, மனநோய் தீர்ந்து, சலனமில்லாத அபரோக்ஷ ஞான மெய்தி, ஸகல ஞான மோக்ஷ ஸித்தி பெறுவாயாக. நான் பரப்ரஹ்ம ஸ்வரூபன் என்று நிலைக்கும் ப்ரஹ்ம நிச்சயமே தர்ப்பணம்; நான் ப்ரஹ்மஜ்ஞான சொரூப னென்னும் நிச்சயமே ஹோமம்; எனக்கயலாக எதுவு மில்லை என்று மலைபோலசையாது மனச்சலனமின்றிக் களங்கமிலாக் கேவலனாய், சுத்தான்மாவாய், சத்போத அநுபவானந்தனாய் நிலைத்தவனே ஜீவன்முக்தன். தற்போதரஹிதனாகி, எவ்வித பாவனையும் அற்று, பூரண சைதன்யமாத்திரமாகி, சுத்த சாந்த சுககனமாய்ச் சும்மா இருப்போனே விதேஹ முக்தன். •அறிதல், உணர்தல், நினைத்தல், துதித்தல், மதித்தல், சுகித்தல், கலத்தல், இருத்தல் எல்லாம் ஆன்மாவாக வேண்டும். அஹம்ப்ரஹ்ம விருத்தி திடமாகுமட்டும் அதையே தியானித்துப் பிறகு அதையுந் தள்ளி, அந்த பிரஹ்மப்பொருளாகி அகண்டானந்த வனுபவமுற்று அசைவற்று அமைதியா யிருப்பாயாக. பிரஹ்மத்திற்கு அந்நியமாகக் காணும் பேதபுத்தியே அச்சந்தருவது. சித்த அலைகளே பந்தமாகும்; சித்தமிலாக் காலத்தில்

ஜகஜீவாதிகள் சிறிதுமில்லை; சித்தஜயமே மஹாஸித்தி. ப்ரஹ்மமே ஜீவஜகபரமாகக் காண்பது. அதனால் எப்போதும் எல்லாம் ப்ரஹ்மம் என்றிருந்தால் எளிதாகச் சித்தஜய மெய்தும்; ஸர்வம் ப்ரஹ்மம், அது நான் என்னும் பரமஞானம் ஸஹஜமாகும்."

"ஸோஹம்பாவனையே மனத்தை வெல்லும் உறுதி வழி. எனக்கயலாக எதுவுமில்லை; காமக்ரோதாதிகள், நன்மை தீமைகள், ஸ்வர்க்க நரகங்கள், நரதேவர்கள், ஜாதி நீதி எதுவுமில்லை. ஆன்மவெற்றியால் எல்லாத் தீதும் விலகும். மூன்றுடல்கள், மூன்றவத்தைகள், பஞ்சகோசங்கள், முப்புடிகள், வியஷ்டி ஸமஷ்டி யெதுவும் எனக்கயலில்லை. காண்பதெல்லாம் காண்பானை ப்ரஹ்மம்; அவன் நான் என்னும் அகண்டபாவனையைச் செய்தால் எப்போதும் சாந்தனாவாய். தனக்கயலாய்க் கனவுப்பொரு ளுண்டோ? தேஹமஹந்தள்ளி ப்ரஹ்மமஹமென்று எண்ணு. அன்னியந்தோன்றாத அகண்டாகார ஞானியே ஜீவன்முக்தன். ஸதாமௌனியாகி, ஏகாந்தத்தில் அசையாதிருந்து, கலங்காத மனத்துடன் சுககன பரப்ரஹ்மம் நான் எனச் சிந்தித்துத் தற்போத சூனியனாகி, விகற்பமற்று, தற்பதமே தானாகி முக்தனாவாய். நான் தோற்றம், அழிவு, ஆணவம், ஆதியந்தம், ஜாதி குல மற்ற ஞானகன சொரூபமென்று எப்போதும் பாவித்தால் விகற்பந்தீர்வாய். ருக் யஜுஸ் ஸாம அதர்வணவேத முடிவான "ப்ரஜ்ஞானம் ப்ரஹ்மம், அஹம் ப்ரஹ்மாஸ்மி, தத்வமஸி, அயமாத்மா ப்ரஹ்மம்" என்னும் பாவனைகளெல்லாம் ஒன்றேயாகும். நீயே அறிவான ப்ரஹ்மம், சலனமற்ற சுத்தானந்த சுகப்ரஹ்மம் (தத்வ

மஸி) என்றுபதேசிப்பவனே குரு. இந்த உபதேச ஸாரத்தையடைந்தபின் மற்ற நூல்களையெல்லாம் எறிந்து விட்டு, 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' தியானத்தி லமர்ந்துவிட வேண்டும். 'அது நான்" என்னும் நிதித்யாஸத்தாலேயே சித்தஜயமாகும். பரப்ரஹ்மமொன்றே உள்ளதெனத் தெளிவுறும். ஆதித்யன் ஸந்நிதியில் இருள் நிற்குமா? மேருவினைத் தாமரை நூலாற் கட்டி யசைத்தாலும், பரப்ரஹ்மம் ஒன்றே யென்னும் நிச்சயமுடையவனின் மனத்தை உலகமாயை அசைக்கமுடியாது. ஆமை ரோமத்தைக் கயிறுக்கி மதயானையைக் கட்ட முடியுமா? அப்படியானால் அவனைத் துவிதபாவனையிற் கட்டலாம். ஜீவ ஜகபர பேதம் அவனுக்கில்லை; எல்லாம் ஒரே ப்ரஹ்மமே. ஆவது, அழிவது, அயன், அரி, அரன், அவித்தை, ஜீவன், சித்தம், பந்தம், ஜகம், ஈசன், மாயை என்றெதுவு மில்லை; உள்ளதெலாம் அகண்ட பரப்ரஹ்மமொன்றே; 'அது நான்' என்று பாவித்துப் பாவித்து அதுவே யாவாய். சிவோஹம் பாவனையாற் சிவமே யாவாய். அஹம்ப்ரஹ்ம நிச்சயமே அகண்ட மோக்ஷம்."

இதுவே ரிபுகீதாஸாரம். இந்நூற்பொருளையே கருதித் தெளிந்த நிதாகமுனிவர் தமதநுபவத்தை அடியில் வருமாறு இசைக்கிறார்:—

"சுத்த சற்குருவே, நின்னருளுபதேசத்தால் சோகமற்று, பேதமற்று, ஏக பரிபூர்ண சுத்த பரப்ரஹ்மமானேன். அகோ! நின் பெருமையை, நின்னுபதேசப் பெருமையை யென்சொல்வேன்!"

"சத்தியஞா னனந்த சொரூபம் போற்றி
சகலபரி பூரணமாஞ் சொரூபம் போற்றி

நித்தியஞா னானந்த சொரூபம் போற்றி
நிரஞ்சனநிர்க் குணமான சொரூபம் போற்றி
இத்துவித லேசமிலாச் சொரூபம் போற்றி
யேகசிதா காயபர சொரூபம் போற்றி
அத்துவித மானபர சொரூபம் போற்றி
யகண்டமதாம் பரசொரூபம் போற்றி போற்றி."

ஓம் தத்ஸத்.

## ௫௫. மேற்கே ரமணோதயம்

"ஒடுங்கு நிலைபெற்ற வுத்தம ருள்ள
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
யிடும்பையு மில்லை யிராப்பக லில்லை
படும்பய னில்லை பற்றுவிட் டார்க்கே." (திருமந்திரம்)

"அன்றென்று மாமென்று மாறு சமயங்கள்
ஒன்றொன்றோ டோவ்வா துரைத்தும் —என்றும்
ஒருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கும்
அருதனையே நோக்கி வரும்." (பட்டினத்தார்)

பகவானின் திருவருட் காந்தம் இப்போது பல மேனாட்டு அறிஞரையும் திருவடிக்காளாக்கி வருகிறது. அனைத்தும் தன்னுள் ஒன்றெனும் போது, மேற்கு, கிழக்கு, தெற்கு, வடக்கு எல்லாம் திசைபிளந்து ஓங்கி விரிந்த ஒரு அகண்ட ஸமரஸ வெளியிற் கரைந்துவிடும். அந்த ஆத்ம

ஸமரஸ வூற்றையே உலகு தாகத்துடன் தேடுகின்றது. அதை ஒவ்வோருள்ளத்தும் தொட்டுத் தூண்டிப்பொங்குவிக்கும் அருட் சந்நிதியில் இன்று என்ன நடக்கிறதெனக் காண்போம்.

## ஹம்ப்ரி (*Humphreys*)

பிராங்கு ஹம்ப்ரி என்பவர் இந்திய மஹாத்மாக்களிடம் மிகவும் பற்றுள்ள ஒரு ஆங்கிலேயர். தமது உக-வது வயதில் 1911-ல் போலீஸ் உப பரிதர்சக (Police Assistant Superintendent) ராய் வேலூருக்கு வந்தார். பம்பாய்க்கு வந்ததும், உடல்நல மின்மையால் ஒரு வைத்தியசாலையிலிருக்கும்போது, வேலூரில் மனத்தை ஏகாக்ரப்படுத்தி ஆங்கு ஒருவரை முதலில் தமது ஸூக்ஷ்மதிருஷ்டியாற் கண்டார். அவரே, வேலூருக்கு வந்ததும் அவரது தெலுங்கு முனிஷியாகப் பெற்றார். ஒருநாள் அவர், தமது முனிஷியின்மூலம் ஒரு வானசாஸ்திர நூலை வாங்கிப் பார்த்தார்; மறுநாள் "இங்கு யாரேனும் மஹாத்மாக்கள் உளரோ" என்று வினவினர். தாம் பம்பாயில் முனிஷியை முதன்முதற் கண்டதுஞ்சொன்னர். முனிஷியார், சில மஹாத்மாக்களின் படங்களை முன்னிட்டார். ஹம்ப்ரி கணபதி முனிவர் படத்தை யெடுத்து "இதோவுமது குருவின் உருவம்" என்றதும், முனிஷி வியந்தார்; 1906-முதல் கணபதிமுனிவரின் நெருங்கிய மாணவரே தாமென முனிஷி ஒப்புக்கொண்டார். பின்னே ஹம்ப்ரி உடல்நலத்திற்காக உதகமண்டலஞ் சென்றார். அங்கே அவர் ஒரு ஸித்தரின் வடிவைக் கண்டார். ஹடப் பிராணாயாமம் பயில இச்சைகொண்டார்; புலானுணவைப் படிப்படியாக விடுக்க வுறுதி பூண்டார்.

உதகமண்டலத்தினின்று வந்தபின் ஒருநாள் முனிஷியிடம் பென்ஸிலும் காகிதமும் வாங்கி, ஒரு மலையையும், அதன்மிசை ஒரு தெள்ளூற்றருவிக் கருகே யுள்ள ஒரு குகையையும், அதன்மிசை ஒரு மஹாத்மாவையும் வரைந்து, இக்காட்சியைத் தாம் கனவிற் கண்டதாகக் காட்டவும், முனிஷி விரூபாக்ஷகுகையி லிருக்கும் ரமண பரமாத்மனின் வரலாற்றைச் சொன்னார். கணபதிமுனிவரையும் அவ்வாறே கனவிற் கண்டார். திருவண்ணாமலையில் நடந்த ப்ரஹ்மஜ்ஞான ஸபைக்கு கணபதிமுனிவர் சென்றுகொண்டிருக்கையில், வேலூரில் ஹம்ப்ரி அவரைத் தரிசித்து வணங்கி அன்பு பூண்டார். அவரருகி லிருத்தலே ஒரு புதிய சக்தி தருகிறதென எழுதுகிறார். முனிவர் மஹர்ஷிகளைப்பற்றிச் சொல்லி அவரை ஒருநாள் திருவண்ணாமலைக்கு அழைத்தார்.

## மஹர்ஷிகள் தரிசனம்

1911-நவம்பரில் முதன்முதலாக ஹம்ப்ரி மஹர்ஷிகள் ஸந்நிதிக்கு வந்தார். ஸந்நிதியில் வணக்கமுடன் பேசாமல் வெகுநேரம் தியானித்து உட்கார்ந்திருந்த போது அவருளத்தில் ஒரு புத்துணர்ச்சி பிறந்தது. முனிவர் சொன்னபடி மஹர்ஷிகளின் விழிகளையே ஹம்ப்ரி பார்த்துக் கொண்டிருந்தார். "அவை உள்ளே ஸமாதியில் ஆழ்ந்திருந்தன; அவர் உடல் அசைவற்றது; அது வெறுங் கருவியாகவே யிருந்தது. ஆண்டவனே அதன் மூலம் தனது வார்த்தைகளை மொழிந்தான். எனது உள்ளுணர்வை விவரிக்க மொழியில்லை" என்கிறார் ஹம்ப்ரி.

## பாராமற் பார்ப்பவனைப் பார்

பிறகு முனிவர் ஹம்ப்ரியைப் பேசலாம் என்றார். மஹர்ஷிகள் ஆங்கிலத்திலேயே பதில் சொன்னார்.

ஹம்ப்ரி :—குருவே, நான் உலகிற்கு உதவியாயிருப்பேனா?

**மஹர்ஷிகள்** :—தனக்குத்தான் உதவிக்கொண்டால் உலகிற்கும் உதவினவனாவான். உலகினின்று தான் அன்னியமல்ல; உலகும் தன்னின் வேறில்லை.

ஹம்ப்ரி :—குருவே, கண்ணன் ஏசுநாதர்களைப்போல நான் அற்புதச் செயல்களைச் செய்ய முடியுமா?

**மஹர்ஷிகள்** :—அவர்கள் அச்செயல்களைச் செய்யும் போது, தாமே செய்ததாக உணர்ந்தாரா?

ஹம்ப்ரி :—(சற்று யோசித்து) இல்லை, குருவே!

மஹர்ஷிகள் :—அவர்களைக் கருவியாகக் கொண்டு ஆண்டவன் சக்தியன்றோ அவற்றைப் புரிந்தது. தனது பரமாத்மநிலையைப் பரிபூர்ணமான ஆத்மஸமர்ப்பணத்துடன் அடைவதே முதன்மை.

### • உபதேசம்—"பார்ப்போனைப் பார்"

ஆத்மஸித்தியே ஸித்தியென்று மஹர்ஷிகள் பின்பு ஹம்ப்ரிக்கு உபதேசித்தார். ஆண்டவனில் தன்னை முற்றும் கரைத்து, அவரே தன்மூலம் பேசவும் செய்யவும் நிற்கும் கருவியே குருவாவர். ஸூக்ஷ்மச்செவி, ஸூக்ஷ்மப்பார்வை முதலிய குப்தசக்திகளெல்லாம், ஆத்மசாந்தியின் முன்னே காசுபெறா. குருமார்கள் எவ்வளவோ தியாகத்தின்மேல் ஒரு காரணமாக இந்த சக்திகளைக்

கைக்கொள்கின்றனர். நீண்ட கடவுள் வணக்கத்தாலும், ஸாதனையாலும் அதீந்திரியசக்திகளைப் பெற்றவர்களே குருமார்கள் என்பது பொய் நம்பிக்கை. இந்த சக்திகள் அவர்களுக்குத் தூசிமாத்திரம்; அவை அவர்களுக்கு அவசியமு மில்லை. உலகில் ஒன்றேயான ஒரு அகண்ட சக்தியே எல்லாச் செயல்களையும் வகித்து நடத்துகிறது. நாம் காணும் காட்சி, காணுஞ் செயல் இரண்டிற்கும் அதுவே பொறுப்பாளி. வாழ்வு, சாவு, தோற்றம் இந்த மாற்றங்களில் கவனம் வேண்டாம்; இவற்றைக் காண்பான் எவனோ, இவற்றிற்குத் தலைவன் எவனோ அவனையே கவனித்துப் பார்க்கவேண்டும். இது முதலில் மிகவும் கடினமாயிருப்பினும், நாளடைவில் அப்யாஸத்தால் ஸஹஜமாகிவிடும். இப்படிப்பட்ட ஸாதனத்தாலேயே குருமார்கள் தோன்றினார்கள். நாள்தோறும் கால்மணி நேரம் பழகிவரலாம். விழியைத் திறந்துகொண்டே மனத்தை, பார்ப்போனைப் பார்ப்பதிலேயே ஊன்றவேண்டும். பார்க்கும் அது தன்னுள்ளேயே உள்ளது. அது எளிதாகப் பற்றக்கூடிய ஒரு குறித்த உருவல்ல. அதைக் காணப் பல்லாண்டுகள் செல்லினும், அதன்மேல் ஏகாக்ரப்பட்டால் நாலைந்து மாதங்களில் மனச் சாந்தமும், துயர்களை மதியாத் தன்மையும், தன்னை யறியாத ஒரு சக்தியும் பிறக்கும். இன்றுமுதல் காட்சி, காண்செயல் இரண்டும் விடுத்துக் காணும் அதனிலேயே (திருக்கு) கருத்தூன்றுக.

### ஸித்தி

இதனினும் ஸித்தி என்ன இருக்கிறது? ஆத்ம ஸித்தியே ஸர்வஸித்தி.

" சித்தமா யுள்பொருளைத் தேர்ந்திருத்தல் சித்திபிற
சித்தியெலாஞ் சொப்பனமார் சித்திகளே—நித்திரைவிட்
டோர்ந்தா லவைமெய்யோ வுண்மைநிலை நின்றுபொய்ம்
தீர்ந்தார் தியங்குவரோ தேர்!" (பகவான்) [மை

ஹம்ப்ரி மஹர்ஷிகளிடம் பலமாக அன்பால் வசப்பட்டார். தம்மையும் ஒரு நெருங்கிய சீடராக ஆட்கொண்டு உபதேசஞ் செய்ததை வணக்கமுடன் போற்றினார். மஹர்ஷிகள் முன்னிலையில் சிறு சிறு குழந்தைகளும் அமைதியான வணக்கமுடன் நாள்தோறும் வந்து உட்காருவதைக் கண்டு மகிழ்ந்தார். "அவர் உரைகடந்த பெருமையுள்ளவர்; அவருடைய மகத்துவமும், மேன்மையும், அன்பும், மனவுறுதியும், சாந்தமும், நிச்சயபுத்தியும் அளவற்றது" என்று போற்றினார்.

இரண்டாவது தடவை வேலூரினின்று மோட்டாரிலேயே (௬௦-மைல்) பிரயாணமாகி வந்து ஹம்ப்ரி மலையேறி மஹர்ஷிகள் ஸந்நிதிக்கு வந்தார். வந்தவுடன் "இன்னும் சாப்பிடவில்லையோ? பசிக்கிறதோ?" என்று கேட்டார். ஹம்ப்ரி அதிசயித்து "ஆம்" எனவே, உடனே சாதம், நெய், பழம் முதலியவை அளிக்கப்பட்டன. தேங்காய்ப் பாலில் சர்க்கரை கலந்து மஹர்ஷிகள் ஈந்தார். எடுத்துச் சாப்பிட்ட ஒரு தேங்காயோட்டைக் கொடுத்தார். மிகவும் புன்சிரிப்புடன் ஸந்தோஷமாகப் பேசினார். "அவருடைய புன்சிரிப்பினும் அழகு வேறில்லை; நான் சாப்பிடும்போதே எனது பழைய சரிதையைப் பிறருக்கு சரியாகச் சொல்லிக்கொண்டிருந்தார். மூன்று மணிநேரம் ஸந்நிதியில் அவருடைய உபதேசங்களைப் பருகி வீற்றிருந்தேன். நான்கிவேல் என்ற ஒரு நண்பர் கொடுத்த கையெழுத்து

நூலை அவரிடம் காட்டினேன்; அதை மிகவும் புகழ்ந்தார். மற்றொரு சீடரின் வினாவிற்கு அதனின்று விடை காட்டினார். மதியத்தில் உஷ்ணசாந்திக்காக எனக்குக் கொஞ்சம் எலுமிச்சம்பழரஸம் கொடுத்தார். நான் திரும்பிச் செல்கையில் என்னை வழியனுப்பி, 'மீண்டும் வரலாம்' என்றார்" என்று ஹம்ப்ரி தமது இரண்டாவது தரிசனத்தைப் பற்றி எழுதுகிறார். ஹம்ப்ரி தமது உத்யோகத்துடன் யோகமும் செய்ய முடியுமா என்று எண்ணிக்கொண்டிருந்தார். மஹர்ஷிகள் திடீரென்று, "வேலையும் வகித்து தியானமும் செய்யலாமே" என்றார். ஒருவர் மனத்தைப் புத்தகம் படிப்பதுபோல மஹர்ஷிகள் படிக்க முடியும் என்பதற்கு இப்படிப் பல சான்றுகளுள்ளன.

மூன்றாவது முறை வந்தபோதே ஹம்ப்ரி, மஹர்ஷிகளிடம் மிகவும் அரிய உபதேசங்களைப் பெற்றார். அவற்றின் சுருக்கம் அடியில் வருமாறு:—

## ஆத்மோபலப்தி

இது பலத்தை உத்தேசித்துத் தேடுவதல்ல; இதை சரியா யுணர்ந்தால் பலத்தில் இச்சையிராது. "உனக்குப் பணிக்கே யுரிமையுண்டு, பயனுக்கல்ல" என்று கிருஷ்ணர் சொன்னார். ஆத்மோபலப்தி ஒரு வழிபாடு; வழிபாடே ஆத்மலாபம். எண்ணங்களுக்கு ஜீவனாயிருப்பது ஒன்றே; அதனாலேயே நினைக்க வல்ல மனம் ஆண்டவனின் பங்கு என்றறிந்தால் மனம் வேறல்ல என்பது தோன்றும்; ஸ்தூலமும் ஸூக்ஷ்மமும் மறைந்து, ஒரு ஸத்தே மிஞ்சும்; அந்த ஸத்து பிரபஞ்சமாகவும் நிஷ்பிரபஞ்சமாகவுமுள்ளது. அது உரை மனங்கடந்தது. விழிப்பெற்ற குரு

வானவர் எப்போதும் இந்நிலையிலிருந்து பேதவுணர்வின்றி உடல், மனம், புத்தியைப் பயன்படுத்தமுடியும். " விரும்பி முயல்வதனுல் நீ உலகிற்கு உதவிசெய்ய முடியாது ; உனக்கு நீ உதவிக்கொள்ளுவதனுலேயே முடியும் " என்று விவேகானந்தரும் சொல்லியிருக்கிருர்.


## மதம்

மதம் என்பது குழந்தைகளுக்கு ஏற்பட்ட கட்டுப்பாடே ; ஸமூகவாழ்வு முரணின்றி நடக்கவும், ஒரு ஆந்தராக்கினி யெழுந்து நமது ஆபாஸங்களை யெரித்து சீக்கிரம் நமது பேதபுத்தியை யொழிக்கவுமே மதம் ஏற்பட்டது. கிறிஸ்துமதம், புத்தமதம், இந்துமதம், தியாஸபி தத்துவம் முதலிய எந்த மதமாயினும் சரி, எல்லா மதங்களும் ஸந்திக்கும் ஒரு பொதுவிடத்திற்கே நம்மைக் கொண்டு செல்லுமல்லால், அதற்குமேல் அவற்றிற்கு ஆற்றலில்லை.

## கடவுள்

" எங்குங் கடவுள், எல்லாம் கடவுள் " என்ற அனுபவ வுணர்ச்சியே மதங்களெல்லாம் ஸந்திக்கும் பொது விடம். இதனின்று மனத்துணர்வு விரிந்து, காணும் பொருள்களைப் பொருள்களென் றெண்ணுமல், அனைத்தையும் கடவுளே என்னப் பழகவேண்டும். அவற்றைப் பொருளென் றெண்ணுவதற்குப் பதில் கடவுளே யென்றறிதல்வேண்டும். பிரபஞ்சம் மனஸ்ஸ்ருஷ்டி என்று அறியவேண்டும். பிரபஞ்சமின்றேல் மனம் எதையும் காணமுடியாது. பிரபஞ்சம் இருப்பதனுல் அதன்பின்னே ஆதாரபூதமாக ஒரு நிஷ்பிரபஞ்சம் இருந்தே தீரவேண்

டும்; பொருளை அறிவதனால் அறிவதொன்று இருக்கிற தென்று தெரிகிறது. செவியிருந்தும் செவிடனுக்கு ஓசையும், கண்ணிருந்தும் குருடனுக்குக் காட்சியு மில்லை. கடவுள் அனந்த ஸதஸத்து, பிரபஞ்ச நிஷ்பிரபஞ்சம். உண்மையான கடவுளறிவு அகத்தினின்றே மலர்கிறது; புறத்தினின்றல்ல. காண்பதே உண்மையறிவு; தெரிவதல்ல.




A—விளக்கு—கூடஸ்தன் (சுயஞ்சோதி, பரமாத்மா).
B—சித்ரம் — நானுவான ஜகச்சித்ரம். C—புலன்கள்.
F—திரை—மனஸ். D—சித்தமனவெளில் நிஷ்பிரபஞ்ச சித்தஜோதி.
E—காட்சி—A-க்கும் D-க்கும் இடையே B-புகுந்தால் சித்தமனவெளில் பிரதி பலிக்கும் நானுலகக் காட்சி.

## ஆத்மாநுபூதி

கடவுளை நேராகக் காண்பதே ஆத்மாநுபூதி. குறியும், உருவும் காட்டியே கடவுள் செயல் புரிகிறாரென்றெண்ணுவது பெரும்பிழை. கடவுள் தாமே நேராகச் செயல் புரிகிறார்.

நானார்? நான் சுத்த பரமாத்மவொளி என்று மனந்தெளிந்து, ஜகச்சித்ரத்தை விலக்கி நோக்கினால் அனைத்திற்கும் முதலான சுத்தஜோதி ப்ரஹ்மம் விளங்கும். அதுவன்றி எதுவுமின்று. அதுவே அனைத்தும். 'நான் அது' என்பது தெளிவுறும்.

மேற்கண்ட ஒவியவிளக்கை நோக்குக! மனித மனம் திரையைப் போன்றது. அதில் பரமாத்மவொளி மர்சற்றிலங்குகின்றது. விளக்கிற்கும் ஒளியாடி (Lens)க்கும் இடையே பலநிறமுள்ள படக்கண்ணாடி (slide)யை வைத்தால், திரையிலுள்ள வெள்ளொளி கெட்டுப் பலநிறப் படமே அதிற் காண்கின்றது. ஒளியின் காரியமான நிறங்கள் சுத்தஜோதியை மறைத்துப் படர்கின்றன. ஆனால் இம் மாறுதலால் உள்ளிருக்கும் கூடஸ்தன், ஸர்வசாக்ஷி, ஸர்வத்ருக்கான ஜோதிக்கு என்றும் சலனமும் மாற்றமுமில்லை. விளக்கிற்கும் திரைக்குமிடையே புகுந்த படக்கண்ணாடியே வெள்ளொளியிற் காட்சியாகிறது. படக்கண்ணாடி (slide)யை நீக்கினால், எவ்வித வுபாதியுமின்றி விளக்கொளி சுத்தமாகத் திரையில் விழுகிறது. படக்கண்ணாடி திரையிற் காட்சியாவதெதனால்? அதன் பின்னுள்ள விளக்காலன்றோ? அவ்விளக்கின்றேல், படம், திரை, கண்ணாடி எல்லாம் வெறும் ஜடமேயன்றோ? அது

போல நமது பார்வையினின்று, உல (த்ருஶ்யம்)கை அப்புறப்படுத்தி அதன்மூலத்தை விசாரித்தால் கடவுட் சோதி (திருக்கு) யைக் காணலாம்.

ஒரு பளிங்கை (Prism) ஒளிக்கதிருக்கு நேரே பிடித்தால், அக்கதிர் (Ray) அதை ஊடுருவி ஏழு நிறங்க (Vibgyor)ளாகப் பிரிகிறது. அந்நிறங்களனைத்திற்கும் மூலம் ஒரு பரஞ்சுடரன்றோ? பளிங்கை அப்புறப்படுத்தினால், அச்சுடர் சுயம்பிரகாசத்துடன் இலங்குகின்றது. மனத்தை ஐயுறுத்திக் கலக்கும் நானுவலைகை நீக்கினால், கற்பனை கடந்த கடவுளொளி மாசற்றொளிரும். ஒரு மனிதனைக் காணின், உடல்போர்த்த கடவுள், நடமாடுங்கோயில் என்றெண்ணுக. உலகக் கப்பல் இறைவனிச்சை யென்னுந் துடுப்பினால் நடத்தப்படுகிறது. தன்னறிவி லூன்றி யுறுதியான தியானவித்தன், கண்ணுஞ் செவியுந் திறந்திருப்பினும், எது அனைத்தையுங் காண்கிறதோ அதைத் தன்னுள் கவனித்து, மனவுணர்வுமற்று, அத்யாத்ம வுணர்ச்சியிலேயே நிலைத்திருப்பான்.

## பாவம்

சுதந்தர முயற்சி மனிதனுடன் பிறந்தது; கட்டுகளைத் தாண்டவே ஜீவன் முயல்கிறது; உதாரணமாக, அளவின்றிக் குடிப்போன் குடிக்கும் அளவைத் தாண்டும் அவாவினாலேயே அப்படிச் செய்கிறான். ஆனால் அந்த அவா அவனை யடிமையாக்குகிறது. உண்மை யின்பச் சுதந்தரம் இன்னதென்று தன்னு ளறிந்தால் இந்தப்புறப் பொருள்களில் இன்பந் தேடான்.

தான் பந்தப்பட்டவனில்லை என்றறிந்தால், மனிதன் சுதந்தரம் பெறலாம். கட்டுப்பட்டதாகத் தோன்றும் "நான், நான்" என்பது உண்மையில் எல்லையற்ற ஆத்மா. புலனு லறிந்ததைத் தவிர வேறொன்றையும் அறியாத தால் பந்தம் உண்டாகிறது. உடலும், மனமும் "நான்" என்ற எல்லையற்ற ஆத்மாவின் கருவிகளே. ஒவ்வொன்றி லும், ஒவ்வொரு மனத்திலும் உள்ள சேதனப் பொரு ளே "நான்." அற்புதங்களைச் செய்யும்போதும், உபதே சிக்கும்போதும் ஏசுநாதர் தற்போதத்தை மறந்தார். சுத்த சுயம்பிரகாசமான கடவுளே காரணமும் காரியமும். "என் பிதாவும் நானும் ஒன்று" என்றார் ஏசுநாதர்.

"நான், எனது" என்ற அகந்தையுணர்வை விட்டு விட வேண்டும். உடல் எதைப் பற்ற முடியும்? மன மும் எதைப் பற்ற முடியும்? இரண்டும் ஜீவனற்ற கருவி களே. ஆண்டவன் ஒளி அவற்றோடு பாய்வதனாலேயே அவை நிலவுகின்றன. கண்டுணரும் நானாப்பொருள்க ளெல்லாம், ஒரு அகண்டப் பொருளின் வர்ணச்சிதைவு களே!

## வழிபாடு

சிறந்த கடவுள் வழிபாடு எது? வழிபடாது உன்னை முற்றும் அவனுக்கு அர்ப்பணிப்பது; மனமொழிமெய்க ளால் நடக்கும் ஒவ்வொரு காரியமும், அனைத்திற்கும் ஜீவ நாதனான ஒரு கடவுளின் செய்கை என்றறிதலே சிறந்த வழிபாடு. தற்போதம் விடுத்துச் செய்யும் புண்ணியச் செயல்களிற் கடவுளே செயலாளியாக விருக்கிறார் என் றறிக. போதிக்கும்போது, "நான் போதிக்கிறேன்" என்ற நினைப்பே குருவுக்கு இருக்காது. அவனுடைய

ஸந்நிதியில் ஒரு ஸந்தேஹம் அல்லது இடர் மனத்திலுண் டானால், குருநாதனின் அற்புதமான ஒரு மொழியே அதைத் தீர்க்கிறது. ஆத்மஸம்ஸ்திதனான குருவின் மொழி தவறாது; அவனுக்குத் தன் சொந்தச்செய லொன்றுமில்லை. தானே ஒரு நினைப்பிற்கு ஆதியென் றும், தான் ஒரு ஸந்தேஹத்தைத் தீர்ப்பதாகவும் அவன் கருதான். அவன் "என்னது, யான்" என்பதற்றவன். எந்த நினைப்பிலுஞ் செயலிலும், அது தனதாயினும், பிறருடையதாயினும் அவன் கடவுளையே காண்பான். அவன் ஒன்றையும் வியக்கான். ஸந்தேஹங்களைத் தீர்த்த தற்காக தன்னலவின்பம் அடையான். இன்பமும் அவன் இச்சிப்பதில்லை. இன்புறுவது யார்? கடவுளே! இன்பம் என்பதென்ன? அதுவே கடவுள். கடவுள் இன்பம். நித் யானந்தம் வேண்டுமெனின், தன்னை மறந்து, இன்ப மாகவே யுள்ள கடவுளாகவே யிருக்கவேண்டும்.

உள்ளது கடவுளே. அவர் உண்மையாக, நேராக வுள்ளார். அவரே அனைத்திற்கும் கருவியும் காரணமுமா யுள்ளார்; அவரே இன்பவடிவு. கடலனைய கடவுளிலேயே அத்யாத்மவித்தன் தன்னைக் கரைக்கிறான்; தன்னல விச்சை யனைத்தையும், புண்ணிய விழைவையும் தூர எறி கிறான். "எனதுசெய லொன்றுமில்லை; எல்லாம் ஈசன் செயல்" என்கிறான். அவனே புண்ணிய வடிவாகி, தன்னை யடைவோரெல்லாம் இன்புறச்செய்கிறான். அவனே புண் ணியங்களின் இருக்கை. இதுவே உண்மை வழிபாடும் அதன் பயனுமாகும்.

இவ்வாறு உபதேசம் பெற்று ஹம்ப்ரி புத்துணர் வடைந்தார். கொஞ்சகாலத்தில் தமது வேலையை விடுத்து

கத்தோலிய ஸந்யாஸி (Catholic monk) யானார். அவர் புலாலுண்ணுதலையும் விட்டுவிட்டார்.

அறிவோனைத் தேர்ந்தறிவா யாடா தமர்ந்தா
லிறைவனு னன்றி யேவன் ?

மேற்கிருந்து கோழி கூவும்போதே கிழக்கெழுந்த காலையைக் காணுமியல்பு நம்மில் சிலருக்குண்டு. விவேகாநந்தர் சிக்காகோ மேடையினின்று வேதாந்த முரசால் முழங்கவே, உலகம் தகஷிணேஶ்வரத் தெழுந்த ஆத்ம சக்திச் சுடருக்குப் போற்றி கூறிப் பணிந்தது. அதே காலத்தில் தமிழகத்தில் ஆன்ம நேய வொருப்பாட்டுரிமையை, சுத்த சமரஸ சன்மார்க்கத்தைக் கடவுளருள் பெற்றுக் கனியும், தேனும், பாகும் தெவிட்டும் அமுத வெள்ளமாக அள்ளித் தெளித்துச்சென்ற நமது அருட்பெருஞ் சோதிக் குயிலின் பெருமை இன்னும் வடவேங் கடத்தைக் கடந்து செல்லாதிருப்பதேன்? நமது தமிழருள் ஒரு இராமலிங்க விவேகானந்தர் வள்ளலாரின் அருட்சமய முரசை மேனாட்டினின்று முழங்கி யிருந்தால் இப்போது அருளுதயத்தை நம் நாட்டினர் அனைவரும் அறிந்திருப்பர். ஆனால் பகவானுடைய சக்தி வேறு. பகவான் சுத்த வேதாந்தச்சுடர் ; ஆடா ஞான மணிவிளக்கு; அதற்குக் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு எல்லாம் ஒன்றே. இம்மலைவிளக்கு தனக்கு யாதொரு விருப்பு வெறுப்பின்றித் தன்னை விரும்பி அறிஞரும், ஆர்வலரும், ஆன்மப் பசியாளரும் நாளுக்குநாள் ஆர்வத்துடன் வரப் பெற்று விளங்குகின்றது. இம்மலை விளக்கு உன்னதமான ஆத்ம ஞானத்திற்கு மலையிலக்கு ; ஆதலின் மேற்கு

இதை நோக்கியே வருகிறது. இன்று மேனாட்டில், ரமணக்கதிர் ஆங்காங்கு உள்ளன்பர்மூலம் பரவி வருகின்றது. சில தூய அறிஞர் இவ்வறிவொளியைக் கற்றும் கண்டும் கேட்டும், வேட்டு நிற்கின்றனர். இவர்கள் எண்ணம் நாளுக்கு நாள் பெருகிவருகிறது. அவர்களுட் சிலரை மட்டும் இங்கு உதாரணமாகக் கொள்வோம். புதுப்புதுப் பொறிகளின் படபடப்பும், தொழில் வேகத்தின் நெருநெருப்பும், வாணிபப் போட்டியின் பொருபொருப்பும், வேலையில்லாத் திண்டாட்டமும், தற்கொலைகளும், பொற் கொலைகளும், மண்பொன் னாசையின் மதமதப்பும், கண்டதே காட்சியென வாழும் கலகலப்பும், உணவும், தினவும், ஆசையும், வெண்செருக்கும், வீண் விவகாரக் குப்பையும், போரும், பொருளும், ஆண் பெண் வாழ்வில் ஆயிரம் விநோதங்களும், பிணக்குகளும், குணக்குகளும், மன மயக்குகளும், நீச்சி (Nietysche) யின், Will-to-Power-ம், ஹெக்கலின் இல்லை வாதமும், ஆயிரம்வகை வடிவெடுத்து அலங்காரத்துயர் மேடையில் அமைதியற்ற அழிநடம் புரியும் மேனாட்டுப் புயல் வானிலும் ஆங்காங்கு அறிவு மணிகள் நிலவினர், நிலவுனர். தேல், அனெக்ஸாமாந்தர், ஜெனபன், ஜெனோ (Zeno), ஹெராக்கிளித்தன் (Heraclitus), பித்தாகரன் (Pythagorus), எம்பிடாகிள்ஸ் (Empydocles), அனெக்ஸகோரஸ் (Anaxagorus), சொக்ராத்தன் (Socrates), பிளாதன் (Plato), அரிஸ்தாதில் (Aristotle), எபிகூரன் (Epycurus), ப்ளாதோனி (Platonius), முதலிய கிரேக்க ஞானிகள் ஏகவாதமும் அணுவாதமும், (Atomism & Monadism) அனல் வாதமும், நீதிவாதமும், 'உன்னை

நீ யறி' என்னும் உயர்ந்த ஞானமொழியும், பேசிச் சென்றனர். கிறிஸ்தவ மதம் மேனாட்டிற் புகுந்தபின் அதற்குப் பிரதிவாதிகளும், கணக்கற்ற பிரிவினைக்காரர்களும் எழுந்து, ஐரோப்பாவின் மூளையைக் கலக்கினர். சில அறிஞர், தமது மூளை எட்டுமட்டும் உள்ளே ஆராய்ந்து, தமது கருத்தைப் புதிது புதிதாக வெளியிட்டனர். பேக்கன், டேகார்ட் (Descarte), ஸ்பினோஜா (Spynoza), லேபினி (Leibniz), ஜான்லாக் (Johnlocke), பெர்க்ளி (Berkeley), இமானேல் காண்டே (Immanuel Kante), பிஷ்தே (Fichte), ஷெல்லிங் (Shelling), ஹெகெல், ஹெர்பர்ட், ஷோபன்ஹார், டார்வின், பெர்க்ஸன் முதலிய பல அறிவாளிகள் அறிவாராய்ச்சி செய்து, தமக்குப் புலனானவற்றை உண்டென்றும், ஒன்றென்றும், பலவென்றும், ஒன்றுமில்லை யென்றும், மனமென்றும் நினைவென்றும், பலவிதமாக மூளையைச் சுழற்றிச் சுழற்றிப் பல நேர்த்தியுள்ள நூல்நூற்றுக் குவித்துள்ளனர். எனினும், அருளாற் காணாத விவ்வறிவாராய்ச்சிகளெல்லாம் இன்னும் இருளாகவே யுள்ளன. சொற்ற சொற்கள் சுகாரம்பமோ? உன்மனிக்குள் ஒளிர்பரஞ் சோதியாம் சின்மயப் பொருள் புன்மலப் புழுவான மன விகாரத்திற் கெட்டுமோ? பிரான்ஸிஸ், பர்னார்டு, காதரைன், கிருஸ்தாபர், நிக்கலாய், ஸெலியா, உருசூலா, பெனித்கிரிஸ்பன் முதலிய சிலுவை யடியார்களின் அரும்பெருந் துறவும், தியாகமுங் கூடக் காதில் கிளர்ச்சி யுண்டுபண்ணினதே யொழியக் கருத்தில் ஆன்ம எழுச்சிதரவில்லை. உண்மைத் துணிவுள்ள பல அறிஞர்களை உயிரோடு தூக்கி, சொக்கப்பானை கொளுத்தி ஐரோப்பாவை அல்

லறை சில்லறை யாக்கிய புரோடஸ்தாந்து கத்தோலியப் போர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆயினும் உண்மை யறியுமட்டும் உள்ளேயுள்ள அறிவுக் கடவுள் மனிதனுக்கு அமைதி தருவதில்லை.

சுவாமி விவேகானந்தரும், ராமதீர்த்த பரமஹம்ஸரும் கடல்கடந்து வேதாந்த முழக்கம் செய்த பிறகு வெண்ணாடு பெரிய விழிப்பையும் உண்மை யறிவிற்கு உள்ளழைப்பையும் பெற்று வரவரக் கிழக்கொளியை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. பாரத சக்தி, பாரத ஞானம், அத்யாத்ம ஞானம்; ஆத்ம சக்தியே பாரதச் செல்வம்; அதுவே உலகிற்கு அன்பு, இன்பம், அறிவு, அமைதி, ஒற்றுமை, கடவுள்வாழ் வளிக்கத்தக்கது. உலக வொற்றுமையின் வேர் பாரதான்மா. தன்னைத் தனக்காக்கும் தாரகம் அதுவே. அதை அடையவே இன்று மேனாட்டறிஞர் பலர் ஆவலாக பாரதான்மாவை வணங்குகின்றனர். இருப்பினும் இன்னும் ஹடாஸனங்களும், பிராணாயாமங்களும், ஏதோவொரு நீதி நெறியும் (Moralism) உலகை வெறுத்தலுமே யோகமெனும் கொள்கை பலரிடை யூன்றி யிருக்கிறது. அல்லது பழகிப் போன மதாசாரங்களைப்பற்றிக் குழிகிண்டிக் கொண்டிருக்கின்றனர் ஒருபால். அல்லது அச்சத்தாலும் பழமை யுணர்வாலும் மனக்கிளர்ச்சியாலும் சில பெயர் வடிவங்களைப்பற்றி யாடிப்பாடிக் கூத்தாடி வருகின்றனர் பலர். இவற்றால் அமைதி வருமா? ஏதோ ஆடிப் பாடுமட்டும் உள்ளக்கிளர்ச்சிக் (Emotion) கால் வீசும். அதன்பின் 'அமைதி அமைதி' என்று உள்ளே யொன்று அனலெழக்கூவுமே! அந்த அமைதி தன்னறிவின்றிப் பின்

னறிவால் வாய்க்காது. அத்தன்னறிவுச் சுடராக இருந்த படி யிருந்து மலைவிளக்காக ஒளிபரவும் பகவானின் பூரண வேதாந்தானுபவத்தை நாடி இன்று மேனாட்டன்பர் பலர் உள்ளந் திரும்பிவருகிறது.

## Harry Dikman (ஹரிதிக்மன்)

நடு ஐரோப்பாவில் பால்டிக்கடலை யணிந்துள்ள (Latvia) லத்வியா குடியரசில் ஹரிதிக்மன் என்ற அன்பர் உள்ளார். லத்வியா 1918ல் ரஷ்யாவின் ஆதிக்கத்தை யுதறிக் குடியரசானது. இதன் தலை நகர் ரிகா (Riga). இவ்வன்பருக்குச் சுமார் 40 வயதிற்கு ஒன்றிரண்டு குறைவா யிருக்கலாம். இயல்பாக யோகத்தில் மனந்திரும்பி ஹடயோகமும் ராஜயோகமும் பயின்றார். அவரிடம் பயி லும் மாணவப் பெரியோர் பலர். 1930-ல் இவர் பகவா னைப்பற்றிக் கேட்டவுடனேயே, ரமணக்காதல் பற்றிய வுளத்தராய், பேச்சு, எழுத்து, நடை, நினைப்பு, வாழ் வனைத்தையும், ரமணார்ப்பணஞ்செய்து, தனது நாட்டில் ஆயிரக்கணக்கான அறிஞருக்கு ரமண பக்தியைப் புகட்டி வருகிறார். தனது மாணவரையும் இவ்வருட்பணிக்கே பயன்படுத்தி வருகிறார்.

'நான் யார்?' என்ற பகவதுபதேசத்தைத் தனது லத்விய மொழியில் வெளியிட்டுள்ளார். இவர் அடிக்கடி உருக்கமான கடிதங்கள் எழுதுகிறார். தனக்கெழும் ஐயப் பாடுகளை யெல்லாம் கரவின்றித் தெரிவித்து, பகவா னுடைய அருளை நாடி, அவர் வழியில் சிரத்தையுடன் சென்றுவருகிறார். ரமணாச்ரமமும் இவர் கடிதத்திற்கு அன்புடன் உரிய பதிலெழுதி வருகிறது.

"நான் பிரம்மசரியத்தில் வெற்றிபெற விரும்புகிறேன். எனது மாணவரையும் பிரம்மசரியத்தில் பயிற்றவேண்டும். ஹிந்தியும் ஆரியமும் கற்று ஆரிய நூற்களைப் பயில விருப்பம். பாரதரிஷிகளின் ஆன்மக் கதிரை இந்த குருக்ஷேத்திரத்தில் (அவர் இருக்கும் நகரம் Kuru-zeme அதன் பொருள் குருநிலம்) ஒளிர்விக்க வேண்டும். இங்கு சுத்தவேதாந்தக் கொள்கையை விரும்புகின்றனர். தங்கள் உபதேசத்தை உண்மையாகப் பின்பற்ற அருள்வல்லமைதாரும். குருநாதா! தங்களடித் துகளை முடிமேற் சூட்டிக்கொள்ளுகிறேன் .... என் மாணவருக்கு ஹடயோகம் பயிற்றிவருகிறேன். ஆசனம், உட்யாணம், நௌலி, பஸ்தி, ப்ராணயாமங்களில் அவர்கள் நன்கு பயின்றுள்ளனர். விவேகானந்தர் தனது ராஜயோகத்திற் குறித்தபடியே ப்ராணயாமம் பயிற்றியுள்ளேன். ஆயினும் அத்வைத விசாரமே, ஸோஹம் விசாரமே எனக்கு அமுதினும் இன்பந்தருகிறது. ப்ரஜ்ஞானம் ப்ரஹ்மம், அஹம் ப்ரஹ்மம், தத்வமஸி, அயமாத்மா ப்ரஹ்மம், ஸோஹம் இவற்றின் பொருள் அறிந்தேன். திருவண்ணாமலைக்குத் தூலவுடல் வரமுடியாவிடினும், என் அன்புளம் தமது பாதத்திலேயே உள்ளது. மஹர்ஷிகளே! தங்கள் பிறந்த நாளை (டிசம்பர் மீ 26உ) இங்கு சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்கிறேன். மஹாபுருஷரான தாங்கள் என்மேல் அருள் நோக்கம் வைத்தால் வெற்றிபெறுவேன்; என் கடிதங்களைப் பார்த்து, என்பால் திருவுளம் பூத்த பேறே, என்னை ஈடேற்றிவிட்டது; பகவானே! தங்கள் திருவடி மலரில் வணங்குகின்றேன். மாயவிலங்கினின்றும் கட்டவிழ்த்தருள்க.

நான் துரும்பு; எல்லாம் ஆண்டவன் செயல்; என் மனத்தெழுந்த ஐயுறவுகளும் இடர்களும் அவதார புருஷரான தங்கள் அருளால் விலகி வருகின்றன. பகவானே! நீ மாயைக் கடிமையில்லை; நீ சுகாத்மா என்று திருவுளம் பூத்தருளினீர்! அதைக்கண்டவுடன் ஆத்மானந்தச் சிலிர்ப்படைந்தேன். இன்றுமுதல் தூய பிரஹ்மசரியங் காத்து மௌன விரதத்துடன் விசார மார்க்கத்தில் தியான சாதனம் செய்ய உறுதி பூண்டுள்ளேன். பகவானே! அடியேனுக்கு ப்ரஹ்மசர்யம் காக்கும் வகையைக் காட்டியருளும். சிற்றின்ப வாசனையைப் பற்றாது அதை வெறு மனமயக்கமென்றறியத் துணை தாரும்; இதயத்தை விளக்கியருளும்; உயர்ந்த ஞானானந்தத்தில் என் வாழ்வை உயர்த்தத் திருவுளங் கூர்ந்தருளும். இப்படித் தங்கள் அன்பன், அடியேன் ஹாரி திக்மன், 20, லேலா ஈலா, துகும், லத்வியா. (Harry Dikman, 20, Leila - iela, Tukum, Latvia, Europe)

## உபதேசம்

இதுதான் இவ்வுள்ளன்பர் சரித்திரச் சுருக்கம். இதற்கு பகவான் அருளிய உபதேசச் சுருக்கமே நமது குறிப்பு:—

“இதயம் ஆன்ம நிலயம்; அதில் நான் எனும் செம்பொருளுள்ளது. அகந்தையடங்கி, மனச் சுழற்சியோய்ந்த மோன வமைதியில் இதயேசன் உணர்வாகியருள் பொழிவான். விசாரத்தால் ஒவ்வோரெண்ணத்தையும் “எங்கே வந்தாய்; ஓடு வெளியே; நான் நீயல்ல, நான் ஆன்மா; நான் நான்” என்று கண்டித்து ஒட்டினால் அசைவற்ற, அலைவற்ற இன்பக் கடலை யடையலாம். தன்னையறிவதே

யறிவு ; தன்னறிவே அறிவிற்கரசு ; தன்னில் ஏதமற, பேதமற, வாதமற நிலைப்பதே உண்மை நிலை ; இன்பவீடு.

## காமங்கடிதல்

காமத்தைக் கம்பர் "தூமகேது" என வழைப்பது சாலப் பொருந்தும். காமம் ஒரு வீரியத்தினவு. நன்றாக விசாரித்தால் இது ஒரு துன்பக்கனவு ; உயிரையொட்டிய ஒரு தொத்து நோய் ; காதலுடன் காமத்தைக் கலவற்க ; காதலென்பது உள்ளத்தில் பற்றிய உயிருறவு ; காமம் ஆசைப் பசிநோய். இயல்பான இல்லறத்தில் வள்ளுவரும் வாசுகியும்போல வாழ்ந்து இன்புறலாம். காதலென்பது உள்ள நெகிழ்ச்சிக்கும், அன்புறவிற்கும், மன வொருப்பாட்டிற்கும், வாழ்வின்பத்திற்கும் செந்நெறி மக்கட் பெருக்கத்திற்கும் இயற்கையளித்த ஒரு உணர்வாற்றல். புணர்ச்சி யென்பது புதல்வரைக் குறித்தே. ஆனால் உலகம் இத்தகைய தூய இல்லறக் காதலை (அறநூல் இல்லற வியலில் இதன் விவரங்காண்க) விடுத்து, வீரியத்தினவிற்கு அடிமைப்பட்டு, நசைப்பேய் பிடித்து, கட்டும், பிணியும், இடருந் துயரும் எய்திக் காமவேள் நடனசாலையில் தட்டழிந்து வருகிறது. உறுதியான பிரஹ்மசரியமே இல்லறத்திற்கு மூலாதாரமாகும். ஆணும் பெண்ணும் இந்த பிரஹ்மசரியத்தை அனுட்டித்தல் மூச்சினும் இன்றியமையாதது. இதிற் பழுதுறும் மக்கள் தோலும் எலும்புமாகி இளங்கிழாராய்த் துன்புறுகின்றனர். பெற்றோர்கள் தங்கள் மக்களை இந்த விஷயத்தில் மிகமிகக் கவனமாகப் பார்த்துவர வேண்டும். கெட்ட நடத்தை இளமையில் ஊன்றினால் புல்லுருவியாக அடர்ந்து வலிவையும் தேகசை

யும் உறிஞ்சி, வாழ்வின் போக்கை வரவர எமபுரிப்பயண மாக்கிவிடும். ஆணாயினும் பெண்ணாயினும் 5 வயது முதல் 12 வயதுமட்டும் நல்ல கதைகளும், நற்பழக்கமும், சிறிய உதாரணங்களும் மக்கள்முன் இலக்காகவேண்டும். 12 முதல் 16 மட்டும் வாழ்வு அமையும் பருவம் (Formative period); இப்பருவத்தில் பிடிபட்ட கெட்ட பழக்கங்கள் ஆயுள்முழுதும் ஒருவனை விடாது. ஆதலால் இப்போது தூய சுற்றமும், நற்சேர்க்கையும், நல்லொழுக்கமும், பேச்சு நடத்தைகளில் பெருந்தன்மையும், உணவிலும், துயிலிலும் பரிசுத்தமும், மாசற்ற நூலாராய்ச்சியும், பெரியோர்ப் பேணலும், கடவுள் வணக்கமும் வேண்டும். இதற்கேற்ற குருகுலக் கல்வி அக்காலத்திலிருந்தது. தீய, கொடிய இருட் பழக்கங்கள் சிறார் வாழ்விற் புகாமற் காக்கவேண்டியது பெற்றோர், ஆசிரியர் கடமை. இப்பருவத்தில் காம எண்ணம் யாருக்குமுதிக்கும். ஆதலின் முதியோர் வெளிப்படையாக இருட் செயல்களின் தீமையையும் தீய வுறவாளரின் கேட்டையும் உறுத்தி, சிறார் மனத்தைத் திருப்பி உயர்ந்த எண்ணங்களிலும், செயல்களிலும், உய்விக்கவேண்டும். இருட் செயலாலும் காம எண்ணங்களாலும், காமச் சித்திரக் கனவுகளாலும் வீரியமிழந்து வாலிபர் வருந்துவது பரிதாபம்! கூர்ந்த அறிவு, திண்ணுடல், ஒளி, இன்பம் எல்லாம் இந்திரியங் காத்தலாலுண்டாகும்.

வன்மை நலமோளியும் வாய்ந்திடலால் வாழ்வெல்லாம்
வன்னியற மேன்கோள்ளா வாறு?

இது அமுதம், கற்பகம், அமரி; இதைக் காத்தற்கே பெரிய யோகிகளும் அரும் பாடுபடுகின்றனர். வலிய கொடிய வீரியத்தினவாலெழும் நசைப்புண்ணின் சீழாக

இவ்வமுதத்தை மாற்றுவது தற்கொலையினும் கொடிது. ஓஜஸ், தேஜஸ், ஆயுள், ஆரோக்கியம், வீர்யம், தைர்யம், காரியசித்தி எல்லாம் இந்த அமுதின் வளத்தால் எய்தும். ஆதலின் இதைக் காத்தற்குரிய சிலமுறைகளை அன்பர் அறிதல் நலம்.

மலரைக் காண்பதுபோல அழகைக்காண்; ஆண் பெண்ணுடல் வேற்றுமைக்குள் வேறுபாடற்ற ஆன்மா உள்ளது; அது அவிகாரி, சுத்தம்; அதையே எங்குங் காண். பெண்களை பராசக்தியாகக்காண். ஆண்களை சிவாம்சமாகக்காண். காலை 4-மணிக்கு முன்பே எழுந்திரு. உடனே குடலையும் உடலையும் சுத்திசெய்துகொண்டு, இதயக்கடவுளை நினைத்து, ஒருமணி நேரம் எளிதான ஒரே ஆசனத்தில் அமர். வேறெதிலும் நாட்டமின்றி இதயத் துடிப்பையே கவனி. குருவை வணங்கு; மனக்குரங்கு கண்டபடி யலையாது அதற்கு நல்ல வேலைகொடு; பெருந் தீனிவிரும்பேல்; காலை எட்டுமணி, மதியம் 12 மணி, மாலை ஆறுமணி, மூன்று வேளை தூயவுணவுண். இடையில் அடிக்கடி தண்ணீர் சாப்பிட்டால் மலச்சிக்கல் இராது. மாலை ஆறு மணிக்குமேல் எதுவும் உண்ணாதே. தாமஸ உணவுகளை யொழி; மனம் பக்குவப்பட்டு வழிக்குவருவதற்கு ஆகாரநியமம் பெருந் துணையாகும். பகலுறக்கமும் மிகையுறக்கமும் வேண்டாம். இரவு சுமார் பத்துமணி முதல் நான்குமணி மட்டும் உறங்குதல் போதும். உள்ளே தியானம் நிலை. இந்தப் புறவுறக்கமின்றித் தூங்காமல் தூங்கிச் சுகம்பெற வொண்ணும். தீய இருட்பழக்கமுள்ள, முகம் வெடித்த, கண்வெறித்த மாக்கள் உறவை விலக்க வேண்டும். தூயநடை முறையால் அவர்களுக்கு உதா

ரணம் காட்டவேண்டும். கொச்சை நூல்கள் சிற்றின்ப நினைப்புகளில் மயங்கித்திரியேல். தாயுமானவர், அருட்பா இரண்டையும் படித்து வருக. சினம், அருவருப்பு, பொறாமை, பொய், வஞ்சகம், திருட்டு, சண்டை, சச்சரவு எல்லாம் காமத்தினவின் சேட்டைகளே! அமைதியை இழக்காது எப்போதும் சாந்தமாயிருத்தல் வேண்டும். பேராசை, சஞ்சலம், சினவெறி, கலக்கம், சோம்பல், காலை மாலை மந்தமாக ஏதேதோ நினைத்து உட்கார்ந்திருத்தல், தீயபழக்கம், லாகிரிவஸ்துக்கள், ஜல்லிப்பேச்சுக்கள், கூட்டத்துடன் அதிகம் கலத்தல், மலச்சிக்கல், இவற்றால் இந்திரியங்கழியும்.

மனவிகாரமே காமத்தினுணவு. மனத்தில் ஒரு தீய அலை வீசும்போது அதைத்தடுக்க ஒரு நல்ல எண்ணத்தை அணைபோட வேண்டும். மனம் இருவிகற்பப் போர்க்களன். அதைமுற்றும் நசுக்குமட்டும் நலந்தீதெனும் அலையெழுப்பிக் கொண்டேயிருக்கும். தீதை நல்லலையால் ஆழ்த்தலாம். ஆனால் இரு விகாரங்களையும் நசுக்கி நிர்விகாரியாதல் வேண்டும். மனத்தைக் காமசிந்தனையினின்று விலக்கி, ஆத்ம விசாரம், தியானம், குருசேவை, வழிபாடு, உயர்ந்த எண்ணங்கள், நல்லாரிணக்கம், இவற்றில் ஊன்றி வேறு பொல்லாங் கெண்ணவொட்டாது தடுத்து வரவேண்டும். மனம் மனிதன். அம்மனம் எது நினைக்கிறதோ அதுவேயாகிறான். அதை ஆன்மாவுக்கு ஊணாக்கிவிட்டால் அதனோடு அதைப் பிடித்த குணதொந்த விகாரங்களும் மாயும். அப்போது தூய பொன்னம்பலம் உள்ளத்தில் தோன்றும். இதற்குச் சீரிய வழி ஆத்ம விசாரமே.

"ஏதடா, எதற்கெடுத்தாலும் இந்த "நானார்" தானா? எது கேட்டாலும், 'இது யாருக்கு—எனக்கு—நானார்? இதுதானா பல்லவி" என்று சிலருக்குத் தோன்றலாம். "நானார்?" எல்லாப் பூட்டுகளுக்கும் தங்கத் திறவுகோல். நானார் தத்துவத்தில் வெற்றியானார், அகந்தை போனார்; சுத்த சச்சிதானந்தத்திற்கு ஊனானார். பகவானின் இருந்தபடியிருக்கும் தனிக்கோலமே வாய்மனங் கடந்த இன்ப நிலை; அதனின்று சகஜநிலை யறிந்துகொள்ளாதவர்க்குத் தன் திருமொழி யருள்கின்றார். "நானென்றாராய்ந்து பாராய்" நானவில் ஒன்றைக் காணாய்! அந்த ஒன்று உள்ளத்துளது. மனமாசு அதை நினைப்புகளால் மூடிக்கொண்டுள்ளது. அம்மனமற்ற விடமே நீ; அதைப் பற்றி ஆங்கேயிரு; அப்போது இதயம் புலப்படும்; நாடி மதனமாகும்; எல்லா சுகமும் எய்தும்.

## காமங்கடிய "நானார்" விசாரம்

ஒரு பெண்மேல் ஆசை யுண்டாகிறது; மருந்து? அதற்கும் நானார்தான்! எப்படி? இந்த ஆசை யாருக்கு? எனக்கு. நானார்? இந்த ஆசையா? அல்ல. இந்த ஆசையால் நான் அமைதி பெறலாமோ? முடியவே முடியாது. "எத்தனை விகாரம் வரும் என்று சுகர் சென்ற நெறி இவ்வுலகம் அறியாததோ?" நான் இச்சை வைத்த இப்பொருள் எது? பெண்ணென்பர். எதில் இச்சை வைத்தேன்? வடிவழகில். அவ்வடிவென்ன? உடல். உடலென்ன? சதை, இரத்தம், நாடி, நாளம், எலும்புகள். இவை தனித்தனியே பிரிந்திருக்தாலோ?—ஊன், எலும்பு, இரத்தம், சீழ், மலம், சிறுநீர், வேர்வை, கோழை, கற்று

மை நாற்றம், சளி, பீழை—இவற்றில் இச்சை வைப்பாயா? சீசீ அசங்கியம்! ஊஉஉவே எஎ! சொல்லாதேயும்! ஐயா, இவை சேர்ந்துதானே நீர் காதலித்த வடிவழகு. ஆம்! ஆனால் இவை சேர்ந்த ஒரு உயிரற்ற பொம்மை அல்லது பிணத்தில் காதல் போகுமா? ஆதலின் பெண்ணென்பது இத்தோலு மெலும்பும் அல்லவே? அதற்குள்ளே ஏதோவொன்றுள்ளதையா! ஆமாமையா; இவ்வணியுருவை யூடுருவிப்பார்! கண்ணை மூடிக்கொள். உன்னைப்பெயர் வடிவற்ற ஒன்றாகக் கருது. அப்போது இவ்வுடல் வீழ்ந்தாலும் சாகாத ஒரு பொருள் உன்னுள் உள்ளதன்றோ? ஆமாம்! உள்ளத்தே அது நடம்புரிகிறது; அப்படியே கண்மூடிக்கொள். நகை, சேலை, முறுவல், கொண்டை, வாட்கண், நூலிடை, கிண்கிணிபாதம் முதலிய மேல் விகாரங்களை மலமென வொதுக்கிப் பெண்ணை நினை! ஆம், ஆம்! என்னுள் உள்ளது போலவே அதனுள்ளத்தும் ஒரு பொருளுள்ளது. அறிந்தேன்! அதுதானப்பா பெண்தோல் போர்த்து ஆண்தோல் போர்த்த உன்னை மயக்கியது.

உன்னுள் உள்ளதும் அதனுளுள்ளதும், ஆன்மா; இரண்டும் ஒரு பொருள்; மேல் முலாம்பூசிய இரு விகாரம். மன விகாரமற்றால் உன் ஆசை எங்கே? பறந்தே போயிற்று. இப்போது ஆசை எங்குதித்தது? என் மனத்தில்! பெண்ணாண் பேத மெங்குதித்தது? என் மனத்தில்! காமம் யாருக்கு? மனத்திற்கு! யாரைக் காதலித்தாய்? தோற்ற விகாரத்தை! உள்ளே ஆராய்! அது நான்! உன் அன்னையை அப்படி காதலிக்கிறாயா? இல்லை. ஏன்? தாயை அப்படி செய்யக் கூடாதென்று

மனம் பழகி விட்டது; தாயிடமுள்ளதெது? ஆன்மா! அப்பெண்ணினிடம்? ஆன்மா! ஒரு ஆன்மாவின் மேல் தாயை கற்பித்தால் தூய நினைப்பு; பெண்ணைக் கற்பித்தால் காமநோய் நினைப்பா? எதனால்? மன விகாரத்தால். ஆதலால் உன் மாறுதலுக்கு மூல முளை எது? மனம்! நான் மனமா? இல்லை. நானார்? மனமற்ற மன்று; அதில் என்னுடைய தலைவன் தானெனத் திருநடம் புரிகிறான். அவனே அஸல் நான் என்பது. மற்றதெல்லாம் தப்புந்தவறுமான விகாரம். நானே எனக்கு நலம்; நானே எனக்குத் தீது! இப்படி விடாமல் தொடர்ந்து ஆராய்ந்து சென்றால் காமப்பேய் அதன் குரோத லோபாதி சகோதரர், பிணிமூப்புக்குட்டிப் பேய்களுடன் மூட்டைகட்டிக் கொண்டு ஓட்டமெடுக்கும். ஆதலால் எதற்கும் "நானார்" எனும் ரமண மந்திரத்தை பிரயோகித்து ஆத்ம ஸ்வரூபமறிந்து உறுதியா யூன்றவேண்டும். அதுவே சுகநிலை.

## பிக்ஷு ப்ரஜ்ஞானந்தர்

இவர் ஆங்கிலேயர்; ஆக்ஸ்போர்ட் கிராஜுவேட் (B. A.). பன்னூலும், லத்தீன் பிரெஞ்சு முதலிய ஐரோப்பிய மொழியும் பயின்ற அறிஞர். பிரெடெரிக் ப்ளெச்சர் (Frederic Fletcher) என்னும் பூர்வாச்ரமப் பெயருடையார். தோல்ஸ்தாயைப் போல் (Tolstoi) இவர் முதலில் ஐரோப்பாவில் நடந்த கெய்ஸர் மகாயுத்தத்தில் ஒரு ஆங்கில தளகர்த்தராயிருந்தார். தொலை நோக்காடி (Telescope) வைத்துப் பார்த்துப் பகைவரைக் குறிகாட்டிச் சுடச்சொல்வது இவர் வேலை. இவ்வேலையில் இவருக்கு

ஆபத்துகள் பல நேர்ந்ததுண்டு. ஒரு முறை டபாரென்று குண்டு வெடித்து இவரை அந்தரத்தில் கிளப்பி எறிந்து விட்டது. ஒரு பிணநிறை பள்ளத்தில் பகைவனுக்கருகே விழுந்தார். ஆனால் அவரை சினேகஞ்செய்து தப்பினார். தலை மலைகளும், கைக்குவியல்களும், முண்டங்களும், இரத்தக் கிளரியும், "என்னை யேன்செய்தாய் படு, படு" வென்று குண்டுகள் வேட்டெறிவதும் அதனூடே ஐயோ தலை போச்சே! ஐயே செத்தேன்! என்று பேதை மக்கள் அழுது ஆயிரக்கணக்காக உயிரிழக்கும் கொடுமையும் ஆயிரம் கலிங்கத்துப் பரணியினும் பயங்கரமாயிருந்தன. சில மன்னர்களின் மண்வெறி யகந்தைக்காகப் பாவம், எத்தனையுயிர்கள் மடிகின்றன! அசோகனைப்போல் நமது பிரெடரிக் இக்கொடுமைக் கிரங்கி உலகின் மாயை வலையை யுதறி யெறிந்தார்; டால்ஸ்டாயைப்போலவே இவருக்கும் பேரிரக்கமும் நீதியுணர்வும் பிறந்தது. பிறகு உலகெங்கும் சுற்றி, உலகியல்பெனும் நூலை அனுபவ வழிகளால் நன்காராய்ந்து திபேத்திற்குச் சென்று ஆங்கு பௌத்த நூல்களைப் பயின்று, பௌத்த தீக்ஷையுடன்

"ஓம் நமோ தஸ்ஸ பகவதோ அரஹதோ
ஸம்மாஸம் புத்தஃ ஸஃ"

எனும் திருமந்திரோபதேசம் பெற்று, சீடர் கணங்களைச் சேர்த்துக் கால்நடையாக இந்தியாவைச் சுற்றி, 1931 ஏப்ரல்மீ ரமணாச்ரமம் வந்தார். மஹர்ஷிகளின் பௌத்தாகாரத்தையும், ப்ரக்ஞானனந்த ஜோதி சந்நிதியையும் கண்டு வணங்கி, தர்மராஜன், முனீந்தரன், ஜினன், விநாயகன், வீதராகன், பகவன், பேரின்பச் செல்வன், முக்குண

மற்ருேன், புண்ணியமுதல்வன், சாந்தன், அநகன், நிச்சிந்தன், புனிதன், வென்ருேன், விராகன், முக்தன், சித்தன், ஆனந்தன், தீர்த்தன் எனும் பெயர்கள் இந்தத்தன்மயனுக்கே தகுமெனப் போற்றிசெய்து, மகர்ஷிகளின் திருவடி நிழலில், நான்கு மாதங்கள் தவமிருந்தார். இவர் நல்ல சில விரதர். 1932ஆம் இரண்டு மாதங்கள் ஆசிரமத்தில் தங்கினுர். பகவானிடம் உண்மை அன்புவைத்து அவர் உபதேசத்தைப் பருகிப் பெரும்பயனடைந்தார்.

இரங்கூனில் தனது ஆங்கில ஆசிரமத்தினின்று (English Ashram, Kyoung, Chin-Tsong Estate, Kokine, Rangoon) அடிக்கடி சந்நிதானத்திற்குக் கடிதம் வாயிலாகத் தனது நன்றி வணக்கத்தை யறிவித்தும் தனது நண்பர் பலருக்கு பகவானின் திவ்விய குணங்களைப் பற்றி யுரைத்தும் வருகிருர்.

"தாங்கள் எப்போதும் என் அன்பு நினைப்பிற்குரியீர். திருவண்ணுமலையில் தமதடியில் நானிருக்கப்பெற்ற அற்புதமான காலம் என்றும் மறக்கொணுது. தங்களையே தியானிக்கின்றேன்; எனக்கு அருள் அனுப்புக! உண்மையான ஆத்மானுபூதி பெறுதற்கு ஆர்வமும், சிரத்தையும் பூண்டுள்ளேன். தங்கள் அருள் என்னை ஆளாக்குக! பகவானே, தங்களைப்பற்றியே நாடோறும் நினைக்கின்றேன். துணை யருள்க! பகவானே வணக்கம்! தங்கள் சந்நிதி முன் தாள் பணிகிறேன். என் நினைப்பில் தாங்களே குடிகொண்டுள்ளீர். வணக்கம்! வணக்கம்!!" என்று ப்ரக்ஞானந்தர் அடிக்கடி உருகுகின்ருர். லண்டனில் லக்ஷக்கணக்கான சந்தாதார்களையுடைய ஸண்டே எக்ஸ்ப்ரஸில் ("Sunday Express", dated 28-5-1933) பகவானுடைய

திருவுரு வந்தது. அமுத உயிர் மனிதர் (Men with Elixir of Life) என்ற கட்டுரையில் பகவானின் திருவுரு விளக்கப்பெற்றிருக்கிறது. மேனுடு பகவானின் திரு முகத்தைக் கண்டுகொண்டது.

ப்ரக்ஞானந்தர் தனது ஆங்கில நண்பர் ரபேல் ஹர்ஸ்டு (Raphael Hurst) உடன் ரமணாச்ரமத்தில் தங்கினுர்.

## Raphael Hurst

இவர் லண்டன் பத்திரிகைத் தொழிலாளி; நல்ல உழுவலாளர்; கவித்திறமையும் வாய்ந்தவர். முதலில் மேஹர் பாபாவுடனிருந்தார். மேஹர் மெஸேஜில் பல கட்டுரைகளும் பாமாலைகளும் வெளியிட்டிருந்தார். ஆத்ம ஞானத்தை நாடியே இந்தியா வந்தார். சுற்றிப் பார்த்து முடிவில் ஞானமலையைக் கண்டு அதனடி நிழலில் (பலாக்கொத்தில்) ஒரு சிறு குடி லமைத்துக்கொண்டு தனிமை வகித்திருந்தார். பகவானிடம் உள்ளன்பு பூண்டு அடிக்கடி லண்டனிலிருந்து கடிதம் எழுதுகிறுர்.

"இந்தியாவில் நான் பார்த்த மஹானுபாவர்களில் தாங்கள் ஒப்பற்ற தனிச்சிறப்புடன் விளங்குகின்றீர். ஒருவரே என் வணக்கத்திற்குரியரானீர்; அது தாங்களே. தங்கள் சீடனுக அடியேனை ஏற்றருள்க. இங்கிலாந்திலிருக்கையில் எனக்குத் துணை புரிக. எனக்குப் பல அரிய நண்பருண்டு; அவர்களும் பரமார்த்தத்தை நாடுவோரே; ஆனுல் அவர்கள் இந்தியாவிற்கு வரமுடியாதவர்கள்; அவர்களுக்கு மெய்த்துணை யருள்க."

"தங்களைக் கண்டபின் புதிய மனிதனுனேன்; என் பதற்றங்களும், துருதுருப்புகளும் மாயமாய்ப் போயின.

நான் முன்னே உலகில் பிரமாதமான காரியமாக நினைத்த தெல்லாம், தூசி பெறாததாயின. மஹர்ஷிகளே! தங்கள் திருவருட்டுணையாலேயே முடிவில் சிறிது இன்பமெய்தினேன். இப்பொழுது மனச்சாந்த மடைந்துள்ளேன். தங்கள் அற்புத சந்நிதியில் கழித்த அற்புத காலத்தை யான் மறவேன்; அதுவே என்னைப் புதிய வழி நடத்தி ஒருநாள் ஆத்மானுபூதி பெறுவேன் என்னும் துணிவீந்தது. தாங்கள் எனக்குபதேசித்த ஞானமணிகளைப் பெருஞ் செல்வமாகக் கருதி உள்ளத்தில் வைத்து உன்னி வருகிறேன். அதை யனுஷ்டிக்கக் கூடுமட்டும் முயன்று வருகிறேன். எல்லாவற்றினும் தங்களை தரிசிக்கப் பெற்றதே பெறற்கரும் பேறு; தாங்களே யான் தேடிய குரு தேவன்; தங்கள் திருவுருவை என்முன் வைத்துள்ளேன். தங்கள் அருள் வடிவு என் மனக்கண்ணை விட்டு நீங்காது. பகவானே தங்களையறிந்தேன்; தங்களையறிந்தால் என்னை யறியத் தடையோ? நின்னையே யறிவோன் தன்னையே யறிவான். நின்னறிவே தன்னறிவு. ஐயனே! என் வாழ்வு புதிதாக மாறியது. தங்களிடம் பெற்ற ஆன்ம போதனை என்புற வாழ்வையும் மாற்றியது. முன்னறியாதன இன்றறிகிறேன். குருவின் திருவருட் சந்நிதியில் நீண்டகால மிருந்தால்தான் உலக மாயையை வெல்லலாம். குருநாதா! இங்கிலாந்தை நீத்து நீண்டகாலம் தங்கள் திருவடியில் அமர்ந்திருக்க உறுதி பூண்டுள்ளேன். மஹர்ஷிகளே! தங்கள் அனுக்ரகத்தை, தங்கள் திருவருளை வேண்டி நிற்கிறேன்! அருளுக, பகவானே" என்று இவ்வன்பர் அடிக்கடி எழுதித் தனது நண்பருக்கும் பகவானைப் பற்றிச் சொல்லுகிறார்.

இது தவிர, பல ஜர்மன் அறிஞர், பகவானிடம் அன்பும் வணக்கமும் பூண்டு சுத்த வேதாந்த உபதேசங்களைப் பரப்பி வருகின்றனர். வி. என். சர்மா என்னும் பேரறிஞர் (இவர் ஆந்திரர், தத்துவாசிரியர்) சென்ற நான்காண்டுகளாக மேனாட்டில் சுற்றி பகவானின் பெருமையையும் உபதேசங்களையும் பரப்பி வருகிறார்.

சில அமெரிக்க அன்பர்களும் பக்த கோஷ்டியில் சேர்ந்துள்ளனர். சமீபத்தில் ஒரு அரிய அமெரிக்கர் (24 வயது, ஆள் பஞ்சாப் வீரர் போன்று வாட்ட சாட்டமானவர், நல்ல சாது; சாத்வீக ஆகாரி) பகவத் ஸந்நிதியில் இரண்டு மாதம் மோனம் வகித்திருந்தார். மேனாட்டில் ஆங்காங்கு கூட்டப்படும் சமயப் பெருங் குழுக்களிலும் பகவான் பெயர் முழங்குகிறது. ஐரோப்பாவின் சுவர்க்கமான ஸ்வித்ஸர்லாண்டில் (Switzerland) கூடும் சமய சபைத்தலைவர் எழுதுகிறார்:

" தங்கள் மகத்தான காரியம் என்னை மகிழ்விக்கிறது. இங்கு ஏரிக்கரையில் மிக இன்பமான இடத்தில் மேனாட்டாருக்கு ஏற்றதாக ஒரு ஆசிரமம் அமைக்கக் கருதுகிறோம். இந்தியாவிலிருந்து ஒருநாள் ரமணபக்தர் யாராயினும் இங்கு வருவார்களென்று எதிர்பார்க்கிறோம். பகவான் ஸ்ரீ ரமணருக்கு எனது அன்பும் வணக்கமும் ஆகுக! ஸ்ரீமதி ஒல்காப்ரோப் காப்தேன்,

Mrs. Olga Frobe Kapteyn,
Casa Garbrinella,
Ascona—Tessin,
Switzerland.
31—5—33."

இவ்வாறு ரமண ஸாம்ராஜ்ஜியம் நடக்கிறது.

இந்த மலைவிளக்கு மேனாட்டு மணிவிளக்காக நிலவும் காலம் நெருங்கிவருகிறது.

## தஞ்சம்.

இராகம் - கேதாரம். தாளம் - ரூபகம்.

### பல்லவி.

தஞ்சந் தஞ்சந் தஞ்ச முன்னடி
ஸத்குரு-நாதனே (தஞ்ச)

### அநுபல்லவி.

அஞ்சலஞ்ச லென்றோர் செஞ்சோலா லென்னுளம்
பஞ்சகோ சாதீத ப்ரம்மத்தைக் காட்டினை (தஞ்ச)

### சரணம்.

அத்தனே சுத்தனே யத்யாத்ம போதனே
யானந்த நித்தியனே!
முத்தி வெள்ளமெங்குந் தத்திக் கரையற்று
மூண்டிடுஞ் சிற்சுகனே!
தத்வ மஸியெனு மத்வை தானுபவ
சாட்சிமெய்க் - காட்சியே
சன்மய - வாட்சியே (தஞ்ச)

## ௬௪. சேஷாத்ரி ஸ்வாமிகள்

திறங்கள்பல கொண்டிருந்துந் தெரியக் காட்டார் ;
சேய்போலத் தெளிவுடையார் ; சிந்தை யற்றார் ;
அறிந்துபல வறியாத வூமர் போல்வார் ;
ஆருயிர்க ளனைத்தினிலும் பிரமங் காண்பார் ;
மறந்தேனினு மன்னியமொன் றெண்ணார்; மாய
வலைகளுக்கு நெருப்பன்னார் ; மனத்தைவென்றார்;
நிறைந்தமலை விளக்கென்ன நிலவி யுள்ளே
நின்றநிலை நின்றிடுவோர் ஜீவன் முக்தர்.

காண்பவருக்கு எப்படித்தான் இந்த ஜீவன் இவ்வுடலி லிருக்கிறதோ எனத் தோன்றும். குளிப்பு, தோய்ப்பு எதுவு மில்லை ; ஆடை உடுத்தியபடியே ! உடலையும், அவ்வாறே கனவில் உடுத்திய ஆடைபோன்றே தரித்து உலாவுகின்றார். அவரைக் காண்பதே பெரும் புண்ணியமெனச் சிலர் தேடியலைவர். இவரே 14-1-1929 வரை அண்ணாமலை மண்ணைப் புனிதஞ்செய் துலவிய சேஷாத்ரிஸ்வாமிகள். இம்மஹான் கோயிலுக்கருகில் ஒரு வக்கீல்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். திண்ணையில் அவருக்காக இலைபோட்டு உணவு வைத்திருந்தது. அருகில் ஒரு செம்பில் தண்ணீரும் வைக்கப்பட்டிருந்தது. இது அவரையே குறிப்பாக வணக்கத்துடன் மனமொன்றிப் பார்க்கவே, திண்ணையின் குறட்டில் வந்து குந்தியுட்கார்ந்து கண்களை வலத்தும் இடத்தும் மாறிமாறி விழித்து இதையே ௧௦-நிமிஷம் பார்த்தார் ; அப்பார்வையை சக்ஷூ தீக்ஷை

யென்றெண்ணி இதுவும் அவரையே கண்கொட்டாது பார்த்து, அவர் முன்னே மண்மேதாய ஸாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து நின்றது. ஒவ்வொருவர் மனத்தையும் பார்த்தமட்டில் ஊடுருவி யறியுந் திறன் அவருக்குண்டு. "இத்துணை நாட்கள் புறஞ்சென்று அலைந்தது போதும். தன்னைத்தான் ஈடேற்றிக்கொள்ளாமல் உலகிற்கு ஏதோ ஸாதிக்கப் போவதுபோ லலைந்த வீண்மடமையும், அகந்தையும் இனியொழிந்து, தன்னறிவும், ஆத்மஸித்தியும் வாய்க்க நின்னருளை நாடினேன்! அருணாசலா, பல வடிவுகளில் நீ இலங்குகின்றாய்; எவர் மூலமாயினும் வந்து இவ்வடிமையை ஆட்கொண்டு நடத்து; எங்காயினும் ஓரிடத்தில் இருத்தி இதன் மனத்தைக்கரைத்து உன்மய மாக்கு" என்று எண்ணி யுருகிநின்றது. மறுமுறை ஸ்வாமிகள் கூர்ந்து நோக்கினார். உதடுகள் மலர்ந்தன. வண்டுகள் ரீங்காரம் புரிந்தனவோ, அல்லது மகரயாழிசைத்ததோ எனும்படியான மெல்லிய குரலுடன் "மேலே மேலே போனால் மேன்மையுண்டு" என்று ஐந்தாறு தடவைகள் சொன்னார். உடனே திடீரென்று அவ்வீட்டினுட்சென்று பெண்டிர் இருக்குமிடத்தில் குழந்தைபோன்று வீற்றிருந்தார். வீட்டுக்காரரை, உள்ளேசென்று ஸ்வாமிகளைக்காண உத்தரவு கேட்டதும், அவர் ஸ்வாமிகளிடம் இதைத்தெரிவித்தார். ஸ்வாமிகள் 'வரலாமே' என்று சொல்லியும், மனையுட்புகக் கூசித் திரும்பிவிட்டது. பிறகு ஒருநாள் இரவில் கஉ-மணிக்குக் கோயிலிற் காத்துக்கொண்டிருக்கவே, வந்தார் சேஷாத்ரி ஸ்வாமிகள். அவருக்காக மெத்தை, திண்டு எல்லாம் சௌக்கியமாகப் போடப்பட்டிருந்தது. பால் வைக்கப்பட்டிருந்தது. ஒன்றையும்

கவனிக்கவில்லை. கட்டையைக் கீழே போட்டார். இது சென்று வணங்கிற்று. கண்ணை மூடிக்கொண்டேயிருந்தார். சரி, உறக்க வேளையென்றெண்ணி வெளியே வந்து மஹானின் திருக்கோலத்தைச் சற்றுக் கவனித்துக்கொண்டிருந்ததும், ஒரு இனிய குரல் கேட்டது. இலக்கணப்படி, மோகனத்தில் மூகபஞ்சசதியி னின்று இரண்டொரு செய்யுட்களைப் பாடினார். மனமார தேவியின் துதியைப் பெரியவர் வாக்கினாற் கேட்டுத் திரும்பியது. இன்னும் இச்செவிகளில் அந்த இன்னொலி சுழல்கிறது.

சேஷாத்ரி ஸ்வாமிகள், வடாற்காடு ஜில்லா, வந்தவாசி தாலூகா, வழூரில் பௌரகுத்ஸ கோத்திரரான அஷ்டஸஹஸ்ரப்ராஹ்மணர், சேஷாத்ரிஜோஸ்யர் குமாரர், வரதராஜ ஜோஸ்யருக்கும், வித்வான் காமகோடிசாஸ்திரிகள் குமாரி மரகதம்மாளுக்கும் கலி 4970-சுக்கில௵ தைமீ ஹஸ்தநக்ஷத்திரம் தநூர்லக்நத்தில் ஞானக்கனியாகப் பிறந்தார். இளமையிலேயே பெற்றோர்கள் காலஞ்சென்றுவிட்டதனால், சிறிய தந்தை ராமஸ்வாமிஜோஸ்யர் ஆதரவில் வளர்ந்துவந்தார். தந்தையைப்போலவே மைந்தரும் வடநூற்கலைகளிலும், ஸங்கீதத்திலும் சிறப்புற்றோங்கினார். ௧௪-வயதிற்குள் முதன்மையான வடநூல்களைக் கற்றுத்தேர்ந்து, ஆரியத்தில் தாராளமாகப் பேசும் வன்மையும் படைத்தார். அவர் ஏகஸந்தக்ராஹி. காஞ்சீபுரம் வரதராஜப்பெருமாள் ஆலயத்திலுள்ள சாஸ்திர பாடசாலையிற் படித்து, காவியம், நாடகம், தர்க்கம், மீமாம்ஸை, ஜோதிஷம், வேதாந்தம் முதலிய அனைத்தையும் ௨௦-வயதிற்குள்ளேயே கற்று வித்வானானார். புராணங்களில், முதன்மையாக ராமாயண மஹா பாரதங்களில்

அவர் மிகத் தேர்ச்சிபெற்றார். அருணாசலத்தைத் தாமே படமெழுதி வணங்கிவந்தார். காமாக்ஷியம்மன்மீது அள வற்ற அன்பு மேலீட்டால், இரவில் மூகபஞ்சசதியைச் சொல்லிக்கொண்டே அம்மன் ஆலயத்தைச் சுற்றிச்சுற்றி நெடுநேரம் வணங்கி, நிசியிலேயே வீடுவந்து சேர்வார். கள-வயதில் அவருக்கு வாலைமந்திரம் உபதேசிக்கப்பட்டது. மயானத்தில் நள்ளிரவில் தனியாயிருந்து அவர் சக்தியை மந்திரஜபத்தால் உபாஸித்து வந்தார். சிலவேளை இரவு முழுவதுமே அவர் ஜபத்திற் கழித்துவிடுவது வழக்கம். ஜபத்தால் தீவிரமான தியானம் கைகூடியது. கர(ரு) ஆடிமீ கடைசி வெள்ளிக்கிழமை யன்று, காஞ்சீபுரம் தீர்த்தேச்வரஸ்வாமி ஸந்நிதியில் எழுந்தருளியிருந்த ஒரு கௌடஸன்யாஸி, அவதூதர், பாலாஜிஸ்வாமி களிடம் உபதேசம் பெற்றார். தமது வைராக்கியமான மந்திரஜபத்தின் பெருமையான சக்தி-காமாக்ஷியின் தரிசனம் அவருக்குக் கிடைத்தது. அன்றுமுதல் அவர் முற்றும் வேறொரு மனிதரானார். வீட்டுறவுகளை யெல்லாம் மறந்தார்; சுற்றித் திரிந்து, பலதிறமான மந்திரஜபங்களை ஏகாக்கிரத்துடன் செய்துவந்தார். சுற்றத்தாருக்கு இது சுவைக்குமா? அவர்கள் அவரைக் கண்டபடி நடத்தத் தொடங்கினார்கள். ஒரு காற்கட்டுக் கட்டினால் பையன் ஒழுங்கிற்கு வருவானென்று அவருடைய சிற்றப்பன் மண விணைக்கு எத்தனித்தார்; கட்டிவிட்ட மனமோ மண நுகத்தடியிற் பூட்டுண்ணும்! சேஷாத்ரி வீட்டைத் துறந்து கிளம்பிவிட்டார். பெரியகாஞ்சீபுரம் கங்கை கொண்டான் மண்டபத்திலுள்ள ஆஞ்சநேயர் ஆலயத்தில் ஒரு மண்டலம் மந்திரஜபஞ் செய்தார். ஏகாம்ரேசர்

கோயில் ஆயிரக்கால் மண்டபத்தில் மூன்றுமாத காலம் உன்மத்தர்போ லிருந்து, அருணாசலத்தை தியானஞ் செய்தார். வீட்டோர் அழைத்தும் மறுத்து, சேலம் ஜில்லா காவேரிப்பாக்கத்தி லுள்ள பந்துக்கள் வீட்டில் சென்றுட் டங்கி, திருப்பத்தூர் சென்று ஜவ்வாதுமலை வழியாகக் கால்நடையாய், திருவண்ணுமலைக்கு 1890-ம் ஆண்டு வந்துவிட்டார். அங்கும் உறவினர் வந்து அழுது புரண்டும், திடவைராக்கியத்துடன், தமது தவத்திலேயே பராயண ராகிவிட்டார்! அத்யாத்மச் சுவை சிறிது ஏற்பட்டாலும், அச்சுகாரம்பம் சிறிது தலைகாட்டினுலும், அதுவே தலைசிறந்து மற்றை யபிமானங்களை யெல்லாந் தீக்குமன்றே; அதில் உறுதியுடன் ஊன்றிஞல் அதன்பால் வருந் தடைகளையெல்லாம் அதுவே தடிகொண்டடித்து விலக்கும்.

இராகம் - கல்யாணி. தாளம் - சாப்பு.

பல்லவி

இருந்தபடி யேயிருப்பாய் - உன்வழிக் கேல்லாந்
திருந்தித்தம் மால்வருமே ! (இரு)

அநுபல்லவி

துறந்தப் பற்றினை—நிறைந்ததன் மயத்தினில்
அறிந்துப்ரம்மம் யானேனென்ற—சிறந்த ஸஹஜநிலை (இரு)

சரணம்

மருண்டவுல கின்பாசம்—சுருண்டலை வீசினும்
மாயங்கள் சுற்றிலும்—பேயாட்ட மாடினும்
திரண்டமலை யைக்காற்று—சுரண்டிச்சேல வாற்றுமோ ?
தீரரி னுறுதியைப்—பார்வினை மாற்றுமோ ? (இரு)

## இவ்வுண்மை ஜீவன்முக்தரின் வாழ்வில் நன்கு புலனாகும்

அன்றுமுதல் ௩௯-ஆண்டுகள் சேஷாத்ரி ஸ்வாமிகள் திருவண்ணாமலையில் விளங்கினார். தீவிரமாக மந்திர ஜபத்தைப் பூர்த்திசெய்து ௧௦-ஆண்டுகளில் ஸித்திபெற்றுத் தமது தவசக்தியால் பிறர் மனமறிதல், ஸூக்ஷ்மதிருஷ்டி, பின்வருவதை முன்னே யறிந்து சொல்லல் முதலிய ஆற்றல்கள் இயல்பாக வரப்பெற்றார். எனினும் அவர் பித்தன் போலும், சேய்போலும் பயின்று, எதிலும் பற்றற்று, சுகர், ஸதாசிவப்ரஹ்மம் முதலிய மஹான்களைப் போன்று நிஷ்பிரபஞ்சராய், நிர்விஷயராய், கைவல்யமே உடல் கொண்டு நடந்ததென, உலவிவந்தார்; ஜாதிபேதம், ஆசார நியமங்களைத் துறந்து, சுத்த அதிவர்ணாசிரமி யானார். திருவண்ணாமலைக்கு 1890-ம் ஆண்டு வந்தபோது அவர் வேதம், காவியம், வியாகரணம், ஜோதிடம், ஸங்கீதம் முதலியவற்றில் இணையற்ற வித்வானாக விளங்கினார். சில கவிகளையும் ஆரியத்திற் பாடியுள்ளார். இத்துணை மேதாவியாயிருந்தும் ஏதுந் தெரியாப் பித்தனைப் போலவே வெளிவேடம் பூண்டு, உள்ளே தமது தவக்கனலை ஒளிர வைத்து வந்தார்.

பித்தருட னாமரெனத் திரிவார்—சிறு
பிள்ளையெனப் பெண்டுகளோ டுறைவார்
சித்திக ளிருந்தும்வெளிக் காட்டார்—உடற்
சிந்தையுட னெவ்வினையு மாற்றார்
அத்தனையு முள்ளறிந்து தெளிவார்—எனில்
யாரிடமுந் தந்திறமை யுரையார்
எத்திசையு மெப்படியு மிருப்பார்—முத்த
ரெங்கிருந்துந் தம்முளேதாங் களிப்பார்!

திருவண்ணாமலை நகரத்தில் மகாமாரி பரவி ஊர் காலிசெய்யப்பட்டு, ஒருவரும் உள்ளே வரக்கூடாதென ஸர்க்கார் அமுல் நடந்தது. சேஷாத்ரி மட்டும் தனித்து உலாவவே, அவரைச் சிறையிட்டனர். ஒரு மாதம் ஆனந்தமாகச் சிறையில் வேற்றுமையற் றிருந்த இம் மஹானை யறிந்து, அரசாங்கத்தாரே பின் விடுவித்தனர்.

ஞானி யறிவான் ஞானியின் பெருமை; சேஷாத்ரி ஸ்வாமிகள் புதிதாக வந்த தவராஜனைக் கண்டவுடனேயே அவருடைய தீவிர பக்குவநிலையை யுணர்ந்தார்; ஐந்தை யடைத்தவன், அகத்தை வென்றவன், உண்முகப்பட்டவன், உலப்பறு ஸமாதியன், அரிய பெரிய ஆத்மஜ்ஞானி என்று கண்டு தமது ஞான ஸஹோதரனுக்குத் தம்மால் முடிந்த வுதவி புரிந்தார்; சிறுர்கள் அவர் மீது கல்லும், ஓடும் எறியாதபடி பாதுகாத்தார். அப்போது சேஷாத்ரிஸ்வாமிகளுக்கு சுமார் ௨௭-வயது. பிராமண ஸ்வாமிகளைவிட அவர் ௯-ஆண்டுகள் வயதில் மூத்தவர். 1899-1900-ஆண்டில் பவளக்குன்றிற் சென்று ஸ்வாமிகளைப் பார்த்தார். மலைக்குகையில் வஸிக்கும்போதும் அடிக்கடி சென்று அங்கேயே உணவுங் கொண்டார்.

சேஷாத்ரிஸ்வாமிகள் மஹர்ஷிகளின் தவத்திறனுக்கு எத்துணை மதிப்புவைத்தா ரென்பது அடியிற் காணும் ஸம்பவத்தால் தெரியவரும்:—அன்பும் நன்றியும் மிகுந்து தமக்கு உணவளித்தவர்களுக்கு ஞானவிழியைத் திறக்கவும் அவர் முயன்ருர். 1908-09-ல் சுப்பிரமணிய முதலியார் என்பவர் ஸாதுக்களுக்கு உணவுத்தொண்டு புரிவதே சிறந்த அறமெனச் செய்துவந்தார். பிராமணஸ்வாமிக்கும் சீடர்களுக்கும் தினம் பிக்ஷை செய்வித்தார். காணும்

போதெல்லாம் சேஷாத்ரிஸ்வாமிகளை உபசரித்து வந்தார். சேஷாத்ரிஸ்வாமிகள் எப்படியேனும் முதலியாரை உலகப்பற்றினின்று நீக்கிக் கடவுள்பால் திருப்பவேண்டுமென்றெண்ணினார். 1910-ம் ஆண்டு பிராமணஸ்வாமிகள் மாமரக்குகையி லிருக்கையில், சேஷாத்ரி அங்குச் சென்றார். அப்போது முதலியாரும் இருந்தார். சேஷாத்ரி முதலியாரை நோக்கி, இதோ பார்! எனது தம்பிக்கு (மஹர்ஷிகள்) க0000-ரூபாய் சம்பளம்; எனக்கு க000 ரூபாய் சம்பளம். நீயேன் க00-ரூபாய் சம்பளமாவது பெறக்கூடாது?" என்று மொழிந்தார். சம்பளம் எனில் ஆத்மச் செல்வம். அதே ஸமயம் முதலியாரும் வியாஜ்யத்தில் மூழ்கியிருந்தார். "எனக்கு நேரமில்லை, சாமி; வியாஜ்யத் தொல்லைகளைக் கவனிக்கவேண்டி யிருக்கிறதே!" என்றார். சேஷாத்ரி அவரை வற்புறுத்தி, உணர்ச்சி வரும்படி பேசி, "ஆத்மவித்தை மிக சுலபம்; ஆத்மாவை யறியாதவன் பிரம்மஹத்தி புரிந்த பாவத்தை யடைவான்" என்று இடித்துக்கூறவே, முதலியார் பயந்து பிராமணஸ்வாமிகளிடம் சொன்னார்; அவரும் "ஆம்; தான் பிரம்மமென்று அறியாதவன் பிரம்மஹத்தி செய்ததற்கு ஸமானமானவனே" யென்றார். சேஷாத்ரிஸ்வாமிகள் இப்படி சிலேடையாகவே பேசுவது வழக்கம். மஹர்ஷிகளின் தவமஹிமையை அவர் க0000-ரூபாய் சம்பளத்திற்கு மதித்தது ஈண்டு கவனிக்கத் தக்கது.

சேஷாத்ரிக்கு ஜனக்கூட்டம் பிடிப்பதில்லை. ஆனால் மஹர்ஷிகளிடம் அன்புவைத்தவர்களைக் கண்டால் அவர்கள் மனத்தை யறிந்து கேட்டதற்கு விடை பகர்வார். அடிக்கடி ரமணமஹர்ஷிகளைப்பற்றி வினவுவார். நாம்

முன்னே சொன்ன லக்ஷ்மியம்மாள் மஹர்ஷிகளுக்கு அன்னமளித்துத் திரும்புகையில் "ரமணஸ்வாமிக்குச் சாப்பாடாய்விட்டதா ?" என்று விசாரிப்பார். அந்திப் பொழுதா யிருந்தால் வீடுமட்டும் துணை வருவார். எவருக்கும் அவர் உபதேசஞ் செய்வதை விரும்புவதே யில்லையெனினும், ரமணபக்தர்களுக்குமட்டும் வேண்டிய தைச்சொல்வார். ஒருநாள் லக்ஷ்மியம்மாளின் வேண்டு கோட்படி வேதாந்த மஹாவாக்கியங்களைப்பற்றி அரிய மேற்கோள்களுடன் சுமார் ச-மணிநேரம் விரிவுரை செய் தார். மற்றொரு நாள் வீட்டுள் வந்து, அந்தம்மாளை, "பூஜை செய்வது எதை ?" என்று கேட்டார் ; "ஸ்வாமி, உங்கள் படத்தையும் ரமணஸ்வாமி படத்தையுமே" என் ருள். 'ஏன் தியானம் பழகக்கூடாது?" என்ருர் சேஷாத்ரி. "ஸ்வாமி, தியானம் செய்வது எப்படி ?" என்ருள். உட னே நேராகக் காலை மடித்து உட்கார்ந்து ۩-மணிநேரம் ஸமாதியி லாழ்ந்து, பிறகு "எச்சம்மா, பார்த்தாயா" என்று பல அரிய உண்மைகளைப் புகட்டி அவளுடைய செல்வப் புதல்வியை இழந்த துயரையும் மாற்றினுர்.

மந்திரஜபத்தில் சேஷாத்ரி ஸித்திபெற்று, தமது இஷ்டதேவதையான காமாக்ஷியின் தரிசனங் கண்டவர். தம்மிடம் வருபவரின் பரிபக்குவத்திற் கேற்ற மந்திரத் தை யுபதேசிப்பார் ; ஆனுல் ரமணமஹர்ஷிகளிடம் பற் றுள்ளவரை அவரிடமே தூண்டி யனுப்பி இருவர்க்கும் வேற்றுமை யொன்று மில்லையெனக் காட்டுவார். ஒருநாள் திருச்சுழியினின்று வந்த லக்ஷ்மி என்னும் மாது மஹர்ஷி களுக்கு ஒருவாரம் பிக்ஷை சேவித்தாள். வார முடிவில் "இன்னும் சேஷாத்ரி ஸ்வாமிகளைக் காணக் கொடுத்து

வைக்கவில்லையே" என்று ஏங்கி மலைக்குச் செல்லும் போது சேஷாத்ரி தென்பட்டார்; உடனே லக்ஷ்மியம்மாளின் மனத்தைப் படித்தார். அம்மாள் அவரை வணங்கி "இவருக்கு இன்று பிக்ஷை செய்விக்கக் கொடுத்துவைக்கவில்லையே" என்று மனத்துள் எண்ணினாள். இதையறிந்து சேஷாத்ரி "இங்கே யென்றாலென்ன, அங்கே யென்றாலென்ன?" என்று சொல்லி இருவரும் ஸமம் என்றதை வெளியிட்டார். சேஷாத்ரிகளை ஊரெல்லாம் அலைந்து அரிதாகக் கண்டு உணவு கொடுப்பர் அன்பர். அப்படியிருந்தும் அவர் சிறிது உண்டு, மீதியை வாரியிறைத்துவிடுவார். ஆனால் மஹர்ஷிகளின் அன்பர் பிக்ஷை பெற்று உண்டு வஸிக்கும் மூலமண்டபத்திற்கு வந்து சாப்பிடும் நாட்களில் ஒன்றும் எறியாது சுபாவமாக நடந்துகொள்வார். 1914-ம் ஆண்டில் ஒருமாதம் சேர்ந்தாற்போல் விரூபாக்ஷகுகைக்கு வந்துகொண்டிருந்தார். ஒருநாள் சாப்பிடும்போது, அன்னத்தை வாரி யிறைத்துவிட்டார். அதற்காக ஒருவர், "சாமி, இப்படி யெல்லாம் செய்தால் இனி நான் சாப்பாடு போடமாட்டேன்" என்றாராம். அன்றுமுதல் சிலநாள் சேஷாத்ரி, மஹர்ஷிகளிடம் சாப்பாட்டிற்குச் செல்வதில்லை. இதைக்கண்டு மற்றொருவர் "சேஷாத்ரி ஞானியல்ல; சாதம் இறையக்கூடாதென்றதற்காக ரோசங்கொண்டு மீண்டு சாப்பிட வருவதேயில்லை" என்றார். இதைக் கேட்டதும் சேஷாத்ரி தாம் எறிந்தது ஞாயமென்று ஸ்ராத்த மந்திரத்தினின்று ஸ்லோகங்களை மேற்கோள் காட்டினார். "ஒருவன் தனக்கு வைத்த உணவு முழுதையும் உண்ணக்கூடாது; சுற்றிலும் பசியுடன் பல ஜந்துக்களும், பூதங்களும், பிசா

சங்களும், யக்ஷர்களும், ராக்ஷஸர்களும் எங்குமிருக்கிறார்கள்; அவர்களுக்கும் சிறிது போடவேண்டும்" என்றார். ஒருநாள் சோமசுந்தரஸ்வாமி என்பவர் ரமணாசிரமத்தினின்று விலகி சேஷாத்ரிகளிடம் புகுவதற்காக யோசனை கொண்டு, அவர் இரவில் வந்து தங்கும் கம்பத்திளையனார் கோயிலில் காத்திருந்தார்; சேஷாத்ரிகள் வந்ததும் அவருடைய மனத்தை யறிந்து "போ போ, ரமணஸ்வாமியிடம் உடனே போ" என்று தூண்டி யனுப்பவே, அவர் இரவு ஒரு மணிக்கு மீண்டும் ரமணஸ்வாமியிடம் வந்து சேர்ந்தார். ஒருநாள் ஒரு ரமணபக்தர் பூரணாதியை மிதமிஞ்சிப் புசித்து, மயக்கெடுத்துத் திண்டாடி சேஷாத்ரியின்காலில் விழுந்தார்; உடனே நடந்ததை யறிந்து, "இந்த மருந்தைச் சாப்பிடாதேயென்று நான் முன்னமேயே சொல்லியும் அதை இன்னும்விடாமற் செய்கிறாய்" என்று கண்டித்தார். அவர் முன்னே யொருபோதும் சொல்லவில்லை; ரமணமஹர்ஷிகளே சொல்லியிருக்கிறார். ஆதலின் மஹர்ஷிகள் சொன்னதைத் தாம் அறிந்து, அவர் சொன்னாலென்ன, தாம் சொன்னா லென்ன என்னும் ஸமத்வம் காணும் அரிய குணம் சேஷாத்ரிஸ்வாமிகளிடம் எவருங்கண்டு மெச்சக்கூடியது. பக்குவமடைந்தவர்க்கு ஆத்மா வொன்றெனில் ஆத்மவுறவும் ஒன்றே. அவ்வுறவாலேயே ஒருவர் மனத்தை மற்றொரு ஞானி யறிகிறான்.

"ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்."

மற்றோ ரன்பர் சேஷாத்ரியார் முன்னின்று மஹர்ஷிகளைக் காணவேண்டு மென்று மனத்தி லெண்ணுகையில்,

"மஹர்ஷிகள் தரிசனம் பரம பாவனம்" என்று சொன்னாராம்.

1908-ம் வருஷம் சேஷாத்ரிஸ்வாமிகள் மாமரத்துக் குகைக்கு வந்து மஹர்ஷிகளை உற்றுநோக்கி "இது என்ன நினைக்கிறதோ தெரியவில்லையே!" என்றார். மஹர்ஷிகளின் எண்ணத்தை யறிய முடியவில்லை; மஹர்ஷிகள் மவுனமாயிருந்தார்.

சேஷாத்ரி :— அருணாசலேஸ்வரனை வணங்கினால் அவன் முக்தி கொடுப்பான்.

மஹர்ஷி :— வணங்குவோன் யார்? வணங்கப்படுவோன் யார்?

சேஷாத்ரி:—"அதுதானே தெளியவில்லை" என்று இடியிடியென உரக்கச் சிரித்தார். மஹர்ஷிகள் ஒருமணி நேரம் அத்வைதத்தையும் ஆத்மைக்கியத்தையுங் குறித்துச் சொன்னார். சேஷாத்ரியார் முடிவுமட்டுங் கேட்டு எழுந்து நின்று, "நான் சொல்ல முடியாது; அதெல்லாம் எனக்கு மங்கலாயிருக்கிறது; இருந்தாலும் நான் வழிபடுகிறேன்" என்று சொல்லி அருணாசலத்தை நோக்கி ஸாஷ்டாங்கமாக கடி-நிமிஷம் விழுந்து நமஸ்கரித்துச் சென்றுவிட்டார்.

ஆனால் சேஷாத்ரியாருக்கு அத்வைதத்தில் நல்ல பிரஜ்ஞை யுண்டு; ஒருநாள் லக்ஷ்மியம்மாளுக்கு பகவத்கீதை சொல்லிக்கொண்டிருந்த ஒரு பண்டிதர், தமது வித்யாகர்வத்தால் அங்குவந்த சேஷாத்ரியாரை "இவரைப் பார்; ஏழு ஜன்மம் சென்றாலும் ஞானம் வராது" என்று இடித்துரைத்தார். சேஷாத்ரி பொறுமையுடன்

இதைச் செவியிற் கொண்டு, செல்லும்போதே, " சாப்பிடும் போது எவன் அதை ருசிபார்க்கிறுன் என்றறிந்தால் அவனை (ப்ரஹ்மத்தை) யறியலாம்" என்று சொல்லிப் போனுர். ஒருநாள் சேஷாத்ரி எதையோ வொன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார். அருகிருந்த ஓரன்பர் " எதைப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார். " இதைத் தான்" என்று ஒரு எருமைக்கடாவைக் காட்டினுர் : அந்த அன்பர் " சாமி, எருமைக்கடாவையா பார்க்குது' என்றுர். சேஷாத்ரியார், " அது என்ன சொல்" என் றுர். அன்பர் ' எருமை ' என்றுர். சேஷாத்ரியார் " எரு மையா, எருமையா, எருமை! ப்ரஹ்மம் என்று சோல்" என்று சொல்லிச் சென்றுர். ஒருமுறை " திருவண்ணு மலையில் மூன்று லிங்கங்கள் இருக்கின்றன. ஒன்று ஜோ திர் லிங்கம்; மற்றொன்று ரமணஸ்வாமி; மற்றொன்று சேஷாத்ரி" என்று சொன்னுர். மற்றொரு முறை ஓரன்ப ருக்கு " ஐயையோ குழந்தாய்! ஏன் மனத்தைப் புண் படுத்திக் கவலைப்பட வேண்டும்? ஞானம் ஞான மென்று லென்ன? எவை எவை அநித்திய மானவைகளோ, அவை களை யெல்லாம் புத்தியால் நீக்கி, எது நீக்கமுடியாமல் மிஞ்சுகிறதோ அதுதான் ஞானம். அதுதான் தெய்வம்; எல்லாம் அதுதான். மலையிலே போனுல்தான் ஞானம் வரும், குகையிலே போனுல்தான் ஞானம் வரும் என்று, அங்குமிங்கும் அலைவது பைத்தியந்தான். பயப்படாதே, போ" என்று சொல்லிச்சென்றுர்.


சேஷாத்ரிஸ்வாமிகள் 14-1-1929-ல் மஹாஸமாதி யடைந்தார். அன்று நாற்றிசையிலிருந்தும் திரள் திரளாக அன்பர் வந்து அவருடைய ஸமாதியைத் தரிசித்தனர்.

மஹர்ஷிகளும் ஒருமணி நேரம் இருந்து ஸமாதி வைபவத்தைக் கவனித்தார். ஆத்மஸித்தர்கள் பரஸ்பரம் எப்படி அறிந்து அன்பு பேணுகிறார்களென்பது சேஷாத்ரி ஸ்வாமிகளின் உதாரணத்தால் விளங்குகின்றது.

ஞானப் பொருளொன்றே ஞானிகளு மொன்றேயாந்
தானேதா னெல்லாமுந் தாம்.

ஸ்ரீ ரமணவிஜயம்

யோகஸாம்ராஜ்யக்காண்டம் முற்றிற்று.



யானாரென் றோர்ந்தறிவிற் றானான வானந்தக்
கோனா லயமிதெனக் கோள்.

சத்திக் கதிர்விரிந்து தாரணியுன் சங்கமதாய்ச்
சித்தக் கதிரே சிற.

சுத்தானந்த பாரதியார் எழுதிய

# ஸ்ரீ ரமண விஜயம்

## ரு. ரமணாசிரமக்காண்டம்

உள்ளபொரு ளுள்ளபடி யுள்ளதனி லுள்ளவிட
முள்ளுறவி லொன்றுபடவே
யுண்மையறி வின்பவொளி யொருகோடி பகலென்ன
வொளிவீசு தவ்வொளியெலாந்
தெள்ளறி வளித்தகுரு சின்மயா னந்தனே
தீபவழி பானெக்கே
தேசுபெறு மோனத்தி லேகாந்த நிலைதந்த
தேசிக சிகாரத்நமே !
அள்ளிக் கலந்தென்னை யன்பிற் கரைத்தபர
மானந்த வருள்வெள்ளமே !
அகமாயை யந்திரச் சுழலினின் றடியனை
யகற்றிய தயாமூர்த்தியே !
துள்ளிக் குதித்தமன முள்ளுற வடக்கினையோர்
சுண்டுநே ரந்தன்னிலே
சுத்தபரி பூரண ஸுகானந்த வாரியே
துரியநிறை வானபரமே !



திருஞான ஸூரியனைத் தேசிகனை யீன்றாள்
அருளா ரழகம்மை யாம்.

# ௫. ரமணாசிரமக்காண்டம்

## ௧௫. தாயன்பு.

"கொடுத்தேனே யென்னைக் கொடுத்தவுட னின்ப
மடுத்தேனே நீடூழி வாழ்ந்தே—யடுத்தேனே
பெற்றேனே பெற்றுப் பிழைத்தேனே சன்மவல்ல
லிற்றேனே யேழையடி யேன்."

பகவான் சைதன்யர் தமது ஆவியினும் அன்பு வைத்த தாய் ஶசிதேவியையும், நவ்விள மனைவி விஷ்ணுப்பிரியையையும், விடுத்து இரவில் வீட்டை நீத்துக் கேசவ பாரதியிடம் ஓடிச்சென்று துறவு பூண்டு கிருஷ்ணவிரகத்தில் தம்மை மறந்து, பிருந்தாவனத்தை நோக்கினார்; இதைக் கேட்ட தாயார் ஆறாத்துயரில் ஆழ்ந்தினாள். ஆனால் சைதன்ய பகவான் தமது தாயின் மனத்தைப் பரிபக்குவப்படுத்திக் கண்ணன்பால் பலமாக இழுத்து நிலைப்பிக்கவே மனங்கொண்டார். கண்ணனின் காதலில் தம்மை மறந்து தட்டுத்தடுமாறி விழுந்தெழுந்து பிருந்தாவனம் செல்லும் சைதன்யரை சிஷ்யர்கள் இதுதான் பிருந்தாவனம் என்று ஏமாற்றி, சாந்திபூருக்குக் கொண்டுவந்தனர்; "ஸ்வாமி, தாங்கள் இருக்குமிடமெல்லாம் பிருந்தாவனமன்றோ" என்று அதற்கு ஸமாதானஞ் சொன்னார்கள். சைதன்யர் வந்த செய்தி உடனே தாயாருக்கு அறிவிக்கப்பட்டது. தாயாரைப் பல்லக்கில் அழைத்து

வரச் சொல்லிச் சைதன்யரும் உத்தரவிட்டார். ஆயிரக் கணக்கான அன்பர்கள் புடைசூழ்ந்து மலர் தூவி ஹரி நாமஞ் செய்ய, அவர்களுக்கிடையே கம்பீரமாக உதய சூரியனைப்போன்று ஆயிரம் மின்னல்களையே திரட்டி யுருச் செய்யப்பட்டது போன்று மிளிரும் தன் மைந்தனைக் கண்டதும், ஸசிதேவியின் மடமைத்துயர் பறந்துபோயிற்று. சைதன்யர் ஓடிவந்து அன்புடன் தாயைப் பணிந்தார். மைந்தன், "அம்மா, யான் ஏதேனும் பிழைசெய்தேனோ? உன் மனப்படியே இப்போதும் நடக்க ஸித்தமாயிருக்கிறேன்" என்றான். ஸசிதேவியின் மனம் சைதன்யரைக் கண்ட மாத்திரத்தில் பக்குவப்பட்டது. "என் உயிர் போனாலும் உனது ஆத்ம முன்னேற்றத்தைத் தடுக்கமாட்டேன்; என் மைந்தன் என்னை நம்புகிறான்; அவனுடைய தாயார் அவனது இன்பவழியிற் குறுக்கிடமாட்டாள் என்பது உறுதி" என்று சொன்னாள். "அன்னை எனக்கு எங்கிருக்க உத்தரவிடுகிறாள்" என்றார் சைதன்யர். ஸசி தேவியானவள் "ஜகந்நாதமே தக்க இடம்" என்றாள். சைதன்யர் "அன்னையின் சித்தமே எனது நெறி; அவளிடம் உலகம் பாடங் கற்கவேண்டும்" என்று சொல்லித் தாயின் உத்தரவுப்படி ஜகந்நாதத்தையே தமது உறைவிடமாகக் கொண்டார். இப்படித் துறவு பூண்டாலும் பெரியோர்கள் தாயைப் போற்றியுள்ளனர். ஆனால் மஹர்ஷிகளைப் போன்று படிப்படியாகத் தாயைப் பக்குவப் படுத்தி இயல்பான துறவறத்தி லுய்த்து ஈடேற்றியவர்கள் உலகில் மிக அரியரே. ப்ரஹ்மநிர்வாண மடைந்த பெரியோர்கள் பாலில் வெண்ணெய் மிதப்பதுபோல உறவினரிடையும் உறவு கலவாதிருப்பர். அவர்களுக்கு உலகு

வேறல்ல ; தன்னின் வேறொரு பொருளில்லை ; அனைவரும் தன்மயமே. நீரில் தாமரையும், சேற்றில் மீனும், கடலிற் படகும்போல அவர்கள் எவ்விதப் பற்று மின்றி, உலகி னும் ஸஞ்சரிப்பர் ; அவர்களுக்குச் செய்யவேண்டிய காரியம் இங்கொன்று மில்லை. காரியம் செய்யினும் செய்யாமைக்கு ஸமமே. ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தமது மனைவியருகில் வஸித்தபோதும் தாயான ஶக்தி யுடன் வஸித்ததுபோலவே யுணர்ந்தார். அவர் உலகு சூழ வஸித்தும், உலகு அவருள் வஸிக்கவில்லை. தமது தாயும் தம்பியும் உடனுறையப்பெற்றும், பகவான் மனத்தில் தாய், தம்பி, சுற்றம், நண்பர், பகைவர் என்ற உணர்வு சிறிது முண்டோ ! உலகிற்கு இவ்வரிய பற்றற்ற வாழ்வின் பண்பை பகவான் தமது உதாரணத்தாலேயே காட்டினார்.

பாரேல்லாஞ் சூழ்ந்திடினும் பற்றற்று வாழ்ந்திடுவோர்
யாரேல்லா மேன்றறிந்தோ ராங்கு.

## தம்பி வருதல்

1900-ல் திருவண்ணுமலையினின்று மானுமதுரைக்குத் திரும்பிவந்த நாகசாமி காலகதியடைந்தான். அழகம்மை எதைதன்மீது அபிமானங்கொண்டு இன்னும் உலக வாழ் வில் ஒட்டிக்கொண்டிருந்தாளோ அதெல்லாம் வரவர உதிர்ந்து, உலகின் அநித்தியப்பாழை விளக்கியது. 1902-ம் ஆண்டு நாகசுந்தரம் (அப்போது அவருக்கு சுமார் கசு-வயது) தனது அண்ணனைப் பார்க்க ஆவலு டன் திருவண்ணுமலைக்கு வந்தான். அண்ணல் ஸத்குரு ஸ்வாமி குகையில் இன்னும் வாய்திறவாது ஸமாதியி

லாழ்ந்திருக்கிறார். அண்ணலின் வீர வைராக்கியத்தையும் உடலறியாத் தவத்தையும் உற்றுநோக்கித் தம்பியின் இளகிய மனம் கண்ணீருகுத்தது. அந்தக் காக்ஷியை, பரதன் ராமனைக் காட்டில் மரவுரியுடன் கண்டு உருகிய காட்சிக்கே ஒப்பிட்டுணரவேண்டும். ஆடையின்றி, அயலின்றி, அருஞ்சுவையின்றி இந்த மலையில் தன்னந்தனியே இருக்கும் அண்ணனைக் கண்டு மனம் பொறுதவனாகி, அண்ணன் புனைந்த வேடத்தைக் கண்டு,

" அயாவுயிர்த் தழுகணீ ரருவி மார்பிடை
யுயாவுறத் திருவுள முருகப் புல்லினன்."

ஸ்வாமிகள் புன்னகையுடன் அமைதியாகவே யிருந்தார். அவருக்குத் தன்னைத் தவிர அண்ணன், தம்பி, தாய், தகப்பன் என்பதேது? தான் ஸ்வாமிகளுடன் இருந்து பணிவிடை செய்யலாம் என்ற நோக்கத்துடன் உத்தரவு கேட்டான். அதற்கும் அண்ணல் அசையவில்லை. தன்னலவுறவுடன் ஒரு கற்கண்டுப் பொட்டலத்தைக்கூட ஆசிரமத்திலிருந்து தம்பி எடுக்க முடியாமற் செய்தார் நமது நிராசைப்பெருமான்! உறவினரின் பாச வபிமானம் சற்றும் தம்மைச் சூழாது அனைத்தையும் மோனயுதத்தாற் சிதைத்தார்.

## அழகம்மை வருதல்

அழகம்மாளும் உறவினரும் அடிக்கடி ஸ்வாமிகளை வந்து பார்த்துச் செல்வதுண்டு. அம்மாள் காசிக்குப் போகும்போது ஒருமுறை வந்து பார்த்தாள். இந்தத் தவநிதியைக் கண்ட பிறகு காசி செல்வது வீண் என்பதையறியாள்! இந்த இமயஜோதியினின்று பாயும் ப்ரஜ்ஞ

மாகார கங்கையை யுணராள்! இச் செல்வத்தை யீன்ற வளுக்கு வேறென்ன தவம் வேண்டும்!

"வீர மகனையே யீன்றெடுத்த மெல்லியட்கு
வேறுதவ மேனோ விளம்பு?

எனினும் இன்னும் ஸ்வாமிகளைத் தனது வேங்கடராமனே என்று எண்ணியிருந்தாள். 1914-ம் ஆண்டு திருப்பதி வேங்கடரமணஸ்வாமியைத் தரிசித்துத் திரும்பும்போது திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் வேங்கடரமண ஸ்வாமியைப் பார்க்கப் பிள்ளைப் பாசத்துடன் வந்தாள். அங்கு கொடிய காய்ச்சல் தாக்கியது; அம்மாள் வருந்தினாள். மஹாயோகியான மகன் இப்போது என்ன செய்தார்? அம்மாளைப் பரிவோடு மிக்க அன்புடன் பேணி, தாயை எப்படி ஒரு உத்தம மைந்தன் பேணுவானென்பதை உலகிற்குக் காட்டினார். இரவும்பகலும் தாயாரருகே வீற்றிருந்தும், சிகிச்சை செய்தும், சுரம் முற்றிக் கவலைக்கிடமானது. உலகோர் பைத்தியங்கொண் டலையும் வைத்தியமும் வேண்டுமட்டும் பார்த்தாய்விட்டது. நோயே மிகுந்தது. உடனே பவப்பிணியைத் தீர்க்கும் அகில வைத்திய நாதனை அருணாசலனையே தநயன் துணைவேண்டினார். நான்கு அரிய வெண்பாக்களை யருளி, "அருணாசலா, என்னன்னையைக் காக்க உன்னினும் யாரே!" என்று உருகினார். அவ் வெண்பாக்கள் அடியில் வரும் பொன் வாக்குகளே:—

க. அலையா வருபிறவி யத்தனையு மாற்ற
மலையா யெழுந்த மருந்தே—தலைவாநின்
ருள்கதியாய் வாழுமென் ருய்தாப மாற்றியே
யாள்வதுவு முன்கடனே யாம்.

உ. காலகா லாவுன் கமல பதஞ்சார்ந்த
பால னெனையின்றுள் பாலந்தக்—காலன்றன்
வாரா வகையுன்கால் வாரிசமே காட்டுவோ
யாராயிற் காலனுமே யார் ?

ங. ஞானங்கி யாயோங்கு நல்லருண வோங்கலே !
ஞானங்கி யாலன்னை நல்லுடலை—ஞானங்க
மாகச்செய் துன்பதத்தி லைக்கியமாக் கிக்கொள்வாய்
சாகத்தீ மூட்டுவதேன் சாற்று.

ச. மாயா மயக்கமதை மாற்றருண மாமலையென்
றுயார் மயக்ககற்றத் தாமதமேன்—றுயாகித்
தன்னையடைந் தார்வினையின் றுக்கறுத்தாள் வாருலகி
லுன்னையலா லுண்டோ வுரை !

அழகம்மைக்கு அருணாசலன் உடல்நல மீந்தான். அம்மையாரும் உடனே மானாமதுரைக்குச் சென்றார். இவ்வெண்பாவிலேயே அன்னையாரின் வருங்கால வாழ்வும் பொதிந்துள்ளது; “என்னன்னையை உனது ஞானக்கனலால் ஞானங்கியாகச் செய்து உன் பதத்திலேயே ஐக்கியப்படுத்திக்கொள். சாகத்தீ மூட்டுவதேன்? தீவாய்ப்படாது ஸமாதியிற் கூட்டு” என்னும் வாக்கே பின்பு பலித்தது.

## ஞானமகனே கதி

மானாமதுரையில் குடும்பநிலை வரவர மனத்தைத் துயரென்னும் தீயி லுருக்கித் துறவென்னும் மாற்றேற்றியது. தனக்குக் காப்பாயிருந்த நெல்லையப்பய்யர் பெரிய குடும்பத்தை விட்டு உடற்சட்டையை உதிர்த்தோடினார். நாகசுந்தரத்தின் மனைவியும் ஒரு ஆண்மகவை விட்டு உலகினின்று விடைபெற்றுக்கொண்டாள். அழகம்மாளுக்கு

வேறுகதி யில்லை; தன் ஞானமகனே கதியெனத் தோன்றியது. குடும்பத்தில் மனமற்று, ஞானத்துறவியான மைந்தன் ஸந்நிதியி லிருக்க மனவுறுதி பூண்டு, அழகம்மை 1916-ம் ஆண்டு திருவண்ணுமலைக்கே வந்து சேர்ந்தாள். முதலில் லக்ஷ்மியம்மாள் வீட்டில் தங்கி மஹர்ஷிகளுடன் ஆசிரமத்திலேயே வஸிக்க முயன்ருள். முதலில் இதற்குச் சிறிது எதிர்ப்பு இருந்தது. உறவினர் நெருங்கிஞல் ஸ்வாமிகள் ஒருவேளை இடரென்று வேறெங்கேனும் சென்றுவிடுவாரென்றும் சிலர் அஞ்சினர்; இப்போது எந்த உறவினரும் அல்லிபோன்று மிதக்கலாமேயொழிய உப்புப் போன்று கரையமுடியாது என்பதை யறிந்திலர். வயது சென்ற தாயாரைக் காக்கவேண்டியது துறவியின் கடனுமாகும். மேலும் உலகிற்கு வழிகாட்ட இயல்பாகவே எழுந்த பெரியோர்கள் தமது உதாரணத்தால் அன்னையைப் பேணுவதெப்படி யென்றும் காட்ட வேண்டியதன்ருே! மனைவியுடன் நிஷ்காம்யவுறவு பூண்டு வஸிக்கலாம் என்பதை ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காட்டிஞர். தாய், தம்பியோடு எப்படி மனத்துறவுடன் வஸிக்கலாம் என்பதை மஹர்ஷிகள் இன்று காட்டிஞர். மெல்ல மெல்ல, அழகம்மை விரூபாக்ஷகுகையைத் தன் இருப்பிடமாக்கிக்கொண்டாள். அம்மையாரின் அரிய குணங்களும், பெருந்தன்மையும், தூய வாழ்வும், இனிய மொழிகளும், சுற்றிலுமிருந்தவரை மகிழ்வுறுத்தின. ஆசிரமத்திற்குவந்த பக்தர்களை முகமலர்ந்து அம்மை அறுசுவை விருந்தால் உபசரிப்பாள்; இளமைமுதலே விருந்தூட்டிச் செழித்த செங்கையன்ருே அம்மையாரது கை! இனிய வேதாந்தப் பாடல்களால் ஆசிரமக்காற்றைப் புனிதப்படுத்துவாள்.

அம்மையார் அன்று மூட்டிய அடுப்பு இன்னும் ரமணாசிரமத்தில் வேதவேள்வித்தீப்போல வளர்ந்து வைஶ்வாநரயஜ்ஞம் செய்துவருகிறது. மஹர்ஷிகளைவிடத் துறவியில்லை; ஆனால் அவருடைய ஆசிரமத்தை நோக்கினால், பற்றற்ற கிருஹஸ்தாசிரமமாகவே யுள்ளது. இந்த கிருஹஸ்தாசிரமம் தனக்கு வெளியே நடக்கிறதேயொழிய, அங்குள்ள எவருள்ளத்தும் இல்லை.

சிலநாட்கள் கழித்து நாகசுந்தரமும் ஆசிரமத்திற் சேர்ந்து, துறவறந் தரித்து நிரஞ்சனானந்தஸ்வாமிகளென்னும் தீக்ஷாநாமம் பூண்டான். ஆசிரமத்தைப் பொறுப்பாக கட்டுச்செட்டாக வந்ததை நிரப்பி, இவரே இன்றும் ஸர்வாதிகாரியாகத் திறமையுடன் நிர்வகிக்கிறார். மஹர்ஷிகள், நாள்தோறும் கூட்டங்கூட்டமாக வரும் அன்பர்களுக்குச் செய்யும் உபதேசப்ரவாகம் செவிவழியே பாய்ந்து மனத்தைப் புனிதஞ்செய்து பக்குவப்படுத்தவே, அழகம்மையாருந் துறவுபூண்டு காவியுடுத்தினர். முன்னே பவளக்குன்றில் பாசவன்புடன் பிள்ளையை வீட்டிற்கு வர வற்புறுத்திய அன்னைக்கும், இன்று துறவறம் பூண்டு, தேக வாஸனைகளை யொழித்து, ஆசிரமத்தில் அன்புடன் தன்னலமற்ற பணி செய்து இன்புற்றிருக்கும் அன்னைக்கும் எவ்வளவு தூரம்! ஆண்டவன் சித்தம் பாசவன்மைப் படியேற்றிப் பதியன்பிற்கு உயர்த்தியது.

களிம்புகோள் செம்மைக் கனகமய மாக்கும்
எழுஞ்சுடர் ஞானத் தியல்பு.

## அம்மையின் இறுதிநாட்கள்

இறுதி மூன்றாண்டுகளில் உடல் அடிக்கடி நோயுறினும், அழகம்மையார் மனநோயற்று மகிழ்வுடனே யிருந்

தார். மஹர்ஷிகள் தமக்கு உறும் உடல் நோயைக் கூடக் கருதுவதில்லை. பிறர் நோயைத் தாம் உணர்ந்து, இரங்கிக் கவனிப்பது வழக்கம். அதுபோலவே தாய் நோயுற்ற போதும் கவனித்து வந்தார். இளமையில் தாய் மகனைப் பாதுகாத்தாள்; தாயின் முதுமையில் அவளை மகன் தாய் போலப் பாதுகாத்தான்.

"இளமையிற் பெற்றோ ரியலா முதுமை
மூளைபெற்றோன் போலு முறை.

### ஸ்கந்தாஶ்ரமம்

விரூபாக்ஷ குகையிலிருந்து மேலே ஸ்கந்தாஶ்ரமம் என்ற ரமணீயமான இருக்கைக்கு ரமணாசிரமம் இப்போது மாறியது. உன்னதமான மலையுயரத்தில் அவ்வளவு ஸௌகரியமாக ஸ்கந்தாஶ்ரமம் கட்டப்பட்டதும் ஒரு ஆச்சரியமே. கட்டிட சாமான்க ளெல்லாம் கீழிருந்தே மேலே சென்றன. சிறுசிறு குஞ்சு குழந்தைகள் கூட அப்போது பிராமணசுவாமிக்கு செங்கல் தூக்கிக்கொண்டு மலைமீதேறிக் கட்டிடவேலைக்கு உதவின. வேலை அதுவாக நடந்தது. இந்த ஆசிரமத்தில் ரமணஸங்கம் ஆனந்தமாக வாழ்ந்துவந்த நாட்களிலே, அழகம்மையாரின் உடல்நலம் குலைந்தது.

### அழகம்மையார் மஹாஸமாதி

துந்துபிவருடம் வைகாசிமாதம் (மே, 1922) பிணி முற்றியது. மஹர்ஷிகள் பக்கத்திலேயே இரவும் பகலு மிருந்து அன்னைக்கு வேண்டிய சிகிச்சை செய்தார். மருந்தும், மனிதனும் செய்யவேண்டிய செயற்கைவைத்திய மெல்லாம் செய்தாயிற்று! இனி இயற்கையின் செயல்

நடந்தே தீரும். சட்டை மிகவும் பழமையுற்று இற்றுப் போனதால், அதைக் கழற்றி யெறிந்து ஜீவனைப் பழஞ் சிறையினின்று விடுவிக்கவே இயற்கை இரக்கமுற்றாள். மஹர்ஷிகள் கண்கொட்டாது அன்னையின் மார்பில் வலது கையும், தலையில் இடதுகையும் வைத்துக்கொண்டே உட் கார்ந்திருந்தார். இதன் பொருளென்ன? தமது தாயின் இதயகமலத்திலும் உச்சிக்கமலத்திலும் பகவான் கையை நாட்டி ஹஸ்ததீக்ஷை செய்து, தமது யோகசக்தியைப் பாய்ச்சித் தாயின் மனத்தைப் பழுக்கவைத்து, அன்னை மாத்ருபூதேஶ்வர ராக்கவே அப்போது இச்சை கொண் டார்போலும்! தம்மைப் பாலூட்டி வளர்த்த மார்பகத்திற் குத் தம் அருட்கரத்தால் யோகசக்தி யூட்டினார்போலும்!

நடப்பழுக்கும் யோகஸித்தி ஞானிகளின் செங்கை
தோடப்பழுக்கு முத்திச் சுடர்.

மேல்மூச்சு இழுக்கிறது! தசேந்திரியங்களும் நாடிக ளும் பூதங்களும் ஒடுங்கி ஜீவன் வீட்டைவிட்டுக் கிளம்ப மார்புக் கூடத்திற்கு மூட்டை கட்டிக்கொண்டு வந்துவிட் டான். அங்கிருந்தவர் ஜீவனுக்கு வழித்துணையாக ராம நாமாமிருதத்தை ஊற்றி யூற்றி அன்பில் நிறைத்துக் கொடுக்கின்றனர். வேதம் முழங்குகிறது; இன்னும் பல நல்லிசைகள் மேல்மூச்சைத் தமது புனித வொலியிற் கரைக்கின்றன. பகவான் தனது மலர்க்கரத்தை உள் ளத்தில் நாட்டிக்கொண்டிருக்கிறார். ஆம்! ஆம்! பார்ப் போருக்கு பகவான் மலர்க்கரம் சாதாரண மனிதர் கை போலத் தோலும் எலும்புமாகத் தோன்றும். ஆனால் யோகிகளுக்கோ அதனின்வற்றாது வழிந்து கொண்டிருக்

கும் சிற்சக்தி கங்கை உணர்வாகும். உதாரணமாக பகவா னிடமிருந்து புதுச்சேரிக்கு இது (இந்நூலாசிரியர்) விடை பெற்றுக்கொள்ளும் போது பேரீச்சம்பழம் நிவேதித்துச் சிறிது பிரசாதம் திருக்கரத்தால் அருளும்படி கேட்க "எடுத்துக்கொண்டு போம்" என்று தனது திருக்கரத் தால் அவர் வலக்கரத்தை தீண்டினார். ஆ! உடனே தீப் பெட்டியால் உரசிய தீக்குச்சிபோல இதன் கரத்தில் ஒரு கனலுணர்வு உள்ளே பாய்ந்து உடலெங்கும் சுழன்றது. அக்கனல் அழியாத அன்புக்கனல்! நிற்க, தாயார் மார் பைத் தனது யோகசக்திக் கரத்தால் தொட்டுக் கொண் டிருந்தபோது, அக்கர சக்திக்கும் எங்கேயோ சொப் பனம்போல் அவளை இழுத்துக்கொண்டு போய்க் கொண் டிருந்த சக்திக்கும், விழிப்பும் கனவுமாக ஒரு போராட் டம் நடந்து கொண்டுவந்து, வரவர அச்சொப்பன சக்தி அடங்கிக்கொண்டே வந்து இறுதியில் அஜ்ஜீவ வியக்தி (பிராணசக்தி) உள்ளேயே ஒடுங்கிக்கலந்துவிட்டது. முற் றும் தற்போதமிழந்து, தூலம், வீரியம், மனங்கடந்து தூங்காமல் தூங்கும் ஒரு சிற்சுகவுலகில் உலவி, கனவு கண்டொடுங்கியது போல் வல்வினை வாழ்வின் மாயைப் படலங்களெல்லாம் ஒடுங்கி ஒரு சுத்த சத்வநிலையில் உள் ளேயே ஜீவன் ஒளிமயமாக வந்தடங்கிவிட்டது. ஜீவன் எவ்விதமாகக் கிளம்புகிறதென்று பகவான் விழிகள் நன்கு காணமுடியும். எல்லாரும் அடங்கி சுற்றும் அமைதி நிலவும் சமயம் ஜீவராஜன் நவத்வார புரியை விட்டு, மனப்புரவியில் சங்கற்ப சஞ்சியிலடைத்த வினைச் சரக்குகளுடன் அவரவர் வினைகளுக்குத் தக்க துவாரங் களில் ஏதோ ஒன்றின் வழியாய் வெளியேறுவான்.

இப்படி இவ்வினையுடலில் சுகதுக்கங்களை யுண்டுழலும் ஜீவராஜன் விடுதலை பெறுதற்கு இயற்கை ஒன்பது வாயில்களை அமைத்துள்ளது. பழனிசாமியின் உயிர் கண் வழியே வெளியேறுவதை பகவான் கண்டார். ஆனால் அம்மையார் ஜீவன் உள்ளேயே ஒளிமயமாய் அடங்கியது அதிசயமே. 19-5-1922-நவமி இரவு அ-மணிக்கு ஹம்ஸினி அழகம்மையார் மஹாஸமாதி பெற்றார்.

ஆ! இப்படி உலகில் பரிநிர்வாண மடைந்த ஆத்மாக்கள் எத்தனை! மிக மிக அரிதே. ப்ரஹ்மபூதனை தனது மகன் தன் இதயகமலத்திலும், ஸஹஸ்ராரத்திலும் யோக சக்திக்கரத்தை நாட்ட, புனிதவேதங்கள் எங்கும் முழங்க, துறவறத்துடன் வீடடைந்த பேறு அழகம்மை யொருவர்க்கே உலகில் வாய்த்தது! தாயார் சுவாஸமிருக்கு மட்டும் மஹர்ஷிகள் ஜலபானஞ் செய்யவில்லை; காரியம் ஆனவுடன், "இனிநாம் சாப்பிடலாம், வாருங்கள்; தீட்டுமில்லை ஒன்றுமில்லை" என்று சீடர் கணங்களுடன் உணவுகொண்டார். இற்றவுடலிலிருந்து பிணியால் வருந்திய ஜீவன் இம்மட்டும் சுகபதவி யடைந்தது மகிழ்வே. மஹர்ஷிகள் ஸந்தோஷமாயிருந்தார். இரவு முழுதும் பாட்டு முழங்கியது. மனம் வானம்பாடிபோல விடுதலை பாடியது; தாய் இறந்து தநயர் பாட்டு முழக்குவது சிலருக்கு விநோதமாகத் தோன்றலாம். அவர்கள் சாவின் மருமத்தை யறியாதவர்களே. சாவென்பதென்ன?

புதுமெய் வருமகிழ்வே போன்றலி லல்லா
லேதுவெகுளிக் கேசோல் லிடம்?

பிறப்பிறப்பென்பது மனிதான்ம பரிணாமத்தில் இயல்பாக வந்தே தீரும் நல்ல ஸம்பவங்களே யாகும். சாவது

எது? எவ்வளவு நாம் கவலை கொண்டாலும் அணுவணு வாக இளமையினின்று முதுமைக்கு அழிந்துகொண்டே சென்று முடிவில் எது விழுகின்றதோ அந்த உடற்சட்டையே சாவது. அது வீழ்ந்தே தீரும். தேகம் பிறந்த வாறே இறந்து மண்ணாகியே தீரும்; ஆனால் எதனாலும், வாளாலும், தீயாலும், பேயாலும், பிணியாலும் கெட்டுச் சாவாததொன்று மனிதனுக்குள் உள்ளது. அதையொட்டியே மனிதன் இருப்பது. அதுவே அனைத்தும்; அதன் நிழலே வாழ்வு! அந்த நித்தியப்பொருள் இப்போது முக்திபெற்று பந்தவிடுதலை யடைந்து சுகமடைந்தது. இதற்கு மாரடிப்பும், ஒப்பாரியும், தலைவிரிகோலமும், கொட்டும், ஆட்டமும், அலமரலும் எதற்கு? அப்படிச் செய்வது முழுமடமையே!

மாரடிப்பு வேண்டாம்; மகிழ்மினோ விட்டுடலைப்
போரொழிந்து போனவுயிர் போற்றி!

## மாத்ருபூதேஶ்வரர்

பிறகு நடந்த கிரியைக்காட்சிகளுக் கெல்லாம் மஹர்ஷிகள் சாக்ஷிமாத்திரமா யிருந்தார்! கணபதிமுனிவர் மாமரத்துக் குகையினின்று வந்தார். உறவினரும் தந்தியடித்து வரவழைக்கப்பட்டனர். துறவியான அழகம்மைக்கு ஸமாதி ஏற்பாடு செய்யப்பட்டது. மஹர்ஷிகள் ரமணகீதையில் அவ்வாறே உபதேசித்துள்ளார். சிஷ்யர்கள் அழகம்மையி னுடலைச் சிறப்புட னலங்கரித்து, பல வைபவங்களுடன் பலாக்கொத்திற் கருகி லுள்ள பாலி தீர்த்தத்திற்குத் தாங்கிச் சென்றனர். கும்பல் கும்பலாக அன்பர் மஹாஸமாதித் திருவிழாவிற் கலந்து

கொண்டு அதைச் சிறப்பாக நடத்தினர். அன்பர்கள் மனைபறித்து அழகம்மையின் பழுத்த புனிதப் பூமேனியை அடக்கஞ்செய்தனர். விபூதியும், உப்பும், கற்பூரமும், சாம்பிராணியும் வேண்டுமட்டும் குவித்துமூடி அதன் மேல் கட்டிடம் எழுப்பி, அதில் ஒரு லிங்கத்தை நாட்டினர். அதுவே இப்போது மாத்ருபூதேஶ்வரர் என்று கோயில்கொண்டிலங்குவது. நிரஞ்சனானந்த ஸ்வாமிகளின் இணையற்ற அன்னை யன்பு அதை அபிஷேகம், தூபதீப நிவேதனம், அஷ்டோத்தரங்களுடன் நாடோறும் வழிபட்டு வருகிறது. ஆண்டுதோறும் அழகம்மையார் மஹாஸமாதி யடைந்த தினம் ரமணபக்தரால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ரமணாசிரமமும் 1922-நவம்பர் முதல் அங்கேயே வந்து நிலைத்து நாடோறும் புதுப்புது அன்பரைப் பெற்று விரிந்தோங்கி வருகிறது. ரமணாசிரமம் அமைப்பதற்குப் பல அன்பர்கள் பலவாற்றானும் உதவி புரிந்தனர். அழகம்மை சக்திவடிவமன்றோ! ரமணாசிரமம் சக்திபெற்றோங்கி பிருந்தாவனம்போல் ஆனந்தமாகத் தழைத்து விளங்குகிறது; அதைச் சுற்றியுள்ள இடம் அழகம்மைபுரம் என வழங்கப்படுகிறது. அதையே நாம் ரமணபுரி அல்லது ரமணாசிரமம் என்கிறோம். ரமணாசிரமத்தில் இளநீர்போன்று இனிய வற்றாவூற்றொன் றுள்ளது. அது பகவானாலேயே கண்டுபிடிக்கப்பெற்றது. பகவானின் கூர்ந்த விழிகள் ஒரு சிறிய ஈரநிலத்தைக் கண்டன: சுற்றிலும் நிலம் வறண்டிருக்க, அங்குமட்டும் சதுசதுப்பாயிருந்தது; அவ்விடத்தை யகழ்ந்து பார்க்கவே பகவானின் உபதேசங்களைப்போன்று தெளிவும், சுவையும், இனிமையுமுள்ள ஒரு பாலூற்று பொசிந்து பொங்கியது.

இதற்கு ரமணதீர்த்தம் என்று பெயரிடுகிறோம். இப் புண்ணியப் புனல் அருங்கோடையிலும் வற்றுவதில்லை !

ஸச்சிதானந்தன்.

(முத்துக்குமரய்யனே என்ற பல்லவி)

பல்லவி

ஸச்சிதானந்தனே—ஸதாசிவனே (ஸச்சி)

அநுபல்லவி

நச்சு பந்தமறு—நற்சு தந்தரத்தை
யிச்சை தன்னி லீவாய்—அன்பரின்
சிற்சு கேச னாவாய்—பரமகுரு (ஸச்சி)

சரணம்

எங்கு முள்ளபொரு—ளிங்கே னுள்ளமிசை
தங்கச் சோதி தூண்டி—மங்களம்
பொங்கி யோங்க வாண்டாய்—அருணகிரி (ஸச்சி)

## ௩௬. கள்வர்க்குங் கருணை.

'அவனொருவ னெங்குமிருந் தாட்டுவிப்பா னெல்லாம் !
எவனின்ன லென்னே செயும் ?

கள்வர்க்குங் கருணை காட்டிய திறத்தை ஜய தேவர் சரிதையிற் காண்கிறோம்.

கட்டுண்டு காபாவிற் கல்நெஞ்சர் துப்பிடவே
கனல்வாய் கக்குங்

திட்டுண்டு திருடனெனச் செப்புண்டு திருவற்ற
தீயோர் தம்பாற்
கொட்டுண்டு பொறுமையோடுங் குறைகடற்கு
குறித்த வேந்தன் [மமைதியினைக்
பட்டுண்ட பாட்டிற்குப் பஞ்சுபடும் பாடெந்தப்
பங்கே யம்மா !

நெற்றிகை காலி லாணி புகுத்தியே நிமலன் றன்னை
மற்றிரு கள்வர் நாப்பண் மாட்டினர் சிலுவை தன்னிற்
சிற்றறி வாளர் நக்கார்; சிறந்தவ னிறைவா வின்னோர்
குற்றமென் றறியாச் செய்தார் குளிர்ந்துமன் னிப்பீ ரென்
[றான்.

*என்று ஏசுநாதர் அன்று தமக்குப் பாரகர் செய்த கொடு மைகளைப் பொறுத்த தறிவோம். இன்று நேர்முகமாக நமக்கு அத்தகைய பொறுமை காட்டிய புண்ணியனைக் காண்போம்!*

*மஹர்ஷிகள் ஆசிரமம் ஏதோ பணம் பெருத்த திரு மடம் என்பது சிலர் நினைப்பு. மஹர்ஷிகளின் அருள் வல்லபத்தால் ஆசிரமம் தானே நடக்கிறது. அன்று தம் ஆடையோடு ரூ. 3-8-0-ஐ வீசி யெறிந்ததுடன் மஹர்ஷி கள் பணத்தைத் தீண்டுவதில்லை. பரமஹம்ஸர் மதுரநாத ரின் பணத்தைப் பெற்றுக்கொள்ள எப்படி மறுத்தாரோ அப்படியே மஹர்ஷிகளும். உலகிலும் வானிலும் சேர்ந் துள்ள செல்வநிதிகளையெல்லாம் ஒரு தூசிகூட மதிப்பில் லாத தாக்கும் அகண்டமான சிவாநுபூதிச் செல்வருக்குப் பொன்னும் வெள்ளியும் புந்தியிற் புகுமா ! அனைவர்க்கும் படியளப்பவன் அவர்களுக்கும் படியளக்கிறான். அவர்*

களுக்கு அன்னவிசார மில்லை, சொன்னவிசார மில்லை, போகக்கவலை யில்லை, மோகவாசை யில்லை, உயிர்க்கவலை யில்லை, உடற்கவலையில்லை, உலகக்கவலை யில்லை. ஒருகாலத்தில் சிக்கந்தர் (அலெக்ஜாண்டர்) டயாஜனிஸ் (Diogenes) என்ற ஞானியை நோக்கி, "தமக்கு வேண்டுவதைத் தருகிறேன்; என்ன வேண்டும்? சொல்லியருள்க" என்றார். "செல்வனே, எனக்கும் சூரியனுக்கும் இடைநில்லாதே!" என்று ஞானியார் விடையிறுத்தார்.

பணத்தா லுலகு படுதுயரைக் காண்மின்
குணத்தோரும் வீழுங் குழி
அடிமை கொலைபாவ மாசைமிடி யெல்லாம்
படர்பணத்தா லாகும் பவம்

என்பதை யறிந்தே துறவிகள் பணத்தைத் தொடுவது மில்லை, தொடவேண்டியதுமில்லை. பரமஹம்ஸரின் கட்டிலில் ஒரு செப்புக்காசை வைத்தாலும் அவர் துயிலினின்று திடுக்கிட் டெழுவாராம். இப்பணத்தை மண்ணுடன் சேர்த்து ஒன்றாக கங்கையில் விடுவாரும் உளர். பொற்கட்டியைத் தீதெனக் கிணற்றில் எறிந்த மஹான்களும் உளர். கலியின் விழிகளுக்கு இவையெல்லாம் பேதமையாகத் தோன்றினும், கடவுளன்பர் மனத்தில் இவையே பற்றற்ற, கவலையற்ற ஆனந்தமா யிலங்கும். பணமிருக்குமிடம் பயமுண்டு. பகை வன்மைகளின் ஆட்சியிற் பணமிருக்குமட்டும் இவ்வச்சம் அதனுட னிகழும்.

ஸ்ரீ ரமணாசிரமத்திற்கு இந்த பயமே கிடையாது. அது வேதாந்தப் போதுவரசு. அதில் ஒருவர்க்கும் தனதென்பதும் தானென்பதும் இல்லை; ராமதீர்த்தர் ஜப்பா

னுக்குச் செல்லும்போது, கப்பலதிகாரி "ஐயா, தங்கள் மூட்டைநிறை என்ன?" என்றுகேட்டார். ராமதீர்த்தர் சுதந்தரப் புன்னகை மிளிர, "என் மூட்டை 90 பவுண்டு" என்றார். அதிகாரி "மூட்டையைக் காட்டுக" என்றார். ராமதீர்த்தர், "இதோ இந்தமூட்டைதான் எனக்குள்ளது" என்று தமது உடற்சுமையைக் காட்டினார்! அதுபோலவே மஹர்ஷிகளுக்கு எவ்வித பந்தமும் சொந்தமும் உடைமையும் கடமையும் கவலையும் திவலையும் கனவிலுமில்லை. அன்றன்று வருவது அப்படியப்படியே செலவாகிவிடும். கொண்டுவரப்படும் நிவேதனம் எவ்வளவு விலையுயர்ந்ததாயினும், மஹர்ஷிகள் சிறிது விரலால் தொட்டு உண்டவுடனே நாய், பசு, அன்பர்கள் அனைவர்க்கும் ஸமமாகப் பங்கிடப்பட்டு வயிற்றிற் போய்ச் சேர்ந்துவிடும். அங்கே தினம் சமையலாவதும், அன்பர்கள் சமைத்துக் கொணர்வதும் நாடோறும் (ஸாதாரண நாட்களில்) சுமார் ௫௦-ஸாதுக்களுக்குக் குறையாது ஊட்டும். மீதியிருப்பதும் ஏழைபரதேசிகளுக்கு உடனே செலவிடப்படும். யார் சென்றாலும், முகம்பார்த்துப் பசிதீர அன்னம் அளிக்கப்படுகிறது. மஹர்ஷிகளின் ஸங்கல்பமில்லாத கருணை இவ்விஷயத்தில் மிகவும் பாராட்டற்குரியது. இது ஒருநாள் சென்னையினின்று இரவு சுமார் ௧௨-மணிக்கு மெல்ல நடந்து, ஆசிரமவாசலில் வெட்டவெளியில் வந்து தங்கியது. மஹர்ஷிகள் உடனே கதவைத் திறந்து வெளியே வரவும், முதற்கேள்வி, ஆஹா, பாரதியா சாப்பிடட்டுமே! சாதம் இருக்கிறது" என்றதே. இதன் பதிலும், "வயிற்றுப்பசி யில்லை. ஞானப் பசிக்கு உணவுவேண்டும்" என்றதே. இப்படியாக வரும்

சாமான்கள் செலவிடப்படுகின்றன. பணம் வந்தால் ஒரு தொகை சேர்ந்ததும், உடனே நூல்வெளியீடு, கட்டிடம், தோட்டம், திருவிழாக்கள், ஜயந்தி உத்ஸவம் முதலியவற்றிற்கு சரியாக நிரம்பிப் போகிறது. ரமணாசிரமம் அமைப்பதற்கு அன்பர்கள் போதுமட்டும் உதவினர். எனில், ஏதோ மாடிவீடு கட்டிவிட்டதாக நினைக்கக்கூடாது. சலவைக்கற் கட்டிடங்களும், பெரிய மடங்களும் கட்டி பகவானுக்குச் சிறப்புச் செய்ய நூற்றுக்கணக்கான அன்பரின் ஆவல் துடிக்கிறது; எனினும், ரமணாசிரமம் மிகவும் எளிய கூரைக் கட்டிடங்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. அவையும் அதிகமில்லை. மாத்ருபூதேஸ்வரர் கோயில், சமையலறை, சாப்பிடுமிடம், புதிதாக மற்றொரு கட்டிடம்—இவையே ரமணாசிரம விடுதிகள். ஆடம்பரம் என்ற பேச்சே அங்கு இல்லை. ஒரு குழந்தையின் மனம் போன்றே ரமணாசிரமம் தெளிவும் வெளிப்படையும், இடம்பமற்ற அழகும் பொருந்தியது.

இப்படியிருந்தும், ஏதோபெருஞ்செல்வம் இங்குள்ளதென மயங்கி இருமுறை கள்வர்கள் புகுந்தனர். ஒரு முறை அன்னை கோயிலில் கன்னம் வைத்து ஏதோ சில்லறை சாமான்களை யெடுத்துச் சென்றனர். அதற்கு ஒரு வாரங் கழித்து, 26-6-24 இரவு 11-30 மணிக்குச் சில வெறியர் செய்த கொடுமை, கொடுமை! கொடுமை!!

மஹர்ஷிகள் வழக்கம்போல மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்திற் படுத்திருந்தார். ஜன்னற் கதவுகளுக்கு அருகே நான்கு சீடர்கள் படுத்திருந்தனர். நடுநிசியில் அரவங் கேட்டது; "உள்ளே ஆறுபேர் படுத்திருக்காங்களடா" என்ற பேச்சுக்குரலுங் கேட்டது; குஞ்சுஸ்வாமி, மஸ்

தான் ஸ்வாமி என்ற இரண்டு சீடர்களும் இதைக் கவனித்தனர். "யாரது?" என்று மஸ்தான் ஸ்வாமி வினவினார். அதற்குப் பதில் ஜன்னற் கண்ணாடி நொறுங்கியது! திருடர்கள் மஹர்ஷிகள் இருந்த பக்கத்து ஜன்னற் கண்ணாடிகளையுந் தகர்த்தனர். மஹர்ஷிகள் மனமதிராமல் சாந்தமாகவே உட்கார்ந்திருந்தார். காமக்ரோதக் கள்வரைச் சிதைத்த ஞானிக்கு இரண்டுகாற் கள்வராற் பயமில்லை. குஞ்சுஸ்வாமிகள் மெல்லச் சென்று அடுத்த குடிசையிற் படுத்திருக்கும் ராமகிருஷ்ண ஸ்வாமியை யழைத்துவந்தார். ஆசிரமநாய்கள் (கருப்பன், ஜாக்) இரண்டும் பாய்ந்து வரவே, திருடர் அவற்றை நையப் புடைத்தனர்.

மஹர்ஷிகள் திருடரைக் கண்டு வெகு ஸஹஜமாகவும் நிதானமாகவும், "இங்கே என்ன இருக்கிறது எடுத்துக் கொண்டு போக! உள்ளே வந்து வேண்டியதை எடுத்துச் செல்லட்டுமே" என்றார். இம் மென்மொழியையுஞ் செவிமடுக்காது திருடர் ஜன்னற் சட்டத்தைப் பேர்த்தனர். குஞ்சு அவர்களை அதட்டி, "இன்னும் இங்கே சேட்டை செய்தால் சரியானபடி விழும்! ஓடிப்போய் விடுங்கள்" என்றார். திருடரை ஒரு முண்டு முண்டிப் பார்க்கவும் கச்சைகட்டினார். மஹர்ஷிகள் அவருடைய வீரியத்தைத் தடுத்து, "அவர்கள் தர்மம் அவர்கள் செய்யட்டுமே; நாம் நமது தர்மத்தைக் காப்போம். அவர்கள் இஷ்டப்படி செய்யட்டும். சாந்தமும் பொறுமையுமே நமக்கு உரியது. நாம் அவர்களைத் தடுக்கவேண்டாம்" என்று நிறுத்தினார். ஏசுநாதரைப் பாரகர் பிடித்தவுடன் அவரது சீடரான சீமோன் முதலியோர் அவர்களை யொறுக்க வாளுருவும் போது, பொறுமையும், சாந்த

மும், தீமையை எதிர்க்காத அமைதியும் அவர் உபதேசித்ததைப் போன்றிருக்கிறது மஹர்ஷிகளின் மொழிகள்!

முரடர்கள், திருடர்கள் இந்த சாந்தசக்தியை யறிவார்களா? அவர்களுடைய கைத்திமிரை முற்றுங் காட்டினார்கள்! ஜன்னலில் ஒரு வெங்காய வெடியை "டபா" ரெனவீசித் தங்களிடம் துப்பாக்கி யிருப்பதுபோலக் காட்டிக் கொண்டனர். முப்புரி யெரித்தோன் துப்பாக்கிக் கஞ்சுவனோ? மீண்டும் மஹர்ஷிகள் ஸர்வ ஸாதாரணமான நண்பருக்கு உரைப்பதுபோலவே, "உள்ளே வந்து வேண்டியதை எடுத்துச் செல்லட்டுமே" என்றார். திருடர் குஞ்சுவின்மீது ஆத்திரத்தை ஓங்கினர்; குஞ்சு மற்றொரு வாயில் வழியே ஊருக்குட் சென்று துணை யழைத்துவர ஓடினார். மீண்டும் திருடர்க்கு, "அனுவசியமான தொந்தரவு செய்ய வேண்டாம்; வேண்டியதை எடுத்துச்செல்லலாம்" என்று சொல்லப்பட்டது. "வீட்டுக் கூரையில் தீ வைப்போம்" என்று வெறியர் சீறினர். மஹர்ஷிகள் "அப்படிச் செய்ய வேண்டாம்; நாங்கள் எல்லாரும் அக் கட்டிடத்தை விட்டு வெளியேறிவிடுகிறோம்; நீங்கள் குசாலாக உங்கள் காரியத்தைப் பாருங்கள்" என்றார். திருடர்கள் "ஆனுச்சரி" என்று ஒப்பினர். மஹர்ஷிகள், திருடர் கையிற் காயமுண்ட கருப்பனை ராமகிருஷ்ண ஸ்வாமியைத் தூக்கிவரச் சொல்லித் தாமும் மற்ற மூன்று சீடருடன் வெளியேறினார். அந்தோ! திருடர் அவர்களை வெறிகொண்டு தடியாற் புடைத்தனர். மஹர்ஷிகளையும் இடது தொடையில் தீட்டினர். மஹர்ஷிகள் என்ன சொன்னார்? "இடது கன்னத்தி லடிக்கின் வலது கன்னத்தையுங் காட்டுக" என்ற ஏசுநாதர் மொழியையே சொன்னார். "அப்பா, உங்களுக்

குத் திருப்தியில்லாவிடில் (இடது காலிலடித்தது போதாதெனில்), மற்றொரு (வலது) காலிலும் அடியுங்கள்" என்றார். அந்தோ, திருடரின் கல்நெஞ்சுகரைய வில்லை! இந்த ஸமயம் ராமகிருஷ்ணஸ்வாமி என்ற தீரர் பாய்ந்து வந்து தமது இருகரங்களாலும் தடுத்துத் திருடர்களிடமிருந்து மஹர்ஷிகளை வடக்குப் பந்தலுக்கு இட்டுச் சென்றார்.

திருடர்களோ, "அங்கேவிட்டு நகர்ந்தால் மண்டை போய்விடும்; உஷார்" என்று கொடுமையாக அரற்றினர். மஹர்ஷிகளோ, "கட்டிடம் முழுதும் உங்களிடமிருக்கிறது; என்ன வேண்டுமென்றாலும் செய்யுங்கள்" என்று சொன்னார்.

'அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு."

இப்படி வீட்டைத் திறந்துவிட்டுக் கள்வர்க்கு சுதந்தரங் கொடுத்த ஸாத்விகம் இதைவிட வேறெங்குங் காணோம்; இம்மட்டோ? திருடர் ஒரு ஹரிகேன் விளக்குக் கேட்டனர். மஹர்ஷிகள் ஏற்றிக்கொடுக்கச் சொன்னார். ராமகிருஷ்ணஸ்வாமி ஏற்றிக் கொடுத்தார். மீண்டும் திருடர் வந்து பீரோச் சாவிகளைக் கேட்டனர். குஞ்சுஸ்வாமிகள் அவற்றை யெடுத்துக்கொண்டு ஊருக்குட் சென்றுவிட்டார்; இதுவும் தெரிவிக்கப்பட்டது. வெறியர் அலமாரிகளை யுடைத்தனர். அங்கு என்ன சங்கநிதி, பதுமநிதிக் குப்பையைக் கண்டனர்! ஒரு க்ஷவரக்கத்தி, பிள்ளையாருக்குப் பூட்டும் சிறிய நெற்றிப்பட்டை (வெள்ளியாலானது), இத்துடன் கொஞ்சம் அரிசி, சில மாம்பழங்கள்—இவைதான் அகப்பட்டன. ஆசிரமத்திற்கு வந்த

ஓரன்பர் ஆறு ரூபாய் வைத்திருந்தார்; அதுதான் ரொக்கம்! அத்துடன் எல்லாம் சேர்ந்து, ரமணாசிரமத்தில் திருடர் புகுந்து கதவை நொறுக்கி, அரற்றி, மிரட்டி, அடித்து, உடைத்துத் தகர்த்து, தேடித் துருவிச் சுருட்டிச்சென்ற கொள்ளை முதல் மொத்தம் ரூபாய் பத்துப் பெறும். திருடர் ஏதோ, "சாமியாருக்குச் செல்வர்கள் காணிக்கைகளைப் படிப்படியாக அளக்கின்றனர். அவற்றை எங்கோ சேர்த்து வைத்திருக்கிறார்" என்ற எண்ணத்துடனேயே இவ்வளவு துணிந்தனர். ஒன்றும் அதிகமாக அகப்படாததைக் கண்டு சலித்து, ஏமாந்து, மீண்டும் மஹர்ஷிகளிடம் வந்து, "உன் பணமெல்லாம் எங்கே! எங்கே வைத்துள்ளாய்" என்று மிரட்டினர்.

நாங்கள் ஏழை ஸாதுக்கள், பிக்ஷையால் ஜீவிப்பவர்கள்; ஒருக்காலும் பணம் வைத்துக்கொண்டதில்லை" என்று அமைதியா யுரைத்தார். மீண்டும் மீண்டும் மிரட்டியும் அதே சாந்தமான ஸத்யவசனமே வந்தது. திருடர் ஆத்திரத்துடன் அட்டகாசஞ்செய்து மீண்டும் கட்டடத்துள் நுழைந்து சாமான்களைத் தேடித்துருவினர். மஹர்ஷிகள் என்ன செய்தார்? "ராமகிருஷ்ணஸ்வாமியின் அடிக்காயத்திற்கு அமிருதாஞ்சனம் எடுத்துத் தடவட்டும்" என்றார். மற்றொரு சீடரையும் அவ்வாறே செய்யச்சொன்னார். "இதற்கும் எல்லாருக்கும் சரியான பூசை விழுந்தது" என்று சொன்னார். ராமகிருஷ்ண ஸ்வாமி, மஹர்ஷிகள் தொடை அடியால் வீங்கியிருப்பதைக் கண்டார். ஆத்திரம் எழுந்தது; பக்கத்திலிருந்த ஒரு இரும்புக்கம்பியையெடுத்துக்கொண்டு அந்தத் திருடரை ஒரு கை பார்க்க எழுந்து, உத்திரவு கேட்டார். மஹர்ஷிகளோ மீண்டும்

சாந்தோபதேசமே செய்தார். "நாம் ஸாதுக்கள்; நமது தர்மத்தை விடக்கூடாது. அவர்களை யடித்தால் ஏதாயினுங் கொலை நேரிடும். அதற்காக உலகம் நம்மைச் சொல்லுமேயொழிய, திருடரைச்சொல்லாது. இவர்கள் அறியாதவர்கள்; இன்னது செய்கிறோமென்று தெரியாதவர்கள்; அறியாமையாற் கண்ணிழந்தவர்கள்; நாம் தர்மம் இன்னதென் றறிந்து அதையே கடைப்பிடிப்போம்" என்று தர்மோபதேசம் செய்தார். "நமது பல் நமது நாக்கைக் கடித்துவிட்டால் அதற்காக அதை உடைத்துவிடுகிறோமா" என்றும் மொழிந்தார். இவையெல்லாம் ஏசுநாதரின் மலையுபதேசம்போன் றுள்ளன வன்றோ! என்ன சாந்தம்! இது கோழைத்தன மல்ல; இதுவே ஆற்றல்.

ஆற்றல் பொறையளவே யாகு மதுவுடையோ
னேற்றம் பெறுமெங்கு மெண்.

இரவு இரண்டு மணிக்குத் திருடர் சென்றுவிட்டனர். குஞ்சு, மணியக்காரர் - ராமகிருஷ்ணய்யருடன் இரண்டு டாணாச் சேவகரையும் அழைத்துக்கொண்டு வந்தார். மஹர்ஷிகள் இன்னும் சாந்தாகாரமாகவே ஏதும் நடக்காததுபோல வீற்றிருந்து சிஷ்யர்களுக்கு அத்யாத்ம விஷயங்களை உபதேசித்துக்கொண் டிருக்கிறார். டாணாச்சேவகர் மஹர்ஷிகளை நடந்த விவரங் கேட்டனர். "யாரோ சில பேர் அறியாதவர்கள், ஆசிரமத்தில் திருடினார்கள்; இங்கே பொருள் எதுவு மில்லை யென்று ஏமாந்து போய்விட்டார்கள்" என்று வெகு ஸாதாரணமாகச் சொன்னார்.

"அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்று தவர்?"

உற்றுலு மற்றுலு மொன்றேன் றிருப்பவருக்
கெத்தாலுந் துன்ப மிலே.

டாணுச் சேவகர் இதைக் குறித்துக்கொண்டு சென்றுவிட்டனர். ஆனல் மற்றொரு சீடர் மூலம் மணியக்காரர் மஹார்ஷிகளைத் திருடர் அடித்ததும், மற்ற விவரங்களும் அறிந்து, டாணுவில் விவரமாக எழுதி வைத்துவிட்டார். காலையில் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர், டிப்டி சூப்பரிண்டெண்டெண்டு முதலிய எல்லோரும் வந்துநடந்தவற்றை விவரமாக விசாரித்துச் சென்றனர். மஹார்ஷிகளோ தாம் அடிபட்டதை ஒருவரிடமும் பேசவில்லை. அந்தத் திருடர்களைப் பற்றியும் சிறிது சினமுடனும் என்றும் பேசினதில்லை.

"இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்."

இது நடந்த ஆறு நாட்களுக்கெல்லாம், அத்திருடர் பிடிபட்டுத் தண்டனை யடைந்தனர். களவு போனவையும் மீட்கப்பட்டன.

"உள்ளத்தா லுள்ளலுந் தீதே; பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கொள்வே மெனல்."

"மறந்தும் பிறன்கேடு சூழற்க ; சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு"

என்பதை இப்பேதையர் அறியார் போலும்! ஆனல் வந்தது திருடரல்ல! மஹார்ஷிகளின் பெருமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இன்னா செய்யாமை, சான்றாண்மை, இரக்கம், எளிமை, சினமின்மை முதலிய பெருங் குணங்களை உலகம் அறிய, ஒரு சோதனையே வந்தது.

கள்வர்க்குங் கருணை தருங் காந்தசக்தி பகவானிடம் உள்ளது.

“ கள்வன் கடியன் கலதியிவ னென்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தா னென்மனத்தே
உள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ணமெலாந்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ ”

## ௯௭. ஸமதர்சனம்

அற்பம் பெரிதென்றே யெண்ணாதே யன்புசெயு
நட்ப வறிவுடைமை நோன்பு.

சேஷாத்ரிஸ்வாமிகள் ஒருதரம், “ அங்கே ஒரு கிருஹஸ்தர் இருக்கிறார் ; போய்ப் பார் ; உனக்கு லட்டுக் கிடைக்கும் ” என்று ஒரு அன்பரிடம் மஹர்ஷிகளைக் குறிப்பிட்டார். ஆம், மஹர்ஷிகளின் பந்தமற்ற ஸம்ஸாரம் நரதேவர்களை மட்டுங் கொண்டதல்ல ; அது மஹாவீரரின் சமவசரணம் போன்று பசுதேவர்களையுங் கொண்டது. பிரான்ஸிஸ் முனிவர் எப்படிக் கானகப் புட்களுட னெல்லாம் உறவாடினாரோ, கபீர்தாஸ் எவ்வளவு அன்புடன், தமது ரொட்டியைக் கௌவிச் சென்ற நாய்க்கு, “ஆண்டவனே, வெறும் ரொட்டி சுவைக்காது ; தயவுசெய்து கொஞ்சம் நெய்யும் ஏற்றருள்க ” என்று ஓடிக்கொடுத்தாரோ, அதனினும் பன்மடங்கு அன்புடனேயே மஹர்ஷிகள் நாய், பசு, குரங்கு, காகம், அணில் இவற்றுடன் உறவாடுகிறார்.

மற்றச் சீடர்களைப் போலவே அவையும் ஸமமாக நடத்தப்படுகின்றன. இளங்கண்ணன் குரங்குகளையும், பசுக்களையும் எவ்வாறு நேசித்தானே, மஹர்ஷிகளும் அவ்வாறே. விலங்குகளெல்லாம் அந்த சாந்தமயத்துடன் அன்பு பூண்டன. அவைகளுடைய வம்சாவளி யெல்லாம் அவருக்கு நன்ருகத் தெரியும். அவைகளின் தேவைகளையும், உணர்வுகளையும் உடனே கண்டு பிடித்து ஆவன செய்வார். அவைகளை அனைவரும் பிரியமுடன் மதிக்கச் சொல்வார்; ஏனெனில், பழைய கதைகளில் நாம் காண்பதுபோல், முற்பவ வினைகளைத் தீர்க்க எவரெவர், எவ்வெக் கோலங்களோடு பகவானுடைய ஸந்நிதியில் உலவுகின்றனரோ அறியேம். நாரதர் சாபத்தால் நளகூபர மணிக்ரீவர்கள் யமளார்ஜுன மரமாகிக் கண்ணனால் முக்தி பெற்றதுபோல, இங்கு நாய், பசு, குரங்கு, பக்ஷிகளாய் உலாவும் பிராணிகள் முற்பவத்தில் எவராயிருந்து இனிப் பிறப்பில் எவராக மாறுதற்கு, இப்பவத்தில் பகவானை மௌனமாக அன்பு செய்கின்றனரோ அறியேம். இக்காரணத்தினுஞ் சிறந்தது அனைத்தும் ஆத்மா என்பதே.

“எண்ணுரு யாவு மிறையுரு வாமெனவெண்ணி வழிபட லுந்தீபற !
ஈசனற் பூசனை யுந்தீபற !”

உபாதிவிட்டுத் தன்னை யோர்ந்தால் ஈசனையே தன்னினும் அனைத்தினும் உணரலாகும்.

இயற்கையே யாக்கை ; இறைவனே யான்மா ;
உயிர்க்குலம னைத்துமிங் கோன்று

என்ற வுண்மை பகவானுடைய ஸந்நிதியில் ஆனந்தநடனம் புரிவதை யாவருங் காணலாம். "அனைத்திற்கும் அறிவு ஒன்றே" யென்று பகவான் சொல்வார்.

"இதோ லக்ஷ்மி வந்துவிட்டாள்; அவளுக்குச் சாதம்போடு" என்றதும், லக்ஷ்மி என்ற பெண்ணையே அங்குள்ளவர்கள் எதிர்பார்க்கிறார்கள்! ஆனால் ஒரு பசு வந்து பகவானிடம் தலையை நிமிர்த்தித் தாடையைக் காட்டி நிற்கிறது. உடனே அதைத் தடவிக்கொடுத்து க்ஷேமம் விசாரிக்கிறார். அது ஏதேனும் விசனமுறுவதாகத் தெரிந்தால், "ஏண்டீ, ஏண்டீ! சாப்பிடப்போ!" என்று தடவித் தட்டிக்கொடுத்து அனுப்புகிறார். பொதுவாக லக்ஷ்மிக்கு பகவானைவிட்டுப் பிரிய மனம் வருவதில்லை. பகவானுடைய திருக்கை பட்டுப்பட்டு அதன் முகத்தில் உண்மையாகவே லக்ஷ்மி களை தாண்டவமாடுகிறது. அவள் ஆசிரமத்தின் செல்வமகள். கண்ணுவ மஹர்ஷிக்கு சகுந்தலைபோல அவள் ரமணாசிரமத்திற்கு விளங்குகிறாள். பகவானிடம் லக்ஷ்மி மாலையில் விடைபெற்றுச் செல்லும் கருணாரஸத்தில் காளிதாஸ னியற்றிய சாகுந்தலம் நான்காவதங்கம் நர்த்தனம் புரியும். அவள் சரிதை மிகவும் ஆச்சரியமானது.

ஆசிரமத்தில் ஒரு பசு வளர்க்கப்பட்டது; அதன் கன்றே லக்ஷ்மி. மலையினின்று சிறுத்தைகள் வருவதால் அவற்றிற்கஞ்சித் தாயுங் கன்றும் ஒருவரிடம் வளர்க்கக்கொடுக்கப்பட்டன. திருவிழாக் காலத்தில், ஒருநாள் இவையிரண்டும் மஹர்ஷிகள் ஸந்நிதானத்திற்குக் கொண்டு வரப்பட்டன. அதுமுதல் ஒவ்வொரு நாளும் லக்ஷ்மி ஆசிரமத்திற்கு வந்து பகவானின் அன்பையும் ஹஸ்த

தீக்ஷையையும் பெற்றுச் செல்கிறாள். சாப்பாட்டு வேளை அவளுக்கு நன்றாகத் தெரியும். பகவான் ஸந்நிதி நிரம்பக் குடும்பம் இருந்தாலும், அனைவர்க்கும் நடுவே நாணிக் கோணி லக்ஷ்மி வந்து பகவானுக்கு முன்னே செல்வப் புதல்விபோலச் சலுகை கொண்டாடுவாள். உடனே அவளுக்கு முதலில் உணவு கொடுக்கப்படும்; ஒரு சீப்பு வாழைப்பழம் அப்படியே இச்செல்வமகளுக்கு ஊட்டப் படும். அவள் துஷ்டத்தனமும் செய்வாள். உள்ளே புகுந்து இலைக்கட்டுகளைப் பல்லால் உதறிச் சில இலைகளைத் தின்றுவிடுவாள்; தோட்டத்திற் புகுந்து மதுவனக்குரங்கு வேலையும் செய்வாள். ஆனால் அவளை ஒருவரும் அதட்டக் கூடாது; "நீங்கள் உஷாரா யிருக்கவேண்டும்; தோட்டத் திற்குத் தக்க வேலி யடைக்கவேண்டும்; அவள்மேற் குற்றமில்லை" என்று பகவான் தமது பசுச்செல்விக்குப் பரிந்து வருவார்.

ஸ்வாமிகள் 1900-ஆல் மலைமேல் இருந்தபோது ஒரு கிழவி அன்புடன் கீரை சமைத்துக்கொண்டுவந்து தருவது வழக்கம். ஸ்வாமிகளும், தம்மை மகன்போல நேசித்த கீரைப்பாட்டிக்குச் சமையலிற் றுணை புரிவார். அந்தக்கீரைப் பாட்டி சில ஆண்டுகளுக்குமுன் காலகதி யடைந்தாள்; அவளே லக்ஷ்மியாகப் பிறந்து இப்படி பகவானை அன்பு செய்கிறாள் என்பதே அன்பர் நம்பிக்கை. திருவிழாக் காலங்களில் லக்ஷ்மிக்கு வெகு கொண்டாட்டம்! தேய்த்துக் குளிப்பாட்டி, மஞ்சள் பூசி, குங்குமப் பொட்டிட்டு, மாலைகளால் அலங்கரித்து மணமகள் போல அவளை பகவான் முன்னிலையில் அனுப்புவர்; புதிய கல்யாணப்பெண் மாதிரி அவளும் அழகும், நாணமும், பணிவும், மகிழ்வும் பூண்டு,

பகவான் முன்னே பிரேமையுடன் விளங்கி, அன்பு பெறு வாள். மாலையில் வீட்டிற்குச் செல்லும்போது பகவானி டம் வந்து, ஏதேனும் ஆதாயம் ருசியாகப் பெற்றுக் கொண்டு, நின்று அன்புறவு செய்து, அன்பைக்கொண்டே வீடு சேர்வாள்.

## நாயனுர்கள்

“இந்தப் பசங்களுக்குச் சாதம் போட்டாச்சா? ரோஸ், இங்கே வாடா பயலே! இவனுக்குத் தண்ணீர் கொடு” என்று பகவான் சொல்லும்போது ஆசிரமத்தில் ஏதோ சிறுவர்கள் வளர்க்கப்படுகிறார்களெனத் தோன் றும். ஆனால் ரோஸ் என்னும் நாய் வந்து வாலாட்டிக் காலை யுயர்த்தி நிற்கும். இந்த நாய்களின் கதை மிக நீண்டது. பகவானுக்கு அவர்களுடைய தலைமுறை தத் துவமான கதைகளெல்லாந் தெரியும். அவையனைத்தும் எழுதுவதென்றால் ஒரு சுவானபுராணமாக முடியும். ஆதலின் பகவான் ஒரு நாள் இவற்றைப்பற்றிச் சொன்ன தைச் சுருங்கக் கூறுவாம் :—

ஸ்வாமிகள் மலைக்கு வந்த நாள் முதல் பைரவகுல மைந்தர் அவருடனேயே இருந்து அன்பு செய்கின்றனர். கமலா, நீலா, ஜாக், ரோஸ், கருப்பன் என்று அவர் களுக்கு விநோதப் பெயர்களுண்டு. “கமலா பழம் பாட்டி; ரோஸும், இச்சிறுவர்களும் அவளுடைய பேரன் பேத்திகள்.” “ஏபசங்களா, உங்கள் பாட்டியைத் போய்ப் பாருங்கள்; அவள் சாகக் கிடக்கிறாள்!” என்றார் ஒருநாள் பகவான். கமலா இறந்தவுடன் ரோஸை துக்கம் விசா ரித்தார். “ஐயோ பாவம், உன் பாட்டி கமலா போய் விட்டாளே!” என்று அனுதபித்தார். ஆங்கில அரசர்க்கு

ஜேம்ஸ் I, II, III—என்று எண் குறிப்பதுபோல, நாய்களின் பரம்பரைக்கும் ஜாக் I, II, III—என்று பெயரிட்டழைப்பார். நாய்களிடம் யாரும் அருவருப்பட வேண்டாமென்பார். அவைகளும் அன்பர்களுடன் ஸமத்வமாகவே பேணப்படும். ஒருநாயின் சரிதையை மட்டும் கவனிப்போம்:—

சின்னக்கருப்பன் (உடலெல்லாம் கறுப்பானதால் அப்பெயரிடப்பட்டான்) உயர்ந்த தன்மையுள்ளவன். அவன் வைராக்கியம் அதிசயமானது. ஒருவருடனும் அவன் உறவுகலவாது நிஸ்ஸங்கம் வகித்தான்; அவன் சுயேச்சையுள்ளவன்; விரூபாக்ஷகுகையிலிருக்கும்போது அவனுக்குச் சாதங்கொடுத்து இருந்த விடத்திலேயே விட்டுவிடுவது வழக்கம்; ஒருநாள் சிஷ்யர்களுடன் பகவான் வெளியே புறப்படுகையில், கருப்பன் ஸந்தோஷமாகப் பாய்ந்து வந்து, குறிப்பிட்டு அவருடைய தொடையில் முன்காலை வைத்து எக்கி, வாலாட்டி அன்பு காட்டினான். பகவானைச் சரணடைந்தான்போலும்! அதுமுதல் ஆசிரமவாஸியாக அன்பருடனேயே இருக்கிறான். அவன் மிகவும் புத்திசாலி; ஸமயோபகாரி; அறிவாளி. வரவரத் தனிமையை விடுத்து அனைவருடனும் ஸர்வ ஸமத்வத்துடன் பழகத்தொடங்கினான்; யார் வந்தாலும், அவர்கள் தொடையில் ஏறி, வாலாட்டி, உறவாடிப் பழகிவிடுவான். யாராயினும் வைதிகத்தால் தீண்டாமை காட்டி அவனை வெறுத்து ஒதுக்கினாலும், விடாமுண்டனாய் அருகேசென்று தனது சரிஸமத்வபாத்தியத்தைக் கொண்டாடியே தீருவான். ஒருநாள் இப்படியே மந்திரஜபம் செய்துகொண்டிருக்கும் ஒரு வைதிகரிடம் ஸமரஸப்

பிடிவாதஞ் செய்யவே, ஒரு சாமியார் அவனை ஓங்கித் தீட்டிவிட்டார். பயலுக்கு ரோசமும், அழுகையும் வந்துவிட்டது. அது முதல் அவன் வருவதே யில்லை; அவனைக் கண்ணிலே கூடக்காணோம் 'மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்' என்பதில் அவன் வைராக்கிய முள்ளவன். முன்னே ஒரு நாள் மற்றொரு சாமியார் அவனை மரியாதைக் குறைவாகப் பேசி நடத்தியதற்காக, ஆசிரமத்தைவிட்டு சற்று தூரத்தில் ரோசமுடன் ஒரு கரி மூட்டைமீது படுத்திருந்தான். பின்பு அவனை உபசாரஞ் சொல்லி ஆசிரமத்திற்கு அழைத்துவந்தனர். சில ஆண்டுகளுக்குமுன் ஒரு நாய்க்குட்டியை ஒருவர் கண்டித்துக் கோபமாகப் பேசியதும், அது சங்கதீர்த்தத்தில் விழுந்து ஐந்து நிமிஷத்தில் தற்கொலை புரிந்துகொண்டது. ஆதலின் நாய்களிடம் அன்புடன் பழகவேண்டும். ஆசிரமத்தில் அறிவுள்ள பல நாய்கள் இருந்தன. "கமலா, இவருக்கு ஆசிரமத்தைச் சுற்றிக் காட்டு" என்றால், உடனே அவள் வந்தவரை முன்னே நடத்திச் சுற்றிக் காட்டுவாள். ஜாக் I. அதிகப் பணிவுள்ளது; கிரிப்ரதக்ஷிணத்திற்குச் செல்கையில் ஒருநாள், "ஜாக், நாங்கள் போகிறோம்; நீ கீழிறங்கிச்செல்" என்றார் மஹர்ஷிகள். உடனே பணிந்து, மஹர்ஷிகளும் அன்பர்களும் ஒரு மைல் சுற்றுவதன் முன்னம் கீழிறங்கிப் பாதையில் வந்து அது அன்புடன் காத்துக்கொண்டிருந்தது; "நீ எங்களோடு வரவேண்டாம்; ஆசிரமத்துக்குப் போ" என்றார் மஹர்ஷிகள். உடனே பணிந்தது. அது பெரிய தபஸ்வி; புலன் அடக்க முள்ளது, சாந்தத்தை விரும்புவது. அது பிரஸாதமே சாப்பிடும். கீழே வழக்கமான ஒரு வீட்டில் பிரஸாதம் சாப்பிட்டு

குகை நமச்சிவாயர் கோயில் மட்டும் அதன் பூசாரியுடன் வழித்துணை சென்று பின்பு விரூபாக்ஷகுகைக்கு மஹர்ஷிகளிடம் வந்துவிடும். அங்கு ஸமீபத்திலுள்ள குகையில் சாந்தமாகப் படுத்திருக்கும். ௯-மணிக்குக் குகை நமச்சிவாயர் கோயிலுக்குப் பிரஸாதத்திற்காகப் போகும். கொடுத்ததை உண்டு, நேராக ஆசிரமகுகைக்கு வந்துவிடும். வேறொரு நாயுடனும் போட்டி போராட்டத்திற்குப் போகாது. பெண் நாய்களைத் தேடியும் அலையாது. ஸாயங்காலம் கீழேபோய் வழக்கமான வீட்டிற் சாப்பிட்டு ஸந்யாஸியார் மடத்தில் அதன் பூசாரியுடன் உறங்கும். அது பெரிய ஸாத்விக வைராகி. 1905-ல் ஒரு சிறுத்தையாற் கடியுண்டு நோயுற்று, அருணாசலன் பாதத்திற் சேர்ந்தது. மஹர்ஷிகள் தமது பையன் (நாய்)களை மிகவும் பிரியமுடன் கவனிப்பார். மற்ற ஸாதகர்கள் போலவே அவர்களுக்கும் ஸௌகரியங்கள் தருவார். அவர்களுக்கே முதற் சாப்பாடு. கமலா பிரஸவிக்கும்போதெல்லாம், அவளுக்கு கங்காஸ்நானஞ் செய்வித்து, மஞ்சள் பூசி, குங்கும மிட்டு, அலங்கரித்து, புண்யாஹவாசநத் திருநாள் கொண்டாடி அன்று அனைவர்க்கும் விருந்து செய்வார். நாய்கள் இறக்கும்போதும், அன்னைக்கு எப்படிப் பக்கமிருந்தாரோ அப்படியே யிருந்து, இறந்தவுடன் அவைகளுக்கு ஸமாதி வைத்து, அவற்றின் ஞாபகார்த்தமாக ஒரு கல் நடுவார். அந்தணன், யானை, ஆ, நாய், புலையன் அனைவரும் ஞானிமுன் ஒன்றே என்னும் உண்மை மஹர்ஷிகள் ஸந்நிதானத்தில் நிலவுவதை என்றுங் காணலாம்.

நன்றிக்கு நாய் எடுத்துக்காட்டு; அதிலும் இரண்டாவது ஜாக் நாயனார், பகவானிடம் நாடோறும் யாருக்

கும் அரிய ஹஸ்ததீக்ஷைபெற்று, அறிவும், நெறியும், பரிவும், ஒழுக்கமும் உருவெடுத்து மனிதருக்கும் உதாரணமாயிருந்தான். அவன் சமீபத்தில் நோயுண்டும் பிறருக்கு எவ்விதத்தும் அசூயை யுண்டாகாது பகவானின் திருவடி நிழலிலேயே தங்கிவந்தான். மனிதருக்கு சிறிது ஜலதோஷம் பிடித்தாலும் சள்ளைப்படுவதும் வைத்யனைத் தேடுவதுமா யிருக்கும். பெரியநோய்கள் வந்துவிட்டாலோ சொல்லவேண்டாம். வீடுமுழுதும் மருந்தும் மருத்துவமும் சிலம்பமாடும்.

தூயவுடை யூணுந் துணையாயின் நல்வாழ்க்கை
நோயேன் மருந்தே னுவல்.
மருந்தென்ப வேண்டாவா மாந்தர்க் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

என்பதைக் கருதினால் மக்கள் நோயற்ற வாழ்வான குறைவற்ற செல்வத்தைப் பெறலாம். இயற்கையின் அழைப்பைக் கருதாத மனிதர்க்கு விதிக்கப்பட்ட தண்டனையே நோய். நோயைத் தடுக்கவல்லதும் இயற்கையே. மிருகங்களின் வாழ்வை உற்று நோக்கினால் மனிதன் வெட்கும் படியான பல ஒழுக்கங்களைக் காணலாம். இங்கு பூனைக்கு வயிற்றுமந்தம், மலச்சிக்கல், கடுப்பு ஏதேனும் ஏற்பட்டால் அது உணவை நிறுத்திவிடுகிறது. ஒருநாள் பட்டினிக்குப்பின் தேடிச்சென்று பசும்புல்லைச் சிறிது உண்டு மீண்டும் பசியெடுக்கும்போதே உணவு கொள்கிறது. உணவிலும் பசியடங்குமட்டே யுண்கிறது. ஆண் பெண் கலப்பிலும் சிறந்த ஒழுக்க முறையும் கொண்டுள்ளது. மனிதன் தனது அறிவை வயிற்றுக்கிடங்கிற் கொட்டி

உணவும் வீரியத்தினவுமாக அலேதல் பரிதாபம். நமது ஜாக்-II குறள் படிக்காவிட்டாலும் இயலறிவுத் திரளாக விளங்கியது. நோய் கண்டவுடன் வேறு உணவுகளை நிறுத்திப் பால்மட்டும் உண்டு வந்தது. பிறருக்கு அருவருப்பின்றி சுத்தமாகவே நடந்துகொண்டது. இப்பழஞ் சட்டையைக் கிழிப்பதே இயற்கையின் திருவுளம் என்று நினைத்தோ, அவ்வறிவுள்ள நாய் இறுதி காலத்தில் பாலேயும் விடுத்து ஸல்லேஹனம் செய்து, அசையாச் சமாதியிலிருப்பதுபோ லிருந்து தைமீ உத்தராயண புண்ணிய காலத்தில் உடலேப் பிளந்துகொண்டு, ஆண்டவனருளடியிற் சேர்ந்தது. ஜாக்நாயனுருக்கு பகவான் கரத்தால் சமாதி வைக்கப்படும் பேறு கிடைத்தது. அதன்மீது ஒரு சமாதியும் கட்டப்பட்டுள்ளது. அது நாயின் வடிவைப் போர்த்துலவிய அவனன்ளே ?

## வள்ளி

இதோ "வள்ளி" துள்ளி வருகிருள் ; சிதானந்த வெளியில் பரமானந்தத் திருநடம்புரியும் இவள் இன்பக் கோலத்தைப் பாருங்கள் !

"குன்றிடை யிவரும் மேகக் குழுவிடைக் குதிக்குங்கூடச்
சேண்றிடி னகலுந் தாழிற் றீண்டலாந் தகைமைத்தாகும்
நின்றதே போல நீங்கு நிதிவழி நேய நீட்டும்
மன்றலங் கோதை மாதர் மனமெனப் போயிற் றம்மா"

இச்சம்பச் சித்திரமான தங்கமானினும் துங்கமான் இதோ வருகிறது ; அவள் பூந்திருமேனியும் பொன்னொளிளமையும், மனத்தைக் கவரும் மாசறு வனப்பும், மாதர் விழியினும் வாள் விழி மலரும், எல்லா மான்களுக்கும்

உள்ள தேனும் "வள்ளியின்" உள்ளழகும் தனியழகே! சகுந்தலை வளர்த்த தீர்க்காபாங்கனை விட மிக அருமையாக பகவான் அவள் திருமேனியை வளர்த்ததுடன் அம்மானுக்குள் தானுன அம்மானையே பொலிவித்தார். அதற்குள்ளுள்ள அம்மானும் இதற்குள்ளிரும் இம்மானும் ஒன்றேயாதலின் இருவருள்ளுடம் நெகிழ்ந்த உள்ளன்பின் அருமை "ஆத்மவத்ஸர்வ பூதானி யஃ பஶ்யதி ஸ பஶ்யதி" என்னும் மஹாவாக்யத்தை யனுபவித்தோருக்கே விளங்கும். "வள்ளி, நீ தனியே போகாதே இங்கேயே இரு. எல்லோரும் சாப்பிடப் போகிறோம். வள்ளி! வா சாப்பிடு" என்று தனது செல்வியுடன் உறவாடுவார் பகவான். அருமையாகத் தடவிக் கொடுப்பார்; பகவானுடைய பூங்கரத்தினின்று பெருகும் சக்தியமுதை யுண்ணுவதுபோல வள்ளியின் கண்களில் உள்ளின்பம் சொக்கும்! வள்ளிக்குப் பொறி கடலை வைப்பதுண்டு. ஸத்தைக்கொண்டு அஸத்தை விலக்கும் ஞானி போலக் கடலையை மட்டும் பொறுக்கி யுண்டு பொறியை ஒதுக்கி விடுவாள்; வள்ளி பகவான் பக்கத்திலேயே படுப்பாள்; அவசர காரியங்களுக்கு ஜாடை காட்டி வெளியே சென்று மறுபடி தன் அம்மையப்பனிடம் அருமையாக வந்து இடங் கொள்ளுவாள். அனைவருடனும் வெகு அருமையாகப் பழகும் இச் செல்வக் கொழுந்தை, அந்தோ, ஒரு நாள் கொன்றருந்தும் கொடிய பாவி யொருவன் காயப்படுத்தினன்; காயத்துடன் அது பகவானிடம் சேர்ப்பிக்கப்பட்டது; உடனே வைத்யம் நடக்கிறது; நடந்தும் என்ன? இத்தகைய அருமையான வஞ்சமற்ற அழகு. கரவும், வஞ்சமும், கொலையும், புலவும் நாறும் இம்மண்ணுல

கிற்கு அரிதென்று அவளாவியை விண்ணுலகம் பற்றிச் சென்றது. ஜாக் நாயனார் சமாதிக்கருகே வள்ளியின் பஞ்சபூதக் கூடும் மண்ணிற் கலந்து ஒரு சமாதி கொண்டு றங்குகிறது.

## குரங்கு

இனிக் குரங்குக் கதைக்கு வருவோம். 1900-முதல் 1922-ம் ௵ மட்டும் மஹர்ஷிகள் குரங்குகளைக் குடும்பமாகக்கொண்டு ஆசிரமத்தில் அன்பு பாராட்டினார். அவைகளுடைய பேச்சு, நடத்தை, ஆடல், கூடல், சரித்திரம் எல்லாம் அவருக்குத் தெரியும். வானர ராஜ்யத்தின் நீதி பரிபாலனம், சட்டதிட்டங்கள், யுத்த தர்மம், உடன் படிக்கை, நியமனம் எல்லாம் அவருக்குத் தெரியும். ஒரு நாள் அவ்வினிய வநுபவங்களை யெல்லாம் வெகு விரிவாகச் சொன்னார். மஹர்ஷிகளையும் தங்கள் கிஷ்கிந்தாபுரி மஹாஜனங்களைச் சேர்ந்தவர் போலவே அவை அபிமானித்தன. மனிதர் கையிற் பிடிபட்டு அவர்களிடம் வளர்ந்த குரங்கை மீண்டும் அவை தம்முடன் சேர்ப்பதில்லை; ஆனால் ஆசிரமத்தில் வளர்ந்த குரங்கைமட்டும் அவைகள் விலக்குவதில்லை. அவைகளுக்குள் சண்டை நடந்தால் இருதரப்பாரும் ராஜிசெய்து கொள்ள மஹர்ஷிகளிடமே வருவது வழக்கம். ஒருநாள் ஒரு தடிக்குரங்கு ஒரு சிறு குரங்கைக் காலிற் கடித்துவிட்டது. அது நொண்டி நொண்டி விரூபாக்ஷ குகைக்குவந்து, அங்கு மஹர்ஷிகள் அன்பில் வளர்ந்தது. அதைப்பார்க்க நாலைந்து நாட்களில் மற்றக் குரங்குகள் வந்தன. தம்முடன் அதை உடனே சேர்த்துக்கொண்டன. அது முதல் குரங்குகள் விரூபாக்ஷ குகையின்முன் வந்து கிடைத்ததை யுண்டு

செல்லும். அந்த நொண்டிப்பயல்மட்டும் நேராக மஹர்ஷிகள் மடிமீது வந்து செல்லப்பிள்ளைபோல் உட்காருவான். அவன் வெகு நாஸூக்கானவன்; ஒரு பருக்கைகூடச் சிந்தாது கவனமாகச் சாப்பிடுவான். ஒருநாள் கீழே சாதம் எறிந்துவிட்டான்; அதற்காக மஹர்ஷிகள், "என்ன, சாதத்தை இறைக்கிறாய்" என்று அதட்டவே, நொண்டிப்பயலுக்குச் சுருக்கென்றது; மஹர்ஷிகள் கண்ணில் ஒரு அடி கொடுத்துவிட்டான். அது முதல் சில நாள் அவனை மடியில் ஏற்றிக்கொள்வதில்லை; பிறகு நொண்டிக்கோனார் மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சிக் கூத்தாடி மடிமேல் உட்கார்ந்தார். முன்னொருதரம் அவனது பால்கோப்பையை ஆற்றுவதற்காக மஹர்ஷிகள் உதட்டால் ஊதுகையில் நொண்டி கண்ணிலடித்தான். ஆனால் உடனே கெஞ்சிக்கூத்தாடி மன்னிப்புக்கேட்டான். இன்னொருநாள் குரங்குராஜா தனது பட்டத்திற்குரிய இரண்டு குரங்குகளை நீக்கிவிட்டது. பிறகு அதுவே இறந்துபோயிற்று; இறந்துபோகும்போது மற்ற இரண்டு குரங்குகளும் மரத்தின்மேல் இருந்து பார்த்துக்கொண்டிருந்தன. மஹர்ஷிகள் அக்குரங்கை இறக்கும்போது மடியில் தாங்கினார். இறந்தபோது அது ஒரு விதமாகக் கத்தியது; அதைக் கேட்டு முன்சொன்ன இரு குரங்குகளுந் துயரமுற்று அலறிக்கொண்டு வந்தன. இறந்த குரங்கைப் பாலாற் குளிப்பாட்டிப் பாடையில் வைத்துப் புதுத்துணி போர்த்து, விபூதியிட்டு, சூடன் கொளுத்தி, சிவக்கோலத்துடன் ஸமாதி வைத்து, மேலே ஒரு கல்லையும் நடச்செய்தார் மஹர்ஷிகள். பிறகு வானர ஸமுதாயத்தினர் தமக்குள் நீண்டநேரம் தீர்மானித்து ஒரு ராஜாவை

யேற்படுத்திக்கொண்டனர். நொண்டியின் பட்டாபிஷே கத்தன்று ஆச்ரம மரம் முழுதும், அவற்றின் குதூகலத்தில் மொட்டையாய் விட்டது. பழைய ராஜாவின் ராணிகளும் புதிய ராஜாவினிடம் சென்றனர். ஒவ்வொரு குரங்கும் புதிய ராஜாவிற்கு வணக்கஞ் செய்து, ராஜவிஸ்வாஸத்திற்கு அறிகுறியாக, அரசக் குரங்கின் குறியைத் தொட்டு முகத்தைப் பின்புறம் திருப்பிச் சென்றது. அன்று ஆசிரமத்தில் குரங்கு விருந்து நடக்கையில், ராஜாக்குரங்கு, முதலில் தனது ராணிகள் உணவைத் தொட்ட பிறகே தான் உண்ணத் தொடங்கிற்று. இப்படிப் பல விநோத விஷயங்கள் குரங்கைப்பற்றி நடந்தன.

இக் குரங்கு ராஜாக்களிடமிருந்து நான்குமுறை தாம் கடி வாங்கியதாகச் சொல்லி, பகவான் இன்னும் அத்தடங்களைக் காட்டுவார். ஒருநாள் பகவான் அடியார்களுடன் கிரிப்பிரதக்ஷிணஞ்செய்து பிற்பகல் வெய்யிலில் பசிக் களையோடு பச்சையம்மன் கோவிலருகு வருவதை காட்டினின்றுங் கம்பீரமா யவ்வழிப் போந்த குரங்கினங் கண்டு அருகிருந்த நாவல் மரத்தின் கிளைக்கொன்றேறிப் பழங்களைக் குலுக்கி வீழ்த்தி யிறங்கிச் செல்ல அவற்றைப் பொறுக்கியுண் டனைவரு மாறுதலுற்றனர்.

இம்மட்டோ! காக்கைகளும் அணில்களும் தங்கள் குஞ்சுகளுடன் பகவானின் கையில் வந்து அன்புடன் உட்கார்ந்து, அவர் ஊட்டுவதை யுண்டு, தமது குஞ்சுகளுக்கும் ஊட்டும். பாம்புகள் கூட பகவானை நேசித்தன. ஸ்கந்தாசிரமம் புஜங்க ராஜதானி. மஹர்ஷிகள் பக்கத்திலேயே நாகராஜாக்கள் நடமாடுவர். "அவர்களிடத்திற்கு நாம் குடிபுகுந்தோம்; அவர்களைத் துன்புறுத்த நமக்கு பாத்

தியமில்லை" என்று பாம்புகளுக்கும் சுயராஜ்யம் கொடுத்து வந்தார் பகவான். ஒருநாள் ஒரு நல்லபாம்பு படமெடுத்து வந்தது; அழகம்மையார் கண்டு பதறி நடுங்கினாள். மஹர்ஷிகள் அதன் பக்கத்திற் சென்றார்; பாம்பு பின்னே நகர்ந்து ஒரு பாறைப் பொந்தில் நுழைந்தது. மஹர்ஷிகளும் அதை நோக்கிக்கொண் டிருந்தார். திடீரெனப் பாம்பு படமெடுத்து மஹர்ஷிகளைப் பார்த்தது; மஹர்ஷிகளும் சிலநிமிஷங்கள் அதைப் பார்த்தார்; கண்ணோடு கண் உறவுகொண்டது. நாகம் உடனே மஹர்ஷிகளை நோக்கி ஊர்ந்தது; தம் காலுக்கு ஸமீபத்தில் வந்ததும், மஹர்ஷிகள் காலைப் பின்னே சற்று இழுத்துக் கொண்டார். உடனே பாம்பு திரும்பித் தன் வழியே சென்றது. மூன்றுமுறை மஹர்ஷிகளைத் தேள் கொட்டியும் வலியில்லை; தேளைக் கண்டால் அதைப் பிடித்து பத்திரமாக வேறிடத்திற் கொண்டுபோய் விட்டுவிடுவது வழக்கம். ஒரு நாள் மலைமீது வெகுதூரம் ஒரு தனிவழியே ஏறும்போது மஹர்ஷிகளின் தொடை ஒரு குளவிக்கூட்டிற் பட்டு விட்டது. உடனே குளவிகள் புஸ்ஸென்றெழுந்து, சினந்து மஹர்ஷிகளைத் துரத்திவந்து, எந்த இடம் தமது கூட்டிற் பட்டதோ அந்த இடத்தைப் பலமாகக் கொட்டின! மஹர்ஷிகள் நடந்த களைப்புடன் அங்கேயே உட்கார்ந்து, "ஆம், ஆம், இந்தத் தொடைதானே கூட்டைத்தட்டியது; அது வருந்தட்டும்; கொட்டுங்கள்" என்றுசொல்லி சாந்தமாயிருந்தார். ஆத்திரந்தீரச் சதையைத் துளைத்துக் கொட்டிக் குளவிகள் சென்றன. வலியைப் பொறுத்துக்கொண்டு ஆசிரமம் வந்தார். பொறுமை, பொறுமை! இதனினும் பொறுமை யெது?

*முற்காலம் ஸதாசிவப்ரஹ்மேந்திரர்மீது அறியாப்பிள்ளைகள் நாயை ஏவியதால் அது அவரைக் கடித்தது. கடியைப் பொறுத்தார். அது நாய்ச்சொறியாக வளர்ந்து நோவீந்து கால் புழுக்கத் தொடங்கியது. புழுத்த புழுக்கள் உதிர்ந்தன; ஆனால் ஸதாசிவர் விழுந்த புழுக்களை மீண்டும் தமது புண்ணில் எடுத்து விட்டுக்கொண்டார். "உடலே, உன் கர்மத்தை சாந்தமாக மீதிவைக்காமல் அனுபவி!" என்றார். அத்தகைய பொறுமையும் அஹிம்ஸையும் இப்போது மஹர்ஷிகளிடமே காண்கிறோம்.*

அன்பேதா ஞானுனைத்துந்தா ஞனேனிலோ
துன்பே தகைத்துடைத்த லேன்?

*நமது யோகசாஸ்திரங்களில் பிராணிகளின் பேச்சுக்களையும் உணர்வுகளையும் அறிய ஸாதனங்கள் சொல்லப் பட்டுள்ளன. பதஞ்சலி யோகஸூத்ரம், ௩-வது அத்யாயம், 17-வது ஸூத்ரம் அடியில் வருமாறு:*

"ஶப்தார்த்த ப்ரத்யயாநா மிதரேதராத்யாஸாத் ஸங்கர
ஸ்தத் ப்ரவிபாக ஸம்யமாத் ஸர்வ பூத ருத ஜ்ஞாநம்"

*"மொழியும், பொருளும், குறியும் ஒன்றே; ஏனெனில் ஒன்றுக்கொன்று இணைப்புள்ளது. அவற்றின் விபாகங்களில் ஸம்யமத்தால் எல்லா வுயிர்ப்பிராணிகளின் சப்தங்களையும் அறியலாம்." ஆனால் மஹர்ஷிகள் இத்தகைய ஸம்யமத்தால் அறியவில்லை. இதனினும் மேலாக, எல்லாவற்றுள்ளும் விளங்கும் ஆன்மாவைத் தன்மயமாக அறிந்தே அவ்வவற்றுடன் அதுமயமாக உறவு கலக்கிறார்!*

எறும்புமுத லீசனு ரீருக வோன்றே
வரம்பிலாச் சின்மயத்தின் வாழ்வு.

சின்மயம்

ஸ்ரீராகம் - ரூபகதாளம்.

பல்லவி

சின்மயானந் தஸ்வரூபனே—ஸத் குருநாதனே (சின்)

அநுபல்லவி

திண்மையாயுன் பாதம்போற்றிச் சிற்சுகானந் தத்திலூற்றில்
கன்மனங்க ரைந்துதூய வென்மயந்தி கழ்ந்துநின்றேன்
(சின்)

சரணம்

சித்தசுத்தி வந்ததுன்றன் றெய்வ நோக்கினால்
சிந்தையெல்லாந் தீர்ந்ததுன்றன் செய்ய வாக்கினால்
தத்துவத்தை யுட்பொருளை மெத்தவுமெ ளிதிற்காட்டித்
தானதுவென் றிலகுமோனா சரணஞ்சரணம் சரணஞ்சரணம்
(சின்)

## ௩௮. அருணாசல பரமஹம்ஸர்.

"ஒசித்தகொடி யனையேற்குக் கிடைத்தபெரும் பற்றே !
யுண்மயங்கும் போதுமயக் கொழித்தருளுந் தெளிவே
பசித்தபொழு தெதிர்கிடைத்த பாற்சோற்றுத் திரளே !
பயந்தபொழு தெல்லாமென் பயந்தவிர்த்த துரையே !
நசித்தவரை யெழுப்பவருள் நல்கியமா மருந்தே !
நான்புணர நானாகி நண்ணியமெய்ச் சிவமே !
கசித்தமனத் தன்பர்தொழப் பொதுநடஞ்செய் யரசே !
களித்தெனது சொன்மாலை கழலிலணிந் தருளே."



ஜோதிச் சிவமயமாய்த் தோன்றியெனை யாளுக்கி
யேதங் கெடுத்தா னிறை.

கோடையிலே யிளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே! தருநிழலே! நிழல் கனிந்த பழமே! ஓடையிலே யூறுகின்ற தீஞ் சுவைத் தண்ணீரே! உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே! வாட்டந் தவிர்த்து வாழ் வளித்த நிதியே! என் நாவகத்திற் கரையாத கற்கண்டே! கதிக்கு வழி காட்டுகின்ற கண்ணே! நானென்றுந் தானென்றும் நாடாத நிலையில் ஞானவடிவாய் விளங்கும் வான நடுநிலையே! பார்த்தாலும், படித்தாலும், பக்கநின்று கேட்டாலும், பரிந்து உள் உணர்ந்தாலும், பதம் பிடித்தாலும் இத்தனைக்கும் தித்திக்கும் இன்னறிவுச் சுகமே! எண்ணாத மந்திரமே! எழுதாத மறையே! ஏறாத மேனிலைநின் றிறங்காத நிறைவே! அருளரசே! அருட் குருவே! அருட்பெருஞ் சோதியே! தனிப்பெருங் கருணையே! கல்லார்க்குங் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே! எல்லார்க்கும் பொதுவாய்விளங்கும் பரமாத்மனே! என்று எத்தனை யன்பர்கள் ஸ்ரீ ரமணாச்ரமத்தின் காற்றைத் தமது ஆவியின் ஆர்வத்தால் நிரப்பி நமது அருணாசல பரமஹம்ஸரைத் தினமும் வாழ்த்துகின்றனர்!

ப்ரஹ்மார்ப்பணம் ப்ரஹ்மஹவிர் ப்ரஹ்மாக்நௌ ப்ரஹ்[மணாஹுதம்
ப்ரஹ்மைவ தேந கந்தவ்யம் ப்ரஹ்மகர்ம ஸமாதிநா

யக்ஞத்தில் அர்ப்பணம் செய்யப்படும் வஸ்துக்கள் ப்ரஹ்ம சொரூபமே; அன்னம் நெய் முதலான ஹோமம் செய்யப்படும் பதார்த்தங்களும் ப்ரஹ்மமே; ப்ரஹ்மரூபமான அக்நியில் ப்ரஹ்மரூபனான யஜமானனால் செய்யப்

படும் ஹோமமும் ப்ரஹ்மமே; எல்லாம் ப்ரஹ்மஸ்வரூப மே என்கிற சித்தத்துடன் செய்யப்படுகிறவனால் அடை யத்தகுந்த பலமும் ப்ரஹ்மமே.

பகவத்கீதை அத். 4. சு. 24.

யோந்த꞉ ஸுகோந்தராராமஸ் ததாந்தர் ஜ்யோதி ரேவய꞉
ஸயோகீ ப்ரஹ்மநிர்வாணம் ப்ரஹ்மபூதோஅ திகச்சதி

தன்னிலேயே சுகிக்கிறவனும், தன்னிலேயே கிரீடிக் கிறவனும், தன்னிலேயே பிரகாசித்துக்கொண்டி ருக் கிறவனெவனோ, ஜீவன்முக்தனான அந்த ப்ரஹ்மநிஷ்டன் ப்ரஹ்மானந்தத்தை அடைகிறான். அத். 5. சு. 24.

ஜ்ஞான விஜ்ஞான த்ருப்தாத்மா கூடஸ்தோ விஜிதேந்த்ரிய꞉
யுக்த இத்யுச்யதே யோகீ ஸமலோஷ்டாஶ்ம காஞ்சந꞉

ஆத்மானாத்ம விஷயமான ஞானமும், ஆத்மானுபவ மென்கிற விஞ்ஞானமும், இவ்விரண்டினாலும் திருப்தி யடைந்த மனதை உடையவனும், மனோவிகாரமற்றவனும் இந்திரிய சுவாதீனமுடையவனும், மண், கல், தங்கம் முதலானவைகளை சமமாகப் பார்க்கிறவனுமான ஞானி யோகாரூடனென்று சொல்லப்படுகிறான். அத். 6. சு. 8.

ஸங்கல்பப்ரபவான்காமாம் ஸ்த்யக்த்வா ஸர்வாநசேஷத꞉
மநஸைவேந்த்ரியக்ராமம் விநியம்ய ஸமந்தத꞉

சங்கற்பத்தினாலுண்டாகும் சகல விஷயாசைகளையும் முற்றிலும் விட்டு, விவேகத்தையுடைய மனதினால், சகல இந்திரியங்களையும் சகல விஷயங்களிலுமிருந்து திருப்பி, தைரியத்துடன் கூடின விடாமுயற்சியால், சுவாதீனமான புத்தியினால், மனதை ஆத்மாவில் (சுவானுபவத்தில்)

இருக்கும்படி செய்து கொஞ்சம் கொஞ்சமாய் அப்பியாச விசேஷத்தினால், வெளி விஷயங்களிலிருந்து மனதைத் திருப்பவேண்டியது. ஆத்ம விஷயமான விஷயங்களைத் தவிர வேறொன்றையும் நினைக்கக்கூடாது. அத். 6. சு. 24.

ஸர்வபூதஸ்தமாத்மாநம் ஸர்வபூதாநி சாத்மநி
ஈக்ஷதே யோக யுக்தாத்மா ஸர்வத்ர ஸமதர்சந:

சகல வஸ்துக்களிலும் ஏற்றக்குறை வில்லாமல், சம புத்தியாய்ப் பார்க்கிறவனும், தியான யோகத்தில் ஏகாக்கிர சித்தத்தை யுடையவனுமான யோகியானவன் தன்னைச் சகல பூதங்களிலுமிருக்கிறவனாகவும், தன்னில் சகல பூதங்களுமிருக்கிறதாகவும் தெரிந்துகொள்வான்.

அத். 6. சு. 29.

இந்த ஸ்வரூபத்துடன் கூடிய பகவத் ஸந்நிதானம்

"மன்மநா பவமத்பக்தோ மத்யாஜீமாம் நமஸ்குரு
மாமேவைஷ்யஸி ஸத்யம்தே பிரதிஜாநே ப்ரியோஸிமே"

என்பேரில் மனதையுடையவனாகவும், என்னுடைய பக்தனாகவும், என்னை யாராதிக்கிறவனாகவும், என்னையே நமஸ்கரிக்கிறவனாகவு மிருப்பாயானால் என்னையே யடைவாய்: எனக்கு நீ இஷ்டனாகையால் உனக்காக நிஜமாய் பிரதிஜ்ஞை செய்கிறேன். அத். 18. சு. 65.

என்று அன்பருக்குத் துணிவு கூறுகிறது!

மஹர்ஷிகள் பொதுவாக விடியற்காலம் ௩-மணிக்கு எழுந்து காலைக் கடன்களை முடிக்கிறார்; ரமணாசிரமமும் பூபாளத்துடன் எழுந்து மந்தமாருதத்தை அருணாசல சப்தத்தாலும் ரமணகானத்தாலும் நிரப்பித் தன் காலை

வாழ்வை மங்களமாகத் தொடங்குகிறது. மஹர்ஷிகள் தமது தேகசுத்திகளை முடித்து ரு-மணிக்குத் தமது கட்டிலில் உட்காருகிறார். எப்போதும் அவர் ஸஹஜஸமாதியிலிருக்கிறாரெனினும் குளித்து, விபூதி பூசிக் குங்குமப் பொட்டிட்டு, சற்று க0 அல்லது கரு-நிமிஷம் அவர் அருட் சாந்தக் கண்களைக் காலைத் தாமரைபோலப் புலர்த்தி, ஸஹஜ நிஷ்டையி லிருக்குங் காட்சியிலேயே, அருணோதயம் தனது அழகு, சாந்தம், அமைதி, இன்பம், தெளிவு, சக்தி அனைத்தையும் வைத்து மிளிர்வதுபோலத் தோன்றும்! அன்பர்களும் அப்போது முன்னே உட்கார்ந்து தியானஞ் செய்வர். ரு-அல்லது சூ-மணிமுதலே அன்பர்கள் நாலாபக்கத்திலிருந்தும் பகவானைத் தரிசிக்கக் கனியும், தின்பண்டங்களுங் கொண்டுவரத் தொடங்குவர். ஆற்றொழுக்குப் போல அன்பர் வந்துகொண்டே யிருப்பர். காலை இட்டலி, உப்புமா, காப்பி, பலகாரங்கள் கொண்டுவந்து பகவானுக்கும் அன்பர்களுக்கும் சிலர் வழக்கமாகக் கைங்கரியஞ் செய்வதுண்டு. சிஷ்யர்கள் ஆசிரமவேலையைச் சுறுசுறுப்பாகக் கவனிப்பர். எல்லா வேலையும் யோகமே, இறைவன் அருட்பணியே. சுமார் க0-மணிக்கு பகவானும் சமையல் வேலைகளில் துணைசெய்வார். தமது சுத்தாத்வைத ஸமரஸப் பொதுவரசில் தாமும் எல்லாச் செயல்களும் புரிவார். ஆத்ம பரிபூரணம்போலவே பகவான் தொட்டதெல்லாம் பூரணமாயிருக்கும். அறுசுவை யுணவு பகவான் கையினு லாக்கப்பட்டால் அதில் ஏழாவது சிவானந்தச் சுவையொன்று ஸூக்ஷ்மமாகத் தோன்றும். அவ்வமுதை யுண்ணும் பேறு கிடைத்தோர் பண்ணும் தவம் வேறுளதோ? அன்பர்கள்

அதிகமாக வராதபோது அச்சுப்போலப் பாட்டுக்களை நகல் எழுதுவதும், கைத்தடிகள், யோகதண்டம், கமண்டலங்கள் செய்வதும், புத்தகங்கள் கட்டுவதும் (பைண்டு), இன்னும் மற்றப் பயனுள்ள வேலைகளும் பகவானால் அழகுறச் செய்யப்படும். ௧0-மணிக்கு மாத்ருபூதேஸ்வரர் பூஜையும், ஆராதனையும் நடைபெறும். கணபதிக்கும், முருகனுக்கும் வழிபாடுகள் நடக்கும். பகல் ௧௨-மணிக்கு அனைவரும் ஸமமா யிருந்து பகவானுடன் போஜனம் செய்வர். அவர் செய்வதெல்லாம் ப்ரஹ்ம சமாதியில் செய்யும் ப்ரஹ்மயஜ்ஞமே, சிவபூஜையே.

“ ஆத்மாத்வம், கிரிஜாமதி ஃ ஸஹசரா ஃ
ப்ராணா ஃ சரீரம் க்ருஹம்
பூஜாதே விஷயோப போக ரசநா
நித்ரா ஸமாதி ஸ்திதி ஃ
ஸஞ்சாரஃ பதயோ ஃ ப்ரதக்ஷிணவிதி ஃ
ஸ்தோத்ராணி ஸர்வாகிரா
யத்யத் கர்ம கரோமிதத்ததகிலம்
சம்போ தவாராதனம் ”

என்றதற் கிலக்காக மஹர்ஷிகள் நமக்கு நேரே விளங்குகிறார். மாலை ௩-மணியி லிருந்து பலவகைப் பண்டங்களுடன் அன்பர் வந்துகொண்டே யிருப்பர். பகவான் துளியுண்டதும், மீதி அனைவர்க்கும் ஸமபாகமாகக் கொடுக்கப்படும். செவிக்கும், மனத்திற்கும் விருந்து கிடைப்பதுடன், நாவிற்கும், வயிற்றிற்குங்கூட பகவான் ஸந்நிதியில் நல்ல விருந்து கிடைக்கும். நாவலர்களும் பாவலர்களும் பலவழிகளில்

இந்த அத்யாத்ம மன்னனின் துதிகளைப் பாடுவர்; ஆத்மப்பசியாளர் பலர் மௌனவிடை பெறுவர், அல்லது கேள்விகேட்டுத் தக்க பதிலைப் பெற்று அமைதியுறுவர். தங்கள் வித்வத்தை விளக்கப் பிரியமுள்ளோர் யோக ராஜன் ஸந்நிதியில் தமது கலைத்திறமைகளைக் காட்டுவர். இசைப்புலவரும், இசைப்பெண்டிரும், ஆசிரமப்பூம்பொழிலில் அகவுங் குயில்களும் விருந்தென வுவக்கப் பாடுவர்; ஆனால் இந்த அமளிகளின் பல ஸ்வரங்களுக் கிடையே மஹர்ஷிகளின் ஸஹஜநிஷ்டை நித்திய சுருதிபோல, ஓங்காரம்போலத் தானாக விடாது நடந்துகொண் டிருக்கும். இவற்றையெல்லாம் பாராது பார்த்து, கேளாது கேட்டு முறுவற் பரிசளித்து உவகை யூட்டுவார். ஸந்நிதானத்திற்கு மன்னர்களும், பெருஞ் செல்வர்களும், உயர்ந்த உத்யோகஸ்தர்களும் வந்து பணிந்துநிற்பர்; எனினும் அவர்களுக்கென்று தனி மரியாதை யில்லை. அந்த மஹா ஸமுகத்தில் அனைத்தும் ஒன்று. எல்லாந் தான்! இங்கு ஒரு மன்னர் இருப்பர்; அங்கு ஒரு பெருஞ் செல்வர்; பக்கத்தில் ஒரு ஸர்க்கார் அதிகாரி. மற்றொருபுறம் ஒரு பெருந் தமிழ்ப் புலவர். அவரருகே வடமொழிப் புலவர்; பன்மொழிப் புலவர். அதற்கடுத்துத் துறவிகள் தியானஞ் செய்வர்; பிறகு கிருஹஸ்தர்கள். அனைவரும் ஜாதி, ஆசிரம பேதமின்றி வீற்றிருப்பர். அனைவர்க்கும் இடையே நாய் சின்னக் கருப்பனும் ஸாஷ்டாங்கமாய் விழுந்திருப்பான்; லக்ஷ்மியும் சுதந்தரமாக உள்ளே வருவாள். எல்லாம் ஸமத்வம்! எல்லாம் ஸமானம்! எல்லாம் அன்பு நிறைவு! எல்லாம் ஓரருளின் திரள்! எல்லாம் ஒரு ஸமரசக் கதிரின் ஜோதி! மஹர்ஷிகள் ஒருபுறம் நிவேதனங்களைச் சிறிது

ருசி பார்த்துக் கொடுப்பார்; மறுபுறம் ஒரு கேள்விக்குத் தக்க பதிலுரைப்பார்; இன்னொருவர் உள்ளத்தை ஊடுருவி யறிவார்; மற்றொருபுறம் வித்வான்களுக்குத் தமது புன்னகையால் அருட்களிப்பூட்டுவார். சிலர் குடும்பத் துயரை யுரைப்பார்; சிலர் வியாபார நஷ்டத்தை முறையிடுவர்; சிலர் பிணிதீர்க்க வேண்டுவர்; சிலர் மனத்துயர்களுக்கு மருந்து கேட்பர். சிலர் மைந்த னிறந்த துயரை வருந்தி யுரைப்பர்; சிலர் விவகாரம் பேசுவர்; சிலர் விதண்டாவாதமுந் தொடுப்பர். அனைவர்க்கும் பகவான் உள்ளறிந்து பேசுவர்; இன்றேல் மௌனமாக சாக்ஷி வகிப்பர்.

பக்குவத்திற் கேற்பப் பயனுரையே பேசிடுக;
மிக்குரையா மோனம் விரும்பு.

ஆனால் எப்படியோ பகவானை அண்டிவந்த அன்பர் துயரம் ஆடிமேகம்போலப் பறக்கிறது! இதுதான் ஸந்நிதானப் பெருமை! அந்த யோகராஜனின் கொலுவிருக்கை உரையி லடங்காத உண்மைக் காட்சி. பகவான் ஒவ்வொருவருடைய எண்ணமும் நன்கு ஊடுருவி யறிகிறார். ஒரு சாஸ்திரியார் ஒருநாள் மஹர்ஷிகளைத் தரிசிக்கக் கனிகள் வாங்கி வரும் வழியில் ஒரு பழத்தைப் பிள்ளையாருக்கு மானஸீகமாக நிவேதித்து வந்தார். எல்லாப் பழங்களையும் மஹர்ஷிமுன் வைக்கவே, "இரு, கணபதிக்கு நிவேதித்த பழத்தைச் சாப்பிடுவோம்" என்று அதே பழத்தை யெடுத்து உண்டு பிரஸாதந்தந்தார்! அந்த சாஸ்திரியார் (குழுமணி-நாராயணசாஸ்திரியார்) தாம் எழுதிய ராமாயணத்தை பகவான்முன் படிக்க மனத்தில்

கின்றார். உடனே பகவான், "ராமாயணம் படிக்கட்டுமே" என்றார். சுத்த ஸம்வித் என்ற இந்த யோகசக்தி பகவானிடம் இயல்பாக இருப்பதற்கு எத்தனையோ உதாரணங்களை இதுவே கண்டிருக்கிறது.

## கிரிப்ரதக்ஷிணம்

சில நாட்கள் மஹர்ஷிகள் கிரிப்ரதக்ஷிணத்திற்குப் புறப்படுவார். சீடர்களுங் கூடப் புறப்படுவர்; அன்பர்கள் சிலர் அருணாசலஸ்துதிபஞ்சகத்தை ஆவேசமாய்த் திசையெல்லாம் எதிரொலிக்கப் பாடுவர்; சிலர் இன்னிசைக் கருவிகளுடன் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய அருட்பாக்களைப் பாடுவர். சிலர் ஆனந்த நடனம் புரிவர். சிலர் வணங்கி வணங்கிச் செல்வர்; சிலர் அங்கப்ரதக்ஷிணஞ் செய்து செல்வர்; மலையைச் சுற்றியுள்ள எட்டுமைல் வட்டமும் இத்தகைய வைபவங்களால் நிரம்பியிருக்கும். மஹர்ஷிகளே அனைத்திற்கும் நடுநாயகமாக நக்ஷத்திரங்களாற் சூழப்பட்ட களங்கமற்ற ஆத்மஜ்ஞான பரிபூரண சந்திரன்போலச் செல்வார். மஹர்ஷிகள் அப்போது மிகவும் மெதுவாக மணிக்கு ஒருமைல் வீதம் நடப்பார்; சில ஸமயம் பிரதக்ஷிணம் முடிவதற்கு இரண்டு நாட்களும் ஆகும். சில ஸமயம் இரவிலும் சுற்றுவர்; ஆங்காங்கு பக்தர்கள் விடுதியளித்து, விருந்துகளால் உபசரிப்பர். இவை அனைத்திற்கு மிடையே உண்மையன்ப ருள்ளம் பகவானின் அருணாசல அஷ்டகத்திலும், அருணாசல பஞ்சரத்நத்திலும் பொதிந்து பொலியும் பொருளையே மனனஞ் செய்து செல்லும். அவற்றில் இரண்டு மேற்கோள்களை மட்டும் கையாள்வாம்.

"மணிகளிற் சரடேனை வுயிர்தோறும் நானு
மதந்தோறும் ஒருவனு மருவினை நீதான்
மணிகடைந் தெனமன மனமெனுங் கல்லின்
மறுவறக் கடையநின் னருளொளி மேவும்
மணியொளி யெனப்பிறி தொருபொருட் பற்றும்
மருவுற லிலைநிழற் படிதகட் டின்விண்
மணியொளி படநிழல் பதியுமோ வுன்னின்
மறுபொருள் அருணநல் லொளிமலை யுண்டோ!"

"கடலெழும் எழிலியாற் பொழிதரும் நீர்தான்
கடனிலை யடைவரை தடைசெயி னில்லா
துடலுயி ருனிலெழு முனையுறு வரையில்
உறுபல வழிகளில் உழலினும் நில்லா
திடவெளி யலையினும் நிலையிலை புள்ளுக்
கிடநில மலதிலை வருவழி செல்லக்
கடனுயிர் வருவழி சென்றிட வின்பக்
கடலுனை மருவிடு மருணபூ தரனே!"

ஒருநாள் அவர் மலைவழியே வந்துகொண்டிருக்கையில், ஒரு பெண்மணி, அவர் கால் நோவ நடப்பதற்கு வருந்தி, "ஏனய்யா, சும்மா இருந்தவிடத்திலே இருக்கக்கூடாதா" என்று பொருள்படும்படி இடித்துரைத்தாளாம்; அவ்வுரையால் பகவான் வெளிச்செல்வதில்லையென்று நம்புதற்கிடமில்லையாயினும், சிலகாலமாகப் புறம் போகாது ரமணாசிரமத்து எல்லைக்குள்ளேயே பகவான் நடமாடி வருகிறார். மேலும், பகவான் எப்போதும் ஸமாதிஸ்தராக உடல் மறந்திருப்பதால் வெளியே செல்வதும் சிலஸமயம் அபாயமாயிருக்கிறது. ஒருநாட் காலை க௦-

மணிக்கு பகவான் சில சீடர்களுடன் பச்சையம்மன் கோயிலினின்று எண்ணெய் முழுக்காடி ஆமைப்பாறைக் கருகே வருகையில் மயக்கம் வந்துவிட்டது ; முன்னிருந்த இயற்கைக் காட்சிகளெல்லாம் மறைந்தன ; ஒருவெள்ளைத் திரை தன்முன்னுள்ள காட்சியனைத்தையும் மறைத்தது. பகவான் அவ்விடமே நின்றுவிட்டார் ; அந்த வெள்ளைத் திரை சற்று விலகியதும் நடக்கத் தொடங்கினர். பிறகு இருளும் மயக்கமும் வந்தன ; ஒரு பாறையின்மீது பகவான் சாய்ந்துகொண்டார். மூன்றுமுறையும் அப்படியே வரவே, அங்கேயே உட்கார்ந்தார் ; பிறகு பிரகாசமான வெள்ளைத்திரை பார்வையை மூடியது ; தலைசுழன்றது ; இரத்தவோட்டமும் மூச்சும் நின்றுவிட்டன. தோலும் நீலமுற்றது ; அதுவே பிணநிறம் ; மேன்மேலும் தோல் கறுத்தது. கூட இருந்த வாசுதேவ சாஸ்திரியார் முதலியோர் பகவானுடைய நிலையைக்கண்டு இறுகத்தழுவி அழத் தொடங்கினர்கள். அப்போது அங்கு நடப்பதெல்லாம் பகவானுக்கு நன்கு தெரிந்தது : தோல் கறுத்ததுந் தெரிந்தது ; இரத்தமும் மூச்சும் நின்றுவிட்டதுந் தெரிந்தது ; உடம்பு வரவரக் குளிர்வுற்றது ; இருப்பினும் ஸஹஜநிஷ்டை நடந்துகொண்டேயிருந்தது. (ப்ரஹ்மாகாரம்சுழன்று கொண்டேயிருந்தது). பகவான் அஞ்சவில்லை ; உடலுக்கு வருந்தவுமில்லை ; கண்ணை மூடிக்கொண்டே உட்கார்ந்துவிட்டார் ; உடலும் அப்படியே யிருந்தது ; இப்படி கo, கரு-நிமிஷங்கள் கழிந்ததும், உடலில் ஒரு அதிர்ச்சியுண்டாகி உடனே அதிவிரைவாக ரத்தம் ஓடத் தொடங்கியது ; சுவாஸமுந் திரும்பியது. உடம்பு முழுதும் நன்ருக வேர்த்தது ; தோலும் பழைய நிறமுற்றது. பிறகே கண்

மலர்ந்து, “இனிச்செல்வோம்” என்று பகவான் நடந்து விரூபாக்ஷ குகையை யடைந்தார். இப்படி இரத்தமும், மூச்சும் நின்ற மயக்கம் இதுவொன்றே. திடீரென்று இப்படிப்பட்ட ஸம்பவங்கள் நேர்வதால், ஸஹஜஸ்திதியில் உடலை மறந்த பகவான் அதிக தூரம் வெளிச்செல்லாதிருப்பதே அன்பர்களின் கோரிக்கையுமாகும்.

## ௩௬. அன்பர் ஆர்வம்.

இனி ரமணஸங்கத்தை நோக்குவோம். ஆத்மஸமர்ப்பணத்துடன், உள்ள பொருள் அறிய வந்து பகவானின் அடிநிழலில் சீடராகத் தங்கித் தவமிருப்போர் பலர். இவர்கள் தனிச் சரிதைகள் பலப்பல. அநுக்ரஹம் பெற்று ரமணஸங்கத்தில் விளங்கும் அன்பர் அனைவர்க்கும் வணக்கம்! அவர்களில் ஆத்மஸித்தியைமட்டும் நாடி உள்முகமாகி அனைத்தையுந் துறந்த யோகிகளை முன்னணியில் வைத்து வணங்குவோம். இவர்களிற் சிலர் ஸந்நிதானத்திலேயே யோகம் பயின்று வருகின்றனர்; சிலர் மலைக்குகைகளில் அருந்தவங் கிடக்கின்றனர். சிலர் ஊரில் பிக்ஷையெடுத்துண்டு கோயில் மடங்களில் தங்கித்தவம் புரிகின்றனர். சிலர் அநுக்ரஹம் பெற்றுத் தத்தமக்கு ஸௌகரியமான வெளியூர்களில் தங்கி ரமண யோகத்தைப் பயில்கின்றனர்; அருணாசலேசரை ஒருமுறை தரிசித்து, “அப்பா வந்துவிட்டேன். என்னையாட்கொள்வாய்” என்று பகவான் சொல்லி, அவ்வளவில் தன்னுள் ஆழ்ந்து தனக்கு

ஏற்றவிடத்தில் ஊன்றி ஸமாதியி லிருந்ததுபோலவே, பகவானின் இருந்தபடி யிருக்கும் திருக்கோலத்தையும், தக்ஷிணாமூர்த்தத்தையும், சின்முத்திரையையும், ஹம்ஸோபதேசத்தையும், மோன நிறைவையும், ஸஹஜநிஷ்டையையும், பார்ப்பவனையே பார்த்திருக்கும் பார்வையையும், உதித்தவிடத்தில் ஒடுங்கியிருக்கும் சாந்தத்தையும், ஒருமுறை தெளிந்துகூர்ந்த அறிவாற் கண்டு, உண்டு, நிறைந்து அவ்வானந்தத்தைக் கொண்டு, தமக்கேற்ற உறைவிடங்களிற்சென்று, அத்யாத்மயோகம் பயின்று நின்று ஸித்தி பெற்று நிலவுவாரும் இரண்டொருவர் உண்டு.

ஆனால் மஹர்ஷிகள் ஒருவரையும் சிஷ்யனாக ஏற்று இதுகாறும் தீக்ஷை கொடுத்ததில்லை. தாமே சுயம் பிரகாசராக விளங்குகிறார். ஒரு அகண்ட ஜோதி எரிகிறது. வேண்டுவோர் அதில் மனவிளக்கை யேற்றிக் கொள்ளலாம். ஒரு அறிவுப்பாற்கடல் அருளலை வீசி யொளிர்கிறது. அமைதியின்பம் வேண்டுவோர் தூய அன்பால் அள்ளி வேண்டுமட்டும் பருகலாம். 1922-க்கு முன்னே வந்த சீடர் சிலரைப்பற்றி ஏற்கெனவே விவரித்துள்ளோம். தனித் துறவுக்கோலம் விரும்புவோர் அனைவரையும் அவர் எளிதில் அனுமதிப்பதில்லை. ஸமூகத் தொண்டு, குடும்பப்பணி இவற்றிலும் அவருக்கு வெறுப்பில்லை; தாமே ஆசிரமத்தில் பல பணிகள் அனைவருடனுஞ் சேர்ந்து செய்கிறார். தமது அருட்குடும்பத்தை அவர் அருள் வல்லபத்தால் தாங்குகிறார். ஒரு அன்பர் மஹர்ஷிகளின் உபதேசப்படியே நடக்க முயன்றார்; எனினும் முடியவில்லை. மஹர்ஷிகளைப்போல வைராக்கியம் வந்தால்தான் அவர் ஸந்நிதிக்குச் செல்வதெனத் தீர்ம

ளித்து நெடுநாள் பகவானைத் தரிசியாமல் இருந்துவிட்டார்; காந்தத்தை நீத்த இரும்பு துருப்பிடிக்கத் தொடங்கிற்று. உடனே மஹர்ஷிகளிடம் ஓடி வணங்கினார்; மஹர்ஷிகள் இலை தைத்துக்கொண்டிருந்தார்; அன்பன் மனத்தை யறிந்து சிரித்து, "இந்த இலையைப் பிரயாஸப்பட்டுத் தைக்கிறோம்; அதன் காரியமானதும் விட்டெறிந்து விடுகிறோம்" என்று, அதுபோலவே வாழ்வை ஒன்றுசேர நடத்திக் காரியமானதும், உண்மை ஞானம் நிறைந்ததும், உலகவாழ்வு எச்சிலென்று தோன்றியதும் அதை விடவேண்டும் என்ற பொருளில் இலையைப் பற்றிச் சொன்னார்.

"கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்."

பெண்டு பிள்ளைகள் வருந்த, ஒருவர் தற்சமய வைராக்கியத்தால் துறவு பூண்பதை மஹர்ஷிகள் ஒப்புவதில்லை; அவர்களுக்கு சரியான புத்தி புகட்டி யனுப்புவார். உண்மை விரக்தியுடன், உண்மைப் பொருளை யடையச் சில முமுக்ஷுக்கள் பூர்வ ஜன்மத்தில் விட்ட குறையால் மஹர்ஷிகளை யடுத்து, விசாரமார்க்க முபதேசிக்கப்பெற்று நின்று நிறைவுறுகின்றனர்.

எத்தனையோ நல்லோர்கள் ரமணஸங்கத்தை அணியுறுத்துகின்றனர். சிலர் அல்லும் பகலும் ஸ்ரீ நிரஞ்சனானந்தஸ்வாமிகளுடன் பகவத் கைங்கரியத்தில் ஈடுபட்டுக் கர்மயோகம் புரிகின்றனர். ஒவ்வொருவரும் பகவானின்

அருட்பிரகாசரே. எவரைச் சொல்லி எவரை விடுவது! ஒவ்வொருவரும் பேரின்பத்திற்கு ஆருப் பசியுடன் தங்களுக்கு முடிந்த துறையில் ஸாதனஞ் செய்பவர்களே.; பகவானின் சீடர் தொகை உலகின் ஜனத்தொகையேயாகும். காலமும் வரும். இப்போதே கணக்கற்ற பெரும் செல்வர்கள் பகவானின் ஞானப் புதல்வராகப் பல திசைகளிலும் விளங்குகின்றனர். மேனாட்டினின்றும் பல அன்பர்கள் பகவானைக் கண்டு அடியராகின்றனர். பகவானை உயிராயும் அன்பரனைவரையும் அன்புடலாயுங் கொண்ட ரமண ஸங்கத்திற்குப் பொதுவாக வணக்கம்! அது யோகச் செல்வஞ் சிறந்தொளிர்க. பகவானிடம் ஒருமுறை யீடுபட்ட அன்பருள்ளம் ரமணக் காதலினின்று மீளாது! அக் காதற்கனல் நித்யானந்த வீட்டில் தூய வேள்வித் தீயாக என்றும் சுடரோங்கி வளரும்.

“ உன்னைமறந் திடுவேனோ மறப்பறியேன் மறந்தால்
உயிர்விடுவேன் கணந்தரியேன் உன்ஆணை இதுநீ
என்னை மறந்திடுவாயோ மறந்திடுவாய் எனில்யான்
என்னசெய்வேன் எங்குறுவேன் எவர்க்குரைப்பேன் எந்[தாய்
அன்னையினும் தயவுடையாய் நீமறந்தாய் எனினும்
அகிலமெலாம் அளித்திடும்நின் அருள் மறவா தென்றே
இன்னும்மிகக் களித்திங்கே இருக்கின்றேன் மறவேல்
இது தருணம் அருட்சோதி எனக்கு விரைந்தருளே. ’

என்றவாறு எங்கிருப்பினும் அன்பருள்ளக் காதல் கனன்றுகொண்டே யிருக்கும்.

மஹர்ஷிகள் (அருணாசல பரமஹம்ஸர்), மஹான்கள் எதை பக்தியாலும், அழுகையாலும், ராஜயோகத்தா

லும், கர்மயோகத்தாலும், நெடுங்காலத் தியானத்தாலும் பெற்றனரோ, அதைத் தம் இளமையிலேயே பெற்று அந்நிலையை ஸ்வாநுபவத்தால் ஸஹஜநிலை யாக்கிக்கொண்டார். அவரைக் காண்பதே உபதேசம். அவரே யோக ஸாதனமும் ஸாத்தியமும். எல்லா மதங்களும், யோகங்களும் எதைத் தேடுகின்றனவோ, அப்பொருளே தானானதால், அவர் ஸர்வமத ஸமரஸச் சுடராக விளங்குகிறார்; வைணவர், சாக்தர், வேதாந்திகள், ஸித்தாந்திகள் முதலிய அனைவரும் அவரைக் கொண்டாடுகின்றனர். இஸ்லாமியரும், கிறிஸ்தவருங்கூட அவரை நம்புகின்றனர். மஹர்ஷிகள் அரிதாகவே பேசுகிறார். பேச்சிலும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார்; சிறிய வாக்கியங்களால் பெரிய பொருளைத் தெளிவிக்கிறார். ஒவ்வொருவர் மனத்தையும் அறிந்து அவரவர்க்கேற்ற ஸாதனங்களையே சொல்கிறார். யாரெனினும் அவர்முன் னுட்கார்ந்ததும் சில நிமிஷங்களில் அந்தர்முக திருஷ்டி யுண்டாகிறது. அவர் "நான் யார்" என்னும் ஆத்ம விசாரத்தையும், அதன் பயனாய் உதித்தவிடத்தில் ஒடுங்கியிருந்து உள்ளபடி இருத்தலாகிய ஆன்ம நிஷ்டையையுமே முதன்மையாக உபதேசிக்கிறார். யோகஸாதனத்தில் உள்ளே அனுபவிக்கும் நாதம், ஜோதி, தெய்வம் அல்லது சக்தி-வடிவங்கள் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது ஆழ்ந்து, இதயத்தில் ஆத்மஸ்திதியைப் பெறுவதையே அவர் உபதேசிக்கிறார். இந்த தேவதைகளை வரங்கேட்பதும் வேண்டாம். எல்லாம் யோகத் தடை. நேராக ஸஹஜ ஸமாதிக்கே அவர் ஞான சின்முத்திரையைக் காட்டி வீற்றிருக்கிறார். இந்த நிர்க்குணத்யானமே சிறந்த முறையாயினும், இது

மிகச் சிலர்க்கே ஸாத்தியம். ஆதலின் மஹர்ஷிகள் ஸகுணத்யானத்தையும் சிலருக்கு போதிப்பதுண்டு; "காயத்ரியும் நலமே. ஸவிதா என்பது சூரியனெனக் கொண்டு சூரியனையும் முதல்முதலாக தியானிக்கலாம்" எனச் சொல்வார். சங்கு (இடம்), சக்ரம் (காலம்), கதை (ஸர்வ வல்லமை) யுடன் கூடிய நாராயணனையும் தியானிக்கச் சிலருக்குச் சொல்வதுண்டு. ஆரம்பத்தில் ஏதாயினும் ஒரு ஸர்வவல்லமையுள்ள சக்திக்கு "நான்" என்னும் அகந்தையை முற்றும் அர்ப்பணித்து அதையே நம்பி தியானித்தால், மேன்மேலும் நிர்க்குணத்தை எட்டலாம் என்றும் அவர் உபதேசிக்கிறார். ரமணாச்ரமம் ஒரு ஸர்வசுதந்தர, சுத்த ஸமரஸவெளி. அதில் அவரவர், அவரவர் இச்சைப்படி ஆரம்பித்து, உறுதியாக நிலைத்து, அதனின்று அனைத்திற்கும் முடிவான ஆத்மஸ்திதியை யடையவே முயல்வர். மந்திரஜபம், தியானமூர்த்தி, சக்தி உபாஸனை முதலியவற்றைக்குறித்து ஆவலா யறியவேண்டியவர்களுக்கு மஹர்ஷிகள் துணைசெய்கிறார். எப்போதும் உயர்ந்த ஆத்ம நோக்கத்தையே மஹர்ஷிகள் முன்னே வைத்துக்கொள்ளச் சொல்வது. "மேன்மேலுஞ் செல்; கீழ் நோக்காதே. உன்னை நம்பு; பரமாத்மாவை நம்பு. உயர்ந்த முடிவிற்கே உழை; மற்றெல்லாம் தானாக வரும்" என்று மஹர்ஷிகளின் ஸந்நிதானம் ஒரு எழுச்சியைத் தருகிறது.

தமது பணிக்கே ஆத்மஸமர்ப்பணஞ் செய்து தம் அடிநிழலில் வீற்றிருக்கும் சிடகணங்களுக்கு, பகவான் இரவில் உபதேசஸாரம், உள்ளதுநாற்பது, ரிபுகீதை, கைவல்யநவநீதம் முதலியவற்றைப் படிக்கச்சொல்லிப்

பொருள் விளக்குவார். சீடர்கள் பகவான் ஸந்நிதியில் நெடுநேரமிருந்து தியானஞ் செய்வர். சூரியனிடமிருந்து சூடு பரவுவதுபோல பகவானின் ப்ரஹ்மசக்தி அன்பரிடையே பரவி, அவர்களை ஆத்மவெள்ளத்தில் இயல்பாகவே ஆழ்த்தும்.

## அன்பின் ஆர்வம்

ப்ரஹ்மானுபூதிச் செல்வர்களே! ஒரு சூரியன் நம் முன்னுள்ளது. அதினின்று கோடிக்கதிர்கள் பரவுகின்றன. ஒவ்வொரு கதிரும் அவனுடைய சித்ப்ரகாசமே. அதுபோல நமது அன்புக்கதிர்கள் எந்த ஆத்ம சூரியனிடமிருந்து விரிந்தனவோ அதில் ஒருங்கே கலந்திருப்போம். ஆறுகள் ஆயிரமிடங்களிற் பிறக்கும்; ஆயிரக் கணக்கான ஊர்களை ஊட்டி எத்தனையோ பாறைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் விழுந்தெழுந்து புரண்டு முடிவில் ஒரு கடலையடையும். எத்தனை கோணல்களாக வளைந்து எங்கெங்கு திரிந்தாலும் முடிவில் ஆற்றின் அமைதி கடலே; ஆறுகள் தேடுவது கடலை. அதுபோல அகண்ட சச்சிதானந்தக் கடலில், ஊர், பேர், உறவு, சுற்றம், இசை, வசை, பெருமை, சிறுமை முதலிய முக்குண தொந்த விகாரங்களின்றிக் கலந்திருப்போம். இரவிக்கதிர்கள் உலகிலுள்ள பல நீர்த்தடங்களினின்று ஆவியிழுத்து மேகப் படலங்களை நெய்கின்றன. மேகமானபிறகு, நான் வங்காளக் குடாக்கடல் ஆவி, நான் அரபிக்கடல் ஆவி, நான் அட்லாண்டிக் சமுத்திரத்தின் ஆவி, நான் கங்கையின் ஆவி, நீ கேவலம் உப்புக்கிணற்றின் ஆவி, நான் படித்தவன் வீட்டு அண்டாத் தண்ணீரில் உறிஞ்சப்பட்ட ஆவி,

நீ நீசன்வீட்டு சாக்கடை நீரில் எழுந்த ஆவி என்று வேற்றுமை பாராட்டமுடியுமா? எங்கிருந்து எத்துணை ஆவி இழுக்கப்பட்டாலும் எல்லாம் ஒரே மேகப்படலமாகின்றன. ஒரு குளிர்காற்று பட்டவுடன், 'நீ முந்தி, நான் முந்தி' எனுமல் எல்லாம் சூல் மேகத்தில் நிரம்பிய வருணக்குழந்தைகள் இயல்பாக, ஒற்றுமையுடன், சங்கிலிக் கோர்வையாக உலகிற்கு இறங்கி வந்து உலகைப் பொன்னும் பச்சையும் நிலவச் செய்கின்றன. அதுபோலவே, அன்பர்காள்! நாமெல்லாம் எவரெவர் எங்கிருந்தாலினும், எத்தகையராயினும் பெயர்வடிவு வேற்றுமைகளை யெல்லாம் விட்டுப் பெயர்வடிவற்ற ஒரு அருள் மேகத்திற் கலந்து தென்றற் கரத்தால் ஞானபூமி நம்மைச் செல்லமாக அழைக்கும்போது, அவள் உள்ளம்குளிர ஞானக் கிண்கிணி சலசலென, நாம் செல்லும் வழியெலாம் ஆத்ம ஞான முத்துக்களும், பேரின்பப்பொன்னும் பசுமையும் குலுங்க ஜீவன்முக்தக்குழந்தைகளாக விளையாடுவோம். அவ்விளையாட்டில்அனைவரும் ஒன்றே. சாதி, நிறம், பிறப்பு, படிப்பு முதலிய புற வேறுபாடுகளின்றி, உள்ளொற்றுமையால், அகண்ட பரிபூரணானந்தத்தைக் கலந்து விளையாடுவோம். அன்பர்களே, ரமண சங்க மணிகளே! நீங்கள் ஒவ்வொருவரும் எவ்வளவோ பெருமைவாய்ந்தவர்கள். ஒவ்வொருவர் தனிச்சரிதையும் மகா பாரதம்போல் விரிந்து எத்தனையோ, சுகதுக்க, பந்த தொந்த, இன்ப துன்பப் படலங்களைக் கொண்டிருக்கலாம். அவரவர்க்கு அவரவர் மனச்சாட்சியே எழுதுகோல்; ஒவ்வொருவர் சித்தத்திலும் ஒரு சித்ரகுப்தன் உறக்கமற்று அவரவர் நினைப்பு, நடப்பு, சிறப்பு, வளப்பங்களைச் சுருள்சுருளாக

எழுதிவைத்துள்ளான். அவரவர் வாழ்வுச் சுருளை அவ ரவரே அவிழ்த்துப் பார்க்கட்டும். பெரியகவிகள், புலவர் மணிகள், அறிவுச்சுடர்கள், சிவப்பழங்கள், கல்விக்கடல் கள், செல்வச் சுரங்கங்கள், வைராக்கியக்குன்றுகள், அருட்பணி வீரர், பொதுப்பணி நல்லோர்—எத்தனையோ சேர்ந்து ரமண சங்கமாக இன்று விரிந்துள்ளது. ரமண கற்பகம் எத்தனையோ கிளை பரவி விரிந்து ஞானக்கனி குலுங்குகின்றது. அதில் எத்தனையோ கிளிகளும், குயில் களும், கருடன்களும், சிட்டுக்குருவிகளும் கனியுண்டு கூடு கட்டி வாழுகின்றன. அவை எங்கிருந்து எப்படி வந்தன என்று வினவ வேண்டாம். அவை இக்கற்பகத்தில் எப்படி வாழுகின்றனவென்றே காண்போம். நாமரூப பேதங்க ளெல்லாம் 'நாம் + அரூபம்' என்ற ஞானத்தில் கரைந்து அந்த ஞானக் கதிரவனை திருவருட்பெருமானின் அருட் கிரணங்களாக உள்ளும் புறமும் ஒளிவளர்வோம். இச் சிறு தோல் வேற்றுமைகளை மறந்து, ஆன்மக்கடவுளின் சுத்த சுதந்தர சமத்வ விதானத்தில் சத்தாகிய உண் மையை உடலாகவும், சித்தான அறிவை ஆற்றலாகவும், உட்புறக்களிப்பையே சிறகுகளாகவும் கொண்டு சொரூப த்யான மென்னும் காற்றையுறிஞ்சி அருட்கனி யுண்டு உலாவுவோம். அகமிருக்கும் மட்டும் மேல், தோல், பெயர் வடிவு, நிறம், ஏற்றத்தாழ்வு, சிறுமைபெருமைகள் அலை யலையாக அடிக்கும். இவற்றையெல்லாம் உதிர்த்து உலாவு வோம். நெபோலியன் சண்டை யென்கிறார்கள்; ஆனால் சண்டை செய்தவர்கள் கோடிக்கணக்கான படைவீரர். அவர்கள் தனித்தனி வீரச் செயல்கள்பல. ஒவ்வொருவ ரையும் குறிப்பிட்டு எழுதுவதெனில் கடலைப் படிகொண்டு

அளத்தலாகும். பலர் வடம் பிடித்திழுப்பது ஒரு ஆண்டவன் தேரை. பலர் பொருதி வெல்வது ஒருதலைவன்போரையே. பல அன்பர்கள் கூடிப் பெருமைப்படுத்துவது ஒரு பகவானையே. அவன் அருள் விரிவே யனைத்தும். அவனுடலே அன்பர். அவன் கழலடைந்தபிறகு அவர்கள் புதுப் பிறப்பெடுக்கிறார்கள். அப்பிறப்பிற்கு பெயர் வடிவு சாதி மதபேதமில்லை. அது ஆனந்தப் பிறவி. மனவிகாரமற்ற இதய வெளியில் அப்பிறவி இன்ப ஊற்று, ஆத்மானந்தம் பொங்குகிறது. அவ்வூற்றைக்கண்டு தாகந்தணிவோம். கண்ணாடி வீட்டிற் குடிபுகுந்த நாய்போல மனமாயை ஆன்மாவின் நிழலான இவ்வுலகத் தோற்றங்களைக் கண்டு வேறுபாட்டால் அஞ்சிச் சினந்து, வெறித்து, குரைத்து வாழ்வைத் தற்கொலை புரிகிறது. இம்மன மாயையொழிந்து தானே அனைத்தும், அனைத்தும் தன்னில் என்ற காட்சிப் பெருமானின் கழலிணை யடைந்த அன்பறிவுக் கனிகாள், நமது பெருமையெல்லாம் தத்வனத்தில் விளங்கும் இந்த ஜோதி கற்பகத்திற்காகுக. அனைவரும் அவனுட் கரைவோம். அறிவு, கல்வி, கவி, பேச்சு, எழுத்து, பலவகைப் பணிகள், தவம், அன்பு எல்லாம் அவனுக்கே நிவேதனமாகி அவன் பெருமை உலகில் விளங்கட்டும். அவன்பால் அவனுட் கலந்தோம். அவன் பெருமை நமது பெருமை. ஒரு பூர்ணாவதாரச் சந்திரனுடன் எத்தனையோ உடுக்கணங்கள் வைரமணிகள் போன்று அன்பு விண்ணிற் பரவியொளிர்கின்றன. எல்லா விண்மீன்களும் தமது தனித் தனிப் பெருமை எல்லையற்றதேனும், தமது அன்பு விண்ணில் அமுதப் புன்னகை புரியும் ஒரு அறிவுத்திங்களுக்கே அணியாகுக! அவனை

நமது ஆர்வத்தால் இவ்வாறு வணங்கி நமது அன்பு மலர் களால் வழிபடுவோம்.

" முந்தெம்மை யாண்ட முதல்வனே முத்திநலத்
தந்தையயே தாயே சரண்.
எந்தையயே யுன்றன் எழிலார் திருக்கருணைச்
சிந்தையலாற் சிந்தையிறந் தோம் "

இந்த யாக்கைக் கூண்டில் என்னுவிக்கிளி உன் சுத்த சுதந்திர ஸமத்வ விண்ணையே நாடி ஆர்வமுடன் கூவுகின்றது. உன்னை உள்ளறிந்து, உனது திருவருட் பணியை உலகிற் புரியவே உடல்கொண்டுள்ளோம். உனக்கே பிறந்தோம், உன்னடி பற்றிக்கொண்டு, உன்கருணை வானில் வளர்கின்றோம். இல்லையேல் எமக்கிருப்பில்லை. எல்லாரும் உன் வழிக்கே வரவேண்டும்; எல்லா ஆறுகளும் முடிவில் பூரஞானந்தவாரி சேரவேண்டும். இவ்வாழ்வு உனக்குவேள்வி. உன்னிச்சை எம்மை நடத்துக: நீ ஆட்டியபடி ஆடுகிறோம்; நீ காட்டிய குறிப்பிற் சாடுகிறோம். நீ கூட்டிய நெறியிற் கூடுகிறோம். எங்கள் வாழ்வுக்குதிரை உனது திருவவதாரப் பெருமையெனுந் தேரை யிழுக்கவே இதோ அணிசேர்ந்துள்ளது. அதன் கலினவார் உனது கருணை மலர்க்கரத்திலுள்ளது. உனது திருவடிக்கு எம்மையாளாக்கி உனது திருப்பணிபுரிந்து, அதனுல் உன்பெருமை நிலவும் இன்பமே எமது இன்பம். எங்கள் அன்பை ஊற்றி உனது ஞானப் பெருமையை உலகெல்லாம் வளர்க்கவருள். எங்கள் வாழ்வை வார்த்து உனது ஞானவொளியை உலகெல்லாம் கதிர்விளங்கச் செய்ய அவாவுகிறோம். உன் சிற்சுடரிலேற்றிய கோடிக்கணக்கான அறிவு

மணிவிளக்குகள் உலகெங்கும் நிலவி, ஆசை, பொறாமை வஞ்சம், வேட்கை, தன்னலம், சாதி சமய வேற்றுமை யாகிய இருள்மாயைப்படைகள், நானென்னும் ஆணவ வாளேந்தி உலகை இரணகளமாக்கி, வறுமை, மடமை அடிமைச் சுருள்களால் எங்கும் மூடிய துன்பக் காரிருளை விலக்கட்டும்! முப்பொருளையும் விழுங்கிய முழுப்பொருளே, சளசளக்கும் வம்பும், துடிதுடிக்கும் வீரியப்புயலும், மாயத் திரைகளிற் சிக்கிய பேயாட்டங்களும் எங்களைத் துன்பப் பாழுக்கு இரையாக்காது, முப்பாழுங் கடந்த உனது துரியாதீத வெளியில் வாழவருளாய்! அம்மையே, நினது அருள்விழியால் அறிவுப்பாலை எமதுள்ளத்திலூட்டி எம்மை உனது ஞான சம்பந்தராக்குவாயாக! தானுண்டு வேறில்லை யென்னுந் தனிமுதலே, நீயுண்டு நானில்லை யென்று எம்முள் உன்னையே யாமாகக் காண நீயே அறிவுவிளக்கா யொளிர்கின்றாய்; தன்னுள் தானாகி நிலைப்பதே இன்பம். அன்பு, அடைக்கலம்; மனத்திலொட்டாது சாட்சியாய்ப் பார்ப்பதே பார்வை. இதயகுகையில் மோனகுண்டத்தில் உண்மயக்கனலைத் தூண்டி, பரம சுத்தம், பரமஞானம், பரம கேவலம், பரம சுதந்திரம், பரம சமத்வம், பரம சத்யம், பரம ஜோதி யாகிய எழுசுடர் விளங்க, சக்திக் காந்தமாக, அதனருகே வீற்றிருக்கும் அலைவற்ற தனிச்சுகம் எங்களுக்கருளுக! 'இது செய்வேன், அது செய்வேன்' என்று பலவாறு இந்தப்பண்பற்ற "நான்" சங்கற்பப் புயலில் சுறங்கெனத்திரியாது, உன்னிச்சைக் கருவியாய் உன்னமைதியிலூன்றி உலக நாடகத்தைக் கட்சுமையின்றிக் காணும் சாட்சியான, காட்சியறிவை யருள்.

உலகில் எத்தனையோ இயக்கங்கள், சங்கங்கள், கூட்டங்கள், சாதி சமயக்குழாங்கள், அகங்கரித்து, அவிட்டு வாணம் போலப் பொறிபறந்து காலக்காற்றிற் கரிந்து பரந்து விழுகின்றன.

தன்னையறிந்து தானாக நிற்கும் நிலையறியாமல், தன்னையறிந்தொளிரும் சுத்தான்மக் கனலாக நிலவும் பரந்தாமத்தைக் காணாமல், அலையமர்ந்த ஒளிக்கடலில் மாணிக்க மலையிலக்காக நிலவும் அறிவின் முடியிலுள்ள பேரின்பத் தேனூற்றிற்கு வழிதெரியாது, இச்சிற்றுலகம், மனமயக்கமென்னும் மஹா மாயாவியின் அகட விகட சாமர்த்தியத்திலும், மண் பெண் பொன், என்னும் சொக்குப்பொடிகளிலும் மயங்கியலைகின்றதே! 'ஓராமல், ஓர் பொருளும் உன்னாமல் உள்வெளியிற் பாராது பார்த்திருக்கப் பாராய் பராபரமே!' எமது உள்ளக்கனியை உருகி யளிக்கின்றோம். தெள்ளறிவுத் தேனூற்றியுண்! அறிவரசே! உன்னை உலகம் பொன்னாலும், பொருளாலும், இனிய பண்டங்களாலும், மலராலும், புகழாலும், வழிபடுகின்றது. நாங்கள் எங்கள் அன்புமலரால் உன்னை வணங்குகிறோம்; எங்கள் அன்புளத் தாமரைகளைக் கோத்து உனது கருணை மார்பில் அணிவிக்கின்றோம். "நான்" என்று எமக்குள் முனைந்து நிற்பதை நினக்கு ஊனாக்கி நீ நானெனும் நிலை நிற்கிறோம். அறிவுக் குழந்தைகள் அன்பாலளித்த உறவின்ப முண்ணாய் உவந்து! எங்கள் வாழ்வை உனது திருவடி நிழலில் நட்டோம்; உன்னறிவொளியில், உன்கருணைமழையில் அது இயல்பாக வளர்க. உனது சிற்சக்தி இவ்விளஞ்செடிகளில் ஒவ்வொரு அறைகளிலும் நிறைந்து, தெய்வச்சுடர் மலர்கள் பூத்து,

சிவோஹக்கனி பழுக்கட்டும். அக்கனி உனக்கே யாகுக! சுத்த மூர்த்தியே ; தானே தானான தன்மயனே! எல்லா முன் சக்தி யியக்கமே யிவ்வுலகில்! எல்லா முன்னின்ப விரிவு! எல்லாமுன் அன்பிற்கனி! உன்னோடு கலந்து அன்னியமெண்ணாத் தனிமையருள்! காதலனே! உன் சிற்சுகானந்தத்தை அள்ளியணைந்து பேச்சு மூச்சற்ற மௌனமருள்!

எனது உடல், உயிர், மனம், விஞ்ஞானம், ஆனந்த கோசமெல்லாம் உனது ப்ரஹ்மாகார சக்தி கங்கைபோற் பாய்ந்து பரவுக! எவ்வித முயற்சியுமின்றி மூச்சுப்போல் இயல்பாக உன் தியானம் தொடர்ந்து நடக்கும் இன்பமருள். உள்ளத்தில் ஊன்றி உலகை அதுவாகப் பாராமல் பார்த்திருக்கும் இயலிருப்பை (சகஜநிஷ்டை) யருள். ஆத்மதேவனே, உனது அருநிதிச் சாலையில் மூழ்க மூழ்க எத்தனை அற்புதங்கள் கண்ணைப் பறிக்கின்றன! எங்கும் ஓங்காரம்! எங்கும் அருட்பெருஞ் சோதி! எங்கும் இன்ப வெள்ளம் பொங்குகின்றது! அப்பனே, உனது காந்த சக்தியால் எப்போதும் என்னை (மனங்கிளம்பாது) உன்னிலேயே அணைத்து வைத்துக்கொள்! உன்னற்புதத்தை யார் சொல்ல வல்லார்! உன்னையே வியப்பாகக் காண்கின்றனர்! உன்னையே வியப்பாகப்பேசுகின்றனர்! உன்னையே வியப்பாகக் கேட்கின்றனர்! கேட்டும் உன்னையறிவாரில்லையே! எது உயர்ந்த உண்மையோ அதுவே நீ! நீயின்றி எல்லாம் கானற்கடலில் எழுந்த கற்பனையலைகளே! கண்ணாற் காண்பவன் நீ! காதாற் கேட்பவன் நீ! நாவாற் சுவைப்பவன் நீ! மூளையில் நினைப்பவன் நீ! உள்ளத்தில் உணர்வு நீ! இனிப்பின் இனிமை நீ! ஒவ்வொன்றின்

உயிர்க்கும் உயிர் நீ! உனது அகண்ட ஜோதியிலேற்றிய விளக்கே ஞாயிறு! உனது புன்னகையுதிர்ந்த முத்தே சந்திரன்! சுத்தான்ம விளக்கே! நாங்கள் உனது மணி விளக்குகள்! உன் ஞானமணி விளக்குகள் ஒவ்வொரு உளத்தும் ஒளிர்க! அகண்டானந்த மின்மீட்டியே (Electric Battery) உன் மின்சாரம் உலகில் அற்புதங்கள் செய்க! துரும்பும் இரும்பு வலி பெறுக! இரும்பும் காந்தமாகுக! மண் பொன்னுகுக! நரன் அமரனுகுக! வானப் பசுவின்மடுவாகிய மேகம் அமுதம் பொழிக! அரசே, உன்னின்று உலகு வேறில்லை; உன்னினும் உலகத்திருப்போரில்லை; உலகிற்கு உன்னினும் நல்லுறவில்லை; உனது திருவருட் கனிகளாகிய எம்மை அருட்பணிச் சாறுகப் பிழிந்து இவ்வுலகின் பசியை நீக்கு! உனதிச்சையெனும் சாட்டை கட்டிய பம்பரங்கள் யாங்கள்; உனது திருலீலை விட்டத்தில் நீ சுண்டிவிட்டால் ஆடுகிறேம்; உனக்காக ஆடுகிறேம்; ஆடி அடங்குகிறேம்; அடங்கி உன்னறிவிற் சுகித்துச் சுடர்விடுகிறேம்; இதயமன்றில் இன்ப நடமிடும் அறிவரசே, நீ அறியாததுண்டோ! உலக நாடகங்கள் கோடி வகை, கண்ணைப்பிடுங்கும் காட்சிகள். போர், கொலை, குடி, கண்ணற்ற காமக்கூத்து, ஜாரம், சோரம், நன்மை, தீது, அறம், மறம், முதலிய எல்லாக் கூத்துகளுக்கும் நீ தீப சாட்சியா யிருக்கிறாய். அரசே, உனது தவக்கனல் உலகிடர்களை எரிக்கவேண்டும். உனது அனல், மாயையிலுறங்கு முலகை சுரீரென்று எழுப்ப வேண்டும்! சமரஸக் கற்பகக்கனி இங்கு கனிந்துள்ளது. உலகம் சாதிசமய வேற்றுமை யென்னும் புளித்த தாடி மாம்பழத்தைச் சுவைத்து வருந்துகிறது! கரும்பிருக்கக்

கொழுத்தாடையைக் கடித்துத் துன்புறுகிறது! ஐயனே, முக்குண வேறுபாடுகளொழிக! மும்மலச்சிக்கலும், முப் புரிக் காமாலையும, பன்மதப் பித்தமும் உனது அகமாத்ம சஞ்சீவியாலொழிந்து, வாழ்வு சகஜநிஷ்டையி லூன்றி, சர்வாத்ம சமரசஸக்கிளை பரவி, தன்னின்ப நிழலில் உல கையெல்லாம் ஒன்று கூட்டுக! உனது ஞானக்கட்டி மாம் பழத்தை உலகெல்லாமுண்டு மனப்பசியாறுக! ஐயனே! இவ்வுலகியைக் கடைக்கண்ணால் பார்த்தருள்! கண்ணீர் ஆறுகப் பெருகி முன்னிற்கிறுள். வறுமையால் எலும் பெடுத்த பஞ்சைகள் கோடி! மடமை யிருளிற் காமக் குரோதச் சங்கிலிகளிற் கட்டுண்டு வருந்தும் பேதைகள் பலகோடி! பாசாடவியில் வழி தெரியாதலறும் ஏழை கள் பலகோடி!

வலியகொடிய அசுரமாயா பாசத்திற் கட்டுண்டு அஞ் சிப்பதறித் துடித்திறக்கும் ஜீவர்கள் எண்ணிலர்! அப் பனே! நல்லோருக்குப் பொல்லாங் கிழைக்கின்றனர். சாதுக்களுக்குத் தீது செய்கின்றனர். அறிஞர் வறிஞராய் வருந்துகின்றனர். செல்வம் செருக்குடன் தனது தங் கக் காலால் ஏழையை நசுக்குகின்றது. அப்பனே, என் மனம் பேரிரக்கத்தால் வெடிக்கிறது. உலகி நாடோறும் தனது பஞ்சை மக்களை முன்னிட்டு கண்ணீர் வடித்து என் முன்னிற்கிறுள்! இருளில், பேய் பிசாசுகளின் கையில் வாடி வருந்திக் குடல் நடுங்கிக்கதறி கண் ணீரையே குடித்து உயிர் வைத்திருக்கும் எம்மய ஆன்ம சமானர்களுக்கு என்னவழி? இக்காட்சி பொய்யா? இவர் கள் ஏன் இப்படி தவிக்கின்றனர்? எம்மன்னை ஏன் ஓயாது இரத்தக் கண்ணீர் சொரிகிறுள்? இவர்களுக்கு அறிவும்,

திறமும், உணவும், உடையும், தூய விடுதலைவாழ்வும், ஆத்ம சமத்வத்துவத் தெழுந்த ஒற்றுமையு மளித்து வாழ்வை இன்புறுத்தலாகாதா! இல்லேல், ஓர்பெரும் போரெழுப்பி ஊழிக்காளியின் சினப்புயலெழுந்து, கன லெழுந்து, இத்தனை பேரின் புண்வாழ்வையும் விழுங் கட்டும்! உலகியின் அழுகை தீரும் வகையென்ன? இக்கவலை எமது எலும்பை உருக்குகிறது! உலகின்வறுமை எம்மைப் பட்டினிபோடுகிறது. மாந்தர் வருந்தும் அடி மைச் சங்கிலி எமக்குவிலங்கிடுகிறதே! கூற்றினும்கொடிய இவ்விடர்களை உனது திருவருள் விழியால் சுடாயோ! தானே அனைத்துமாகித் தாக்கற நிற்கும் சமர்த்தனே! எல்லாமறிந்தும், எங்குமிருந்தும், அவரவர்க்கு ஆவன செய்யவல்லவனே! உன்னருளை நம்பி பரிதாபமான இவ் வுலகியின் பொருட்டு முறையிடுகிறோம். எங்களுக்கு ஒரு வழிகாட்டு, உயர்ந்த உண்மை ஒளி இலக்கு! எங்கள் ஆன் மாவை யீடேற்று! சர்வாத்மத் தொகுதியையு மீடேற்று! உலக சித்சபையில் உனது திருவிளையாடலைத் தொடங்கு! உனது அருட்கருவிகள் யாங்கள்; உடல் உனது, உயிர் உனது, நீயே எங்கள் உடைமை; நாங்கள் உனது உடைமை; அடைக்கலம்! அடைக்கலம்! யாமும் நீ! அனைத் தும் நீ! ஆத்மதேவனே வணக்கம்! என்று அன்பர் சுத்த சச்சிதானந்த மூர்த்தியைத் தைலதாரைபோல் தியானஞ் செய்க! குறைகளை அவனிடம் முறையிடுக! உறுதியான உத்தரம் கிடைக்கும். இதோ, அவன் அருள் வாக்கு சிதா காச வீணையில் இன்பமாக முரல்கின்றது:—

இன்பத்து ளின்ப மேதுவு நினையாமை
துன்பத்துட் டேன்பந் துடக்கு.

நினைத்து நினைத்து நினைப்பற்றுள் ளத்தே
நினைப்பற்றி நீயாகி நில்.

உரையடங்கி யுற்றெழும்பா துள்ளடங்கி மாயைத்
திரையடங்கித் தெள்ளமைதி சேர்.

ஆத லழித லணுகா வுறுதிநிலை
யேதமற் றங்கே யிரு.

எத்தனையோ காரியங்கள் இந்த வினையுலகில்
அத்தனையும் ஆடலெனக் காண்.

ஆட்சிபெற் றுள்ளே யகில விளையாட்டைக்
காட்சிபோற் கண்டு களி.

எழுந்து விழுந்தும் இடத்தமர்முந் நீர்போல்
அழுந்தியுன் னுள்ளே யமர்.

நானுதியா மோனத்தை நாடி யுலகுயிருந்
தானன்றி யில்லையெனச் சாற்று.

இருப்ப தொருபொருளே யெல்லா மதுவே ;
பிரிப்பதுபோய் மாயப் பிணி.

உலகம் ப்ரஹ்மத்தின் வேறல்ல; விளக்கு உலகு ; திரிவாழ்வு ; எண்ணெய் சக்தி ; சுடர் இறைவன். ப்ரஹ்மத்திற்கு அன்னியமாக எதுவுமில்லை. அதில் அனைத்துங்காண். அன்னியங் காண்பது மாயை ; தன்மயங் காண்பது அறிவு ; உள்ளது அறிவான ஆன்மா. மற்றைச் சேதன கோசங்கள் அதையொட்டியே யுள்ளன. தன்னை விடாதிருந்தால் அதுவே உயர்ந்த முத்தியின்பம். தான் பூரணம் பெற்றால் உலகு தன்னால் திருந்தும். தன் விரிவே, உலகு ; குரு அவதரித்துள்ளார் ; 'குருவும் கடவுளும்

ஒன்று', என்று மோன வீணையில் அவன் ஞானத் திருக் கரங்கள் மீட்டுகின்றன.

எல்லாம் வல்லானை இறுகத்தழுவினுல் எல்லாம் வல்லோம்.

பரமாணுக்களை சக்திக்குயவன் மாயைச் சக்கிரத்திற் சுழற்றித் தனுகரண புவனபோகப் பாண்டங்களை ஏராளமாகக் குவிக்கிருன். அவனே அவற்றைப்பல வுயிர்க்கரங்களால் வழங்குகிருன்; மறுபுறம் காலத்தடிகொண்டடித்து நொருக்குகிருன். ஆனுல் அவன்மட்டும் சமர்த்தன்; பானைமேல் எத்தனை பூனை விழுந்தாலும் தன்மேல் விழுவதில்லை. அவன் அருள் வடிவன். எதிலும் கட்டுப்படாத ஆகாச சரீரி. எட்டு திக்கிலும் விகாரமின்றி ஒட்டா துறைகிருன். அவன் மருட்போதம் "குடமடா, படமடா, புவியடா, பொருளடா," என்று எக்களித்து விக்கிப் போகிறது. அருட் போதமோ "மண்ணடா, மண்ணடா" என்கிறது. எப்போதும் சச்சிதானந்தத் தேன் மலர் வனத்தில் பாயும் அமுதவூற்றைப்பருகித் தாகந்தணிமின்! அதுவே தாயினுங் கருணை சான்றது. அதுவே இன்பம்! அதன்துமியே உலகின்பம்! இவ்விதம் அறிவூற்றிற்கு வழிகாட்டியா யமர்ந்தகுருவிற்கு வணக்கம்.

சற்று ரமணத்யானஞ் செய்வோம்:—

ரமணபரமஹம்ஸாயநம:

ஸத்ய சாந்தகன ஜோதீ நமோநம
ஸஹஜ நிஷ்டாநு பூதா நமோநம
ஸச்சி தானந்த ஸ்வரூபா நமோநம
—தவராஜா!

நித்ய மங்கள ப்ரஸந்நா நமோநம
நிர்க்கு ணாத்ரிபுடி ஹாநியா நமோநம
நிர்வி கல்பஸுக போகா நமோநம
—ஹ்ருதயேசா !

சக்தி குண்டலி ஸமேதா நமோநம
ஸகல ஸித்திபரி பூர்ணா நமோநம
சுத்த தத்வமஸி போதா நமோநம
—அருணேசா !

பக்த ஸங்கபரி பாலா நமோநம
பரம ஹம்ஸகுரு நாதா நமோநம
பாஹி பாஹிபர மாத்மா நமோநம
—பகவானே.

## ௪௦. ஹம்ஸஸ்ஸோஹம்.

பல்லவி


வாழ்க சுயம்ப்ர காசம் வாழ்க வாழ்கவே !
சூழ்கசுத் தாத்ம சக்தி சூழ்க சூழ்கவே ! (வாழ்க)

அநுபல்லவி

ஏழு லகுஞ் சீவன் முத்தி யின்பம் பொங்கவே !
இதய மாகு மிறைவ னாகி யெல்லா மோங்கவே !
பாழ்ம னவ கந்தை வாழ்வு பாழ்பட் டொழிகவே !
பரம ஸச்சி தானந் தாத்மப் பால்போ ழிகவே ! (வாழ்க)

சரணம்

தட்டி லாத நித்ய ஜீவ தத்வ மோங்கவே !
தன்ம யத்திற் சின்ம யந்த ழைத்தி லங்கவே !



1933 பேரன்பர்குழாம்

எட்டுத் திக்கும் "ஹம்ஸஸ் ஸோஹம்" எதிரொலிக்கவே!
எல்லாம் ப்ரஹ்ம மென்னு முண்மை யிறைவ கிக்க
[வே! (வாழ்க)

ஹம்ஸஸ் ஸோஹம்! ஹம்ஸஸ் ஸோஹம்! அது எல்லாம் ஹம்ஸஸ் ஸோஹம்! அவரவர் அநுபவத்திற் கண்டறிக! அனைவரும் இச்செல்வத்தை யடையலாம்! இதுவே இன்பச்செல்வம்; மற்றவெல்லாம் இதன் நிழலே! தன்னுள் ஆத்மஸித்தி பெற்று, அகண்ட ஸித்தியாக ஒவ்வொருவர் வாழ்வும் மலர்ந்து மணம் விரிக! தன்னைக் காண்பதே கண்; தன்னில் நிலைப்பதே யறிவு; தன்னைத் தேடுவதே வினை; தன்னைத் தியானிப்பதே வழிபாடு; தன்னுள் அடங்கி நிச்சலமாயிருப்பதே பரமசுகம். பரமானந்த வூற்று ஒவ்வொருவர் இதயத்தும் உள்ளது! அதன் யாழொலியை ஒவ்வொருவருங் கேட்கலாம்; அதன் மார்பி னுதித்தொளிரும் பொன்னொளி வெள்ளத்தில் அனைவரும் குளிக்கலாம்.

நான் யார்? ஸச்சிதானந்தம். எனதிருக்கை எது? இதயம். என்னை எப்படி யறிவது? நானே என்னுள் ஆழ்ந்து அறியவேண்டும் ("த்யானேந ஆத்மநி பஶ்யந்தி"). நான் என்பதெது? நினைப்பின் குலங்களான மனம் அற்ற விடமே நான். தேங்காயை நார் மூடிக்கொண்டிருப்பது போல விருத்தி மனம் என்னை மூடிக்கொண்டிருக்கிறது. நாரை யுரித்தால் சுத்த ஆனந்தஸ்வரூபமே நானாக விளங்கும். அதுவே அழியாப் பொருள். அதில் நிலைத்து, அதையே எதிலும், எதைச் செய்யினும் இடைவிடாது,

பேதபுத்தியற் றுணர்வதே அமரநிலை, ஸ்வர்க்கம் எல்லாம். அதனினும் செய்யவேண்டிய காரியம் எதுவு மில்லை. அதுவே சுத்த முக்த ஸமத்வநிலை. உயிர், உலகு, இறையெல்லாம் அது மயமே. மனமெழுந்தால் இவை முப்புரியாகக் காணும்; மனமடங்கினால் இவை தன்னுள் தானாகவே காணும். அறிவே அனைத்தும்; நானே யறிவு! அதுவொன்றே மெய்; நானாவிகாரப் புறத்தோற்றங்கள் மனவிகற்பங்களே. ஞானமாம் தானே மெய்; நானாவாம் பேதம் பொய். உலகச் சித்திரமும், அதைப் பார்ப்பானும், ஒளியும், அத்தனையும் தானேயாம். அனன்ய பாவனை செய்து, பாவனாதீத ஸத்பாவத்தில் இருப்பதே பரம சுகம். இவ்வின்ப வூற்றிற்குச் செல்லும் நேர்வழி நானார் என்னும் விசாரச்சாலையே! தனது மூலஸ்தானத்தை யடைந்தால், தானே ஸத்து; அதுவே தானாயிருத்தலே தன்மயநிஷ்டை; அதுவே இயல்புநிலை; வெளிவிஷயங்களை விடுத்து, தன் ஒளியுருவிற் கரைந்து, அதுவாயிருத்தலே உண்மையின்பம். அதுவே ஞானம், பக்தி, கர்மம், யோகம் எல்லாம். தன்னலமற்ற ஆருயிர் வழிபாடு, நிஷ்காம்யகர்மம், குருசேவை, அனைத்தையும் ஆண்டவனுக்கே அர்ப்பித்தல், மூர்த்திபூஜை, மந்திரஜபம், அஜபா மந்திரஜபம், பிராணாயாமம், ஆகாரநியமம், ஸத்ஸங்கம், ஞானநூ லாராய்ச்சி, மனோவாக்குக்காய சுத்தி, தியானம், ஆத்மவிசாரம் முதலிய எத்தனையோ படிகள் பக்குவத்திற் கேற்றபடி மனவிடுதலை யடைந்து ஆத்மசுத்தி பெற உள்ளன. அவற்றை உறுதியுடன் பற்றி மேன்மேலும் சித்தசுத்தி யுற்றுச் சென்றால் ஆத்மதர்சனம், ஆத்மநிஷ்டை, ஆத்மமயம் ஸித்தியாகும்; உறுதி! உறுதி!

பகவான் அருணாசல பரமஹம்ஸரின் ஸந்நிதானம் அத்யாத்ம ஜோதிக் கற்பகம்; அது அனைவர்க்கும் சாந்த ஸமரஸ நிழல் பரப்பி யோங்கி விரிந்து தழைத்திலங்குகிறது! அதன் அடிநிழலில் அண்டிய யாவரும் ஆத்மசாந்தியடையலாம்; ஞானக்கனி யுண்ணலாம். ஆத்மாராமம் பெறலாம். நாம் மேலே எழுத்தால் மொழிந்ததை உளத்தால் அனுபவிக்கலாம்! பாலி தீர்த்தத்தருகே ஒரு நித்தியப் பாலூற்று சாந்தஸமுத்திரமாக விரிந்துள்ளது! அதில் ரமணோபதேசத் தாமரைகள் மிளிர்கின்றன. அன்னங்காள், ஹம்ஸஸ் ஸோஹம் என்று கூவி வாருமின்! அந்த நித்திய வூற்றைச் சுற்றி நித்தியானந்த ஸங்கம் கூடுக! அது எல்லா ஸமயத்தினரும், மேனாட்டினரும், கீழ்நாட்டினரும் ஆன்மவுறவு பேணி, வாழ்வையே யோகமாக்கி யிலகும் அகண்டாத்ம அருணகிரியாகப் பெருகி விரிக! ரமணாச்ரமம் யோகக்கதிர் விரிந்து உலகெலாம் பரவுக! ரமணமுகில் அருள் மழை பொழிந்து மாந்தர் உளத்தில் ப்ரஹ்மானந்தப் பயிர் வளர்ந்து வாழ்க! தமிழ்நாடே, உனது வற்றாச்செல்வம் ரமணசக்தி! அதை உலகுடன் அனுபவி! எழு, விழி, உழை, ஒளிர், வெல், வாழ்!

## * ௪௧. உபநிஷத் ரஹஸ்யம்.

### உபநிஷத் முழக்கம்

உள்ளமே உபநிஷத்துள்ளம். உள்ளத்தினுள்ளே யுள்ள கருவை யறிவதே உபநிஷத் ஞானம். அப்பர், சம்பந்தர், மணிவாசகர், தாயுமானவர், இராமலிங்கர், ஏசுநாதர், லவோத்ஸன் (Leotse) முதலியோர் வாக்குகள் உபநிடதங்களே. அருளறிவாளர் நிறைமொழி மந்திரமே உபநிடதமே. "The self separates itself from itself to return to itself to be itself" "தன்னையே பெற்றுத் தானாகி நிற்க, ஆத்மா தன்னின்றுதானே விரிந்தது" எனும்போது ஹெகெல் (Hegel) உபநிடதமே பேசினார். "ப்ரஹ்மவி தாப்னோதி பரம்! நாத: பரமஸ்தீதி! அணோரணீயாந் மஹதோ மஹீயாந், ஆத்மா அஸ்ய ஜந்தோ: குஹாயாம் நிஹித:! உத்திஷ்டத! ஜாக்ரத ப்ராப்ய வராந் நிபோதத" ப்ரஹ்மமறிந்தோன் மேன்மை பெறுகிறான். ப்ரஹ்மத்தினும் உயர்ந்ததில்லை! அணுவினும் அணுவாய், பெரிதினும் பெரிதாய் இந்த ஆத்மா (ப்ரஹ்மம்) உயிர்களின் உள்ளக் குகையிலுள்ளது. எழு, விழி! அறிந்த மேலோரை யடைந்து அதையறி!" என்பதே உபநிஷத் முழக்கம். ஆத்மா என்பது தான்; தன்னறிவே

---

* பகவானின் அனுபவானந்தமே உபநிஷத் உள்ளத்தில் நிறைந்த இன்ப ரஹஸ்யம். அதைத் தமிழர் நன்கறியும்பொருட்டே முதன்மையான உபநிடத மணிகளை இந்நூலில் பதிக்கின்றோம்.

முன்னறிவு. "தன்னை யறிந்திடிற்பின் னென்னை யுள்ளதறிய ?" என்பது பகவான் வாக்கு. தானற்ற அன்னியத்தை, பேதபுத்தியை, தன்னின்று பொருள்களை வேறாகக் கண்டு கலங்கும் மடமையை, உலகு, உயிர், இறை ஆகிய முக்கூறாக்கி எல்லையற்ற வேற்றுமைத் துயர்செயும் அகமாயையைச் சிதைக்கும் தன்னறிவொளியே உபநிடதம்.

## வேதம்

வேதமாகிய காமதேனுவிற் கறந்த ஞானப் பாலே உபநிஷதம். துன்பம் விலக்கி இன்பம் பயக்கும் அறிவே வேதம். இன்பமாவது இதயப் பொருளே. அத்ரி, மரீசி, ஆங்கீரசு, பராசரர், பரத்வாஜர் முதலிய மஹர்ஷிகளின் தெய்வப் புலமையினின்று இயல்பாகப் பொங்கிய அருளறிவுக் கடலான * சுருதியை † வியாச பகவான் ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்று நான்காக முறை வகுத்து பைலகர், வைசம்பாயனர், ஜைமினி, ஸுமந்து எனும் நான்கு மாணவ ரிஷிகளுக்குப் பயிற்றினார். இவர்கள் வழிவழி வழங்கிய வேதம் காலப்போக்கில் பலசாகைகளாகப் பிரிந்தது. ருக் உக, கிருஷ்ணயஜுஸ் கூச, சுக்லயஜுஸ் கரு, ஸாமம் க000, அதர்வணம் ருo கிளைகள் ஆயின. இக்கிளைகளில் மிகச் சிலவே இப்போது வழங்குகின்றன. ஸம்ஹிதைகள் ப்ராஹ்மணங்கள் என

* சுருதி அருட்புலமையால் கேட்கப்பட்ட அறிவு.

† வியாஸர் என்றால் அணிவகுத்தவர், கோத்தவர் என்று பொருள். இவர் கருப்பர். ஆதலால் கிருஷ்ணத்வைபாயனர் எனும் பிள்ளைத் திருநாமம் பெற்றார். தாய் சத்யவதியால் ஒரு தீவில் வளர்க்கப்பட்டார்.

வேதம் இருவகைத்து. ஸம்ஹிதைகள் வேள்விப்பாட்டுகள். அருட்போதத்திற்கு இருட்போதத்தை ஊணுக்குவதே வேள்வி, யென்க. மந்த்ர விரிவுரை, மந்த்ர வேள்வி, வழங்குமுறை, இதிஹாஸம், புராணம், கல்பம் (வாழ்வு நெறி), கீதம், பொதுவாழ்வு, உபநிடதம் முதலியவற்றை ப்ராஹ்மணம் கூறும். இதன் ஒரு பாகத்திற்கு ஆரண்யகம் (வனநூல்) என்பர்; அதிலேயே வேதத்தின் ஞான காண்டமான உபநிஷத் வித்தை அடக்கம். இந்த ப்ரஹ்ம வித்தை தூய தனி வனங்களின் அழகமைதி யுள்ளத்திற் பொங்கி யெழுந்த அறிவூற்று. 108 உபநிஷத்துகள் இப்போது நமக்குக் கிடைத்துள்ளன எனினும் அவற்றுட் 14-தான் தூய தொன்மறை முனிவரின் சுருதியென்று புலவர் அறிகின்றனர். அவற்றுள் ஐதரேயம், ருக் வேதத்தையும்; தைத்திரீயம், கடம், ஶ்வேதாஶ்வதரம், நாராயணம், கிருஷ்ணயஜுர் வேதத்தையும்; ஈசம், ப்ருஹதாரண்யகம், ஜாபாலம், ஶுக்லயஜுர் வேதத்தையும்; கேனம், சாந்தோக்யம், ஸாம வேதத்தையும்; முண்டகம், மாண்டூக்யம், ப்ரஶ்நம், அதர்வ சிகையையும் சேர்ந்தவை.

ईशकेनकठप्रश्नमुण्ड माण्डूक्यतित्तिरिः ॥
ऐतरेयं च छान्दोग्यं बृहदारण्यकं तथा ॥

ஈஶ கேந கடப்ரஶ்ந முண்ட மாண்டூக்ய தித்திரி: |
ஐதரேயம்ச சாந்தோக்யம் ப்ருஹதாரண்யகம் ததா ||

என்பன முதன்மையான தசோபநிஷத்துக்கள், இப்பத்து ஞானக் கனிகளையும் பிழிந்த ப்ரஹ்மாநந்த ரஸமே பகவானின் மொழியமுது என விளக்க ஒவ்வோருபநிடதத்தின் ஸாரத்தையும் அதிற் பொதிந்து மிளிரும் பரம ஞான மணிகளுடன் இவ்வத்தியாயத்திற் பதிப்பாம்.

## ஈசோபநிஷத் ரஹஸ்யம்

ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्ण मुदच्यते ॥
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥
ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம் பூர்ணமத꞉ பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே |
பூர்ணஸ்ய பூர்ண மாதாய பூர்ண மேவா வஶிஷ்யதே ||

ஓம் ஶாந்தி : ஶாந்தி : ஶாந்தி꞉ !

பிரஹ்மம் பரிபூர்ணம். முழுப்பொருள். தோன்றுவதுவும் தோன்றுமிதுவும் அப் பூரண நிறைவு; அம் முழுப் பொருளினின்றே முழுமை யுலகெழுந்தது. முழுவுலகும் தன்னின் றெழுந்தும் இன்னும் அது முழுமையாகவே யுள்ளது. இருப்பதெல்லாம் இறைவன் இருக்கையே. உலகில் மாறும் யாவும் அவனது உடுக்கையே. எல்லாம் அவன் என்றுணர்ந்து அவனுக்கே அனைத்தையுந் துறந்து பற்றறுவாழ்வாற் சுகி; பிறர் பொருள் விழையேல்; அருட்பணி யாற்றி நூறாண்டு வாழ்க; அனைத்தும் இறைவன் எனும் உணர்வுடன் அவனுக்கு வேள்வியாக, வினைபயன் இரண்டும் அவனுக்கே யீந்து செயலாற்றுக; ஆத்மஹத்தி செய்பவன் அசுரலோகமடைவான். (ஆத்மா நானென்றறியாமையே ஆத்மஹத்தி) அது ஒன்று, அசலம், புலன் மனங்கடந்தது. அதுவே சின்மயமாகப் போந்து பரவி உயிர்க்குயிராகப் பார்க்கு மிடமெங்கும் நீக்கமற நிற்கிறது. அது தன்னில் தானாக நிலைத்தது. எனினும் எங்கும் பரந்தது. அது அருகிலும் தொலைவிலுமுள்ளது. அதுவே அனைத்தினுள்ளும் நிலைபெற்று தானே புறத்திலுள்ள அனைத்திலு மிருப்பது.

"तदन्तरस्य सर्वस्य तदु सर्वस्यास्य बाह्यतः"

(ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தது ஸர்வஸ்யாஸ்ய பாஹ்யத:) அனைத்தையும் தனதான்மாவிலே யிருக்கக்கண்டு அன்னிய மெண்ணாத புலவன், எல்லாவற்றிலுந் தன்னையே காணும் அறிஞன், எதையும் வெறுக்கமாட்டான். (அன்னியமெண்ணாது) அனைத்துமானது, பலவானது, ஆன்மாவே யென்று யாதிலும் ஒருமயங் காணும் அறிஞனை காட்சிப் புலவனை மோக சோகமணுகுமா? அவ்வான்மா எங்கும் நிறைந்தது; எழில் பெற்றது; பருவுடலற்றது; வடுவற்றது; ஊனற்றது; தூயது; மாசற்றது; அதுகவி, மனீஷீ, முற்றறிஞன், ஸ்வயம்பு, தானே தானானது; யாதினும் பெரியது; அதுவே சாஶ்வதமாக பொருள்களை முறை வகுத்துள்ளது; அறிவறியாமை, இரவுபகல், சதசத்து, பிறவி, பிறவாமை; வித்தையவித்தை, வினைவழி, வினை விடுதலை வழி இவற்றில் ஒன்றையே சார்ந்து பற்றுது கூடுதலுடன் பிரிதலற்று நிற்கின் செயலும் பயனும் எல்லாமாகிய இறைவனுக்கே யிந்த வினை வேள்வியின் இறவாப் பயனையும், எல்லாம் அவன் எனும் அறிவின் அமுதப் பயனையும் பெறலாம். இரண்டும் அவனில் ஒன்றெனக் காண்க.

உண்மையின் திருமுகம் பொன்னொளிர் மூடியால் மறைக்கப்பட்டுள்ளது. இரவியே! வளர்ப்போனே! அம்மறைவை நீக்கு! சத்திய தர்மத்தைப் போற்றும் யானதைக் காணட்டும். அனைத்தையும் வளர்ப்போனே! ஒப்பற்ற ரிஷியே! அடக்கியாளுவோனே! உயிர்த் தந்தையின் ஆற்றலே! ஸூர்யனே! உனது ஒளியைக் குவித்துக் கதிர்களைப் பரப்பு. உனது திருமிருந்த சுடர்வடிவை

உன்னில் யான் காண்கிறேன். அங்கு நிலவும் புருஷன்—அவன் யானே—ஸோஹமஸ்மி! அனைத்தின் உயிர்ப்புமாவது அமரவாழ்வுடைத்து. இவ்வுடல் இறுதியிற் சாம்பலாவது. ஓம்! நெஞ்சே கருது, செய்ததைக் கருது! சக்திக் கனலே, இன்பத்திற்கு நல்வழிகாட்டி நடத்து! அனைத்து மறிந்தோனே! ஏமாற்றுந் தீமையை எம்மிடமிருந்து நலித்தருள். நினக்கு நிறைமொழி வணக்கம் செலுத்துகின்றோம்!

## கேனோபநிடதம்

கேனோபநிடதத்தின் ஜீவன், ப்ரஹ்ம லக்ஷணமும் ப்ரஹ்மசக்தியுமே. மனம், உயிர், மொழி, விழி, செவி இவற்றைப் பின்னின்று விரும்பியியக்குவதெது? அதுவே காதின் காது, மனத்தின்மனம், மொழியின் மொழி, உயிர்க்குயிர், கண்ணின்கண்; இவ்வகை யறிந்த தீரர் (புலன் மனம் யானல்ல வென்று பொய்ப்பற்றை நீத்து) ஆசையுலகை நீத்து அமுதவுலகடைகின்றனர். இந்திரியங்களும் அந்தக்கரணமும் கூடிய பிரகிருதி யுடல் ஜடமே. உணர்வும், உயிரும், அசைவும், வாழ்வும் ஆன்மசேதனக் கனலால் தூண்டப்பட்டவையே. ஆத்மா அறிவு, உணர்வு. அதைக் கண்ணும் மொழியும் மனமும் அணுகாது. அதைப்புலனறிவால் அறியோம். அதைப்பற்றிக் கற்பிக்கவும் அறியோம். அது நூலறிவைக் கடந்தது. அது நாமறிந்ததற்கும் அப்பாலானது; அறியாததற்கும் அப்பாலானது. (அது அபரோக்ஷானுபூதியாலேயே உணர்வாகும்), மொழி மொழியொணாதது; ஆனால் மொழியை மொழிவது; அதுவே ப்ரஹ்மம். கர்ம மார்க்கிகள் இங்கு வணங்குவதல்ல. மனம் விளக்காதது; ஆனால் மனத்தை

விளக்குவது; அதுவே பிரஹ்மம். அது கண்ணால் காணாதது; அதனால்தான் கண் காண்பது; அதுவே ப்ரஹ்மம். அது காதாற் கேட்கொணாதது; அதனால்தான் காது கேட்பது. மூச்சியக்கொணாதது; ஆனால் மூச்சை யியக்குவது; அதுவே ப்ரஹ்மம். அது கற்றறிவு, கேட்டறிவு, சுட்டறிவிற்கு அப்பாலாகி அறிவிற்கறிவாய் அனைத்தையும் இயக்குகிறது. புலனறிவு அதைப் புலப்படுத்தாது. அதைப் புலனாலறிந்தோரில்லை. அது அறியாததுமில்லை. ஏனெனில் அதுவே அறிவிற்கறிவு. அறிவைக் கடந்த தென்றறிந்தோன் அதை யறிந்தோன். மனம் புத்தி புலன்களால் அறிந்தேனென்றோன் அதை யறியான். அறிந்தேனென்போ னறியான். அறியேனென்போனறிந்தான். தோற்றவுலக நாடக மாட்டும் மனத்தைக் கடந்து, இந்த நாடகத்தாற் சலிக்காது சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆன்மாவை சுத்த சுதந்தர நிரஞ்சனமாக அறிவோன் அமுதநிலைபெறுகிறான். ஆத்மாவினால் ஆற்றலும் ஆத்ம ஞானத்தால் அமரநிலையும் அறிஞன் அடைகிறான்.

"आत्मना विन्दते वीर्यं विद्यया विन्दतेऽमृतम् ॥"

" ஆத்மநா விந்ததே வீர்யம்
வித்யயா விந்ததே ம்ருதம் "

இங்கதை யறிந்தால் மெய்ந்நிலை யுண்டு; இங்கதை யறிந்திலனேல் மகத்தான நஷ்டப்படுகிறான். எல்லாவுயிர்களிலும் ஆன்மாவை யறிந்து அறிஞர் இவ்வினை யுலகை நீத்து அமரநிலை பெறுகின்றனர்.

"इहचेदवेदी दथसत्यमस्ति
नचेदिहावेदीन्महती विनष्टिः ॥
भूतेषु भूतेषु विचित्य धीराः
प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥"

இஹசே தவேதீ தத ஸத்ய மஸ்தி
நசே திஹாவேதீந் மஹதீ விநஷ்டிः |
பூதேஷு பூதேஷு விசித்ய தீராः
ப்ரேத்யாஸ்மால்லோகா தம்ருதா பவந்தி ||

## ப்ரஹ்ம சக்தி

இந்த ஆத்மாவின் சக்தி அளவிறந்தது. அதுவே உண்மை யாற்றல். அதனால்தான் தேவர்கள் வெற்றி யடைகின்றனர். ஒரு காலம் ப்ரஹ்மமான ஆத்மா தேவர்க்கு அசுரமாயத்தின் மீது வெற்றி யீந்தது.

† தேவர் "நமதே வெற்றி, நமதே பெருமையென்று செருக்குற்றனர். இஃதறிந்து ப்ரஹ்மம் அவர் முன் தோன்றியது. இந்த யக்ஷன் யார் என்று அவர்களுக்கு விளங்கிலது. "அக்னியே! இதாரென்றறிவாயாக" என் றனர். அக்னி விரைந்தது. "நீ யார்?" (कोसि?) என்றது ப்ரஹ்மம். "நான் அக்னி, இசைபெற்றவன், நான் ஜாத வேதஸ்" என்றது தீ. ப்ரஹ்மம்:—"உன்னாற்றலென்ன?" அக்னி:—"உலகினுள்ள எதனையும் யான் எரிக்கவல் லேன்." "இதையெரி பார்ப்போம்" என்று ஓர் துரும்பை முன் போட்டது ப்ரஹ்மம். முழுவலியுடன் வந்தது தீ! அத்துரும்பை எரிக்கலாகாது திரும்பி "இந்த யக்ஷன் யாரென் றறியொணேன்" என்று தேவர்களுக் குரைத்

† தேவரைப்பற்றி கீதை காட்டும் பாதையிற் காண்க.

தது. "காற்றே, நீ சென்று இந்த யக்ஷன் யாரென்றறி" என்றனர் தேவர். விரைந்தது காற்று.

ப்ரஹ்மம் :—"நீ யாவன் ?"

காற்று :—"நான் புகழ்பெற்ற வாயு: பேர்பெற்ற மாதரிஸ்வான்"

ப்ரஹ்மம் :—"உன் சமர்த்தென்ன ?"

காற்று :—"உலகிலுள்ளதை யெல்லாம் அள்ளிச் செல்ல வல்லேன்."

ப்ரஹ்மம் :—"ஆனால் இத்துரும்பை வாரிச்செல் பார்ப்போம்."

காற்று கனவேகமாக வந்தது; துரும்பினிடம் அதன் பலம் சாயவில்லை. திரும்பிவந்து, "இந்த யக்ஷன் யாரென்று யான் அறிகிலேன்" என்றது. "மகவானே, இந்த்ரனே, இந்த யக்ஷன் யாரென்றறி" என்றனர் தேவர். "இதோ" என்று விரைந்தான் இந்திரன். ஆனால் அது மறைந்தது. அப்போது அவ்வெளியில் ஒரு பெண் தோன்றினாள். அவள் பேரெழில் வாய்ந்த உமை, ஹைமவதி. "இந்த யக்ஷன் யார்" என்று அவளை இந்திரன் வினவினான். "அது ப்ரஹ்மம்; ப்ரஹ்மத்தின் வெற்றியே உங்களுக்கு வெற்றியீந்தது" என்றாள்.

"सा ब्रह्मेति होवाच ब्रह्मणोवा
एतद्विजयते महीयध्वमिति ॥"

"ஸாப்ரஹ்மேதி ஹோவாச ப்ரஹ்மணோவா
ஏதத் விஜயதே மஹீயத்வ மிதி"

அதனால் இந்திரன் அதை ப்ரஹ்மமென்றறிந்தான். தீயும் காற்றும் அதை யணுகினர்; இந்திரன் முதலில்

அதையறிந்து சிறந்தான். அதாவது நான் என்ற ஆணவத்துடன் தீயாகிய வாக்தேவதையும் காற்றாகிய உயிராற்றலும் ப்ரஹ்மத்தை யணுகின. ப்ரஹ்மம் இட்ட ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியவில்லை. அத்துரும்பும் ப்ரஹ்மமே. சுத்த மனஸான இந்திரன் அணுகவே உருமறைந்தது. அந்த நிராகார வெளியில் சிற்சக்தியான உமை வந்து, "இது ஸத், இது ப்ரஹ்மம்," எனத் தெரிவித்தாள். அதாவது "யான் வல்லேன்" என்னும் ஆணவம் விடுத்து "இது யார்?" (அல்லது நானார்) என உசாவி சுத்த மனஸூற்று இதய வெளியில் நோக்கினால் சிற்சக்தியெழில் விளங்கும். அதனால் ப்ரஹ்மாகார வ்ருத்தி யெழுந்து, அது ப்ரஹ்மம்,ப்ரஹ்மம் என்று தானே ஒங்காரிக்கும்! இதை யோகானுபவமே காணவேண்டும். அந்த ப்ரஹ்மம் மின்போன்றது. புருஷஸூக்தத்தில் இது நன்கு வர்ணிக்கப்பட்டுள்ளது. இதய கமலத்தில் கட்டைவிரற் பருமனில் மின்னற்கொடி போன்று புருஷன் விளங்குகிறான். (வித்யுல்லேகேவ பாஸ்வரா) அவன் ப்ரஹ்மம்; அவன் சிவன், பரமன் ஸ்வராட், அவன் விஸ்வரூபன். யோகியர் இதயத்தில் இம்மின்னலை உள் விழியாற் காண்பர். இது உடற் கூறு நூலான் கத்திக் ககப்படாது.

"पद्मकोश प्रतीकाशँ हृदयंचाप्यधो मुखम् ।
अधोनिष्ठयावितस्त्यान्ते नाभ्यामुपरितिष्ठति ।
ज्वालमालाकुलं भाति विश्वस्यायतनं महत् ।
संततँशिलाभिस्तुलम्बत्याकोश संनिभम् ।
तस्यान्ते सुषिरँ सूक्ष्मं तस्मिँत्सर्वं प्रतिष्ठितम् ।

तस्य मध्ये महानग्निर्विश्वार्चिर्विश्वतोमुखः ।
सोऽग्रभु ग्विभजन्तिष्ठन्नाहारमजरः कविः ।
तिर्यगूर्ध्वमधः शायी रश्मयस्तस्य सन्तताः ।
संतापयतिस्वं देहमापादतलमस्तकः ।
तस्य मध्ये वह्नि शिखा अणीयोर्ध्वाव्यवस्थितः ।
नीलतोयदमध्यस्था द्विद्युल्लेखेव भास्वरा ।
नीवार शूकवत्तन्वी पीताभास्वत्यणूपमा ।
तस्याः शिखायामध्ये परमात्मा व्यवस्थितः ।
सब्रह्मा सशिवः सहरिः सेन्द्रः सोऽक्षरः परमः स्वराट् ॥
ऋतँ सत्यं परं ब्रह्म पुरुषं कृष्णपिंगलं ।
ऊर्ध्वरेतं विरूपाक्षं विश्वरूपाय वैनमोनमः ॥

"பத்மகோச ப்ரதீகாசம் ஹ்ருதயம்சாப் யதோமுகம்
அதோநிஷ்ட்யா விதஸ்த்யாந்தே நாப்யா முபரிதிஷ்டதி
ஜ்வால மாலா குலம்பாதி விஶ்வஸ்யாய தநம் மஹத்
ஸந்ததம் ஶிலாபிஸ்து லம்பத் யாகோச ஸந்நிபம்
தஸ்யாந்தே ஸுஷிரம் ஸூக்ஷ்மம் தஸ்மிந் ஸர்வம் ப்ர
[திஷ்டிதம்
தஸ்யமத்யே மஹாநக்நிர் விஶ்வார்சிர் விஶ்வதோமுக:
ஸோக்ரபுக் விபஜந் திஷ்டந் நாஹாரமஜர: கவி:
திர்ய கூர்த்வ மத: ஶாயீ ரஶ்மயஸ் தஸ்யஸந்ததா:
ஸந்தாபயதி ஸ்வம்தேஹ மாபாத தலமஸ்தக:
தஸ்ய மத்யே வஹ்நிஶிகா அணீயோர்த்வா வ்யவஸ்தித:
நீலதோயத மத்யஸ்தாத் வித்யுல் லேகேவ பாஸ்வரா
நீவார ஶூகவத்தந்வீ பீதாபாஸ்வத் யணூபமா
தஸ்யா: ஶிகாயாமத்யே பரமாத்மா வ்யவஸ்தித:

ஸப்ரஹ்ம ஸஶிவ ঃ ஸஹரி ঃ ஸேந்த்ர ঃ ஸோக்ஷர ঃ பரம ঃ [ஸ்வராட்
ருதம்ஸத்யம் பரம்ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ணபிங்களம்
ஊர்த்வ ரேதம் விரூபாக்ஷம் விஶ்வரூபாயவை நமோநம ঃ"

நெஞ்சுக்குக் கீழாய், நாபிக்குச் சாணளவு மேலாய், தலைகீழாய், பத்மகோசம் போன்று இதயம் இருக்கின்றது. அந்த இதயம் விஶ்வான்மாவான பரமனுக்குச் சிறந்த உறைவிடமென்றறிக. அவ்விதயம் தாமரை போன்று நரம்புகளுடன் தொங்குகிறது. அதன் நடுவே நுட்பமான தொளையுண்டு; அதில் எல்லாமான ப்ரஹ்மனுள்ளான். அவ்விதய நடுவே, எங்கும் நிறைந்து, எங்கும் கனலெரியும் மஹாக்நி (பெருந்தீ) யுள்ளது. அத்தீ விழிப்புடனும் இசையுடனுமிருந்து உணவை முதலில் உண்கிறது. (இந்த இதயாக்நிக்கே முதலில் ப்ராணாஹுதி வழங்குவது) பிறகு அவ்வுணவைப் பங்கிடுதற்காக தலை முதல் கால்வரை தானே உடலைக் கனலுறுத்துகிறது.

அந்த இதயநடுவே தீக்கொழுந்து மேலெழுந்துள்ளது. அது கார்மேகங்களிடையே மின்னற் கொடிபோல ஒளிவீசுகிறது. நெல்மணியின் நுனியிலுள்ள சிறிய முளை போன்று நுண்ணியது; பசுஞ்சுடருள்ளது! இணையற்ற தாய் விளங்குகிறது; அந்தத் தீக்குடுமியினிடையே பரமாத்மா உள்ளான். அவனே ப்ரஹ்மா, ஹரி, சிவன், இந்த்ரன், அக்ஷரன், பரமன், ஸ்வராட். உண்மை, உள்ளது, பரம் ப்ரஹ்மம், புருஷன், கரும்பொன்னிறத்தன், ஊர்த்வரேதன் (மேலே உந்தி எல்லாம் தேஜஸ், ஓஜஸ் வீசும் தவக்கனலாக மாறும் விந்து கொண்டோன்), சிவன், உலகவடிவோன் அவனுக்கு வணக்கம்."

இந்தச் சுருதிமொழியே வேதத்தின் உள்ளம். இது தியானம் செய்கையில் நினைக்கத் தக்கது. இந்த இதயம் நுரையீரலுக் கிடையே யுள்ளது.

## கடோபநிஷத்

கடோபநிஷத் அமுதஞான வூற்று. இப்பசுவின் பாலே கீதை. அருணி கௌதமன் என்ற வாஜஸ்ரவன் விண்ணின்பம் வேண்டி விஸ்வஜித் வேள்வி யாற்றினன். தன்னுடைமை யனைத்தையும் தானம்செய்து விடுவது அவ்வேள்வி முறை. கௌதமன், வத்தல் தொத்தல் கிழடு தட்டிய பசுக்களை வழங்கினன். இவ்வாறு வேள்வி பயன் எய்தாது. பார்த்தான் மகன் நசிகேதஸ். அவனும் ஓர் உடைமையே. "அப்பா! என்னை யாருக்கு வழங்கப் போகிறீர் (தத கஸ்மை மாம் தாஸ்யஸி?) என்று மும் முறை மன்றாடினன்." உன்னை எமனுக்கே தருகிறேன். (ம்ருத்யவே த்வா ததாமி) என்று அப்பன் எறிந்துவிழுந் தான். சொன்னது சொன்னதே! நசிகேதஸ் எமலோக ப்ராப்தி யடைந்து எமன் வீட்டிலில்லாததால் அவன் மனைமுன் பட்டினியோ டிருந்தான். மூன்றுநாள் வந்தான் எமதர்மன். அந்தணன் அனலே போல்வான், அவனைப் பட்டினியுடன் காக்கவைத்த மனையின் விருப்பங்கள், எதிர்பார்ப்புகள், நற்சேர்க்கைப்பயன், இன்சொற்பயன், வேள்விப்பயன், நல்வினைப்பயன், மக்கட்செல்வம், ஆனி நைரச்செல்வம் எல்லாம் நாசமாய்ப்போகுமே, ஆகா! என்று வருந்தி "வணக்கம் அந்தணா, தொழுதற்குரிய தாங்கள் மூன்றிரவு என்மனைமுன் உண்ணதிருக்க நேர்ந்ததே! அதற்கு மாற்றாக மூன்று வரங்கள்வேண்டுக!" என்றான்.

நசிகேதஸ் :—சாவே, கௌதமன், எந்தை அமைதியாகுக. மகிழ்வுறுக. சினந்தணிக. நான் உன்னால் திருப்பியனுப்பப் பட்டதும், என்னையவன் அறிந்து ஏலுக. இது முதல்வரம்."

எமன் :—அவ்வாறே யாகுக. நீ சாவினின்று தப்பியதறிந்து தந்தை யமைதிசேருக. நின்பால் முன்போல் அன்பு பேணுக!

நசிகேதஸ் :—விண்ணுலகில் அச்சமில்லை, மூப்பில்லை; இடர்பசி தாகமற்று அமரவாழ்வில் இன்பங் கொழிக்கும். அந்த விண்ணையடையும் வழி நீ யறிவாய். நான் சிரத்தாவான். எமனே! அந்த அமுத விண்ணடைவிக்கும் அக்னியை நீ யறிவாய்! எனக்கு நீ விளக்கு; இதை இரண்டாவதாக விரும்புகிறேன்.

எமன் :—நசிகேதஸ், விண்ணேற்றும் அனலை (ஸ்வர்க்ய மக்நிம்) யானறிவேன். உரைக்குதும் கேளாய். இது அனந்தலோகம் (நித்தியவிண்) அடைந்திட வழியாம். இதுவே உலகைத் தாங்குகிறது. இது இதய குகையில் இருக்கை கொண்டது என்றறிக.

"अनन्तलोकाप्ति मतोप्रतिष्ठां विद्धित्वमेतं निहितं गुहायाम् ॥"

"அநந்த லோகாப்தி மதோ ப்ரதிஷ்டாம்
வித்தித்வ மேதம் நிஹிதம் குஹாயாம்!"

மஹாத்மா! இரண்டாவது வரமாக இவ்வனலையளித்தேன். உன் பெயரால் அதுவழங்குக. இந்த நசிகேதாக்னி ஹோமம் மும்முறை செய்தோன் முக்கடனற்றினோன் (ஜீவ ஜக பர த்ரிபுடி த்ருஷ்டியை ப்ரஹ்மாக்நியில் வழங்கி

ஏகம்ஸத் பாவனையில் நிலைத்தோன்) பிறப்பிறப்பு நீங்குவன். ப்ரஹ்மத்தினிடமெழுந்த (ப்ரஹ்ம யஜ்ஞம்) இந்த வணங்கற்குரிய கனலை அறிந்தடைந்தோன் பரம சாந்தமடைகிறான். (நானாரென்று விசாரித்தல்; நான் உடலல்ல, மனமல்ல, மனம் நசித்தவிடத்தில் எழும் இதயாக்னியே யானென்றறிதல், அதற்கே யூணுதல் இவையே த்ரிகர்மம், முவ்வேள்வி, த்ரிணாசிகேதம் ஆவது) மூன்றையறிந்து மும்முறை வேட்டவன் துன்பந்தொலைந்து விண்ணின்பம் பெறுகிறான். இந்த ப்ரஹ்மாக்னி உன் பெயரால் உனக்காகுக. நசிகேதஸ்! மூன்றாவது வரம் வேண்டுக!

நசிகேதஸ் :—இறந்த பின் மனிதன் இருக்கிறான். (அஸ்தி) என்குனர் சிலர். இல்லை (நாஸ்தி) என்குனர் சிலர். இதை விளக்கியருள்க. இது மூன்றாவது வேண்டுகை.

யமன் :—இந்த ஐயம் தேவர்க்கும் எழுந்ததுண்டு; இது நுண்பொருள்; விளங்கற்கரிது. ஆதலின் வேறு வரம் வேண்டுக. இதன்பால் என்னை நெருக்கவேண்டாம்.

நசிகேதஸ் :—உண்மை. எனினும் அதுதான் யான் வேண்டுவது: வேறில்லை. நின்னினும் இதனை நிகழ்த்தும் ஆசான் உண்டோ?

யமன் :—நூற்றாண்டு வாழ்வை வேண்டு. புத்ரபௌத்ராதிகள், பசுக்கள், யானைகள், குதிரைகள், மண்ணிற் பேரரசு, பெருந்திரு, பேராயுள் எல்லாம் வேண்டு: சிரஞ்சீவித்வம் உலகாட்சியெல்லாம் தருதும். எல்லா விருப்பங்களையும் நுகர்விக்குதும். மண்ணுலகிற்கரிய இன்பங்களீவேன். இதோ தூரியங்கள் ரதங்களுடன் மானிடர்

அடையொணுத இவ்வணங்குகளை உன் ஏவலுக்களிக்கிறேன். சாவைப்பற்றி மட்டும் வினவாதே. (மரணம்மா அநுப்ராக்ஷீ:)

நசிகேதஸ்:—அந்தகா ! உன் குதிரை, நாட்டியம், பாட்டு எல்லாம் நீயே வைத்துக்கொள். பாட்டு குதிப்புகளின் மகிழ்வெல்லாந் தெரிந்ததுதான். செல்வத்தால் மனிதன் மகிழ்வடைவதில்லை. (நவித்தேந தர்ப்பணீயோ மநுஷ்ய:) இவை சதமல்ல. (ஸர்வம் ஜீவிதம் அல்பம்) சாவே ! அதிரஹஸ்யமான பரவாழ்வைப் (பரவித்தை) பேசாய். நசிகேதஸ் வேறு வேண்டான்.

யமன் :—சீர்மை (சிரேயஸ்) சுகம், புலனின்பம் (ப்ரேயஸ்) இவற்றில் முன்னது அறிவு, வித்தை; பின்னது அவித்தை; தீரன் அறிவுச் சீர்மையே விரும்புகிறுன். மூட்டாள் ஆசைப்பற்றுல் (ஈட்டிக் காத்து) இந்திரிய சுகத்தை விழைகிறுன்.

"श्रेयोहि धीरो अभिवृणीते प्रेयोमन्दो योगक्षेमाद्वृणीते ॥"

"ஶ்ரேயோஹி தீரோ அபிவ்ருணீதே
ப்ரேயோ மந்தோ யோக க்ஷேமாத் வ்ருணீதே"

அறியாமையான ஆள்விழுங்கிப் போலியின்பங்களை நல்லாராய்ச்சியுடன் நீ துறந்தாய்; நசிகேதஸ், நீ அறிவை விரும்புவோன். ஆசை உன்னை அலைக்காது. உன்னுறுதி நன்று. ப்ரஹ்மபுரி உனக்குத் திறந்துள்ளது. அறியாமையிலிருந்துகொண்டு தம்மைப் பண்டிதரென மதித்து மூடர், குருடன் நடத்தும் குருடர் போன்று (அந்தேநைவ நீயமாநா யதாந்தா) சுற்றிச் சுற்றித் தள்ளாடுகின்

றனர். வித்த மோகத்தினால் ஆராய்ச்சியற்ற சிறு பிள்ளைகள் "இதுவே யுலகம்: பரம் இல்லை (அயம் லோகோ நாஸ்தி பரஇதி)" என்று மயங்கி மீண்டும் மீண்டும் சாவாகிய என்வாய்ப் படுகின்றனர்.

பரம்பொருளான ஆன்மா கேள்வியா லெய்தாது ; இதைப் பலர் கேட்டும் அறியார் ; இதன் ஆசான் அற்புதன் ; மாணவன் அறிஞன். நல்லறிஞன் அறிவிக்க அதை யறிந்தோனும் அற்புதனே. அதுவானோனே அதை அதுவாகி நின்று அறிவிக்கவல்லோன். அது அணுவினும் அணு ; அதர்க்கியம். வித்தம் அநித்யம். அநித்யத்தால் நித்யம் வாய்க்காது. அது காணரிய ஒன்று ; அது மறைபொருள் ; உடலில் உள்ளத்தில் உள்ளது ; ஆத்ம த்யானத்தால் அதை யடைந்து தீரன் இன்ப துன்பத்தினின்று விடுதலை பெறுகிறான்.

"तंदुर्दर्शं गूढ मनुप्रविष्टं गुहाहितं गह्वरेष्ठं पुराणम् ।
अध्यात्मयोगाधिगमेन देवं मत्वा धीरोहर्ष शोकौ जहाति ॥"

"தம் துர்தர்ஶம் கூட மநுப்ரவிஷ்டம்
குஹாஹிதம் கஹ்வரேஷ்டம் புராணம்
அத்யாத்ம யோகா திகமேந தேவம்
மத்வா தீரோ ஹர்ஷ ஶோகௌ ஜஹாதி".—

இதுவே அறத்தின் உயிர்.

நசிகேதஸ் :—தர்மாதர்மம், க்ருதா க்ருதம், சென்றது வருவது, இவற்றின் வேறான தனிப் பொருளை விளக்காய், யமனே !

யமன் :—எப்பதத்தை வேதம் குறிப்பதோ, எதைத் தவங்கள் முறையிடுகின்றவோ, எதை விரும்பி ப்ரஹ்மசரி

யம் காக்கப்படுமோ அதைச் சுருக்கமாயுரைக்கிறேன்— அது ஓம் (ஓமித் யேதத்) இந்த எழுத்தே ப்ரஹ்மம்; பரம்; இதை யறிந்தோன் விரும்பிய எதையும் பெறுவான். இதுவே சிறந்த உயர்ந்த பற்றுக்கோடு. இதை யறிந்தோனை ப்ரஹ்மலோகமும் வணங்கும். அறிவோன் ஆன்மா பிறப்பிறப்பற்றது. எதனின்றும் போந்ததில்லை; பிறவாதது; என்று முள்ளது; நிலைபெற்றது. தொல் பொருள், உடலழிந்தும் தான் அழியாதது. கொன்றதாகக் கருதிய கொலைஞனும் கொல்லப்பட்டதாகக் கருதுவோனும் இதை யறியார். இது கொல்வதில்லை; கொல்லப்படுவதுமில்லை. (நாயம் ஹந்தி நஹந்யதே) இது அணுவிற்கணு, பெரிதிற் பெரிது; இவ்வாத்மன் உயிர்களின் உள்ளத்திலுள்ளது. ஆசை மயக்கந்தவிர்த்து தூய அமைதியான மனமும் தூய புலன்களுமுடையோர் இதன் பெருமையைக்காண்பர். இவ்வான்மா இருந்தவிடத்திலிருந்தும் (தனது சித் ப்ரகாசத்தால்) வெகுதூரம் செல்லும். அது படுத்திருந்தும் எங்கும் பரவும். அழியுடலில் உடலற்றுள்ள பெரும் பொருள் எங்கும் நிறைந்தது. இந்த ஆத்மாவை யறிந்து தீரர் கலக்கமொழிவர். இது வேதப்ரவசனத்தாற் கிட்டாது; மதிக்கெட்டாது; கேள்விக்கெட்டாது. யாரை விரும்புமோ அவரே அதை யடைவர். தனதான்மா தன் வடிவையே காட்டுகிறது. தீமை விலக்காதவன் அடக்கமற்றவன், தியானமற்றவன், மனவமைதியில்லாதவனால் இது அறிவாலும் அடையொணாது. உடல் ஒரு தேர் போன்றதே. ஆன்மா தலைவன். புலன்கள் குதிரைகள்; மனம் கடிவாளம்; புத்தி தேர்ப்பாகன்; விஷயங்கள் வழி.

"आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेवतु ।
बुद्धिंतु सारथिं विद्धि मनः प्रग्रह मेवच ।
इन्द्रियाणि हयानाहुर्विषयां स्तेषु गोचरान् ॥"

ஆத்மாநம் ரதிநம் வித்தி ஶரீரம் ரதமேவது
புத்திந்து ஸாரதிம் வித்தி மன : ப்ரக்ரஹ மேவச
இந்த்ரியாணி ஹயா நாஹுர் விஷயாம் ஸ்தேஷு
[கோசரான்

உடல் புலன் மனத்துடன்கூடிய ஆன்மா, போக்தா, நுகர்வோன் என்பர் அறிஞர். மனமடங்காத அவிஜ்ஞானியின் புலன்கள் ஒரு ஸாரதியின் துஷ்டக் குதிரைகள் போல முரண்டு செய்கின்றன. அடங்கிய மனமும் விஜ்ஞானமும் உள்ளவன் புலன்கள் ஒரு ஸாரதியின் கையில் நல்ல குதிரைபோல வசப்பட்டு நடக்கும். விஜ்ஞானி எப்போதும் தூயன். மனதடக்கியோன் மீளாப்பதமடைகிறான். அதுவே எங்கும் நிறைவான பரமாத்ம பதம். இதற்கு எதிரான அசுத்தன் பிறப்பிறப்பில் உழல்கிறான். ஐம்புலன்களினும் ஐம்பூதங்கள் பெரியவை. (பரம்) பூதங்களினும் மனம் பெரிது. மனத்திலும் புத்திபெரிது. புத்தியினும் ஹிரண்யகர்ப்பனென மஹாதாத்மா (Microcosmic soul) பெரிது. மஹத்திலும் அவ்யக்தம் (இயற்கை, சக்தி, ப்ரக்ருதி) பெரிது. அவ்யக்தத்திலும் புருஷன் பெரியோன், புருஷனினும் பெரியதில்லை. அவனே முடிவு; உயர்வு; கதி. இந்தப் புருஷன் ஆன்மா அனைவருள்ளுமிலங்கியும் எல்லாருங் காணக் கிடைப்பதில்லை. நுண்ணிய காட்சியாளரின் நுண்ணறிவிற்கே இது புலனாகும். அறிஞர் உரையை மனத்தும், மனத்தை அறிவிலும், அறிவை பேரான்மாவிலும், அதனை ஆத்மசாந்தியிலும் ஆழ்த்துக.

"यच्छेद्वाङ्मनसी प्राज्ञस्तद्यच्छेज्ज्ञान आत्मनि ।
ज्ञानमात्मनि महति नियच्छेत्तद्यच्छेच्छान्त आत्मनि ॥"

" யச்சேத் வாங்மநஸீ ப்ராஜ்ஞஸ் தத்யச்சேத்
ஜ்ஞான ஆத்மநி |
ஜ்ஞான மாத்மநி மஹதி நியச்சேத் தத்யச்சேச்
சாந்த ஆத்மநி ||

எழு, விழி, அறிஞரை அடைந்தறி. கத்திமுனைபோல் அதன் வழி கடத்தற்கரிதெனக் கவிகளிசைப்பர். அது அசப்தம், அஸ்பர்சம், அரூபம், அவ்யயம், அரசம், அகந்தம், அநாத்யந்தம், நித்யம், மஹத்தினும் பரம், நிலைபெற்றது. அவ்வான்மாவை யடைந்தவன் சாவின் வாயினின்றும் விடுபடுகிறான்.

புலன்கள் புறஞ்செல்கின்றன. அதனால் மனிதன் அகமுகப் பார்வையற்றுப் புறம்பார்க்கிறான். அமுதநிலை விரும்பி, பார்வை உள்முகப்பட்டு, உள்ளத்தானாகிய ஆத்மாவை தீரரே காண்கின்றனர். சிறு பிள்ளைகளே புறவின்பங்களைத் தொடர்வர். (பராசஃ காமா நநுயந்தி பாலாஃ) அவர்கள் விரிந்த யமபாசத்தில் சிக்குவர். நில்லாவுலகிடை நிலைபொருளறிந்து (அம்ருதத்வமறிந்து) அறிஞர் வேறொன்றையும் விரும்பார். ஒளி, சுவை, மணம், ஓசை, புணர்ச்சி இவற்றை எதனால் அறிகிறானோ அதுவே அது; ஆன்மா. கனவு விழிப்பு இரண்டிலும் எதனால் பொருள்களைக் காண்கிறானோ அந்தப் பெரிய எங்கும் நிறைந்த ஆத்மாவை யடைந்த தீரன் கலங்குவதில்லை.

"स्वप्नान्तं जगरितान्तं चोभौ येनानुपश्यति ।
महान्तं विभुमात्मानं मत्वा धीरो न शोचति ॥"

"ஸ்வப்நாந்தம் ஜாகரிதாந்தம் சோபௌ யேநாநுபஶ்யதி |
மஹாந்தம் விபுமாத்மாநம் மத்வா தீரோ நஶோசதி ||

இந்த ஆத்மா இன்பமான தேனுண்ணி (மத்வத:) உயிர்க் குறுதி; இறந்தகால எதிர்காலத்திற் கிறைவன். மிக நெருங்கியுள்ளது. அதை யறிந்தோன் அஞ்சுவதில்லை. இதய குகையில் புகுந்துள்ளது. (குஹாம்ப்ரவிஶ்யதிஷ்டதி) இது அதுவே. அது ப்ரஹ்மம். அதுவே தேவதாமயி; அதிதி; அதுவே பிராண வடிவில் விளங்குகிறது. ஞாயிறு விழுவதும் எழுவதும், தாண்ட முடியாத அதனினே. இங்கு உள்ளத்துள்ளதே, அங்கு உலகிலும். இங்குள்ளதை வேறுபட்டுக் காண்போன் சாவின்மேற் சாவடைகிறான். புருஷன் கட்டைவிரல் பெருமனில் உடலுள் கோயில் கொண்டுள்ளான். (அங்குஷ்டமாத்ர: புருஷோ மத்யே ஆத்மநி திஷ்டதி) அவன் புகையிலாச் சுடர்போன்றான். இன்றும் நாளையும் அவனே. தூநீர் தூநீருடன் கலந்து தூநீராவதுபோல் முனிவன் ஹ்ருதயாத்மா விஶ்வாத்மாவுடன் கலந்து சுத்தாத்மாவாகவே நிலைகிறது. ஆத்மா ஹம்ஸன், விண்ணுளான்; அந்தரிக்ஷத்துள்ளான். யாகவேதி, மஹாகாசம் கடாகாசம், அதிதி (ஸோமன்) நரர், தேவர், வேள்வி, வ்யோமம் அனைத்தினுமுள்ளான். தண், மண், வேள்வி, மலை அனைத்தினும் போந்த உண்மை அவனே. அவன் பெரியோன்.

"हंसः शुचिषद्वसुरन्तरिक्षसद्धोता वेदिषदतिथिर्दुरोणसत् ।
नृषद्वरसदृतसद्व्योमसदब्जा गोजा ऋतजा अद्रिजा ऋतं बृहत् ॥"

"ஹம்ஸ: ஶுசிஷத் வஸுரந்தரிக்ஷஸத் ஹோதா
வேதிஷத் அதிதிர் துரோணஸத் |

ந்ருஷத் வரஸத் ருதஸத் வ்யோமஸத் அப்ஜா
கோஜா ருதஜா அத்ரிஜா ருதம் ப்ருஹத் ||"

நரன் ப்ராணாபானத்தால் ஜீவிக்கவில்லை. இவை எதைச் சார்ந்துள்ளவோ அந்த தேஹி மரீரஸ்தனாலேயே ஜீவிக்கிறான். அவன் பரம குஹ்ய ஸநாதனன். ப்ரஹ்மன், சுத்தன், நித்யன், நாம் உறங்கும்போதும் விழித்திருக்கிறான். அவனில் எல்லா வுலகங்களும் அடங்கியுள்ளன. ஒரே நெருப்பு, தான் எரிக்கும் பொருளுக்கேற்பப் பல வடிவுகளுடன் காண்கிறது. ஒரே காற்று உலகினுற்று தான் நிரம்பும் பல பண்டங்களுக்கேற்பப் பல வடிவுகளுடன் உருவமைந்து நிற்கிறது. அதுபோல உள்ளத்துள்ள ஒரே ஆன்மா அது வசிக்கும் தோற்றங்களுக்கேற்ப வெவ்வேறு வடிவாகத் தோன்றுகிறது.

"वायुर्यथैको भुवनं प्रविष्टो रूपं रूपं प्रतिरूपो बभूव ।
एकस्तथा सर्व भूतान्तरात्मा रूपं रूपं प्रतिरूपो बहिश्च ॥"

"வாயுர் யதைகோ புவனம் ப்ரவிஷ்டோ
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பபூவ |
ஏகஸ்ததா ஸர்வ பூதாந்த ராத்மா
ரூபம் ரூபம் ப்ரதிரூபோ பஹிஶ்ச ||

எல்லா வுலகின்கண்ணுமை ஞாயிறு புறத்தே காணும் இழுக்குகளால் இழுக்குறுவதில்லை. அதுபோல எல்லா வுயிருள்ளும் உள்ள ஒரு ஆன்மா உலகத்துயர்களால் தீண்டப்படுவதில்லை.

"सूर्यो यथा सर्व लोकस्य चक्षु र्नलिप्यते चाक्षुषैर्बाह्य दोषैः ।
एकस्तथा सर्वभूतान्तरात्मा नलिप्यते लोक दुःखेन बाह्यः ॥"

" ஸூர்யோயதா ஸர்வ லோகஸ்ய சக்ஷுர்
நலிப்யதே சாக்ஷுஷைர் பாஹ்ய தோஷை: |
ஏகஸ்ததா ஸர்வ பூதாந்த ராத்மா
நலிப்யதே லோக து:கேன பாஹ்ய: || "

*அவன் அநித்யங்களிடையே நித்யமாய் அறிவிற் கறிவாயுள்ளான். ஒருவனேனும் பலர் விருப்பங்களை நிரப்புகிறான். அவனைத் தம்* உள்ளத்திலே காணும் *தீரர்களுக்கே நித்திய சாந்தம் உரியது.* வேறெவர்க்குமல்ல.

" नित्योऽनित्यानां चेतनश्चेतनानामेको बहूनांयोविदधाति कामान् ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरास्तेषां शान्तिः शाश्वती नेतरेषाम् ॥"

" நித்யோ அநித்யாநாம் சேதநஶ் சேதநாநாம்
ஏகோ பஹூநாம் யோவிததாதி காமாந் |
தமாத்மஸ்தம் யேஅநுபஶ்யந்தி தீரா:
தேஷாம் ஶாந்தி: ஶாஶ்வதீ நேதரேஷாம் || "

*அந்தப் பரமசுகத்தை மஹார்ஷிகள் " இது அது " எனக் காண்குனர்.*

நசிகேதஸ்.—*அதை எவ்வாறறிகுவல்? அது ஒளிர்வதா? நிலவுவதா?*

யமன்:—*ஞாயிறு, திங்கள், விண்மீன்கள், மின்னல்கள், எதுவும் அங்கு ப்ரகாசிப்பதில்லை. அவன் ப்ரகாசிக்க எல்லாம் அவனைச் சார்ந்தொளிர்கின்றன. அவனொளியால் இவை யெல்லாம் ஒளிர்வன.*

"तस्य भासा सर्वमिदं विभाति ॥"
(தஸ்ய பாஸா ஸர்வ மிதம் விபாதி)

மேலே அவ்யக்தத்தில் வேரூன்றிக் கீழே கிளைவிரிந்த சிருஷ்டியாகிய அஸ்வத்தமும் அவனுடைய விளக்கமே. அவன் சுத்த நித்ய ப்ரஹ்மன். நெடிய அசனி போன்று அதிபயங்கரன். அவனை அஞ்சியே தீ எரிகிறது. கதிர் ஒளிர்கிறது. இந்த்ரன், வாயு, எமன் முதலானோர் தத்தந் தொழிலாற்றுனர். உடல் விழுமுன் அந்தப் பிரஹ்மத்தை யறியான் வினையுலகில் மீண்டும் பிறக்கிறான். தன்னுள் ப்ரஹ்மன் கண்ணாடியிற் போலக் காண்கிறான். (யதா தர்ஸே ததாத்மநி) அவன் வடிவு புறவிழிக் கிலங்காது. சுத்தபுத்தியில் மனங்குவிந்து உள்ளத்திலே அவனைக் காணலாம். உறுதியான புலனடக்கமே யோகமென்பர். (தாம் யோகமிதி மந்யதே ஸ்திரமிந்த்ரிய தாரணம்) யோகி மனத்தை யலையவிடாது அப்ரமத்தனாகுக. ஸத்பாவனையே அடையத்தக்கது. மனத்தாசைகளெல்லாம் நசித்தபின் நரன் அமரனாகிறான். இந்நிலையில் ப்ரஹ்மத்தை யடைகிறான். ஆசை, இருள், ஆணவம் முதலிய இதய முடிச்சுகள் அற்றபின்னர் நரன் அமரனாகிறான். இதயநாடிகள், க0க. அவற்றில் ஒன்று அமுதநாடி அல்லது சுஷும்னா நாடி. (சுழுமுனை). அது நேராக சஹஸ்ரார மட்டும் செல்கிறது. அதையே பற்றிச் சென்றால் அமரத்வம் வாய்க்கும். அங்குஷ்ட மாத்ரனான புருஷன் அந்தராத்மன். ஜீவர்களின் உள்ளத்தில் எப்போதும் உறைந்துளான். அவன் சுத்தன், நித்யன், அவனை யறிக. அறிந்தவன் அமரனாவான்" என்பதே கடோபநிஷத்தின் கர்ஜனை.

"अङ्गुष्ठमात्रः पुरुषोऽन्तरात्मा सदा जनानां हृदये संनिविष्टः ।
तं विद्याच्छुक्र ममृतम् ॥"

" அங்குஷ்ட மாத்ர: புருஷோ அந்த ராத்மா
ஸதா ஜநாநாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட:
தம் வித்யாச் சுக்ர மம்ருதம் |

யமனறிவுறுத்திய இந்த ஆத்ம ஞானத்தால் நசிகேதஸ் ப்ரஹ்மத்தை யடைந்தான்.

ஒவ்வொருவருள்ளும் அந்தப்ரஹ்மாக்நி இதய குண்டத்தில் இதயநாடி வழியே கொழுந்தேறிப் பரவுகிறது. அதைத் தானென்றறிக. அதுவே அறிவு, அகம், தான், அத்தன்னை விடாமலிருப்பதே அமுதநிலை. அதுவே ரமணானந்தம் !

## ப்ரஸ்னோபநிஷத்

ஆறத்தியாயங்கள் கொண்ட ப்ரஸ்னோபநிஷத்தில் உயிர்மூலம் எது? உயிர்களைத் தாங்கும் தேவதைகள் யார்? ப்ராணமூலமெது? மனிதனிடம் உறங்குவதார், விழித்திருப்பதார், கனவு காண்பதார்? இன்பம் எவனது? எதில் எல்லாம் நிலைப்பு? ஓங்காரத்யான பலனென்ன? புருஷன் எங்குளான்? என்று தீவிர ப்ரஹ்மோபாசியான பாரத்வாஜ ஸத்யகாமன் கேட்கும் கேள்விகளுக்கு பிப்பலாத மஹர்ஷி பதிலளிக்கிறார். "ப்ராணனின் உற்பத்தியைக் கண்டால் அமுதநிலை பெறுகிறான்; மனநிந்தவென்றால் இன்பமுதிக்கும். மரத்திற் புட்களடைவது போல மேலான ஆத்மாவிலேயே எல்லாத் தத்துவங்களு மடங்கும். ஆத்ம புருஷனே அனைத்தையும் அறிவோன், காண்போன். நித்தியனான அவனிலே மனம் பொறிபுலன் ப்ராணன்கள் எல்லாம் அடக்கம். இதயத்தொளிரும் அப்பரமபுருஷனை " ஓம் " என்று தியானிப்ப

னறிஞன். அந்தப்புருஷன் இந்த வுடலுள் உள்ளான் (இஹைவாந்த: ஶரீரே ஸோம்ய ஸபுருஷ:) நதிகள் எல்லாம் கடலிற் கலந்து வெவ்வேறு பெயர் வடிவங்களற்று ஒரே கடலாவதுபோல பெயர் வடிவெல்லாம் இப் புருஷனில் மறைவன. சக்கிரத்தின் ஆரைகள் ரதநாபியில் (குடத்தில்) அடங்குவதுபோலக் காலங்கள் அவனில் அடங்கும். (அரா இவ ரதநாபௌ காலாயஸ்மிந் ப்ரதிஷ்டிதா:) அவன் ப்ரஹ்மம். அவனினும் உயர்வில்லை" என்பது இவ்வரிய உபநிடதத்தின் ஸாரம்.

## முண்டகோபநிஷத்

ப்ரஹ்ம ஞானக் கண்ணுடியான முண்டகோபநிஷதம் (மந்த்ரோபநிஷத்) தியானத்திற்கேற்றது. ப்ரஹ்மன் தன் தலைமகன் அதர்வனுக்குப் புகட்டிய ப்ரஹ்மஞானம் வழி வழியாக ஆங்கிரஸமுனிவனுக்கு எய்துகின்றது. அம் முனிவனை இல்லறச் சௌனகன், "பகவன்! எதையறிந்தால் எல்லாம் அறிந்ததாகும்?" என்று வினவவே, முனிவனுரைக்கிறுன். அபரம் பரமென வித்தை இரண்டு. வேதங்கள் நான்கு. ஆறு வேதாங்கங்களான சிக்ஷை, கல்பம், வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம் இவை அபர வித்தை. அக்ஷரப்ரஹ்மத்தை அடைவிப்பது பரவித்தை. அது அத்ரேஶ்யம் (காணுதது), அக்ராஹ்யம், அகோத்ரம், அவர்ணம், நிரவயவம், நித்யம், விபு, ஸர்வகதம் (எங்குமுள்ளது), ஸூக்ஷ்மம், அவ்யயம், ஸ்ருஷ்டி மூலம். அதை தீரர் (நுண்விழியால்) எங்கும் காண்பர். சிலந்தி நூலை யிழுத்து விழுங்குவதுபோலும், மண்ணில் பயிர்கள் வளர்வதுபோலும், உடலில் இயல்பாய் ரோமங்

கள் வளர்வதுபோலும், அந்த அழியாப் பொருளினின்று இயல்பாக சிருஷ்டி எழுகின்றது. தவத்தால் ப்ரஹ்மன் பரவுகிறுன். அறிவே தவம். உயிர், மனம், பொறி, புலன்கள், பூதங்கள் எல்லாம் அந்த அழியாப் பரம்பொருளினின்றே போந்தன. அனல் அவன் தலை; ஞாயிறும் திங்களும் விழிகள் ; நாற்றிசைகளும் அவன் செவிகள் ; அருள் வேதம் அவன் மொழி ; காற்று அவன் மூச்சு ; உலகம் அவன் உள்ளம் ; அவனடியினின்று உலகம் உதித்தது. அவனே சர்வ பூதாந்தராத்மா ; உயிர்களினுறையுள். சூர்யனை சமித்தாகக் கொண்டெரியுந் தீ. சந்திரன், மேகங்கள், மண்ணில் வளரும் பயிர்கள், அதையுண்டு ஊறும் விந்து, தேவர், மக்கள், விலங்குகள், பறவைகள், எழுயிர்கள் (ஸப்தப் பிராணன்), மலைகள், நதிகள், மூலிகைகள், எல்லாம் அவனிற் போந்தவையே. புருஷனே எல்லாம். அவனே கர்மம், தபம், பரம், அம்ருதம், ப்ரஹ்மம். இதய குகையில் இவனிருக்கையை யறிவோன், இங்கேயே அறியாமை யென்னு முடிச்சை அறுத்தெறிகிறுன்.

"पुरुष एवेदं विश्वं कर्म तपो ब्रह्म परामृतम् ।
एतद्यो वेद निहितं गुहायां सोऽविद्या ग्रन्थिं विकिरतीह सोम्य ॥"

"புருஷ ஏவேதம் விஶ்வம் கர்மதபோ ப்ரஹ்ம பராம்ருதம்
ஏதத் யோவேத நிஹிதம் குஹாயாம் ஸோஅவித்யா
க்ரந்திம் விகிரதீஹ ஸோம்ய॥"

அது உண்மை, இன்பம் ; ஸௌம்ய, எய்தற்குரிய அதனை யெய்து.

"तदेतत्सत्यं तदमृतं तद्वेद्धव्यं सोम्य विद्धि ॥"

"தேதத் ஸத்யம் ததம்ருதம் தத்வேத்தவ்யம்
ஸோம்ய வித்தி"

உபநிடதம் விரிக்கும் பெரியவில்லில் இடையறு உன் வழிபாட்டால் தீட்டிய கணைபூட்டி, அவன் நினைப்பில் ஆழ்ந்த மனத்தால் வளைத்து அழியாத ப்ரஹ்மத்திற் குறிவை. ப்ரணவம் வில், ஜீவாத்மா கணை, ப்ரஹ்மம் அதன் லக்ஷ்யம் என்பர். குறியுடன் அம்பு ஒன்றுவ தொப்ப அந்தப்ரஹ்மத்தில் ஒன்றுக.

"प्रणवो धनुः शरो ह्यात्मा ब्रह्म तल्लक्ष्यमुच्यते ।
अप्रमत्तेन वेद्धव्यं शरवत्तन्मयो भवेत् ॥"

"ப்ரணவோ தநு: ஶரோஹ் யாத்மா
ப்ரஹ்மதல் லக்ஷ்யமுச்யதே |
அப்ரமத்தேந வேத்தவ்யம்
ஶரவத் தந்மயோ பவேத் ||

விண், மண், இடைவெளி, ப்ராணன்களுடன் கூடிய மனம் எல்லாம் எதில் தைக்கப்பட்டுள்ளனவோ அந்த ஒன்றை, ஆன்மாவையே அறி. மற்ற வீண்பேச்சுக்களைப் பேசாதே. இதுவே அமுத நிலையிற் சேர்ப்பிக்கும் சேது (பாலம்)

"तमेवैकं जानथ आत्मानमन्या वाचो विमुञ्चथामृतस्यैष सेतुः ॥"

"தமேவைகம் ஜாநத ஆத்மாநம் அந்யாவாசோ
விமுஞ்சத அம்ருதஸ்யைஷ ஸேது:"

அவன் உள்ளே ரதநாபியில் ஆரைகள் போன்று நரம்புகளெல்லாம் கூடுமிடத்தில் பலவிதமா யிருக்கிறுன்.

அந்த ஆத்மனை ஓமென த்யானி. நீ விரைவில் இருளைத் தாண்டுக !

"अरा इव रथनाभौ संहता यत्र नाड्यः सएषोऽन्तश्चरते बहुधा जायमानः
ओमित्येवं ध्यायत आत्मानम् ॥"

" அரா இவ ரதநாபௌ ஸம்ஹதா யத்ரநாட்யஃ
ஸ ஏஷோ அந்தஶ்சரதே பஹுதா ஜாயமாநஃ
ஓமித் யேவம் த்யாயத ஆத்மாநம் "

இவ்வான்மா முற்றறிவன். திவ்யமான ப்ரஹ்மபுரியின் வ்யோம (ஆகாச) த்தில் அவன் விளங்குகிறான். அனைத்தின் மேலும் கீழும் ஆன அவனைக் காணின் இதய முடிச்சு சிதையும். ஐயம் சிந்தும். முன்வினைப்பயன் அழியும்.

" भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्व संशयाः ।
क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन्दृष्टे परावरे ॥"

" பித்யதே ஹ்ருதய க்ரந்திஃ சித்யந்தே ஸர்வஸம்ஶயாஃ"
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே |

வலம் இடம், முன்பின், கீழ்மேல் எங்கும் நித்ய ப்ரஹ்மமே. இவ்வுலகு பரப்ரஹ்மமே.

"ब्रह्मैवेदं विश्वमिदं वरिष्ठम् ॥"

" ப்ரஹ்மைவேதம் விஶ்வமிதம் வரிஷ்டம் "

ஜீவாத்மா பரமாத்மாவாகிய இரு அழகிய புட்கள் நெருங்கிய நட்புடன் (உடலாகிய) ஒரே மரத்தில் (ஸமானம் வ்ருக்ஷம்) அமர்ந்துள்ளன. ஒன்று அதன் இன்கனிகளை யுண்கிறது. மற்றது (சுத்த சித்) உண்ணு சாட்சியாயிருக்கிறது. ஒரே மரத்திலமர்ந்து புருஷன் மோகத்

தால் வருந்துகிறான். மற்றொருபால் சுகதுக்கங்கள் தொடராது அனைத்திற்கும் சாட்சியாயமர்ந்த இறைவனையும் அவன் பெருமையையும் கண்டு துன்ப விடுதலை பெறுகிறான். பொன்வண்ணன், பிரமனை யீன்றோன், இறைவன், பரமபுருஷன், காட்சியாளன் அவனைக் கண்டதும் புண்ய பாபத்தளை (அறம்பாவமென்னும் அருங்கட்டு) நீங்கி, மாசற்று பரம ஜீவப்ரஹ்மைக்யத்தை யடைகிறான். அவனே அனைத்திலும் நிறைந்த பிராணன். அவனை அறிந்த வித்வான் வீண்வாதம் பேசுவதில்லை. அவன் தன்னுளே புணர்ந்து தன்னுளே மகிழ்ந்து தன்னுளே செயல் புரிந்து ப்ரஹ்ம ஞானிகளில் முதல்வனாக விளங்குகிறான்.

"आत्मक्रीड आत्मरतिः क्रियावानेष ब्रह्मविदां वरिष्ठः ॥"

"ஆத்மக்ரீட ஆத்மரதி: க்ரியாவான்
ஏஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட:"

தன்னையடக்கிய மாசற்ற துறவிகள் தம்முளே யடையும் இந்த ஜோதிர்மயமான சுத்தாத்மா ஸத்யம், தவம், நல்லறிவு, நித்ய ப்ரஹ்மசரியம் இவற்றாலேயே அடையக் கிடைக்கும். "ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்" மெய்யர் வெல்வர், பொய்யரல்ல. உண்மையாலேயே விருப்பங்கள் நிறைவேறி ரிஷிகள் உண்மையுறையும் உயர்நிலை (ஸத்யஸ்ய பரமம் நிதானம்) எய்துவர். மிகப் பெரிதாய் எழிலும் "தத்" எனும் ஆத்மா கருதொணா உருவன் நுட்பத்தில் மிகநுண்ணியனாக ஒளிர்கிறான். அவன் தொலைவினுந் தொலைவு. அவன் இங்கேயே (இவ்வுடலுள்) உள்ளான். அவன் புலவரின் இதய குகையில் வசிக்கிறான். (இஹாந்திகேச பச்யத்ஸு இஹைவ நிஹிதம் குஹா

யாம்) கண், மொழி, எப்புலன்களாலும், 'தவத்தாலும், வினையாலும் அவன் துலங்குவதில்லை. ஞானப்ரஸாதத்தாலேயே ஒருவன் விசுத்த மனமடைகிறான். பிறகு தியானத்தால் அந்த நிஷ்கலமான ப்ரஹ்மத்தை அடைகிறான்.

" ज्ञानप्रसादेनविशुद्ध सत्त्वस्ततस्तुतंपश्यते निष्कलंध्यायमानः ॥

" ஜ்ஞானப்ரஸாதேந விஶுத்த ஸத்வ꞉
ததஸ்து தம் பஶ்யதே நிஷ்கலம் த்யாயமாந꞉||

இந்த அணுவாத்மன் பஞ்சப்ராணனும் புகும் இடத்தில் உணர்வால் அடையப்பெறுவான். அவனே மனேந்த்ரியங்கள் முழுதும் பரவியுள்ளான். மனோவிசுத்தியானல் இவ்வான்மா நிலவுகிறான். விஶுத்த ஸத்வன் (தூயமனத்தன்) விரும்பிய வுலகை, விரும்பிய பொருளை அடைகிறான். ஆதலின் புவிச்செல்வம் வேண்டுவோன் ஆத்மஞானிகளையே வழிபட வேண்டும்.

'तस्मात् भूतिकामः आत्मज्ञंह्यर्चयेत् ॥"

" தஸ்மாத் பூதிகாம꞉ ஆத்மஜ்ஞம்ஹி அர்ச்சயேத் "

மனத்தில் ஆவலாய் விரும்பிய விருப்பங்களுக்கேற்பவே ஒருவன் ஆங்காங்கு பிறப்பெய்துகிறான். ஆசைதீர்ந்தோன் தன்னை யறிந்தோன் விருப்பங்கள் இவ்வுலகிலேயே மறைந்துவிடுகின்றன. இந்த ஆத்மா வலுவற்றவனுக்கெய்தாது. (நாயமாத்மா பலஹீநேந லப்ய꞉) கருத்தற்றவனாலும் முறையற்ற தபத்தாலும் எய்தாது. ரிஷிகள் அதை யெய்தி ஜ்ஞான திருப்தராய் (அறிவின் மகிழ்ந்து) தன்னை யடைந்தவராய் ஆசைகளகன்று அமைதி யெய்துனர். யுக்தாத்மர்களான தீரர் அனைத்தி

லும் எங்கும் நிறைந்த பொருளை யெய்தி அனைத்திலும் புகுந்துறைகின்றனர். தன்னை உலகிலும் உலகைத் தன்னுளும் காண்குனர். வேதாந்த ஜ்ஞானப் பொருளை நன்குணர்ந்தவர் ஸந்யாஸ யோகத்தால் மனத்தூய்மை யுற்றவர்கள், உயர்ந்த அமுதநிலை பெற்றோர், இறுதிகாலத்திற்குப் பின் ப்ரஹ்மலோகத்தில் முழு விடுதலை யெய்துனர். பெயர் வடிவற்று நதிகள் கடலிற் கலப்பதுபோல நிர்நாமரூபராய் முக்தரான வித்வான்கள் பரம திவ்யபுருஷனை யடைகின்றனர். ப்ரஹ்மத்தை யறிவோன் ப்ரஹ்மமே யாகிறன்.

"सयोह्वै तत्परमं ब्रह्मवेद ब्रह्मैव भवति ॥

"ஸயோ ஹவை தத்பரமம் ப்ரஹ்ம வேத
ப்ரஹ்மைவ பவதி"

அவன் குடும்பத்தில் ப்ரஹ்மத்தை அறியாதவன் பிறப்பதே யில்லை. அவன் எல்லாப் பாபங்களையும் தாண்டுகிறன். துயர்களைக் கடக்கிறன், குஹாக்ரந்திகளான (இதய முடிச்சுகள்) ஆசை யாணவங்களினின்று விடுபட்டு அமுதநிலை யடைகிறன். அத்தகைய பரமரிஷிகளுக்கு வணக்கம்!

மாண்டூக்யம்

"सर्वं ह्येतद्ब्रह्मायमात्माब्रह्म ।
ओङ्कार आत्मैव संविश त्यात्मनात्मानं यएवंवेद यएवंवेद ॥"

"ஸர்வம் ஹ்யேதத் ப்ரஹ்மாய மாத்மா ப்ரஹ்ம
ஓங்கார ஆத்மைவ
ஸம்விஶத் யாத்மநா ஆத்மாநம்
யஏவம் வேத யஏவம்வேத!"

ஆத்மா ப்ரஹ்மம். எல்லாம் ப்ரஹ்மம். ஓங்காரம் ஆத்மாவே. யாவனிதை யறிவனோ அவன் தன்னால் தன்னுள்ளடைகிறான். இதுவே மாண்டூக்ய உபநிஷத்தின் உண்மை.

## தைத்திரீயம்

நான்கு நிலைகளாக வகுக்கப்பட்ட உபநிஷத் மணியான தைத்திரீயம், முற்கால மஹர்ஷிகளின் தூய வாழ்வைத் தெளிவாகவோதி, வாழ்வின் பயன் ப்ரஹ்மத்தை யறிவதே யென்று முத்திரை போடுகிறது. நம் நாட்டில் எங்கும் உதாத்த அநுதாத்த வொழுங்குடன் இன்றும் முழங்கும் இவ்வுபநிடதம் ப்ரஹ்மசரியத்தில் வாழ்வின் செடியை யூன்றி இல்லறக் கிளை விரிந்து, தவம் மலர்ந்து, ப்ரஹ்மாநந்தக்கனி கனிய இடைவிடாத அறிவுத்தேனாற்றாகப் பாய்கின்றது. இதன் நுட்பங்கள் பல. சீக்ஷா வல்லி, ஆனந்தவல்லி, ப்ருகுவல்லி எனமூன்று வல்லிகளாற் செழித்த இந்த ப்ரஹ்ம ஞானவனத்தில் எக்காலும் நறுமணம் கமழும் வாடா அழகுள்ள சில மனோரஞ்சிதங்களைக் கொய்து ப்ரஹ்மார்ப்பணம் செய்வோம். "இறைவ, யான் உன்னுளுறைக! நீ என்னுளுறைக! இறைவனே! நான் அமுதத் தன்மை யடைவேனாக! அம்ருதஸ்ய தேவ தாரண: (ப்ரஹ்ம ஞானம் பெறுதற்கு) எல்லாப் பக்கங்களினின்றும் தன்னடக்கமுள்ள அமைதியான வன்னிகள் (ப்ரஹ்மசாரிகள்) வருக, வருக! ப்ரஹ்ம ஞானியே சிறந்தோன். ஆகாசம் ப்ரஹ்ம சரீரம்; சத்யம் ஆத்மா. அவன் வாழ்வின் ஆறுதல்; மனத்திற்கின்பம்; அவன் அமைதி, நிறைவு, அமுதம்; அவனை

த்யானிக்கக் கடவர். ஓம் ப்ரஹ்மம் (ஓமிதிப்ரஹ்ம) ஓம் எல்லாம் (நானும் ப்ரஹ்மம்).

ப்ரஹ்ம வித்தே உயர்வடைகிறான்! ப்ரஹ்மம், ஸத்யம், ஜ்ஞானம், அநந்தம். இதயகுகையில் வளரும் பரமாகாசத் (சிதம்பரம்) தை யறிந்தோன் அனைத்து மறிந்த ப்ரஹ்மத்துடன் தனது விருப்பமனைத்தும் நிறைவேறப் பெறுகிறான்.

"सत्यंज्ञानमनन्तं ब्रह्म । यो वेद निहितं गुहायां परमे व्योमन् ।
सोऽश्नुते सर्वान् कामान् सह ब्रह्मणा विपश्चितेति ॥"

"ஸத்யம் ஞான மநந்தம் ப்ரஹ்ம யோவேத நிஹிதம்
குஹாயாம் பரமே வ்யோமந்
ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா
விபஶ்சி தேதி॥"

இந்த ஆத்மாவினின்று ஆகாசம் போந்தது. அதனின்று வாயு; அதனின்று தீ; அதனின்று தண்; அதனின்று மண்; அதனின்று தாவரம்; அதனின்று அன்னம்; அதனின்று புருஷன். அன்னம் ப்ரஹ்ம மென்றறிக. அவ்வாறறிந்தோன் அன்னமெல்லாம் பெறுவன். (அன்ன மென்பது தூலசேதனம். அதுவும் ப்ரஹ்மத்தின் வ்யாபகமே. அதில் ப்ரஹ்மாக்நி உறங்குகிறது.) ப்ராணனை ப்ரஹ்மமென்று வணங்குவோன் நீளாயுள் பெறுவான். (ப்ராணன் வீரிய சேதனம்; ப்ராண சக்தியே ஜீவசக்தி) ப்ராணன் உயிர்களுக்கு ஆயுள் (ப்ராணோஹி பூதானாமாயு:) அது உலகுயிர்: சர்வாயுஸ்: உட்கரணம்: பொறி புலன்களுடன் கூடிய மனோமய கோசமும் ப்ரஹ்ம மென்றறிக.

ப்ரஹ்மத்தை அணுகொணாது, மொழியும் மனமும்

திரும்பிவிடுகின்றனை. ப்ரஹ்மாநந்த மறிந்தவன் எக்காலு மஞ்சுவதில்லை. (ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான் நபி பேதி கதாசனேதி) மனத்திற்குமேல் விஞ்ஞான சேதனம் (சுத்தமனஸ்) உள்ளது. அந்த விஞ்ஞானம் வேள்விபுரி கிறது. (வேள்வியின் ஞானப்பொருள் கீதை காட்டும் பாதையிற் காண்க.) விஞ்ஞானமே அருள் வினைகளைச் செய் கிறது. தேவர்கள் இத்தலைசிறந்த விஞ்ஞானத்தையே ப்ரஹ்மமாக உபாஸிக்கின்றனர். இது ஆனந்தத்தால் நிறைந்தது. ஆனந்தத்தின் சிரம் அன்பு; மகிழ்வு வலது சிறகு; களிப்பு இடது சிறகு; இன்பம் அதன் ஆன்மா; ப்ரஹ்மமே அதன் புச்சம், ஆதாரம். தன்னிச்சா சக்தி யால் ப்ரஹ்மன் "நான் பலவாகிப் பெருகட்டும்" என விரும்பினன். தபஸ் செய்தான். தவத்தால் இங்குள்ள தனைத்தையும் ஆக்கினன். ஆக்கியதுள் அவனே புகுந் துறைந்தான். ப்ரஹ்மம் ஸத்யம். ஸத்யமே இவையனைத் தும்; உறைவதனைத்தும் உண்மையே யென்க. ("யதிதம் கிஞ்ச தத்ஸத்யமித் யாசக்ஷதே") ப்ரஹ்மன் ரஸம்: இன்பம். இவ்வின்பத்தை யடைந்தே மனிதன் இன்புறு கிறான். இந்த ஆனந்தாகாசம் இல்லாவிடின் யாரே உயி ருடன் வாழவொண்ணும்?

"रसोवैसः। रसँ ह्येवायं लब्ध्वानन्दी भवति। कोह्येवान्यात्कः प्राण्यात् ॥"

"ரஸோவை ஸஹ: ரஸம்ஹ்யேவாயம் லப்த்வாநந்
தீபவதி
கோஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத் ||"

இந்த ப்ரஹ்மத்தைத் தன்னின்று பிரிந்து வேறு படுத்தினும் அச்சமுண்டாம். மனிதனுள்ளிருப்பதும் சூரியனுள்ளிருப்பதும் ஒன்றே.

"ஸயஶ்சாயம்புருஷே யஶ்சாஸாவாதித்யே ஸஏக:"

தேவர் இந்திரன் பிரமனைக் காட்டிலும் நூறு நூறு நூறு நூறு மடங்கு இன்பமுள்ளது ஆத்மாநந்தம்.

வாருணியின் மைந்தனான ப்ருகு தவம்புரிந்து படிப் படியாக அன்னம் ப்ராணன் மனம் விஜ்ஞானம் ஆனந் தம் ப்ரஹ்ம மென்றறிவதை ப்ருகுவல்லி யிசைக்கிறது.

தவம் ப்ரஹ்மம் (தபோப்ரஹ்மேதி) எனவே மென் மேலுந் தவம்புரிந்து அன்னமய ப்ராணமய மனோமய விஜ்ஞானமய ப்ரஹ்மத்திற்கு மேல் மீண்டும் மீண்டும் தபம்புரிந்து ஆனந்தமய சேதனமே உயர்ந்த ப்ரஹ்ம மென் றறிகிறான் ப்ருகுமுனிவன். ஆனந்தத்தினின்றே இவ்வுயிர்கள் போந்தன. போந்து ஆனந்தத்திலேயே உயிர்க்குன. பிறகு ஆனந்தத்திலேயே புகுகின்றன.

"आनन्दो ब्रह्मेति व्याजानात् । आनन्दाध्येव खल्विमानि भूतानि जायन्ते। आनन्देन जातानि जीवन्ति । आनन्दं प्रयन्त्यभि संविशन्तीति ॥"

"ஆனந்தோ ப்ரஹ்மே திவ்யாஜாநாத்
ஆனந்தாத்யேவ கல்விமானி பூதானி ஜாயந்தே
ஆனந்தேன ஜாதானி ஜீவந்தி
ஆனந்தம் ப்ரயந்த் யபிஸம் விஶந்தீதி"

ப்ரஹ்மோபாசனை செய்க. அதை ஆதரவாக நினைத் தால் ஆதரவெய்தும். பெரிதாய் எண்ணின் பெருமை எய்தும்; மனதா யெண்ணின் மனவலு வெய்தும்; வணக் கமாய் பாவித்தால் எல்லார் வணக்கமு மெய்தும்; அதை உயர்பொருளாக நினைத்தால் உயர் சிறப்பெய்தும்.

இனி, ஶ்வேதாஶ்வதரம், அமிருதபிந்து, சாந்தோக் யம், கைவல்யம், ஹம்ஸம், ஜாபாலகம் முதலிய உபநிட தங்களை வடித்தெடுப்பாம்:—

அவன் ஒருவன், சர்வ சரீரி, ஒருவனே ஜலசந்த்ரன் போல் பலவாகக்காண்கிறான். இந்தப்ரஹ்மம்பெண்ணல்ல, ஆணல்ல, அலியுமல்ல. எடுக்கும் உடலுக்கேற்ப அமைகிறான்.

"नैवस्त्री नपुमानेष नचैवायं नपुंसकः ।
यद्यच्छरीर मादत्ते तेन तेन सयुज्यते ॥

" நைவஸ்த்ரீ நபுமானேஷ நசைவாயம் நபும்ஸக:
யத்யச்சரீர மாதத்தே தேநதேந ஸயுஜ்யதே.

அவன் ஒரே இறைவன்; எல்லாவுயிர்களினும் உள்ளுறை. எங்கும் உள்ளவன்; ஸர்வ பூதாந்தராத்மா; வினைத் தலைவன்; உயிர்களுக்குறைவிடம்; சாட்சி; சேதனன்; கேவலம் நிர்க்குணன்.

"एको देवः सर्व भूतेषु गूढः सर्वव्यापी सर्वभूतान्तरात्मा ।
कर्माध्यक्षः सर्वभूताधिवासः साक्षी चेताकेवलो निर्गुणश्च ॥"

" ஏகோதேவஸ் ஸர்வபூதேஷு கூட:
ஸர்வவ்யாபீ ஸர்வ பூதாந்த ராத்மா |
கர்மாத் யக்ஷஸ் ஸர்வ பூதாதி வாஸ:
ஸாக்ஷீசேதா கேவலோ நிர்க்குணஶ்ச || "

இதயத்தில் ஹம்ஸனாகிய ஆன்மாவை த்யானிக்க வேண்டும். (ஹ்ருதயே ஹம்ஸ மாத்மாநம் த்யாயேத்) அந்த ஆன்மாவான ஏகப்ரஹ்மம் நீ. (ப்ரஹ்மைகம் த்வம்) அது உள்ளே அறியத்தக்கது. (ததந்தர் க்ரஹணம்.) மனமே பந்தமோக்ஷத்திற்குக் காரணம். விஷயக் கலப்பால் பந்தமும் விஷயத்துறவால் விடுதலையும் எய்தும். விஷய சம்பந்தத்தையொழித்து இதயத்திலேயே அடையப்பட்ட

மனம் எப்பொழுது ஆத்மபாவ மடைகிறதோ அப்போது அதுவே பரமபதமாம்.

"निरस्त विषया सङ्गं संनिरुद्धं मनोहृदि ।
यदा यात्यात्मनोभावं तदा तत्परमं पदम् ॥

"நிரஸ்த விஷயா ஸங்கம் ஸந்நிருத்தம் மனோஹ்ருதி
யதாயாத் யாத்மனோ பாவம் ததாதத் பரமம்பதம்"

உள்ளத் தான்மா உலகத் தான்மா. உள்ளது மறைப்பது மனத்திரை. மனத்திரை ஆணவம் என்ற பாவாலும் சங்கற்பமென்ற ஊடாலும் நெய்யப்பட்டு ஜகத் சித்ரத்தைத் தாங்கி நிற்கிறது. அத்திரையை நானென மயங்காது, நான் இதுவல்ல, இதனுள் ஒன்றுள்ளது, அது நான் என்று விசாரித்து அங்கு அடங்குவதே இயல் நிலை, சகஜநிலை, இன்பநிலை. சாகாநிலை, கடவுள் நிலை, சுத்த நிலை; அதைப்பெற்றான் அனைத்தும் பெற்றான்; அஃதற்றான் எனைத்துமற்றான். அதை நீ யென்றறிக, என்பதையே உபநிடதங்கள் கம்பீரமாகத் திருப்பித் திருப்பி முழங்குகின்றன. 108 உபநிடதங்களின் இரகசியமும் இங்கு முடிந்த மட்டும் விளக்கப்பட்டுள்ளது. இதை அறிவமைதி யுண்மை யின்பம் வேண்டுவோர் மீண்டும் மீண்டும் தியானித்திடுக.

இவ்வுபநிடத வடிவு நம்மெதிரில் பொன்மயமா யிலங்குகிறது. எல்லா உபநிஷத் ரஹஸ்யமும் "ஹ்ருதய குஹாமத்யே" என்ற பகவத்வாக்கில் அடங்கியுள்ளது. அன்பர் உள்ளத்தை யாராய்ந்து, உள்ளத்தானில் உள்ளூறக் கலந்து உள்ளபடி உள்ளநிலை யுறுக.

ஓம் ப்ரஹ்மைவாஹம், சுத்தோஹம்!

## (காயத்ரி ரஹஸ்யம்)

ओं भूर्भुवस्सुवः तत्सवितुर्वरेण्यं भर्गो देवस्यधीमहि धियोयोनः प्रचोदयात्

ஓம் பூர் புவஸ்ஸுவ: தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோ ந: ப்ரசோதயாத்

வேதக்கனி பிழிந்து கட்டியாக்கிய காயத்ரி பாரத மஹர்ஷிகளுக்கு வீரதீர ஆயுராரோக்யமும், ஆன்ம வொளியும் அளித்த மஹா மந்த்ரம். அதன்பொருளும் ஹ்ருதய வானிலங்கும் ஆன்ம ஸூரியனையே குறிக்கிறது.

ஓம்=(அ+உ+ம்; அ=ஸத்; உ=சித், ம்=ஆனந்தம்.) சச்சிதானப்பொருள், பூ=தூலவுலகம், புவ:=வீர்ய பலம் நிறைந்த அந்தரிக்ஷம் அல்லது உயிருலகு. ஸ்வ:= விண் அல்லது சுத்த மனோமயவுலகு. ய:=எவன் ந:= நமது, திய:=நினைப்புகளை ப்ரசோதயாத்=ஞான ஒளி பெற வூக்குகின்றானோ அவன், வரேண்யம் ஸவிது:=பரமாத்ம ஸூரியன் (ஸூரியன் - ஒளி, உண்மை, அறிவிற்கு அறிகுறி.) தத் தேவஸ்ய+பர்க:=அத்தெய்வத்தின் பெருமையை தீமஹி=தியானிப்பாம்.

புவி, வெளி, விண் எங்கும் நிறைந்தது, ஓம் என்று வேதங்கள் அழைக்கும் ஸச்சிதானந்தப்பொருள். அதுவே தகராகாசத்திலிலங்கும் ஆத்ம ஸூர்யன் (ஸூர்ய ஸாவித்ரி); அதுவே நமது எண்ணங்களை மேன்மேலும் திய வாஸனைகளினின்று விலக்கி ஒளிபெறத் தூண்டுகிறது. அந்த ஆன்மதேவதையை நாம் அடைவதெப்படி? அதன் பெருமையை நமதுளத்தில் தைலதாரைபோன்று சிந்திப்பதனாலேயே. நினைப்பே மனிதன். நினைத்தவாறே மனிதன் ஆகிறான். நான் அவன்; என் உள்ளத்தில் ஒளிர்

பவன் எல்லாம் வல்ல சச்சிதானந்தனான அந்த ஆத்ம ஸூர்யன். நான் இப்புவியல்ல, உயிர்க்கோசமல்ல ; மனக்கோசமல்ல ; நானார்? மனங்கடந்த பொருளெதுவோ அந்த ஜோதி ப்ரஹ்மமே நான் என்று ஒளிபெற நினைத்து தியானித்து உள்ளடங்கி அதுவாவதே காயத்ரியின் உண்மைப் பொருளாகும்.

## ௪௨. ரமணப்ரகாசம்.

### இன்பவழி

மனிதப் பிறப்பு வந்ததேன்? மனிதனுக்குள்ளுள்ள தீரனை, தேவனை, ப்ரஹ்மத்தையறிந்து அவனுடைய ஸச்சிதானந்தமே தானாகவன்றோ! தான் என்பது ப்ரஹ்மமே. அதுவே நான் என்றறிந்து அதுவானாலொழிய வேறு எத்தகைய உபாயத்தாலும் இன்பம் எய்த முடியாது. அதையறிந்து அதுவானால், வேறிடம் சுற்றவேண்டியதில்லை. வேற்றுமை பாராட்டித் திரியவேண்டியதில்லை ; தன்னுள்ளே தானாகித் தத்துவமாய் நின்றிடுக ; பின் வேண்டாம் பல்சமயப் பேச்சு. இந்நிலை பெற்றே நம்நாட்டு மஹர்ஷிகள் யோகச் சுடராக நின்ற நிலையிலேயே மனிதஸமூகம் புனிதமுறும் சக்திக் கதிர் பரப்பி வந்தனர். ஒரு விளக்கு எப்படி இருந்தபடியே சுற்றும் சுடர்வீசிப் பலருக்குக் காட்சியும் இன்பமும் அளிக்கிறதோ அதுபோலவே, ஒரு பூரண யோகி தனது இதயத்தில் நிலைத்தபடியே, எவ்வித முயற்சியுமின்றி இயல்பாகத் தனது தவச்சுடரைச் சுற்றும் பரப்

பிக் கணக்கற்ற ஜீவராசிகளைப் புனிதப்படுத்துகிறான். அவரவர் அன்பிற்கும், அறிவிற்கும், பக்குவத்திற்கும் ஏற்றபடி ஒரு பூரண ஸித்தனின் காந்த வுறவால் உள்மலர்ந்து பேரின்பம் பிறக்கும். ஆதலின் ஒரு நாட்டிற்குச் சிறந்த செல்வம் ஒரு மஹர்ஷியே யென்பதில் ஐயமில்லை. பாரத ஸமுதாயத்தை ஆக்கி யணிவகுத்து வாழவைத்தவர் யார்? வேத முனிவர், வியாஸர் போன்ற தபஸ்விகளன்றோ? அவர்கள் வழியைப் பற்றியன்றோ நாடு உருவானது. ஆதலின் ஒருதேசம் வாழ்வதற்கு, தர்மம் வாழ்வதற்கு, அர்த்தசாஸ்திரம், ஸமூஹசாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கும் எத்தகைய ஸாதனத்தினும், ஒரு மஹர்ஷியின் சுடர் பெருகுந் தவக்காந்தமே முக்கிய ஸாதனமாகும்.

## யோகச்சுடர்

பாரத ஸமுதாயம் புதுப்புது மாறுதல்க ளடைவது கண்கூடு. எவ்வெப்போது அதன் உயிரான ஆத்மச்சுடர் குன்றுமோ அவ்வப்போது, ஜோதிக்குன்றென ஒரு அத்யாத்ம சுத்தமூர்த்தி உதிப்பது வழக்கம். புத்தர் வந்தார்; ஸமரஸத்தை ஒருவாறு நிறுவி, நிர்வாணத்தையே முடிவான இன்பமாகக் காட்டிச் சென்றார். சங்கரர் வந்தார்; ஜீவப்ரஹ்ம ஐக்யத்தை நிலைநிறுத்தி, மனிதனைத் தன்னுள் தானாக விளங்கும் கடவுளைக் காண அறிவுக்கண் திறந்தகன்றார்; இன்னும் பாரததேசம் தனது இயல்பான அத்யாத்மநிலை பெறவில்லை. பாரதசக்தி இன்னும் தனது முழு சுதந்தரத்துடனும் விளங்கவில்லை. உலகம் இன்னும் வயிற்றுவழிபாட்டிலேயே மனஞ்செலுத்திப் பொன், பொருள், போகம், தேவைகளைப் பெருக்குதல் இவற்றிலேயே மோகங்கொண்டு வணிகாத்மாவாக இருக்கிறது.

இப்போது உலகிற் செய்யப்படும் பெரும்பாலான காரியங்கள் தூலவாழ்விற்கும், வீரியத்தினவுகளைத் தீர்த்தற்குமே பயனுகி வருகின்றன. சிற்சில அறிஞர்களே அரிதாகச்சிந்தனை வாழ்வைக் கைக்கொண்டிலங்குகின்றனர்; போர், பொறாமை, பேராசை, பஞ்சமாபாதகங்கள் உலகை இருட்காடாக்கிக்கொண்டிருக்கின்றன. இத்தகைய இருள் நிலை திருந்த வழி யென்ன? சீர்திருத்தமா? மதப்ரஸங்கமா? இல்லை, இல்லை. அந்த இருளை அடித்தாலும், அரற்றினாலும், அல்லது நயஞ்சொன்னாலும், மந்திரம் போட்டாலும் அகலுமா? மாட்டாது. ஒரு விளக்கேற்றிவைத்தால்தான் இருள் அகலும்.

உலகின் விளக்கு எது! பூர்ண புருஷர்களின் யோக சக்தியே! புத்தர், ஏசுநாதர், நபிநாயகம், சங்கரர்—இவர்களே உலகின் விளக்குகள். ஆனால் அவர்கள் ஏற்றிய விளக்குகள், மனிதனிடம் அத்யாத்ம வாழ்வின் ஊட்டமின்றி மங்கிவிட்டன. மற்றொரு விளக்குவேண்டும். உலகின் இருள் முழுதையும் விழுங்கிச் சுடரோங்கத்தக்க யோகவிளக்கு இப்போது விளங்குகிறது. ஆனால் ஒவ்வொருவரும் அதை யடைந்து தங்கள் இதயவிளக்கை யேற்றிக்கொள்ளவேண்டும். அவ்விளக்கு இன்பத்திற்கு எளிதான வழி காட்டும். கண்ணைத் திறந்து கவனத்தை உள்ளே வைத்துச் சென்றால் இன்ப வீடெய்தலாம்—உறுதி. பல்லாண்டுகளுக் கொருமுறையே இத்தகைய அபூர்வமான திபஜோதி விளங்குகிறது. உலகில் எதுவும் அரிதல்ல; ஆகாயக்கப்பலும், மின்சாரவேலைகளும் அரிதல்ல; வசிஷ்டரும், வ்யாஸரும், சுகரும், வால்மீகியும், கண்ணனும், புத்தரும், ஏசுவும், சங்கரருமே அரிதினும்

அரிது. முத்திக்கனி பழுத்த முனிக்கனியே எதனினும் அரிது. அத்தகைய முனிவர் இலங்கிய காலத்தில்தான் பாரதநாட்டில் ராமராஜ்யம் இலங்கியது!. ஒரு நாட்டின் சிறப்பும், பெருமையும், சக்தியும், ஒளியும் அதன்கண் விளங்கும் தவமுனிவரரே! அத்தகைய ஒரு முனிவிளக் கெரிந்தாலும் நாட்டின் ஜோதி குன்றாது. பாரதத்தில் பல புதல்வரை ஈன்றாலும் என்றும் இளமை வரம்பெற்ற யயாதியின் மகனைப்போன்று இந்தியா இன்னும் தனது எழில் குன்றாதிருப்பது, தான் ஈன்ற அருந்தவச் செல்வர்களாலன்றோ!

## ஜீவன்முக்தர்

மஹா முனிவரிற் சிறந்த ஜீவன்முக்தன் யார்? தானே தானாகி அன்னிய மெண்ணாது, தன்னிலே யொளிர்ந்து தனது யோகசக்தியைப் பரப்புவோனே. எவன் தன்னை யடைந்தவரின் ஆத்மப்ரகாசத்தைத் தனது கண்பட்ட மாத்திரத்தில் கருணையுடன் தூண்ட வல்லவனோ, அவனே மஹாயோகி. உபதேசம், ஸங்கல்பித்த பணி இவற்றினும் தனது அகண்ட தவமகிமையால், தன் ஸந்நிதி மாத்திரத்தில் சாந்தமளித்து, ஆத்மஞானத்தைத் தூண்டுவோனே மக்களிடையே அமுதக்கடல் போன்றவன். ஜோதிமலை போன்றவன். அவன் எதுவும் பேசானேனும், அவன் எண்ணம் நிறைவேறும்; அவன் உண்மை எங்கும் பரவும்; அவன் எதுவும் எண்ணாவிடினும் தக்கனவெல்லாம் தன்னால் நடக்கும்.

## ஜோதிமலை

அத்தகைய அரும்பெரும் யோகவிளக்கு இன்று நமது தமிழகஞ் செய்த தவப்பயனால் ஜோதிமலையாக

ஒளி வளர்கிறது! கண் விழித்து அன்புடன் காண்மின்! நீங்கள் உய்ய வழிபிறக்கும்! இன்பவூற்று உங்க ளுள்ளத் திற் பொங்கியெழும். இதுகாறும் உலகிற் போந்தமஹான் கள் ஏதோ சில உண்மைகளைப் போதித்துத் தமது பெய ரால் ஒரு ஸங்கம், மதமென்று கட்டுப்படுத்திச் சென்ற னர். ஆனால் இந்த ஆடாத யோக மணிவிளக்கு அனைவர்க் கும் பொதுவெளியில் நிலவி, அவரவர் தம்மைத்தாமே கண்டு ஆத்மாநுபூதி யடையும் உன்னத சக்தியையே பரப்பியொளிரும் அற்புதச் சின்மயானந்தக் காந்தம் நம் மிடை யுள்ளது! நாம் செய்யவேண்டிய தென்ன?

## ரமணதீபம்

சக்திகங்கை வெள்ளமாக ஓடுகிறது! அதில் சிலர் மூழ்கி யின்ப மடைகின்றனர்; சிலர்கங்காஷ்டகம் பாடு கின்றனர்; சிலர் படமெழுதுகின்றனர்; சிலர் கங்காமான் மியம் யாக்கின்றனர். போதுமா? இல்லை; அந்த கங்கை யைப் பல கால்வாய்களாக வகுத்து, இருளிலும் அகந்தை யிலும் வாடி வதங்கும் மனிதப் பயிர்கள் ஞானஞ் செழிக்க, ஆத்மாநுபூதி பழுக்கப் பாய்ச்சவேண்டும். இந் தக் கால்வாய்கள் யார்? அவர்களே அந்த யோகச் சுடர் மலையினின்று தமது உள்விளக்கை யேற்றிய மணிவிளக் குகள். அகண்ட மின்சாரமான ரமணசக்தி நிலயத்தி னின்று பல்லாயிரம் மின்விளக்குகள் ஏற்றப்பட்டு, ஞான ஸம்பந்தக் கம்பிகளால் இணைப்புண்டு ஆங்காங்கு உல கெங்கும் இருளொழிய விளங்கவேண்டும். இதுவே ரமண ஸங்கத்தின் வேலை. இவ்வேலை வெற்றிபெற நூற் றுக்கணக்கான உண்மைத் துறவிகளும், ஹம்ஸினிக

ளும் வேண்டும். இவர்களே ரமணாஸங்கமாக ஒன்றுபட வேண்டும்.

## எழுமின் ! உழைமின் ! தழைமின் !

உள்ளன்புடன் உழைத்து இந்தயோகசக்திகங்கையை அத்யாத்மப்பயிர் செழிக்க உலகெங்கும் பாய்ச்சவேண்டும். இதுவே அந்த கங்கையை மதித்துப் போற்றிப் பயனுக்கும் வழி. கங்கைக்கு எவ்விதக் கவலையும் திவலையுமில்லை. அன்பர்களே, இவ்வேலையைச் செய்யவேண்டும். தமிழர், தெலுங்கர், கேரளர், கன்னடர், துளுவர், மராத்தியர், குஜராத்தியர், ஹிந்தியர், வங்கர் ஆகிய எம்மொழியினரும் இவ்வருட்பணியிற் பங்குகொண்டு வெற்றியுடன் காரியத்தை நடத்தவேண்டும்.

ஒரு சூரியோதயத்தால் அனந்தமான காரியங்கள் நடைபெறுகின்றன ; அதுபோலவே ஒரு ஞானசூரியனின் உதயத்தாலும் எவ்வளவோ புனிதமான காரியங்கள் நடக்கலாம். ஊக்கமும் உள்ளன்புங் கொண்டெழுந்து வேதாந்த சிங்கமாக " சுத்தோஹம் " கர்ஜனையுடன் யோகமும், தவமும், தூயவாழ்வும், அருட்பணியும், அவரவர்க்கியன்ற சிறுசிறு தொண்டும் எல்லாம் பரமாத்ம வேள்வியாகத் தொடர்க !

தேவை—நானென்னும் ஆணவத்தை அதுவெனும் பரம்பொருளுக்கு ஊணாக்குவோர் ! தேவை, உலகமாயையை வென்ற ஆத்மவீரர் ! தேவை, தஸ்யைவாஹம் (நான் அவனுடைமை) என்ற காலாட்படை ! த்வைவாஹம் (நான் உன்னுடைமை) என்ற குதிரைப்படை ! த்வமேவாஹம் (நான் நீ) என்ற தேர்ப்படை. தேவை, சுத்தசுதந்

திர விண்படை. நித்யாத்ம வாழ்வை வயதாகக்கொண்ட அத்யாத்மக் காளைகள் தேவை. சர்வகலாசாலைப் பட்டங்கள் வேண்டாம். உண்மை, ஆர்வம், அன்பு, தூய்மை, பணிவு, அமைதி, அடைக்கலம், பொறுமையுடன் தம்மை முற்றும் ப்ரஹ்மாக்கினியில் ஞானஹுதி செய்த தீரர் தேவை. ஸதா ஸஹஜத்யானத்தில் "நான் நான்" என்ற உணர்வான மனுப்போடுக. கம்பீரமான உறுதியுடன் முன்வருக! இதயமா நகரத்தையாளும் ப்ரஹ்மானந்த மன்னன் சமுகம் எய்துக! தங்களையிங்கோர்க்குத் தன்னையே தருவான். தன்னையே தந்தவன் எல்லாந் தானேயாவான்!

## மங்களம்

("மற்றுப்பற்றெனக்கின்றி" என்ற பண்)

பேர்வ டிவற் றனைத்து மாகி
யபேத மாயவி காரமாய்ப்
பாரின் பன்மையைப் பற்றி லாதென்றும்
பார்த்தி டும்பரஞ் சோதியாய்,
யாரெ னக்கண் டடங்கு முள்ளத்
"தத்நீ" யென்றெழுந் தாடிடும்
பூர ஞானந்த வாரி யேஜய
போற்றி மெய்யறி வின்பமே!

உன்னி லேபிறந் துன்னி லேவளர்ந்
துன்னு ளென்னைக் கரைத்தனன்!
அன்னை யப்பனு மன்பு மாதர
மாகு நல்லரு ளாழியே!

பொன்னே ளிருளப் புன்ன கைச்சுடர்
பொங்கி யென்னைப் புசித்தெலாந்
தன்ம யத்தொளிர் தங்க மாக்கிய
ஸன்ம யாஜய போற்றியே !

எப்போது மெண்ணி யிருக்கிறேன் அப்பனுளே
சொப்பனம்போற் சுற்றுலகைக் கண்டு

உன்றனி யிச்சை யுருக்கொண்ண டொளிர்கவெனுள்
இன்றிங் குடலங்கே யுள்

தடுத்தாண்டு கொள்ளுந் தருணமிதென் றுவி
கொடுத்துள்ளே கூவுதுனைக் கோ !

அருட்பா லளித்தென் னடங்காப் பசிதீர்
பொருட்பால் வழிகின்ற பொற்பே—கருத்தறிந்து
காணும் படிவந்து காந்தம்போற் கொண்டேக
வேணும்யான் வேட்டலுனக் கே.

*ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் இயற்றிய*

ஸ்ரீ ரமண விஜயம்—*முற்றிற்று.*

# SRI RAMANA VIJAYAM

# ஸ்ரீ ரமண விஜயம்

(SWAMI SHUDDHANANDA BHARATI)

## SELECT OPINIONS.

## அறிஞர் அணிந்துரை.

K. SUNDARAM CHETTY :—*(Judge, Madras High Court, in his letter dated 29-9-32).*

"In an excellent Tamil treatise styled 'Sri Ramana Vijayam', a recent publication, a really vivid and graphic account is given of the life of Bhagavan Sri Ramana Paramahamsa, shining with spiritual lustre in the vicinity of the sacred hill in Tiruvannamalai. The teachings of the Maharshi are depicted in a manner and style, which would appeal to every heart and tend to dispel the ignorance, stimulate the latent aspiration for spiritual growth and ennoble the mind. Apt quotations from several sacred books are found in this book in plenary abundance, and serve to enhance its utility. The learned author Sri Swami Suddhananda Bharathi has done valuable service to humanity by the publication of this book."

---

"Strong as the thunderbolt, austere as Brahmacharya, great-hearted and selfless, such should be that Sannyasin who has taken the service of others as his Sannyas, and not less than this should be the son of a militant Hinduism."

This is the ideal Sannyasin - Swami Sri Shuddhananda Bharati—the illustrious biographer of Bhagavan Sri Ramana Maharshi at Tiruvannamalai. The Maharshi, of course, needs no

introduction to the public. To quote the beautiful words of my dear friend—the famous Mr. S. V. V—in his recent article in the 'Hindu Illustrated Weekly', "Serene, majestic, and radiating an effulgent spirituality, sits the Maharshi in the beautiful hall fragrant with flowers and incense, inspiring those that visit him with the true meaning of life." And naturally enough, great souls from all the world over go to Him to have their fill, as the hungry bees to the full-blown flower. Many and in many languages are the books on Him and His teachings. Of them, the outstanding are Sri Narasimha Swami's 'Self-realisation' (English), and Sri Bharati Swami's 'Sri Ramana Vijayam' (Tamil), their lofty idealism, rare vision, volume of detail, wealth of scholarship, and above all, their remarkable power of expression raising them to the rank of choice religious classics.

That Sri Bharati Swami-the subject of this sketch-is a born Poet and Seer, the exquisite lines in 'அறவழி', and 'அறநூல்' composed by him in his boyhood bear out. It appears that the call for the higher life came to him very early in life. and that since then, he has been living more in the world within than without. The brilliant letter 'வீரத்துறவு' which he wrote to his parents, when they sought to yoke him to a wedded life, shows his burning renunciation. His life has been very complex and many sided, but all free from the touch of egoism and selfish attachment to the world. He travelled in many places, met many Seers, practised many yogic systems and religious creeds, and lived in hills and river sides doing Tapas, till 'Bhagavan Sri Ramana was found.'

The Swami's remarkable labours in the fields of Journalism, Literature, Philosophy, Religion, Rural reconstruction, Labour movement, Nationalism and a good many others show his versatile genius, broad sympathies, deep devotion, dynamic spirit, and untiring energy. Among the numerous papers and journals he edited or helped by contributing are "Bala Bharati"

'Samarasa Bodhini', 'Swarajya', (Tamil), 'Brahmacharya', Gnana Dharma, (இயற்கை) 'Janamitran', 'Industry' (தொழிற்கல்வி) 'Navasakti', 'Lokopakari', 'Sri Ramakrishna Vijayam', 'Sri Gana Vidya Prakasini', 'The Guardian', 'The Young Men of India', 'The Indian Naturopath', 'Nature Healer', etc. The Swami's works, comprehensive in range, unique in matter and manner refreshingly original, and inspiring as they are, have enriched Tamil literature in almost all its branches in no mean measure. Besides 'ஸ்ரீ ரமண விஜயம், அறவழி', and 'அறநூல்,' already referrred to, the following works also are by him:— 'கீதை காட்டும் பாதை', 'அன்னை', 'ஸ்ரீ அரவிந்தப்பிரகாசம்', 'ஸ்ரீ அரவிந்தயோகவிளக்கம்', 'சுப்பிரமணிய பாரதியார்' (a literary masterpiece), 'புதுயுகப்பாட்டு', 'வீர சிவாஜி விஜயம்', 'ஜிஞணந்தம்', 'ஞானத்திருமலை', 'விரத வைராக்யம்', 'சாகுந்தலம்', 'அப்பர்', 'ஸ்ரீபரமஹம்ஸ லீலை', 'புத்த ஞாயிறு', etc., etc. 'பாரதசக்தி', (an epic) and 'அருட்பெருஞ் சோதி விளக்கம்' are in the press. Exigencies of space forbid individual treatment of them showing their great charm and power, which they so richly merit. His ideal is 'to build a Tamil art assimilating into its crowning originality what is best in the Sanskrit, Bengali, Hindi, Marathi, Greek, Roman, German, French, English, and other cultures, and uphold before the world the genius of the Tamil Nad and the greatness of her past and present'. His splendid achievement in this direction none who has read his works can gainsay.

In an early contribution to 'The Orient', he has said "Our very body must radiate with Divine beauty, our very nerves overflow with an energy Divine, our senses must embrace the Divine Ananda, our heart must be a perennial stream of self-bliss. When thus our body, life, mind, and heart transform themselves into That, then are we truly Divine and dynamic centres of activity." To this end, evidently, the Swami is for some time past fixed in yoga at Sri Aurobindo Asram at Pondi-

cherry. May his communion bear rich fruit for humanity, and help it to live the life Divine!

Tinnevelly Junction.
30th August, 1933.

V. VENKATARAMAN,
*Vakil.*

---

RAO BAHADUR P. SAMBANDA MUDALIAR, *Ex-judge writes* :—

Your Ramana Vijayam is a unique work and one of the very best that I had the pleasure of studying for the past so many years, both as regards the matter and the style.

---

THE "SCHOLAR" *(Palghat) August, 1932.*

The Paramahamsa of Dakshineswar and the Maharshi of Tiruvannamalai are indeed the supreme manifestations of one and the same self. It is a rare blessing to have in our midst at the present age such a Maharshi who is a beacon light unto one and all, who is a centre of a spiritual world impulse and who can make man rise above the storm and stress of this life.

The renowned author of this book, Swami Suddhananda Bharati, has done his work wonderfully well. His wide culture and deep understanding have enabled him to realise the beautiful truths and the lessons of the Saint's life and teachings. His command of language and power of expression are unique. When he deals with the glorious presence and the silent but sure effect of the Maharshi, he rises intuitively to sublimity, and also elevates his readers to his level. The Maharshi's perfect self-control, perpetual calmness and divine grace to all alike, are exemplary. His cardinal teaching is "Know thyself"; and in fact, he helps us to know ourselves as to what we are in reality, and not as we falsely imagine, think, or appear to be. The numerous devotees at his serene and

sacred Asramam at the classical Arunachala (known as Tiruvannamalai) bear eloquent testimony to this fact. The book closes with a soul-stirring call to all who thirst for peace and joy, to have their fill of nectar at the Master's blessed feet.

This is an inspired work. Its brilliant descriptions, learned discourses, and philosophical disquisitions are an excellent treat to the soul of man. It is an invaluable treasure.

The book is finely illustrated and well got up. It has quite a wealth of apt and beautiful quotations from authors, ancient and modern, Eastern and Western. And yet it costs so little to be within easy reach of all.

---

"SWARAJYA", *Sep. 17, 1932*:—

The book under review deals with the life of Sri Ramana Maharshi, the saint of the Tiruvannamalai Hill. He, even in his very early days, realised that the Truth was "Brahman."

The magnetic personality of the Maharshi drew around him a large circle of Sishyas, one of them being the illustrious author of the book. Swami Suddhananda Bharathi has already endeared himself to the religiously inclined public by his 'Aranool' which can stand comparison with the "Thirukkural." The present book is written in flowing language which is at once magnificent and lucid. It deserves to be read in every Tamil home.

---

THE "HINDU", *July 11, 1932*:—

This is one of the scriptures of the new cult that is rapidly making headway in South India; the central figure of it is a hermit who has been for many years before the public and of whom many accounts have been given. The book is written by one who has the gift of telling a story straight and to the point. The division of the chapters into Kandas is suggestive of the Biography of Sri Rama; and the appellation of Ramana Brah-

mam is an index of the current of thought that runs through the heart of the author and his work.

I found Ramana Vijayam very interesting and I am confident that it is sure to attract the attention of a large portion of the spiritually inclined public in the Tamil country. It is written in a very elegant and Novel style, and the treatment of the subject of 'Bhagavan's Life' together with His Teachings is masterly. As such, we the devotees are to be highly grateful for the pains and trouble you had taken to write the same, and the book is bound to be a high class work in Tamil spiritual literature.

S. SESHU AIYAR,
*Vakil, Cocanada.*

I am sure many people would never have had more than the faintest notion of the exquisite beauty of the Bhagavan's life, had they not been presented that, in such a delightful form by your goodself. I have a very great admiration for the Maharshi and your book has done much to turn that admiration to respectful adoration. By drawing out the life of Bhagavan at all points and by depicting his sublime philosophy of life, you have really placed the bakthas of Bhagavan under no small obligation. Endowed in the highest degree with rich, resonant and vibrating language and luxuriant, grand and noble insight, you strike your instrument so as to evoke in human hearts newer and newer thoughts, high ennobling and divine such as shall strengthen and sustain human life and enable us to "live long life in little space" and "keep our souls in one eternal pant."

RAMACHANDRAN, B.A. (HONS.)

Your brilliant description of the Bhagavan's Life and Teaching is sure to send a thrill of joy unto all its readers and they will undoubtedly be inspired and elevated in spirit when they continue to read it day after day. Your thoughts are so

inclined spiritually that there is not a page, nay, not a para in it that may fail to inspire the reader with the aspiration for self-realisation. No day passes without my thinking or talking with delight about your grand thoughts in a gifted style which is at once simple, forceful, dignified and poetic.

RAMANADASA SESHAGIRI, B. A.

---

" SUNDAY TIMES, " *Jan. 8, 1932* :—

Swami Shuddhananda Bharathi needs no introduction to the public. His writings, always powerful and poetic, have served to introduce a new spirit in the Tamil world. *Sri Ramana Vijayam,* his recent book, is a welcome addition to the extant literature on Sri Maharshi.

Speaking about the realisation of Sri Maharshi the author says :

" Just as a king who wants to go to a certain place one evening, suddenly finds himself transported to that place through some extraordinary agency, the young Maharshi aspiring to know his Father realised Him within his own self, with a quickness and suddenness that is scarcely possible for an ordinary man. "

We have heard that sage Valmiki continued his penance unconscious of the ant-hill that enclosed him. To-day we hear how Sri Maharshi's body was a regular prey to scorpions, ants and other poisonous insects when he was seated behind the Patala Lingam, a veritable dark hole in the thousand pillared mantapa.

The author devotes a good portion of the book in depicting the Maharshi's uniform love for all. Even wild animals lose their ferocity when near him.

When such a lotus was in full bloom many bees naturally came in to suck the honey of grace from this perennial source.

Vasishta Ganapathi Muni, Sivaprakasam Pillai and a host of others—the book gives illuminating accounts of all those.

In the chapter on *Ramana Vidya*, the author explains the methods of realisation recommended by the Maharshi.

This book is the first and most successful attempt made to interpret the Master's teachings in a language that is at once simple and sublime and which could satisfy the lay and the learned. Another important feature of the book is the clear exposition of the nature of Sri Maharshi's realisation. Without connecting the Master with one or the other of the extant philosophical schools and thus rendering him the centre of a controversy, the author points out the peculiar nature of Sri Maharshi's realisation in the first chapter in the *Yoga Samrajya Kanda*. The summary of *Vicharasangraham*, *Ramana Gita* and other observations of the Maharshi on various subjects are highly useful and illuminating.

The author says in conclusion : "It is the Yogic power of great *Jivanmukthas* that have served as brilliant lamp-posts guiding the distracted and forlorn mariners in the ocean of life. Buddha, Christ, Sankara and the other great spiritual figures that followed and preceded them, were the lamp-posts of mankind, but the lamps lit by their spiritual lives have become dim and have indeed served their purpose. But now there is a lamp at Arunachala, capable of consuming the darkness of the world. Any one who cares can go there to get the lamp of his heart lit, in order to help to annihilate the darkness of the world."

He is a Sankara in giving by precept and practice the gift of self-knowledge to the world of earnest souls aspiring for liberation, a Sambandha in the spirit of devotion to the Father of the Universe, a life celebate unseized by the lure of sex and worldly possessions, a soul liberated from Maya." M. C. S.

“ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்”—ஆங்கிரச ௵ பங்குனி மீ

ஸ்ரீரமண விஜயம் :—ஜோதிலிங்கம் வாழும் திவ்விய தலமாகிய திருவண்ணாமலையில் மெய்ஞ்ஞான சோதிமலையாய் மிளிரும் ஸ்ரீரமண மஹர்ஷிகளின் அற்புத சரிதையைப் பொற்புறக் கூறும் அரும் பெரும் நூல் இது. அவ் அடிகளின் அருளுக்கிலக்காகி மீளா ஆளாய்ப் புதுவையில் யோகம் பயின்று வரும் ஸ்ரீ சுத்தாநந்த பாரதியாரால் எழுதப்பட்டது. பாலகாண்டம், பக்குவகாண்டம், யோக ஸ்வராஜ்யகாண்டம், யோக சாம்ராஜ்ய காண்டம், ரமணாச்ரம காண்டம் என்னும் ஐம்பெரும் பகுதிகள் அடங்கியது. நானூறு பக்கங்கள் கொண்டது. நூலாசிரியர் தாம் மஹரிஷிகளை நாடியவாறு தொடங்கி, மஹரிஷிகளின் பிறப்பு, இளமை, கல்வி, துறவு, யோக வாழ்க்கை, ஞானசித்தி முதலியவற்றையும், அடிகள் அடியார்கட்கு அருள் வழங்கி ஞான ஒளியினை யளித்தவாற்றையும், அடியார்களது வரலாற்றையும், அவர்கள் பெற்ற மதிப்பரிய ஞான உபதேசங்களின் சாரங்களையும், ரமண ஆசிரமம் உண்டான வாற்றையும், அவ் வாசிரமத்தின்கண் மகரிஷிகளும் அடியார்களும் இன்றும் வாழ்ந்து வரும் வாழ்க்கை முறையினையும், வளம்பட, தெளிவுற, கற்போர் மனதிற்பதிய, அவர்தம் உள்ளத்தூறி உலவா இன்பச் சுடர்பெருக, ‘பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட,’ ஆசிரியர் எழுதியுள்ள திறமை பெரிதும் போற்றத் தக்கதாகும். ‘தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்’ என்னும் பொய்யாமொழிக்கு ஒரு சான்றாக, நூலாசிரியரின் உள்ளத்துப் படர்ந்த மன்னுயிர்ப்பணி யென்னும் கொடியினில் அலர்ந்த நறுமண மலர்கள் பலவற்றுள் ஒன்றாக, இந்நூல் தோன்றியது.

‘ஆசைபற்றி யறையலுற்ற’ இம்மாக்கதை சொல்லழகும் பொருளழகும், தொடையழகும், நடையழகும் அமைந்திருப்பதன்றி, அதில் ஈடுபட்டார்க்கு மெய்ப்பொருள் விழைவையும், அமைதியையும், பத்தியையும், பேராத இன்பத்தையும் ஊட்ட

வல்ல ஞானப் பெருவிருந்துமாகின்றது. இனிய செந்தமிழில், தெள்ளிய நடையில், கற்பனை யழகும், விற்பனர் திறமையும், காவிய நயமும், ஓவிய எழிலும் கலந்தினிதமைய, உண்மையியல் வழாது, 'காய்தல், உவத்தல் அகற்றி' பல உலக குரவர்களது சரித்திரங்களோடு ஆங்காங்கு ஒப்பிடுதல் வாயிலாகவும், பற்பல ஞான நூல்களினின்றும் பொறுக்கியெடுத்த வாய்ப்புடைய மேற்கோள்களின் வாயிலாகவும், ஸ்ரீ ரமண அடிகளின் அளப்பரும் பெருமையை எடுத்தோதும் இந்நூலாசிரியர் தமிழுலகிற்கு ஒரு பெரும்பணி இயற்றியவராவார். இந்நூலை வாசிப்பார் யாவரேயாயினும், மஹரிஷிகளின் தெய்வீக மாண்பினில் ஈடுபடாதொழியார். இதில் எப்பக்கத்தைத் திருப்பினும், துறவின் மேன்மையோ, ஞானோபதேசமோ, ஞான நூல்களினின்று எடுத்தாளும் மேற்கோள்களோ, அன்பு நலனோ, சமரசச் செல்வமோ, பக்தியின் சுவையோ, முக்தியின் தாகமோ முன்னின்றொளிரும். விழுமிய கருத்துக்கள் அடங்கிய இடங்களில் அகவற் பாக்கள் வசன உடையொடு தவழ்ந்து செல்கின்றன. இடையிடையே வேண்டுமிடத்தெல்லாம் ஏற்ற சித்திரப்படங்கள் (முப்பத்துமூன்றுவரை) அழகுடன் பொலிகின்றன.

இந்நூலை வாசிக்குந்தோறும் உள்ளம் ஞான உலகிற்குப் பறந்து செல்லுகின்றது. ஆங்கே நீல வானத்து ஞான நிறைமதியும் அதைச் சூழும் பல உடுக்கணங்களும் ஒளியைச் சொரிகின்றன. பேரின்ப வாவியில் அலர்ந்த ஒரு செழுந்தாமரை மலரினின்றும் அன்பு மணம் கமழ்கின்றது. ஞானத்தேன் பொழிகின்றது. அடியார்களாகிற வண்டுகள் அத்தேனைப் பருகிக் களிக்கின்றன. ஞானக்குயில் கூவும் 'வீங்கிள வேனிலா'யிருக்கின்றது. சாந்தியெனும் தென்றல் வீசுகின்றது; சுத்த சுதந்திர நாதமெனும் 'மாசில் வீணையின்' இன்னிசை மனத்தைப் பரவசமாக்குகின்றது. நம் தமிழ்நாட்டு ஆடவர் மகளிர் இந்நூலைப் படித்து, இத்தகைய காட்சியை அகவுலகிற் கண்டு விழைந்து பருகி, வாழ்க்கையின் மெய்ப்பயனை அடைவாராக!

"நவசக்தி"—ஜூன், 1933.

இப்பெயர்வாய்ந்த நூல் வரப்பெற்ருேம். இந்நூல் ஸ்ரீ ரமண ரிஷியின் வரலாற்றைக் கூறுவது. கதாநாயகர் இந்நாளில் திருவண்ணுமலையில் எழுந்தருளி யிருப்பவராதலான், அவரைப் பற்றி விரித்துக் கூறவேண்டுவதில்லை. அருணுசலம் நோக்கு வோர் பலர் இப்பெரியாரைக் காணுது செல்வது அரிது என் பதை நாம் நன்கு அறிவோம். இவர் தம் வரலாற்றை நண்பர் சுத்தானந்த பாரதியார் எழுத நேர்ந்தமை குறித்து மகிழ் வெய்துகிருேம். ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் தமிழ்த் தாயின் இனிய சேய்களுள் ஒருவர். உள்ளத்தெழுங் கிளர்ச்சியை உள்ள வாறே வெளியிட்டு எழுதும் ஆற்றல் ஸ்ரீ சுத்தானந்த பாரதியா ருக்குண்டு என்பது அவர்தம் நூல்களால் நனிவிளங்கும். ஸ்ரீ ரமண விஜயத்தில் உண்மை ரமணர் விளங்குமாறு அறிஞர் பாரதியார் வரைந்துள்ளார். ஆங்காங்கே எடுத்துக் காட்டப் பெற்றுள்ள ஆன்ருேர் மொழிகள் நெஞ்சைக் கவர்கின்றன. நூல் நன்னடையில் எழுதப்பட்டிருக்கிறது.

"பால விநோதினி"—செப்டம்பர், 1933.

பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளான ஞானபானுவின் பிர காசம் இப்பரதநாட்டில் மட்டுமேயன்றிப் பிறதேசங்களிலும் பரவியுள்ளது. இவ்வருட்சோதியின் அரிய சரிதையையும், உய ரிய உபதேசங்களையும் பல பெரியோர்கள் பன் மொழிகளிற் பகர்ந்திருக்கின்றனர். அவையனைத்திற்கும் மகுடமென மிளிர் கின்றது ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் இயற்றிய விந்நூல். இவ்வாசிரியரின் ஆழ்ந்தவறிவும், அளவற்ற அடக்கமும், பரத் திற் பற்றும், தெய்வப்புலமையும், சொல்வன்மையும் வியக்கத்தக் கன. ஸ்ரீ பாரதியார் "இந்நாட்டின் தெய்வ சக்தியாற் பிறந்த மஹான்களில் ஒருவர்" என்று ஸ்ரீமான் லக்ஷ்மண சர்மா அவர்கள் கூறியுள்ளது முற்றும் மெய்யெனப்படும் இப்புத்தகத் தைப் படிப்போருக்கு. இந்நூலை நவரஸம் ஊற்றெடுத்து நிற் கும் தாமரைத் தடமெனலாம். ஆண்டவனின் ஆர்வங்கொண்டு

எழுதப்பட்டதாதலின், இது அளவில் இன்பம் பயப்பதன்றி, உள்ள எழுச்சியையும், உண்மை உணர்வையும் அளிக்கவல்லதா யிருக்கிறது.

ஸ்ரீ ரமணப் பெருமானின் அதி பாலியப் பக்குவத்தையும், 'அருணாசல யாத்திரையையும், வீரத்துறவையும்', பெற்ற திருவண்ணா ஊனுருக இல்லத்திற்கு அழைத்தும் சற்றுஞ் சலியா திருந்த உள்ள வுறுதியையும், கடுந்தவம் புரியுங்கால் அறியாது சிலர் இழைத்த இன்னல்களை யெல்லாம் பொருட்டாக்காம லிருந்த பரம சாந்தத்தையும்பற்றி ஸ்ரீ பாரதியார் வரைந்திருப்ப தைப் படிக்கப் பரவசமெய்தும். "பகவானைக் கண்டதும் பெறவேண்டிய தனத்தையும் பெற்றதுபோல 'சாந்தம் ஸமுத்தம் அம்ருதம் பொங்கியது! உள்ளே வாயடைத்தது! பகவானைப் பார்த்துக்கொண்டு, அவருடைய தெய்வஜோதிக் கதிரிற் குளித்து நீந்தி, அந்த அற்புத ஸந்நிதிப் பெருமையை அடிமை வியந்தது" என்று ஸ்ரீ பாரதியார் தம் அநுபவத்தை யுரைத்தாரேனும், இவ்வமுதவாரியில் ஆழ்ந்தின்புற்றவன்பர் பலரென இப்புத்தகத்தினின்று பெறலாகும். மானிடவர்க்கமே யன்றி பசு, நாய், குரங்கு முதலிய ஜீவர்கள்கூட இப்பரமனின் திருமுன்னில் அளப்பரிய அமைதியையும் ஆனந்தத்தையு மடைந்திருப்பதை யறிகிறோம். அவனதருள் ஜாதி, மதம், இனம், வகுப்பு, நிலைமை இன்னனவெல்லாம் கடந்த தெய்வத் தன்மையது. "கதிர்வளர்முகமும், கருணையகமும், அறிவுப் பெருக்கமும், அன்புப்பெருக்கும், சாந்தப்பெருக்கும், ஸந்நிதி வளமும், ஐயமகற்றும் மெய்யருள் ஞானமும், வினவிநோர்க் கேற்றவிடை தருந்திறனும், கண்டவுடனே கருத்தை இழுத்து மலரடிக் காட்செயும் மாதவ ஜோதியும் பொலியும் மஹர்ஷிகள்...' என்கிறார் பாரதியார்.

இப்புத்தகம் பன்னூற்களிலிருந்து பொருத்தமான மேற் கோள்களும், பண்ணமைந்த பாடல்களும், அழகிய படங்களுங் கொண்டு நல்ல கட்டமைந்துள்ளது.]

## " சுதேசமித்திரன் "—14-6-1932.

[இந்நூல் ஸ்வாமி சுத்தானந்த பாரதியால் இயற்றப்பட்டது.]

தமிழ் நாட்டின் தவப்பேருய் விளங்கும் ஸ்ரீ ரமணரிஷியை அறியாதார் ஒருசிலரே. மகத்துவம் பொருந்திய இம்மகானின் திவ்ய சரித்திரமும், அரிய உபதேசங்களும் இந்நூலில் ஒளிர்கின்றன. ஆசிரியர் இதை ஐந்து காண்டங்களாகப் பகுத்து மிக்க அதிரசமாய் வகுத்துள்ளார். மகரிஷிகள் 16 வயதிலேயே "உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலுங், கரை மாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே" என்பதாய், நான் என்ற தற்போதத்தை அக்ஷணமே கழற்றி உள்நாட்டத்திற் புகுந்தனர். இதனை சவிஸ்தாரமாய் முற்பகுதியில் காணலாம். பாரதநாடு புண்ணிய பூமி, எனவே, காலந்தோறும் மகரிஷிகள் தோன்றுகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ விவேகாநந்தர் சற்று முன்னே தோன்றி அரிய உபதேசங்களைச் செய்தனர். இப்பொழுது தமிழ் மக்களினிடையே, தவராஜ சிம்மமாய், சாந்தமூர்த்தியாய் ஸ்ரீ ரமணரிஷி அவதரித்துள்ளார். இவரது சரித்திரமும் உபதேசங்களும் படிக்கப்படிக்க தெவிட்டாத தெள்ளமுதா யிருக்கின்றது. இம்மகானுடைய தரிசனத்தாலும் அரிய உபதேசத்தாலும் உய்யப்பெற்ருேர் உதாரணங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் முப்பத்து மூன்று ஆப்டோன் படங்களும் சேர்ந்து கண்கொள்ளாக் காட்சியாய் பரிமளிக்கின்றன. ஆத்மவிசாரணையினிமித்தம் பல நூல்கள் ஆராய்ச்சி செய்வோருக்கு ஸ்ரீ ரமணவிஜயம் அருமருந்தாகும். பல சாஸ்திர மேற்கோள்களும் காணப்படுகின்றன. அவ்வளவும் அனுபவமணிகளே.

---

## " ஆனந்தபோதினி "—29-6-1932.

திருவண்ணுமலை ஸ்ரீரமணுச்சிரமத்தில் எழுந்தருளி பன்னூற்றுக்கணக்கான அன்பர்கட்கு ஞானேபதேசம் செய்து

வரும் ஸ்ரீ ரமண மஹரிஷிகளைப்பற்றி எல்லாரும் கேள்விப்பட்டிருக்கலாம். இவர் பகவான் ரமணரிஷி என்று அன்பர்களால் சிறப்பிக்கப்படுகிறார். மஹானின் சரித்திரத்தை அழகிய தமிழ் நடையில் ஐந்து காண்டங்கள்—நாற்பத்தொரு அத்தியாயங்கள் கொண்ட விரிந்த நூலாக ஸ்ரீ சுத்தானந்த பாரதி அவர்கள் எழுதியிருக்கிறார்கள். தமிழ் மக்கள் எல்லோரும் ஆதரித்து ஞானப்பேறு அடையுமாறு வேண்டுகின்றோம்.

---

“ஜனமித்திரன்” 1932௵ ஜூன் ௴ 10௳

கருணையே உருவான அருணையம்பதி அன்பரைத் தடுத்தாட் கொள்ளவே உருவெடுத்து வந்த திவ்விய மூர்த்தி பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷி.

இந்த அவதார புருஷனின் சரித்திரத்தை தெய்விகப் புலமையும் தவமும் நிறைந்த யதிராஜன் ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதி, நமது பத்திரிகையில் வெளி வந்தது வாசகர் அறிவார். அதன் சுவையும், புனிதசக்தியும் இம்மாதிரியென்று வாசகருக்கு வர்ணிக்கவேண்டியதில்லை.

அன்பர்கள் பெற்றுப் படித்துப் பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 26 | 12,13 | டெவிக்ரேடஸ் | டேகார்ட் |
| ,, | 13 | ஸ்பாநோஜா | ஸ்பிநோஜா |
| 47 | 21 | தொடங்கினர். | தொடங்கினர் |
| 52 | 8 | புலங்க | புலன்க |
| ,, | 9 | யாரோ | யாரே |
| 53 | 25 | பொன் | பொன் ! |
| 61 | 1 | பெரிய | கக - பெரிய |
| 73 | 3 | ஒம் | ஓம் |
| 149 | 9 | - 10 - | - 8 - |
| 153 | 19 | செய்துக் | செய்து |
| 156 | 22 | பதைத்தது | பதைத்தது. |
| 170 | 14 | நொவு | நோவு |
| 172 | 10 | தையும் | தையும், |
| 174 | 25 | குமிழ் | குமிழ்ப் |
| 194 | 9 | ராஜய | ராஜ்ய |
| 218 | 20 | நிறுத்தவேண்டும். | நிறுத்தல். |
| 264 | 16 | பகதி | பக்தி |
| 290 | 21 | கடடு | கட்டு |
| 295 | 26 | ஆன்ம எழுச்சி | ஆன்மஎழுச்சி |
| 304 | 21 | விகாரம் | விகாதம் |
| 306 | 21 | மொழியும் | மொழிகளும் |
| 308 | 25 | ப்ரக் | ப்ரஜ் |
| 309 | 6 | ,, | ,, |
| 363 | 26 | ளிளமை | ரிளமை |
| 364 | 27 | அழகு. | அழகு- |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 376 | 9 | களின் | களின் |
| 378 | 3 | சுத்த | சித்த |
| 382 | 28 | ஭ிர்ம | ஭ிர்மா |
| 397 | 3 | சமத்வத்துவத் | சமத்வத் |
| 407 | 3 | पूर्णामिंद | पूर्णमिदं |
| 414 | 10 | स्बराट् | स्वराट् |
| 425 | 16 | बहिश्च | वहिश्च |
| 427 | 26 | विष्ठः | विष्टः |
| 429 | 19 | நான்கு. | நான்கு; |
| 434 | 15 | ாணி | ஞாணி |
| 438 | 23 | ரஹோ | ரஸோ |
| 439 | 8 | மென் | மேன் |
| 441 | 14 | இன்பநிலை. | இன்பநிலை, |
| 442 | 3 | वरेणयं | वरेणियं |
| ,, | 4 | வரேண்யம் | வரேணியம் |
| ,, | 12 | ஸ்வ ஃ | ஸுவ ஃ |
| ,, | 15 | ண்யம் | ணியம் |
| 448 | 25 | த்வை | தவை |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| XXV | 3 | யாண்டா | வாண்டா |
| ,, | 4 | ருதி | திரு |
| ,, | 9 | தணிவுண்டு | தணிவுண்டு |
| XXIX | 10 | விமைதி | விமை |
| XXXII | 4 | ளததனையும் | ளத்தனையும் |
| XXIII | 8 | அறவொளி | அறிவொளி |
| XXXI | 20 | பரிதியைக் | பரிதியைச் |
| ,, | 25 | கங்குரம் | கங்குசம் |
| 6 | 17 | ப்ரஹமநிர் | ப்ரஹ்மநிர் |
| 21 | 9 | எல்லையிற் | எல்லையில் |
| 55 | 23 | நம் ,, | நம் |
| 75 | 15 | வனுக்கு | வனுக்கு |
| 77 | 14 | ஒப்யுயர் | ஒப்புயர் |
| 115 | 26 | பஞ் | பஞ்ச |
| 150 | 2 | பய்யரைப் | பய்யரைத் |
| 186 (படம்) | 1 | யோகஸ்ரீ | யோகீஸ்ர |
| 206 | 21 | நினையவுங் | நினையவும் |
| 212 (படம்) | 2 | திலிக்கா | திலக்கா |
| 217 | 2 | காகக் | காகச் |
| 236 | 14 | ஆண்டார், | ஆண்டார். |
| 249 | 21 | ஸ்பர்ஹம் | ஸ்பர்ஹம் |
| 254 | 24 | ஞாநிநஃ | ஜ்ஞாநிநஃ |
| ,, | 28 | ஸ்தியில் | ஸ்திதியில் |
| 256 | 4 | காகச் | காகக் |
| 260 | 13 | கிருர்களா | கிருர்கள் |
| 265 | 11 | பதுவே | பே |
| 304 | 26 | திருக்தாலோ | திருந்தாலோ |
| 307 | ,, | முனிந்தரன் | முனிந்த்ரன் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 345 | 20 | .பேதமை | பேதைமை |
| 353 | 9 | டெண்டு | டெண்டு |
| 358 | 24 | பாட்டியைத் | பாட்டியைப் |
| 384 | 5 | யாகும். | யாகும் |
| 388 | 8 | கோர்வை | கோவை |
| 396 | 4 | மாலையும | மாலையும் |
| 406 | 24 | துக்கள், | துக்கள். |
| 418 | 7 | றறிதல், | றறிதல் ; |
| 422 | 18 | ·(பரம்) | (பரம்)· |
| 425 | 16 | स्तया | स्तथा |
| 437 | 11 | ஞான | ஜ்ஞான |
| 438 | 23 | ஸஹ ஃ | ஸ ஃ |
| 442 | 11 | தானப் | தானந்தப் |
| 450 | 8 | கொண | கொண் |

# ஸ்ரீ ரமண ஞான விருந்து!

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸ்ரீ ரமண விஜயம் (சரித்திரம்), ஸ்வாமி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இயற்றியது (படங்களுடன்) இரண்டாம் பதிப்பு (திருத்திச் சேர்த்துப் பதிப்பித்தது) | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ரமண நூற்றிரட்டு (அருணசலஸ்துதி பஞ்சகம், உபதேசநூன்மாலை, தேவிகாலோத்ரம், விவேக சூடாமணி அடங்கியது) ... | 0 | 14 | 0 |
| உபதேசஸாரம் (நாகரச்லோகமும், ஷை பாஷ்யமும் | 0 | 1 | 0 |
| ஷை ( ஷை தமிழ்மொழிபெயர்ப்பு) | 0 | 1 | 0 |
| ஷை (ஆங்கில மொழிபெயர்ப்பு) சாதா ... | 0 | 4 | 0 |
| ஷை ஷை காலிகோ ... | 0 | 8 | 0 |
| ஷை (தெலுங்கு 0-1-0) ; (மலையாளம் 0-1-0) | | | |
| உபதேச வுந்தியார் ... | 0 | 0 | 6 |
| ஸத்தர்சனம் (நாகரச்லோகமும், ஷை பாஷ்யமும்) (காலிகோ 1-0-0) போர்டு ... | 0 | 12 | 0 |
| ஷை (நாகரச்லோகமும் தமிழ்மொழிபெயர்ப்பும்) போர்டு 0-8-0 ; ராப்பர் ... | 0 | 6 | 0 |
| ஷை (ஆங்கில மொழிபெயர்ப்பு) காலிகோ | 1 | 0 | 0 |
| ஷை ஷை போர்டு ... | 0 | 12 | 0 |
| விசார சங்கிரஹ வினவிடை ... | 0 | 2 | 0 |
| ஷை ஷை (தெலுங்கு) ... | 0 | 2 | 0 |
| உபதேச மஞ்சரி ... | 0 | 1 | 0 |
| ஷை (தெலுங்கு) ... | 0 | 1 | 6 |
| நான் யார்? 0—0—6 (ஆங்கிலம் 0—1—0) | | | |
| ஸ்ரீ ரமணசரித அகவல் [**M.** சிவப்பிரகாசம்பிள்ளை **B.A.**, இயற்றியது] ... | 0 | 3 | 0 |

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஸ்ரீ ரமண சரித்திரம் (தெலுங்கு) ... | 0 | 2 | 0 |
| ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் சரித்திரம் (ஆங்கிலம்) [சேலம் B. V. நரஸிம்மையர் எழுதியது] | | | |
| Wrapper 2—0—0 ; Half Calico 2—8—0 ; Full calico gilt 3—0—0. | | | |
| உபதேசசாரம் (ஆங்கிலம்) ரமணதாசன் எழுதியது | 0 | 6 | 0 |
| ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் சரித்திரமும் உபதேச மொழிகளும் ... | 0 | 6 | 0 |
| ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம் ... | 0 | 0 | 6 |

தெலுங்கு மலையாள ஸம்ஸ்கிருத புத்தகங்களும் கிடைக்கும்.

மற்ற நூல்களின் விலை விவரங்களுக்கு எழுதவும்.

ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் புகைப்படங்கள் 0-4-0 முதல் ரூ. 1-4-0 வரையில் பலவித அளவுகளில் கிடைக்கும்.

---

# பெரியோர் வரலாறு

சுத்தானந்த பாரதியார் இயற்றியது

இதில் இவ்வுலகத்தில் இதுகாறும் உதித்த எல்லா நாட்டு மஹான்கள் சரித்திரமும் இனிய எளிய தமிழில் அருமையாக விளங்குகின்றது. சுமார் 60 மஹாத்மாக்களின் சரிதைகள் அடங்கியுள்ளன. இது ஸ்ரீ ரமண விஜயத்திலடங்கிய பெரியாரின் சரிதைக்கொத்தாதலின் இதை அவ்வரிய பெரிய நூலின் 2-வது தொகுப்பாக வெளியிடுகிறோம். விலை ரூ. 1-0-0

நிரஞ்ஜனானந்த ஸ்வாமி,

சர்வாதிகாரி,

ரமணாச்ரமம், திருவண்ணாமலை.

# கீதை காட்டும் பாதை

(கீதா யோகம்)

*சுத்தானந்த பாரதியார் எழுதியது.*

*கீதையின் ஒவ்வொரு செய்யுளுக்கும் அரிய, புதிய உண்மை விளக்க வுரையுடன், அதை வாழ்வில் அமைத்து ஸாதனம் செய்யும் முறையும், எல்லா யோக தத்துவங் களும், சுத்த, சுதந்தர, ஸமத்வ, நித்திய வாழ்வின் ரகசிய மும் பொலிந்து விளங்குவது. மிகவும் அரிய நூல் ; ஒவ் வொருவரும் நாள்தோறும் ஓதத்தக்கது.* 0—10—0.

---

# அரிய, பெரிய, புதிய நூல்கள்!

(*சுத்தானந்த பாரதியார் எழுதியவை.*)

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ அரவிந்த யோக விளக்கம். ... | 0 | 4 |
| 2 | அன்னை :—*சக்தி ஸாதனத்திற்கு அரிய வழிகாட்டி* | 0 | 4 |
| 3 | கீதை காட்டும் பாதை :—*கீதை முழுதிற்கும் தெளிந்த விரிவுரை. பலயோகரகசியங்களடங்கியது.*<br>"In matter and manner, this is a new treatment of the age-long Gita and has the merit of freshness and originality" — "*Hindu*" | 0 | 10 |

ரூ. அ.

4 **ஸ்ரீ அரவிந்த ப்ரகாசம்** :—ஸ்ரீ அரவிந்தரின் வரலாறு, உபதேசம், கடிதங்கள், பிரசங்கங்கள், யோக முறை, அரவிந்தாசிரம விவரங்கள், பூரண யோக ஸாதனம் முதலியவற்றை அறிய இதுவொன்றே போதும். இனிய எளிய நடையில் எல்லாரும் படிக்கும்படியாக எழுதப்பட்டுள்ளது. ... 0 12

5 **புதுயுகப் பாட்டு** :—இவற்றை உள்ளன்பர் கூடிப் பாடுமிடம் ஆத்மசக்தி தாண்டவமாடும். அடிமையும், அச்சமும், இருளும், அகந்தையும் ஓட்டமெடுக்கும். இன்பம், அறிவு, ஆண்மை, ஆற்றல், அழகுசுரக்கும். ஸ்வரங்களுடன் கூடியது. ... 0 5

6 **அறநூல்** :—சுத்த சுதந்தர ஸமத்வ வாழ்விற்கு வழிகாட்டி. (விரிவுரையுடன்) ... 0 12

மூலம் ... 0 4

ஷை ஆங்கில மொழிபெயர்ப்பு ... 0 4

7 **சுப்ரமண்ய பாரதியார்** :—அரிய ஆராய்ச்சி நூல். 0 1

8 **ஸ்ரீ ரமண விஜயம்** :—மஹர்ஷிகளின் தவவாழ்வு, உபதேசத்துடன் பல அரிய உயர்ந்த வேதாந்த விஷயங்களடங்கியது.

(500 பக்கங்கள், 32 படங்களுடன்) ... 2 0

9 விரத வைராக்யம் (நாடகம்) ... 0 6

10 **பாரத சக்தி** : அரும்பெரும் புதிய தமிழ் காப்பியம். மகாகாவிய நடையில் எல்லா மதங்கள், எல்லா யோக நெறிகள், மனித வாழ்வு தெய்வ வாழ்வு அடையும் சாதனவழி, தூல வீரிய மன விக்ஞான ஆனந்த சேதன உலகங்களில் மனிதான்மாவின் பரிணாமம் முதலியவற்றை இராமாயணம், பாரதம் போன்று கதைப் பாங்காக விவரிக்கப்பட்டுள்ளது.

ரூ. அ.

சிறந்த, தெளிந்த கவியணியும், சீரிய பொருளும், அருளும், அறிவுச்சுடரும் இதில் மிளிரும். "இது மாகாவிய நடையில் உலகில் இதுகாறும் தோன்றிய ஞானவீரர், கருமவீரர் சரிதைகளை எல்லாம் தன்னுள் அடக்கி விளங்கும் அரியபெரிய நூலாகும்." ஸ்ரீ. வ. வே. சு. அய்யர்.

| | | |
|---|---|---|
| முதல் பாகம் ... | 1 | 8 |
| இரண்டாம் பாகம் (அச்சில்) ... | 1 | 0 |

11 அருட்பெருஞ் ஜோதி விளக்கம்:—அருள் வள்ளலார் வாழ்வும் சாதனமும் உபதேசமும் விரிவாக அடங்கியது. வள்ளலார் அருட்சமயத்துடன் ஸ்ரீ அரவிந்தர் திருவுள்ளத்தையும் விளக்கிக் காட்டுவது ... 1 0

| | | | |
|---|---|---|---|
| 12 | வீரசிவாஜி விஜயம் ... | 0 | 3 |
| 13 | திருஞானாந்தம் ... | 0 | 8 |
| 14 | ஞானத்திருமலை ... | 0 | 2 |
| 15 | பெரியோர் வரலாறு (அச்சில்) ... | 1 | 0 |

16 பரமஹம்ஸலீலை, (17) அப்பரின் அன்பு வெற்றி, (18) சருக்கலம், (19) புத்தஞாயிறு, (20) காலக்கண்ணாடிக் கதைகள் முதலியவை அச்சிலுள்ளன.

## பாரத சக்தி நிலயம்,

புதுவை.